வர்த்தகக் கணித நூல்


அல்லது

தமிழ் புக் - கீபிங்.

வர்த்தகக் கணிதத்தில் மிகுதியும் தேர்ச்சியுடைய

ஸ்ரீ பி. கிருஷ்ணமூர்த்தி அவர்களால்,

வரையப்பட்டது.



பிரசுரம்:

வாஸன் புஸ்தகசாலை,

244, தங்கசாலை வீதி,

சென்னை.

1928

 [விலை ரூ. 2

THE KESARI PRINTING WORKS
MADRAS

முகவுரை.

இந்நாளில் தொழிலில் சிறந்து வியாபாரத்தை விருத்தி செய்து கொண்டு வரும் தமிழ் மக்கள், எவ்விதமாக வியாபாரம் முன்னுக்கு வந்தது என்றறியாமல் மனம் போனபடி வியாபாரத்தைப் பெருக்கி, அந்த வியாபாரம் மேன்மையடைந்து பழுத்து சுவையைக் கொடுக்கும் சமயத்தில் அதன் உண்மையான நிலைபையறியாது தயங்கி நிற்பார்களாயின் அவர்கட்கு உதவியாகும்படி இந்நூல் தயார் செய்யப்பட்டுள்ளது. இது ஒவ்வொரு வியாபாரிக்கும் அவசியமாக வேண்டியிருப்பதோடுகூட, மாணுக்கர்கள்கூட ஆங்கிலத்திலுள்ள நூல்களைப் படித்துத்தெளிவாக அறிய முடியா விட்டால் அவர்கள் இப்புத்தகத்தைப் படித்து சகல விஷயங்களையும்நன்ருகத் தெரிந்து கொள்ளும்படி எளிய நடையில் விளக்கமாக எழுதப்பட்ட நூலாதலால் அவர்களிடமும் இந்நூல் அவசிய மிருக்கவேண்டிய தொன்ருகும்.

மதராஸ்,
மார்ச்சு 10, 1928

பி. கிருஷ்ண மூர்த்தி.

விஷய வடக்கம்.

'வர்த்தகக் கணித நூல்'

அல்லது

தமிழ் புக் - கீபிங்.

1-வது அதிகாரம்.

வியாபாரத்தின் மேன்மை.

வாசகர்களே !

தற்காலத்தில் நமது இந்து தேசம் மற்ற தேசங்களைக் காட்டிலும் மிகுந்த செழிப்புள்ளதாயும் ஏராளமான விளை பொருள்களோடு கூடியதாயும் வர்த்தகத்திற்கேற்ற வசதிகளை யடைந்ததாயுமானலும், அதற்குத் தக்கவாறு நமது தேசத்து ஜனங்கள் செய்யும் வியாபாரம் மட்டும் விருத்தி யடையக் காணேம். இதற்குக் காரணம் யாதெனில், நமது இந்தியர்கள் எக்காரியத்திற்கும் துணிச்சல்கொண்டு முன் வராமல் தயங்கித் தயங்கி நிற்பதுதான். எக்காரியமாயிருந்தாலும் அதைத் தீரவிசாரித்து அனுபவத்தில் செய்து பார்த்தால்தான் அக்காரியத்தின் குணகுணங்களும் பல தந்திரங்களும் வெளியாகும் என்றுஎண்ணுமல் அந்தகாரியத்தில் நமக்கு நஷ்டமுண்டாகுமோ என்னமோ என்ற சந்தேகத்தை யடைந்து காரியத்தையே துவக்காமல் விட்டுவிடுகின்றனர் நமது இந்தியர்கள். ஒவ்வொரு தொழிலிலும் கஷ்

டப்பட்டாலொழிய சுகமேற்படாது என்பதை நாம் மறந்து விடுகிறோம். இவ்விஷயத்தில் மட்டும் ஆங்கிலேயர்கள் நம்மைவிட பதின்மடங்கு சாதுர்ய மடைந்தவர்களென்றே சொல்லவேண்டும். ஏனெனில் எந்தத் தொழிலிலும் அவர்களே முதன்மையடைந்து அத்தொழிலை நன்றாகப் பரிசிலனை செய்து சூக்ஷ்மங்களைக்கண்டுபிடித்து, பிறகு அச்சூக்ஷ்மங்களை வெளிப் பரவவிட்டு ஏராளமான பணம் சம்பாதிக்கிறார்கள். தற்காலத்தில் ஏற்பட்டிருக்கும் பலவிதமான நூதனக் கருவிகளும், யந்திரங்களும் ஆங்கிலேயர்களாலேயே வெளிப் படுத்தப்பட்டன வென்பதே அவர்களின் மேலான பதவிக்கோர் அத்தாக்ஷியாகும். ஆங்கிலேயர்கள் முதன் முதலில் இத்தேசத்திற்கு வியாபார நிமித்தம் வந்து, கொஞ்சங் கொஞ்சமாக அதன் சுவையை அருந்தி இந்தியாவின் செழிப்பையும் வியாபாரத்திற்கேற்ற வசதிகளையும் கண்டு அகமகிழ்ந்து தங்கள் வியாபாரத்தை நாடெங்கும் பரவச்செய்து தற்பொழுது இந்தியாவின் சொந்தக்காரர்களாகிய நமக்கே அவளால் கொடுக்கப்பட்ட ஐசுவரியம் நிலைக்க வொட்டாமல் தடுத்து ஆண்டு வருகின்றனர். இதற்கும் காரணம் ஆங்கிலேயர்கள் வர்த்தகத்திற்காக எடுத்துக்கொண்ட முயற்சிதான். முயற்சி திருவினையாக்கு மன்றோ?

நாம் வியாபார மென்றால் யாதென்றே சிந்திக்காமல் அதுவும் வயிறு வளர்ப்பதற்கோர் உபாயம், இதற்காக கஷ்டமும், நஷ்டமும் அடைவானேன், எங்கேயாவது வேலையிலமர்ந்து சற்றும் பொறுப்பில்லாமல் சம்பளம் பெற்றுக் கொள்ளலாம் என்று தப்பான அபிப்பிராயங்கொண்டு வேலை வேலை யென்று நம்மவர்கள் அலைவதைப் பார்த்திருக்கிறோம்.

இவர்கள் வியாபாரம் செய்வதில் உண்மையாக வேறு என்ன நன்மைகள் செய்கிறார்கள் என்பதை கவனிக்கிறதில்லை. அந்த நன்மைகளைப் பற்றி அவர்கள் எப்பொழுதாவது ஆராய்ந்து சிந்தனை செய்கிறார்களாவென்றால், அதுவுமில்லை. தங்களுக்கு எப்படியாவது வேலை கிடைத்து மாதாமாதம் சம்பளம் வாங்க வேண்டியதுதான் பிரதானம் என்ற ஒரே எண்ணத்தைக்கொண்டு தனக்கு வேலை கொடுக்கும் எஜமான் எப்படி சம்பாத்தியம் செய்கிறான் என்பதை யோசிக்காமலே யிருந்து விடுகிறார்கள். ஆதலால், வியாபாரத்தைப் பற்றியே நினையாமல், அதன் நன்மைகளை அலக்ஷியம் செய்து விடுகிறார்கள். ஆனால், இதற்கு எதிர்ப்படையாக ஆங்கிலேயர்களோ, வர்த்தகம், வியவசாயம் கைத்தொழில் இவைகளால்தான் ஓர் தேசம் முன்னேற்ற மடையுமென்பதை நன்றாகக் கைக்கொண்டுவிட்டார்கள். ஆசாரத்திலும், ஒழுக்கத்திலும் இன்னும் மற்ற நடவடிக்கைகளிலும் சிறப்புற்று விளங்கும் நமது இந்தியர்கள் இவ்வொரு விஷயத்தில் மாத்திரம் அசட்டையாக விருக்க நேரிட்டதின் காரணம், வர்த்தகத்தின் எண்ணற்ற நன்மைகளில் கீழ்வரும் சிலமுக்கியமானமேன்மைகளை ஆராய்ந்து பார்க்காததால்தான்:—

(1) ஒரு தேசத்தை பரிபாலித்துவரும் அரசனின்முக்கியமான கடமை தன்குடிகளை யாதொரு குறைவுமின்றி காப்பாற்றிவருவ தல்லவா? அவ்விதம் அவன் குடிகள் க்ஷேமமாயிருந்துவரவேண்டுமானால், அவர்களை நோய்நொடியின்றி பசி, தாகம், மூப்பு, பிணி முதலியன அணுகாமல் பாதுகாத்தல் வேண்டும். ஆதலால் ஜனங்களின் ஆகாரத்தின்பொருட்டும் ஆடைமுதலியன பொருட்டும் பலவிடங்களில் கிடைக்கும் சாமான்கள் விளைபொருள்கள் முதலியவைகளைச் சேக

ரம் செய்து அவைகளை ஜனங்களுக்குத் தக்கவாறு வினியோகப் படுத்தவேண்டும். இவ்விதம் பொருள்களைச்சேகரித்து ஜனங்களுக்கு விற்பனை செய்வதே வியாபாரமெனப்படும். பொருள்களைச்சேகரிப்பது மாத்திரம் பெரிதல்ல. அவைகளைத் தக்கவழியில் குறைந்த விலைக்கு விற்பனை செய்வதைத் தெரிந்து கொள்ளவேண்டும். ஒரு நகரத்தில் வியாபாரிகள் மிகவும் குறைவாக விருந்தார்களானால் சாமான்களின் விலை அதிகக்கடினமாகவே விருக்கு மென்பதில் சந்தேகமில்லை. வியாபாரம் அதிகப்பட, அதிகப்பட பொருள்களின் விலையும் குறைந்துவரும். மேற்சொன்ன விதம் வியாபாரம் ஒரு தேசத்தில் அதிகப்படுமானால், சாமான்களின் விலை குறைந்து ஜனங்கள் சௌக்கியமடைவதோடுகூட சாமான்களும் சகல ஜனங்களுக்கும் மிகுதியாகக்கிடைக்கின்றன. இது தேசத்திற்கோர் பெருத்த நன்மையன்றோ ?

(2) ஒரு நகரம் மிகவும் செழிப்பாயிருக்கிற தென்றும் ஏராளமான ஐசுவரியத்தோடு கூடியிருக்கிற தென்றும் சொல்வது அந்நகரத்தில் வசிக்கும் ஜனங்களைப் பொருத்தேயாகும். ஜனங்கள் தனவந்தர்களானால் நகரமும் தனத்தோடுவிளங்குகிறது. எப்படி யெனில், ஜனங்களின் வருமானத்துக்குத் தக்கபடி வரிகள் விதிக்கும் அரசன் ஏராளமான வருமானத்தையுடையவர்களிடமிருந்து மிகுதியாக வரிகளைவசூல் செய்கிறான். அவ்விதம் வசூலிக்கப்பட்ட செல்வம் நகரத்தின் சௌகரியங்களுக்கே செலவிடப்படுகிறது. பொதுவாக குடிகளுக்கும் அனுகூலங்கள் ஏற்படுகின்றன. ஆகவே ஒரு நகரத்தின்மேன்மை தனவந்தர்களாகிய குடிகளைப் பொருத்திருக்கின்றது. குடிகள் செல்வத்தை விரும்புவார்களானால் வியாபாரமே அதற்குத்தக்கதுறை.

இங்கு, தற்காலத்தில் செய்யப்படுகின்ற போலி வியாபாரங்களைப்பற்றி யான் எழுதவில்லை. ஒரு தேசத்தின் குடிகளுக்கு வேண்டிய சௌகரியங்களின் பொருட்டும் அத்தேசம் மேன்மையடைய வேண்டிய வழியின்பொருட்டும் செய்ப் வேண்டிய வர்த்தகமே இங்கு குறிக்கப்பட்டது.

(3) இவ்வுலகில் ஒவ்வொருவனும் வியாபாரத்தை ஒழித்து வேலை செய்து பிழைக்க எண்ணினல், அவ்வேலைக் காரர்களை அமர்த்திக் கொள்ள எஜமானர்கள் தான் யாவர்? அப்படிவேலையிலமர்வோன் கொஞ்ச நாட்களில் எஜமானனைப் போல் தானும் பணமடைய வேண்டுமென்ற பேராசையையாவது,அல்லது தனக்குயர்ந்த உத்தியோகம் கிடைக்கவேண்டி அவ்வுத்தியோகஸ்தன்மேல் பொருமை பாராட்டி கோட் சொல்வதையாவது அடைந்து அதனலேற்படும் தீயகுணங் கட்குட்பட்டு சண்டைசச்சரவுகளை ஏற்படுத்திக்கொள்கிருன். ஆனல் உண்மையான வியாபாரிகளிடம் இவ்விதமான துர்க் குணங்கள் பழகுமாவென்றல், ஒரு நாளுமில்லை. அவர்கள் ஒருவருக்கொருவர் துணையாயிருப்பார்கள். இதற்குக் காரணம் யாதென்றல், ஒருவன் மேலானவன் ஒருவன் தாழ்ப் படிந்தவன் என்ற எண்ணமுள்ள உத்தியோகஸ்தர்களுக்கே பொருமை, வஞ்சகம், பொய் சொல்லுதல்முதலிய தீய்குணங் கள் உண்டாகின்றன. வியாபாரிகளோ ஒவ்வொருவரும் தம் தம் வேலைக்குத் தாம்தான் எஜமானர்கள் என்ற எண்ணங் கொண்டு மேன்மேலும் வியாபாரத்தை விருத்தியடையச் செய்வார்கள். மேலும், ஒவ்வொரு வியாபாரியும் ஏதாவதொரு விஷயத்தில் மற்றெருவருக்குப் பிரயோஜனப்பட்டுக் கொண்டேயிருப்பார். வியாபார தந்திரங்களெல்லாம் ஒவ்வொரு வியாபாரியிடத்தும் ஒவ்வொரு விதமாக பதுங்கிக்

கிடக்கின்றனவாகையால் அத்தந்திரங்கள் ஒன்று சேர்ந்து வியாபாரம் முன்னுக்கு வரவேண்டுமானால் வியாபாரம் செய்கிறவர்களெல்லாரும் ஒற்றுமையுடன் இருக்க அவசியம் ஏற்படுகின்றது.

வியாபாரத்தை ஓங்கச்செய்வது அவசியமென்றால் அதைப் பலவழிகளில் கணக்கு வழக்கில்லாமல் எல்லோரும் கைக்கொள்வது சரியன்று. அப்படியெல்லோரும் தொழில் செய்வதால் போலி வியாபாரமே அதிகப்படும். வியாபாரத்துக்குரிய சாதனங்கள் உள்ளவர் யாவரோ அவர்களே செய்ய வேண்டும். அப்படிச்செய்தால்தான் அவரவர் தொழிலைப் பற்றி ஊக்கமெடுத்துக்கொண்டு மேன்மேலும் விருத்தி பெறச்செய்து கடைசியாக அவ்வியாபாரம் முற்றிலும் தேசத்தின் நன்மைக்கே பயன்படும். போலி வியாபாரம் தொடங்குபவர்களும் ஒழிந்துவிடுவார்கள். இக்காரணம் பற்றியே, நம்மிந்தியர்கள் பிராம்மண, க்ஷத்திரிய, வைசிய சூத்ராளென்ற நான்கு ஜாதிகளாகப்பிரிக்கப்பட்டிருக்கின்றனர். ஒவ்வொரு ஜாதியாரும் தத்தம் கடமையைச் செலுத்தவேண்டுமே ஒழிய, மற்றொரு ஜாதியார் செய்யும் வேலையைக் கைக்கொள்ளக் கூடாதென்ற விதி ஏற்பட்டிருக்கிறது. வியாபாரத்தையுடையவைசியர்கள் அத்தொழிலிலேயே கவனத்தைச் செலுத்தி பலவிதமான சீர்திருத்தங்கள் செய்து தேசத்தை ஐசுவரியத்தோடு விளங்கச்செய்யவும், சூத்ரர்கள் பயிர்த்தொழில், கைத்தொழில், வியவசாயம் முதலியவைகளில் பொழுதைச்செலவிட்டு நாட்டை செழிப்புறச்செய்வதற்கும், ராஜ்யகாரியங்களைக் கவனிக்க க்ஷத்திரியர்கள் உத்தியோகம் வகிப்பதற்கும் நாட்டின் நன்மையைக் கோறி பிராம்மணர்கள் ஜெபதபங்களைச் செய்யவும் நியமிக்கப்

பட்டிருக்கிறார்கள். அவ்விதி தற்காலத்து ஆங்கிலேய அரசாட்சியில் நடைபெறவில்லையாகையால் உயிர்ப்பிழைப்பின் நிமித்தம் எல்லோரும் வியாபாரம் வியாபாரமென்று சொல்லிக்கொண்டு அதன் மேன்மையையறியாமல் போலி வர்த்தகமே செய்துவருகிறார்கள். இது ஜனங்களின் குற்றமன்று.

(4) வியாபாரத்தை ஆரம்பிக்கும் ஒருவன் பலவித பொருள்களின் இயற்கை குணங்களை அறிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. எல்லா ஜாதியார்களுடனும் மனிதர்களுடனும் பழகவேண்டியிருக்கிறது. அவர்கள் மூலமாய் பலவித ரகசியங்களை அறியவேண்டியிருக்கிறது. கஷ்டநஷ்டங்களுக்கு பாத்தியப்படவேண்டியிருக்கிறது. பொறுமையைக் கைக்கொள்ளவேண்டியிருக்கிறது. சொன்னசொல் தவறாமல் காரியங்களை நிறைவேற்ற மிகுந்த சிரமம் எடுத்துக் கொள்ளவேண்டியிருக்கிறது. இத்தகைய காரணங்களால், ஒருவன் படிப்படியாக உலகானுபவம் அடைகிறான். அனுபவம் ஆக ஆக, அவன் புத்தி விசாலமடைகிறது. ஆகவே புதிது புதிதாக நூதன வழிகளும் சூக்ஷமங்களும் அவன் புத்திக்குப் புலப்படுகின்றன. அதனால், தேசமும் மேன்மையை அடைகிறது. இப்படி தற்காலத்தில் மேன்மையடைந்தவர்கள் ஆங்கிலேயர்கள்தான்.

வியாபாரத்தை ஆரம்பிக்கு முன்னால் அதன் வழிகளை நன்றாய்க் கற்றுக்கொள்ளவேண்டும். அம்மார்க்கத்தில் அனுபவத்தை யடையவேண்டும். தொழில் செய்யும் விதத்தைக் கற்றுக்கொண்டவர்களே உண்மையான வியாபாரம் செய்ய முடியும். ஆதலால் தொழில்செய்ய விரும்புவோர் அனுபவமுள்ள ஓர் தொழிலாளியிடம் வியாபாரத்தின் வழிகளைக் கற்றுக்கொள்ளும்பொருட்டு வேலைக்கமரவேண்டும். இப்படி

கொஞ்ச நாளைக்கு வேலை கற்றுக்கொண்டு வர்த்தகம் செய்வதால் மேற்கூறப்பட்ட உலக நன்மைகள் உண்டாவதோடுகூட சம்பத்தும் பெருகிக்கொண்டே வருமென்பதில் சற்றும் ஐயமில்லை.

(5) வர்த்தகர்கள் பலநாடுகளிலுள்ள வியாபாரிகளிடமிருந்தும் மரியாதையையும் புகழையும் அடைகிறார்கள். வேலையிலமர்ந்து ஒருவரை அண்டிப் பிழைப்பதால் யந்திரத்தைப்போல் உத்சாகமின்றி உழைக்கவேண்டும். வியாபாரத்தில் ஒவ்வொருவனுடைய லாபநஷ்டமும் அவன் வியாபாரத்தின்பொருட்டு கஷ்டப்படுவதை பொருத்திருப்பதால் தனக்கு எப்பொழுதும் லாபம் கிடைக்கும்பொருட்டு எச்சமயமும் உத்சாகத்தோடேயே தொழிலை நடத்துகிறான். கஷ்டம் வரும் சமயத்தில் மனஞ்சோராமல் பொறுமையையடைவதால், புதிய ஊக்கமுண்டாகி மேன்மேலும் வியாபாரத்தில் மனதைச்செலுத்த வழி ஏற்படுகிறது. எவ்வளவுக்கெவ்வளவு வியாபாரத்தில் பாடுபடுகிறானோ அவ்வளவுக்கவ்வளவு வருமானமுண்டாகிறது. பிறருக்கடிமையாகி வருமானமடைவதை விட, சுயமாக கைப்பாடுபட்டு பணம் சம்பாதிப்பது எவ்வளவோ சிறப்புற்றதாயிருக்கிறது. வியாபாரியொருவன் நாணயத்தோடு செய்து வந்தால் கொஞ்சகாலத்தில் பெரிய மனிதர்களால் மதிக்கத்தகுந்த வியாபாரியாகிறான். அவன் சென்றவிடமெல்லாம் சிறப்பையடைகிறான்.

மேற்சொல்லப்பட்ட நன்மைகள் வியாபாரத்தால் உண்டாகின்றன என்பதை அனுபவத்தால் அறிந்துகொண்ட ஆங்கிலேயர்கள் வியாபாரத்தையே ஓங்கச்செய்து மிகுதியாக சம்பாதிக்கிறார்கள். தற்காலத்தில் வியாபாரத்திற்கு

கடிதப்போக்கு வரவு ஓர் பெருத்த முக்கியமான சாதனமாயிருக்கிறது. ஒரு நாட்டிலுள்ள வர்த்தகர்கள் மற்றோர் நாட்டிலுள்ள வர்த்தகர்களுடன் அடிக்கடி நேரில்போய் சாமான்கள் வாங்கவோ அல்லது விற்பனை செய்யவோ முடியாதாகையால் எழுத்து மூலமாய் தங்கள் காரியங்களை சுலபத்தில் முடித்துக் கொள்ள ஏதுவாயிருக்கிறது. பிரபலமான வர்த்தகர்களிடம் சாமான்யமான வியாபாரிகள் நேரில் போய் வியாபார விஷயங்களைப் பேச கூச்சமுடையவர்களானால் எழுத்து மூலமாய் தைரியத்தோடேயே விஷயங்களைத் தெரிவித்து காரியங்களை முடித்துக்கொள்வதின் பொருட்டு கடிதப் போக்கு வரவு சாதனம் இன்றியமையாததாயிருக்கிறது.

இவ்வளவு சாதனங்கள் இருந்தும் நம்மிந்தியர்கள் வியாபாரத்தை ஒழிப்பதின் காரணம் தங்களைப்பற்றியுள்ள அவநம்பிக்கையே. இந்த அவநம்பிக்கையை ஒழித்து தைரியமும் ஊக்கமும் உடையவர்களாகி, சுயநலம் மட்டும் பாராட்டாமல் தேசநன்மைக்குரியதாயும் தங்களுக்கேற்றதாயுமான உண்மையான வர்த்தகத்தைத் தொடங்கி மேன்மையடைவார்களாக.

2-வது அதிகாரம்.

வியாபாரக் கணக்குகள் — புக்கீபிங்.

வியாபாரமென்பது முன் காலத்திலிருந்தே தொடங்கி வந்திருக்கிறது. ஆனால் முன்காலத்து வியாபாரம் தற்காலத்தில் சீர்திருத்தப்பட்டிருப்பதுபோல் அவ்வளவு ஒழுங்காகவில்லை. விற்கப்பட்ட ஒரு சாமானுக்கு பதில் சாமான்

பெற்றுக் கொள்வதே அச்சமபத்தில் வழக்கமாயிருந்தது. இவ்விதம் பண்டங்களை மாற்றிக்கொள்ளும் வழக்கத்தால், மிகுந்த சிரமம் ஏற்பட்டது. ஒரு பொருளை வேண்டுபவன் அப்பொருள் வைத்திருக்கும் மனிதனிடம் சென்று அவனுக்குத் தேவையானசாமானை அறிந்து அதை சம்பாதித்துக் கொடுத்து விட்டுப் பிறகு தான் இச்சித்த பொருளைப் பெறவேண்டும். இப்பண்டமாற்றல் தான் ஆங்கிலத்தில் ப்ார்டர்(Barter) என்று சொல்லப்படும். இதனுடைய கஷ்டங்களை அனுபவித்துப் பார்த்தபிறகு, எல்லாஜனங்களும் பொதுவாக பெற்றுக்கொள்ளக்கூடிய உலோகத்தினுல் செய்யப்பட்ட நாணயம் என்பது ஏற்பட்டது. இந்த நாணயத்தாலாகிய பணந்தான் பொருள்களை விலைமதிக்கத் தக்க பண்டமாகவிருக்கிறது. தற்காலத்தில் வியாபாரம் அதிகப்பட்டிருக்கிறபடியால் ஒரு சாமானை மதிக்கும்பொருட்டு வேறொரு சாமானைத் தேடுவதில் கஷ்டங்கொள்ளாமல் உடனுக்குடனே பணம் என்பதைச் செலுத்தி சாமான்களை அடையலாமாகையால், பணம் என்பது வர்த்தகத்துக்கோர் முக்கியமான சாதனமாகவிருக்கிறது. எப்பொழுது பணம் என்பது ஏற்பட்டதோ அதுமுதற்கொண்டு பணத்தால் ஏற்படும் கொடுக்கல் வாங்கல் முதலியவைகளை ஞாபகத்தில் வைத்துக் கொள்வது அரிதென்று கணக்குள் ஏற்படுத்தப்பட்டன.

15-ம் நூற்றுண்டில் ஐரோப்பா கண்டத்தில் இத்தாலி தேசத்தில் வசிக்கும் ஜனங்கள் மிகவும் பிரபலமான வர்த்தகர்களாயிருந்தார்கள். அவர்கள் மிகுந்த அனுபவத்தையடைந்திருந்ததால் வியாபாரக் கணக்குகளை ஒழுங்காய் வைத்திருந்தார்கள். அவர்கள் தான் தற்காலத்தில் மிகவும் அனுகூலமாயுள்ள **இரண்டு விதம் பதிவுசெய்தல்** என்கிற

முக்கியமான வியாபாரக் கணக்கின் அம்சத்தை முதன் முத லில் கண்டுபிடித்தவர்கள். அவ்விரட்டைப்பதிவின் பிரயோ ஜனங்கள் பின்னால் சொல்லப்பட்டிருக்கின்றன. 1494-ம் வருஷத்தில் ல்யூகஸ் டி பார்கோ (Lucas de Burgo) என் னும் இத்தாலிய தேசத்துப் பண்டிதர் ஒருவர் வியாபாரக் கணக்கின் முறைகளையும், இரட்டைப்பதிவின் உபயோகத் தையும் முதற் குறிப்பாகிய ஜர்னல் (Journal), ஞாபகத் தின் பொருட்டு அப்போதைக்கப்போது சாதாரணமாக குறிக்கப் படும் வேஸ்ட்புக் (Waste Book) பல வியாபாரி களின் கணக்குகள் அடங்கிய முக்கியமானவருக்கு என்னும் லெட்ஜர் (Ledger), முதலான புத்தகங்களின் உபயோகத் தைப்பற்றி இத்தாலிய பாஷையில் எழுதியிருக்கிறார். இந்த இரண்டு விதம் பதிவுசெய்யும் வழக்கம் இத்தாலியர்கள் ஏற் படுத்திக்கொண்டார்களாதலால், அப்பதிவுக்கு இத்தாலிய கணக்கு நூல் என்றும் பெயர் வழங்குகிறது. மேற்கூறப் பட்ட பார்கோ என்பவர் எழுதின நூலை ஹயூக் ஓல்ட் கா சில் (Hugh Old Castle) என்பவர் 1543-ம் ஆண்டில் ஆங் கிலத்தில் மொழி பெயர்த்து லண்டன் நகரத்தில் வெளியிட் டார். அதன் பிறகு ஜேம்ஸ் பீல் (James Peele) என்ற ஆங்கிலர் வியாபாரக் கணக்கைப்பற்றி ஓர் புஸ்தகம் வெளி யிட்டார். ஆங்கிலேயர்களுக்குள் வியாபாரம் பெருகப் பெருக, 1795-ம் ஆண்டில் எட்வர்ட் ஜோன்ஸ் (Edward Jones) என்னும் ஆங்கிலேயர் மேலும் கணக்குகளை ஒழுங்கு செய்து ஆங்கிலப் பதிவு நூலாக வெளியிட்டார். ஆகவே தற்காலத் தில் கணக்குப்பதிவு மிகவும் ஒழுங்கு படுத்தப்பட்டு பலவித சௌகரியங்கள் கொடுக்கக் கூடியதாய் விளங்குகிறது. இதில் முக்கியமான சௌகரியம் இரட்டைப்பதிவு என்று சொல்லப்

படுகிற டபுல் எண்ட்ரி (Double Entry) என்பதாலேயே உண்டாகிறது.

ஆங்கிலேயர்களும் மற்ற ஐரோப்பியர்களும் வியாபாரத்தையே மேலாகக் கொண்டு அதிலேயே பழகிவந்ததால் அவர்களுக்குத் தக்கவாறு சுலபமாக கணக்குகளை ஏற்படுத்திக்கொண்டார்கள். நமது இந்தியர்கள் வியாபாரத்தை அலக்ஷியமாக எண்ணி அதன் பொருட்டு ஏற்படுத்திக்கொள்ள வேண்டிய முறைகளையும் அலக்ஷியம் செய்து இரட்டைப் பதிவின் உபயோகத்தை அறியாமல், கணக்குகள் எழுதும் சமயத்தில் சுலபமாயும் வியாபாரத்தின் முடிவை அறிய வேண்டி கணக்குகளைப் பரிசிலனை செய்யும் பொழுது வேண்டிய விஷயங்களை சரிவர விளக்காமலுமிருக்கின்ற ஒரு விதமே பதிவு செய்தலாகிய ஸிங்கில் எண்ட்ரி (Single Entry) என்னும் முறையை வைத்துக்கொண்டு கஷ்டப்படுகின்றனர். அத்தகைய வியாபாரிகளுக்குப் பதிவு முறையையே தமிழில் எழுதப்பட்ட இப்புத்தகம் பெரியதோர் பயனைத்தருமென்பதில் சந்தேகமில்லை.

புக்கீபிங்.—என்பது பணத்தையோ அல்லது பணத்தினோர் அளவுக்குச் சமமாக விலை மதிக்கப்பட்ட பொருளையோ ஓரிடத்தில் கொடுக்கவும் ஓரிடமிருந்து வாங்கிக் கொள்ளவும் நேரிடுகின்ற வியாபார பரிவர்த்தனைகளை (Business Transactions) ஒழுங்காக கணக்குப் புத்தகங்களில் பதிவு செய்யும் பொருட்டு உண்டாக்கப்பட்ட ஓர் நூல். எந்த முறையால் ஒருவன் வியாபாரக் கணக்குப் புஸ்தகங்களைப் பார்த்த மாத்திரத்தில் அவ்வியாபாரத்தின் நிலைமையை அதாவது லாப நஷ்டங்கள் முதலானவைகளைக் கண்டுகொள்ள முடியுமோ அம்முறையோடு கணக்கெழுதுவதற்கு புக்கீபிங் என்று பெயர்.

கணக்கு வைப்பதின் பிரயோஜனங்கள் கீழ் வருமாறு:—

(1) சாமான்களை எப்பொழுதும் ரொக்கம் அல்லது பணமே கொடுத்துவாங்கமுடியாதாகையால் அச்சமயங்களில் கடனுக்கு வாங்கிக்கொள்ள அவசியம் ஏற்படுகிறது. அப்படிக் கடனுக்குச் சாமான்கள் பெற்றுக்கொள்பவர்கள் தகுந்த யோக்கியதை யுடையவர்களாயும் அதிகரித்துவரும் வியாபாரமுடையவர்களாயும் இருத்தல் வேண்டும். மேற்கூறிய விதமாக வியாபாரிகள் கடனுக்கு சரக்குகள் வாங்க நேரிட்டால் ஓர் குறிப்பிட்ட தேதியில் கடன் கொடுத்த வியாபாரிகளுக்கு எவ்வளவு ரொக்கம் கொடுக்கவேண்டி யிருக்கிறதென்பதை கணக்குகள் வைப்பதிலிருந்து சுலபமாக அறியலாம்.

(2) மேலே சொல்லப்பட்டது போலவே கடனுக்கு வாங்கினவர்களிடமிருந்து தங்களுக்கு எவ்வளவு ரொக்கம் சேரவேண்டும் என்பதும் புலப்பட்டுவிடும்.

(3) தாம் வியாபாரம் செய்வதில் லாபமடைகிறோமா அல்லது நஷ்டம் உண்டாகிறதாவென்றும், எந்த விதமான சரக்குகளில் லாபமென்றும், எதில் நஷ்டமென்றும் அறிவதோடு கூட அவ்வாறு அறிந்து நஷ்டமுண்டாகும் வியாபாரத்தை நிறுத்தி லாபமுண்டாகும் வியாபாரத்தை மாத்திரம் மேலும் மேன்மைபடையச் செய்யலாம். அல்லது நஷ்டத்திற்கு நடத்தப்படுகின்ற வியாபாரத்தை

எவ்வகையில் சீர்திருத்தினால் பிரயோஜனமுண்டாகுமோ அவ்வகையைக் கண்டு பிடித்து மேலும் நடத்தலாம். கணக்குகள் பதிவு செய்து ஓர் வியாபாரத்தின் லாபநஷ்டங்களைக் கண்டு பிடிப்பதால், நாட்டில் எந்தெந்தகாலத்தில் எந்தெந்த சாமான்கள் தேவை என்று அனுபவத்தால் அறிந்து கொள்ள வழி ஏற்படுகிறது. அதனால் நாட்டின் வியாபார நிலைமைக்குத் தகுந்தாப்போல் தன் தொழிலையும் சீர்திருத்திக்கொள்ள முடியும்.

(4) வியாபாரிகள் தங்கள் வர்த்தகத்தினாலேயே தனவந்தர்களாவதின் காரண மென்னவென்றால், அவர்கள் வியாபாரம் செய்யும் பொருட்டு முதன் முதலில் சில விடுகின்ற முதல் என்று சொல்லப் படும் முன்பணம், வியாபாரத்தில் எல்லாச் சிலவுகளும் போக மிஞ்சும் லாபத்தோடு நாளுக்கு நாள் கூடுதலடைகிறது. அப்படி மூலதனமாகிய முதல் அதிகரித்துக் கொண்டே வந்தால்தான் வியாபாரம் விருத்தியாகிறதென்று சொல்லவேண்டும். ஆதலால், வியாபாரத்தில் முதல் அதிகப்படுகிறதாவென்று கவனிப்பது அத்தியாவசியம். கணக்குகளை ஒழுங்காகப் பதிவுசெய்வதால் மேற் சொன்ன விஷயத்தைச் சுலபமாகஅறியலாம்.

இந்நான்கு விஷயங்களால், ஓர் தொழிலின் சரியான நிலைமை கணக்குகளை ஒழுங்காகப் பதிவு செய்தாலல்லது கண்டுகொள்ள முடியாது என்பதை அறிகிறோம்.

புக்-கீபிங் என்னும் இக்கணக்கில் கீழ்வரும் பதங்களை நன்றாய் அறியவேண்டும்:—

முதல் அல்லது மூலதனம் (Capital):— காலதேச வர்த்தமானங்களுக்குத் தகுந்தாப்போல் தனக்குரிய வியாபாரத்தைத் தொடங்கும் ஒருவன் முதலில் ஓர் ஸ்தலத்தை அமர்த்திக்கொள்ளவேண்டியிருக்கிறது. அதன்பிறகுதொழிலுக்குவேண்டிய சாக்குகளை மற்ற வர்த்தகர்களிடமிருந்து சேகரித்துக்கொள்ளவேண்டியிருக்கிறது. இதுமாத்திரமல்ல. வியாபாரத்தை நடத்தும்பொருட்டு சொந்தச் சிலவுகளும் வேலைக்காரர்களுக்கும் குமாஸ்தாக்களுக்கும் சம்பளம் முதலான சிலவுகளும் ஏற்படுகின்றன. இவைகள் எல்லாவற்றையும் தொழில் ஆரம்பிக்கு முன்னமேயே சேகரித்துக் கொள்ளவேண்டியதாகையால், இச்சிலவுகளுக்கு முன்பணம் வேண்டியதாயிருக்கிறது. இப்பணத்திற்குத்தான் முதல் என்று பெயர். சரக்குகளில் சிலவழிந்துபோகும் இப்பணம் அச்சரக்குகளை விற்பதினால் லாபத்தோடுகூடவே எப்பொழுதும் அழியாமல் விளங்குகிறது.

அஸ்ஸேட்ஸ் (Assets):—ரொக்கப்பணமோ, பூமியோ, கட்டடங்களோ, கையில் இருக்கும் சரக்குகளோ அல்லது விற்கப்பட்ட சரக்குகளுக்கு வரவேண்டிய தொகையோ, இவைகளில் எங்தெந்த சொத்துகள் வியாபாரத்துக்குச் சொந்தமானவைகளோ அவைகளுக்கு அஸ்ஸேட்ஸ் என்று பெயர்.

லயபிலிடீஸ் (Liabilities):—வியாபாரத்தி விருந்து வெளியில் செலுத்தவேணடிய தொகைக்குக்கடன்கள் அல்லது லயபிலிடீஸ் என்றுபெயர்.

வாங்கிக் கொள்பவனும் கொடுப்பவனும் அல்லது டெட்டரும் க்ரேடிடரும் (Debtor & Creditor):—சாதாரணமாகடேடர் என்றால்கடன்பட்டவன் என்று அர்த்தம். அப்

படிக் கடன்பட்டவன் கடனடைந்த வஸ்துவைத் திருப்பிக் கொடுக்க வேண்டியவனாகிறான். ஆனால், ஆங்கிலக்கணக்குப் பதிவுநூலில் ஓர் வஸ்துவைப் பெற்றுக்கொண்டவன் டெட்டரே (Debtor) ஒழிய அவன் அவ்வஸ்துவைத் திருப்பிக் கொடுக்க பாத்தியப்படுகிறானென்று கவனிக்க வேண்டுவதில்லை. அதுபோலவே ஓர் வஸ்துவைக் கொடுத்தவன் க்ரெடிடரே (Creditor) ஒழிய அவன் அவ்வஸ்துவை கடனுக்குக் கொடுக்கிறானென்று பார்க்கவேண்டிய அவசியமில்லை.

உதாரணமாக, ராமன் என்பவன் கிருஷ்ணனிடமிருந்து ரூ. 1,000 கடன் பெற்றுக்கொண்டதாக வைத்துக்கொள்வோம். இதில் கிருஷ்ணனிடமிருந்து ராமன் பணத்தைப் பெற்றுக்கொள்வதால் ராமன் கிருஷ்ணனுக்கு மேற்சொன்ன தொகைக்குக் கடனாளி அல்லது டெட்டராகிறான். பணத்தைக் கொடுத்தவன் கிருஷ்ணனாதலால் அவன் க்ரெடிடராகிறான். இது நமக்கு நன்றாய் விளங்குகிறது. பிறகு கொஞ்சகாலம் கழித்து, ராமனால் பணம் திருப்பிக் கொடுக்கப்படுகிறதென்று எடுத்துக் கொள்வோம். இப்பொழுது பணம் பெற்றுக்கொள்பவன் கிருஷ்ணன். ஆதலால் அவன் டெட்டராகிறான். பணம் கொடுக்கின்ற ராமன் க்ரெடிடர் ஆகிறான். இப்பொழுது கிருஷ்ணனை டெட்டரென்று சொல்வதால் அவன் கடன் பட்டவன் என்று அர்த்தமாகாது. ஆகவே கணக்குப் பதிவு நூலில் வாங்கிக்கொண்டவனே டெட்டர் கொடுத்தவனே க்ரெடிடர் என்று பதியவேண்டும்.

பற்றும் வரவும் (Debit and Credit) அல்லது டெபிட்டும் க்ரெடிட்டும்.—நாம் வியாபாரம் செய்யுங்காலத்து, ஓர் வியாபாரியினிடமிருந்து சிலசாமான்கள் வாங்கியுமிருப்போம்.

அவனுக்குச் சிலசாமான்கள் கொடுத்துமிருப்போம். அவ் வியாபாரியின் கணக்கைத் தீர்க்கும்பொருட்டு, நம்மால் கொடுக்கப்பட்ட சாமான்கள் தொகையிலிருந்து அவனிட மிருந்து நாம் பெற்றுக்கொண்ட சாக்குகளின் விலையைக் கழித்து பாக்கி அவனுக்கோ அல்லது நமக்கோ எவ்வளவு சேரவேண்டுமென்று பார்ப்பது அவசியமாதலால் நம்மு டைய கணக்குப் புத்தகங்களில் மேற்சொன்ன வியாபாரியின் கணக்கு விவரங்களைப் பதிவு செய்தல்வேண்டும். நாம் அவ னுக்குக் கொடுக்கும் சாமான்களுக்கு அவன் டெடாராகிறான். அவன் நமக்குக் கொடுக்கும் சாமான்களுக்கு க்ரெடிடராகி றான். ஆகவே அவன் நம்மிடமிருந்து பெற்றுக்கொண்டசரக்கு களின் தொகை யென்ன, அவன் நமக்குக் கொடுத்த சரக்கு களின் தொகை என்ன யென்று அறியும்பொருட்டு கொடுக் கல் விவரத்தையும் வாங்கல் விவரத்தையும் தனித்தனியா கப் பதிவு செய்தல் வேண்டும். அப்படிக்கில்லாமல் வாங்கல் கொடுக்கல் முதலிய விவரங்களை ஒன்றாகப் பதிவுசெய்தால் வாங்கல் விவரங்களின் தொகையைக் கூடுதல் செய்யும் பொழுது ஒவ்வொன்றாகப் பொறுக்கி எடுக்கவேண்டும். இது ஓர் வீண்காலம் போக்கக்கூடிய காரியம். வாங்கலையும் கொடுக் கலையும் தனித்தனியாக இரண்டு பக்கங்களில் எழுதுவதே ஒழுங்கானவழி. ஓர் சரக்கை வாங்காமல் கொடுப்பது இயலா தாகையால் வாங்கலே முதலான காரியம். ஆதலால் காகி தத்தில் முதலில் எழுதத்தொடங்கப்படுகிற இடதுபக்கம் நம்மிடமிருந்து வியாபாரியினால்வாங்கப்படுகிறதான சரக்கு விவரங்களுக்கும் வலதுபக்கம் அவனால் நமக்குக் கொடுக்கப்

படுகின்ற சாமான்கள் விவரங்களுக்கும் எற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவ்விதம் நமது புத்தகங்களில் வியாபாரியின் கணக்கு எழுதப்படுகிறது. மேற்கூறிய விதமாக வியாபாரியின் கணக்கில் இடதுபக்கம் காணப்படும் விவரங்கள் அவனால் பெற்றுக்கொள்ளப்பட்ட சரக்குகளின் விவரங்கள் ஆகையால் அப்பக்கத்திற்குப் பற்று அல்லது (Debit) என்றும், வலதுபக்கத்தில் அவனிடமிருந்து வரப்பட்ட சரக்குகளின் விவரங்கள் எழுதப்பட்டிருக்கின்றன வாகையால் அப்பக்கத்திற்கு வரவு அல்லது க்ரெடிட் (Credit) என்றும் சொல்லப்படுகின்றன.

3-வது அதிகாரம்.

கணக்கு விவரங்கள். (Accounts)

கணக்குப் புத்தகங்களில் அவசியமானதாயும் முக்கியமானதாயுமுள்ள வருக்கு என்னும் லெட்ஜர் புத்தகத்தில் வேண்டிய விவரங்களை மாத்திரம் சுருக்கமாக எழுதப் பட்டுள்ள ஓர் குறிப்புக்கு கணக்குவிவரக் குறிப்பு அல்லது அகவுண்ட் (Account) என்றுபெயர். இக் குறிப்பு யாரைப் பற்றியதோ அல்லது எவ்விஷயத்தைப்பற்றியதோ அந்தப் பெயரை கணக்குக்குறிப்பின் தலைப்பில் காணவேண்டும். ஓர் கணக்கு விவரக்குறிப்பானது கீழ் வருமாறு பிரிவுகளுடன் வருக்குப் புஸ்தகமாகிய லெட்ஜரில்காணப்படுகிறது :—

பற்று கிருஷ்ணன் (கணக்கு) வரவ

தேதி	விவரம்	தொகை ரூ. அ. பை.	தேதி	விவரம்	தொகை ரூ. அ. பை.

மேற் கூறியவிதமாக, வியாபாரப் பரிவர்த்தனையில் எந்த விஷயம் சம்பந்தப் பட்டிருக்கிறதோ அதனுடைய பெயரை கணக்குக்குறிப்பின் தலைப்பில் எழுதும் வழக்கத்தால், இப் புத்தகத்திற்குப் பெயரேட்டுப்புத்தகமென்றும் பெயர்வழங் குகிறது. இப்பொழுது கிருஷ்ணன் என்று குறிப்பின் தலைப் பில் எழுதுவதால், எவ்வியாபாரியினுடைய கணக்குப் புத்த கங்களில் கிருஷ்ணன் என்ற பெயருடன் கணக்கு எழுதப் படுகிறதோ அந்தவியாபாரியினிட மிருந்து ஷ கிருஷ்ணன் வாங்கியும் கொடுத்து முள்ள விவரங்கள் குறிப்பில் உள்ளன என்று அறியவேண்டும். முன்னர் சொல்லியவாறே, குறிப் பின் இடது பக்கம் கிருஷ்ணன் வாங்கிக்கொள்ளும் விவரங் களைக்காண்பிப்பதால், அப்பக்கத்துத் தலைப்பில் பற்று என் றும், வலதுபக்கம் கிருஷ்ணன் கொடுக்கும் விவரங்களைக் காண்பிப்பதால் அதன் தலைப்பில் வரவு என்றும் காணப்படு கின்றன.

இனி கீழ்வரும் விவரங்களை நம்முடைய புஸ்தகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கிருஷ்ணன் கணக்குக்குறிப்பில் எப்படி பதிவு செய்யப்படுகின்றன என்று எடுத்துக்காட்டுவோம் :—

1917 ஜன. 10. கிருஷ்ணனுக்குச் சரக்குகள் விற்றது. ரூ. 1,000—0—0.

,, 18. கிருஷ்ணன் ரொக்கம் பெற்றுக் கொண்டது. ரூ. 500—0—0.

,, 20. கிருஷ்ணனிட மிருந்து சாமான்கள் வாங்கினது. ரூ. 800—0—0.

ஞாபகத்தின் பொருட்டு வியாபாரங்கள் நடந்தவுடன் அப்போதைக் கப்போது எழுதப்படுகின்ற சாதாரண குறிப்பில் அல்லது வேஸ்ட் புக்கில் மேல் எழுதப்பட்ட விதமாகத் தான் காணப்படுகின்றன. இப்பொழுது முதல் வரவு செலவு காரியத்தை எடுத்துக் கொள்ளுவோம்.

எப்பொழுதும் விவரத்தில் "ரொக்கத்திற்கு" என்று சொல்லப்படாத வரையில் அது கடனுக்கு நடந்திருக்கிறதாகவே எடுத்துக்கொள்ளவேண்டும். ஆதலால் இவ்விஷயமும் கடனுக்கு நடந்திருக்கிறதென்று புலப்படுகிறது. இதில் கிருஷ்ணன் எப்படி சம்பந்தப்பட்டிருக்கிறான்? நாம்விற்கும் சரக்குகளை வாங்கிக்கொள்ளுபவன் கிருஷ்ணனாதலால் கிருஷ்ணன் நமக்கு டெடராகிறான். சாமான்கள் கிருஷ்ணனால் பெற்றுக் கொள்ளப்படுகின்றன. ஆகவே இவ்விஷயத்தைஇடது பக்கத்தில் அல்லது பற்றுப் பக்கத்தில் எழுதவேண்டும். இவ்விஷயத்தில் குறிக்கவேண்டியவை எவையென்றால், கிருஷ்ணன் வாங்கிக்கொள்வதால் கிருஷ்ணன் பக்கம் பற்று என்பதும் எவ்விஷயத்தால் அவனுக்குப்பற்றுஏற்பட்டதென்

பதும். ஆகவே,'சரக்குக்கணக்கால் கிருஷ்ணன்பற்று'என்று குறிப்பிடவேண்டியது. பற்றுப் பக்கத்தில் எழுதப்படுவ தால் "கிருஷ்ணன் பற்று" என்று அர்த்தமாகிவிடுகிறது. "சரக்குக் கணக்கு" என்பதை மாத்திரம் "விவரம்" என்ற பிரிவில் காணவேண்டும். அது கீழ்வருமாறு கிருஷ்ணன் கணக்கில் குறிக்கப்படுகின்றது.

பற்று கிருஷ்ணன். வரவு

தேதி	விவரம்	தொகை. ரூ.	அ.	பை.	தேதி	விவரம்	தொகை ரூ.	அ.	பை.
1917 ஜன. 10	சாக்குக் கணக்கால்	1000	0	0	1917 ஜன. 20	சாக்குக் கணக்கிற்கு	800	0	0
ஜன. 18	ரொக்கக் கணக்கால்	500	0	0					

அதுபோலவே இரண்டாவது வரவு செலவு காரியத்தி லும் கிருஷ்ணன் ரொக்கம் வாங்கிக்கொள்ளுகிறவனுகையால் அவன் டெடராகிருன். அவன் பக்கம் பற்று ஏற்படுகிறது. கிருஷ்ணன் ரொக்கம் பெற்றுக்கொள்வதால் "ரொக்கக் கணக்கால்" அவனுக்குப்பற்று ஏற்படுகிறது. ஆகவே "ரொக் கக் கணக்கால் கிருஷ்ணன் பற்று" என்று கணக்கில் குறிக்க வேண்டும். இதுவும் மேலே காட்டப்பட்டிருக்கிறது.

மூன்ருவது வரவுசெலவு காரியத்திலும், "ரொக்கத் திற்கு" என்று சொல்லப்படாததால், அதுவும் கடனுக்கென் றே புலப்படுகிறது. இதில் நாம் சாமான்களைப் பெற்றுக்

கொள்ளுகிறோமே தவிர கிருஷ்ணன் வாங்கவில்லை. ஆனால் அவன் சாமான்கள் கொடுத்தவனாகிறான். ஆகவே, அவன் க்ரெடிடராகிறான். கிருஷ்ணனிடமிருந்து சரக்குகள் வெளி வருகின்றன. ஆதலால் இவ்விஷயத்தை கிருஷ்ணன் கணக்கில் வரவுப் பக்கத்தில் எழுதவேண்டும். இதில் சரக்குகள் வருகின்றன வாகையால், "சரக்குக் கணக்கிற்குக் 'கிருஷ்ணன் வரவு" என்று குறிக்கவேண்டும். இதுவும் மேலே காட்டப்பட்டிருக்கிறது.

வாங்கல் விஷயங்களெல்லாம் இடது பக்கத்திலும் கொடுக்கல் விஷயங்கள் வலது பக்கத்திலும் எழுதப்படுகின்றனவாகையால், பற்றுப்பக்கத்தில் காணும் விவரங்களுக்கு கணக்குக் குறிப்பின் தலைப்பில் உள்ள பெயர் டெடர் என்றும் வரவுப்பக்கத்தில் காணும் விவரங்களுக்கு க்ரெடிடர் என்றும், ஆதலால் பற்றுகப்பட்ட விவரங்களின் தொகைக்கு கணக்கின் தலைப்பில் பெயரிடப்பட்ட ஆசாமி பாத்தியப் பட்டவன் அல்லது கடன் பட்டவனென்றும் வரவு விவரங்களின் தொகையை நாம் பெற்றிருக்கிறோமாகையால் அத் தொகைக்கு அவனுக்கு நாம் பாத்தியப் பட்டிருக்கிறோமென்றும் அறிகிறோம்.

இதுவரையில், நாம் மேற் கூறப்பட்ட வரவு செலவு காரியங்களில் கிருஷ்ணனுடைய 'கணக்குக் குறிப்பை மாத்திரம் எடுத்துக் கொண்டு அவனைப் பற்றினவரையில் அக் குறிப்பில் பதிவு செய்தோம். ஆங்கிலேயக் கணக்குப்பதிவு நூலில் முக்கியமான அம்சம் இரட்டைப்பதிவு ஆகையால் அவ்விரட்டைப்பதிவு எப்படி ஏற்படுகிறதென்று இனி கவனிப்போம்.

இரட்டைப்பதிவு என்றால் ஒரே விவரத்தை ஒரே மாதிரியாக இரண்டுதரம் பதிவுசெய்தல் என்று அர்த்தமல்ல. ரொக்கத்தையோ அல்லது ரொக்கத்தின் ஓரளவுக்குப் பெறுமானமுள்ள சரக்கையோ கொடுக்கல் வாங்கல் செய்யும் ஓர் வரவு செலவு காரியத்தை நாம் எடுத்துக்கொண்டால், அதில் இரண்டு விஷயங்கள் அடங்கி யிருக்கின்றன. எந்த வியாபாரமும் கொடுக்கல் வாங்கல் என்ற இரண்டு அம்சங்களோடு கூடத்தான் நடக்கிறது. ரொக்கம் ஒருவன் வாங்கினால், யாரிடமிருந்து வாங்கினானோ அல்லது யார் ரொக்கம் கொடுத்தானோ அவனும் சம்பந்தப் பட்டிருக்கிறான். சாமான்கள் வாங்கிக் கொண்டாலும், கொடுக்கிறவன் இல்லாமல் வாங்கிக்கொள்பவன் கிடைக்கமாட்டாது. வியாபாரத்தில் ஓர் பிரயோஜனம் நேரிட்டாலும், அப் பிரயோஜனத்தை அடைந்தவன் ஒருவனும், பிரயோஜனம் செய்வித்தவன் ஒருவனும் இருத்தல் அவசியம். ஆகவே வாங்கல் இல்லாமல் கொடுத்தல் முடியாது. கொடுத்தல் இல்லாமல் வாங்கலும் முடியாது. ஆதலால் ஓர் வரவுசெலவு வியாபாரத்தில் எந்த விஷயம் அதில் சொல்லப்பட்ட சரக்கையோ, ரொக்கத்தையோ அல்லது பிரயோஜனத்தையோ பெற்றுக் கொள்ளுகிறதோ அவ்விஷயத்தின் பெயரை லெட்ஜர் புஸ்தகத்தில் தலைப்பில் எழுதி ஓர் கணக்குக் குறிப்பு ஏற்படுத்தி மேலே காணப்பட்டபடி பற்றுப் பக்கத்தில் பதிவு செய்யவேண்டும். அது போலவே, எந்த விஷயம் மேற்கூறியவாறு, ரொக்கத்தையோ, சரக்கையோ அல்லது பிரயோஜனத்தையோ கொடுக்கிறதோ அவ்விஷயத்தின் கணக்குக் குறிப்பையும் லெட்ஜர் புஸ்தகத்தில் ஏற்படுத்தி வரவு பக்கத்தில் பதிவுசெய்யவேண்டும். இந்த வித

மாக கொடுத்தலைப்பற்றி அது சம்பந்தப்பட்ட கணக்குக் குறிப்பில் ஓர்பதிவும் வாங்கலைப்பற்றி அது சம்பந்தமான மற்றோர் கணக்குக் குறிப்பில் ஓர் பதிவும் செய்வதே இரட்டைப் பதிவு என்பதின் உண்மை. எப்பொழுது ஓர் வரவு செலவு காரியத்தைப்பற்றி இரண்டு கணக்குக்குறிப்புகளில் பற்றிலும் வரவிலுமாக இரண்டு பதிவுகள் ஏற்படுகின்றனவோ, எந்த சமயத்திலும் லெட்ஜர் புஸ்தகத்திலிருக்கும் கணக்குக் குறிப்புகளின் பற்றுப் பக்கத்திலுள்ள விவரங்களின் முழுத்தொகை வரவுப் பக்கத்திலுள்ள விவரங்களின் முழுத்தொகைக்குச்சரியாக யிருக்கவேண்டியது. அப்படியில்லாதவரையில் பதிவுசெய்யும் சமயத்தில் ஏதோ ஓர் தப்பிதம் உண்டாயிருக்கிறது என்று உடனே அறியலாம். இது இரட்டைப் பதிவு வழக்கத்தால் ஏற்படும் ஓர் நன்மை. பதிவுகள் கணக்குப்புஸ்தகங்களில் சரியாகசெய்யப் பட்டிருக்கின்றனவா என்று கண்டுகொள்ள இரட்டைப்பதிவு வழக்கம் ஒருபெரிய சாதனமாக விருக்கிறது.

இனி மேலே போடப்பட்ட மாதிரியில் மற்றுமுள்ள பதிவுகளை கவனிப்போம்.

“கிருஷ்ணனுக்கு சரக்குகள் விற்றது” என்ற முதலாவது வியாபாரத்தில், கிருஷ்ணன் டெடர் என்று முன்னமேயே பதிவு செய்துவிட்டோம். வாங்கினவனைப்பற்றிய பதிவு தீர்ந்துவிட்டபடியால், கொடுத்தவன் அல்லது சரக்குகளை விற்றவன் யாரென்று கவனிக்கவேண்டும். அப்பதிவும் முடிந்தால்தான், இரட்டைப்பதிவு சரிவர செய்யப்பட்டிருக்கிறதென்று சொல்லலாம். கிருஷ்ணனுக்கு சரக்குகள் நாம் விற்றிருக்கிறோம் அல்லது கொடுத்திருக்கிறோம் என்று சொல்வதில் நம்முடைய வியாபாரத்திலிருந்து சரக்குகள்

வெளிப் போகின்றன என்று அறியவேண்டும். சரக்குகள் வெளிப் போவதால் அல்லது சரக்குகள் நம்முடைய வியாபாரத்திலிருந்து கொடுக்கப்படுகின்றன வாகையால் சரக்குகளுக்காக வைக்கப்பட்ட கணக்குக்குறிப்பில் க்ரெடிடர் பக்கத்தில் அதாவது வரவு பக்கத்தில் பதிவு செய்யவேண்டும்.

நாம் ஒரு வியாபாரியுடன் பற்று வரவு வைத்துக்கொள்ளும் பொழுது, நமக்கு அவ்வியாபாரியினிட மிருந்து சேர வேண்டிய தொகை அல்லது அவனுக்கு நாம் கொடுக்கவேண்டிய தொகை இன்னதென்று அறியவேண்டிய ஒரே காரணத்திற்குத் தான் அவன் கணக்குக் குறிப்பு நம்முடைய புத்தகத்தில் அவசிய மாயிருக்கிறது. ஆனால் நம்முடைய வியாபாரத்தில் லாபம், நஷ்டம், முதல், சரக்குக் கையிருப்பு முதலியவைகள் தெரிய வேண்டிய அவசியமாகையால், ஒவ்வொரு விஷயத்திற்கும் விவரமாக கணக்குக்குறிப்புகள் அவசியம். ஆகவே நம்முடைய வியாபாரத்தின் பெயரை பெயரேட்டின் தலைப்பில் எழுதாமல், அதைப் பல வகுப்புகளாகப் பிரித்து ஒவ்வோர் வகுப்பின் பெயரையும் லெட்ஜரின் தலைப்பில் எழுதி அது சம்பந்தப் பட்ட வரவு செலவு காரியங்களை அந்தக்கணக்குக்குறிப்புகளில் பதிவு செய்யவேண்டும். எப்படி ஒரு வியாபாரியினுடைய பெயரால் கணக்கு எழுதப் பட்டு அவனால் கொடுக்கப்படும் வாங்கப்படும் செய்கைகள் அக்கணக்கில் குறிக்கப் படுகின்றனவோ, அதுபோலவே நம்முடைய வியாபாரக்கணக்குகளும் வெவ்வேறாக வகுக்கப்பட்டு ஒவ்வொரு வகுப்புக்கு எஜமானன் இருப்பதுபோல் பாவித்து அவ்வகுப்பின் பெயரால் கணக்கெழுதி அதைச்சேர்ந்த எஜமானன் கொடுக்கல் வாங்கல் செய்வதுபோல் எண்ணி அக்காரியங்களை பதிவு

செய்யவேண்டும். ஆகவே, சரக்குகள் சம்பந்தமான சரக்குக் கணக்கில் கீழ்வருமாறு பதிவுகளைச் செய்யவேண்டும்.

1917 ஜன 10 கிருஷ்ணனுக்குச் சரக்குகள் விற்றது .... ரூ. 1000—0—0.

பற்று சரக்குக் கணக்கு. (Goods Account) வரவு

தேதி	விவரம்.	தொகை ரூ.	அ.	பை.	தேதி	விவரம்.	தொகை ரூ.	அ.	பை.
1917 ஜன. 20	கிருஷ்ணனால்	800	0	0	1917 ஜன. 10	கிருஷ்ணனுக்கு	1000	0	0

மேலே காணப்பட்ட பதிவை, "கிருஷ்ணனுக்குச் சரக்குவரவு" என்று வாசிக்கவேண்டும். அதாவது சரக்குகளைப் பாதுகார்க்கும் எஜமான் கிருஷ்ணனுக்கு சரக்குகள் விற்றிருக்கிறுன் அல்லது கொடுத்திருக்கிறுன். அதாவது, சரக்குக் கணக்கு எஜமானனிடமிருந்து கிருஷ்ணனுக்குச் சரக்குகள் வரவு வந்திருக்கின்றன. அதாவது நம்முடைய வியாபாரத்திலிருந்து சரக்குகள் வெளிப்போயிருக்கின்றன என்று அர்த்தமாகிறது.

கீழே கொடுக்கப்பட்ட இரண்டாவதுசெய்கையை எடுத்துக் கொள்வோம்.

1917 ஜன. 18. கிருஷ்ணன் ரொக்கம் பெற்றுக் கொண்டது. ரூ. 500—0—0.

இதில் கிருஷ்ணன் பற்று முன்னமேயே அவன் கணக்கில் குறிக்கப்பட்டது. இப்பொழுது மற்றோர் பதிவை கவனிப்போம்.

நம்மிடமிருந்து கிருஷ்ணன் ரொக்கம் பெற்றுக் கொண்டவனுகையால், நம்முடைய வியாபாரத்தின் ஓர் பிரிவான ரோக்கக்கணக்கு (Cash Account) இதில்சம்பந்தப் பட்டிருக்கிறது. ரொக்கக்கணக்கு இதற்கு முன் எழுதப்படவில்லே யாதலால், புதிதாக லெட்ஜர் புத்தகத்தில் ரோக்கக் கணக்கு (Cash Account) என்ற பெயருடன் ஓர் கணக்கெழுதி கிருஷ்ணனுக்கு ரொக்கம் கொடுக்கப் பட்டிருக்கிறதாகையால், வரவு பக்கத்தில் கீழே காட்டியபடி பதிவு செய்யவேண்டும். இதையும் "கிருஷ்ணனுக்கு ரொக்க வரவு" என்று வாசிக்கவேண்டும்.

பற்று ரோக்கக் கணக்கு. (Cash Account) வரவு

தேதி	விவரம்.	தொகை ரூ.	அ.	பை.	தேதி	விவரம்.	தொகை ரூ.	அ.	பை.
					1917 ஜன. 18	கிருஷ்ணனுக்கு	500	0	0

இப்பொழுது மூன்ருவது விவரத்தில் மற்றுமுள்ள பதிவைச் செய்வோம்.

1917 ஜன. 20. கிருஷ்ணனிடமிருந்து சாமான்கள்
வாங்கினது ரூ. 800—0—0.

இதில் சரக்குகள் வந்திருக்கின்றனவாகையால் சரக்குக் கணக்கில் பற்றுயிருக்கிறது. ஆதலால் சரக்குக்கணக்கில் பற்றுப்பக்கத்தில் பதிவுசெய்யவேண்டும். சரக்குக்கணக்கு வருக்குப் புத்தகத்தில் ஏற்கனவே எழுதப்பட்டிருக்கிறபடியால் மறுபடியும் மற்றோர்கணக்கு எழுதாமல் அதிலேயே இதையும் பதிவுசெய்யவேண்டும். இப்பதிவு மேலேகாணப்படும் சரக்குக்கணக்கில் குறிக்கப்பட்டிருக்கிறது. இதை "கிருஷ்ணனுல் சரக்குப்பற்று" என்று வாசிக்க வேண்டும்.

மேற் கூறப்பட்டபடி, ஒரு கணக்கு பற்றுயிருக்கிறதா வரவாயிருக்கிறதா என்று கண்டுகொள்வதற்கு இரு மார்க்கங்கள் உண்டு. கணக்கின் தலைப்பில் போடப்பட்ட பெயர் வரவு செலவு காரியத்தில் கண்டுள்ள வஸ்துவை வாங்கிக் கொண்டிருக்கிறதா அல்லது கொடுத்திருக்கிறதா என்று பார்ப்பது ஒன்றும், அல்லது வரவு செலவு காரியத்தில் காணப்பட்ட பொருள் கணக்குக் குறிப்பில் பெயரிட்டவருக்கு வந்திருக்கிறதா அல்லது அவரிடமிருந்து வெளியில் போயிருக்கிறதா என்று பார்ப்பது மற்றொன்றுமாகும். இப்பொழுது 'கிருஷ்ணனிடமிருந்து சாமான்கள் வாங்கினது' என்னும் காரியத்தில், சரக்குக் கணக்கை வைத்திருக்கும் ஓர் எஜமான் அச்சரக்குகளை யாபாரத்தின் பொருட்டு பெற்றுக் கொள்கிறுனகையால், சரக்குக்கணக்கு டெடராகிறது. சரக்குகளை கிருஷ்ணன் கொடுக்கிறுனகையால் கிருஷ்ணன் க்ரெடிடராகிறுன். இதையே மற்றோர் வழியிலும் பார்ப்போம். கிருஷ்ணனிடமிருந்து

சரக்குகள் வருகின்றனவாகையால், சரக்குக்கணக்குடெட ரும், கிருஷ்ணனுக்குச் சரக்குகள் வெளிப் போகின்றன வாகையால் அவன் க்ரெடிடருமாகிறான். இவ்விருவழிகளி லும் நாம் பற்று வரவு விவரங்களைக் கண்டு பிடிக்கலாமெனி னும், வியாபாரிகளின் பெயருள்ள கணக்குக் குறிப்புகளில் பதிவு செய்யும்பொழுது முதல் வழியான கொடுக்கல் வாங் கலையும், சாமான்களைப்பற்றியுள்ள சரக்குக் கணக்கு, ரொக் கக் கணக்கு முதலிய கணக்குக் குறிப்புகளில் பதிவு செய் யும் பொழுது இரண்டாவது வழியான வந்து சேருதல், வெளிப்போகுதல் என்பதையும் எடுத்துக்கொள்வதுதான் பதிவு செய்வதற்கு சுலபமாயிருக்கும்.

நிற்க, கணக்குக் குறிப்புகளில் இரண்டுவிதங்கள் உண்டு. நம்முடன் வியாபாரம் செய்யும் வியாபாரிகளின் சொந்தப் பெயர்களால் எழுதப்பட்டு மேலே சொல்லியிருக் கிறபடி கொடுக்கல் வாங்கல் என்னும் வழியால் பதிவு செய் யப்படுகின்ற கணக்குகளுக்கு வியாபாரிகளின் கணக்கு அல் லது பேர்ஸனல் அகவுண்ட்ஸ் (Personal Accounts) என்று பெயர். வியாபாரிகளைக் குறிக்காத மற்ற கணக்கு களுக்கு இம்பேர்ஸனல் அகவுண்ட்ஸ் (Impersonal Accounts) என்று பெயர். இரண்டாவதாகச்சொல்லப்பட்ட இம் பெர்ஸனல் அகவுண்ட்டுகளை இரண்டு உட்பிரிவுகளாகப் பிரிக் கலாம். வியாபாரத்திலுள்ள சொத்துகளை, அதாவது ரொக் கம், சரக்குகள், கட்டடங்கள் முதலானவைகளைக் குறிக்கும் கணக்குகளுக்கு சொத்துக்கணக்கு, அல்லது ரியல் அல்லது பிராபேர்ட்டி அகவுண்ட்ஸ் (Real or Property Accounts) என்று பெயர். இதுதான் இம்பெர்ஸனல் அகவுண்ட்டுகளில் முதலான உட்பிரிவு. இக்கணக்குக் குறிப்புகளை கொடுக்

கல் வாங்கல் வழியாலும் வந்து சேருதல் வெளிப்போகுதல் என்னும் வழியாலும் பதிவு செய்யலாம். என்றாலும் இரண்டாவது வழியே சுலபமானது.

இப்பொழுது இரண்டாவதான உட்பிரிவு யாதென்று கவனிப்போம்.

ஓர் வியாபாரமென்றால் அவ்வியாபாரத்தை நடத்துவதற்கு இடமொன்று அவசியம். அவ்விடத்திற்கு வாடகை கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே அதைப்பற்றின பதிவு எப்படிசெய்வது என்று பார்ப்போம்.

1917. ஜன. 5. வியாபாரஸ்தலத்தின்
வாடகை கொடுத்தது ரூ. 150—0—0

இவ்வியாபாரத்தில் யார் கொடுக்கிறார், யார் வாங்கிக் கொள்ளுகிறார் என்ற வழியாலும், எது வந்து சேருகிறது, எது வெளிப்போகிறது என்ற வழியாலும் டெடர் க்ரெடிடர் என்பதைக்கண்டு கொள்வோம். வாடகையின் பொருட்டு ரொக்கம் கொடுக்கப் பட்டிருக்கிறதாகையால் ரொக்கம் சம்பந்தமான பிரிவுக்கு எஜமானனாயிருப்பவன் ரொக்கத்தைக்கொடுக்கிறான். அதனால் ரொக்கக் கணக்கு க்ரெடிடராகிறது. அல்லது வியாபாரத்தைவிட்டு ரொக்கம் வெளியில் போகிறதாகையால், ரொக்கக்கணக்கு க்ரெடிடராகிறது.

மேற் சொன்ன ரூபாய் நூற்றைம்பதையும் நாம் எதற்காகக் கொடுத்திருக்கிறோமென்று கவனிப்போம். ஒருவனுக்குச்சொந்தமான கட்டிடத்தை நாம் வியாபாரத்தின் பொருட்டு உபயோகப் படுத்திக்கொள்வதால் அவ்வுபயோகத்திற்குப் பெறுமான பணத்தை பதிலாகக் கொடுக்கிறோம். அப்பணத்திற்குத்தான் வாடகை என்றுபெயர். ஆதலால்

நாம் ரொக்கத்தைக் கொடுக்குங்காலத்தில், நாம் பெற்றுக் கொள்வது கட்டிடத்தின் உபயோகம், அல்லது நம்மிடம் வந்து சேருவது கட்டிடத்தின் பிரயோஜனம். ஆதலால் கட்டிடத்தின் உபயோகத்தைக் குறிக்கும் வாடகைக் கணக்கு (Rent Account) என்பது டெடராகிறது. ஆகவே வருக்குப் புஸ்தகத்தில் வாடகை க்கணக்கு என்று ஓர் கணக்குக் குறிப்பு புதிதாக ஏற்படுத்தி பற்றுப் பக்கத்தில் "ஜன. 5. ரொக்கத்தால் ரூ. 150—0—0" என்று பதியவேண்டும். ரொக்கக்கணக்கில் வரவு காலத்தில் "ஜன. 5. வாடகைக் கணக்குக்கு ரூ. 150—0—0" என்று காண்பிக்கவேண்டும்.

வாடகைக் கணக்கு கட்டடத்தின் உதவியைக் கொடுப்பவனுக்கு டெடராகாமல் வெளியே போகும் ரொக்கத்திற்கு எப்படிடெடராகிறது என்பது முன்னம் ரொக்கத்திற்குச் சரக்குகள் கொடுத்தல் வாங்கல் வியாபாரத்தில் சொல்லப்பட்டதுபோல் இப்பதிவை இரண்டுபதிவுகளாக பிரிப்பதிலிருந்து நன்றாக விளங்கும். ஒருமாத வாடகையை மாதக்கடைசிவரையில் கொடுக்காமலிருக்கும் பக்ஷத்தில், அந்த மாதவாடகைக்கு நாம் யாருடைய கட்டிடத்தை உபயோகித்துக்கொள்ளுகிறோமோ—கோவிந்தனென்று வைத்துக்கொள்வோம்—அவனுக்கு டெடராகிறோம். அதாவது வாடகை கணக்கு கோவிந்தனுக்கு டெடராகிறது. கோவிந்தன் க்ரெடிடர் ஆகிறான். இப்பதிவை ரொக்கங் கொடுக்கும் தேதியில் எழுதிக் கொள்ளலாம். ரொக்கம் கொடுத்துவிட்டால் இப்பொழுது ரொக்கத்தை வாங்கிக்கொள்ளும் கோவிந்தன் என்பவன் ரொக்கக் கணக்கிற்கு டெடராகிறான். ரொக்கக் கணக்கு க்ரெடிடராகிறது. இவ்விரண்டு பதிவுகளும் கீழ் வருமாறு காணப்படும்:—

1. ஜன. 5. வாடகைக்கணக்கு டெடர்
(கோவிந்தனால்) ரூ. 150—0—0.
2. ,, (கோவிந்தன் டெடர்)
ரொக்கத்தால். ரூ. 150—0—0.

மேற்சொன்ன இரண்டுபதிவுகளும் ஒரே தேதியில் ஒரே சமயத்தில் நடக்கின்றன வாகையால்,—அதாவது ரொக்கம் கொடுக்கும் காலத்தில் வாடகைக்கணக்கை டெடராகக் காண்பிக்கிறோமாகையால் ஒரே தொகைக்கு அதே சமயத்தில் கோவிந்தன் டெடராகவும் க்ரெடிடராகவும் ஆகிறானாகையால் அவ்விரண்டு பிரிவுகளும் ஒன்றுக்கொன்று சமமாகப் போய் விட்டன. ஆகவே கோவிந்தனைப்பற்றி நாம் கவனிக்க வேண்டியதில்லை. அவ்விரண்டு பிரிவுகளையும் விட்டு மற்றிரண்டையும் பதிவுசெய்தல் அவசியம். மற்ற பதிவு கீழ் வருமாறு காணப்படுகிறது.

ஜன. 5. வாடகைக் கணக்கு டெடர்
ரொக்கத்தால். ரூ. 150—0—0

ஆகவே வியாபாரத்தினுள் வந்து சேரும் ஓர் வஸ்துவைச்சார்ந்த கணக்குக்குறிப்பானது வியாபாரத்தை விட்டு வெளிப்போகும் வஸ்துவின் கணக்குக்குறிப்புக்கு டெடராகிறது என்பதே இப்பதிவுக்கு முக்கியமான ஆதாரம். கட்டடத்தின் உபயோகத்தை வாங்கிக்கொள்ள ஒருவன் இருப்பது போல் பாவித்து அப்பிரயோஜனத்தைக் காட்டும் வாடகைக்கணக்கு அவனுடையதாகவெண்ணி அதில் பற்றெழுதவேண்டும். ரொக்கத்திற்கு அதிகாரி ரொக்கம் கொடுப்பதாக வெண்ணி அவன் கணக்காகிய ரொக்கத்தில் வரவு எழுதவேண்டும். அல்லது, கட்டடத்தின் உபயோகம் வந்து

சேருகிறதாகையால் வாடகைக் கணக்கில்பற்றும், ரொக்கம் வெளிப்போகிறதாகையால் ரொக்கக்கணக்கில் வரவும் எழுத வேண்டும்.

இதுசம்பந்தமாக மற்ருேர் விஷயத்தை கவனிப்போம். நாம் ரொக்கத்திற்கு சரக்குகள் வாங்கும் பொழுது, வெளியிலே கொடுக்கும் ரொக்கத்திற்குப்பதிலாக மேலும் வியாபாரத்தில் உபயோகப்படும்படியான சரக்குகள் வந்து சேருகின்றன. பணப்பெட்டியில் குறைகிற பணத்தின்பெறுமானத்திற்கு சரக்குகள் அதிகப்படுகின்றன. அதாவது வியாபாரத்திற்குச் சொந்தமான சொத்தின் ஓர் பகுதியான ரொக்கம் வெளியில் போக, வியாபாரத்தின் சொத்துக்கு மற்ருேர் பகுதியான சரக்குகள் வந்து சேருகின்றன. ஆகவே அநேக அங்கங்களாக மாறிநிற்கும் வியாபாரத்தின் மூலதனம் வெளியில் கொடுக்கப்படுகின்ற சொத்திற்கு பதிலாக மற்ருேர் சொத்து வந்துவிடும் பட்சத்தில் எப்பொழுதும் குறையாமலிருக்கிறது. ஆனல் மேலே சொல்லப்பட்ட வாடகைக் கணக்கில் ரொக்கத்திற்கு பதிலாக வருவது ஓர் உபயோகம். வியாபாரத்தை நடத்தும் பொருட்டு அது ஓர் சிலவே தவிர மூலதனத்தின் ஓர் பகுதியல்ல. அவ்வுபயோகம் வியாபாரத்தை மேலும் விர்த்தி செய்யாது. ஆனல் இதற்காகக் கொடுக்கப்படும் ரொக்கமோ, வியாபாரச் சொத்தில் ஓர் அம்சமாகிறது. நாம் மூலதனத்தின் ஓர்பகுதியைக் கொடுத்து அதற்குப் பதிலாக கண்ணுல் பார்க்கப்படாததாயும் எதிரில் தோன்ருததாயும் வியாபாரச் சொத்தின் அம்சமில்லாததாயுமான பிரயோஜனத்தைப் பெற்றுக் கொள்ளுகிறேம். இதில் மூலதனம் குறைகிறதேயொழிய குறைந்த அளவை ஈடுசெய்வதற்கு மூலதனத்தில் ஓர் பகுதியும் சேரவில்லை.

இதைத்தான் நஷ்டம் என்று சொல்லுகிறோம். எத்தொகை யால் வியாபாரத்தில் சிலவுகளேற்பட்டு மூலதனம் குறைவுப டுகிறதோ அத்தொகைக்கு நஷ்டம் ஏற்படுகின்றது என்று அர்த்தம். ஆகவே நஷ்டத்தை அல்லது சிலவைக் குறிக் கும் கணக்குக் குறிப்பானது பற்றாயிருக்கிறதென்றறிய வேண்டும்.

இப்பொழுது கீழ்வரும் வியாபாரத்தை எடுத்துக் கொள்ளுவோம்:—

ஜன. 5. வட்டி பெற்றுக்கொண்டது ரூ. 50—0—0

இதில் வந்து சேருவது வட்டியின் பொருட்டு ரொக்கம். நமது வியாபாரத்தில் ரொக்கத்திற்கு அதிகாரி பணத்தைப் பெற்றுக்கொள்ளுகிறானாகையால், அக்கணக்கைக் குறிக்கும் ரொக்கக் கணக்கு பற்றுகிறது. இதில் யாது வெளிச் செல் கிறதென்று பார்ப்போம். வட்டி என்பது ஒருவனுக்குப் பணம் கடனாகக் கொடுத்து உதவினால், அப்பண உதவியின் பொருட்டுக்கைம்மாறாக பெற்றுக்கொள்ளப்படும் பணத்தின் பெறுமானம். ஆகவே நாம் வட்டிபெற்றுக்கொள்ளும்பொழுது பணத்தினுதவியைச் செய்திருக்கிறோம். பணத்தினுதவி தான் வெளிப்போயிருக்கிறது. அதாவது நமது வியாபாரத் தில் பணத்தின் உதவியை வாங்கிக் கொள்ளவாவது கொடுக்க வாவது நியமிக்கப்பட்டவன் இவ்விஷயத்தில் உதவியைக் கொடுத்திருக்கிறான். ஆதலால் அவன் கணக்கு அதாவது வட்டிக்கணக்கு வரவாகிறது.

இதிலும் முன் சொன்னது போலவே, ஒரேதேதியில் இரண்டு பதிவுகளாகப் பிரிக்கலாம். கொடுக்கவேண்டிய வட்டிக்கு வட்டி கொடுப்பவனை முதலில் டெடாராகச்செய்து,

வட்டி கொடுத்தவுடன் அவனை க்ரெடிடராகச் செய்யலாம். வட்டி கொடுப்பவனைப் பற்றிப்பதிவுகள்ஏக காலத்தில் ஒரே தொகைக்கு டெடராகவும் க்ரெடிடராகவும் காணப்படுகின்றன வாகையால் அவைகளை எழுதுவதுஅநாவசியம்.

இவ்விஷயத்திலும், வியாபாரத்தின் மூலதனத்திலோர் அம்சமான ரொக்கம் வட்டிக்காக வந்துசேரும் பொழுது அதாவது பணப்பெட்டியில் ரொக்கம்அதிகப்படும் பொழுது, வெளியில் போவதோ மூலதனத்தைச் சேராததாயும் கண்ணால் பார்க்கப்படாததாயுமான ஓர் பிரயோஜனம். நமது மூலதனத்தைக் குறைக்கக்கூடாததான ஓர் உதவியைக் கொடுத்து மூலதனத்தை அதிகப்படுத்தக்கூடிய அதில் ஓர் பகுதியான ரொக்கத்தைப் பெற்றுக்கொள்ளுவதால், எத்தொகையால் வியாபாரத்தின் முதல் அல்லது சொத்து அதிகப்படுகிறதோ அத்தொகைக்கு லாபம் என்று பெயர். ஆகவே லாபத்தை அல்லது வருமானத்தைக் குறிக்கும் கணக்குக் குறிப்பானது வரவாகிறது என்றறிய வேண்டும்.

மேற்கூறியபடி உபயோகங்களைக் குறிக்கும் கணக்குகளுக்கு நாமினல் அகவுண்ட்ஸ் (Nominal Accounts) என்று பெயர். இதுவே முன் சொல்லப்பட்ட இம்பெர்ஸனல் கணக்குக் குறிப்புகளில் இரண்டாவதான உட்பிரிவு. இக்கணக்குகளைக்கண்டு பிடிப்பதற்கு முதலிரண்டு வழிகளும், அதாவது கொடுக்கல் வாங்கல் வழியும், வந்து சேருதல் வெளிப்போகுதல் வழியும் பொருந்துமானாலும், இலாபநஷ்டத்தைக் கண்டுபிடித்து அதன் மூலமாய் பற்று வரவு செய்வதே சரியான வழி. ஓர் உபயோகம் லாபத்தைக்காட்டினால் அவ்வுபயோகத்தைப் பற்றின கணக்குக்குறிப்பு வர

வாகிறது. அவ்வுபயோகம் நஷ்டத்தைக் காட்டினால் அந்த கணக்குக் குறிப்பு டெடாகிறது.

ஆதலால் ஒரு வியாபாரத்தில் வியாபாரிகளிடம் கொடுக்கல் வாங்கல் செய்வதால் அவ்வியாபாரிகளின் கணக்குக் குறிப்புகளும், சரக்குகள், ரொக்கம் முதலான வியாபாரச் சொத்துகளில் கொடுக்கல் வாங்கல் செய்வதால் அச்சொத்துகளின் கணக்குக் குறிப்புகளும், கட்டடத்தின் உபயோகம், ரொக்கத்தின் உபயோகம், வேலைக்காரர்களின் வேலைகளின் உதவி, உத்தியோகஸ்தர்களின் வேலை உதவி முதலான பிரயோஜனங்களில் கொடுக்கல் வாங்கல் செய்வதால், முறையே வாடகைக் கணக்கு, வட்டிக்கணக்கு, கூலிக்கணக்கு, சம்பளக்கணக்கு முதலான கணக்குக்குறிப்புகளும் எழுத வேண்டியிருக்கின்றன. முதலில் சொல்லப்பட்ட வியாபாரிகளின் கணக்குக்குறிப்புகளுக்கு பெர்ஸனல் அகவுண்ட்ஸ் என்றும், இரண்டாவதாகச் சொல்லப்பட்ட சொத்துக் கணக்குகளுக்கு ரியல் அல்லது ப்ராப்பெர்ட்டி அகவுண்ட்ஸ் என்றும் கடைசியில் சொல்லப்பட்ட உதவிக் கணக்குகளுக்கு நாமினல் அகவுண்ட்ஸ் என்றும் பெயர்கள் விளங்குகின்றன. சொத்துக் கணக்குகளும் உதவிக்கணக்குகளும் வியாபாரிகளல்லாத இம்பெர்ஸனல் அகவுண்ட்ஸ் என்பவைகளுக்கு இரு உட்பிரிவுகளாகின்றன.

மேற் கூறப்பட்ட மூன்றுவித கணக்குக் குறிப்புகளுக்கும் சுலபமாகப் பற்று வரவு எழுதும் பொருட்டு மூன்று சாதனங்கள் உண்டு. பெர்ஸனல் அகவுண்டுகளுக்கு, வாங்கிக்கொள்ளுகிறவன் டெடரென்றும் கொடுக்கிறவன் க்ரெடிடரென்றும் உள்ள கொடுக்கல் வாங்கல் வழியே சுலபமானது. ரியல் அல்லது ப்ராப்பெர்ட்டி அகவுண்டுகளுக்கு, எந்த

சொத்து வந்து சேருகிறதோ அதைக்குறிக்கும் கணக்கு டெட்டரென்றும் வெளிப்போகிற சொத்தைக்குறிக்கும் கணக்கு க்ரெடிட்டரென்றும் உள்ள வந்து சேருதல் வெளிப் போகுதல் வழியேசுலபமானது. இருந்தாலும், முதல் சாதனமாகிய கொடுக்கல் வாங்கல் வழியாலும் பற்றுவரவைக் கண்டு கொள்ளலாம். கடைசியாகக் கூறப்பட்ட நாமினல் அகவுண்டுகளுக்கு, ஒருபயோகம் நஷ்டத்தைக் குறித்தால் அவ்வுபயோகத்தைப் பற்றின கணக்குக் குறிப்பு டெட்டரென்றும் லாபத்தைக்குறித்தால் அவ்வுபயோகத்தின் கணக்குக் குறிப்பு க்ரெடிட்டரென்றுமுள்ள லாப நஷ்ட வழியே சுலபமானது. ஆயினும், மற்றிரு வழிகளான கொடுக்கல் வாங்கலும், வந்து சேருதல் வெளிப்போகுதல் என்பவைகளாலும் பற்றுவரவைக்கண்டு கொள்ளலாம். நாமினல் அகவுண்டுகள் லாப நஷ்டத்தைக் குறிக்கின்றனவாகையால் இக்கணக்குகளுக்கு லாபநஷ்டக்கணக்குகள் (Profit and loss accounts) என்றும் பெயர்வழங்குகிறது.

4-வது அதிகாரம்.

முதற்குறிப்புப் புத்தகம், வருக்குப்புத்தகமும் அதில் பதிவுசெய்தலும்.

வரவு செலவு காரியங்கள் நடந்தவுடன் ஞாபகத்தின் பொருட்டு அவைகள் அப்பொழுதே வேஸ்ட்புக் என்று சொல்லப்படும் ஓர் சாதாரணக்குறிப்பில் முன்னதிகாரத்தின் ஆரம்பத்தில் காணப்படும் விபரங்களைப்போல் எழுதப்படுகின்றன வென்று முன்னமே சொல்லியிருக்

கிறேம். அப்புத்தகத்திலுள்ள விவரங்கள் சேர்ந்தாற் போல் வரிசையாக எழுதப் படுகின்றன வாகையால் அவைகளிலிருந்து வியாபாரத்தின் பலாபலன்களைத் தெரிந்து கொள்ள முடியாதாகையால் அவ்விவரங்களை கணக்குக்குறிப்புகளாக வேறு புத்தகங்களில் எழுத வேண்டிய அவசிய மேற்படுகிறது. கணக்கு விவரங்களை மற்ற புத்தகங்களில் குறித்து, சாதாரணக்குறிப்போடு ஒத்திட்டு பார்த்துச் சரியானவுடன் சாதாரணக் குறிப்பு அநாவசியமாகையால் அப்புத்தகத்திற்கு வேஸ்ட்புக் என்னும் பெயர் வழங்குகிறது. மேற்சொன்னபடி வேஸ்ட்புக்கிலிருந்து விவரங்களை கணக்குக் குறிப்புகளாக மாற்றி எழுதப்படும் புஸ்தகத்திற்குத்தான் லெட்ஜர் அல்லது வருக்குப் புத்தகமென்று பெயர். எவ்வித வரவு சிலவுகாரியமும் லெட்ஜரில் வந்தே தீர வேண்டுமாகையால், அதுவே கணக்குப் புத்தகங்களில் முக்கியமானதாகிறது. ஓர் வரவு சிலவு காரியத்தை லெட்ஜர் புத்தகத்திலுள்ள கணக்குக்குறிப்புகளில் முன்னதிகாரத்தில் சொன்னபடி பற்று வரவு எழுதுவதற்குத்தான் பதிவு செய்தல் என்று சொல்லப்படுகிறது.

ஜர்னலாகிய முதற்குறிப்புப் புத்தகத்தின் உபயோகம்:- வருக்குப்புத்தகமானது ஓர் முக்கியமான கணக்குப் புத்தகமாகையால் வியாபார விவரங்களை வேஸ்ட்புக்கிலிருந்து அதில் மாற்றி எழுதுவதில் யாதொரு பிசகும் ஏற்படாமல் பார்த்துக்கொள்வது அவசியம். ஆனல் சாதாரணக் குறிப்பிலிருந்து வருக்குப்புத்தகத்தில் நேரே விபரங்களைப் பதிவு செய்வதில் மிகுந்தசிரமமுண்டு. ஒவ்வொருவரவு சிலவு காரியத்தையும் பற்றுவரவுகண்டுபிடித்து உடனுக்குடனே வருக்குப் புத்தகத்தில் பதிவுசெய்வதால்

சிற்சில சமயங்களில் மறதியால் பற்றுவரவுகளை முக்கியமா யுள்ள லெட்ஜரில் மாற்றி யெழுதிவிடக்கூடும். வியாபாரம் பெருகப்பெருக வரவு சிலவு காரியங்களின் பற்று வரவைக் கண்டு பிடிப்பதே மிகுந்த துர்பலமாகும். அப்படியிருக்க அவைகளை அப்பொழுதே வருக்குப்புத்தகத்தில் பதிவு செய்வதானுல் ஞாபகமின்மையால் ஒன்றுக்கு வேறொன்று எழுதிவிட நேரிடும். இவ்விதம் லெட்ஜரில் ஓர் தப்பிதம் ஏற்பட்டால் அதைச்சீர்திருத்துவது வெகு கஷ்டமாயிருக் கும். ஆதலால், வியாபார விபரங்களெல்லாம் ஒன்ருகச் சேர்த்தெழுதப்பட்ட சாதாரணக்குறிப்பிலிருந்து அதே சம யத்தில் பற்று வரவுகளை யோசித்துப்பதிவுசெய்யாமல், முன் ஞலேயே இந்தக்கணக்குப்பற்ருகிறது, இந்தக்கணக்கு வர வாகிறது என்று தனியாக பற்று வரவுகளைக் காட்டி நிற்கும் ஓர் புத்தகத்திலிருந்து கணக்குக்குறிப்பில் பதிவுசெய்வது தான் மிகவும் சுலபமான காரியம். இவ்விதமாக பற்று வரவு களை மட்டும் பதிவு செய்வதற்கு வைத்துக்கொள்ளப்படும் தனிப்புத்தகத்திற்குத்தான் முதற் குறிப்புப்புத்தகம் அல் லது ஜர்னல் என்று பெயர்.

வருக்குப்புத்தகத்தில் பதிவு செய்வதற்குமுன், சாதா ரணக்குறிப்பிலுள்ள விபரங்களை முதற் குறிப்புப் புத்தகத் தில் மாற்றி எழுதவேண்டும். வருக்குப்புத்தகத்தில் எந்தக் கணக்குக் குறிப்பை பற்ருகச்செய்யவேண்டுமோ, எந்தக் கணக்குக்குறிப்பை வரவாகச்செய்யவேண்டுமோ, அந்தந் தக்கணக்கு பற்றென்றும் வரவென்றும் ஜர்னலில் காணப்படு கிறது. கணக்கு விபரங்களை பற்று வரவாக மாற்றி எழுத வேண்டிய சாதனங்களும் முன்னமேயே சொல்லப்பட்டிருக் கின்றன.

கீழ்வரும் சாதாரணக்குறிப்பிலுள்ள விபரங்களைப்பற்று வரவாக ஜர்னலில் மாற்றி எழுதவேண்டிய விதத்தைக் காண்பிப்போம்:—

1910. மார்.	1.	மணி என்பவர் ரூ 500 முதலாக வைத்து வியாபாரம் ஆரம்பித்தார்.		
,,	2.	கடை வாடகை கொடுத்தது	ரூ.	50—0—0
,,	4.	வேலு செட்டியாரிடமிருந்து சரக்குகள் வாங்கினது	ரூ.	300—0—0
,,	5.	ராமய்யரிடமிருந்து கடன் பெற்றுக்கொண்டது	ரூ.	250—0—0
,,	10.	ரொக்கத்திற்கு சரக்குகள் விற்றது	ரூ.	200—0—0
,,	12.	கோபால பிள்ளைக்குக்கடனாக ரொக்கம் கொடுத்தது	ரூ.	150—0—0
,,	15.	ராமய்யருக்கு சரக்குகள் விற்றது	ரூ.	200—0—0
,,	30.	வேலுசெட்டியாருக்குப் பணம் கொடுத்தது	ரூ.	300—0—0
,,	31.	வேலைக்காரர்களின் சம்பளம் கொடுத்தது	ரூ.	60—0—0
		தபால் சிலவு	ரூ.	10—0—0
		கையிருப்புச்சரக்கு	ரூ.	120—0—0

ஜர்னல் குறிப்புப் புத்தகத்தின் ஏடு வருமாறு பிரிவுகளுடன் காணப்படுகிறது :—

மணி என்பவரின் முதற் குறிப்பு. 1

தேதி.	விபரம்.	வ. ந.	பற்று ரூ.	அ.	பை.	வரவு. ரூ.	அ.	பை.
1910.								
மார். 1.	ரொக்கக்கணக்கு பற்று	1	500	0	0			
	முதல் கணக்கால்	1				500	0	0
,, 2.	வாடகைக்கணக்கு பற்று	2	50	0	0			
	ரொக்கக் கணக்கால்	1				50	0	0
,, 4.	சரக்குக்கணக்கு பற்று	1	300	0	0			
	வேலுசெட்டியாரால்.	1				300	0	0
,, 5.	ரொக்கக்கணக்கு பற்று	1	250	0	0			
	ராமய்யரால்.	1				250	0	0
,, 10.	ரொக்கக்கணக்கு பற்று	1	200	0	0			
	சரக்குக் கணக்கால்.	1				200	0	0
,, 12.	கோபாலபிள்ளை பற்று	2	150	0	0			
	ரொக்கக்கணக்கால்.	1				150	0	0
,, 15.	ராமய்யர் பற்று	1	200	0	0			
	சரக்குக்கணக்கால்.	1				200	0	0
,, 30.	வேலுசெட்டியார் பற்று	1	300	0	0			
	ரொக்கக்கணக்கால்.	1				300	0	0
,, 31.	சம்பளக்கணக்கு பற்று	2	60	0	0			
	ரொக்கக்கணக்கால்.	1				60	0	0
,, 31.	வியாபாரச்சிலவுகணக்குபற்று	2	10	0	0			
	ரொக்கக்கணக்கால்.	1				10	0	0
			2020	0	0	2020	0	0

மேலே காணப்பட்ட ஜர்னலின் முதல் பிரிவான தேதிக்காலத்தில், எந்தத்தேதியில் வியாபாரம் நடந்திருக்கிறதோ அத்தேதியைக்குறிப்பிடவேண்டும். இரண்டாவது பிரிவான விபாக்காலத்தில் எந்தக்கணக்குகள் டெடர் க்ரெடிடாராகின்றனவோ அவைகளைக்குறிக்கவேண்டும். ஜர்னலிலிருந்து வருக்குப்புத்தகத்தில் பதிவு செய்யும் பொழுது எந்தெந்த ஏட்டில் பதிவு செய்கின்றோமோ அந்த ஏட்டின் நம்பரை மூன்றாவது காலத்தில் குறிக்கவேண்டும். "வ. ந" என்பது "வருக்குப்புத்தகத்தின் ஏட்டு நம்பர்" என்று அர்த்தமாகிறது. நான்காவது பிரிவாகிய பற்றுக்காலத்தில் எழுதப்படும் தொகை வருக்குப் புத்தகத்திலுள்ள கணக்குக் குறிப்பின் பற்றுப் பக்கத்தில் பதிய வேண்டிய தொகையைக் குறிக்கிறது. அதுபோலவே வரவுகாலத்தில் எழுதப்படும் தொகை வருக்குப் புத்தகத்தின் கணக்குக் குறிப்பில் வரவு பக்கத்தில் பதியவேண்டிய தொகையைக் குறிக்கிறது.

இனி விபாக்காலத்தில் பற்று வரவு கணக்குகளை எழுத வேண்டிய மாதிரியை கவனிப்போம். ஒரு வரவு சிலவு காரியத்திற்கு பற்று, வரவுஎன்று இரண்டு அம்சங்கள் அவசியமாயுள்ளன வென்று முன்னமேயே சொல்லப்பட்டிருக்கிறது. அப்பற்றுவரவுகளால் பாதிக்கப்படும் கணக்குகளை மட்டும் தனியாகக்காட்டுவதின்பொருட்டுசாதாரணக்குறிப்பிலிருந்து ஜர்னலில் மாற்றி எழுதுகிறோம் என்றும் மேலே கூறப்பட்டிருக்கிறது. அதாவது, எந்தக்கணக்கு எந்தக் கணக்கால் பற்றாயிருக்கிறது என்பதை ஜர்னலில் குறிக்கவேண்டும் பற்றுப்பக்கம் வருக்குப்புத்தகத்திலும் மேற்சொல்லப்பட்ட ஜர்னல் புத்தகத்தினேட்டிலும் வரவுப்பக்கத்திற்கு

இடதில் அதாவது முதலில் இருப்பதாலும் பற்று வரவு என்ற இரண்டு காரியங் களிலும் பற்றே முதலானதாலும் பற்றுகப்பட்ட கணக்குக்குறிப்பை ஜர்னல் புத்தகத்தின் விபரக்காலத்தில் முதலில் குறிக்கவேண்டும். எத்தொகைக்கு அக்கணக்கு பற்றுகிறதோ அத்தொகையை பற்றுத் தொகைக்காலத்தில் குறிக்கவேண்டும். அதன்பிறகு ஷெ வியாபாரத்திலுள்ள வரவாகிநிற்கும் கணக்கை கவனிக்க வேண்டும். வரவு தொகைப்பிரிவு பற்றுப் பிரிவுக்கு வலதில் இருப்பதாலும் வரவு என்னும் செயல் பற்றைப்பின் பற்றின தாகையாலும் ஜர்னலின் விபரக்காலத்தில் பற்றுக் கணக்கெழுதப்பட்ட வரியின் கீழ் கொஞ்சம் வலது புறமாகத் தள்ளி எந்தக் கணக்கால் முன்வரியில் காணப்படும் கணக்குக்குறிப்புக்குப் பற்று ஏற்பட்டதோ அல்லது ஷெ வியாபாரத்தில் எந்தக் கணக்குவரவாகியிருக்கிறதோ அக்கணக்கின் பெயரை எழுதி, அவ்வரிக்கெதிர்த்தாப்போல் வரவு தொகைப் பிரிவில் வரவேற்பட்டதொகையைக் குறிக்க வேண்டும்.

மார்ச்சுமீ 5ந்தேதி, கிருஷ்ணனுக்குக் கடன் கொடுத்தது ரொக்கம் ரூ 100 என்று வைத்துக்கொள்வோம். இச்சாதாரணக் குறிப்பிலிருந்து ஜர்னலுக்குக் கொண்டுபோகும் பொழுது யார் டெட்டரென்றும் யார் க்ரெடிடரென்றும் அறிய வேண்டும். முன்னதிகாரத்தில் சொல்லபபட்டசாதனங்கள் மூலமாய் கண்டு பிடித்ததில் கிருஷ்ணன் டெட்டரென்றும் நம்முடைய ரொக்கக்கணக்கு க்ரெடிடரென்றும் தெரிகிறது. இக்குறிப்பு ஜர்னலில் கீழ்வருமாறு காணப்படுகிறது:—

முதற் குறிப்பு.

தேதி	விபரம்.	வ. ந.	பற்று. ரூ.	அ.	பை	வரவு ரூ.	அ.	பை
மார், 5.	கிருஷ்ணன் பற்று		100	0	0			
	ரொக்கக் கணக்கால்					100	0	0

ஷை பதிவை "ரொக்கக்கணக்கால் கிருஷ்ணன் பற்று" என்று வாசிக்கவேண்டும். இந்த வியாபாரத்தில் எப்பொழுது கிருஷ்ணன் பற்று என்று குறிக்கப்பட்டதோ ரொக்கக் கணக்கு மற்றோர் அம்சமான வரவுதான் என்று சொல்லாமலே விளங்குகிறதாகையால் இரண்டாவது வரியில் வரவு என்றுகுறிப்பிடவேண்டிய பிரமேயமில்லை. வரவாகவிருக்கும் கணக்கின் பெயர் கோட்டினின்றும் கொஞ்சம் தள்ளி எழுதப்படுவது வருக்குப் புத்தகத்தில் பதிவுசெய்யும்பொழுது பற்றுவரவு கணக்குகளை எளிதில் கண்டு பிடிக்கும் பொருட்டும் ஜர்னல் புத்தகம் ஒழுங்காகக் காணப்படும் பொருட்டுந் தான். சுளுவில் பற்றுத்தொகையை வருக்குப்புத்தகத்தின் இடது பக்கத்திலும் வரவுதொகையை வலது பக்கத்திலும் பதியும் பொருட்டுத்தான் தனியாக பற்றுக்கும் வரவுக்கும் இரண்டு பிரிவுகள் ஜர்னலில் காணப்படுகின்றன. பற்றுக்கும் வரவுக்கும் இரண்டு பிரிவுகள் ஏற்பட்டிருப்பதால் மற்றோர் சௌகரியம் என்னவெனில், ஒரே தொகைக்கு ஓர் கணக்கு பற்றும் ஓர் கணக்கு வரவும் ஆகிறபடியால், ஜர்னலில் அதே தொகை பற்றுத் தொகைக்காலத்தில் பற்றுக்

கணக்குக் கெதிரிலும் வரவு தொகைக் காலத்தில் வரவு கணக்குக் கெதிரிலும் எழுதப்படுகிறபடியால், வியாபாரங்கள் எல்லாவற்றையும் குறித்தபிற்பாடு, பற்றுக்காலத்திலுள்ள தொகைகளின் கூடுதல் வரவு காலத்தின் தொகைகளினுடைய கூடுதலுக்குச் சரியாக விருக்கவேண்டும். அப்பொழுதுதான் ஓர் வியாபாரத்தின் பற்று வரவாகிய இரண்டு அம்சங்களும் ஜர்னலில் சரியாக எழுதப்பட்டிருக்கின்றன வென்று அறியலாம். தொகைகளின் கூடுதலில் கொஞ்சம் வித்தியாசம் ஏற்படுமானல், ஏதோ ஓர் தப்பிதம் ஏற்பட்டிருக்கிறதென்று அறிந்து குறிக்கப்பட்டவைகளை மறுதரம் முதலிலிருந்து ஆராய்ந்துபார்க்க வேண்டும். ஆகவே பற்றுத் தொகைக்கும் வரவு தொகைக்கும் இரண்டு பிரிவுகள் ஏற்பட்டிருப்பது கணக்கெழுதும் வேலையைச் சீர்திருத்த ஓர் அனுகூலமாயிருக்கிறது.

மேலே காணப்படும் மாதிரி ஜர்னல் குறிப்பை வருக்குப் புத்தகத்தில் பதிவுசெய்யும் பொருட்டு இவ்விரண்டு விதங்களாக வாசிக்கலாம். ஒன்று "ரொக்கக்கணக்கால் கிருஷ்ணன் பற்று ரூ 100" என்பதும், மற்றென்று "கிருஷ்ணனுக்கு ரொக்கக்கணக்கு வரவு" என்பதும். ஆகவே, ஒவ்வொரு வியாபாரச்செய்கையும் தனித்தனியே எடுத்து அதனல் ஏற்படும் கணக்குகளை மேற்சொன்ன விதமாக பற்று வரவுகளாக எழுதி ஒழுங்கு செய்துகொண்ட பிற்பாடு லெட்ஜரில் ஓர் கஷ்டமுமில்லாமல் சீக்கிரம் பதிவுசெய்துவிடலாமாதலால், இக்கணக்குப் பதிவு நூலில் ஜர்னல் குறிப்பெழுதுவது ஓர் முக்கியமானதாயும் கஷ்டமாயுமுள்ள வேலை. கணக்கெழுதுபவரின் திறமை ஜர்னலைச்சரிவர எழுதுவதில்தான் விளங்கும்.

நிற்க, இவ்வதிகாரத்தின் ஆரம்பத்தில் கொடுக்கப்பட்ட சாதாரணக் குறிப்பு விபரங்களை ஒவ்வொன்றாக ஜர்னல் குறிப்புகளாக மாற்றுவோம்.

மார். 1. மணி என்பவர் ரூ. 500 முதலாக வைத்து வியாபாரம் ஆரம்பித்தார்.

வியாபாரம் நடக்கும்பொருட்டு ரொக்கம் ரூ 500 முதலாக வியாபாரத்தில் வந்து சேருகிறபடியால், ரொக்கக் கணக்கு டெடர் அல்லது பற்றுகிறதென்று அறிகிறோம். க்ரெடிடராகும் கணக்கு யாது? வியாபாரத்திற்குச் சொந்தமென்று எதுவும் கிடையாததாகையால் அவ்வியாபாரத்திலுள்ள கொடுக்கல் வாங்கல் முதலியவெல்லாம் தொழிலை ஆரம்பிக்கும் முதலாளியைச் சேர்ந்ததே. ஆதலால் ஓர் வியாபாரம் முதலாளியைப் பொருத்திருக்கிறது.

ஓர் வியாபாரமென்பது, அவ்வியாபாரத்திற்கு கொஞ்சம் மூலதனமாகப் பணம் செலவழிக்கும் முதலாளி என்பவன் அம்மூலதனத்தைப் பலவழிகளில் உபயோகித்து மூலதனத்தைத் திருப்பிப் பெற்றுக் கொள்வதல்லாமல் மூலதனத்தை உபயோகப்படுத்தியதற்காகச் சன்மானமும் பெறுவதேயாம். ஆதலால் தான், மூலதனம் முன்னிருந்ததைக் காட்டிலும் அதிகப்பட்டால், அதிகப்பட்டதனம் முதலின் பிரயோஜனத்தின் பொருட்டுச் சன்மானத்தைக் குறிக்கிறதென்றும் அதுவே லாபமென்றும் சொன்னோம். இவ்விதம் வியாபாரத்தின் உண்மையான லாபத்தை அறிவதென்றால் வியாபார விஷயங்களை மட்டும் கணக்குகளில் சம்பந்தப்படுத்த வேண்டும். அதுபோலவே வியாபாரத்திற்கு முதல் போட்டிருக்கும் முதலாளி வியாபாரத்தில் எதுவரையில் சம்பந்தப்

பட்டிருக்கிறானோ அதுவரையில் அவன் கணக்கெழுதவேண்டும். முதலாளியின் வீட்டுச் சொந்தச் சிலவுகளும், அவன் பெண்சாதிக் குழந்தைச் சிலவுகளும் வியாபாரத்தில் சம்பந்தப்படமாட்டாது. அவன் சொந்தக் கணக்குகள் வேறு, வியாபாரத்தில் சம்பந்தமான அவன் கணக்கு வேறு. வியாபாரத்தைப்பற்றின வரையில் அவன் வியாபார நிமித்தம் பணம் கடன்கொடுத்தவனாகிறான். முதலாளி தன் சொந்தப் பணத்தால் வியாபாரத்தை ஆரம்பித்தாலும் அதாவது வியாபாரமே அவனுக்குச் சொந்தமாயிருந்தாலும், தன்னிஷ்டம்போல் வியாபாரத்திலிருந்து பணத்தைச்சிலவு செய்யக்கூடாது. ஒருகால் பணம் வேண்டியிருந்து பணம் எடுத்துக்கொண்டால், அன்னியனைப்போல் தன்னை எண்ணி எடுத்துக்கொண்டபணத்தை வட்டியோடு திருப்பி வியாபாரத்தில் போட்டுவிடவேண்டும். ஆகவே வியாபாரத்தில் முதலாளியை அன்னியனைப்போல்பாவித்து அவனால் முதலாக வைக்கப்படும் பணத்தை வியாபாரத்தின் ஓரம்சமான ரொக்கக்கணக்குகடன் வாங்கிக்கொள்ளுகிறதாகவும் அன்னியனாக பாவிக்கப்பட்ட முதலாளி கடன் கொடுக்கிறதாகவும் எண்ணவேண்டும். ஆதலால் கடன்கொடுக்கும் "அன்னியனாகபாவிக்கப்படும் முதலாளியின் கணக்கு" அதாவது "முதல் கணக்கு" க்ரெடிடராகிறது. நாமெடுத்துக்கொண்ட உதாரணத்தில், மணி என்பவர் ரூ 500 முதலாகவைத்து வியாபாரம் ஆரம்பிக்கும் பொழுது அவர் வியாபாரத்தின் ஓரம்சமான ரொக்கக்கணக்கு வியாபார நிமித்தம் பணத்தைப் பெற்றுக்கொள்ளுகிறபடியால், ரொக்கக்கணக்கு டெடராகிறது. மணி என்பவர் அன்னியர் போல் வியாபாரத்துக்குக் கடன் கொடுத்திருக்கிறார், அதாவது வியாபாரம் எந்தசமயத்திலும்

அப்பணத்தை மனிக்குத்திருப்பிக்கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறதாகையால், அவர் சொந்தக்கணக்கான முதல் கணக்கு க்ரெடிடர் அல்லது வரவாகிறது. இதற்குக்கீழ்கண்டபடி ஜர்னல் குறிப்பு எழுதவேண்டும்:—

1910, மார் 1. ரொக்கக்கணக்கு பற்று ரூ. 500—0—0
முதல் கணக்கால் ரூ 500—0—0

இந்த ஜர்னல் குறிப்பும் இன்னும் பின்னால் கூறப்படும் மற்றவிபரங்களின் ஜர்னல் குறிப்புகளும் இவ்வதிகாரத்தின் முதலில் வரையப்பட்டிருக்கும் ஜர்னல் காலங்களில் குறிக்கப்பட்டிருக்கின்றனவாகையால் அப்போதைக்கப்போது பின்னால் திருப்பிப்பார்த்துக்கொள்ளவும்.

அதிகாரத்தின் முதலிலுள்ள ஜர்னல் புத்தகத்தில் காட்டினபடி ஓர் வியாபாரத்தைப்பற்றின குறிப்பைஎழுதின பிறகு அதை பின்னால் வரும் ஜர்னல் குறிப்புகளினின்றும், வருக்குப்புத்தகத்தில் தாமத மன்னியில் பதிவு செய்யும் சௌகரியத்தை உத்தேசித்து, விபரக்காலத்து அகலத்துக்கு மட்டும் நீண்ட ஒரு கோட்டினால் பிரிக்கவேண்டும்.

மார். 2. கடைவாடகை
கொடுத்தது. ரூ. 50—0—0

இதில் வியாபார ஸ்தலத்தின் உபயோகம் வந்து சேருகிறதாகையால் அது மூலதனத்தின் ஓர் பகுதியல்ல. ஆனால் நாம் கொடுக்கும் ரொக்கமோ மூலதனத்தின் ஓர் பகுதியாகிறது. மூலதனத்தின் ஓர் அம்சம் வெளியில் செல்ல அதை ஈடு செய்வதற்கு மூலதனத்தின் வேறோர் அம்சமும் வந்து சேரவில்லையாதலால், மூலதனம் குறைகிறது. ஆதலால் வியாபார ஸ்தலத்தின் உபயோகத்தைக் காட்டுகிற வாட

கைக் கணக்கு வியாபாரத்திற்கு நஷ்டத்தைஉண்டாக்குகிற தாகையால் அக்கணக்கு பற்றுகிறது. ரொக்கம் வெளிப் போகிறதாகையால் ரொக்கக்கணக்கு க்ரெடிடராகிறது. இதை, "ரொக்கக் கணக்கால் வாடகைக் கணக்கு பற்று" என்று குறிக்கவேண்டும். இதனுடைய ஜர்னல் குறிப்புக்கு முன்னால் திருப்பிப் பார்க்கவும்.

மார். 4. வேலுசெட்டியாரிடமிருந்து
சரக்குகள் வாங்கினது. ரூ 300—0—0.

வாங்கப்பட்ட சரக்குகள் வியாபாரத்தில் வந்து சேரு கின்றன வாகையால் சரக்குக் கணக்கு டெடராகிறது. ரொக் கத்திற்கு வியாபாரம் நடந்திருக்கிறதென்று சொல்லப்பட வில்லை யாதலாலும் யாரிடமிருந்து சரக்குகள் வாங்கப் பட் டனவோ அவர் பெயரும் குறிப்பிட்டிருக்கிறதாகையாலும், கடனுக்கு என்று சொல்லவேண்டிய அவசியமில்லாமலே வியா பாரம் கடனுக்கு நடந்திருக்கிறதென்று தீர்மானிக்கலாம். இவ்விபரத்தில் வேலு செட்டியார் சரக்குகள் கொடுத்திருக் கிறாராகையால் அவர் கணக்கு க்ரெடிடராகிறது. ஆகவே "வேலு செட்டியாரால் சரக்குக்கணக்கு பற்று" என்று குறிப்பிட வேண்டும்.

மார். 5. ராமய்யரிடமிருந்து கடன்
பெற்றுக் கொண்டது ரூ. 250—0—0

வியாபாரத்தில் பணம் வந்து சேருகிறபடியால் அதா வது வியாபாரம் பணத்தைப் பெற்றுக்கொள்ளுகிறபடியால் ரொக்கக்கணக்கு டெடரும் ராமய்யர் கடனாகக் கொடுத்திருக் கிறாராகையால் அவர் கணக்கு க்ரெடிடருமாகிறது. ஆகவே ராமய்யரால் ரொக்கக்கணக்கு பற்றுகிறது. வியாபாரிகளின்

பெயர்களை அதாவது பெர்ஸனல் அகவுண்டுகளைக் குறிப்பிடும்பொழுது பெயருக்குப் பின்னால் கணக்கு என்று சேர்ப்பது வழக்கமில்லை.

மார். 10. ரொக்கத்திற்குச் சரக்குகள்
விற்றது ரூ. 200—0—0

விற்றசாமான்களுக்காகப்பணம் வியாபாரத்தில் வந்து சேருகிறதாகையாலும், சரக்குகள் விற்கப்பட்டு வெளிப்போகின்றனவாகையாலும், ரொக்கக்கணக்கு பற்றும் சரக்குக் கணக்கு வரவுமாகிறது. அதாவது, சரக்குக் கணக்கால் ரொக்கக்கணக்கு பற்ருகிறது.

மார். 12. கோபால பிள்ளைக்குக்கடனாக
ரொக்கம் கொடுத்தது ரூ 150—0—0.

கோபாலபிள்ளை பணம் பெற்றுக்கொள்ளுகிறபடியாலும், ரொக்கம் வியாபாரத்திலிருந்து வெளிப்போகிறபடியாலும், ரொக்கக்கணக்கால் கோபால பிள்ளை டெடாராகிருர்.

மார். 15. ராமய்யருக்குச்சரக்குகள்
விற்றது ரூ 200—0—0.

ராமய்யர் கடனாகச்சரக்குகளைப்பெற்றுக் கொள்வதாலும், சரக்குகள் வெளிப்போகின்றன வாகையாலும், சரக்குக்கணக்கால் ராமய்யர் டெடராகிருர்.

மார். 30. வேலுசெட்டியாருக்குப்
பணம் கொடுத்தது ரூ 300—0—0.

வேலு செட்டியார் ரொக்கம்பெற்றுக்கொள்கிருராகையாலும், ரொக்கம் வெளிப்போகிறதாகையாலும், ரொக்கக் கணக்கால் வேலு செட்டியார் கணக்கு பற்ருகிறது.

மார். 31. வேலைக்காரர்களின் சம்பளம்
கொடுத்தது ரூ. 60—0—0.

இதில் வெளியே கொடுக்கப்படும் ரொக்கத்திற்காக வியாபாரத்தில் வந்து சேருவது வேலைக்காரர்களால் செய்யப்படும் ஓர் உதவி. ஆதலால் மூலதனம் குறைகிறது. இத்தொகைக்கு வியாபாரத்தில் நஷ்டம் ஏற்படுகிறபடியால் நஷ்டத்திற்குக் காரணமாயுள்ள வேலைக்காரர்களின் உதவிக் கணக்கு அதாவது சம்பளக்கணக்கு பற்றுகிறது. ரொக்கம் வெளியில் போவதால் அந்தக்கணக்குக்ரெடிடாகிறது. ஆதலால் ரொக்கக்கணக்கால் சம்பளக்கணக்கு பற்று என்று குறிக்கவேண்டும்.

மார். 31. தபால்சிலவு ரூ. 10—0—0.

நாம் ஸ்டாம்பு வகையறுவுக்காக பணத்திற்குப் பதிலாக தபாலாபீசுகள் நமது தபால்களை மற்ற ஊர்களுக்குக் கொண்டு சேர்க்கும் உதவியைச் செய்கிறார்களாதலால், சில வழியும் பணத்திற்கு ஒருபயோகத்தை அடைகிறோமே தவிர மூலதனத்தின் அம்சமாக ஒன்றும் வந்து சேருகிறதில்லை. ஆகவே தபால் சிலவு ஓர் நஷ்டத்தைக்குறிக்கிறது. இவ்விதமான சில்லரைச் சிலவுகளைக்குறிக்கும் வியாபாரச் சிலவு கணக்கானது டெடராகிறது. ரொக்கக்கணக்கு க்ரெடிடராகிறது. ஆதலால், ரொக்கக் கணக்கால் வியாபாரச் சிலவு கணக்கு பற்றுகிறது.

மேற்கூறிய பற்று வரவுகளை ஜர்னலில் குறித்தபின் அவைகளுக்கடியில் ஓர் கோடிழுத்து பற்று வரவுக் கூடுதல்களை அடியில்போட்டு அத்தொகைகளிரண்டும் சமமாயிருக்கின்றனவா என்று பார்க்கவேண்டும்.

வருக்குப்புத்தகம்.

இனி மேலேகாணும் விவரங்களின் ஜர்னல் குறிப்புகளை வருக்குப்புத்தகத்தில் பதிவுசெய்யத் தொடங்குவோம்.

கணக்குப் பதிவுநூலில் எல்லா கணக்குக்குறிப்புகளும் வருக்குப்புத்தகத்திலேயே அடங்கவேண்டுமாதலாலும் அப்புத்தகத்திலிருந்தே வியாபாரத்தின் முடிவில் லாபநஷ்டங்களையும் கையிருப்புகளையும் அறியவேண்டுமாதலாலும், அப்புத்தகமே மற்ற கணக்குப் புத்தகங்களைவிட மிகவும் முக்கியமானது. ஜர்னல் குறிப்புகளைப் பதிவு செய்யும் பொழுது, அதில் காணப்படும் கணக்குகள் ஒவ்வொன்றுக்கும் ஓர் கணக்குக்குறிப்பு வருக்குப் புத்தகத்தில் எழுத வேண்டும். ஒரே கணக்கைப் பற்றின விபரம் மறுபடியும் நேரிட்டால் இவ்விபரத்தின் பொருட்டு இன்னொரு தரம் அதே கணக்கை யெழுதாமல் முன்னெழுதப்பட்ட கணக்குக் குறிப்பிலேயே இதையும் பதிவு செய்யவேண்டும். எந்தக் கணக்கில் பதிவுகள் செய்யப்படுகின்றனவோ அக்கணக்கின் பெயரை அதன் தலைப்பில் நடுவாக எழுதவேண்டும். அக்கணக்குகள் பெர்ஸனல் அகவுண்டுகளா யிருந்தால், பெயருக்குப் பின் ' கணக்கு ' என்பதைச் சேர்த்து எழுதுவது வழக்கமில்லை. மற்ற கணக்குகள் எதுவாயிருந்தாலும் ' கணக்கு ' என்கிற பதத்தை கணக்குக் குறிப்பின் பெயருக்குப் பின்னுல் சேர்த்தெழுதவேண்டும். வியாபாரக் கணக்குப் புத்தகங்களில் இடது பக்கத்தை பற்று எழுதுவதற்கும் வலது பக்கத்தை வரவு எழுதுவதற்கும் உபயோகிக்க வேண்டும்.

கணக்குகளை எண்ணிக்கை யிடுதல்.—வருக்குப் புத்தகத்தில் இந்தக் கணக்கு இந்தப்பக்கத்தில் இருக்கிறதென்று

தெரிந்தால் மிகவும் சுலபமாகக் கணக்குக் குறிப்புகளைப் பதிவு செய்யலா மாகையால், புத்தகங்களிலுள்ள பக்கங்கள் வரிசையாக எண்ணிக்கை யிடப்படுகின்றன. மேற்சொன்ன விதமாக இடது பக்கம் பற்றுக்கும் வலது பக்கம் வரவுக்கும் வருக்குப் புத்தகத்தில் விடப்படுவதால், இடது பக்கம் வலது பக்க மிரண்டும் ஒரே கணக்குக் குறிப்புக்கு உபயோகப்படு கின்றனவாதலால் இவ்விரண்டு பக்கங்களுக்கும் ஒரே நம்பர் கொடுக்கப்படுகின்றது.

நிற்க, இவ்வதிகாரத்தின் ஆரம்பத்தில் குறிக்கப்பட்ட ஜர்னல் விபரங்களை லெட்ஜரில் பதிவுசெய்யும்பொழுது ஒவ் வொரு கணக்காக லெட்ஜரில் காணப்படுவதுபோல் பின்கண்ட விதம் எழுதிக்கொண்டுபோவோம்:—

1910 மார்.	1.	ரொக்கக்கணக்கு பற்று	500—0—0
		முதல் கணக்கால்	500—0—0

ரொக்கக்கணக்குபற்றுகிறதாகையாலும் முதல் கணக்கு வரவா யிருக்கிறதாகையாலும், ரொக்கக் கணக்கென்றும் முதல் கணக்கென்றும் இரண்டு கணக்குகள் லெட்ஜரில் எழுதவேண்டியது. இருந்தாலும், ஷை கணக்குக் குறிப்பு களை லெட்ஜரில் எழுதும்பொழுது ஓர் கிரமம் உண்டு. புத்த கத்தின் முதலில் முதல்கணக்கும், பிறகு ரொக்கக்கணக்கும் மற்றுமுள்ள சொத்துக் கணக்குகளும் அதாவது ரியல் அல் லது ப்ராப்பெர்ட்டி கணக்குகளும், பிறகு வியாபாரிகளின் கணக்குகளாகிய பெர்ஸனல் கணக்குகளும் கடைசியாக உப யோகங்களைக் குறிக்கும் நாமினல் அகவுண்டுகளும் எழுதப் படவேண்டும். ஆதலால், மேலேயிருக்கும் குறிப்பைப் பதி யும்பொழுது முதல்கணக்கை முதலிலும் அதன்பிறகு ரொக் கக் கணக்கையும் எழுத வேண்டும்.

1

பற்று முதல் கணக்கு வரவு

தேதி.	விபரம்.	மு. ந.	ரூ.	அ.	பை.	தேதி.	விபரம்.	மு. ந.	ரூ.	அ.	பை.
1910.						1910.					
மார் 31.	மொத்தவரவால்		600	0	0	மார். 31	ரொக்கக்கணக்கிற்கு	1	500	0	0
						,,	லாபநஷ்டகணக்கிற்கு		100	0	0
	ஆகமொத்தம்...		600	0	0		ஆகமொத்தம்...		600	0	0
						1910 எப். 1.	மொத்த வரவுக்கு...		600	0	0

பற்று **ரொக்கக் கணக்கு.** வரவு

தேதி	விபரம்.	மு. ந.	ரூ.	அ.	பை.	தேதி	விபரம்.	மு. ந.	ரூ.	அ.	பை.
1910						1910.					
மார். 1	முதல் கணக்கால்	1	500	0	0	மா. 2	வாடகைக்கணக்கிற்கு	1	50	0	0
,, 5	ராமய்யரால்	1	250	0	0	,, 12	கோபால பிள்ளைக்கு	1	150	0	0
,, 10	சரக்குக்கணக்கால்	1	200	0	0	,, 30	வேலு செட்டியாருக்கு	1	300	0	0
						,, 31	சம்பளக்கணக்கிற்கு	1	60	0	0
						,, 31	வியாபாரச்செலவுகணக்கிற்கு	1	10	0	0
							அதிகப்பற்றுக்கு		380	0	0
1910	ஆகமொத்தம்...		950	0	0		ஆகமொத்தம்...		950	0	0
ஏப் 1	பற்று பாக்கியால்		380	0	0						

பற்று **சரக்குக் கணக்கு** வரவு

தேதி.	விபரம்.	மு. ந.	ரூ.	அ.	பை.	தேதி.	விபரம்.	மு. ந.	ரூ.	அ.	பை:
1910.						1910.					
மார் 4	வேலு செட்டியாரால்	1	30	0	0	மார். 10	ரொக்கக்கணக்கிற்கு	1	200	0	0
மார்.31	லாப நஷ்டக்கணக்கால்		220	0	0	,, 15	ராமய்யருக்கு	1	200	0	0
						,, 31	கையிருப்பு பாக்கிக்கு		120	0	0
	ஆகமொத்தம்...		520	0	0		ஆகமொத்தம்...		520	0	0
1910. ஏப். 1.	கையிருப்பு பாக்கியால்...		120	0	0						

பற்று **வேலு செட்டியார்.** வரவு

தேதி.	விபரம்.	மு. ந.	ரூ.	அ.	பை.	தேதி.	விபரம்.	மு. ந.	ரூ.	அ.	பை.
1910 மார். 30	ரொக்கக்கணக்கால்	1	300	0	0	1910 மார். 4	சரக்குக்கணக்கிற்கு	1	300	0	0
	ஆகமொத்தம்...		300	0	0		ஆகமொத்தம்...		300	0	0

பற்று **ராமய்யர்.** வரவு

தேதி.	விபரம்.	மு. ந.	ரூ.	அ.	பை.	தேதி.	விபரம்.	மு. ந.	ரூ.	அ.	பை.
1910. மார். 15	சரக்குக்கணக்கால்	1	200	0	0	1910. மார். 5	ரொக்கக்கணக்கிற்கு	1	250	0	0
,, 31	அதிகவரவால்		50	0	0		ஆக மொத்தம்...		250	0	0
	ஆகமொத்தம்...		250	0	0	1910. ஏப். 1	பாக்கி வரவுக்கு ...		50	0	0

2

பற்று **கோபால பிள்ளை.** வரவு

தேதி.	விபரம்.	மு. ந.	ரூ.	அ.	பை.	தேதி.	விபரம்.	மு. ந.	ரூ.	அ.	பை.
1910 மார். 12	ரொக்கக்கணக்கால்	1	150	0	0	1910 மார். 31	அதிகப்பற்றுக்கு		150	0	0
	ஆகமொத்தம் ..		150	0	0		ஆகமொத்தம்...		150	0	0
1910 எப். 1.	பற்று பாக்கியால்...		150	0	0						

பற்று **வாடகைக் கணக்கு** வரவு

தேதி.	விபரம்.	மு. ந.	ரூ.	அ.	பை.	தேதி.	விபரம்.	மு. ந.	ரூ.	அ.	பை.
1910. மார். 2	ரொக்கக்கணக்கால்	1	50	0	0	1910. மார் :31	லாபநஷ்டகணக்கிற்கு		50	0	0
	ஆகமொத்தம்...		50	0	0		ஆகமொத்தம்..		50	0	0

பற்று சம்பளக்கணக்கு வரவு

தேதி.	விபரம்.	மு. ந.	ரூ.	அ.	பை.	தேதி.	விபரம்.	மு. ந.	ரூ.	அ.	பை.
1910. மார். 31	ரொக்கக்கணக்கால்	1	60	0	0	1910. மார் 31	லாபநஷ்டக்கணக்கிற்கு		60	0	0
	ஆகமொத்தம்...		60	0	0		ஆகமொத்தம்...		60	0	0

பற்று வியாபாரச்சிலவு கணக்கு. வரவு

தேதி.	விபரம்.	மு. ந.	ரூ.	அ.	பை.	தேதி	விபரம்.	மு. ந.	ரூ.	அ.	பை.
1910 மார். 3	ரொக்கக்கணக்கால்	1	10	0	0	1910 மார். 31	லாபநஷ்டக்கணக்கிற்கு		10	0	0
	ஆகமொத்தம்...		10	0	0		ஆகமொத்தம்...		10	0	0

முன்பக்கம் காண்பித்திருக்கும் காலங்களில் 'மு.ந' என்பது முதற்குறிப்பின் நம்பர் என்பதைக்குறிக்கிறது. அதாவது, முன்னல் காணப்படும் கணக்குகளிலுள்ள விவரங்களெல்லாம் ஜர்னல் குறிப்பிலிருந்து எடுக்கப்பட்டிருக்கின்றனவாகையால் அக்குறிப்புகளைத் திருப்பிப் பார்க்கவேண்டுமானல், அவைகளை சுலபத்தில் அறியும்பொருட்டு ஜர்னல் புத்தகத்து எந்த ஏட்டில் குறிக்கப்பட்டிருக்கின்றனவோ அந்த ஏட்டின் நம்பர். இவ்விதமாக வருக்குப் புத்தகத்தின் கணக்கில் பதியப்பட்ட விவரங்கள் ஜர்னலில் எந்த பக்கத்தில் குறிக்கப்பட்டனவோ அந்தபக்கத்தின் நம்பரை வருக்கில் எழுதுவதாலும் ஒருகணக்கு வருக்குப் புத்தகத்தில் எந்தப்பக்கத்தில் குறிக்கப்பட்டிருக்கிறதோ அப்பக்கத்தின் நம்பரை ஜர்னலில் அக்கணக்குக்கெதிரில் எழுதுவதாலும், ஜர்னலையும் லெட்ஜரையும் உடனுக்குடனே ஒப்பிட்டுப் பார்த்துச் சீர்திருத்துவதற்கு, எண்ணிக்கையிடுதல் ஓர் பெரிய அனுகூலமாயிருக்கிறது.

வருக்குப் புத்தகத்தில் இடதுபக்கம் வலதுபக்கம் ஆகிய இரண்டும் சேர்ந்து ஒரே நம்பர் கொடுக்கப்படுகிறதென்று முன்னே கூறப்பட்டிருக்கிறதல்லவா? அவ்விதம் இரண்டு பக்கங்களைக்காட்டும் ஒவ்வொரு நம்பருக்கும் ஒரே கணக்குக் குறிப்புதான் எழுதவேண்டியது. சிலவேளைகளில் அந்த ஒரே நம்பரில் அடங்கிய ஏடு கணக்குக் குறிப்பின் வியாபாரங்களையெல்லாம் எழுதுவதற்குப் போராமல் போனலும் போகலாம். அப்பொழுது அக்கணக்குக்குறிப்பின் தொகைகளைக்கூட்டி அடியில்போட்டு, அக்கணக்கின் மற்றவிவரங்களை வேறு எந்த ஏட்டில் எழுதுகிறேமோ அவ்வேட்டின் நம்பரைக் கீழேபோட்டு '..............வது பக்கம்

தொடர்ச்சி' என்று எழுதிவிட்டு, பின்னால் எழுதப்படுகிற ஏட்டின் தலைப்பில் முன்பக்கத்தில் கூட்டிவந்த தொகைகளைப் போட்டு அதற்கு முன்னால்'..........வது பக்கப்படி கூடுதல்' என்று எழுதவும். ஆதலால் ஓர் கணக்கிற்கு எவ்வளவு பக்கங்கள் விடவேண்டுமென்பது அக்கணக்கைப்பற்றின விபரங்கள் வியாபாரத்துக்குத் தக்கபடி உத்தேசமாய் எவ்வளவு நேரிடலாமோ அதை அனுபவத்தில் தெரிந்து அவைகளுக்கு வேண்டிய பக்கங்களை விடவேண்டும். ஒருபக்கம் ஒரு கணக்கிற்கு மிகுதியாய் நின்றாலும் அதனால் குற்றமில்லை. ஒரு கணக்குக் குறிப்பை முதல் பக்கத்திற்குப்பிறகு அதனடுத்தப் பக்கத்தில் மேலும் எழுதும்பொழுது, மேலே சொன்னதுபோலவே தொகைகளின் கூடுதல்களை பற்று வரவுகாலங்கள் இரண்டிலும் அடியில்போட்டு 'அடுத்தபக்கம் தொடர்ச்சி' என்று முதல்பக்கத்திலும் இரண்டாவது பக்கத்திலெழுதும்பொழுது, முன் வந்ததொகைகளின் கூடுதல்களைப் போட்டு 'முன் பக்கப்படி' என்றும் எழுதவேண்டும்.

ஜர்னல் புத்தகத்திலும் வருக்குப் புத்தகத்திலும் எண்ணிக்கையிடுதல் எப்படி யென்று விளக்கிக்காட்டுவோம். இவ்வதிகாரத்தின் ஆரம்பத்திலுள்ள ஜர்னல் முதல் பக்கத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றதென்பதற்காக 1 என்பது மேலே போடப்பட்டிருக்கிறது. லெட்ஜரில் 1 என்றதின் கீழ் எழுதப்பட்ட கணக்குகள் ஒன்றாவது பக்கத்திலும் 2 என்பதின் கீழுள்ள கணக்குகள் 2வது பக்கத்திலும் எழுதப் பட்டனவென்று வைத்துக்கொள்வோம். ஜர்னல் புத்தகத்தின் முதல் குறிப்பிலுள்ள முதல் கணக்கு லெட்ஜரில் ஒன்றாவது பக்கத்திலிருப்பதால் அதற்கு நேராக ஜர்னலில் வ. ந. என்ற பிரிவில் 1 என்றுபோடப்பட்டது. லெட்ஜரின்

முதல் கணக்கில் அக்கணக்கைப்பற்றின ஜர்னல் குறிப்பு ஜர்னலில் முதல்பக்கத்தில் யிருப்பதால் முதல் கணக்கின் மு. ந. என்ற பிரிவில் 1 என்று போடப்பட்டது. இப்படியே மற்ற கணக்குகளுக்கும் குறிப்புகளுக்கும் எண்ணிக்கை யிடப்பட்டிருப்பதை அறிந்து கொள்ளவும். இந்த எண்ணிக் கைகளை அப்பப்பொழுது கணக்குகள் பதிவு செய்யும் பொழுது போட்டுக்கொண்டே போகவேண்டும்.

இதுவரையில் நாம் ஒரு வியாபாரத்தில் ஒரே கணக்கு சம்பந்தப்படும்படி எடுத்துக்கொண்டோம். இப்பொழுது பல கணக்குகளைச் சேர்த்து ஒரே குறிப்பு எழுதும் விதத்தை கவனிப்போம்.

1927	மார். 28. சரக்குகள் ரொக்கத்திற்கு வாங்கினது	ரூ.	100—0—0
	,, ராமனிடமிருந்து ,,	ரூ.	150—0—0
	கோவிந்தனிடமிருந்து ,,	ரூ.	75—0—0

மேலே காட்டப்பட்டது சாதாரணக்குறிப்பு. இவைகளை ஜர்னல் குறிப்புகளாக மாற்றும்பொழுது, ரொக்கக்கணக்கால் சரக்குக் கணக்கு பற்று ரூ. 100என்றும், ராமனுல் சரக் குக் கணக்கு பற்று ரூ. 150 என்றும், கோவிந்தனுல் சரக்குக் கணக்கு பற்று ரூ. 75 என்றும் குறிக்கவேண்டும். இந்த மூன்று குறிப்புகளும் ஒரே தேதியில் பதியப்படுகின்றனவா கையால் இவைகளை தனித்தனியாகப் பதிவு செய்வது உசித மாகாது. ஒவ்வொரு வியாபாரத்திலும் சரக்குக்கணக்கே பற் றுகிறதாகையால் அதைத்தனித்தனியாக ஒவ்வொன்றிற்கும்

எழுதாமல் ஒரே குறிப்பாக மொத்தத்தொகையைப் பற்றெழுதலாம். ஆனால் வரவு எழுதப்படும் கணக்குகள் வெவ்வேறானதால் அவைகளைத் தனித்தனியே தான் எழுதவேண்டும். அவைகளின் ஜர்னல் குறிப்பு கீழ்கண்ட விதம்:—

1927 சரக்குக் கணக்கு பற்று ரூ. 325—0—0
மார். 28. கீழ்கண்ட கணக்குகளால்:—

ரொக்கக்கணக்கு	ரூ.	100—0—0
ராமன்	ரூ.	150—0—0
கோவிந்தன்	ரூ.	75—0—0

இந்தக் குறிப்பை லெட்ஜரில் பதிவுசெய்யும்பொழுது, சரக்குக் கணக்கில் பற்றுப் பக்கத்தில், எந்தக் கணக்குகளால் பற்றேற்பட்டதோ அவைகளெல்லாவற்றையும் குறிக்காமல் மொத்தமாக 'பல கணக்குகளால்' என்று எழுதி பற்றாகும் மொத்தத் தொகையைப் பதிவு செய்யவேண்டும். வரவு கணக்கில் வரவுப் பக்கத்தில் எழுதும்பொழுது 'சரக்குக் கணக்கிற்கு' என்றெழுதி அந்தக் கணக்கு மாத்திரம் எவ்வளவு தொகைக்கு வரவாகியிருக்கிறதோ அத்தொகையைப் பதிவு செய்யவேண்டும்.

கீழ்வரும் விபரங்களைப் பார்ப்போம்.

1927 மார். 28. சரக்குகள் ரொக்கத்திற்கு

விற்றது	ரூ.	50—0—0
,, ராமனுக்கு ,,	ரூ.	75—0—0
,, கோவிந்தனுக்கு	ரூ.	50—0—0

இவைகளின் ஜர்னல் குறிப்பு கீழ்வருமாறு காணப்படும் :—

1927 கீழ்கண்ட கணக்குகள்:—

மார். 28. ரொக்கக்கணக்கு பற்று		ரூ.	50—0—0
ராமன்	,,	ரூ.	75—0—0
கோவிந்தன்	,,	ரூ.	50—0—0
சரக்குக் கணக்கால்		ரூ.	175—0—0

இக்குறிப்பிலும் அநேக கணக்குகள் பற்றுயிருப்பதால் அவைகள் தனித்தனியாக பற்றெழுதப்பட்டன. அவைகளெல்லாவற்றிற்கும் ஒரே தேதியில் சரக்குக்கணக்கு வரவாயிருப்பதால் அக்கணக்கில் மொத்தத்தொகையைக் குறிப்பிடவேண்டும். சரக்குக்கணக்கில் வரவு பக்கத்தில் பதிவுசெய்யும்பொழுது "பல கணக்குகளுக்கு" என்றெழுதி மொத்தத் தொகையைப் பதிவு செய்யவும். எவ்வளவு கணக்குகள் ஒரே வியாபாரத்தில் சம்பந்தப்பட்டிருப்பினும், ஜர்னல் குறிப்பில் பற்றெழுதப்பட்ட தொகைக்கு வரவெழுதப்பட்ட தொகை அல்லது வரவு தொகைக்குப் பற்று தொகை சமமாயிருக்கவேண்டுமென்பதை கவனிக்கவேண்டும்.

நிற்க, ஒரு வியாபாரத்தை ஆரம்பிக்கும்பொழுது முதல் வருஷத்தில் மாத்திரம் மூலதனம் ரொக்கமாயிருக்குமேதவிர அதற்குப்பின் வருஷங்களில் மூலதனம் பல தினுசுகளாக மாறி நிற்கும். எப்படியெனில், வாங்கின சரக்குகளெல்லாம் வருஷக்கடைசியில் பாக்கியில்லாமல் விற்கப்படுகின்றன என்பது எப்படிக்கூடும்? கொஞ்சம் ரொக்கமும் வியாபாரத்தில் கையிருப்பாக இருக்கும். சரக்குகள் கடனுக்கு விற்கப்பட்ட கடன்காரர்கள் அவர்கள் கொடுக்கவேண்டிய தொகையை வருஷக்கடைசியில் கொடுத்துவிடுகிறுர்களென்று என்ன நிச்சயம்? கடனுக்கு சரக்குகள் நம்மால் வாங்கப்பட்டால்

வருஷக்கடைசிக்குள் கடன் கொடுத்தவர்களுக்குப் பணம் கொடுக்க முடியாமல் போயினும் போய்விடும். ஆதலால் ஒருவருஷம் முடிந்தவுடன் மறுவருஷ ஆரம்பத்தில் ஓர் வியாபாரம், ரொக்கக்கையிருப்பு கொஞ்சம், சரக்குக் கையிருப்பு கொஞ்சம், வரவேண்டிய தொகைகள், கொடுக்கவேண்டிய தொகைகள் முதலானவைகளை உடைத்தாயிருக்கும். இவ்விதமாக வரவேண்டிய தொகைகள், கையிருப்புகள் முதலானவைகளே சொத்து எனப்படும். இச்சொத்து வியாபாரத்திற்கு எங்கிருந்து உண்டாகிறது ? முதலாளிபால் கொடுக்கப்பட்ட மூலதனத்திலிருந்தும், சிலர் கடனாகக் கொடுத்திருந்தால் அக்கடன் கொடுத்தவர்களிடமிருந்தும் உண்டாகிறது. ஆகவே, வியாபாரத்தின் பல அம்சங்களோடு இருக்கும் இந்தசொத்து வியாபாரம் முடியும் காலத்து அன்னியனாகபாவிக்கப்படும் முதலாளிக்கும் மற்ற கடன் கொடுத்தவர்களுக்கும், கொடுக்கப் படவேண்டியது. ஆதலால், வியாபாரமானது கையிருப்பு, வரவேண்டிய தொகைகள் முதலிய தனது சொத்திலிருந்து கடன் காரர்களுக்குக் கொடுக்கவேண்டிய தொகையைக் கொடுத்துவிட்டு மிச்சமிருக்கும் சொத்தாகிய மூலதனத்தை முதலாளியிடம் கொடுக்கவேண்டிவருகிறது. வருஷ ஆரம்பத்தில் உபயோகிக்கப்பட்ட முதலை விட வருஷ முடிவில் கொடுக்கப்படும் முதல் அவ்வருஷம் வியாபாரத்திலுண்டாகிற லாபத்தோடு கூடுதலடைவதால் அதிக மாகவேயிருக்கும்.

மறுவருஷம் வியாபாரமனது வருஷமுடிவில் தனது சொத்துகளையும், கடன்களையும் முதலாளியிடம் ஒப்புவித்துவிடுகிறதென்றும், அச்சொத்திலிருந்தும் முதலாளி கடன்காரர்களுக்குக்கொடுத்து விட்டுத் தன்னுடைய முதலை எடு

த்துக்கொள்ளுகிறுனென்றும் பாவிக்கவேண்டும். ஆனல் முதலாளியோ தன்னுடைய மூலதனத்தைப் பெற்றுக்கொள்ளாமலும், கடன்காரர்களுக்குக் கணக்குத் தீர்க்காமலும் மறு வருஷம் வியாபாரம் ஆரம்பிக்கப்படும் பொழுது அதனிடம் மறுபடியும் ஒப்புவித்து விடுகிறுனென்றும் பாவிக்கவேண்டும். முன்னல் கொடுக்கப்பட்ட சொத்துகளை வியாபாரம் இப்பொழுது பெற்றுக் கொள்வதாக பாவித்துக் கொண்டு, அச் சொத்தின் அம்சங்களைப் பற்றெழுதவேண்டும். இப்பொழுது முதலாளியும் கடன்காரர்களும் வியாபாரத்தினின்றும் தங்களுடைய பாக்கிகளைப் பெறவேண்டியவர்களாயிருக்கிறுர்கள். ஆதலால், முதல் கணக்கும் கடன்காரர்கள் கணக்குகளும் வரவாகின்றன. ஆதலால் ஓர் வியாபாரம் முதல் வருஷத்திற்குப்பின் தொடர்ச்சியாக நடந்துவந்தால், பின் வருஷத்திய ஆரம்பத்தில் மேற்கூறிய விதமாக விபரங்களும் நேரிடும். இவ்விபரங்களையும் ஜர்னல் புத்தகத்தில் குறிக்கவேண்டும். உதாரணமாக கீழ்க்கண்டவைகளை எடுத்துக்கொள்வோம்:—

19—மார்ச்சு மீ 12. நாராயணன் அண்டு கம்பெனி என்ற வியாபாரிகளின் சொத்தும் கடனும் கீழ்வருமாறு:—

ரொக்கக்கையிருப்பு ரூ 750, சரக்குக் கையிருப்பு ரூ. 450, மரசாமான்களின் பெறுமானம் ரூ. 200, சங்கர் என்பவரிடமிருந்து வரவேண்டியது ரூ. 300, சதாசிவம் என்பவரிடமிருந்து வரவேண்டியது ரூ. 475, வாஸன் அண்டு கம்பெனியாருக்குக் கொடுக்கவேண்டியது ரூ 240, மகாதேவ அய்யருக்குக்கொடுக்கவேண்டியது. ரூ. 360.

இவ்விபரங்களில் ரூ. 2,175 பெறுமானமுள்ள சொத்துகளினின்றும் கடன்காரர்கள் தொகையான ரூ. 600-ம் வியாபாரத்தின் மூலதனமும் கொடுக்கப்படவேண்டும். ஆத

லால் சொத்தினின்றும் கடனைக் கழித்துவிட்டால், மூல தனத்தின் தொகை தெரியவரும். முதலாளி யிடமிருந்து சொத்துக்களை வியாபாரம் பெற்றுக் கொள்ளுகிறபடியால், அச்சொத்துகளைக் குறிக்கும் பல கணக்குகளும் டெடராகின்றன. கடன்காரர்கள் கணக்குகளும் மூலதனக் கணக்கும் தத்தம் தொகைகளுக்கு க்ரெடிடராகின்றன. கீழ்வரும் ஜர்னல் குறிப்பைக் கவனிக்கவும் :—

19—மார்ச்சு. 1.

கீழ்க்கண்ட கணக்குகள் :—

		ரூ. அ. பை.		ரூ. அ. பை.
ரொக்கக்கணக்கு	பற்று	750—0—0		
சரக்குக்கணக்கு	,,	450—0—0		
மாசாமான் கணக்கு	,,	200—0—0		
சங்கர்	,,	300—0—0		
சதாசிவம்	,,	475—0—0		
			கீழ்க்கண்ட கணக்குகளால்:—	
			வாஸன் அண்டு கம்பெனி	240—0—0
			மகாதேவ அய்யர்	360—0—0
			முதல் கணக்கு	1,575—0—0
		2,175—0—0		2,175—0—0

ஓர் வியாபாரத்தின் ஆரம்பத்தில் ஏற்படக்கூடியதாயும் ஜர்னல் குறிப்பில் முதன்முதலில் பதியப்படவேண்டியதாயுமுள்ள மேற்கூறிய விபரங்களை ஜர்னலில் குறித்தபின் பற்று வரவு தொகைகளைக் குறிக்கும் இரண்டு பிரிவுகளின் கீழ் மேலே காணும் விதமாக ஓர் கோடிழுத்து மொத்தத்தொகை

களை இரண்டு பிரிவுகளிலும் போடுவது வழக்கம். ஆனால் மொத்தத் தொகைகளுக்குக் கீழ் கோடிழுக்கக்கூடாது. இந்தக் குறிப்பிலும் பற்று வரவு தொகைகளிரண்டும் சமமாயிருப்பதைக் கவனிக்கவும்.

மேற்கூறிய ஜர்னல் குறிப்பை இரண்டு பிரிவுகளாக பிரிக்கினும் பிரிக்கலாம். முதலாளியினிடமிருந்து வியாபாரம் சொத்துகளைப்பெற்றுக்கொள்ள சொத்துகளைக் காட்டும் கணக்குகள் பற்றாகி மூலதனக்கணக்கு வரவெழுதப் படுகிறது. எப்பொழுது சொத்து முழுவதும் மூலதன கணக்குக்குமட்டும் கடன் படுகிறதாக எழுதப்படுகிறதோ, வியாபாரத்தின் கடன்களுக்கு மூலதனகணக்கே பாத்தியப் படவேண்டும். ஆதலால் கீழ்வரும் குறிப்புகளைச் செய்யலாம்.

கீழ்க்கண்ட கணக்குகள்:—

ரொக்கக்கணக்கு—பற்று	ரூ.	750—0—0		
சரக்குக்கணக்கு ,,	ரூ.	450—0—0		
மராமான் கணக்கு ,,	ரூ.	200—0—0		
சங்கர் ,,	ரூ.	300—0—0		
சதாசிவம் ,,	ரூ.	475—0—0	ரூ.	
முதல் கணக்கால்				2,175—0—0

முதல் கணக்கு—பற்று	ரூ.	600—0—0		
கீழ்க்கண்ட கணக்குகளால் :—				
வாஸன் அண்டு கம்பெனி			ரூ.	240—0—0
மகாதேவ அய்யர்			ரூ.	360—0—0

இந்த இரண்டு குறிப்புகளையும் சேர்த்தோமானல், முதல் கணக்கில் வரவு ரூ. 1,575 தான் கடைசியாகக் காணப்

படும். இத்தொகையே தான் முதல் குறிப்பிலும் காணப்படுகிறது. ஆதலால் இவ்விதம் வீண் பிரயாசைகொண்டு இரண்டு குறிப்புகள் தனித்தனியே எழுதாமல் அவைகளைச் சேர்த்து முதலில் காணப்பட்டதுபோல் எழுதவேண்டும்.

இக்குறிப்புகளை வருக்குப் புத்தகத்தில் பதிவு செய்யும் விதம் பின்னால் காட்டப்படும்.

5-வது அதிகாரம்.

கணக்குகளின் சரிதப்புகளைக் கண்டு பிடிக்கும் வழி—கணக்குகளை முடித்து பலாபலன்களை அறிதல்.

முன்னதிகாரத்திற் சொன்னபடி ஜர்னல் குறிப்புகளை லெட்ஜர்புத்தகத்தில் வெவ்வேறு கணக்குக் குறிப்புகளில் பதிவுசெய்தபின், குறிப்புகள் சரிவரப் பதிவு செய்யப்பட்டனவா என்றுகண்டு கொள்ளும் நிமித்தம் "ட்ரயல் பாலன்ஸ்" (Trial Balance) என்று சொல்லப்படும் கணக்குகளைச் சரிபார்க்கும் குறிப்பு எழுதப்படுகிறது. ஆங்கிலேயர் கணக்குப் பதிவு நூல் பிரகாரம் ஒவ்வொரு வியாபாரத்திலும் ஒரே தொகைக்கு ஓர் பற்றும் வரவும் இருக்கவேண்டியதாதலால், ஜர்னல் குறிப்பில் எழுதப்பட்டிருக்கும் பற்று விபரங்களின் தொகைக்கு வரவு விபரங்களின் தொகை சமமாயிருக்கவேண்டும். ஆகவே, ஜர்னல் குறிப்புகளெல்லாம் லெட்ஜரில் பதியப்பட்டபின் வெவ்வேறு கணக்குகளிலுள்ள பற்றுத்தொகைக்குச் சமமாக வெவ்வேறு கணக்குகளில் வரவு தொகை காணப்படவேண்டுமாதலால், லெட்ஜரிலுள்ள எல்லா கணக்குக் குறிப்புகளுடைய பற்றுத் தொ

கைக் கூடுதல்களின் மொத்தம் அக்கணக்குகளின் வரவு தொகைக் கூடுதல்களின் மொத்தத்திற்குச் சரியாயிருக்க வேண்டும். அதைக்கண்டுபிடிக்கத்தான் கீழே போடப்பட்டிருக்கும் குறிப்பு உபயோகப்படுகிறது.

வருக்குப்புத்தகத்திலுள்ள கணக்குகளின் பெயர்களையெல்லாம் வரிசையாக ஒரு காகிதத்திலோ அல்லது ஒரு தனிப்புத்தகத்திலோ எழுதி, ஒவ்வொரு கணக்குக் குறிப்பின் பற்றுத்தொகை கூடுதலையாவது அல்லது வரவுதொகை கூடுதலையாவது அல்லது இரண்டு மிருந்தால் அவ்விரண்டு கூடுதல்களையும் அக்கணக்கின் பெயருக்கெதிரில் இரண்டு பிரிவுகளிலெழுதி கடைசியாக எல்லா கணக்குகளினுடைய பற்றுத்தொகை வரவு தொகை மொத்தத்தைக் கூட்டிப் போடவேண்டும். பற்றுத்தொகைகள் மொத்தமும், வரவு தொகைகள் மொத்தமும், ஜர்னல் குறிப்புகளினடியில் போடப்படும்மொத்தமும், சமமாயிருக்குமானால் ஜர்னல் குறிப்புகளெல்லாம் ஒன்று விடாமல் லெட்ஜரில் பதியப்பட்டுள்ளனவென்று அறியலாம். சீக்கிரம் கணக்குக்குறிப்பை லெட்ஜரில் திருப்பிப் பார்க்கும் பொருட்டு "ட்ரயல் பாலன்ஸ்" என்ற குறிப்பில் லெட்ஜர் புத்தகத்தின் நம்பர் அந்தந்த கணக்கினெதிரில் போடப்படுகிறது. முன்னதிகாரத்தில் மாதிரியாகக் கொடுக்கப்பட்ட மணிஎன்பவரின் வியாபாரத்து விபரங்கள் லெட்ஜரில் குறிக்கப்பட்டுவிட்டனவாகையால், அந்தக் கணக்குகளின் ட்ரயல்பாலன்ஸை கீழே காட்டுவோம்.

கணக்குகளைச் சரிபார்க்கும் சாதனம் அல்லது "ட்ரயல் பாலன்ஸ்"

கணக்குகளின் பெயர்.	வ. ந.	பற்று.			வரவு.		
முதல் கணக்கு ...	1				500	0	0
ரொக்கக் கணக்கு ...	1	950	0	0	570	0	0
சரக்குக் கணக்கு ...	1	300	0	0	400	0	0
வேலு செட்டியார் ...	1	300	0	0	300	0	0
ராமய்யர்	1	200	0	0	250	0	0
கோபால பிள்ளை ...	2	150	0	0			
வாடகைக் கணக்கு ...	2	50	0	0			
சம்பளக் கணக்கு ...	2	60	0	0			
வியாபாரச் சிலவு கணக்கு	2	10	0	0			
மொத்தம் ரூ. ...		2020	0	0	2020	0	0

ட்ரயல் பாலன்ஸ் குறிப்பின் மொத்தத் தொகை ரூ. 2,020 ஜர்னல் குறிப்பின் மொத்தத் தொகைக்குச்சமமாயிருப்பதை கவனிக்கவும்.

இனிலெட்ஜர் கணக்குகளை முடிவுசெய்வோம். ஓர் வியாபாரத்தின் மூலதனம் லாபத்தோடு கூடுதலடைந்தும் நஷ்டத்தினால் குறைந்தும் விடுகிறதென்று முன்னமே சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால் லாப நஷ்டங்களால் மூலதனம் மாறுதலடைகிறது. ஆகவே, முதல் கணக்கை முடிக்குமுன் வியாபாரலாபநஷ்டங்களைத் தெரிந்துகொள்ளவேண்டும். லாப நஷ்டங்களைத் தெரிந்துகொள்வதற்கு மற்றக்கணக்குகளை முடிக்க வேண்டுவதவசியம். ஆதலால் முதல் கணக்கு வருக்குப் புத்தகத்தின் முதன் முதலில் இருப்பினும் கடைசியில் தான் முடிக்கப்படவேண்டியது.

ஒரு கணக்கை முடிக்குமுன் எந்தப்பக்கத்து தொகை எந்தப் பக்கத்தைவிட அதிகமாயிருக்கிறதென்றும் எவ்வளவு அதிகமாயிருக்கிறதென்றும் பார்த்துக் கொள்ளவேண்டும். எந்தப்பக்கம் குறைவாகயிருக்கிறதோ அப்பக்கத்தில் குறைந்துள்ள தொகையைப் போட்டு பற்றுவரவான இரண்டு பக்கங்களையும் சமமாகச் செய்யவேண்டும். இதுவே கணக்குகளை முடிவுசெய்வதென்பது.

உதாரணமாக, முன்னதிகாரத்தின் மாதிரியான லெட்ஜரின் இரண்டாவது கணக்காகிய ரொக்கக்கணக்கை எடுத்துக்கொள்வோம். இதில் பற்றுத்தொகை ரூ. 950 வரவு தொகை ரூ. 570-ஐவிட ரூ. 380 அதிகமாகவிருக்கிறது. இக்கணக்கில் பற்றுத்தொகை பணப்பெட்டியில் வந்து சேரும் ரொக்கத்தைக் குறிக்கிறதாகையாலும், வரவு தொகை வெளியில் கொடுக்கப்படுகிற தொகையைக் குறிக்கிறதாகையாலும், எவ்வளவு ரொக்கம் பெட்டியிலிருக்கிறதோ அதைவிட அதிகம் வெளியில் கொடுக்கமுடியாதாகையாலும் பற்றுத் தொகையை விட வரவு தொகை எப்பொழுதும் குறைவாகவே யிருக்கும். எவ்வளவு ரொக்கம்பற்று அதிகமாயிருக்கிறதோ அப்பணம் பணப்பெட்டியில் இருக்கவேண்டும். இத்தொகைக்கு பாக்கிக் கையிருப்பு என்று பெயர். ரொக்கக்கணக்கை முடிக்கும்பொழுது, ரூ. 380 வரவு பக்கத்தில் குறைவாயிருப்பதாலும் அந்த ரூ. 380 ரொக்கக் கையிருப்பு ஆனதாலும் எந்தத் தேதியில் கணக்கை முடிக்கிறோமோ அத்தேதியில் வருக்குப் புத்தகத்தின் வரவு பக்கத்தில் 'அதிகப்பற்று' அல்லது 'பாக்கிக் கையிருப்பு' என்றெழுதி குறைந்துள்ள ரூ 380-ஐ தொகைக்காலத்தில் பதிவுசெய்யவேண்டும். பிறகு, பற்று வரவான இரண்டு தொகைக்காலங்களிலும் அடியில்

இரண்டு கோடுகளிழுத்து மொத்தத்தொகைகளைக் குறித்துப்பின்னும் கோடைப்போட்டு முடிக்கவேண்டும்.

ரொக்கக் கணக்கிலுள்ள பாக்கிக் கையிருப்பான ரூ. 380-ஐ, குறைந்த தொகையுள்ள வரவு பக்கத்தில் எழுதுவதற்கோர் காரணத்தை இங்கே கூறுவோம். வியாபாரம் முடியுங்காலத்து வியாபாரத்தின் சொத்துகளாகிய கையிருப்பு, வரவேண்டிய கடன்கள் முதலியவை முதலாளியிடம் கொடுக்கப்படுவதாக பாவிக்கவேண்டும் என்று முன்னே கூறியிருக்கிறோம். அது போலவே, ரொக்கக் கணக்கில் பாக்கிக் கையிருப்பு ரூ. 380-ம் சொத்தல்லவா? இது முதலாளியிடம் கொடுக்கப்படுவதால், அதாவது ரொக்கம் வெளிப்போகிறதாகையால் ரொக்கக்கணக்கில் வரவு எழுத வேண்டும். ஆனால் வரவு பக்கத்தின் விபர காலத்தில் ‘முதல் கணக்குக்கு’ என்று எழுதாமல் ‘அதிகப் பற்றுக்கு’ என்று மட்டும் குறிக்கவேண்டும்.

இவ்வாறு கணக்குகள் முடிக்கப்பட்டபின், மறு வருஷ ஆரம்பத்தில் முதலாளியிடமிருந்து சொத்துகள் அப்படியே வியாபாரத்தில் திருப்பிக்கொடுக்கப்படுகின்றன வென்று பாவித்துக்கொள்கிறோமாகையால், அச்சொத்துகளைக்குறிக்கும் கணக்குகள் பற்றெழுதப்படுகின்றன. உதாரணமாக, ரொக்கக் கணக்கின் பாக்கி ரூ. 380 மறுபடியும் வந்து சேருகிறதாகையால், ரொக்கக் கணக்கின் பற்றுப்பக்கத்திலெழுத வேண்டும். எந்த தேதியில் கணக்கை முடிக்கிறோமோ அதற்கடுத்த தேதியே மறுபடியும் வியாபாரத்தை ஆரம்பிக்கும் முதல் தேதியாம். ஆகையால் அடுத்த தேதியை பற்றுப் பக்கத்தில் கணக்கை முடிக்கும் பொருட்டு போடப்பட்ட மொத்தத் தொகைக்குக் கீழ் போட்டு, விபரக் காலத்

தில் 'முதல் கணக்கால்' என்று மட்டும் எழுதாமல் 'பாக்கி பற்ருல்' என்று குறித்து, கையிருப்பாகிற தொகை ரூ. 380-ஐ எதிரிலெழுத வேண்டும்.

பலவிதமான சொத்துக்களோடு வியாபாரம் ஆரம்பிக்கப்பட்டால் அச்சொத்துகளின் விபரங்களைப் பதிவு செய்யும் பொழுது மட்டும் 'பாக்கி பற்று' அல்லது 'பாக்கி வரவு' என்று எழுதவேண்டுமேயல்லாது, மற்ற சமயங்களில் எந்தக் கணக்கால் பற்று அல்லது வரவு ஏற்படுகிறதோ அக்கணக்கைத்தான் குறிக்கவேண்டும். மறுபடி வியாபாரம் தொடங்கும் பொழுது பற்று பாக்கிகள், வரவு பாக்கிகள் கணக்குகளிலிருக்கின்றனவென்று காண்பிக்கும் பொருட்டு கணக்குகளை முடித்தபின் அவைகளுக்குக் கீழ் பாக்கிகளும் எழுதப்பட்டு வருகின்றன.

இரண்டு பக்கத்து கூடுதல்களும் ஒரே வரியில் இருக்க வேண்டியதவசியம். ஆனால் ரொக்கக் கணக்கின் பற்றுப் பக்கத்திலுள்ள விபரங்கள் கொஞ்சந்தானிருக்கின்றன. வேறு விபரங்கள் நடுவில் எழுதப்படாமலிருக்கப்படும் பொருட்டு மொத்தத்தைப் போடும் வரிக்கு மேலும் கடைசி விபரம் காணப்படும் வரிக்குக் கீழும் உள்ள இட வெளியில் குறுக்காக ஓர் கோடு இழுக்கப்படுகிறது.

எந்தக் காரியம் நாம் செய்தாலும் அது மிகவும் ஒழுங்காகவும் பார்வைக்கழகாகவும் பரிசுத்தமாகவு மிருக்கவேண்டும். அதை உத்தேசித்து மேற்கூறிய கணக்குகளை எழுதும் பொழுது கோடுகளெல்லாவற்றையும் சிகப்பு மசியில் எழுதுவது வழக்கமாயிருக்கிறது. மாதிரிக்கு முன்னதிகாரத்து லெட்ஜரிலுள்ள கணக்கைப்பார்க்கவும்.

இந்த ரொக்கக்கணக்கில் ஓர் விசேஷமென்ன வெனில், மற்ற கணக்குகளில் அதிகப் பற்று வரவுகள் இருப்பினும், இதில் மட்டும் பெட்டியிலுள்ள பணத்தைவிட அதிகம் சிலவு செய்யமுடியாதாகையால் எப்பொழுதும் பற்றுத்தொகையே அதிக மிருக்கவேண்டும்.

பிறகு அடுத்த கணக்கான சரக்குக் கணக்கை முடிவு செய்வோம். இக்கணக்கில் பற்றுப்பக்கத்தில் உள்ள விபரங்கள் வியாபாரத்தில் அந்தவருஷத்தில் வாங்கப்பட்ட மொத்த சரக்குகளைக்குறிக்கின்றன. வரவு காலத்திலுள்ளவைகள் மொத்த விற்பனைகளைக்குறிக்கின்றன. ஓர் வியாபாரம் லாபம் என்கிற பிரயோஜனத்தை உத்தேசித்து நடத்தப்படுவதால், எந்த வகையில் வியாபாரம் நடத்தப்படுகிறதோ அவ்வகையைக் குறிக்கும் கணக்கில் லாப நஷ்டத்தைக் காணவேண்டும். ஆதலால் விற்கும் விலை வாங்கும் விலையை விட லாபமானல் கூடவும் நஷ்டமானல் குறைந்துமிருக்கவேண்டும். ஒருவருஷத்திய லாப நஷ்டம் அவ்வருஷத்தில் வாங்கப்பட்டமொத்தச்சரக்குகளினின்றும்உண்டாகிறதாகக்கொள்ள வேண்டும். ஆதலால் அவ்வருஷத்துலாப நஷ்டத்தைக்கண்டு பிடிக்க, வாங்கப்பட்டிருக்கும் சரக்குகளெல்லாம் விற்கப்பட்டிருக்கவேண்டும். ஆனல் ஓர் வியாபாரத்தில் எப்பொழுதும் இப்படி நேருகின்றதா? இல்லை. சரக்குகள் கொஞ்சம் கையில் தங்கியிருக்கக்கூடும். லாபத்தைப் பார்க்கும் பொருட்டு இந்தகையிருப்பு சரக்குகளும் விற்கப்படுவதாகவே பாவித்து உத்தேசமாக குறைந்த பட்சம் எந்த விலைக்கு அவைகள் விற்கப்படலாமோ அத்தொகையைக்கண்டு பிடிக்கவேண்டும். ஏனெனில் சரக்குகளை விற்பதாலுண்டாகும் லாபம் குறைந்த பட்சம் எவ்வளவு கிடைக்குமோ அதைத்தான் தீர்மானம்

செய்யவேண்டுமே தவிர, அதிகமாக எண்ணிவிடக்கூடாது. ஒருவன் தன் சரக்குகளை கேட்போரில்லாததால் குறைந்த விலைக்கு விற்பதென்றால், தான்வாங்கின விலைக்கு விற்பதே தனக்கு நஷ்டமில்லாத மிகக்குறைந்தவிற்கும் விலை. ஆனால் அக்காலத்து வியாபார நிலைமையின்படி இவன்சரக்குகளுக்கு வெளியில் விற்கும் விலை இவன்வாங்கினவிலையை விடக்குறைந்திருக்குமேயானால், இப்படிப்பட்ட விற்கும் விலையையே மேற்சொன்ன பாக்கிக்கையிருப்புச்சரக்குகளுக்காகக் குறைந்தபட்சம் கொடுக்கக்கூடியதாக எண்ணவேண்டும். ஆகவே, கணக்குகளை முடிவுசெய்யும்பொழுது, வியாபாரத்தில் எவ்வளவு சரக்குகள் மிஞ்சியிருக்கின்றனவென்று சரக்குகளை எண்ணிப்பார்த்து அவைகளைக் குறைந்த விலைக்கு மதிப்பிட வேண்டும். இவ்விதம் கையிருப்புச் சரக்குகளை விற்கப்படுவதாகபாவித்துமதிப்பிடுவதற்கு இரண்டு விலைகளிருக்கின்றன. சரக்குகளை வாங்கின விலை ஒன்று, அல்லது வியாபார நிலைமைக்குத் தக்கபடி அவைகள் வெளியில் விற்கப்படும் விலை மற்றொன்று. இந்த இரண்டு விலைகளிலும் எதுகுறைவாயிருக்கின்றதோ அவ்விலையின்படியே கையிருப்புச்சரக்குகளை மதிப்பிடவேண்டும். இப்படி பாக்கியிருக்கும் சரக்குகளை மதிப்பிடுவதற்கே ஆங்கிலத்தில் ஸ்டாக்-டேகிங் (stock-taking) என்று சொல்லுவார்கள். கணக்குகளை முடிவு செய்யுமுன் ஸ்டாக்-டேகிங் என்பதே ஓர் முக்கியமான காரியமாகும்.

உண்மையில் சரக்குகளில் கொடுக்கல் வாங்கல் செய்யும் வியாபாரிகள் மட்டும் ஸ்டாக்-டேகிங் செய்யலாமே தவிர, கணக்குகளை மாத்திரம் எழுதப்போகும் நமக்கு பாக்கிசரக்குகளின் மதிப்பு எப்படி விளங்கும். ஆதலால், மாதிரிக்கணக்கு

களெழுதுவதற்கு விபரங்கள் கொடுக்கப்பட்டால், பாக்கியிருப்புச் சரக்குகளின் பெறுமான தொகையும் விபரங்களுக்குக் கீழ் கொடுக்கப்படவேண்டும். முன்ன நிகாரத்தில் சாதாரணக்குறிப்பாக எழுதப்பட்ட விபரங்களுக்குக் கீழ் கையிருப்புச்சரக்கு ரு 120-என்று கொடுக்கப்பட்டதை கவனிக்கவும்.

இனி இந்த சரக்குக்கையிருப்பை யாது செய்வதென்று கவனிப்போம். வியாபாரம் முடியுங்காலத்தில், கையிருப்பாயுள்ள சொத்துகளை வியாபாரம் முதலாளியிடம் ஒப்புவித்துவிடுகிறதாக பாவிக்கவேண்டும் என்று முன்னமே கூறியிருக்கிறோம். அது போலவே இந்த பாக்கியிருப்புசரக்கையும் வியாபாரம் முதலாளியிடம் கொடுத்து விடுவதாகப்பாவித்து வியாபாரக்கணக்குகளை முடிவுசெய்யும் தேதியில் சரக்குக் கணக்கில் பாக்கியிருப்புதொகைக்கு வரவு எழுதவேண்டும். ஆனால், இந்தத்தொகை பாக்கிக்கையிருப்பைக் காட்டுவதாலும், மறுவருஷத்தில் ஆரம்பத்தில் காணக்கூடிய சரக்குகளின் தொகையாதலாலும் சரக்குக்கணக்கின் விபரக்காலத்தில் ' முதல் கணக்குக்கு ' என்று எழுதாமல் ' கையிருப்பு பாக்கிக்கு ' என்று எழுதவேண்டியது.

மேற்கூறியபடி கையிருப்புச் சரக்குகளைக் குறித்துவிட்டால் கணக்கின் பற்று வரவு பக்கங்களிரண்டும் சரிப் பட்டு விடுகின்றன என்று நாம் எண்ணி விடக்கூடாது. மொத்தலாபம் சரக்குக் கணக்கில் தான் சம்பந்தப்பட்டிருக்கிறதாகையால், அதைக்கண்டு பிடிக்கும் பொருட்டு, வாங்கப்பட்ட சரக்குகளெல்லாம் விற்கப்பட்டவைகளாய் வரவு பக்கத்தில் எழுதப்படுகின்றன. மிஞ்சி இருக்கும் சரக்குகளும் விற்கப்படுவனபோலெண்ணி அவை

களின் தொகையும் வரவு பக்கத்திலெழுதப்படுகிறது. எப்பொழுது லாப நஷ்டம் இந்தக் கணக்கில் தான் சம்பந்தப்பட்டிருக்கிறதோ விற்றவிலை வாங்கினவிலைக்கு வித்தியாசப்பட வேண்டும். ஆதலால் அப்படி வித்தியாசப்படும் தொகை என்ன, விற்றதொகை அதிகமாயிருக்கிறதா, அல்லது வாங்கின தொகை அதிகமாயிருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்வது மற்றோர் காரியமாகும்.

சரக்குக் கணக்கில் பற்றுப்பக்கத்தில் உள்ள வாங்கின சரக்குகளைக் காட்டும் தொகைகளைக் கூடுதல் செய்யவேண்டும். பிறகு வரவு பக்கத்தில் கையிருப்புச் சரக்குத் தொகை உள்பட விற்ற சரக்குகளின் தொகைகளைக் கூடுதல் செய்ய வேண்டும். இரண்டு கூடுதல் தொகைகளுக்கும் வித்தியாசத்தைப் பார்த்து, முன் ரொக்கக் கணக்கில் சொல்லப்பட்டதுபோலவே, குறைவான தொகை உள்ள பக்கத்தில் அந்த வித்தியாசமான தொகையை எழுதவேண்டும். இந்த வித்தியாசத் தொகைதான் மொத்தலாப நஷ்டத்தைக் குறிக்கிறது. வரவு பக்கம் கூடுதல் தொகை பற்றுத்தொகையைவிட அதிகமாயிருக்குமானால் விற்றவிலை வாங்கின விலையைவிட அதிகமாயிருக்கிறதென்று அறிகிறோமாதலால், எவ்வளவுக்கு வரவுதொகை பற்று தொகையைவிட அதிகமாயிருக்கிறதோ அத்தொகைதான் மொத்தலாபமென்று சொல்லாமலே விளங்கும். பற்றுதொகை அதாவது வாங்கினவிலை வரவு தொகையைவிட அதாவது விற்றவிலையைவிட அதிகமாயிருக்குமேயானால், நஷ்டமேற்படுகிறதென்றறிகிறோம்.

ஆகவே சரக்குக் கணக்குக்குமாத்திரம் இரண்டுவிதமாக பாக்கிகளைக் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது. ஒன்று சரக்கு பாக்கியும் மற்றொன்று லாப நஷ்டத்தொகையும். இவ்

விரண்டு பாக்கிகளையும் சரக்குக் கணக்கில் குறித்தால்தான் பற்றுப்பக்கம் கூடுதலும் வரவுபக்கம் கூடுதலும் சரியாகப் போகும். லாபமேற்படும் பட்சத்தில் பற்றுத்தொகை வரவு தொகையைவிட குறைவாயிருக்குமாதலால் லாபத்தைக்காட்டும் வித்தியாசமான தொகையை பற்றுப்பக்கத்தில் எழுத வேண்டும். இந்த லாபம் அப்படியே முதலாளியைச்சேராது. ஏனெனில் இது மொத்தலாபமே தவிர வியாபார நிமித்தம் ஏற்பட்டிருக்கும் மற்றும் பலசிலவுகளைக் கழித்துவந்த மிச்ச லாபமல்ல. மிச்சலாபந்தான் முதலாளியைச் சேருமாதலால் அதைக் கண்டுபிடிப்பதற்கு மொத்தலாபத்திலிருந்து மற்ற நஷ்டத்தைக் காட்டும் சிலவுகளைக் கழிக்கவேண்டும். இப்படி மொத்தலாபத்திலிருந்து சிலவுகளைக் கழித்து மிச்சலாபத்தைக் கண்டுபிடிப்பதன் பொருட்டு வைத்திருக்கப்பட்ட கணக்குக்கு லாபநஷ்டக் கணக்கு (Profit & Loss Account) என்று பெயர். மேற்சொன்னபடி சரக்குக் கணக்கிலிருந்து வரும் மொத்தலாபத்தை லாப நஷ்டக்கணக்குக்கு மாற்ற வேண்டுமாதலால், சரக்குக் கணக்கில் பற்றுப்பக்கத்து விபரக்காலத்தில் 'லாபநஷ்டக் கணக்கால்' என்று குறிக்கவேண்டும். அதாவது, சரக்குக்கணக்கு லாபநஷ்டக் கணக்குக்குத் தன் லாபத்தைக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறதாகையால், அது லாபநஷ்டக் கணக்கிற்கு டேடாராகிறது. ஆதலால் தான்மேற் கூறியவாறு பதிவு செய்கிறோம்.

இப்படி லாப நஷ்டத்தைக்காட்டும் வித்தியாசத்தையும் எழுதினபிற்பாடு, இரண்டு பக்கங்களின் கூடுதல்களையும் கோடிழுத்துக் கீழே போடவேண்டும். அடுத்ததேதியில் அதாவது மறுபடியும் வியாபாரம் ஆரம்பிக்கும் தேதியில், ரொக்கக் கணக்கில் சொல்லப்பட்டது போலவே,

கையிருப்புச் சரக்காகிய சொத்து முதலாளியிடமிருந்து வியாபாரத்துக்கு வருவதாக பாவித்து, பற்றுப்பக்கத்தில் 'கையிருப்புபாக்கியால்' என்று குறித்து தொகையைப் போடவேண்டும். முன்னதிகாரத்திலுள்ள மாதிரியைப் பார்க்கவும்.

அடுத்த கணக்காகிய வேலு செட்டியார் கணக்கில், வியாபாரத்திலிருந்து அவர் பெற்றுக்கொண்டிருப்பது ரூ. 300-ம் அவரிடமிருந்து சரக்காக வந்திருப்பது ரூ. 300-ம் ஆதலால், பற்றுத்தொகையும் வரவு தொகையும் சரியாகிப் போய்விட்டன. ஆகையால், வியாபாரம் வேலு செட்டியாருக்குக்கொடுக்க வேண்டியது மொன்று மில்லை; அவரிடமிருந்து பெற்றுக் கொள்ளவேண்டிய தொன்றுமில்லை. ஆதலால் அந்தக்கணக்கில் இரண்டு பக்கங்களிலும் கோடுகளிழுத்து கூடுதல்களை மட்டும் போட்டு விடலாம். மறுபடியும் வியாபாரம் ஆரம்பிக்கும் பொழுது சொத்தாகவாவது கடனாகவாவது நிற்பது ஒன்றுமில்லை யாதலால் கூடுதல்களுக்குக்கீழ் ஒன்றும் எழுத வேண்டியதில்லை.

அடுத்த ராமய்யர் கணக்குக்குறிப்பில் வியாபாரம் அவரிடமிருந்து ரொக்கமாக ரூ. 250 பெற்று பிறகு ரூ. 200 பெறுமான சரக்குகள் கொடுத்திருக்கிறது. ஆகவே இன்னும் ரூ. 50 ராமய்யருக்குச் சேரவேண்டியிருக்கிறது. அதற்கு அவர் க்ரெடிடராகிறார். வியாபாரம் இதைத்திருப்பிக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறதாகையால் வியாபார முடிவில் அது ஓர் கடனாகிறது. எப்பொழுது மற்ற சொத்துகளெல்லாம் முதலாளியிடம் கொடுக்கப்படுவதாக பாவிக்கப் படுகின்றனவோ, இக்கடனையும் அவனே ராமய்யருக்குக் கொடுப்பதாக நினைத்து ராமய்யர் கணக்கில் பற்று எழுதவேண்டும். ஆத

லால் ராமய்யர் கணக்கில் குறைந்ததொகையுள்ள பற்றுப் பக்கத்தில் இரண்டு பக்கங்களின் கூடுதல்களின் வித்தியாச மான மேற்படி கடனை, மறுபடியும் வியாபாரத்தில் தோன்றக்கூடியதாகையால், 'முதல் கணக்கால்' என்று எழுதாமல் "அதிக வரவால்" என்றெழுதி, வித்தியாசமான தொகை ரூ. 50 ஐக் குறிக்கவேண்டும். மறுவருஷ ஆரம்பமான அடுத்த தேதியில் ராமய்யர் முதலாளியால் கொடுக்கப்பட்ட தொகையை வியாபாரத்தினின்று பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் திருப்பிக் கொடுத்து விடுகிறாரென்று பாவித்து அக்கணக்கின் வரவு பக்கத்தில் கூடுதல்களுக்குக்கீழ் 'பாக்கி வரவுக்கு" என்றெழுத வேண்டும்.

இந்தக்கணக்கில் வரவு பக்கம் கூடுதல் அதிகமாகி அதனாலுண்டாகும் வித்தியாசமான தொகை ரூ. 50 வியாபாரத்திற்கு ஓர் கடனாக விருப்பதை கவனிக்கவும்.

அடுத்த கணக்கில் கோபால பிள்ளை தான் பெற்றுக் கொண்ட ரூ. 150-ஐ திருப்பிக்கொடுக்காமலே யிருக்கிறார். எப்பொழுது அப்பணம் வியாபாரத்திற்கு வரவேண்டியிருக்கிறதோ அது ஓர் வரவேண்டிய சொத்தாகிறது. வியாபார முடிவில் முன்னம் சொல்லப்பட்டது போலவே முதலாளியிடம் இந்த சொத்தும் ஒப்புவிக்கப்படுவதாக பாவித்து, கோபாலபிள்ளை கணக்கில் வரவு எழுதவேண்டும். மறுவருஷ ஆரம்பத்தில் தோன்றவேண்டிய சொத்தாகையால், "அதிகப் பற்றுக்கு" என்று விபரக்காலத்தில் எழுதவேண்டுமே தவிர, "முதல் கணக்குக்கு" என்று குறிக்கக்கூடாது. இந்த அதிகப்பற்றான ரூ. 150 மறுவருஷத்து முதல் தேதியில் கோபாலபிள்ளையிடமிருந்து வரவேண்டிய சொத்தாக

பற்றுப் பக்கத்தில் "பற்று பாக்கியால்" என்று குறித்துக் காட்ட வேண்டும்.

இப்பொழுது வாடகைக் கணக்கை எடுத்துக்கொள்வோம். வியாபாரஸ்தலத்தின் பிரயோஜனத்தை வியாபாரம் அடைந்து அதற்காக ரொக்கம் கொடுத்திருக்கிறதாகையால், ரொக்கத்திற்கு பதிலாக சொத்தில் யாதொரு பகுதியும் வந்து சேரவில்லை. ஆனால் ஒரு பிரயோஜனந்தான் வியாபாரம் பெற்றிருக்கிறது. எனவே இது ஓர் நஷ்டம் என்று முன்னமே விவரித்துச் சொல்லியிருக்கிறோம். இந்தச் சிலவு மொத்த லாபத்தைக் குறைக்கக்கூடிய ஓரம்சமாகையால், மிச்ச லாபத்தைக்கண்டு பிடிக்கும் நிமித்தம், லாப நஷ்டக் கணக்குக்கு மாற்றப்படவேண்டும். எப்பொழுது இந்தச் சிலவு மொத்த லாபத்திலிருந்து கழிக்கப்பட்டு விட்டதோ, இது மறு வருஷத்தின் ஆரம்பத்தில் தோன்றாது. இதை லாப நஷ்டக் கணக்குக்கு மாற்றினால் மட்டும் போதும். மாதிரியைப் பார்க்கவும்.

இந்த லாப நஷ்டங்களைப் பற்றினவரையில், அவைகளெல்லாவற்றையும் ஓர் கணக்கில் சேர்த்து அவைகளின் முடிவான லாபத்தையோ நஷ்டத்தையோ மட்டும் மறுவருஷ ஆரம்பத்தில் முதல் கணக்கோடு சம்பந்தப் படுத்துகிறோமாகையால், ஒவ்வோர் கணக்கிற்கும் மறுவருஷ ஆரம்பத்தில் தோன்றக்கூடிய தொன்றுமில்லை.

அடுத்த கணக்கான சம்பளக் கணக்கில், வேலைக் காரர்கள், உத்தியோகஸ்தர்கள் முதலியவர்களின் உதவியைக் கொண்டு, ரொக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுவும் ஓர் சிலவு அதாவது நஷ்டந்தான். இதையும் லாப நஷ்டக் கணக்கிற்கு மாற்றவேண்டும்.

வியாபாரச் சிலவு கணக்கும் பற்றுயிருக்கிறபடியால் ஓர் நஷ்டத்தைத்தான் குறிக்கிறது. இதையும் முன் சொல்லப்பட்டிருக்கிற காரணத்தால் லாப நஷ்டக் கணக்கிற்குத்தான் மாற்ற வேண்டும்.

இவ்விதம் கணக்குக் குறிப்புகளெல்லாவற்றையும் முடித்த பிற்பாடு மிச்சலாபமோ அல்லது நஷ்டமோஇன்னதென்று கண்டு பிடிப்பதற்கு கீழ் வருமாறு லாபநஷ்டக் கணக்கை எழுத வேண்டும்:—

மணிஎன்பவரின்

பற்று 1910-வருஷம் மார்ச்சு மாதத்திய லாப நஷ்டக்கணக்கு வரவு

தேதி.	விபரம்.	மு. ந.	ரூ.	அ.	பை.	தேதி.	விபரம்.	மு. ந.	ரூ.	அ.	பை.
1910						1910					
மார். 31	வாடகைக் கணக்கால்		50	0	0	மார். 31	சாக்குக் கணக்குக்கு		220	0	0
,, 31	சம்பளக் கணக்கால்		60	0	0						
,, 31	வியாபாரச் சிலவு கணக்கால்		10	0	0						
,, 31	முதல் கணக்கால்		100	0	0						
	ஆகமொத்தம்...		220	0	0		ஆகமொத்தம்...		220	0	0

இந்தக் கணக்கு மற்ற கணக்குகளை முடித்த பிறகு மாதக் கடைசியில் எழுதப்படுகிறபடியால் இதைச் சேர்ந்த விபரங்களை மாதக் கடைசி தேதியிலேதான் எழுதவேண்டும்.

வியாபாரக் கணக்குகளை முடித்து அவைகளிடமிருந்து இக் கணக்கிற்கு வேண்டிய விபரங்கள் சேகரிக்கப்படுகின்றன வாகையால், மேலே போடப்பட்ட மற்ற கணக்குக் குறிப்புகளிலிருந்து லாப நஷ்டக்கணக்கிற்கு மாற்றப்பட்ட தொகைகளையே இதில் குறிக்க வேண்டும். இவ்விதம், முதன் முதலில் சரக்குக்கணக்கிலிருந்து மொத்த லாபமாக இந்த கணக்கிற்கு மாற்றப்படுவது ரூ. 220. இந்தத் தொகையை லாப நஷ்டக் கணக்கில் எந்தப் பக்கத்திலெழுதவேண்டுமென்று கவனிப்போம். சரக்குக் கணக்கில் எழுதியபடி, அக்கணக்கை லாப நஷ்டக்கணக்கால் ரூ. 220-க்கு பற்று செய்திருக்கிறோம். ஆகவே லாபநஷ்டக் கணக்கு சரக்குக்கணக்குக்கு வரவாகிறது. ஆதலால், மேலேயுள்ள லாபநஷ்டக்கணக்கின் வரவு பக்கத்தில் இத்தொகை குறிக்கப்பட்டிருக்கிறது.

இங்கு முக்கியமாக கவனிக்கவேண்டுவது யாதெனில் லாபத்தைக் காட்டும் எல்லா அம்சங்களும் லாபநஷ்டக் கணக்கின் வரவு பக்கத்தைச் சேரும், நஷ்டத்தைக் குறிக்கும் தொகைகளெல்லாம் பற்றுப்பக்கத்தைச் சேரும் என்பதே.

வாடகைக்கணக்கு லாபநஷ்டத்தைக் குறிக்கும் மற்றோர் கணக்காகிறது. லாபநஷ்டக் கணக்கிற்கு இக்கணக்கு வரவாகிறது. ஆதலால் லாபநஷ்டக்கணக்கு இந்த வாடகைக் கணக்கால் பற்றுகிறது. ஆகவே இதில் மாற்றப் பட்ட ரூ. 50 லாபநஷ்டக் கணக்கின் பற்றுப்பக்கத்தில் எழுதப் பட்டிருக்கிறது. வாடகைக் கணக்கு நஷ்டத்தைக் குறிக்கிற

தாதலால் இந்த நஷ்டம் லாபநஷ்டக்கணக்கின் பற்றுப்பக்கத்தில் சேருமென்று மேலே கூறியுள்ளதை அறிபவும்.

லாபநஷ்டம் சம்பந்தமான அடுத்த சம்பளக் கணக்கில், நஷ்டம் தென்படுகிறதாகையால், லாப நஷ்டக் கணக்கின் பற்றுப்பக்கத்தில் எழுதப்படவேண்டும். இதுவும் மேலே மாதிரியில் காட்டப்பட்டிருக்கிறது.

வியாபாரச் சிலவுகணக்கிலுள்ள நஷ்டத்தைக் குறிக்கும் ரூ. 10-ம் லாபநஷ்டக்கணக்கின் பற்றுப்பக்கத்திலேயே மாதிரியில் காட்டப்பட்டபடி குறிக்கப்படவேண்டும்.

இப்படி லாபங்களையும் நஷ்டங்களையும் தனித்தனியாக இரண்டு பக்கங்களிலும் குறித்தபின், மிச்சலாபமோ அல்லது நஷ்டமோ என்ன என்பதைப் பார்க்கவேண்டும். லாப நஷ்டக்கணக்கில் பற்றுப்பக்கத்து நஷ்டத் தொகைகளைக் கூடுதல் செய்து வரவு பக்கத்து லாபத்தொகைகளையும் கூடுதல் செய்து, வரவு பக்கத்துக் கூடுதல் தொகை ஜாஸ்தியாயிருந்தால், வித்தியாசத் தொகை மிச்சலாபத்தையும், பற்றுப்பக்கத்துக் கூடுதல்தொகை அதிகமாயிருந்தால் நஷ்டத்தையும் குறிக்கும். மேலே யுள்ள லாபநஷ்டக்கணக்கில், வரவு தொகை மொத்தம் ரூ. 220-ம், பற்றுத்தொகை மொத்தம் ரூ. 120-ம் இருப்பதனால், மிச்சலாபத்தைக் காட்டும் வித்தியாசமான தொகை ரூ. 100 ஆகிறது. ஆகவே ரூ. 100 வியாபாரத்திற்கு எல்லா சிலவுகளும் போக லாப மேற்பட்டிருக்கிறதென்றறிகிறோம்.

இந்த மிச்சலாபம் ரூ. 100-ம் மூலதனத்தோடு சேரவேண்டும். லாபநஷ்டக் கணக்கு இந்த மிச்ச லாபத்தை முதலாளியின் கணக்குக்கு அதாவது முதல் கணக்குக்குக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறதாகையால், முதல் கணக்கினுல்

லாபநஷ்டக் கணக்கு பற்ருகிறது. ஆகவே லாப நஷ்டக் கணக்கில் இரண்டு பக்கத்து கூடுதல்களின் வித்தியாசத்தைக் கண்டுபிடித்து, வித்தியாசமான அத்தொகையை குறைந்துள்ள கூடுதல் தொகையை யுடைய பக்கத்தில் குறித்து முதல்கணக்குக்கு மாற்றவேண்டும். இத்தொகை முதலோடு கூடி விடுகிறபடியால் தனியாக லாபநஷ்டக் கணக்கில் மறு வருஷ ஆரம்பத்தில் பற்று வரவொன்றும் தோன்ருது. மாதிரியைப் பார்க்கவும்.

மிச்சலாபம் முதல்கணக்குக்கு எப்பொழுது மாற்றப் பட்டதோ, இப்பொழுது தான் முதல் கணக்கில் மிச்ச லாபத்தைப் பதிய வேண்டும். முதல் கணக்கால் லாபநஷ்ட கணக்கைப் பற்று செய்திருக்கிருேம். ஆதலால் லாபநஷ்ட கணக்குக்கு முதல் கணக்கை வரவு செய்யவேண்டும். இந்தக் கணக்கையும் மற்றகணக்குகளைப் போலவே முடிவு செய்ய வேண்டும். வியாபார முடிவில் முதல் கணக்கில் வரவாயிருக்கிறதொகை லாபத்தோடு கூட முதலாளிக்குக் கொடுக்கப்படுவதாக எண்ணி, முதலாளியின் கணக்கைக் குறிக்கும் முதல் கணக்கு பற்று செய்யப்படவேண்டும். இதே தொகை மறு வருஷ ஆரம்பத்தில் வியாபாரத்துக்கு வந்துசேருவது போல பாவிக்கப்படுகிறதாகையால், வியாபாரம் முடியும் தேதியில் முதல் கணக்கின் பற்றுப்பக்கத்து விபரக் காலத்தில் 'மொத்தவரவால்' என்றெழுதி கணக்கைமுடித்து, மறுவருஷ ஆரம்பித்தில் "மொத்த வரவுக்கு" என்று வரவு பக்கத்தில் எழுதவேண்டும். இக்கணக்கின் முடிவுத் தொகை வேருேர் கணக்கிற்கும் மாற்றப்படாமல் மறுபடியும் வியாபாரத்தில் தோன்றுகிறபடியால் மேற்கூறியவாறு எழுதவேண்டும்.

இந்த முதல்கணக்கில் வரவு அம்சங்கள் மட்டும் இருக்கின்றன வாகையாலும் அத்தொகைகளின் மொத்தமே கணக்கை முடிக்கும் தொகையாதலாலும் "மொத்த வரவால்" என்று பற்று விபரத்தில் எழுத நேரிட்டது. பற்றுப்பக்கத்திலும் சில விபரங்கள் காணப்பட்டால், இரண்டு பக்கக் கூடுதல்களுக்கும் வித்தியாசத்தைப்பார்த்து "அதிக வரவால்" என்று கணக்கை முடித்து, அடுத்ததேதியில் கூடுதல்களுக்குக் கீழ் "வரவு பாக்கிக்கு" என்று எழுத வேண்டும்.

நிற்க, கணக்குக் குறிப்புகளெல்லாம் முடிந்துவிட்டன. வியாபார ஆரம்பத்திலுள்ள முதலான ரூ. 500, வியாபாரத்திலுண்டான லாபம் ரூ 100 ம் சேர்ந்து, மறு வருஷத்துக்கு ரூ 600 முதலாக நிற்கிறது என்பது முதல் கணக்கில் காண்பிக்கப்பட்டுவிட்டது.

இது வரையில் நாம் லாபநஷ்டக் கணக்கு மூல்யமாய் மிச்சலாபத்தைக் கண்டுபிடித்து அந்த மிச்சலாபத்தை வியாபார ஆரம்பத்திலிருந்த முதலோடு சேர்த்து மறுவருஷத்துக்கிருக்கவேண்டிய முதலைக்கண்டு பிடித்தோம். ஆங்கிலேயர் இருபதிவு முறையில் கணக்குகளை நாம் எழுதுவது, மற்றேர் வழியாக மேற்படி முதலை அதாவது மறுவருஷத்தில் காணவேண்டிய முதலைக் கண்டுபிடிக்க ஓர் பெரிய சௌகரியத்தை உண்டுபண்ணுகிறது.

வியாபாரம் ஆரம்பித்த இரண்டாவது வருஷத்திலிருந்து முதல் ரொக்கமாகத் தங்கியிராதென்றும் சொத்தென்று சொல்லப்படுகின்ற பல அம்சங்களாக மாறிநிற்குமென்றும், அது போலவே வியாபாரத்தில் சிலகடன்களும் கொடுக்கவேண்டி நேரிடுமென்றும், ஆகவே இரண்டாவது

வருஷத்தின் மூலதனம் அச்சமயத்திலுள்ள கடன்களை சொத்துகளினின்றும் கழித்து வித்தியாசமான தொகையைப்பார்த்தலால் தெரியவருமென்றும் முன்னமேயேசொல்லியிருக்கிறோ மல்லவா? இந்தவழியை மேலேயுள்ள மாதிரிக் கணக்கில் உபயோகப்படுத்துவோம்.

கடன்களுக்கும் சொத்துகளுக்கும் வித்தியாசம் கண்டுபிடிக்கவேண்டுமென்றால் அவ்விருபகுதிகளையும் தனித்தனியே எழுதவேண்டும். அதாவது கடன்களை ஓர் பக்கமும் சொத்துக்களை ஓர் பக்கமும் குறிக்கவேண்டும். இதற்காக ஏற்பட்டிருக்கும் ஓர் குறிப்புக்கு "பற்றுவரவு பாக்கிகள் குறிப்பு" அல்லது "பாக்கிஜாப்தா" அல்லது "பாலன்ஸ் ஷீட்" (Balance Sheet) என்று பெயர். நம்முடைய சௌகரியத்தின் பொருட்டு சொத்து கடன்களை வரிசையாக எழுதி முதலைக் கண்டுபிடிக்கும் பொருட்டு வைத்துக் கொள்ளப்படுகிற ஓர் குறிப்பே (Statement) தவிர இது பற்றுவரவுகளைக் காட்டும் ஓர் கணக்கு அல்ல. இந்த ஜாப்தாவை கீழ்க்கண்ட விதம் ஓர் தனிப்புத்தகத்திலாவது அல்லது காகிதத்திலாவது எழுதிவைத்துக்கொள்ளவேண்டும்.

மணி என்பவரின்

1910 வருஷம் மார்ச்சுமீ 31உயிலுள்ள பாக்கி ஜாப்தா.

கடன்கள்.	ரூ.	அ.	பை.	சொத்துகள்.	ரூ.	அ.	பை.
ராமய்யர்.	50	0	0	ரொக்கக்கையிருப்பு	380	0	0
வருஷத்திய முடிவிலுள்ள முதல் தொகை	600	0	0	சரக்குக்கையிருப்பு	120	0	0
				கோபாலபிள்ளை	150	0	0
ஆகமொத்தம்...	650	0	0	ஆகமொத்தம்...	650	0	0

மேலே காட்டியபடி கடன்களை இடதுபக்கத்திலும் சொத்துகளை வலதுபக்கத்திலும் எழுதுவது வழக்கமாயிருக்கிறது.

இப்பொழுது மாதிரிக்கணக்கிலுள்ள ரொக்கக்கணக்கை எடுத்துக் கொள்வோம். இதில் அதிகப் பற்றுரொக்கம் ரூபா 380 கையிருப்பைக் காண்பிக்கிறதாகையால் இது ஓர் சொத்தாகிறது. எனவே பாக்கி ஜாப்தாவில் வலது பக்கத்தில் இந்த ரொக்கக் கையிருப்பைக் குறிக்கவேண்டும்.

சரக்குக் கணக்கிலுள்ள பாக்கி கையிருப்புச் சரக்குகளின் மதிப்பைக் குறிக்கிறதாகையால் இதுவுமோர் சொத்தாகும். ஆதலால் பாக்கி ஜாப்தாவின் வலது பக்கத்திலெழுதவேண்டும்.

வேலுசெட்டியார் கணக்கு சரியாகிப் போய்விட்டபடியால், அதை கவனிக்கவேண்டியதில்லை. ராமய்யர் கணக்கிலுள்ள பாக்கி அதிக வரவைக்காட்டுகிறது. அதாவது வியாபாரம் ராமய்யருக்குக் கொடுக்க வேண்டியிருக்கிறது. இது ஓர் கடனாதலால், பாக்கி ஜாப்தாவில் இடதுபக்கத்தில் குறிக்கவேண்டும்.

கோபாலபிள்ளை கணக்கிலுள்ள பாக்கி அதிகப்பற்றாதலால், அவரிடமிருந்து வியாபாரத்துக்கு வரவேண்டிய தொகை சொத்தைக் காண்பிக்கிறது. இது பாலன்ஸ் ஷீட் வலதுபக்கத்தில் சேரவேண்டும்.

மற்ற மூன்று கணக்குகளும் லாப நஷ்டங்களைக் குறிக்கின்றனவாகையால் இந்த பாக்கி ஜாப்தாவில் அவைகளைச் சேர்க்கக்கூடாது.

மேற்படி பாக்கி ஜாப்தாவில் வலதுபக்கத்தில் ரூ 650 பெறுமான சொத்துகளும், இடது பக்கத்தில் ரூ 50 பெறுமான கடன்களும் குறிக்கப்பட்டன. முதல் கணக்கிலுள்ள

தொகை ரூ 600-ம் வியாபாரத்துக்கு ஓர் கடனைப்போல் பாவிக்கப்பட வேண்டுமாகையால், அதையும் பாக்கி ஜாப்தா வின் இடது பக்கத்தில் போடுவோமானால், இடது பக்கத் துக் கூடுதலும் ரூ 650 ஆகிவிடும். ஆகவே சொத்துகளின் மொத்தமும் கடன்களின் மொத்தமும் சரியாகிவிட்டன. அதாவது முதல் தொகையை இடது பக்கத்தில் எழுதாம லிருக்கும்பொழுது சொத்துகளின் தொகைக்கும் கடன் களின் தொகைக்கு மிருந்த வித்தியாசத் தொகை ரூ 600 முதல் கணக்கில் காணப்பட்ட மறுவருஷத்தின் முதல் தொகைக்குச் சமமாயிருப்பதை கவனிக்கவும். எப்பொழுது முதல் கணக்கிலிருந்து கிடைக்கப்பட்ட தொகையைபாலன்ஸ் ஷீட் இடது பக்கத்தில் குறித்து, சொத்துகளும் கடன் களும் சரியாகிவிட்டனவோ, கணக்குகள் சரிவர பதியப்பட் டிருக்கின்றன வென்றறிகிறோம்.

மேலேயுள்ள கணக்குகளை நன்றாய் ஆராய்ச்சிசெய்து பார்க்கும்பொழுது, இரண்டு பிரிவுகள் தோன்றப்படுகின்றன. சொத்து கடன்களைக் குறிக்கும் கணக்குகளும் லாபநஷ்டங் களைக் குறிக்கும் கணக்குகளும் தென்படுகின்றன. பாக்கி ஜாப்தாவிலிருந்து சொத்துகளைக் காண்பிக்கும் கணக்குகள், ரொக்கக் கணக்கு, சரக்குக் கணக்கு, கோபாலபிள்ளை கணக்கு ஆகிய மூன்றும். இம்மூன்று கணக்குகளிலும் அதி கப்பற்று இருப்பதைப் பார்க்கிறோம். கடனைக் குறிக்கும் ராமய்யர் கணக்கில் அதிகவரவு இருப்பதைப் பார்க்கிறோம். ரொக்கக் கணக்கும் சரக்குக் கணக்கும், ரியல் அகவுண்டு களைச் சேர்ந்தவை. கோபாலபிள்ளை கணக்கும் ராமய்யர் கணக்கும் பெர்ஸனல் அகவுண்டுகளைச் சேர்ந்தவை. இவை களிடமிருந்து நாம் அறிவது யாதெனில், பெர்ஸனல் கணக்கு

களிலும் ரியல் கணக்குகளிலும் அதிகப்பற்று இருந்தால், அவைகள் சொத்துகளைக் குறிக்குமென்றும், அதிகவரவு இருந்தால் கடன்களைக் குறிக்குமென்பதே.

வாடகைக்கணக்கு, சம்பளக் கணக்கு, வியாபாரச் சிலவு கணக்கு இம்மூன்றும் நாமினல் அகவுண்டுகளைச் சேர்ந்தவை. இக்கணக்குகளில் பற்று மட்டும் இருப்பதால், அதிகப்பற்றென்றே சொல்லலாம். இக்கணக்குகள் நஷ்டத்தைக் குறிக்கின்றன. சரக்குக்கணக்கில் லாபத்தைக் காட்டும் பாகத்தை மட்டும் எடுத்துக்கொள்ளலாம். இக்கணக்கில்அதிகவரவு ஏற்பட்டதால்,அதை லாபமாகக்கொண்டோம். ஆதலால் நாம் அறிவது யாதெனில், நாமினல் அகவுண்டுகளில் அதிகப்பற்றிருந்தால் அவைகள் நஷ்டங்களைக் குறிக்கின்றனவென்பதும் அதிக வரவு இருந்தால் லாபங்களைக் குறிக்கின்றனவென்பதுமே. இக்காரணத்தால் சரக்குக் கணக்கை நாம் இரண்டு விதமாக பாவிக்கிறோம். பாக்கிக் கையிருப்பைக் காண்பிக்கும் வரையில் ஓர் சொத்துக்கணக்கென்றும்லாபத்தைக்காட்டும் வரையில் ஓர் நாமினல் அகவுண்டென்றும் எண்ணி இரண்டுவிதமாக பாக்கிகளைக் காண்பிக்கிறோம். ஆனால் பற்று வரவு கூடுதல்களின் வித்தியாசத்தைக் கண்டு பிடித்தலால் உண்டாகும் பாக்கி லாபத்தைக் குறித்ததால், அதுவே கணக்கின் உண்மையான பாக்கியாகும். கையிருப்புச்சரக்குகளை கணக்குக் குறிப்பிலிருந்து பார்க்கவேண்டியதில்லை.

ஓர் நாமினல் கணக்கு லாபத்தைக் குறித்தால் அதைப் பற்றின விவரம் அக்கணக்கின் வரவு பக்கத்தில் எழுதப்பட்டிருக்கும். நஷ்டத்தைக் குறித்தால் பற்றுப் பக்கத்தில் எழுதப்பட்டிருக்கும்.

மேலே மாதிரியிலுள்ள முதல் கணக்கில் லாபம் வரவு பக்கத்தில் சேர்ந்திருக்கிறது. நஷ்டம் உண்டானல் இடது பக்கத்தில் சேரும். ஆகவே இந்த முதல் கணக்கும் நாமினல் அகவுண்டைப் போலவே லாப நஷ்டத்தைக் கொள்கிற வரையில் தென்படுகிறது. ஆதலால் அன்னியனுக பாவிக்கப்படும் முதலாளியின் கணக்காதலால் பெர்ஸனல் அகவுண்டைச் சேர்ந்த முதல் கணக்கு நாமினல் அகவுண்டென்றும் சொல்லப்படுகிறது.

ஆங்கிலேயர் இருபதிவுநூலில் ஒவ்வொரு விபாத்துக்கும் இரண்டு பதிவுகள் வேண்டுமல்லவா? பெர்ஸனல் அகவுண்டுகள், ரியல் அகவுண்டுகள் இக்கணக்குகளில் வியாபார முடிவிலுள்ள பாக்கிகளை முதலாளியிடம் ஒப்புவித்து விடுவதாக ஓர் பதிவு செய்கிறோம். மற்றோர் பதிவை வேறெந்தக் கணக்குகளிலாவது செய்கிறோமா? இல்லை. இதற்காகத்தான் மறுபடியும் வியாபாரம் தொடங்கும்பொழுது மேற்படி பாக்கிகள் முதலாளியிடமிருந்து வந்து சேருகின்றன வென்று பாவித்து மற்றோர் பதிவை பற்று வரவு கூடுதல்களுக்குக் கீழ் எழுதுகிறோம். சொத்து கடன்கள் பாக்கி ஜாப்தாவில் குறிக்கப்பட்டாலுங்கூட அந்த ஜாப்தா வருக்குப் புத்தகத்திலுள்ள கணக்குக்குறிப்பாகாது. ஆதலால் இந்த ஜாப்தாவில் குறிப்பது கணக்கில் பதியப் படுவதாகாது. நாமினல் அகவுண்டுகளில் அப்படி யல்ல. லாப நஷ்டக்கணக்குக்கு பாக்கிகளை மாற்றி ஓர் பதிவு எழுதின பிறகு லாப நஷ்டக் கணக்கில் பாக்கிகளை மாற்றினதற்காக மற்றோர் பதிவையும் செய்து விடுகிறோம்.

லாபத்தால் முதல் அதிகப்படுகிறதும் நஷ்டத்தால் குறைகிறது மாயிருந்தால், எவ்வளவு முதலிருக்கிறதோ அவ்

வளவுக்கு நஷ்டம் எற்படும் பொழுது முதல் கொஞ்சங்கூட இருக்காது. நஷ்டம் அதிகரித்து விடுமாயின், வியாபாரம் "இன்ஸால்வெண்ட்" ஆகவிருக்கிறதென்று சொல்லுகிறோம். அப்பொழுது பாக்கி ஜாப்தாவில் குறிக்கப்பட்டுள்ள கடன்கள் சொத்துகளைவிட அதிகமாயிருக்கும். இந்த ஜாப்தாவின் கூடுதல்களைச் சமமாக்குவதற்கு குறைந்த தொகையுள்ள சொத்துப்பக்கத்தில் "சொத்துக்குறைவு" என்றெழுதி வித்தியாசமான தொகையைப் போடவேண்டும். இதேதொகை முதல் கணக்கிலும் அதிகப்பற்றாக அதாவது அதிக நஷ்டமாகக்காணப்படவேண்டும். இந்த அதிக நஷ்டத்தை முதலாளி ஈடு செய்தால்தான் மேலும் வியாபாரம் நடைபெறுமென்பதை முதல் கணக்கு குறிக்கின்றது.

6-வது அதிகாரம்.

சரக்குக்கணக்கும் அதன் உட்பிரிவுகளும்—அதைப்பற்றின சில சிலவுகள்—சரக்கு வாபீஸ் கணக்குகள்-லாப நஷ்டங்களைக் காட்டும் மற்றும் சில நாமினல் அகவுண்டுகள்.

சரக்குக்கணக்கின் பற்றுப்பக்கத்தில் வியாபார ஆரம்பத்திலுள்ள பாக்கி சரக்குகளின் தொகையும் வியாபாரத்தில் வாங்கப்படுகின்ற சரக்குகளின் தொகையும் குறிக்கப்படுகின்றன வென்றும், வரவு பக்கத்தில் விற்கப்பட்ட சரக்குகளின் தொகையும் வியாபார முடிவில் கையிருப்புச் சரக்குகளின் மதிப்புத்தொகையும் குறிக்கப்படுகின்றனவென்றும் இதுகாறும் சொல்லப்பட்டது. ஆனால் இன்னும் சில விப

ரங்கள் சரக்குக்கணக்கில் சேருகின்றன. அவைகள் யாதென்று பார்ப்போம்.

வியாபாரம் என்பது சரக்குகளை ஒருவரிட மிருந்து குறைந்த விலைக்கு வாங்கி மற்றொருவருக்கு அச்சரக்குகளை லாபத்தின் பொருட்டு விலையேற்றி விற்பதல்லவா? ஆகவே வாங்கின விலை இன்னதென்றும் விற்கும் விலை இன்னதென்றும் கண்டுகொள்வது அவசியம். சரக்குகளின் வாங்கின விலையென்பது அச்சரக்குகளைச் சேகரித்து விற்பதற்குத்தயாராகவைக்கும் வரையில் எவ்வளவு செல விடப்படுகிறதோ அத்தொகையேயாகும். விற்பனைக்குத் தயாராக வைக்கப்பட்ட சரக்குகளின் அடக்கத்தொகை எதுவோ அதன்மேல் கொஞ்சம் லாபத்தைச் சேர்த்து விற்கும் விலையைத் தீர்மானிக்க வேண்டும். உதாரணமாக, ஒருவன் மற்றொரு வியாபாரியினிடமிருந்து 100 ரூ பெறுமான சரக்குகள் ரொக்கத்திற்கு வாங்கினனென்றும் அச்சரக்குகளைத் தன் கடைக்குக் கொண்டு வர ரூ5 வண்டிக்கூலி கொடுத்தானென்றும் அச்சரக்குகளை வெளியூருக்கு அனுப்பும் பொருட்டு ரூ 10 பெறுமானமுள்ளகோணிகள் மரப்பெட்டிகள் முதலியவை வாங்கினனென்றும், அதன்பிறகு அச்சரக்குகளின் விற்கும்விலையை ரூ 140 ஆக ஏற்படுத்தி, வெளியூருக்கு அனுப்பினனென்றும் யாருக்கு சரக்குகளை விற்றானே—கோவிந்தனென்று வைத்துக் கொள்வோம்—அவன் நிமித்தம் சரக்குகளுக்காக ரயில் சார்ஜ் ரூ 15 முன்னதாகவே கட்டினனென்றும் வைத்துக் கொள்வோம். இவ்விபரங்களை ஒவ்வொன்ருக எடுத்துக் கொண்டு பற்று வரவுகளைக்கண்டு பிடிப்போம்.

முதன் முதலில் ரூ 100 சரக்குகள் ரொக்கத்திற்கு வாங்கப்படுகின்றன. ஆதலால் சரக்குக்கணக்கு ரொக்கக்

கணக்குக்கு டெட்டாகிறது. அதன் பிறகு வண்டிக்கூலியின் பொருட்டு ரூ 5 வியாபாரி செலவழிக்கிறான். இதில் சரக்குகளைத்தன் கடைக்குக்கொண்டு வரும் ஓர் பிரயோஜனத்தை வியாபாரி அடைவதால், அப்பிரயோஜனத்தின் பெறுமானம் ரூ 5 வெளியில் கொடுக்கப்படுகிறது. ஆகவே வண்டிகளால் சாமான்கள் கொண்டுவரப்படுகின்ற பிரயோஜனத்தைக் குறிக்கும் வண்டிக்கூலிக்கணக்கு அல்லது வண்டி வாடகைக் கணக்கு ரொக்கக்கணக்குக்கு டெட்டாகிறது. வெளியில் போகிற ரொக்கத்திற்கு பதிலாக ஓர் பிரயோஜனமே வந்து சேருதலால் இக்கணக்கு நாமினல் அகவுண்டென்ற வகுப்பைச்சேர்ந்தது.

அப்பால் சாமான்களை ஜாக்கிரதையாகக்கட்டி அடைத்து வெளியூருக்கு அனுப்புவதற்காக கோணிகள் பெட்டிகள் முதலான பாகிங்சாமான்கள் வாங்கப்படுகின்றன. ஆதலால் பாகிங் சாமான்கள் கணக்கு ரொக்கக்கணக்குக்கு டெட்டாகிறது.

பிறகு விற்பனையைப்பற்றி கவனிப்போம். வாங்கப்பட்ட சரக்குகள் ரூ 140-க்கு கோவிந்தனுக்கு விற்கப்படுகின்றன. ஆதலால் கோவிந்தன் சரக்குக் கணக்குக்கு டெட்டாகிறான். அவன் பொருட்டே ரயில் சார்ஜும் கொடுக்கப் படுகிறதாகையால், இந்தப் பணத்தையும் கோவிந்தன் சேர்த்தனுப்ப வேண்டியவனாகின்றான். ஆதலால் கோவிந்தன் கணக்கு டெட்டாகிறது. பணம் கொடுக்கப்படுகிறதாகையால், ரொக்கக் கணக்கு ரயில்சார்ஜ் தொகைக்கு வரவாகிறது.

ஆகவே சரக்குகளை வாங்கி விற்பனைக்குத் தயார் செய்வதற்குமுன் கீழ்கண்ட செலவுகள் செய்யப்பட்டுள்ளன:—

சரக்குகளின் வாங்கின விலை	ரூ	100—0—0
வண்டிச் சத்தம்	ரூ	5—0—0
பாகிங் சாமான்கள் சிலவு	ரூ	10—0—0

இந்த விபரங்களெல்லாம் ரொக்கத்திற்கே நடைபெற்றிருக்கின்றனவாகையால், மொத்த ரொக்கம் வெளியில் போயிருப்பது ரூ 115. இவைகளெல்லாம், ஒரே தேதியில் நடந்திருக்குமானல், முதற்குறிப்புப் புத்தகத்தில் கீழ்வருமாறு பதிவு செய்யவேண்டும்:—

கீழ்கண்ட கணக்குகள்:—

சரக்குக் கணக்கு பற்று		ரூ. 100—0—0		
வண்டி வாடகைக் கணக்கு	,,	ரூ 5—0—0		
பாகிங் சாமான் கணக்கு	,,	ரூ 10—0—0		
			ரொக்கக் கணக்கால்	ரூ 115—0—0

மேற்படி சரக்குகள் விற்கப்படும்பொழுது கோவிந்தன் விற்ற விலையான ரூ 140-க்கும் அவன் நிமித்தம் சிலவழிக்கப்படுகின்ற ரூ 15 க்கும் கடனாகிறன். இவ்விபரங்கள் ஒரே தேதியில் நடந்திருந்தால் கீழ் வரும் குறிப்பு முதற் குறிப்புப் புத்தகத்தில் செய்யப்படவேண்டும் :—

கோவிந்தன் பற்று	ரூ 155—0—0		
கீழ்கண்ட கணக்குகளால் :—			
		சரக்குக் கணக்கு	ரூ 140—0—0
		ரொக்கக் கணக்கு (ரயில் சார்ஜ்)	ரூ 15—0—0

இந்த ஜர்னல் குறிப்பில் சரக்குக் கணக்கு வரவென்பது சரக்குகள் விற்கப்பட்டனவென்று நன்றாய் விளங்குகிறது. இரண்டாவது பகுதியான "ரொக்கக் கணக்கால் கோவிந்தன் பற்றென்பது" ரொக்கம் கோவிந்தனுக்குக் கொடுக்கப்படவில்லை யாதலால் 'ரயில் சார்ஜ்' என்று ஓர் விபரத்தை பக்கத்தி லெழுதாவிட்டால் நன்றாக விளங்காது. எனவே, முதற் குறிப்புப் புத்தகத்தில் எக்குறிப்பு பார்த்த மாத்திரத்தில் விபரங்களைத் தெரிவிக்கவில்லையோ அக்குறிப்பின்கீழ், மேற்காட்டியபடி விபரமும் குறிக்கப்படவேண்டும். இப்படி குறிக்கப்படுகிற விபரத்துக்கு நாரேஷன் (Narration) என்று ஆங்கிலத்தில் சொல்லப்படுகிறது.

வண்டிச்சத்தக்கணக்கு:— சாமான்களை வாங்கும் பொழுது மேற்கூறிய விதமாக நாம் வண்டிச் சத்தம் கொடுத்து நம்முடைய கடைக்குக் கொண்டுவந்தால், வண்டிச் சத்தக் கணக்கை பற்று செய்து ரொக்கக் கணக்கில் வரவு செய்கிறோம். ஆனால், நமக்காக வண்டிச்சத்தத்தை முன்னதாகவே விற்பவன்கொடுத்துவிட்டால் இப்பணத்தை நாம்அவனுக்குக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோமாகையால், அவன் கணக்கை வரவெழுத வேண்டும். ஆதலால், வண்டிச்சத்தக் கணக்கு விற்பவன் கணக்கால் பற்று என்று குறிக்க வேண்டும்.

அல்லது வண்டிச்சத்தத்தை விற்பவனே கொடுத்துக் கொள்ளவேண்டும், அவன் சிலவிலேயே சரக்குகள் நம்முடைய கடைக்குக் கொண்டுவரப்பட வேண்டும், என்ற நிபந்தனை ஏற்படுத்திக் கொண்டால், அவனுடைய சரக்குகளின் அசல் விற்கும் விலையோடு நம்முடைய கடைவரை

யில் அவனால் கொடுக்கப்படுகின்ற வண்டிச்சத்தத்தையும் கூட்டி, சரக்குகளுக்கு மொத்தவிற்கும் விலையாகக் கூறுவான். இந்த விலையிலேயே வண்டிச்சத்தம் அடங்கிப்போய் விட்டதாகையாலும், நம்முடைய கடைக்குச் சரக்குகள் வந்து விட்டபடியால் வேறு வண்டிச்சத்தம் கொடுக்கவேண்டிய அவசியமில்லை யாதலாலும், மொத்தத்தொகையை சரக்குக்கணக்கில் பற்றெழுதி ரொக்கம் கொடுத்துவிட்டால் ரொக்கக் கணக்கையும், அல்லது கடனுக்கு வாங்கப்பட்டிருந்தால் நமக்கு விற்பவன் கணக்கையும் வரவெழுத வேண்டும்.

நாம் சரக்குகளை விற்கும்பொழுது, வண்டிச்சத்தம், ரயில் சார்ஜ் முதலியவைகளை நாமே கொடுத்துக்கொள்ள வேண்டுமென்ற நிபந்தனை இருந்தால் நம்முடைய அசல் விற்கும் விலையில் சிலவுகளைச் சேர்த்துவந்ததொகையை விற்கும்விலை யென்று ஏற்படுத்துவோம். மேலேயுள்ள குறிப்பில் கோவிந்தனுக்கு சரக்குகள் விற்கப்படுகின்றன. ரயில் சார்ஜ் சிலவு ரூ. 15ஆகிறது. மேற்கூறிய நிபந்தனைப்படி நாமே ரயில் சார்ஜ் கொடுக்கவேண்டுமல்லவா ? அப்பொழுது விற்கும் விலை ரூ. 155 ஆகும். ஆதலால், கோவிந்தன் கணக்கு ரூ. 155-க்குப் பற்றாகியும் நம்முடைய சரக்குகள் கணக்கு அதே தொகைக்கு வரவாகியுமிருக்கும். ரயில் சார்ஜின் பொருட்டு ரொக்கம் சிலவழிக்கப்படுவதால், ரொக்கக்கணக்கு வரவு செய்யப்பட்டு வண்டி வாடகைக்கணக்கு பற்றுசெய்யப் படவேண்டும். ஆகவே மேலேயுள்ள விபரம் கீழ் வருமாறு முதற்குறிப்பில் குறிக்கப்படுகிறது:—

கோவிந்தன்—பற்று	ரூ. 155—0—0	
சரக்குக் கணக்கால்		ரூ. 155—0—0

வண்டிவாடகைக் கணக்கு—பற்று ரூ. 15—0—0

ரொக்கக் கணக்கால் ரூ. 15—0—0

சரக்குகளை விற்பதற்காக நாமே ரயில் சார்ஜையும் கொடுத்துக் கொண்டால் சரக்குகளை விற்குமுன் செலவழியும் மொத்தத் தொகை இன்னும் அதிகமாகிறது. வாங்கப்பட்ட சாமான்களின் தொகை இன்னும் அதிகப்படுகிறபடியால் அதைக்குறிக்கும் பொருட்டு, மேற்கூறிய ரயில் சார்ஜையும் சரக்குக் கணக்குப் பற்றுப்பக்கத்தில் எழுதவேண்டும். ஆனுல் வண்டிவாடகை, ரயில் சார்ஜ் முதலிய செலவுகள் மொத்தம் என்னவாகின்றன என்று தெரிந்துகொள்ளும் பொருட்டு, தனியாக வண்டி வாடகைக் கணக்கென்று ஏற்படுத்தி அக்கணக்கை மேற்கூறிய விபரங்களால் பற்று செய்துகடைசியாக வண்டி வாடகைக்கணக்கின் மொத்தத்தை சரக்குக்கணக்கின் பற்றுப்பக்கத்துக்குமாற்றி விடுகிறேம். இதுபோலவே எந்தச் செலவுகள் சரக்குகளுக்காக செய்யப்பட்டு வாங்கும் விலை அதிகரிக்கிறதோ அந்தச் செலவுகளுக்காக தனித்தனியாக கணக்குகளெழுதி அவைகளைப் பற்றுசெய்து கடைசியாக சரக்குக் கணக்கின் பற்றுப் பக்கத்தில் மாற்ற வேண்டும்.

நாம் விற்கும் சரக்குகளுக்கு வாங்கிக்கொள்பவனே செலவு செய்வதாக வைத்துக்கொண்டால், அவன் செய்யும் செலவுகளுக்கும் நம்முடைய கணக்குகளுக்கும் யாதொரு சம்பந்தமுமிருக்காது.

கோவிந்தன் பொருட்டு நாம் ரயில் சார்ஜ் கட்டினுல் அதை எப்படி குறிப்பிலெழுதுவதென்பது முன்னமே காட்டப்பட்டிருக்கிறது.

சரக்குகளை அனுப்புவதற்கு முன் எல்லா செலவுகளையும் சேர்த்து விற்கும் விலை என்னவாகுமென்று கூறிவிட்டால், வாங்குகிறவன் அச்சரக்குகளை வாங்கிப் பிறகு விற்றால் அவைகளின் மேல் லாபம் கிடைக்குமாவென்று பார்த்து, லாபம் கிடைக்குமென்றால் சரக்குகளை அனுப்பும்படி உத்திரவு அனுப்புவான். இப்படி முன்னமேயே விலையைத் தெரிந்து கொள்வது வாங்குகிறவனுக்கோர் பெரிய அனுகூலமாயிருப்பதால் தான், வண்டிச்சத்தம் ரயில் சார்ஜ் முதலிய செலவுகள்சேர்ந்து விற்றவிலை என்னவாகுமென்று கேட்டுக் கொள்ளுகிறான். இப்படி விலையைச்சொன்ன பிற்பாடு, விற்பவனுக்குக் கொஞ்சம் செலவுகள் அதிகமாய்ப் போவதானால் வாங்கிக்கொள்பவன் அதிகப்பட்ட சிலவுகளை ஏற்றுக்கொள்ள மாட்டான். ஆகவே அது விற்பவனுக்கு லாப நஷ்டக்கணக்குக்கு மாற்றவேண்டிய ஓர் நஷ்டமாகும். அதுபோலவே செலவுகள் குறைந்தாலும் குறைந்த அளவுக்கு லாபமாகும்.

நிற்க, இவ்வதிகாரத்தின் முதலில் கொடுக்கப்பட்ட விபரத்தில் கோவிந்தன் பொருட்டு ரயில் சார்ஜ் சிலவழிக்கப்பட்டதாக வைத்துக்கொண்டு அவ்விபரத்தில் வண்டிவாடகைக் கணக்கு சம்பந்தப்பட்ட பதிவுகளைச் செய்வோம்.

பற்று — வண்டி வாடகைக் கணக்கு — வரவு

தேதி		பு. ந.	ரூ.	அ.	பை.	தேதி.		மு. ந.	ரூ.	அ.	பை.
	ரொக்கக் கணக்கால் ...		5	0	0		சரக்குக்கணக்குக்கு ...		5	0	0
	ஆகமொத்தம்...		5	0	0		ஆகமொத்தம்...		5	0	0

மேற்படி வியாபாரத்தில் வாங்கப்பட்ட சாமான்களைப் பற்றின குறிப்புகள் முன்னமே எழுதப்பட்டன. அவைகளில் வண்டிவாடகைக்கணக்கு ரூ 5-க்கு ரொக்கக்கணக் கால் பற்று செய்யப்பட்டிருக்கிறது. விற்பனையைப் பற்றின குறிப்புகளில் வண்டிவாடகைக்கணக்கு சம்பந்தப்படவில்லை. ஏனெனில் கோவிந்தன் பொருட்டு செலவான ரூ 15-க்கு அவன் டெடாகிவிட்டான். வெளியில் சென்ற ரொக்கத் திற்கு அக்கணக்கு க்ரெடிடாகி விட்டது. ஆகவே ரயில் சார்ஜ் விஷயம் சரக்குக்கணக்கின் பற்றுபக்கத்திலும் வரவு பக்கத்திலும் எழுதப் படமாட்டாது. ஆதலால் மேலே கணக்குக்குறிப்பில் காட்டியபடி ரூ 5-க்கு மட்டும் ஒரே பதிவு செய்யப்பட வேண்டும்.

ரயில் சார்ஜ் செலவையும் சேர்த்து மொத்தத் தொகை யையே விற்றவிலையாக கோவிந்தனுக்குச் சொல்லியிருக்கி றோம் என்று வைத்துக்கொள்வோம். இதில் வாங்கப் பட்டசாக்குகளைப் பற்றி முன்போலவே ரூ 5-க்கு வண்டி வாடகைக்கணக்கைப் பற்றுசெய்ய வேண்டும். விற்பனையைப் பற்றின குறிப்புகளும் முன்னே குறிக்கப்பட்டுள்ளன. அக் குறிப்புகளின்படி, சரக்குக் கணக்கு மொத்தத்தொகைக்கு வரவாகியிருக்கிறது. வரவுபக்கத்தில் அதிகமாகச் சேர்க்கப் பட்ட ரூ 15 க்கு ஓர் பற்றிருக்க வேண்டுமாதலால் வண்டி வாடகைக் கணக்கு பற்று செய்யப் பட்டு அந்தத் தொகை கடைசியில் சரக்குக்கணக்குக்கு, முன் சொல் லியிருக்கிறது போல், மாற்றப்படவேண்டும். ஆகை யால் வண்டிக்கூலியான ரூ 5 ஐப் பற்றினதும் ரயில் சார் ஜாகிய ரூ 15 ஐப் பற்றினதும் ஆகிய இரு விபரங்களும் வண்டி வாடகைக் கணக்கில் குறிக்கப்படும். எனவே வண்டி வாடகைக் கணக்கு இம்மாதிரி பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்:—

பற்று — வண்டி வாடகைக் கணக்கு. — வரவு

தேதி.		மு. ந.	ரூ.	அ.	பை.	தேதி.		மு. ந.	ரூ.	அ.	பை.
	ரொக்கக் கணக்கால்		5	0	0		சரக்குக் கணக்குக்கு		20	0	0
	ரொக்கக் கணக்கால்		15	0	0						
	ஆகமொத்தம்...		20	0	0		ஆகமொத்தம்...		20	0	0

மேற்கூறப்பட்ட செலவுகளெல்லாம் சாக்குகளின் வாங்கின விலையையே அதிகரிக்கச் செய்கின்றனவாகையால் அச்செலவுகளை சரக்குக் கணக்கின் பற்றுப்பக்கத்தில் மாற்ற வேண்டுமென்று கூறியிருக்கிறோம்.

பிறகு பாகிங் சாமான் கணக்கை எடுத்துக்கொள்வோம். சாமான்களை ஜாக்கிரதையாகக் கட்டி வெளியூர்களுக்கு அனுப்புவதன் பொருட்டு மரப்பெட்டிகள், கோணிகள், பீப்பாய்கள், ஆணிகள், கயறு, காகிதம் முதலானதுகள் வாங்க வேண்டியிருக்கின்றன. அப்பொழுது பாகிங் சாமான் கணக்கைப்பற்று செய்து, ரொக்கத்திற்கு வாங்கப்பட்டால் ரொக்கக் கணக்கில் வரவெழுதுகிறோம். வியாபாரத்தில் இந்த சாமான்களெல்லாம் அப்படியே செலவழிந்து விடுகின்றனவா? அல்ல. எவ்வளவு சாமான்கள்கையில் தங்கியிருக்கின்றனவோ அவைகளின் மதிப்பை பாகிங்சாமான் கணக்கின் வரவு பக்கத்திலெழுதி, பற்று வரவு பக்கங்களின் மொத்தத்தொகைகளின் வித்தியாசத்தை, பாகிங்சாமான்கள் சரக்குகளின் பொருட்டு வாங்கப்படுகின்றன வாகையால், சரக்குக்கணக்குக்கு மாற்றவேண்டும். கையிருப்பாக விருக்கின்ற பாகிங் சாமான்கள் மறு வருஷத்தில் "பாலன்ஸ்ஷீட்" என்ற குறிப்பில் சொத்தாகக் காண்பிக்கப்படும். அதாவது மறுவருஷத்தில் எழுதப்படுகின்ற பாகிங்சாமான் கணக்கில் கையிருப்பாகக் காண்பிக்கப்படும். இந்தக் கணக்கு வியாபாரத்தின் பொருட்டு செலவழிக்கப்படுகின்ற சாமான்களைக் குறிக்கிறதாகையால் நாமினல் அகவுண்டாகவும், வியாபார முடிவில் கையிருப்பைக் காட்டுகிற தாகையால் ஓர் ரியல் அகவுண்டாகவும், சரக்குக்கணக்கைப்போல் இருவகுப்பையும் சேர்ந்திருக்கிறது.

மேற் கூறப்பட்ட செலவுகளின் தொகைகளோ அல்லது வேறு எந்தச்செலவுகளாயினும் மிகக் குறைவாயிருந்தால், இவைகளை சரக்குக்கணக்கில் சேர்த்து சரக்குகளை வாங்குபவர்களின் கணக்கைப்பற்று செய்வது வியாபாரிக்கோர் பெருந்தன்மையல்லவாகையால், இச்செலவுகளை லாப நஷ்டக் கணக்கிற்கு மாற்றுவது நலம்.

சரக்குகளைப்பற்றின வேறு சில செலவுகளை கவனிப்போம்.

சில சரக்குகளின் பொருட்டு தீர்வை அல்லது வரி ராஜாங்கத்துக்கு கொடுக்கப்படவேண்டும். இத்தீர்வையில் இருவிதங்கள் உண்டு. உள்ளூர்ச் சரக்குகளின்மேல் விதிக்கப்படுகின்ற தீர்வை (Excise) ஒன்றும் வெளிநாட்டுச் சரக்குகளின் மேல் விதிக்கப்படும் தீர்வை (Customs) மற்றொன்றுமாம். இத்தேசத்தில் உள்ளூரிலேயே செலவழியப்படுகின்ற உப்பு, சாராயம், கள், வெடி மருந்து முதலிய சாமான்களின் மேல் தீர்வை விதிக்கப்படுகிறது. புஸ்தகங்களைத் தவிர வெளிநாட்டிலிருந்து இங்கு தருவிக்கப்படுகின்ற எல்லாசரக்குகளின் மேலும் (Import customs) தீர்வை விதிக்கப்படுகிறது. நமது நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்ற அரிசி, நெல் முதலிய சாமான்களின் மேலும் (Export customs) தீர்வை விதிக்கப்படுகின்றது. நாம் வாங்கும் சரக்குகளின் மொத்த அடக்கத்தொகையைக் கண்டு பிடிப்பது இத்தீர்வைக்காக செலவழிக்கப்படும் தொகையைப் பொருத்திருப்பதால், இத்தொகையும் சரக்குகளின் வாங்கின விலையோடு சேர்க்கப்படவேண்டும். செலவுக்காக தீர்வைக்கணக்கைப் பற்று செய்து ரொக்கக் கணக்கை வரவு செய்யவேண்டும். வியாபார முடிவில்

தீர்வைக்கணக்கின் மொத்தத் தொகை சரக்குக் கணக்கின் பற்றுப் பக்கத்துக்கு மாற்றப்படவேண்டும்.

சரக்கு வாபீஸ் கணக்குகள்.

நாம் சரக்குகளை விற்றபிற்பாடு, அச்சரக்குகளில் சிலது வாங்குகிறவன் மனதுக்குப் பிடித்த மில்லாமலிருக்கலாம். அல்லது விற்பனைக்கு முன் நாம் அவனுக்கனுப்பித்திருக்கும் மாதிரிக்கு வேறு பட்டிருக்கலாம். அல்லது வழியில் சேத மடைந்திருக்கலாம். இத்தகைய நிலைமைகளில் வாங்குகிற வன் அச்சரக்குகளை நமக்குத்திருப்பி அனுப்பிவிட அதிகார முண்டு. விற்பனை ஆனபிறகு வாங்குகிறவன் கணக்கை முழுத்தொகைக்கும் பற்று செய்திருக்கிறோமாதலால் சரக் குகளின் கொஞ்சபாகத்தையோ அல்லது முழுச்சரக்குகளை யாவது திருப்பிவிட்டால் அவன் கணக்கில் வரவு செய்ய வேண்டியது அவசியம். இவ்விதமான வாபீஸ் விஷயத்தில் சரக்குகள் நம்மால் பெற்றுக்கொள்ளப்படுகின்றன வாகை யால், சரக்குக் கணக்கு பற்று செய்யப்படவேண்டும். ஆனல் வியாபாரம் பெருகப்பெருக, விபரங்கள் தெளிவாகத்தெரிய வேண்டுமாகையால், நாம் விற்றசரக்குகள் வாபீஸ் கணக்கு (Sales Returns) ஒன்று ஏற்படுத்தி, சரக்குக்கணக் குக்கு பதிலாக இக்கணக்கைப் பற்று செய்யவேண்டும். சரக்குகளை திருப்பினவன் கணக்கில் வரவெழுதவேண்டும்.

இது போலவே, மேலே கூறிய காரணங்களால் நாம் வாங்கியிருக்கின்ற சரக்குகளை விற்றவனுக்குத் திருப்பி அனுப்பிக்கவேண்டி வரும். அப்பொழுது, விற்றவன் சரக்கு களைப் பெற்றுக் கொள்ளுகிறுனகையால் அவன் கணக்கு பற் றெழுதப்பட்டு, நம்மிடமிருந்து சரக்குகள் வெளிப்போகின்

றன வாகையால் சரக்குக்கணக்கு வரவு செய்யப்படவேண்டும். ஆனால் நம்முடைய கணக்குகள் விபரமாக இருக்க வேண்டியதை உத்தேசித்து, நாம் வாங்கின சரக்குகள் வாபீஸ் கணக்கு (Purchases Returns) ஒன்று லெட்ஜரில் ஏற்படுத்தி, சரக்குக்கணக்குக்கு பதிலாக இக்கணக்கில் வரவெழுத வேண்டும்.

மேலே சொல்லப்பட்ட வாபீஸ் கணக்குகள் சரக்குகளின் கொடுக்கல் வாங்கலைக் குறிக்கின்றன வாகையால், ரியல் அகவுண்டுகளாகும். இக்கணக்குகளின் மொத்தத் தொகை நமது சரக்கு வாங்கல் தொகையையாவது விற்பனைத்தொகையையாவது குறைக்கின்ற தாகையால், கடைசியாக மொத்த வாங்கலையும் விற்பனையையும்கண்டு பிடிக்கும் பொருட்டு வியாபார முடிவில் சரக்கு கணக்குக்கு மாற்றப் படவேண்டும்.

மேற்படி வாபீஸ்கணக்குகளை சரக்குக்கணக்குக்கு மாற்றும் பொழுது இந்நூல் பிரகாரம்,விற்றசரக்கு வாபீஸ் கணக்கின் மொத்தத்தொகை, சரக்குகள் பெற்றுக் கொள்ளப்படுகிற படியால், பற்றுப்பக்கத்தில் எழுதப்படவேண்டும். ஆனால் இவைகள் உண்மையாக வாங்கப்படவில்லை யாகையால், இதைத்தெளிவாகக் காட்டும் பொருட்டு, வரவு பக்கத்திலுள்ள விற்பனைமொத்தத் தொகையிலிருந்து வாபீஸ் சரக்குகளின் தொகை கழிக்கப்படுகின்றது. அதுபோலவே வாங்கின சரக்குகளின் வாபீஸ்கணக்கின் மொத்தத்தொகை சரக்குக்கணக்கின்வரவு பக்கத்துக்குப்போகவேண்டியிருக்க, பற்றுப்பக்கத்தில் காணப்படும் மொத்த வாங்கல் தொகையிலிருந்து கழிக்கப்படுகின்றது. இக்கணக்கு எழுதப்படும் மாதிரியை பின்னால் பார்க்கவும்.

மேலே சொல்லப்பட்டபடி விற்ற சரக்குகள் வந்து சேருவதால் வாங்கினவன் கணக்கு வரவு செய்யப்படுவதைத் தவிர, இன்னும் சில விஷயங்களிலும் அவன் கணக்கு வரவு செய்யப்படுகிறது. மறதியாக ஒரு சமயம் வாங்கினவன் கணக்கை அதிகமாகப்பற்றுசெய்துவிடலாம். எவ்வளவுக்கு அவன் கணக்குஅதிகப்பற்றைக் காண்பிக்கிறதோ அவ்வளவுக்குநாம் அவன் கணக்கில் வரவெழுதவேண்டும். எந்தக்கணக்கில் அதிக வரவு எழுதப்பட்டதோ அக்கணக்கில் அத்தொகைக்கு பற்று செய்யப்படவேண்டும். ஒருவேளை வாங்குகிறவனுக்கு முழுச் சரக்குகளையும் நாம் அனுப்பாமல் இருந்து விடலாம். ஆனால் அவன் கணக்கு முன்னமேயே பற்றெழுதப்பட்டிருக்கலாம். அப்பொழுது, எவ்வளவு சரக்குகள் குறைவாக அனுப்பப்பட்டனவோ அத்தொகைக்கு அவன் கணக்கில் வரவு செய்யவேண்டும்.

இவ்விதம் சரக்குகள் வாங்கிக்கொண்டவனிடமிருந்து சரக்குகள் வாபீஸ்வந்தாலாவது, அல்லது அவன் கணக்கு தவறுதலால் அதிகப்பற்றாகியிருக்கிறது என்று நாம் கண்டு கொண்டாலாவது, அல்லது சரக்குகள் வாங்கினவனிடம் குறைவாகக் கொடுக்கப்பட்டன வென்று கண்டு கொண்டாலாவது, வாங்கினவன் கணக்கு உடனே வரவு செய்யப்படவேண்டுமாதலால், எக்காரணத்தால் அவன் கணக்கு வரவு செய்யப்படுகிறதோ அதன் விபரத்தைக் குறித்து "வாபீஸுக்காக வரவு குறிப்பு" (Credit Note) என்றதான ஓர் குறிப்பை அவனுக்கு அனுப்பவேண்டும். இந்த குறிப்புகள் இன்னதென்று உடனே அறியும் பொருட்டு சிகப்பு மசியில் அச்சிடப்படுவது வழக்கம். நாம் வாங்கினவன் கணக்கை வரவு செய்வதற்கு இக்குறிப்புகள் ஆதாரமா

கும். ஆனால் நாம் வாங்கின சாக்குகள் நமக்கு திருப்திகரமாக யில்லாததினால் திருப்பியனுப்பும் பொழுது, சாக்குகளை அவன் பெற்றுக்கொண்ட வுடன் நம்முடைய கணக்கு வரவு செய்யப்படும் பொருட்டு மேற்சொல்லப்பட்ட வாபீஸ் வரவு குறிப்பொன்றை அனுப்புவான். அதை நாம் பெற்றுக்கொண்டவுடன், அவன் கணக்கைப் பற்று செய்து, நம்முடைய கணக்கை வரவு செய்து கொள்ளலாம். ஆனால் சாமான்கள் விற்ற வியாபாரிமேற்சொன்னபடி குறிப்பு அனுப்பாமலிருக்கும் பொழுது நாமாக அவன் கணக்கைப் பற்று செய்ய அதிகாரமில்லை. ஆதலால் விற்றவனிடம் சாக்குகளைப் பற்றின தப்பிதங்களை அறிவித்து அவனிடமிருந்து க்ரெடிட் நோட்டென்று ஆங்கிலத்தில் சொல்லப்படுகின்ற வரவு குறிப்பு வந்த பிறகே, அவன் கணக்கு பற்று செய்யப் படவேண்டும்.

நாம் சாக்குகளை விற்கும் பொழுது சில சமயங்களில் விற்கப்பட்ட சாக்குகளின் விற்பனை விலை முதலிய விஷயங்களைக் காட்டும் பட்டியலில் கைப்பிசகால் தொகையைக் குறைத்தாவது, அல்லது ஓர் விபரத்தை விட்டு விட்டாவது அல்லது கூடுதல் தொகையை தப்பிதமாகக் குறைத்தாவது, எழுதிவிடக் கூடும். இச்சமயத்தில் நாம் பிசகைக் கண்டவுடனே "பற்றுக் குறிப்பு" அல்லது ஆங்கிலத்தில் "டெபிட் நோட்" (Debit Note) என்ற குறிப்பை வாங்கினவனுக்கு அனுப்பி, உடனே அவன் கணக்கைக் குறைந்ததொகைக்குப் பற்று செய்யவேண்டும். இக்குறிப்புகள் சாதாரண மசியிலிருக்கலாம்.

இக்குறிப்புகள் கீழ்கண்டவிதம் எழுதப்படுகின்றன.

வரவு குறிப்பு அல்லது வரவு பட்டியல் (Credit Note)

சோமசுந்தரம் பிள்ளையவர்கள், நாகப்பட்டணம், வரவு

		ரூ.	அ	பை.
1910. எப். 12	நெ. 64 பட்டியலின் படி 10 ரீம் காகிதங்கள் விற்கப்பட்டவகையில் அதிகப் பற்றுக்காக (ரூபாய் இருபத்தைந்து மாத்திரம்.)	25	0	0

மதராஸ், 1910. எப். 12. } நஞ்சுண்டய்ய செட்டி.

பற்றுக்குறிப்பு அல்லது பற்றுப்பட்டியல் (Debit Note)

கோபால பிள்ளையவர்கள், நாகூர், பற்று

		ரூ.	அ.	பை.
1910. எப். 12	நெ. 64 பட்டியலின்படி 10 ரீம் காகிதங்கள் விற்கப்பட்டவகையில் அதிக வரவுக்காக (ரூபாய் இருபத்தைந்து மாத்திரம்.)	25	0	0

மதராஸ், 1910. எப். 12 } நஞ்சுண்டய்ய செட்டி.

மேற்சொல்லப் பட்டவரையில், வியாபாரம் பெருகப்பெருக ஒவ்வொரு விஷயத்திற்கும் மொத்தத் தொகை என்ன ஆகிறது என்று கண்டுகொள்ளுவதற்காக தனித்தனியாக வண்டிச்சத்தக் கணக்கு, பாகிங் சாமான்கள் கணக்கு, வாபீஸ் கணக்கு முதலியவை எழுதப்பட்டன. சரக்குகளைப்பற்றின மற்ற அங்கங்களும் தனித்தனியாக ஒவ்வோர் கணக்கிலெழுதப்பட வேண்டும்.

வியாபார ஆரம்பத்தில் சரக்குக்கையிருப்பு இருப்பதால் அக்கையிருப்புச் சரக்குகளின் தொகை சரக்குக் கணக்கின் பற்றுப்பக்கத்தில் எழுதுவதற்கு பதிலாக "சரக்குக் கையிருப்புக் கணக்கு" (Stock account) என்று ஓர் கணக்கெழுதி அதைப்பற்று செய்யவேண்டும். இக்கணக்கிலுள்ள தொகை வியாபாரக் கணக்குகளை முடிக்கும்பொழுது சரக்குக் கணக்குக்கு மாற்றப்படவேண்டும். சரக்குகள் வாங்கப்படும்பொழுது, "கொள்முதல் கணக்கு" (Purchases account) என்று கணக்கெழுதி அதைப்பற்று செய்து முடிவில் சரக்குக் கணக்குக்கு மாற்றவேண்டும். இதுபோலவே சரக்குகளுக்கு சம்பந்தமான ஒவ்வோர் செலவுக்கும் ஒரு கணக்கு தனியாக ஏற்படுத்தி முடிவில் சரக்குக் கணக்குக்கு மாற்றவேண்டும். சரக்குகள் விற்கப்பட்டவுடன், சரக்குக் கணக்கில் வரவு எழுதுவதற்கு பதிலாக, "விற்று முதல் கணக்கு" (Sales account) என்ற ஓர் கணக்கை எழுதி அதை வரவுசெய்து முடிவில் சரக்குக் கணக்கின் வரவு பக்கத்தில் மாற்றவேண்டும். இவ்விதமே வாபீஸ் கணக்குகளும் தனித்தனியே எழுதப்பட்டு சரக்குக் கணக்குக்கு மாற்றப்படவேண்டும். ஆனால் வருஷமுடிவிலுள்ள கையிருப்புச் சரக்குகள் மட்டும் கையிருப்புச் சரக்கு கணக்கில் குறிக்கப்படக்கூடாது. ஆனால் நேராக சரக்குக் கணக்கில் வரவு பக்கத்தில் குறிக்கப்படவேண்டும்.

மேற்கூறிய சரக்குக் கணக்கின் விபரங்களெல்லாம் தனித்தனியாக கணக்குகளில் எழுதப்பட்ட பிறகு அவைகளெல்லாம் சேர்ந்து சரக்குக் கணக்குக்குச் சென்று அக்கணக்கையும் நாம் முடித்தவுடன் மொத்த லாபத்தைக் (Gross Profit) காட்டி நிற்கின்றன. இப்படி சரக்கு விபரங்களெல்

லாம் சேர்த்தெழுதப்பட்ட சரக்குக் கணக்குக்கு ஆங்கிலத்தில் "ட்ரேடிங் அகவுண்டு" (Trading account) என்று பெயர். வியாபாரத்தில் நடக்கும் மொத்த செலவுகளில் சரக்கைப் பற்றின சில செலவுகள் இக்கணக்கில் சேர்க்கப்படுவதுபோக, மற்ற செலவுகள் லாப நஷ்ட கணக்கில் சேர்க்கப்பட்டு விடுகின்றன. ஆகவே செலவுகள் நாம் சரக்குக் கணக்கில் சேர்த்தாலும் அல்லது லாப நஷ்டக்கணக்கில் சேர்த்தாலும் கடைசி லாபம் (Net Profit)எப்பொழுதும் அவ்வருஷத்தில் ஒரே தொகையைக் குறிக்கும். இக்கணக்குகள் அப்படியே ட்ரேடிங் அகவுண்டுக்கு மாற்றப்படுகின்றனவாகையால் இக்கணக்குகளின் பலாபலன்கள் ட்ரேடிங் அகவுண்டிலேயே தெரியப்படும். ஆதலால் மேற்படி கணக்குகள் மாற்றப்பட்ட பின்பு, அவைகளை மறுபடியும் அடுத்த வருஷத்தில் எழுதவேண்டியதில்லை. ஆகவே இக்கணக்குகளில் அதிகப்பற்று வரவு தொகைகள் அவைகளின் கீழே காணப்படாது.

ஒரே வியாபாரத்தில் இரண்டு மூன்று சரக்குகளை விற்பனைக்கு வைக்கப்பட்டால், ஒவ்வோர் சாக்கு தினுசிலும் எவ்வளவு கொடுக்கல் வாங்கல் நடந்திருக்கிறது, என்ன லாப மேற்பட்டிருக்கிறதென்று கண்டு கொள்ளும் பொருட்டு, ஒவ்வொரு சரக்குக்கும், கையிருப்புக் கணக்கு, கொள்முதல் விற்று முதல் கணக்குகள், செலவு கணக்குகள், வாபீஸ் கணக்குகள் முதலியவை வெவ்வேருக எழுதப்படவேண்டும்.

ஒரு ட்ரேடிங் அகவுண்டு அதனுடைய பலவித அங்கங்களுடன் கீழ்வருமாறு எழுதப்படுகிறது:—

பற்று. 1910. மார். 31௨ முடிய மூன்றுமாத வியாபார சரக்குக் கணக்கு. வரவு

	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.		ரூ	அ.	பை.	ரூ.	அ.	பை.
ஜனவரி 1௨ கையிருப்பால்				150	0	0	விற்று முதல் கணக்குக்கு	550	0	0			
கொள் முதல் கணக்கால்	400	0	0				விற்ற சரக்குகள் வாபீஸ் குறைவு	70	0	0			
வாங்கின சரக்கு வாபீஸ் குறைவு	50	0	0					——	——	——	480	0	0
	——	——	——	350	0	0	மார். 31௨யில் கையிருப்புச் சரக்குக்கு				400	0	0
வண்டிச் சத்தக் கணக்கால்				30	0	0							
பாகிங்சாமான்கள் கணக்கால்				40	0	0							
லாபநஷ்டக்கணக்கால்				310	0	0							
				——	——	——					——	——	——
ஆகமொத்தம்				880	0	0	ஆகமொத்தம்				880	0	0

சரக்குகளைச் சேர்ந்த பலவித கணக்குகளின் தொகைகள் மேற்படி சரக்குக் கணக்குக்கு மாற்றப்படுவதற்காக அக்கணக்குகளில் ஒரு பதிவு செய்யப்பட்டு சரக்குக் கணக்கில் மற்றொரு பதிவும் செய்யப்படுவதால், ஒவ்வொரு கணக்கிலும் முடிவில் பற்று வரவு பாக்கி எழுதப்படுவதில்லை. ஆனால் மேலேயுள்ள சரக்குக் கணக்கில் வரவு பக்கத்திலெழுதப்படுகிற கையிருப்புச் சரக்கு நேரில் வருஷ முடிவில் வியாபாரத்திலுள்ள சாமான்களை எண்ணிப்பார்த்து அவைகளின் தொகை நேராக மேற்படி கணக்கில் எழுதப்படுகிறதே தவிர வேறோர் கணக்கிலும் எழுதப்படுவதில்லை. இந்தச்சரக்குக் கையிருப்புக்காக சரக்குக்கணக்கின் வரவு பக்கத்திலெழுதப்பட்ட பதிவுக்கு ஓர் பற்றுப் பதிவுவேண்டும். இப்பதிவு தனியாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் சரக்குக்கையிருப்புக்கணக்கில் பற்றுப்பக்கத்தில் மொத்தத்தொகைகளுக்குக் கீழே "சரக்குக் கணக்கால்" என்று எழுதப்படவேண்டும். இக்கணக்கு கீழ்வருமாறு காணப்படும்:—

பற்று. சரக்கு கையிருப்புக் கணக்கு. வரவு

தேதி.		மு. ந.	ரூ.	அ.	பை.	தேதி.		மு. ந.	ரூ.	அ.	பை.
1910. எப். 1.	கையிருப்பு பாக்கியால்		150	0	0	1910. எப். 30.	சரக்குக் கணக்குக்கு		150	0	0
	ஆகமொத்தம்		150	0	0		ஆகமொத்தம்		150	0	0
1910. மேமீ 1.	சரக்குக் கணக்கால்		400	0	0						

ஆகவே, வியாபாரத்தின் ஆரம்பத்திலுள்ள சரக்கு பாக்கியின் தொகையும், வியாபாரத்தில் பிறகு வாங்கப்பட்ட சரக்கின் தொகையும் அவைகளின் பொருட்டு ஏற்படும் சில செலவுகளையும் சரக்குக் கணக்கில் பற்றுப்பக்கத்தி லெழுதி அவைகளைச் சேர்த்து வந்ததொகையே சரக்குகளின் அடக்கத்தொகை. வியாபாரத்திலேற்பட்ட விற்பனைத் தொகையும் முடிவில் பாக்கியுள்ள சரக்குத் தொகையும் வரவு பக்கத்தில் எழுதப்பட்டு அவைகளைச் சேர்த்து வந்த தொகையே சரக்குகளை விற்றதொகை. இவ்விரண்டு கூடுதல் தொகைகளின் வித்தியாசமே மொத்தலாபம் எனப்படும்.

சரக்குகள் சம்பந்தமில்லாததாயும் ஆனால் வியாபாரத்தின் மேன்மையைக் கருதியதாயுமுள்ள செலவுகளிருக்கின்றனவென்று முன்னமே சொல்லியிருக்கிறோம். இச்செலவுகள் சரக்குக் கணக்கின் மூலமாய் கண்டுபிடிக்கப்பட்ட மொத்த லாபத்தைக் குறைக்கின்றன. இன்னும் வேறுவிதமாக வியாபாரத்துக்கு லாபத்தைக் கொடுக்கும் அம்சங்கள் இருக்கின்றன. இவைகள் யாதென்று கவனிப்போம்.

வட்டிக் கணக்கு. (Interest account)

நாம் ஒருவனுக்குப் பணம் கடனாகக் கொடுத்து உதவி செல்தாலாவது, அல்லது சரக்குகள் கடனாகக் கொடுத்து பணம் சேரவேண்டியதிற்கு ஓர் கெடு ஏற்படுத்தி அக்கெடு பிரகாரம் வாங்கினவன் கொடுக்கத் தவறினாலாவது, நம்முடைய தொகைக்கு அவன் வட்டி கொடுக்கவேண்டியவனாகிறான். அப்படி வட்டியின் பொருட்டுப்பணம் வருமேயானால், அது நமக்கு லாபமாகும். அப்பொழுது கீழ்வரும் குறிப்பு ஏற்படும்.

ரொக்கக்கணக்கு பற்று ரூ. 10—0—0

வட்டிக்கணக்கால் ரூ. 10—0—0

(நாராயணனல் கொடுக்கப்பட்டது.)

இந்த ரொக்கம் வாங்கப்பட்ட விஷயத்தில், யாரிடமிருந்து வட்டி பெற்றுக்கொள்ளப்பட்டது என்றவிபரம் தெரியவேண்டிய அவசியமாதலால் மேற்படி நாரேஷன்(Narration) எழுதப்படவேண்டும்.

ஆனல் உடனே பணம் வராமல் வட்டி தங்கி யிருக்குமானல் கீழ் வருமாறு வட்டி கொடுக்கவேண்டியவனைப்பற்று செய்கிறோம்.

நாராயணன்—பற்று ரூ. 10—0—0

வட்டிக்கணக்கால் ரூ. 10—0—0

பிறகு பணம் வந்தபிற்பாடு, நாராயணன் கணக்கு முன்னமேயே வட்டிக்காக பற்றுயிருக்கிறபடியால் இப்பொழுது வரவாக வேண்டும்.

ரொக்கக்கணக்கு—பற்று ரூ. 10—0—0

நாராயணனல் ரூ 10—0—0

இவ்விதம் பணம் வாங்கினவுடன், நாராயணன்கணக்கு தீர்ந்து, ரொக்கக்கணக்கு பணம் வந்து சேர்ந்ததற்காகப்பற்றுகி, லாபத்தைக் காட்டுவதற்காக வட்டிக்கணக்கு வரவாகிறது.

இதுமாதிரியே நாம் பிறரிடத்திலிருந்து கடன்வாங்கியிருந்தாலாவது அல்லது அவர்கள் பட்டியலைத்தீர்க்க நாட்சென்றுலாவது, வட்டி கொடுக்கநேரிடும். இது ஓர் நஷ்டமாகும். வட்டி கொடுக்கவேண்டிய தேதியிலேயே நாம்

பணமும் கொடுத்து விட்டால், வட்டிக்கணக்கை நஷ்டத்திற்காகப் பற்று செய்து ரொக்கக்கணக்கை வரவு செய்யவேண்டும்.

அல்லது பணம் பிறகு கொடுக்கலாமென்றிருந்தால், கொடுக்கவேண்டிய வட்டிக்கு வட்டிக்கணக்கைப்பற்றுசெய்து யாருக்குக் கொடுக்கவேண்டுமோ அவர் கணக்கை வரவு செய்யவேண்டும். பின்னல் ரொக்கம் கொடுத்தவுடன், அவர் கணக்கைப்பற்று செய்து தீர்த்து, ரொக்கக்கணக்கை பணம் கொடுத்ததற்காக வரவு செய்யவேண்டும். நஷ்டத்தைக்காண்பிப்பதற்காக வட்டிக்கணக்கு பற்றெழுதப்பட்டிருக்கிறது.

பின்னர் வட்டிக்கணக்கை முடிக்கும் பொழுது, லாப வட்டியானல் (வரவேண்டிய வட்டியானல்) லாப நஷ்டக் கணக்கின் வரவு பக்கத்திலும், நஷ்டவட்டியானல் (கொடுக்க வேண்டிய வட்டியானல்) லாபநஷ்டக் கணக்கின் பற்றுப் பக்கத்துக்கும் மாற்றப்படவேண்டியது.

முதலின் மீது வட்டி:— வியாபாரம் ஆரம்பிக்கும் பொழுது முதலாளிபால் கொடுக்கப்படும் மூலதனம் வியாபாரத்துக்கு அவனல் கொடுக்கப்பட்ட ஓர் கடன் என்று கொள்ளவேண்டு மென்று சொல்லி யிருக்கிறோமல்லவா? முதலாளி வியாபாரத்திற்கு ஓர் அன்னியனகவும் முதல் தொகைக்கு அவன் கடன்காரனகவும் பாவிக்கவேண்டும். அப்படியானல் அவனல் கொடுக்கப்பட்ட தொகைக்கு வட்டி செலுத்த வியாபாரம் கடமைப் பட்டிருக்கிறது. ஆகவே முதலாளியின் கணக்காகிய முதல் கணக்கு வட்டித் தொகைக்கு வரவு செய்யப்படவேண்டும். இத்தொகையும் முதலோடு சேர்ந்து வியாபாரத்திலேயே நிற்கிறதாகையால் பணம் கொடுக்கவேண்டிய கட்டாய மில்லை. ஆயினும் வட்

டித்தொகைக்கும் முதலாளி உரியவனாகிறா னென்பதைக் காண்பிக்கவேண்டும். இந்த வட்டி வியாபாரத்திற்கு நஷ்ட மாதலால், வட்டிக்கணக்கு பற்று செய்யப்பட்டு முதல் கணக்கு வரவாக வேண்டும். இதனுடைய ஜர்னல் குறிப்பு கீழ்கண்ட விதம்:—

வட்டிக்கணக்கு—பற்று ரூ. 20—0—0

முதல் கணக்கால் ரூ. 20—0—0

முதலாளியின் பற்று:—சிற்சில சமயங்களில் முதலாளி தன் சொந்தச் செலவுக்காக வியாபாரத்திலிருந்து பணம் எடுத்துக்கொள்ளலாம். அப்பொழுது அவன் கணக்காகிய முதல் கணக்கு பற்று செய்யப்படவேண்டும். ஆனால் முதலாளியின் பற்றுதலைமட்டும் குறிக்கக் கூடியதாயும் முதல் கணக்கைப் போலவே அதன் உட்பிரிவு கணக்காயுமுள்ள முதலாளியின் பற்றுக் கணக்குஅல்லது "ட்ராயிங் அகவுண்டு" (Drawing or Current account) என்ற ஓர் கணக்கு எழுதப்பட்டு முதலாளி பெற்றுக்கொண்ட பணத்திற்கு பற்று செய்யப்படுகிறது. வெளியில் போன ரொக்கத்திற்காக, ரொக்கக் கணக்கு வரவு செய்யப்படுகிறது. வியாபார முடிவில் மேற்படி ட்ராயிங் அகவுண்டிலுள்ள தொகை முதலாளியால் கொடுக்கப்பட்ட மூலதனத்தைக் குறைக்கிறதாகையால் முதல் கணக்குக்கு மாற்றப்படவேண்டும். ஆகவே, ட்ராயிங் அகவுண்டிலிருந்து மாற்றப்படும் இத்தொகை முதல் கணக்கின்பற்றுப் பக்கத்தில் தோன்றும். இது முதல்கணக்கோடு சேர்ந்து விடுகிறபடியால், இக்கணக்கின் அதிகப்பற்று அல்லது வரவு முறு தேதியில் கீழே காணப்படாது.

எப்பொழுது முதலின்மீது வியாபாரம் வட்டி கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறதென்று சொல்லுகிருேமோ, அதுபோலவே முதலாளியால் வாங்கிக்கொள்ளப்படும் தொகைக்கும் அவன் வட்டி கொடுக்கவேண்டிய அவசியமல்லவா? ஆகவே, முதலாளியின் பற்று விபரங்களைக் குறிக்கும் "ட்ராயிங் அகவுண்டு" வட்டித்தொகைக்கு பற்று செய்யப்படவேண்டும். அந்த வட்டி வியாபாரத்துக்கு ஓர் லாபத்தை உண்டாக்கிற தாகையால் வட்டிக்கணக்கு வரவு செய்யப்படவேண்டும். கடைசி லாபமோ நஷ்டமோ முதலாளியைச் சேர்ந்ததால் அவன் கொடுக்கவேண்டிய வட்டிக்குப் பணம் கொடுக்கவேண்டிய அவசியமில்லை யாதலால், அவன் கணக்குமட்டும் பற்று செய்யப்படுகிறது. வருஷ முடிவில் முதலாளியால் வாங்கப்படும் தொகையும் அதற்குள்ள வட்டியும் முதலைக் குறைக்கிறதாகையால், முதலாளியின் ட்ராயிங் அகவுண்டு முதல் கணக்குக்கு மாற்றப்படவேண்டும். கீழே மாதிரியை கவனிக்கவும்:—

பற்று. முதலாளியின் பற்றுக்கணக்கு. வரவு.

தேதி.		மு. ந.	ரூ.	அ.	பை.	தேதி.		மு ந.	ரூ.	அ	பை
1910.							முதல் கணக்குக்கு		230	0	0
ஜன. 18	ரொக்கக் கணக்கால்		150	0	0						
,, 24	சரக்குக் கணக்கால்		60	0	0						
,, 31	வட்டிக் கணக்கால்		20	0	0						
	ஆகமொத்தம்		230	0	0		ஆகமொத்தம்		230	0	0

வியாபார முடிவில் வட்டிக்கணக்கின் பற்றுப்பக்கத்தி லுள்ள நஷ்டத்தைக்காட்டும் தொகைகளையும் வரவு பக்கத்தி லுள்ள லாபத்தைக்காட்டும் தொகைகளையும் கூடுதல் செய்து வித்தியாசத்தை லாப நஷ்டக்கணக்குக்கு மாற்றவேண்டும். ஆனால் சௌகரியத்தை உத்தேசித்து லாபத்தைக்காட்டும் வட்டிக்கு ஓர் கணக்கையும் நஷ்டத்தைக் குறிக்கும் வட்டிக்கு ஓர் கணக்கையும் ஏற்படுத்தி அவைகளை முடிவில் லாப நஷ் டக் கணக்குக்கு மாற்றிக்கொள்ளலாம்.

விற்பனைத் தள்ளுபடி கணக்கு (Discount account)

ஒருவனுக்கு சாக்குகளை நாம் கடனாக விற்றால் விற்ற தொகையைச் செலுத்துவதற்கு ஓர் தவணை கொடுப்போம். தவணை காலம் மீறிவிட்டால் அவனால் கொடுக்கப்பட வேண் டிய தொகைக்கு நாம் வட்டி கேட்பதுபோலவே, தவணை காலத்துக்குள்ளேயே கொடுத்து விட்டால், அவன் சீக்கிர மாக பணத்தைக் கொடுப்பதை உத்தேசித்து அவன் கொடுக் கவேண்டிய தொகையிலிருந்து கொஞ்சம் தள்ளி பாக்கியைப் பெற்றுக்கொள்ளுவோம். இப்படித்தள்ளி பணம் வாங்கிக் கொள்வதால், நமக்குண்டாகும் பிரயோஜனம் சீக்கிரம் பணம் கொடுக்கப்படுவதேயாம். இவ்விதம் சீக்கிரம் பணம் கொடுக்கப்படுவதாலுண்டான பிரயோஜனம் நமக்கு வருவ தால் அப்பிரயோஜனத்தைத் குறிக்கும் கணக்காகிய தள்ளு படிக் கணக்கு அல்லது டிஸ்கவுண்ட் அகவுண்டு (Discount account) பற்று செய்யப்படவேண்டும். ரொக்கம் வாங்கிக் கொள்ளுங்காலத்தில் கொடுக்கப்படுகின்ற தள்ளுபடிக்கு "காஷ் டிஸ்கவுண்டு," (Cash Discount) என்று ஆங்கிலத் தில் பெயர். உதாரணமாக, கோவிந்தனுக்கு 3 மாததெடு

வில் கடனாக சரக்குகள் ரூ 100-க்கு விற்றிருந்தோமானல், இவ்விதமாகப் பதிவு செய்திருப்போம்:—

கோவிந்தன்—பற்று ரூ. 100—0—0

சரக்குக்கணக்கால் ரூ. 100—0—0

தவணைக்குள் கோவிந்தன் பணத்தை செலுத்துகிறானென்றும் அதற்காக நாம் அவன் கொடுக்கவேண்டிய தொகையில் ரூ 5 தள்ளி பாக்கி ரூ 95 மட்டும் பெற்றுக்கொள்ளுவதாகவும் வைத்துக்கொள்ளுவோம். இவ்விஷயத்தில் நாம் வாங்கிக்கொள்வது யாது? ரொக்கம் ரூ 95ம், சீக்கிரம் பணம் கொடுக்கப்படுவதாலுண்டான ஓர் பிரயோஜனத்தின் ரூ 5 பெறுமானமும். ஆதலால் ரொக்கக் கணக்கு ரூ. 95-க்கும் மேற்கூறிய பிரயோஜனத்தைக் காட்டுகிற டிஸ்கவுண்டு கணக்கு ரூ. 5-க்கும் பற்று செய்யப்படவேண்டும். மேற்படி ரொக்கம் ரூ. 95-ம் பிரயோஜனம் ரூ. 5-ம் கோவிந்தன் கொடுப்பதால், அவனுல் மொத்தம் கொடுக்கப்படுவது ரூ. 100 என்று பாவிக்கப்பட வேண்டும். ஆகவே அவன் கணக்கு ரூ. 100க்கு வரவு செய்யப்படவேண்டும். இதனுல் முதலில் ரூ. 100க்கு பற்றாகியிருக்கும் அவன் கணக்கு இப்பொழுது தீர்ந்து விடுகிறது. எனவே, இக்குறிப்பு கீழ்கண்ட விதம் செய்யப்படவேண்டும்.

கீழ்கண்ட கணக்குகள்:—

ரொக்கக் கணக்கு:—பற்று ரூ. 95—0—0

தள்ளுபடிக் கணக்கு:— ரூ. 5—0—0

கோவிந்தனுல் ரூ. 100—0—0

மேற் சொன்ன மாதிரியே தள்ளுபடி உடனுக்குடனே ரொக்கம் கொடுத்து சரக்கு வாங்குபவர்களுக்கும் கொடுக்க

வேண்டுவது அவசியம். ரொக்கத்திற்கு ரூ. 100 சரக்குகள் விற்கப்பட்டு ரூ. 5 தள்ளிக்கொடுக்கும் பட்சத்தில், உடனே ரொக்கம் வந்து சேருகிறபடியால், ரொக்கக் கணக்கு ரூ. 95 க்கும் பிரயோஜனம் ஓர் நஷ்டமாகையால் தள்ளுபடிக்கணக்கு ரூ. 5-க்கும் பற்று செய்யப்பட்டு சரக்குகள் வெளிப்போவதால் சரக்குக்கணக்கு ரூ. 100-க்கும் வரவு செய்யப்பட வேண்டும்.

இப்பொழுது, நாம் கோவிந்தனிடமிருந்து சாக்குகள் ரூ. 100-க்கு வாங்கியிருப்பதாகவும் கெடுவுக்குள் பணத்தைச் செலுத்துவதால் ரூ. 5 தள்ளப்படுகிறதென்று மெடுத்துக்கொள்வோம். இவ்விஷயத்தில் ரொக்கம் ரூ. 95 யும் சீக்கிரம் கொடுப்பதாலுண்டாகும் பிரயோஜனத்தையும் கோவிந்தன் பெற்றுக்கொள்வதால், அவன் கணக்கு பற்றாகி முன்னம் சரக்குகளை அவன் விற்றதாலுண்டான வரவு தீர்ந்துவிடுகிறது. நாம் ரொக்கம் கொடுப்பதால் ரொக்கக் கணக்கையும் பிரயோஜனம் வெளிப்போவதாலும் அப்பிரயோஜனம் நமக்கு லாபத்தைக் குறிப்பதாலும் தள்ளுபடி கணக்கையும் வரவு செய்யவேண்டும். இதனுடைய குறிப்பு கீழ்வருமாறு :—

கோவிந்தன்:—பற்று		ரூ. 100—0—0
கீழ்கண்ட கணக்குகளால்:—		
ரொக்கக் கணக்கு	ரூ. 95—0—0	
தள்ளுபடிக் கணக்கு	,, 5—0—0	

மேற்கூறிய இரண்டு விஷயங்களிலிருந்தும் நாம் கண்டு கொள்வது என்னவெனில், ரொக்கம் கொடுக்கப்படும்பொழுது தான் தள்ளுபடி செய்யப்படுவதாலும் குறைந்த தொகைக்

குக் காரணம் தள்ளுபடியாதலாலும், ரொக்கக்கணக்கும் தள்ளுபடி கணக்கும் எப்பொழுதும் சேர்ந்தே பற்றோ அல்லது வரவோ ஆகும்.

மேலேயுள்ள வியாபாரத்தை மூன்றுவிதமாகக் கூறலாம். ரொக்கம் கொடுக்கப்பட்டது இவ்வளவு தள்ளுபடி இவ்வளவு என்றாவது, கொடுக்கவேண்டிய தொகையில் நூற்றுக்கு இவ்வளவு வீதம் தள்ளிக் கணக்குத் தீர்க்கப்பட்டதென்றாவது, அல்லது மொத்தமே இவ்வளவு தொகை கொடுத்துக்கணக்குத் தீர்ந்து விட்டதென்றாவது சொல்லலாம். இவைகளில் தள்ளுபடி எவ்வளவு என்பதைக் கண்டுபிடித்து மேற்கூறிய வாறு பதிவுகளைச் செய்யவேண்டும்.

ஆனால் கெடு தவறிப்போய் சரக்குகள் வாங்கினவனிடமிருந்து பணம் வருமேயானால் கொஞ்சமேனும் தள்ளுபடி ஏற்படாது. அப்பொழுது முழுத்தொகையும் செலுத்தப் படவேண்டும். அப்பொழுது ரொக்கக்கணக்கு முழுத் தொகைக்கும் பற்றாகி சரக்குகள் வாங்கினவன் கணக்கு வரவாகி நிற்கும்.

தள்ளுபடிக் கணக்கு பற்றுப் பக்கத்திலுள்ள விபரங்களால் நஷ்டத்தையும் வரவு பக்கத்திலுள்ள விபரங்களால் லாபத்தையும் குறிப்பதால், இது ஓர் நாமினல் அகவுண்டாகும். வருஷ முடிவில் இக்கணக்கு லாபநஷ்டக் கணக்குக்கு மாற்றப்பட வேண்டும். வியாபாரம் பெருகப் பெருக, லாபத்தைக் குறிக்கும் தள்ளுபடிக்கு ஓர் கணக்கும், நஷ்டத்தைக் காட்டும் தள்ளுபடிக்கு ஓர் கணக்கும் தனித் தனியாக வைத்துக்கொள்ளலாம்.

நிற்க, வியாபாரத்தை மேலும் மேலும் முன்னுக்குக் கொண்டுவருவதின் பொருட்டு மற்றோர் விதமான தள்ளு

படி இருக்கிறது. வியாபாரிகள் எல்லாரும் தம்மிடம் வாங்கிக் கொள்ளும் பொருட்டு அவர்களுக்கு மட்டும் சரக்குகளுக்கு முதன் முதலில் ஏற்படுத்தப்பட்ட விலையினின்றும் அதாவது காட்லாகில் அல்லது சரக்கு ஜாப்தாவில் போடப்பட்ட விலையினின்றும் (Catalogue Price) தள்ளுபடி செய்யப்படுகிறது. இந்தத் தள்ளுபடிக்கு "ட்ரேட் டிஸ்கவுண்டு" (Trade discount) என்று ஆங்கிலத்தில் சொல்லப்படுகிறது. இத் தள்ளுபடியினால் சில்லறைவியாபாரிகளெல்லாரும் சரக்குகளை நம்மிடமிருந்து குறைந்தவிலைக்கு வாங்கி விற்பனை செய்வதால் மிகுந்த லாபத்தைஅடைவார்கள். நம்முடையவியாபாரமும் எல்லா வியாபாரிகளும் நம்மிடமே சரக்குகள் வாங்குவதால் முன்னுக்கு வந்துவிடும். ஆதலால் இத்தகைய தள்ளுபடி தவணைக்குள் பணம் கொடுக்கிறான் கொடுக்கவில்லை யென்ற நிபந்தனையின்றி சகல வியாபாரிகளுக்கும் கொடுக்கப்பட வேண்டிய தாகும். இந்தவிதமான தள்ளுபடியின் மேல் ஒருவன் சரக்குகள் வாங்கினால், தள்ளுபடிபோகபாக்கித் தொகைக்கே அவன்பற்றுசெய்யப்படவேண்டும். தள்ளுபடி கணக்கில் காட்டப்பட மாட்டாது. ஆனால் ட்ரேட் டிஸ்கவுண்டு கொடுக்கப்பட்டிருக்கிறதென்று தெரிந்து கொள்ளும்பொருட்டு ஜர்னல் குறிப்பில் நேரேஷன் மட்டும் எழுதப் படவேண்டும். உதாரணமாக, கோவிந்தன் ரூ 100 சரக்குகள் வாங்கினதில் ரூ 5 வியாபாரத் தள்ளுபடி கொடுக்கப்பட்டதென்று வைத்துக் கொண்டால் கீழ்வருமாறு பதிவு ஏற்படும்:—

கோவிந்தன் பற்று ரூ. 95—0—0		
	சரக்குக் கணக்கால்	ரூ. 95—0—0

(ட்ரேட் டிஸ்கவுண்டு ரூ. 5
அல்லது 5 பெர்ஸெண்ட், Per cent)

பெறுமானக் குறைவு கணக்கு (Depreciation account)

ரியல் அல்லது ப்ராப்பெர்ட்டி அகவுண்டுகளான சொத்துக் கணக்குகளில், சரக்குக் கணக்கைப் பற்றியும் ரொக்கக் கணக்கைப் பற்றியும் இதுவரை சொல்லப்பட்டன. இவைகளைத் தவிர வேறு சில சொத்துக் கணக்குகள் இருக்கின்றன. ஒருவன் வியாபாரத்துக்கு ஓர் சாதனமாக உபயோகப்படுத்தும் பொருட்டு யந்திரமாவது, நாற்காலிகள், பீரோக்கள் முதலிய மரசாமான்களாவது வாங்கக்கூடும். அல்லது வியாபாரத்துக்குச் சொந்தமாகவே சிலகட்டிடங்கள் இருக்கக்கூடும். இவைகள் ஒவ்வொன்றுக்கும், யந்திரக் கணக்கு, கட்டிடங்கள் கணக்கு, மரசாமான்கள்கணக்கு என்றிவ்விதமாகத் தனித்தனியாக கணக்குகள் ஏற்படுத்தவேண்டும். இச்சொத்துகளின் பாக்கிகளெல்லாம் வியாபார முடிவில் காண்பிக்கப்பட்டு "பாலன்ஸ் ஷீட்டில்" குறிக்கப்பட வேண்டுமாகையால், சரக்குகளின் கையிருப்பு மதிக்கப்பட்டது, ரொக்கக்கையிருப்பு கண்டு பிடிக்கப்பட்டது. இம்மாதிரியே மற்ற சொத்துகளின் தொகைகளும் எழுதப்படவேண்டும்.

ஒருவன் வியாபாரத்தின் உபயோகத்திற்காக ஆரம்பத்தில் ரூ. 50-க்கு மரசாமான்கள் வாங்கினானால் வருஷக்கடைசியில் அதே தொகைக்கு அச்சாமான்களை அவன் பிறருக்கு விற்கமுடியுமா? முடியாது. ஏனெனில் அச்சாமான்கள் உபயோகப் பட்டதனால் பழைமையாகப் போய்விட்டன. ஆதலால் ஆரம்பத்தில் ரூ. 50 பெறுமானமுள்ள வஸ்து வருஷமுடிவில் ரூ. 40 தான் பெறும். அதாவது, வருஷ ஆரம்பத்தில் ரூ. 50 சொத்து நாம் வைத்திருக்க, முடிவில் ரூ. 40 பெறுமான சொத்துதான் இருக்கிறது. இப்படி ரூ. 10

குறைந்துவிட்டதற்கு பதிலாக, அந்த சொத்தினல் வியாபாரத்திற்கோர் பிரயோஜனத்தை அடைகிறோம். அப்பிரயோஜனம் நஷ்டத்தைக் குறிக்கிறதாகையால், அதைக் காட்டும் பெறுமானக் குறைவு கணக்கு (Depreciation account) குறைந்த தொகைக்கு பற்று செய்யப்படவேண்டும். சொத்துகளிடமிருந்து மேற்கூறிய உபயோகம் கிடைக்கிறபடியால், சொத்துக் கணக்கு வரவு செய்யப்படவேண்டும். வருஷமுடிவில் நாம் சொத்துகளை விற்றாலும் விற்காவிட்டாலும், அவைகளின் மதிப்பு குறைந்து விடுமாதலால் மதிப்பு இன்னதென்று கண்டுபிடித்து, குறைந்த தொகையை டிப்ரீஸியேஷன் கணக்கில் பற்று செய்யவேண்டும். மதிப்புக் குறைவு இன்னதென்பதை வருஷத்திற்கு 100-க்கு இவ்வளவு வீதம் குறைவு என்று அனுபவத்தைக் கொண்டு நிர்மானிக்கவேண்டும்.

மேற்படி மதிப்புக் குறைவு சொத்துக் கணக்கில் வரவு பக்கத்தில் எழுதப்படும். பற்றுப்பக்கத்தில் வருஷ ஆரம்பத்தில்கையிலிருந்த சொத்தின் தொகையும் அவ்வருஷத்தில் வாங்கி சேர்க்கப்பட்ட சொத்தின் தொகையும் எழுதப்படுவதால், அவைகளின் பெறுமானக் குறைவு தொகை வரவு பக்கத்திலெழுதப்பட்டு பற்றுப் பக்கத்து கூடுதல் தொகையைக் குறைத்து அடுத்த வருஷத்து ஆரம்பத்தில் கையிலுள்ள சொத்துக்களின் பெறுமானத்தை காண்பித்து நிற்கும். ஏதாவது சொத்துகள் வியாபாரத்தில் உபயோகமில்லாததால் விற்கப்பட்டாலுங்கூட வரவு பக்கத்தில் அந்தத்தொகை காண்பிக்கப்படும்.

மேற்கூறிய சொத்துகள் வெளியில் அருமையாகக் கிடைப்பதாலாவது அல்லது அச்சொத்துகளுக்கு தேவை

அதிகமாயிருப்பதாலாவது,.அவைகளின் விலை அதிகப்பட்டு விட்டால், நம்முடைய கணக்கில் அதிகப்படும் விலையைக் காண்பிக்கவேண்டியதில்லை. நஷ்டம் வராமல் மட்டும் நாம் ஜாக்கிரதையாக விருக்கவேண்டுமேதவிர லாபம் வருவதால் பயனொன்று மில்லை.

ஆகவே சொத்துக்கணக்குகளை முடிவுசெய்யும்பொழுது ரொக்கத்தின் மதிப்பு எப்பொழுதும் மாறுமலிருக்குமாகை யால் ரொக்கக்கணக்கில் பாக்கியை அப்படியே எழுதவேண் டும். சரக்குகளின் விலை வெளித்தேவைக்கும் அளவுக்கும் தகுந்தபடி மாறு மாகையால், கையிருப்புச் சரக்குகளின் மதிப்பைக்கண்டு பிடித்து பிறகே அக்கணக்கை முடிவு செய் யவேண்டும். யந்திரங்கள், மரசாமான்கள் முதலிய சொத் துக்கள் வியாபாரத்தில் உபயோகப்பட்டு பழைமையாகப் போவதால் அவைகளின் தொகை குறைந்துபோகும். அவை களின் மதிப்புக்குறைவைக்கண்டு பிடித்த பிறகே அக்கணக் குகளை முடிவு செய்யவேண்டும்.

பெறுமானக் குறைவைப்பற்றின குறிப்புகள் கீழ்வரு மாறு:—ரூ 50.க்கு வாங்கப்பட்ட மரசாமான்கள் வருஷ முடி வில் ரூ 40 தான் பெறுமான முள்ளவையா யிருந்தனவென் றுவைத்துக் கொள்வோம்.

பெறுமானக் குறைவு கணக்கு பற்று ரூ 10—0—0

மரசாமான் கணக்கால் ரூ 10—0—0

மேற்படி ரூ 40 பெறுமான மரசாமான்களை "பாலன்ஸ் ஷீட்டில்" சொத்துப் பக்கத்திலெழுதும் பொழுது பாக்கித் தொகையை மட்டும் எழுதக்கூடாது. இவ்விதம் எழுதப்பட வேண்டும் :—

மரசாமான் கணக்கு ரூ. 50—0—0

பெறுமானக்குறைவு ரூ. 10—0—0 ரூ 40—0—0

ஆரம்பத்தில் சொத்துகளின் தொகையையும் போட்டு பெறுமானக் குறைவை அவைகளினின்றும் கழித்து பாக்கியைப் பக்கத்தில் போட்டுக்காண்பிக்கவேண்டும்.

மேற்படி பெறுமானக்குறைவு நஷ்டத்தைக் குறிப்பதால் கணக்குகளை முடிவு செய்யும் பொழுது இந்தக்கணக்கையும் லாபநஷ்டக் கணக்குக்கு மாற்றவேண்டும்.

தரகு அல்லது கமிஷன் கணக்கு (Commission Account)

ஒரு வியாபாரி தன் சரக்குகளை ஏராளமாக பல விடங்களிலும் விற்பனை செய்யும் பொருட்டு ஏஜெண்டுகளை அல்லது தரகு காரர்களை நியமிக்கலாம். அப்படியே தனக்கு சரக்குகளை குறைந்த விலைக்கு வாங்கிக்கொடுக்கும் பொருட்டும் ஏஜெண்டுகளை நியமிக்கலாம். இவ்விதம் நியமிக்கப்பட்ட ஏஜெண்டுகள் தங்களால் சேகரிக்கப்படும் ஆர்டர்களை நேரே வியாபாரிகளுக்கனுப்பி அவர்களிடமிருந்தே சரக்குகளை அனுப்பித்து விற்றுவிடுகிறார்களாகையால், சரக்குகளுக்கும் அவர்களுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. ஆனால் அவர்களால் ஆர்டர்கள் சேகரித்துக் கொடுக்கப்பட்டு விற்பனை விருத்தியாகும் ஓர் பிரயோஜனத்திற்காக அவர்களுக்குக் கொடுக்கப்படும் தொகையே அவர்கள் கணக்கில் சேரும். இப்படி கொடுக்கப்படும் தொகைக்கு "தரகு" அல்லது "கமிஷன்" (Commission) என்று பெயர்.

கோபாலன் என்பவன் ரூ. 1000 சரக்குகள் விற்றுக்கொடுத்ததற்காக, ரூ. 100-க்கு 15 வீதம் கமிஷன் கொடுத்தோ

மென்று வைத்துக்கொள்ளுவோம். இவ்விஷயத்தில் கோபாலனிடமிருந்து தாகு சம்பந்தமான உபயோகம் வருவதால் "கமிஷன்" கணக்கு பற்று செய்யப்படவேண்டும். கமிஷனுக ரொக்கத்தைக் கொடுப்பதால் ரொக்கக்கணக்கு வரவு செய்யப்படவேண்டும். கீழ்வரும் குறிப்பை கவனிக்கவும்:—

கமிஷன் கணக்கு பற்று—ரூ.	150—0—0	
ரொக்கக் கணக்கால்	ரூ.	150—0—0

(கோபாலனுக்கு கமிஷன் கொடுத்தது.)

நூற்றுக்கு ரூ. 15 வீதம் ரூ. 1000-க்கு எவ்வளவு கமிஷன் என்றுபார்த்ததில் ரூ. 150 ஆயிற்ருகையால் இத்தொகை மேலே போடப்பட்டது. எப்பொழுது ரொக்கமே உடனே கொடுக்கப்பட்டு விடுகிறதோ அப்பொழுது கோபாலன் கணக்கு சம்பந்தப்படாதாகையால், விபரம் தெரியும் பொருட்டு மேலே காட்டியபடி நாரேஷன் எழுதப்படவேண்டும்.

ஆனுல் மேற்கூறியவாறு உடனே ரொக்கம் கொடுக்கப்படாமலிருந்தால், உதவி வந்ததற்காக கமிஷன் கணக்கைப் பற்று செய்தும், யார் நமக்காகச் சரக்குகள் விற்ருனே அவன் கணக்கை வரவு செய்தும் வைக்கவேண்டும். பிற்பாடு ரொக்கம் கொடுக்கப்படும் பொழுது, ஏஜெண்டு கணக்கைப் பற்று செய்து ரொக்கக்கணக்கை வரவு செய்யவேண்டும்.

இப்படியே நாம் வேறு வியாபாரிகளுக்கு ஏஜெண்டாக சரக்குகள் விற்றுக்கொடுத்தோமானுல் நமக்கு வரவேண்டியது கமிஷனே தவிர சரக்குகளோடு யாதொரு சம்பந்தமுமில்லை. கமிஷன் பணம் உடனே வந்து விட்டால், ரொக்கக் கணக்கை பற்று செய்து கமிஷன் கணக்கை வரவு செய்ய

வேண்டும். யாரிடமிருந்து கமிஷன் வாங்கிக் கொள்ளப் பட்டதோ அவர் பெயரை நாரேஷனாக குறிப்பின் கீழ் எழுத வேண்டும். ஆனால் கமிஷன் உடனே வராவிட்டால், யார் கமிஷன் கொடுக்கவேண்டுமோ அவர் கணக்கைப் பற்றுக்கிப் பிறகு பணம் வந்தவுடன் அக்கணக்கை வரவு செய்ய வேண்டும். கீழேயுள்ள குறிப்புகள் வரவேண்டிய கமிஷனைப்பற்றி நன்றாக விளக்கிக்காட்டும்:—

அப்பொழுதே ரொக்கம் வந்துவிட்டால்:—

ரொக்கக்கணக்கு—பற்று ரூ. 150—0—0
கமிஷன் கணக்கால் ரூ. 150—0—0
(கோபாலனிடமிருந்து கமிஷன் பெற்றுக்கொண்டது).

ரொக்கம் பிறகு வருவதாயிருந்தால்:—

கோபாலன்—பற்று ரூ. 150—0—0
கமிஷன் கணக்கால் ரூ. 150—0—0

ரொக்கம் வந்தபிற்பாடு:—

ரொக்கக் கணக்கு—பற்று ரூ. 150—0—0
கோபாலனால் ரூ. 150—0—0

நமக்கு வரவேண்டிய கமிஷன் அதாவது லாபத்தைக் குறிக்கும் கமிஷன் அக்கணக்கின் வரவு பக்கத்திலும், நாம் கொடுக்கவேண்டிய தான நஷ்டத்தைக் குறிக்கும் கமிஷன் பற்றுப் பக்கத்திலும் எழுதப்படும். வியாபார முடிவில் கமிஷன் கணக்கில் அதிகப்பற்று அல்லது வரவு லாப நஷ்டக் கணக்குக்கு லாபமாயிருந்தால் வரவு பக்கத்திலும் நஷ்டமாயிருந்தால் பற்று பக்கத்திலும் மாற்றப்படவேண்டும். லாப

நஷ்டத்தைக் காட்டும் இந்த கமிஷன் கணக்கும் நாமினல் அக்கவுண்டென்ற வகுப்பைச் சேர்ந்தது. இதிலிருந்து நாமினல் அக்கவுண்டுகளின் அதிகப் பற்று லாப நஷ்டக்கணக்கு பற்று பக்கத்திலும், அதிக வரவு வரவு பக்கத்திலும் எழுதப்படுகின்றனவென்றும் அறிகிறோம்.

வியாபாரச் செலவு கணக்கு (Trade Charges account)

இது வரையில் சொல்லப்பட்ட லாப நஷ்டங்களைப் பற்றின கணக்குகளெல்லாம் முக்கியமானவைகள். தனிக் கணக்கு ஏற்படுத்த வேண்டிய அவசிய மில்லாதபடி, சிலசில்லரைச் செலவுகளுமுண்டு. உதாரணமாக, ஓர் வியாபாரத்தில் இரவில் வெளிச்சத்தின் பொருட்டு சாமானிய விளக்குகளும், திரிகளும், மெழுகு வர்த்திகளும் இன்னும் மற்ற சாமான்களும் வாங்கவேண்டிவரும். கார்டு, கவர், ஸ்டாம்பு முதலானவைகள் தபாலனுப்புவதன் பொருட்டு வாங்க நேரிடும். இவ்விஷயங்களில் சாமான்களை பதிலாக பெற்றுக்கொண்டாலும் நாளடைவிலே அவைகள் வியாபாரத்தில் அழிந்து விடுவதால் நஷ்டமே ஏற்படுகின்றது. மேலும் ஓர் வியாபாரத்தில் சில்லரை வரிகள் கொடுக்க நேரிடும். நமது வியாபாரத்தை விளம்பரப்படுத்தும் பொருட்டு நோட்டீசுகளும் பத்திரிகைகளில் விளம்பரங்களும் போடுவதாயிருந்தால் அதற்காகச்செலவழிக்க நேரிடும். வியாபாரத்திலுள்ள உத்தியோகஸ்தர்களுக்காவது, வேலைக்காரர்களுக்காவது சன்மானங்கள் கொடுக்க நேரிடும். வாசிப்பதற்காகப் பத்திரிகைகள் வரவழைப்பதன் பொருட்டு சந்தாக்கள் கட்ட நேரிடும். இந்தச் செலவுகளெல்லாம் குறைவாயிருக்குமானால் வியாபாரச் செலவு (Trade Charges) என்று ஓர் கணக்கேற்

படுத்தி அதில் சேர்க்கவேண்டும். எந்தக்காரணத்தால் செலவு ஏற்பட்ட தென்பதைக்குறிக்க நாரேஷன் எழுதப்படவேண்டும். வியாபாரச் செலவு கணக்கைப்பற்றின குறிப்பு கீழ் வருமாறு ஜர்னலில் காணப்படும் :—

வியாபாரச் செலவு கணக்கு (விளம்பரம்) பற்று ரூ. 50—0—0

ரொக்கக் கணக்கால் ரூ. 50—0—0

ஆனல் விபரங்கள் அதிகமாக ஏற்பட்டால் ஒவ்வோர் வித செலவுக்கும் தனித்தனியாக கணக்குகளேற்படுத்தி முடிவில் அக்கணக்குகளை லாபநஷ்டக்கணக்குக்கு மாற்ற வேண்டும். ஸ்டாம்பு வகையறுக்கள் முடிவில் கை யிருப்பு இருக்குமாகையால், தபால் செலவு கணக்கு (Postage) என்று ஓர் கணக்கு ஏற்படுத்தி ஸ்டாம்புவகையறுக்கள் வாங்கப்படும் பொழுது அக்கணக்கைப்பற்று செய்து விடவேண்டும். பிறகு வருஷ முடிவில் எவ்வளவு பாக்கி ஸ்டாம்புகள் இருக்கின்றனவோ அத்தொகையை வரவு பக்கத்திலெழுதினல் அக்கணக்கிலுள்ள வித்தியாசத்தொகை உண்மையாக எவ்வளவு செலவு ஏற்பட்டதோ அதைக்குறிக்கும். ஆகவே தபால் செலவுக்காகத்தனியாக கணக்கேற்படுத்துவது நலம்.

வியாபாரத்தில் வேலை செய்யும் உத்தியோகஸ்தர்கள் முதலியவர்களுக்கு இனம்கள் கொடுத்தோமானல், அந்தச் செலவு நமக்கோர் நஷ்டமாகும். அதற்காக சன்மானக் கணக்கு, இனம் கணக்கு அதாவது போனஸ் கணக்கு (Bonus account) என்று ஏற்படுத்திப் பற்று செய்து ரொக்கம் கொடுக்கப்பட்டால் ரொக்கக் கணக்கை வரவுசெய்ய வேண்டும்.

எதிர்பாரா நஷ்டக்கணக்கு (Accidental Loss)

வியாபாரத்தில் உபயோகப் பட்டுள்ளஏதாவது சாமான்கள், மேஜைகளோ, நாற்காலிகளோ, யந்திரங்களோ அல்லது கட்டடத்தில் ஓர் பாகமோ ஏதாவதோர்காரணத்தால் உடைந்தாவது அல்லது இடிந்தாவது போய் விட்டால் மேலே சொல்லப்பட்டகணக்கு நஷ்டத்தொகைக்கு பற்று செய்யப்பட்டு எந்தசாமான்கள் நாசமாயினவோ அந்த சாமான்கள் குறைவதால் அவைகள் கணக்கு வரவாகவேண்டும். ரொக்கம் திடீரென்று காணுமல்போய் அகப்படாமலிருந்தால் மேற்படி கணக்கு பற்ருகி காணுமல் போனதால் குறைந்த ரொக்கத்திற்கு ரொக்கக்கணக்கு வரவாகவேண்டும்.

ஒருவேளை வேறொருவர் தப்பிதத்தால் மேற்கூறிய நஷ்டமேற்படுமானுல், அந்த நஷ்டத்தை அவர் ஈடு செய்ய கடமைப்பட்டிருக்கிறபடியால் அவர் கணக்கு பற்று செய்யப்பட்டு முன்சொன்னது போலவே கெட்டுப்போன சாமான்களின் கணக்கு வரவாக வேண்டும். பிற்பாடு அவரிடமிருந்து நஷ்ட ஈடாக ரொக்கம் வாங்கிக் கொள்ளும் பொழுது, ரொக்கக் கணக்கைப் பற்ருக்கி ஏற்கனவே பற்று செய்யப்பட்டிருக்கும் அவர் கணக்கை இப்பொழுது தீர்க்கும் பொருட்டு அக்கணக்கில் வரவெழுத வேண்டும்.

ஆனுல் நஷ்ட மேற்பட்டவுடன் ஏதோ அஜாக்கிரதையாலென்றெண்ணி "எதிர்பாரா நஷ்டக்கணக்கை" ப்பற்றுசெய்துஎந்தக் கணக்கில் நஷ்ட மேற்பட்டதோ அதை வரவு செய்திருந்து, பிறகு மேற்படி நஷ்டம் உத்தியோகஸ்தர் ஒருவரால் ஏற்பட்ட தென்று கண்டுகொண்டால் அவர் கணக்கைப் பற்ருக்கி எதிர் பாரா நஷ்டக் கணக்கைத் தீர்க்கும் பொருட்டு

அக்கணக்கில் வரவெழுத வேண்டும். இக்குறிப்பு கீழே காட்டப்பட்டிருக்கிறது.

ஜன 5. எதிர்பாரா நஷ்டக் கணக்கு பற்று ரூ. 25—0—0

ரொக்கக்கணக்கால் ரூ. 25—0—0

ஜன 25. முகுந்தராவ் பற்று ரூ. 25—0—0

எதிர்பாரா நஷ்டக் கணக்கால் ரூ. 25—0—0

முடிவில் இந்த நஷ்டக் கணக்கின் தொகையை லாப நஷ்டக் கணக்கின் பற்றுப் பக்கத்துக்கு மாற்றவேண்டும்.

கைவிட்ட கடன்கள் கணக்கு (Bad Debts Account)

ஒருவன் தன் கடன்களைக்கொடுக்கச்சக்தியின்றி அதாவது இன்ஸால்வென்டாக (Insolvent)ப் போய்விட்டானுல், தன் நஷ்டங்களையும் சொத்துக்களையும் கடன் கொடுத்தவர்களிடம் சொல்லி அவர்கள் ஒப்புக்கொண்டால் கடன்களில் தன்னுல் இயன்றளவு கொடுத்துத்தீர்த்து விடுவான். அப்படி கடன் கொடுத்தவர்கள் ஒப்புக்கொள்ளாவிட்டால், நியாயஸ்தலத்தின் மூலமாய் அனுமதி பெற்று தனக்குக் கிடைக்கும் தொகையைக் கொடுத்து முழுக்கடன்களையும் தீர்த்து விடுவான். நியாய ஸ்தலத்தின் மூலமாய் ஓர் கடனுளி இன்ஸால்வென்டாக ஏற்படுத்தப்பட்டால் அவனுடைய நஷ்டத்தை கடன் கொடுத்தவர்கள் ஒப்புக் கொள்ளாமலிருக்க முடியாது. இப்படி கடனுளியால் கொடுக்கச் சக்தியான தொகை ரூபாய்க்கு இவ்வளவு அணுவாக ஏற்படுத்தப்படும். இத்தகைய விதத்துக்கு "காம்பொஸிஷன்"

(Composition) என்று சொல்லப்படுகிறது. மேற் கூறியபடி நமக்கு வர வேண்டிய கடனில் கொஞ்சம் வீதமாக வந்து கடனைத் தீர்க்க நேரிட்டால், வராமல் தங்கிப்போய் விடும் தொகை நமக்கு ஓர் நஷ்டமல்லவா? இந்த நஷ்டத்தொகையை நாம் வராதென்று கைவிட்டு விட்டோம். ஆகையால் "கை விட்ட கடன்கள் கணக்கு" (Bad Debts account) என்பது நஷ்டத்தைக் காண்பிக்கும் பொருட்டு பற்று செய்யப்பட்டு யார் கணக்கை முற்றிலும் தீர்த்து விடுகிறோமோ அக் கணக்கை வரவு செய்யவேண்டும்.

உதாரணமாக முகுந்தராவ் என்பவர் ரூ. 200 கொடுக்க வேண்டியதற்கு, வீதமாக ரூ. 1-க்கு 12 அணு கொடுத்துக் கணக்கைத் தீர்த்தாரென்று வைத்துக்கொள்வோம். இதற்குக் குறிப்புகள் கீழ் வருமாறு:—

கடன் வாங்கிக் கொண்ட முதன் முதலில் :—

முகுந்தராவ்	பற்று ரூ. 200—0—0	
ரொக்கக் கணக்கால்		ரூ. 200—0—0

இப்பொழுது அவரால் கொடுக்கப்படும் ரொக்கம் ரூ. 1-க்கு 12 அணு வீதம் ரூ. 150 ஆகிறது. ஆகவே ரூ. 50 நஷ்ட மேற்பட்டிருக்கிறது. இப்பொழுது ரொக்கம் வருவதால் ரொக்கக்கணக்கும் நஷ்ட மேற்படுவதால் மேலே சொல்லப்பட்டதான கைவிட்ட கடன்கள் கணக்கும் பற்று செய்யப்பட்டு முகுந்தராவ் கணக்கு தீரவேண்டுமாதலால் அவர் கணக்கு இம்மாதிரி வரவு செய்யப்படவேண்டும் :—

கீழ்கண்ட கணக்குகள் :—

ரொக்கக்கணக்கு பற்று ரூ. 150—0—0

கைவிட்ட கடன்கள்

கணக்கு பற்று ரூ. 50—0—0

முகுந்தராவ் அவர்களால் ரூ. 200—0—0

மேற்கூறிய கணக்கு நாமினல் அகவுண்டைச் சேருவ தோடு கூட எக்காலத்தும் நஷ்டத்தையே குறிக்குமாகை யால் லாபநஷ்டக்கணக்கின் பற்றுக் காலத்துக்கு மாற்றப் படவேண்டும்.

ஒரு கடன்காரன் வீதமாகக் கொடுக்கக்கூடிய தொகை யைக்கூட ஒரே தடவையில் கொடுக்க முடியாமல் போகும். அப்பொழுது அவன் நான்கு அல்லது ஐந்து தவணைகளில் கொடுக்கும்படி கடன் கொடுத்தவரிடமிருந்து சம்மதம் பெற் றுக் கொள்ளலாம். ஒவ்வொரு தவணையும் கொடுக்கப்படும் பொழுது, கடன்காரன் கணக்கு வரவுசெய்யப்படவேண்டும். கடைசி தவணை முடிந்தவுடன், இனி பாக்கிப் பணத்தை எதிர்பார்க்க முடியாதாகையால் கைவிட்ட கடன் கணக்கா லென்றெழுதி பாக்கிப் பணத்தையும் வரவெழுதி கணக்கைத் தீர்த்து மேற்படி நஷ்டக் கணக்கில் பற்றெழுத வேண்டும். ஆதலால், தவணைகளாக கொடுக்கப்படும் சந்தர்ப்பத்தில், கடைசி தவணை முடிந்தபிறகே வாராததொகையை நஷ்டக் கணக்கில் எழுதவேண்டும்.

நாம் சில கடன்கள் வாராதென்று நினைத்து நஷ்டமாக எழுதின பிற்பாடு அவைகள் வந்துவிடலாம். இப்பொழுது வந்துவிட்ட தொகை முன்னே நஷ்டமாக எழுதப்பட்டதை ஈடுசெய்து அக்கணக்கைத் தீர்க்கவந்த ஓர் லாபமாகையால், மேலே சொல்லப்பட்ட கைவிட்ட கடன்கள் கணக்கில் வரவு செய்து அக்கணக்கைத் தீர்க்கினும் தீர்க்கலாம். அல்லது

லாபத்தைக் காண்பிக்கக்கூடிய "வராத கடன்கள் வந்த கணக்கு" (Bad Debts Recovered) என்று ஓர் கணக்கெழுதி அதை வரவு செய்யவேண்டும். இந்த லாபத் தொகையை லாப நஷ்டக்கணக்கின் மூலமாய் கடைசி லாபத்தைக் கண்டுபிடித்த பிறகு அதோடு சேர்த்து மொத்தத் தொகையை முதல் கணக்குக்கு எழுதவேண்டும்.

ஒழுங்கு படுத்தச் செலவுகள் கணக்கு (Repairs account)

வியாபாரத்திலுள்ள சாமான்கள் ஏதாவது கெடுதலாகவாவது, உபயோகமில்லாமலாவது போய்விட்டால் அவைகளை முன்னிலைமைக்குக் கொண்டுவர சிலசெலவுகள் ஏற்படும். முன்னிருந்த நிலைக்குக் கொண்டு வரவே இச்செலவுகள் ஏற்படுகின்றபொழுது, அந்நிலையில் சாமான்களின் விலையை விட இப்பொழுது விலை அதிக மாகக் காரணமில்லை. முதலில் ஓர் விலை கொடுத்து வாங்கப்பட்ட சாமானுக்கு அதே விலையை நிலை நிறுத்தமறுபடியும் செலவுகள்செய்யப்படுகின்றனவாகையால் இச்செலவுகள் நஷ்டத்தைக் குறிக்கின்றன. ஆகவே ரிப்பேர் கணக்கு என்ற ஓர் கணக்கெழுதப்பட்டு செலவுத் தொகைக்குப் பற்ருக வேண்டும். ரிப்பேர் செய்தவனுக்குப் பணம் கொடுத்ததால் ரொக்கக்கணக்கு வரவாகும்.

ஆனல் மேலே சொல்லப்பட்ட சாமான்கள் நல்ல ஸ்திதியிலிருந்து மேலும் சாமான்கள் வாங்கிச் சேர்ப்பதற்காகச் செலவு ஏற்பட்டால், இந்தச் செலவு நஷ்டமல்ல. ஏனெனில் செலவுக்கு பதிலாக வேறுசாமான்கள்பெற்றுக்கொள்ளுகிறோம். மொத்த சாமான்களின் விலை அதிகமாகிறது. அப்பொழுது சாமான்கள் கணக்கே பற்று செய்யப்பட்டு ரொக்கங் கொடுத்தால் ரொக்கக் கணக்கும் கடன் வியாபார

மானால் கடன் கொடுத்தவன் கணக்கும் வரவு செய்யப்பட வேண்டும்.

இதுபோலவே நாம் பிறருக்கு ரிப்பேர் செய்து கொடுத்தால் அதற்காக நாம் பெற்றுக்கொள்ளும் தொகை லாபமாகையால் ரிப்பேர் கணக்கு வரவாகி ரொக்கக் கணக்கு பற்றாக வேண்டும்.

வியாபார முடிவில் மேற்படி ரிப்பேர்கணக்கின் தொகை லாப நஷ்டக் கணக்குக்கு மாற்றபட வேண்டும்.

பாதுகார்ப்புச் செலவு கணக்கு அல்லது இன்ஷ்யூரன்ஸ் அக்கவுண்டு. (Insurance Account)

ஒரு வியாபாரி தன் சாமான்களை நெருப்பு அல்லது வேறு ஏதாவது அபாயத்தினின்றும் கப்பல் மூலமாய் வெளி நாடுகளுக்குச் சாக்குகளை அனுப்பும் பொழுது கடலில் மூழ்கிபோவது அல்லது வேறு எந்த ஆபத்தி னின்றும் காப்பாற்றிக்கொள்ள விரும்புவானாகையால், அவன் தன் சாமான்களை ஆபத்துகளினின்றும் தப்புவதற்கு உத்திர வாதம் செய்கின்றதாயும் ஏதாவது தற்செயலாக ஆபத்து நேரிடினும் அதனால் நஷ்டமாகின்ற சாமான்களின் தொகைக்கு பாத்தியப்படுகிறதாயுமான ஓர் உத்திரவாதக் கம்பெனியில் அதாவது இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி (Insurance Company) யில் தனது சாமான்களின் பாதுகாப்புக்காக ஏற்பாடு செய்து கொள்ளலாம். இவ்விதம் ஏற்பாடு நடந்தால், இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியார் தாங்கள் செய்யும் பாதுகாக்கும் உதவிக்காக எவ்வளவு வருஷம் பாதுகார்க்கிறார்களோஅது வரையில் ஒவ்வொரு வருஷத்துக்கும் ப்ரிமியம் (Premium) என்று

சொல்லப்படுகிற சம்பளம் இன்னதென்று ஏற்படுத்தி வியா பாரியினிடமிருந்துப் பெற்றுக் கொள்ளுகிறார்களல்லவா? இதற்காகக்கொடுக்கப்படுகின்ற ப்ரிமியம் வியாபாரிக்கு ஓர் செலவேயாகும். ஆகவே பாதுகார்ப்புச் செலவுகணக்கு அதாவதுஇன்ஷ்யூரன்ஸ் கணக்கு என்றநாமினல்அக்கவுண்டொன்று ஏற்படுத்தி ப்ரிமியம் கொடுக்கப் பட்டதொகைக்குப் பற்று செய்யவேண்டும். ரொக்கம் கொடுக்கப்பட்டால் ரொக்கக் கணக்கும், இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியாரிடம் பற்றுவரவு வைத்துக்கொள்வதால் ரொக்கம் கொடுக்கப்படாமலிருந்தால் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி கணக்கும் வரவு செய்யப்பட வேண்டும்.

ஆனல் சரக்குகளின் மீது தனித்தனியாக இன்ஷ்யூர் செய்திருந்தோமானல், வருஷா வருஷம் கொடுக்கவேண்டிய ப்ரிமியத்தொகை சரக்குகளின் அடக்க விலையை அதிகரிக்கிறபடியால் அந்தந்த சாமான்களின் வாங்கின விலையோடு இத்தொகைகளையும் சேர்க்கவேண்டும். ஆதலால் மேற்படி ப்ரிமியத்தொகை அந்தந்த சாமான்கள் கணக்கில் பற்று செய்யப்படவேண்டும். உதாரணமாக, ஓர் வியாபாரி தன் வியாபாரச் சரக்குகளான மரசாமான்களை நேஷனல் இன்ஷ்யூர் கம்பெனியில் இன்ஷ்யூர்செய்திருப்பதால் அச்சரக்குகளுக்கு வருஷா வருஷம் ரூ 50 ப்ரிமியம் கொடுக்கிருனென்று வைத்துக்கொள்ளுவோம். இவைகளைக் குறிப்புகளாக இவ்விதம் எழுதப்படும்:—

மரசாமான் கணக்கு (Furniture) பற்று ரூ. 50—0—0

நேஷனல் இன்ஷ்யூர் கம்பெனியாரால் ரூ. 50—0—0

(ப்ரிமியத் தொகைக்காக)

உடனே ரொக்கம் கொடுக்கப் படாததால் மேற்கூறியவாறு இன்ஷ்யூர் கம்பெனி வரவு செய்யப்பட்டது. ரொக்கம் உடனே கொடுக்கப் பட்டாலும் அல்லது கொடுக்கப்படாவிட்டாலும் விபரம் தெரியும் பொருட்டு மேற்காட்டியபடி நேரேஷனும் எழுதப்பட வேண்டும். இப்படி ப்ரிமியத்துக்காக கம்பெனியை வரவு செய்த பிறகு ரொக்கம் கொடுத்துவிட்டால், அப்பொழுது கம்பெனியின் கணக்கில் பற்றெழுதி ரொக்கக் கணக்கில் வரவு வைத்தல் வேண்டும். இக்குறிப்பும் கீழே காணப்படுகிறது:—

நேஷனல் இன்ஷ் யூரன்ஸ் கம்பெனி பற்று ரூ. 50
ரொக்கக் கணக்கால் ரூ. 50
(ப்ரிமியத் தொகை கொடுபட்டது)

ப்ரிமியத்தொகையைக் குறிக்க இன்ஷ்யூர் கணக்குஎன்ற நாமினல் அக்கவுண்டு ஏற்படுத்தப் பட்டால் முடிவில் லாபநஷ்டக்கணக்கின் பற்றுப்பக்கத்துக்கு மாற்றப்படவேண்டும். இது எப்பொழுதும் வியாபாரிக்கு நஷ்டத்தையே குறிக்கும். ஆனல் இதே தொகை இன்ஷ்யூர் கம்பெனியாருக்கு லாபத்தைக் குறிப்பதால் அவர்கள் புத்தகங்களிலுள்ள இன்ஷ்யூர் கணக்கு லாபநஷ்டக்கணக்கின் வரவு பக்கத்துக்கு மாற்றப்படும்.

மேற் சொன்ன விதமாக வியாபாரத்திலுள்ள சாமான்கள் இன்ஷ்யூர் செய்யப்பட்ட பின்பு ஏதோ தற்செயலாக சில சாமான்கள் தீப்பற்றி நாசமாகி விட்டன வென்று வைத்துக்கொள்வோம். இன்ஷ்யூரன்ஸ் பிரகாரம் நாசமான சாமான்களின் தொகையை இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி கொடுக்கக் கடமைப் பட்டிருக்கிற தாகையால், இன்ஷ்யூரன்ஸ் கம்

பெனி கணக்குபற்று செய்யப்பட்டு, நம்முடைய சரக்குகள் போய்விட்டன வாகையால் அந்தச் சரக்குக்கணக்கு வரவாக வேண்டும். பிறகு ரொக்கம் வந்தவுடன் ரொக்கக் கணக்கு பற்றெழுதப்பட்டு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி கணக்கு வரவாகவேண்டும்.

இவ்விதம் சரக்குக் கணக்கோடு சேராத செலவுகளெல்லாம் லாபநஷ்டக்கணக்குக்கு மாற்றப் பட்டு சரக்குக் கணக்கிலிருந்து வரும் மொத்தலாபத்தை (Gross profit) குறைக்கின்றன. சரக்குகளின் பொருட்டு ஏற்படும் செலவுகள் அக்கணக்கிலேயே சேர்ந்து கழிக்கப்பட்டு மொத்தலாபம் லாபநஷ்டக்கணக்குக்கு கொண்டு போகப்படுகிறது.

ஆகவே, செலவுகள் சரக்குகளைச் சேருகின்றனவா அல்லது தன் வியாபாரம் நடத்தும் பொருட்டு வேண்டிய செலவுகளைச் சேர்ந்தனவா என்று கண்டுகொண்டு அதற்குத் தக்கவாறு அந்தந்த கணக்குகளில் எழுதுவது அவசியம்.

7-ம் அதிகாரம்.

பாங்கு அல்லது ரொக்கக்கடைகள்—சேக்குகள் —அவைகளை கணக்குப்புத்தகங்களில் பதியும் விதம்.

அன்றன்று வியாபாரத்தில் வந்துசேரும் ரொக்கம்முழுவதும் வியாபாரியினிடமே யிருந்தால் ஜாக்கிரதைக்குறைவாகையாலும் இன்னும் சில சௌகரியத்தை உத்தேசித்தும் வியாபாரத்தில் கிடைக்கும் ரொக்கம் ஓர் பாங்கில் அல்லது ரொக்கக்கடையில் பத்திரப்படுத்தப் படுகிறது. இப்படி ரொக்கத்தை பாங்கில் கட்டுவதில் கடன் பற்று வரவு கணக்கு அதாவது கர்ரேன்ட் (Current account) அக்கவுண்டென்றும் டிபாஸிட் (Deposit account) என்றும் இரண்டு விதமுண்டு. கர்ரென்ட் அக்கவுண்டென்பது பாங்கில் தனது வரவுக்குஅடிக்கடிரொக்கத்தைக் கட்டுவதற்கும் அடிக்கடி தன் செலவுகளுக்கு வாங்கிக்கொள்வதின் பொருட்டும் ஏற்படுத்தப்படுகின்ற அக்கவுண்டு. ஷை அக்கவுண்டிலிருந்து வாடிக்கைக்காரர் (Customer) செக்கு (Cheque) மூலமாய் பணம் எந்த சமயமும் பெற்றுக்கொள்ள சுதந்திரம் உண்டாகையால் இப்பணத்தை ரொக்கவியாபாரி அதாவது பாங்கர் (Banker) அதிகமாக வேறு வழியில் உபயோகப்படுத்த முடியாது. ஆகவேதான் இந்த அக்கவுண்டில் பாங்கர்கள் வட்டி கொடுப்பதில்லை. பணத்தின் மேல் அப்படி கொடுத்தாலும் வட்டி மிகவும்கொஞ்சமாகவிருக்கும். டிபாஸிட்அக்கவுண்டென்பது ஆறு மாதம், ஒருவருஷம், இரண்டு வருஷம் என்றுஒருகுறிப்பிட்ட காலத்துக்குப் பின் பணத்தைத்திருப்பிப் பெற்றுக்கொள்ளும் நிபந்தனையோடு ரொக்கம் கட்டப்பட்டால் அதற்காக

எழுதப்படுகின்ற ஓர் அக்கவுண்டு. இந்த டிபாஸிட் அக்கவுண்டில் பாங்கரிடமே பணம் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குத் தங்கிவிடுகிற படியாலும் அக்காலத்துக்கு முன் வாடிக்கைக்காரர் பணத்தைத் திருப்பிக்கேட்க முடியாதாகையாலும், பாங்கர் இப்பணத்தை வேறு வழியில் உபயோகித்து தனது தொழிலை மேன்மையாக்கலாம். ஆதலால் தனக்கேற்படும் நன்மையை உத்தேசித்து இந்த அக்கவுண்டில் பாங்கர் வட்டி கொடுக்கிறான். மேற்சொன்ன இரண்டு அக்கவுண்டுகளையுந் தவிர, பாங்கர் ஒரு பொருளீட்டின்மேல் வாடிக்கைக்காரருக்கு வட்டிக்காகக் கடன் கொடுத்தால் இதன் பொருட்டு பாங்கர் எழுதும் கணக்கு லோன் அக்கவுண்டு (Loan account) எனப்படும்.

ஒரு பாங்கில் தனது கணக்கை ஏற்படுத்திக் கொள்ள விரும்பினால், பாங்கருக்குத் தனது இஷ்டத்தை கடிதம் மூலமாயாவது அல்லது நேரிலாவது தெரிவித்த பிற்பாடு மாதிரிக் கையெழுத்துக்காக ஏற்படுத்தப் பட்டுள்ள ஒரு பாரத்தில் தனது முழுவிலாசத்தையும், பணத்தை வாங்குவதன் பொருட்டு உத்திர வடங்கிய செக்குகளில் எப்படி கையெழுத்து போட தனக்கு எண்ணமோ அந்த தனது கையெழுத்தையும் எழுதவேண்டும். பாங்கர் செக்குகளைப் பெற்றவுடன் எந்த செக்கிலாவது சந்தேகம் தோன்றுமானால் மேற்படி மாதிரிக் கையெழுத்து பாரத்தை எடுத்து அதிலுள்ள கையெழுத்தையும் செக்கிலுள்ள கையெழுத்தையும் ஒப்பிட்டுப் பார்ப்பான். இவ்விதம் கையெழுத்துசெய்த பின் பாங்கில் பணத்தைக் கட்டவேண்டும். அப்பொழுது பேயிங்—இன்—ஸ்லிப் புஸ்தகம் (Paying-in-slip book) என்றும் செக்கு புஸ்தகம் (Cheque book) என்றும் பாஸ்

புத்தகம் (Pass book) என்றும் மூன்று புத்தகங்கள் கஸ்ட மருக்குக் (Customer) கொடுக்கப்படுகின்றன.

பேயிங்-இன்-ஸ்லிப் (Paying-in-slip) :—நாம் பணத்தைக்கட்டும் பொழுது ரொக்கத்தின் விபரங்களைக் குறிப்பதற்காகவுள்ள அநேக அச்சுபாரங்களையுடைய புஸ்தகத்திற்கு பேயிங்-இன்-ஸ்லிப் புத்தகம் என்று பெயர். இந்த பாரத்தில் இரண்டு பக்கங்களுண்டு. ரொக்க விபரங்களை எழுதி வலது பக்கத்தைக் கிழித்து பாங்கில் ரொக்கத்தோடு கொடுக்கப் படவேண்டும். இடது பக்கம் புத்தகத்திலேயே நம்முடைய குறிப்புக்காக வைக்கப்படவேண்டும். மேற்படி பாரம்மாதிரி கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது. மேற்சொன்னபடி பணம் செலுத்தினதற்காக பாங்கரால் வேறு ரசீது கொடுக்கப்படாமல் நம்முடைய ரிகார்டுக்காக (Record) வைக்கப்பட்டிருக்கும் பேயிங்-இன்-ஸ்லிப் இடதுபாதியிலேயே (Counterfoil) பாங்கர் அல்லது பாங்கில் பணத்தைப் பெற்றுக் கொள்ளும் குமாஸ்தா (Cashier) கையெழுத்துப் போடுகிறுன். இதுவே தான் பாங்கர் ஸ்லிப்பில் குறிக்கப்பட்ட ரொக்கத்தைப் பெற்றுக் கொண்டதற்கு அடையாளம். சில வேளைகளில் தன் கணக்கு வரவுக்காக வேறொருவர் மூலமாய் கட்டினுல், அப்பொழுது ரசீதுகளும் கொடுக்கப்படும். இம்மாதிரி பணம் கட்டின பிறகே, தொகை செலுத்தினவர் பாங்குக்கு வாடிக்கைக்காரர் (Customer) ஆகிறுர்.

பேயிங்-இன்-ஸ்லிப் பாரம்

கள்ளிக்கோட்டை, மேமீ 1௳ 1915.

மதருவ்ஸ் பாங்கு,

கள்ளிக்கோட்டை.

அ. ராமசாமி செட்டியார்

என்பவரின் கணக்கில் வரவுக்காக வாங்கிக்கொள்ளப் பட்டது.

நாணயம்.	ரூ.	அ.	பை.
நோட்டுகள்	300	0	0
சவரன் (5)	75	0	0
ரூபாய்கள்	60	0	0
அரை, கால், அரைக்கால் ரூபாய்கள்	15	0	0
செப்பு நாணயங்கள்	1	0	0
வேறு பாங்குகளின் செக்குகள்	150	0	0
பாங்கின் சொந்தச் செக்குகள்	300	0	0
ஆகமொத்தம்	901	0	0

ஷை தொகை பெற்றுக் கொள்ளப்பட்டது.

ரொக்கக் குமாஸ்தாவின் (Cashier) கையெழுத்து.

கள்ளிக்கோட்டை, மேமீ 1௳ 1915.

மதருவ்ஸ் பாங்கு,

கள்ளிக்கோட்டை.

அ. ராமசாமி செட்டியார்

என்பவரின் கணக்கில் வரவுக்காகக் கொடுக்கப் பட்டது.

நாணயம்.	ரூ.	அ.	பை.
நோட்டுகள்	300	0	0
சவரன்கள் (5)	75	0	0
ரூபாய்கள்	60	0	0
அரை, கால், அரைக்கால் ரூபாய்கள்	15	0	0
செப்பு நாணயங்கள்	1	0	0
வேறு பாங்குகளின் செக்குகள்	150	0	0
பாங்கின் சொந்தச் செக்குகள்	300	0	0
ஆகமொத்தம்	901	0	0

அ. ரங்கசாமி செட்டியார்.

செலுத்துபவர் கையெழுத்து.

டிபாஸிட் அக்கவுண்டில் பணம் செலுத்தப்படும் பொழுது, ரொக்க விபரத்தை ஒரு பாரத்தில் எழுதி பாங்கில் கொடுக்கவேண்டும். பாங்கர் ஷெ பணத்தை டிபாஸிட் அக்கவுண்டுக்காகப் பெற்றுக் கொண்டவுடன், கீழ்வருமாறு டிபாஸிட் ரசிது (Deposit receipt) ஒன்று கொடுப்பான்.

தொகைதிருப்பிக் கொடுக்கவேண்டிய
தேதி, மேமீ 15௳ 1915.

மதருஸ் பாங்கு, கள்ளிக்கோட்டை.

நெ. 6016. கள்ளிக் கோட்டை,
மேமீ 15௳ 1914,

ஒருவருஷ கெடுவுக்குப்பின் நூற்றுக்கு நான்கு வீதம் (4%) வட்டிசேர்த்துக் கொடுக்கும்படி. மகா-ா-ஸ்ரீ கே: சுப்பராமய்யரிடமிருந்து டிபாஸிட்டாக ரூபாய் ஐயாயிரம் மட்டும் வாங்கிக்கொள்ளப் பட்டது.

கணக்கெழுதப்பட்டது. மதருஸ் பாங்குக்காக,
(ஒப்பம்) (ஒப்பம்)
கணக்கன். ஏஜண்டு

இந்த ரசிதை பத்திரமாக வைத்துக்கொண்டு, கெடு வானபிறகு தலைப்பில் குறிப்பிட்ட தேதியில்மேற்படி ரசீதின் பின் பக்கத்தில் கீழ்வரும் விதம் பணத்தைத் திருப்பிப் பெற்றுக் கொண்டதாகக் குறிப்பெழுதி (Endorse) பாங்குக்கு அனுப்பினால் இந்த ரசிதைப்பெற்றுக்கொண்டு டிபாஸிட் செய்யப்பட்டிருந்த முதலையும் அதன்மேலுள்ள வட்டியும்பாங்கில் திருப்பி கொடுக்கப்படும் :—

பின்புறம் குறிப் பெழுதுதல் (Endorsement)

கீழுள்ளதொகை பெற்றுக் கொள்ளப்பட்டது:—

முதல்	ரூ. 5000
வட்டி	ரூ. 200
ஆகமொத்தம்	ரூ. 5200

ஒரு அணா
கே. சுப்பராமய்யர்
ஸ்டாம்பு
15-5.15.

செக்குகள்.

சேக் (Cheque) என்பது ஒரு பாங்கரிடம் கர்ரெண்ட் அக்கவுண்டில் தனது வரவுக்காக பணம் செலுத்தப்பட்டிருந்தால், அந்த அக்கவுண்டிலிருந்து தனக்காவது, வேறொருவருக்காவது அவர் உத்திரவு பெற்றவருக்காவது அல்லது செக் கொண்டு வருபவருக்காவது (to self, to another party or to his order or to bearer) கண்டவுடன் (on demand) அதில் காணப்பட்ட தொகையைக் கொடுக்கும்படி பாங்கருக்கு வாடிக்கைக் காரரால் எழுதப்படும் ஓர் உத்திரவு.

செக்கு பாரம் கீழ்வருமாறு காணப்படும்:—

கவுண்டர் பாயில்

நெ. C. 32041.

மேமீ 8௳ 1915.

என். கிருஷ்ணய்யருக்குக் கொடுக்கவேண்டிய பாக்கிக்காக.

ரூ. 150/—

நெ. C. 32041.

பம்பாய், மேமீ 8௳ 1915.

அல்லையன்ஸ் பாங்கு.

பம்பாய்.

தரிசனையில் என். கிருஷ்ணய்யருக்காவது அல்லது அவர் உத்திரவு பெற்றவருக்காவது ரூபாய் நூற்றைம்பது மட்டும் கொடுக்கவும்.

ரூ. 150/—

சி. ராமசாமி அய்யர்.

மேற்படி செக்கு பாங்கிலிருந்து பணம் பெற்றுக்கொள்ளத்தான் உபயோகிக்கப்படவேண்டும். ஆதலால் ஒவ்வொரு பாங்கும் தங்கள் பெயரை மேற்படி பாரத்தின் தலைப்பில் அச்சிடுகிறார்கள். பாங்கே இத்தகைய செக்கு பாரங்களை அச்சிட்டு, 50 அல்லது 100 பாரங்களை ஒன்றாகச் சேர்த்து புஸ்தகமாகச் செய்து, ஒருவர் தங்களிடம் பற்று வரவு கணக்கேற்படுத்தி முதல்முதல் பணத்தைச் செலுத்தினவுடன், பின்னால் அவர் பணத்தை வாங்கிக்கொள்ள உத்திரவுகள் பிறப்பிக்க நேரிடுமாதலால், ஒரு செக்கு புஸ்தகத்தையும் கொடுக்கிறார்கள். இதற்கு முன்இருந்த சட்டப்படி ஒவ்வொரு செக்கிலும் ஒருஅணா ஸ்டாம்பு பதிப்பிக்கப்பட்டிருக்கவேண்டும். செக்கு புஸ்தகத்திலேயே ஷை ஸ்டாம்புகள் பாங்கில்

பதிப்பிக்கப் படுகின்றன. ஆனால் உண்மையாக இந்த ஸ்டாம்புச் செலவு வாடிக்கைக்காரரைச் சேரவேண்டுமாதலால், பாங்குகள் செக்கு புஸ்தகத்தைக் கொடுத்தவுடன், அப்புத்தகத்தில் எவ்வளவு செக்குகள் உண்டோ அச்செக்குகளின் ஸ்டாம்பு தொகையை வாடிக்கைக்காரர் கணக்கில் பற்றெழுதி விடுகிறார்கள். கஸ்டமருக்கு மேற்படி செலவு ஒரு வியாபாரச் செலவானதால், இச்செலவு லாபநஷ்டக் கணக்குக்கு கொண்டு போகப்படும். இச்செலவுக்கு பாங்கு சம்பந்தமான செலவுகள் (Bank Charges) என எழுதப்படும். ஷெ செக்குகளைப் பார்த்தவுடன் அதாவது தரிசனையில் பாங்கர்கள் பணம் கொடுக்கவேண்டும். பாங்கில்கணக்கு வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு தங்களுக்கே பணம் வேண்டுமென்றால், மேற்படி செக்கில் "எங்களுக்கு" என்ற வார்த்தையை எழுதி பாங்கில் கொடுத்துப் பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம். பாங்கில் பற்று வரவுவைத்துக் கொண்டிருக்கும் ஒரு வியாபாரி மற்றொருவருக்கு பணம் கொடுக்கவேண்டி யிருந்தால் அவர் பேரில் செக்கை எழுதிக் கொடுத்துவிட்டால் பாங்கில் செக்கைக் கொடுத்து அவர் பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம். இவ்விதம் தன் கணக்கின் பொருட்டு பிறருக்குப் பணம் செலுத்துவதற்கும் பிறரிடமிருந்து பணம் பெற்றுக் கொள்வதற்கும் செக்குகளைக் கொண்டு பாங்கர்கள் வியாபாரிக்குக் காரியஸ்தர்களா யிருக்கிறார்கள்.

செக்கு பாரத்தில் இடது பாதி (Counterfoil) புஸ்தகத்திலேயே நம்முடைய குறிப்புக்காக வைக்கப்படுகிறது. இதில், யார் பேரில் செக்கு கொடுக்கப்படுகிறதோ அவர் பெயரும் தொகையும் எதன்பொருட்டு செக்கு கொடுக்கப் படுகிறதென்றும் குறிக்கப்படுகின்றன.

ஒரு செக்குக்கு மூன்று அம்சங்கள் இருக்கின்றன. செக்கை எழுதுகிறவர் அதாவது பாங்கில் யார் கணக்கிலிருந்து பணம் கொடுக்கப்பட வேண்டுமோ அவர் ஒன்று. அவருக்கு ட்ராயர் (Drawer) என்று பெயர். பணத்தைக் கொடுக்கும்படி யாருக்கு உத்திரவு கொடுக்கப்படுகிறதோ அவர் இரண்டாவது. அவருக்கு ட்ராயி (Drawee) என்று பெயர். இந்த செக்குகளில் மட்டும் ட்ராயி ஒரு பாங்காகத் தானிருக்கவேண்டும். யாருக்குப் பணம் செலுத்தப்பட வேண்டுமோ அவர் மூன்ருவது. அவருக்குப் பேயி (Payee என்று பெயர்.

பேயி என்றிருக்கப் பட்டவருக்காவது அல்லது அவர் உத்திரவு பெற்றவருக்காவது தொகை கொடுக்கும்படி எழுதப்பட்டிருக்கும் செக்குகளுக்கு ஆர்டர் செக்குகள் (Order Cheques) என்றும், பேயிக்காவது அல்லது செக் கொண்டு வருபவருக்காவது தொகை கொடுக்கும்படி எழுதப் பட்டிருக்கும் செக்குகளுக்கு பேரர் செக்குகள் (Bearer Cheques) என்றும் பெயர்.

பேரர் செக்குகளே யார் உடையவராயிருக்கிருரோ அவர் செக்கில் கையெழுத்திடாமலே பணம் பாங்கியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். இதனுல் பேரர் செக்கைத் திருடினவன் ஒரு சங்கட மில்லாமலேபணத்தை வாங்கிவிடலாம். ஆதலால் இந்த விதமான செக்குகள் ஜாக்கிரதைக் குறைவுள்ளது. ஆனுல் ஆர்டர் செக்குகளுக்குப் பணம் பெறவேண்டு மென்ருல் செக்கில் எழுதப்பட்ட பேயியாவது அல்லது அவரால் உத்திர விடப்பட்டவராவது பின் பக்கத்தில் கை யெழுத்திட வேண்டும். அப்பொழுது ஏதாவது சூது இருக்குமானுல்


வெளிப்பட்டுப்போகும். ஆதலால் பேரர் செக்குகளை விட ஆர்டர் செக்குகளே ஜாக்கிரதை யுள்ளவை. மேலேசொல்லிய படி செக்குகளின் பின் புறத்தில் எழுதுவதற்கு என்டார்ஸ் (Endorse) செய்வதென்று பெயர். செக்கில் எழுதப்பட்டுள்ள பேயி இன்னொருவருக்குப் பணம் கொடுக்கவேண்டி யிருந் தால் "அவருக்காவது அவருத்திரவுடையவருக்காவது பணத் தைக்கொடுக்கவும்" என்று செக்கின் பின்னல் என்டார்ஸ் செய்து விடலாம். ஆகவே ஒருவருக்கொருவர் பணத்தைக் கொடுக்கவும் வாங்கவும் செக்கு ஓர் சாதகமாயிருக்கிறது.

பேரர் செக்குகளைவிட ஆர்டர் செக்குகள் அபாய மில் லாதவையாயிருந்தாலும், சிலர் கையெழுத்தைக்கூட ஒரே மாதிரியாகப் போட்டுவிடலாமாதலால் அப்படிப்பட்டவர்கள் பாங்கில் நேரில் பணம் பெருதபடி செக்கில் இரண்டு குறுக் குக்கோடுகள் செக்குசொந்தக்காரரால் இழுக்கப்படுவதுண்டு. இதற்கு க்ராஸிங் (Crossing) என்று பெயர். ஒரு செக்கு க்ராஸ் செய்யப்பட்டால், பணம் மற்றொரு பாங்கின் மூலமாக கொடுக்கப்படுமே யொழிய நேரில் கொடுக்கப்படமாட்டாது. நாம் ஒருவர் பேரில் க்ராஸ் செய்யப்பட்ட செக்கைக் கொடுத் தோமானல், அவர் தன் பற்றுவரவு கணக்கிருக்கும் பாங் குக்கு அந்த செக்கை அனுப்பினல் அந்த பாங்கு செக்கு பணம் கொடுக்க வேண்டிய பாங்கிலிருந்து தொகையைப் பெற்று தன் வாடிக்கைக்காரர் கணக்கில் வரவு வைத்துக் கொள்வார்கள். இப்படியே தவிர, க்ராஸ் செப்பப்பட்ட செக் கின் பேயியே செக்கு சொந்தமாயுள்ள பாங்குக்கு நேரில் போய் பணத்தைக் கேட்டால் கொடுக்கப்படமாட்டாது. ஆகவே ஒரு பாங்கின்மூலமாய் பணம் செலுத்தப்படுவதால், இது மாதிரி செக்குகள் முற்றிலும் ஆபத்தில்லாதவை.

ஒரு செக்கின் மத்தியில் இரண்டு குறுக்குக் கோடுகள் மட்டும் இழுக்கப்பட்டால் செக்கிலுள்ள பேயி தனக்குக்கணக்குள்ள எந்தபாங்குக்காவது அனுப்பி தொகையைப் பெறலாம். இரண்டு கோடுகள் மட்டும் இழுத்து க்ராஸ் செய்வதற்கு ஜெனரல் க்ராஸிங் (General crossing) என்று பெயர். இங்கு இரண்டு கோடுகளுக்கு நடுவில் 'அண்டு கம்பெனி' என்ற வார்த்தைகளும் இருக்கலாம்.

ஸ்பெஷல் க்ராஸிங் (Special crossing) என்று மற்றொரு விதம் உண்டு. இதில் இரண்டு கோடுகளுக்கு நடுவில் ஒரு பாங்கின் பெயரும் குறிப்பிட்டிருக்கும். அப்பொழுது இதில் குறிப்பிடப்பட்ட பாங்கின் மூலமாக மட்டும் பணம் கொடுக்கப்படுமே யொழிய மற்ற பாங்குகள் பணத்தை வாங்க முடியாது. அப்பொழுது பேபியினுடைய பாங்கர் செக்கில் குறிக்கப்பட்ட பாங்கருக்கு என்டார்ஸ் செய்தனுப்பவேண்டும்.

ஜெனரல் க்ராஸிங் ஸ்பெஷல் க்ராஸிங்.



ஓர் செக்கு நாடெங்கும் ஜனங்கள் ஒப்புக் கொள்ளக் கூடிய நாணயம் (Legal tender) ஆகாவிட்டாலும், அதன் தொகை உடனுக்குடனே தரிசனையில் கொடுக்கப்படவேண்டு

மாதலால் பாங்கில் கணக்கு வைப்பவர்கள் மட்டும் ரொக்கம் போலவே பாவிக்கிறார்கள். ஆதலால் பாங்கில் கொடுக்கப் படும் செக்குகள் ரொக்கத்தைப் போலவே பாவிக்கப்பட்டு பாங்கு கணக்கு ஏற்படுத்தப்படுகிறது.

பாங்கில் கொடுக்கப்பட்ட செக்குகளுக்கு நாம் பாங்கு அக்கவுண்டு நம்முடைய லெட்ஜரில் ஏற்படுத்துகிறோம். அது போலவே, பாங்கரும் நம்மீது அக்கவுண்டு அவனுடைய லெட் ஜரில் ஏற்படுத்துகிறான். அந்த அக்கவுண்டினுடைய நகலைக் காண்பிக்கும் ஓர் புத்தகத்தை முதல் முதல் பாங்கில் கர்ரெண்ட் அக்கவுண்டு ஏற்படுத்திக்கொண்டவுடன் அப்பொ ழுது நம்மால் செலுத்தப்பட்ட தொகையை நம்முடைய வரவில் எழுதிக்கொடுக்கிறான். இப்புத்தகத்திற்கு பாஸ் புக் (Pass Book) என்று பெயர். ஆறுமாதத்திற்காவது மூன்று மாதத்திற்காவது ஒருதரம் இப்புத்தகம் பாங்குக்கு அனுப்பப்படவேண்டும். அப்பொழுது பாங்கில் உள்ள நம் முடைய கணக்கில் அதுவரையில் எழுதப்பட்ட பதிவுகளெல் லாம் பாஸ்புக்கில் பாங்கரால் எழுதிக்கொடுக்கப்படும். இந்தப் பதிவுகளையும் நாம் நம்முடைய பாங்குக்கணக்கில் எழுதி யிருக்கும் பதிவுகளையும் ஒப்பிட்டுப் பார்த்துத் தவறுகள் ஏதாவது உண்டானால் கண்டுகொள்ளலாம். தவறுகள் உடனே பாங்குக்குத் தெரிவிக்கப்பட்டு பாஸ்புக்கில் சரி யான பதிவுகள் பாங்கரால் எழுதப்படவேண்டும். பாஸ் புக்கை பாங்கர் எழுதலாமே ஒழிய, கணக்கு வைத்துக் கொண்டிருப்பவர் எழுதக்கூடாது. ஒரு பாஸ்புக் கீழ்கண்ட விதம் எழுதப்படுகிறது:—

மதருஸ் பாங்கு, கள்ளிக்கோட்டை.

பற்று. சி. ராமசாமி அய்யரின் கணக்கு. வரவு.

தேதி.	விபரம்.	தொகை. ரூ.	அ.	பை.	தேதி.	விபரம்.	தொகை. ரூ.	அ.	பை.
1920.					1920.				
பிப். 10.	நெ. 17 செக்கு, கோவிந்த பிள்ளையால்	150	0	0	ஜனவரி 1.	ரொக்கக் கணக்குக்கு	1000	0	0
					,, 5.	,, ,,	500	0	0
மார்ச்சு 3.	நெ. 302. செக்கு, வாஸன் அண்டு கம்பெனியால்	850	0	0	ஏப்ரல் 4.	,, ,,	400	0	0
ஏப்ரல் 5.	நெ. 35, தனக்காக	645	0	0					
ஜூன் 30.	வட்டியால்	12	3	5					
,,	அதிகவரவால்	242	12	7					
		1900	0	0			1900	0	0
					ஜூலை. 1.	வரவு பாக்கிக்கு	242	12	7

மேற் சொன்னவிதமாக ஒரு பாங்கில் கணக்கு ஏற்படுத்திக்கொண்ட பிறகு அந்த பாங்கின் மீது நமது லெட்ஜரில் கணக்கெழுதுகிறோம். நாம் பாங்கரோடு கொடுக்கல் வாங்கல் செய்வதால், அந்த அக்கவுண்டு பெர்ஸனல் அக்கவுண்டாக பாவிக்கப்படுகிறது. பாங்குக் கணக்கை முடிவு செய்யுங்காலத்து, நம்முடைய ரொக்கம் பாங்கரிடத்தில் எவ்வளவு இருக்கிறதென்றாவது அல்லது நாம் அதிகமாக வாங்கியிருந்தோமானால் (Overdraw) எவ்வளவு பாக்கி கொடுக்கவேண்டுமென்றும் கண்டு கொள்ளலாம். நாம் பாங்கிலிருந்து வரவைவிட அதிகமாக பெற்றுக்கொண்ட தொகைக்கு ஓவர் ட்ராப்ட் (Overdraft) என்று பெயர்.

இனி பாங்கு வரவு செலவு காரியங்களைப் பதிவு செய்வோம்.

1920ஆ மார்ச்சு 1உ ரூ. 1000 மைசூர் பாங்கியில் செலுத்தி அக்கவுண்டு ஏற்படுத்தினோம் என்று வைத்துக் கொள்ளுவோம்.

இங்கு பாங்குபணத்தைப் பெற்றுக்கொள்ளுவதால் பாங்குக்கணக்கு டெடாாகிறது. நாம் ரொக்கத்தைக் கொடுப்பதால் ரொக்கக்கணக்கு க்ரெடிடராகிறது. ஆகவே,

மைசூர் பாங்கு—பற்று ரூ. 1000

ரொக்கக் கணக்கால் ரூ. 1000

என்று பதிவு செய்யவேண்டும்.

தனம் அண்டு கம்பெனியாருக்குச் செக்கு

மூலமாய்க் கொடுத்தது ரூ. 500—0—0

இதில் தனம் அண்டு கம்பெனிக்குப் பணம் கொடுக்கும்படி செக்கு எழுதி அவர்களுக்கு அனுப்பிவிடுகிறோம். அவர்கள் உடனே செக்கை பாங்குக்கு அனுப்பி பணத்தைப் பெற்றுக்கொள்வது நிச்சயமாகையால், தனம் அண்டு கம்பெனியார் ரொக்கம் பெற்றுக்கொண்டது போலவே யாகும். தனம் அண்டு கம்பெனி செக்கைப்பெற்றுக் கொள்வதால் அவர்கள் கணக்கு டெடராகி நம்முடைய பாங்கிலிருந்து பணம் கொடுக்கப்படுமோகையால் நம்முடைய புத்தகத்தில் பாங்குக் கணக்கு வரவாகிறது.

தனம் அண்டு கம்பெனி பற்று ரூ. 500—0—0
மைசூர் பாங்கால் ரூ. 500—0—0

நமக்குப் பணம் கொடுக்கவேண்டிய ஒருவர் நம்மீது ஓர் செக்கெழுதி அனுப்பிவிடலாமாகையால், அந்தச் செக்குக்கு பணத்தை வசூல் செய்து நம்முடைய கணக்கில் வரவு வைக்கும்படி நம்முடைய பாங்குக்கு உடனே அனுப்பிவிடுவோம். அப்படி செக்கைப்பெற்ற அன்று தினமே நம்முடைய பாங்குக்கும் அனுப்பிவிட்டால், பாங்கு செக்கை வாங்கிக்கொள்வதால் பாங்குக் கணக்கைப் பற்றுக்கி, செக்கு யாரிடமிருந்து வருகிறதோ அவர் கணக்கை வரவு செய்ய வேண்டும்.

எஸ். வாசன் என்பவரின் செக்கு பாங்குக்கு
அனுப்பப்பட்டது ரூ. 250—0—0

இதற்கு ஜர்னல் குறிப்பு கீழ்வருமாறு :—

மைசூர் பாங்கு பற்று ரூ. 250—0—0
எஸ். வாசன் என்பவரால் ரூ. 250—0—0

ஆனால் ஒரே நாளில் ஷடி செக்கை பாங்குக்கு அனுப்பாவிட்டால், செக்குவந்தவுடன் அதை ரொக்கமாக பாவித்து இம்மாதிரி பதிவு செய்யவேண்டும் :—

ரொக்கக் கணக்கு பற்று ரூ. 250—0—0
எஸ். வாசன் என்பவரால் ரூ. 250—0—0

பிறகு பாங்குக்கு செக்கை அனுப்பினவுடன் இவ்விதம் பதிவு ஏற்படும் :—

மைசூர் பாங்கு பற்று ரூ. 250—0—0
ரொக்கக் கணக்கால் ரூ. 250—0—0

நம்முடைய வியாபாரச் செலவுக்காக செக்கு மூலமாய் பணம் வாங்கப்பட்டது ரூ. 600.

இந்த காரியத்தில், பணம் வந்து சேருகிறபடியால் ரொக்கக் கணக்கு டெடராகி, பாங்கு பணம் கொடுக்கிறதாகையால் பாங்குக் கணக்கு க்ரெடிடராகிறது.

தனம் அண்டு கம்பெனியாரால் நம்மீது எழுதப்பட்ட செக்கை நாம் பணம் கொடுக்கவேண்டிய கோவிந்தய்யர் என்பவருக்கு என்டார்ஸ் செய்வதாக வைத்துக்கொள்வோம். செக்கை மற்றொருவருக்கு மாற்றும்பொழுது, ஆர்டர் செக்காயிருந்தால் பின்பக்கத்தில் என்டார்ஸ் செய்தும், பேரர் செக்காயிருந்தால் நேரில் மட்டும் கொடுத்தும் மாற்றவேண்டும்.

மேலேயுள்ள வியாபார விஷயத்தில், தனம் அண்டு கம்பெனியாரிடமிருந்து செக்கு நம்மிடம் வரும்பொழுது செக்கை ரொக்கமாக பாவித்து, ரொக்கக் கணக்கைப் பற்று செய்து, தனம் அண்டு கம்பெனியாரை வரவு செய்யவேண்டும். பிறகு செக்கை கோவிந்தய்யருக்கு என்டார்ஸ் செய்

யும்பொழுது, கோவிந்தய்யர் செக்கை வாங்குவதால் கோவிந்தய்யரைப் பற்றுசெய்து அந்த செக்கு நம்முடைய பாங்குக் கணக்கில் சம்பந்தப்படாததால் ரொக்கம்போலவே எண்ணி ரொக்கக் கணக்கை வரவு செய்யவேண்டும். ஜர்னல் குறிப்பு கீழ்வருமாறு எழுதப்படும் :—

ரொக்கக்கணக்கு பற்று ரூ. 500—0—0
தனம் அண்டு கம்பெனியாரால் ரூ. 500—0—0
கோவிந்தய்யர் பற்று ரூ. 500—0—0
ரொக்கக் கணக்கால் ரூ. 500—0—0

மேற்கூறிய விஷயம் ஒரே நாளில் நடந்தாலும், அவைகளைச் சேர்த்தெழுவது நன்ருக விளங்காதாகையால் அப்பதிவுகளைப் பிரித்தே எழுதவேண்டும்.

செக்குகள் தரிசனையில் கொடுக்கப்பட வேண்டுமானுலும், செக்குகளில் யாதொரு சூதுமில்லாம லிருந்தால்தான் பாங்கர் பணத்தைக் கொடுப்பான். கீழ்க்கண்ட காரணங்களால் செக்குகளுக்குப் பணம் கொடுப்பதை ஒரு பாங்கர் மறுத்து விடுவான் :—

(1) செக்கை எழுதியிருப்பவர் அதாவது பற்று வரவு கணக்கை யுடையவர் இறந்தாரென்று பாங்கர் அறிந்தாலும்,
(2) ஷெட்ராயர் அதாவது பற்று வரவு கணக்கை யுடையவர் இன்ஸால்வென்டாகவாவது பைத்தியம் பிடித்தவராகவாவது இருக்கிருரென்று அறிந்தாலும்,
(3) ஷெட்ராயரிடமிருந்து பணம் கொடுப்பதை மறுக்கும்படி பாங்கருக்கு அறிக்கை வந்திருந்தாலும்,

(4) கோர்ட்டிலிருந்து பணம் கொடுப்பதை நிறுத்தும் படி உத்திரவு பாங்கருக்கு வந்திருந்தாலும்,

(5) செக்கில் கையெழுத்தோ அல்லது வேறு ஏதாவது தவறுதலாக இருந்தாலும்,

(6) ட்ராயரின் கணக்கில் போதுமான பணம் வரவில் இல்லாவிட்டாலும்,

பாங்கர் செக்குக் கொண்டு வருபவருக்கு ரொக்கம் கொடுக்கமாட்டான். இப்படி பாங்கர் பணம் கொடுக்க மறுப்பதற்கு டிஸ் ஆனர் (Dishonour) செய்கிறுனென்றும், பணம் கொடுத்தால் ஆனர் (Honour) செய்கிறுனென்றும் பெயர்.

இந்த விதமாக பிறர் மீது நம்மால் எழுதப்பட்ட ஓர் செக்கு பணம் கொடுக்கப்படாமல் பாங்கரால் திருப்பப்பட்டதென்று வைத்துக்கொண்டு புத்தகங்களில் பதிவுகளைச் செய்வோம்.

தனம் அண்டு கம்பெனி மீது ரூ 500-க்கு எழுதப் பட்ட செக்கு பாங்கரால் திருப்பப்பட்டது.

முதன் முதலில் செக்கைக் கொடுக்கும்பொழுது பாங்கர் பணத்தைக் கொடுப்பதாக நினைத்து பாங்குக் கணக்கை வரவு செய்தோம். எப்பொழுது செக்கு திரும்பிவந்து விட்டதோ முன்செய்யப்பட்டவரவை நீக்கி அதற்குப்பதிலாக பாங்கைப் பற்று செய்யவேண்டும். தனம் அண்டு கம்பெனியாருக் குப்பணம் கொடுத்தாகிவிட்டதென்று நினைத்து அவர்கள் கணக்கை டெபிட்செய்தோம். செக்கு திரும்பி வந்து விட்டபடியால் அவர்களுக்கு இன்னும் நாம் பணம்கொடுக்க வேண்டியவர்களாகிறோம். ஆதலால் அவர்கள் கணக்கு இப்

பொழுது வரவாக வேண்டும். அதனுடைய பதிவுகீழ்வரு மாறு தென்படும்:—

மைசூர் பாங்கு பற்று ரூ 500—0—0

தனம் அண்டு கம்பெனியால் ரூ 500—0—0
(செக்கு பணம் கொடுக்கப்படாமல்
திருப்பப்பட்டது)

பதிவு நன்ருக விளங்கும்படி மேலே யுள்ளதுபோல் நேரேஷன் எழுதவேண்டும்.

வேறொருவரால் நம்மீது எழுதப்பட்ட செக்கு பாங்கரால் டிஸ் ஆனர் (Dishonour) ஆகிவிட்டால், அதை நம்மிடம் கொடுத்தவருக்குத் திருப்பியனுப்பி முன்னம் எழுதியிருக்கும் பதிவைமாற்ற வேறோர் பதிவை திருப்பி எழுதுவோம்.

பாங்குக்கு அனுப்பப்பட்ட எஸ். வாசன் என்பவரின் செக்கு பணமில்லாமல் திருப்பியனுப்பப் பட்டது.

எஸ். வாசன் பணத்தை அனுப்பிவிட்டார் என்று நினைத்து அவர் கணக்கை வரவு செய்த நாம் இப்பொழுது செக்கு திரும்பி வந்துவிட்டபடியால், அவர் இன்னும் பணம் கொடுக்கவில்லை யென்று நினைத்து அவர் கணக்கை டெபிட் செய்ய வேண்டும். முன்னம் செக்கைப்பெற்றுக் கொண்டு பாங்குக்கு அனுப்பினதும் பாங்கு பணத்தை வசூல் செய்து நம்முடைய கணக்கில் வரவு வைப்பதாக பாவித்து பாங்குக் கணக்கை பற்று செய்த நாம் இப்பொழுது பணம் வசூலிக்கப்படவில்லை யாதலால் நம்முடைய கணக்கு வரவில் பணமில்லை யென்றெண்ணி பாங்கை க்ரெடிட் செய்யவேண்டும்.

எஸ். வாசன் பற்று ரூ 250—0—0

மைசூர் பாங்கால் ரூ 250—0—0

(செக்கு பணம் கொடுக்கப்படாமல் திருப்பப்பட்டது)

இந்தக்குறிப்புக்கும் ஷை நேரேஷன் வேண்டுவது அவசியம்.

முன்னம் கோவிந்தய்யருக்கு என்டார்ஸ் செய்யப்பட்ட தனம் அன்டு கம்பெனியார் செக்கை பாங்கர் திருப்பி விட்டான் என்று வைத்துக்கொள்வோம்.

கோவிந்தய்யருக்குக் கொடுபடவேண்டிய தொகை இன்னும் தீரவில்லை யாதலால் இப்பொழுது அவர் கணக்கை வரவு செய்து, தனம் அண்டு கம்பெனி நமக்குக் கொடுக்க வேண்டிய கடனும் தீராததால் அவர்கள் கணக்கைப்பற்று செய்யவும். இப்பொழுது நாம் எழுதும் பதிவுகள் முந்தி எழுதப்பட்டிருக்கிற பதிவுகளை மாற்றுவதற்காக மாத்திரமாதலால், இப்பதிவு விளக்கமாயிருக்கவேண்டு மென்பது அவசியமில்லை. ஆகவே கீழ்வருமாறு இரண்டு பதிவுகளையும் ஒன்ருகச் சேர்த்தெழுதி நேரேஷனை மாத்திரம் கீழே குறிக்க வேண்டும்:—

தனம் அண்டு கம்பெனி பற்று ரூ. 200—0—0

கோவிந்தய்யரால் ரூ. 200—0—0

(செக்கு பணம் கொடுக்கப்படாமல் திருப்பப்பட்டது)

ஷை தனம் அண்டு கம்பெனியாரின் செக்கை கோவிந்தய்யருக்கு என்டார்ஸ் செய்யும் பொழுது அதற்கு பதிலாக ரொக்கம் பெற்றுக்கொண்டோமானல், நாம் பெற்றுக்கொள்வது ரொக்கம், வெளியில் கொடுப்பது ரொக்கத்தைப் போலுள்ள செக்கு. ஆகவே இரண்டும் ஒன்ருயிருப்பதால்

இரண்டும் ஒரேகணக்கை பாதிப்பதால் இதற்கு யாதொரு பதிவும் வேண்டியதில்லை.

கோவிந்தய்யருக்கு ரூ 600-க்குச் சரக்குகள் விற்றோமென்றும், அதற்கு பதிலாக அவரிடமிருந்து ரூ 625க்குள்ள ஓர் செக்கைப் பெற்றோமென்றும், அதை உடனே பாங்குக்கு அனுப்பி, கோவிந்தய்யர் கொடுக்க வேண்டியது போக பாக்கியை ரொக்கமாக அவருக்குத் திருப்பிக் கொடுத்தோமென்றும் வைத்துக்கொள்வோம். சரக்குகள் விற்றதற்கு,

கோவிந்தய்யர்—பற்று ரூ. 600—0—0	
சரக்குக் கணக்கால்	ரூ. 600—0—0

என்று பதிவு செய்கிறோம். பிறகு கோவிந்தய்யரிடமிருந்து செக்கு வந்தவுடன் உடனே பாங்குக்கு அனுப்பி விடுவதால்,

பாங்கு—பற்று ரூ. 625—0—0	
கோவிந்தய்யரால்	ரூ. 625—0—0

என்றும், பாக்கியை கோவிந்தய்யருக்கு ரொக்கமாகக் கொடுக்கும் பொழுது தனியாக ஓர் பதிவு இவ்விதம் செய்ய வேண்டும்:—

கோவிந்தய்யர்—பற்று ரூ. 25—0—0	
ரொக்கக் கணக்கால்	ரூ. 25—0—0

மேற்கூறப்பட்ட வரவு செலவுகாரியங்களெல்லாம் லெட்ஜரில் பாங்குக்கணக்கில் குறித்தானபின், அக்கணக்கு கீழ் வருமாறு காணப்படும்:—

மைசூர் பாங்குக் கணக்கு

பற்று. வரவு

தேதி.	விபரம்.	தொகை. ரூ.	அ.	பை.	தேதி.	விபரம்.	தொகை. ரூ.	அ.	பை.
1920.					1920.				
மார். 1.	ரொக்கக் கணக்கால்	1000	0	0	மார். 10.	தனம் அண்டு கம்பெனிக்கு	500	0	0
ஏப். 10.	எஸ். வாசனால்	250	0	0	ஏப். 20.	எஸ். வாசனுக்கு (செக்கு பணம் கொடுக்கப்பட வில்லை)	250	0	0
„ 15.	தனம் அண்டு கம்பெனியால் (செக்கு பணம் கொடுக்கப்பட வில்லை)	500	0	0	மே. 31.	அதிகப் பற்றுக்கு	1625	0	0
மே. 15.	கோவிந்தய்யரால்	625	0	0					
	ரூ.	2375	0	0		ரூ.	2375	0	0
ஜூன். 1.	பற்று பாக்கியால்	1625	0	0					

இவ்விதம் பாங்குக் கணக்கில் பற்று பாக்கியிருந்தால் பாங்கில் நம்மீது வரவுக்குப் பணமிருப்பதைக் குறிக்கிறது. இந்த பற்று பாக்கித்தொகை பாங்கில் இருப்பு ரொக்கம் என்று பாலன்ஸ்ஷீட்டில் வலது பக்கத்துக்குக் கொண்டுபோகவேண்டிய ஓர் சொத்தாகும்.

ரொக்கக்கணக்கில் மட்டும் எப்பொழுதும் அதிகப் பற்றே இருக்கவேண்டுமென்று முன்னமேயே சொல்லியிருக்கிறோம். ஏனெனில், ரொக்கம் பற்றில்லாமல் ரொக்கச் செலவு நடத்தமுடியாது. ஆனால் பாங்குக்கணக்கை ஓர் பெர்ஸனல் அக்கவுண்டாக மதிக்கப்படுவது என்று சொல்லியிருக்கிறதால், பாங்கர் இஷ்டப்பட்டு பாங்கில் நமது வரவுக்குப் பணம் இல்லாதபொழுது கடனாக ரொக்கம் கொடுக்கலாம். பாங்கர் நமக்குப் பணம் கொடுத்திருப்பதால் பாங்குக் கணக்கை நாம் வரவு செய்யவேண்டும். அப்பொழுது பாங்குக்கணக்கில் அதிக வரவு ஏற்படும். இதற்குத்தான் ஓவர்ட்ராப்டு (Overdraft) என்று பெயர். இத்தொகை நமக்கோர் கடனாதலால் பாலன்ஸ் ஷீட்டில் இடது பக்கத்தில் கடனாகக்கொண்டுபோகப்படவேண்டும். பாலன்ஸ்ஷீட்டில் எழுதும் பொழுது 'பாங்கிலிருந்து அதிகவரவு அல்லது ஓவர்ட்ராப்ட்' என்று எழுதவேண்டும்.

பாங்கு அக்கவுண்டுகளில் கர்ரெண்ட் அக்கவுண்டென்றும் டிபாஸிட் அக்கவுண்டென்றும்இரண்டுவிதமுண்டென்று சொன்னோம். இது வரையில் கர்ரெண்ட் அக்கவுண்டைப் பற்றியே செக்கு மூலமாய் பணம் செலுத்துவதையும் பெற்றுக் கொள்வதையும் பற்றிச்சொன்னோம். ஆனால் டிபாஸிட் அக்கவுண்டிலுள்ள பணத்தை செக்கு மூலமாய் வாங்க முடியாது. பணத்தை முதன் முதலில் டிபாஸிட் செய்யும் பொழுது பாங்கரால் கொடுக்கப்பட்ட ரசீதை கெடுவானவுடன் பின் பக்கத்தில் பணத்தை பெற்றுக் கொண்டதாக ஒரு அணு ஸ்டாம்பில் கையெழுத்திட்டு பாங்கில் கொண்டு கொடுத்தால் தான் டிபாஸிட்டிலுள்ள பணம் பெறலாம். ஆகவே இக் கணக்கையும் கர்ரெண்டு கணக்கையும் வெவ்வேறாகப் பதிய

வேண்டும். இக்கணக்கில் டிபாஸிட் அக்கவுண்டு என்ற பெயரை எழுதவேண்டும்.

நாம் மைசூர் பாங்கில் ரூ 5000 நூற்றுக்கு நாலு வீதம் (4%) வட்டிக்கு டிபாஸிட் செய்தால், அதற்குக்கீழ் வருமாறு ஜர்னல் குறிப்பு எழுதப்படுகிறது:—

மைசூர் பாங்கு டிபாஸிட் அக்கவுண்டு பற்று ரூ. 5000
ரொக்கக் கணக்கால் ரூ. 5000

நாம் ரொக்கம் கொடுக்காமல் நம்முடைய கர்ரெண்டு அக்கவுண்டில் பாங்கிலுள்ள பணத்தில் ரூ. 5000-க்குச் செக்கெழுதி அனுப்பி தொகையை அப்படியே டிபாஸிட்டில் வைக்கும்படி சொல்லி விட்டால், ரொக்கத்துக்கு பதிலாக பாங்கு கர்ரெண்டு அக்கவுண்டு பணத்தைக் கொடுப்பதால்,

மைசூர் பாங்கு டிபாஸிட் அக்கவுண்டு பற்று ரூ. 5000
பாங்குக் கணக்கால் ரூ. 5000
(கர்ரெண்டு அக்கவுண்டு)

என்று குறிக்கவேண்டும்.

டிபாஸிட்டுக்கு ஏற்பட்ட கெடு (ஒரு வருஷம் என்று வைத்துக் கொள்வோம்) ஆனவுடன் வட்டி கூட பாங்கிலிருந்து கொடுக்கப்படவேண்டுமாதலால் அதுவும் டிபாஸிட் பணத்தோடு சேர்ந்து வரவேண்டியதாகிறது. இந்த வட்டிக்கு பாங்கு டிபாஸிட் கணக்கை டெபிட் செய்து வட்டி நமக்கு லாபமாதலால் வட்டிக் கணக்கை க்ரெடிட்செய்ய வேண்டும்.

மைசூர் பாங்கு டிபாஸிட்
கணக்கு பற்று ரூ. 200—0—0
வட்டிக் கணக்கால் ரூ. 200—0—0

ஷ வட்டியும் முதலும் கெடு முடிந்தவுடன் ரொக்கமாக கொடுக்கப்பட்டால் ரொக்கக் கணக்கைப் பற்று செய்து பாங்கு டிபாஸிட் கணக்கை மொத்தத் தொகைக்கு வரவு செய்யவேண்டும்.

ஆனால் ஷ டிபாஸிட் பணத்தை ரொக்கமாக வாங்காமல் கர்ரெண்டு அக்கவுண்டில் சேர்க்கும்படி சொல்லிவிட்டால்,

மைசூர் பாங்கு பற்று ரூ. 5200—0—0
பாங்கு டிபாஸிட் கணக்கால் ரூ. 5200—0—0

என்று எழுதப்படுகிறது.

இம்மாதிரி நாம் பாங்கில் கணக்கு வைத்துக் கொண்டிருப்பதால், நம்முடைய ரொக்க வரவு செலவு ஒழுங்காக ஏற்படுவதோடு கூட, நமக்கு யாதொரு கஷ்டமுமின்றி கடன்கள் வட்டி முதலானதுகள், ஆகிய தொகைகளை வசூலித்து பிறருக்குத் தொகையைச் செலுத்தவும் சுலபமாகி மிகுந்த பிரயோஜனத்தை அடைகிறோம். இவ்வித சாதனங்களைத் தரும் பாங்கர்களால் வியாபாரிகளே மற்ற தொழிலாளர்களை விட இன்னும் மேன் மேலும் சௌகரியத்தையடைந்து வியாபாரத்தை கௌரவப் படுத்துகிறார்கள்.

8-ம் அதிகாரம்.

ரோக்கக் கணக்குப் புத்தகம்—சில்லரை ரோக்கக் கணக்கு (Cash Book and Petty Cash Book).

இதுகாறும் ரொக்கக் கணக்கும் பாங்குக் கணக்கும் லெட்ஜர் புத்தகத்திலேயே எழுதப்படுவதாக பாவித்து பதிவுகளைச் செய்தோம். ஆனால் ரொக்கத்தைப் பற்றினதாயும் பாங்கைப் பற்றினதாயுமுள்ள விபரங்கள் மற்ற விபரங்களைக் காட்டிலும் அதிகமிருக்குமாகையால் அவைகளையெல்லாம் சேர்த்து விபரமாக லெட்ஜரில் எழுதுவது முடியாதென்று, ரொக்க வரவு செலவு விஷயங்களும் பாங்கு விபரங்களும் தனியாக ஒரு புத்தகத்தில் எழுதப்பட்டு வருகின்றன. இப்புத்தகத்திற்கு ரோக்கக் கணக்குப் புத்தகம் (Cash Book) என்று பெயர். இப்புத்தகத்திலும் சாதாரணமாக லெட்ஜரில் ரொக்கக் கணக்குக்கும் பாங்குக் கணக்குக்கும் காணப்படுகின்ற பிரிவுகளே இருக்கின்றன. ரொக்கப்புத்தகத்தின் இடது பக்கத்தில் அதாவது பற்றுப் பக்கத்தில் தேதிக்கோர் பிரிவும், விபரங்களுக்கோர் பிரிவும், பாங்கில் வந்து சேருகின்ற தொகைக்காக ஓர் பிரிவும், ரொக்கத்தைக் காண்பிப்பதற்காக ஓர் பிரிவும் இருக்கின்றன. மேலும் நம்மால் பெற்றுக் கொள்ளப்பட்ட தொகைக்கு ரசீது கொடுத்திருப்போமாதலால் ஒரு விபரம் எந்த ரசீதைக் குறிக்கிறதோ அந்த ரசீதின் நம்பரை எழுதுவதன் பொருட்டு அதற்காக ஓர் பிரிவும், மற்றோர் பதிவு லெட்ஜர் புத்தகத்தின் எந்தப்பக்கத்தில் பதியப்படுகிறதோ அப்பக்கத்தின் நம்பரைக் குறிக்க ஓர் பிரிவும் உண்டு.

வலது பக்கத்திலும் அதாவது வரவு பக்கத்திலும் இது மாதிரியே தேதிக்கும், விபரங்களுக்கும், பாங்கு கணக்குக்கும், ரொக்கக் கணக்குக்கும், நம்மால் கொடுக்கப்பட்ட தொகைக்கு (செக்காயிருந்தால் செக்குக்கு) அத்தாக்ஷியாக நாம் பெற்றுக் கொண்ட ரசிது' அல்லது வவுச்சர் (Voucher) நம்பருக்கும், லெட்ஜர் புத்தகத்தில் பக்கம் நம்பருக்கும் ஒவ்வோர் பிரிவு ஏற்பட்டுள்ளன.

முக்கியமான கணக்குப் புத்தகமாகிய லெட்ஜரிலிருக்க வேண்டிய முக்கியமான இரண்டு கணக்குகளை இந்த ரொக்கப் புத்தகத்தில் எழுதியிருக்கிறோமாகையால் இதுவும் லெட்ஜர் புத்தகத்தில் ஓர் பாகமாகும். ஆகவே இதுவும் ஓர் அவசியமான புத்தகம். ஆயினும், ஜர்னலைப் போல் இதையும் ஓர் முதற்குறிப்புப் புத்தகமென்றே சொல்லலாம். ஏனெனில், ரொக்கத்தைப் பற்றியும் பாங்கைப்பற்றியுமுள்ள விபரங்கள் ஜர்னலில் குறிக்கப்படாமலே சாதாரணக் குறிப்பிலிருந்தே இப்புத்தகத்திலெழுதப்படுகிறது. எப்பொழுது பாங்குக் கணக்கும் ரொக்கக்கணக்கும் ஒரு தனிப்புத்தகத்தில் எழுதப்பட்டனவோ அவைகள் லெட்ஜரில் காணப்படாது. பாலன்ஸ்ஷீட் எழுதும்பொழுது கையிருப்பு ரொக்கம் பாங்கில் இருப்பு ரொக்கம் முதலியவை சொத்துப் பக்கத்தில் குறிக்கப்பட வேண்டுமாதலால் ரொக்கப் புத்தகத்தில் பற்று வரவுகளைக் கூட்டி அதிகப்பற்று அல்லது வரவு குறிக்கப்படுகிறது.

நாம் செக்கு மூலமாவது ரொக்கமாகவாவது பெற்றுக் கொண்ட தொகைக்கு கெடுவுக்கு முன்கொடுக்கப்பட்ட ஒரு சௌகரியத்தால் தள்ளுபடி கொடுக்க நேரிடும் என்று முன்னம் கூறியிருக்கிறோம். பணம் பெற்றுக்கொள்ளும்

பொழுது இந்தத் தள்ளுபடியும் நமக்கோர் நஷ்டமாவதால் ரொக்கவரவை ரொக்கப் புத்தகத்தின் பற்றுப்பக்கத்தில் எழுதுவதோடுகூட நஷ்டத்தைக் குறிக்கும் தள்ளுபடியை யும் காண்பிக்கும் நிமித்தம் ஓர் பிரிவு ஏற்பட்டிருக்கிறது. இதுபோலவே நாம் தொகை செலுத்தும்பொழுது நமக்குக் கொடுக்கப்படுகிற தள்ளுபடி லாபமாகையால் அதைக்குறிக்க ரொக்க புத்தகத்தின் வரவு பக்கத்திலும் ஓர் பிரிவு இருக் கிறது. உடனுக்குடனே பார்த்துத் தெரிந்துகொள்வதற் காக செலுத்தின அல்லது பெற்றுக்கொண்ட தொகையோடு கூட ரொக்கப் புத்தகத்தில் எழுதப்படுகிறதே தவிர, லெட் ஜரிலுள்ள தள்ளுபடி கணக்கே இங்கு மாற்றப்படவில்லை. ஆதலால் அப்பப்பொழுது லெட்ஜர் புத்தகத்திலுள்ள தள்ளு படிக் கணக்கிலும் விபரங்களை எழுதவேண்டும். லெட்ஜரி லுள்ள தள்ளுபடி கணக்குதான் கடைசியில் முடிவு செய்யப் பட்டு அதிகப்பற்று வரவு லாபநஷ்டக் கணக்குக்குக் கொண்டு போகப் படுகிறது.

ஒருவரிடமிருந்து ரொக்கமாவது செக்காவது நாம் பெற் றுக் கொண்டால், உடனே கணக்குப் புத்தகத்தின் பற்றுப் பக்கத்தில் ரொக்கத்துக்குள்ள பிரிவில் தொகையை எழுதி, ஏதாவது தள்ளுபடி கொடுத்திருந்தோமானால் தள்ளுபடித் தொகையை தள்ளுபடிக் குண்டான பிரிவில் எழுதவேண்டும். உடனே யார் பணம் கொடுக்கிறாரோ அவர் லெட்ஜர் கணக்கை வரவுசெய்ய வேண்டும். டிஸ்கவுண்டு கணக்கையும் பற்று செய்யவேண்டும்.

பிறரிடமிருந்து செக்குகளை வாங்கி உடனே பாங்குக்கு அனுப்பிவிட்டால், ரொக்கக் குறிப்புப் புத்தகத்தில் பாங் குப் பிரிவில் தொகையை எழுதி தள்ளுபடி இருந்தால் தள்

ளுபடிப் பிரிவில் அதன் தொகையை எழுதி லெட்ஜரில் தள்ளுபடிக் கணக்கைப் பற்று செய்யவேண்டும்.

இதுபோலவே நாம் ரொக்கம் கொடுத்தால் ரொக்கப் புத்தகத்தின் வரவு பக்கத்தில் அதனுடைய பிரிவில் தொகையை எழுதி தள்ளுபடியையும் காண்பிக்க வேண்டும். இந்தத் தள்ளுபடி லெட்ஜர் புத்தகத்திலுள்ள கணக்கிலும் வரவாகவேண்டும்.

மேலேயுள்ள ரொக்கம் அல்லது பாங்கு சம்பந்தமான காரியங்களில் ஒரு பதிவு ரொக்கப் புத்தகத்திலும் மற்றோர் பதிவு லெட்ஜர் புத்தகத்திலும் செய்தோம். ஆனால் ஆபீஸ் செலவுக்காக பாங்கிலிருந்து செக்கு மூலமாய்ப்பணம் வாங்கும் பொழுதாவது, அல்லது ரொக்கத்தை பாங்கில் கட்டும்பொழுதாவது பற்று வரவாகின்ற இரண்டு கணக்குகளும் ரொக்கப் புத்தகத்திலேயே இருக்கின்றன வாகையால், அப்புத்தகத்தின் இடது பக்கத்தில் ஓர் குறிப்பும் வலது பக்கத்தில் ஓர் குறிப்பும் செய்தால் இரட்டைப் பதிவு பூர்த்தியாகும்.

ரொக்கம், பாங்கு சம்பந்தமான விபரங்கள் ஜர்னலில் குறிக்கப்படாது என்று சொல்லியிருக்கிறோம். ஆனால், ஒரு வியாபாரி வருஷ ஆரம்பத்தில் சில சொத்துகளோடும் கடன்களோடும் வியாபாரத்தை ஆரம்பித்தால், அந்தக் கையிருப்பு பாக்கிகள், கடன்கள் முதலானவை முதலில் ஜர்னலில் குறிக்கப்படவேண்டும். அவைகளில் ரொக்கக்கையிருப்பு பாங்குயிருப்பு முதலானவைகளும் முதலில் ஜர்னலிலெழுதப்பட்டு, பிறகு ரொக்கப் புத்தகத்திலும் 'பற்று பாக்கியால்' அல்லது 'வரவு பாக்கிக்கு' என்றெழுதவேண்டும். ரொக்கக் குறிப்புப் புத்தகத்தில் பாக்கியை எழுதும் பொழுது முதல் கணக்கிலும் அந்த வருஷ ஆரம்பத்திலுள்ள முதல்

பாக்கி எழுதப்படுகிறது. ஜர்னல் குறிப்பிலிருந்தே எல்லா கணக்குகளிலும் பாக்கிகள் எழுதப்படுகின்றனவாகையால், ரொக்கப் புத்தகத்திலிருந்து மற்றோர் பதிவு லெட்ஜர் புத்தகத்தில் எழுதக் காரணமில்லை. இது போலவே பாங்கிலிருந்தாவது ரொக்கத்திலிருந்தாவது மற்றொன்றுக்குத்தொகை செலுத்தப்பட்டால் இரண்டு பதிவுகளும் ரொக்கப்புத்தகத்திலேயே செய்யப்படுகின்றன வாகையால் இவைகளையும் லெட்ஜர் புத்தகத்தி லெழுதக் காரணமில்லை; இப்படி லெட்ஜர் புத்தகத்துக் கணக்குகளில் எந்தெந்த பதிவுகள் சம்பந்தப்படவில்லை என்று நன்றாக அறியும் பொருட்டு அம்மாதிரியான பதிவுகளை சிறுகோடிழுத்து அடையாளம் செய்கிறோம்.

மேலே சொல்லப்பட்ட விஷயங்கள் கீழ் இருக்கும் கணக்கை எழுதுவதால் நன்றாய் விளங்கும்:—

1920, ஜூலை 1. தனம் அண்டு கம்பெனியார் கீழ்வரும் சொத்துகள் கடன்களோடு வியாபாரம் ஆரம்பித்தார்கள்:—

கையிருப்பு ரொக்கம் ரூ. 450, மைசூர் பாங்கில் உள்ள தொகை ரூ. 1450. மருந்துச் சரக்குகளின் கையிருப்பு ரூ. 830. தங்களுக்குச் சொந்தமாயுள்ள வீட்டின் விலை ரூ. 3500. அவர்களுக்கு வரவேண்டியது:—பி. கிருஷ்ணய்யரிடமிருந்து ரூ 400. எஸ். வெங்கடேசய்யரிடமிருந்து ரூ. 450. ராஜு பிள்ளையிட மிருந்து ரூ 125. அவர்கள் வெளியில் கொடுக்க வேண்டிய தொகை:—டாக்டர் ராமதாஸ் என்பவருக்கு ரூ. 450. கிருஷ்ணபிள்ளைக்கு ரூ. 620. கிருஷ்ணு அண்டு கம்பெனியாருக்கு ரூ. 225.

அவர்களுடைய வியாபார காரியங்கள் கீழ்வருமாறு :—

ஜூலை	1.	ரொக்கத்துக்கு மருந்துகள் விற்றது	ரூ. 435—0—0
,,	5.	டி. ராமய்யருக்கு மருந்துகள் விற்றது	ரூ. 134—0—0
,,	10.	பி. கிருஷ்ணய்யரிடமிருந்து ரூ. 400-க்குச்செக்கு வந்து பாங்குக்கு அனுப்பப்பட்டது	
,,	12.	பாங்கில் ரொக்கம் கட்டப்பட்டது	ரூ. 350—0—0
,,	14.	ந. ராமஸாமி அய்யருக்கு மருந்துகள் விற்றது	ரூ. 475—0—0
,,	17.	டி. ராமய்யரிட மிருந்து ரொக்கம் வந்தது	ரூ. 130—0—0
		தள்ளுபடி	4—0—0
			ரூ. 134—0—0
,,	20.	மருந்துகள் வாங்கினது	ரூ. 200—0—0
		வண்டிச்செலவு முதலானவை.	2—8—0
,,	21.	எஸ். வெங்கடேசய்யரிட மிருந்து செக்கு வந்து பாங்குக்கு அனுப்பப் பட்டது.	ரூ. 445—0—0
		தள்ளிக்கொடுத்தது.	5—0—0
			ரூ. 450—0—0

ஜூலை	22.	ரொக்கத்துக்கு மருந்துகள் விற்றது.	,, 178—0—0
,,	23.	ஷை விற்பனை ரொக்கம் பாங்கில் கட்டப்பட்டது.	,, 178—0—0
,,	23.	செக்கு மூலமாய் ராமதாஸுக்குக் கொடுத்தது.	,, 450—0—0
,,	25.	கிருஷ்ண அண்டு கம்பெனியாருக்கு ரொக்கம் கொடுத்தது.	ரூ. 225—0—0
,,	25.	ராஜுபிள்ளையிடமிருந்து தள்ளுபடி ரூ 5 போக ரூ 120க்குச் செக்கைப் பெற்று கிருஷ்ண பிள்ளைக்கு என்டார்ஸ் செய்யப் பட்டது.	
,,	27.	ந. ராமஸாமி அய்யரிடமிருந்து மருந்துகள் வாபீஸ் வந்தது.	ரூ. 65—0—0
,,	28.	மருந்துகள் விற்பனை ரொக்கம் பாங்குக்கு அனுப்பப் பட்டது.	ரூ. 370—0—0
,,	28.	கிருஷ்ண பிள்ளைக்குக் கணக்குத் தீர்த்து செக்கு அனுப்பியது ரூ. 490—0—0 தள்ளுபடி ரூ. 10—0—0	ரூ. 500—0—0

,, 29. ராஜு பிள்ளையிட மிருந்து வந்த செக்கு பணம் கொடுக்காமல் திருப் பப்பட்டது.

,, ,, வியாபாரச் செலவு. ரூ. 45—0—0

,, ,, உத்தியோகஸ்தர்களின் சம் பளத்துக்காக செக்குமூலமாய் பாங்கிலிருந்து வாங்கப் பட்டது. ரூ. 120—0—0

,, 30. வியாபாரஸ்தலத்தில் ரிப் பேர் செய்யப்பட்டது. ரூ. 30—0—0

,, ,, டெலிபூன் கம்பெனிக்கு அவர்கள் பில்படி செக்கு மூலமாய் கொடுத்தது. ரூ. 29—0—0

முதலுக்கு நூற்றுக்கு 6-வீதம் வட்டி கொடுக்கப்பட வேண்டும். 100-க்கு 5-வீதம் பெறுமானக்குறைவு வீட்டின் மேல் தள்ளவேண்டும். கையிருப்பு மருந்துகள் ரூ. 150-0-0

முதன் முதலில் ரொக்கம் பாங்கு சம்பந்தப் படாத விஷயங்களுக்கும் ஆரம்பத்திலுள்ள கையிருப்பு பாக்கிகளுக் கும் ஜர்னல் குறிப்பை எழுதுவோம்.

தனம் அண்டு கம்பேனி.

ஜர்னல் குறிப்பு பக்கம். 1.

தேதி.		விபரம்.	லெ. ந.	பற்று. ரூ.	அ.	பை.	வரவு. ரூ.	அ.	பை.
1920		கீழ்கண்டவைகள்:—							
ஜுலை	1	ரொக்கக் கணக்கு பற்று	–	450	0	0			
		பாங்குக் கணக்கு ,,	–	1450	0	0			
		மருந்துகள் கையிருப்பு ,,	5	830	0	0			
		சொந்த வீடு ,,	6	3500	0	0			
		பி. கிருஷ்ணய்யர். ,,	6	400	0	0			
		எஸ். வெங்கடேசய்யர் ,,	6	450	0	0			
		ராஜு பிள்ளை ,,	6	125	0	0			
		கீழ்கண்டவைகளால்:—							
		டாக்டர் ராமதாஸ்	6				450	0	0
		கிருஷ்ண பிள்ளை	7				620	0	0
		கிருஷ்ணு அண்டு கம்பெனி	7				225	0	0
		முதல் கணக்கு	5				5910	0	0
				7205	0	0	7205	0	0
ஜுலை	5	டி. ராமய்யர் பற்று	7	134	0	0			
		மருந்து விற்று முதல் கணக்கால்	5				134	0	0
,,	14	ந. ராமசாமி அய்யர் பற்று	7	475	0	0			
		மருந்து விற்று முதல் கணக்கால்	5				475	0	0
,,	27	விற்ற சரக்குகள் வாபீஸ் கணக்கு பற்று	5	65	0	0			
		ந. ராமசாமி அய்யரால்	7				65	0	0
,,	29	ராஜுபிள்ளை பற்று	6	120	0	0			
		கிருஷ்ண பிள்ளையால்	7				120	0	0
		(செக்கு பணம் கொடுக்கப் படாமல் திருப்பப் பட்டது)							
,,	31	வட்டிக் கணக்கு பற்று	8	29	9	0			
		முதல் கணக்கால்	5				29	9	0
,,	,,	பெறுமானக் குறைவு கணக்கு பற்று	8	14	9	0			
		வீட்டுக் கணக்கால்	6				14	9	0
		மொத்தம்	ரூ.	8043	2	0	8043	2	0

ரொக்கக் குறிப்புப் புத்தகம், பாங்கு, ரொக்கம், தள்ளுபடி பதிவுகள் செய்யப்பட்டு காணப்படும்.

தனம் அண்டு

ரொக்கக் குறிப்புப்

பற்று

தேதி.		ர. ந.	விபரம்.	லெ. ந.	நாம் கொடுக்கும் தள்ளுபடி			ரொக்கம்.			பாங்கு.		
1920													
ஜூலை	1		பற்று பாக்கியால்	–				450	0	0	1450	0	0
,,	,,	12	மருந்துவிற்று முதல் கணக்கால்	5				435	0	0			
,,	10	13	பி. கிருஷ்ணய்யரால்	6							400	0	0
,,	12		ரொக்கத்தால்	–							350	0	0
,,	16	14	டி. ராமய்யரால்	7	4	0	0	130	0	0			
,,	21	15	எஸ். வெங்கடேசய்யரால்		5	0	0				445	0	0
,,	22	16	விற்று முதல்	6									
			மருந்து கணக்கால்	5				178	0	0			
,,	23		ரொக்கத்தால்	–							178	0	0
,,	25	17	ராஜு பிள்ளையால்	6	5	0	0	120	0	0			
,,	28	18	மருந்து விற்று முதல் கணக்கால்	5							370	0	0
			மொத்தம் ரூ.		14	0	0	1313	0	0	3193	0	0
ஆகஸ்டு	1		பற்று பாக்கியால்					162	8	0	2104	0	0

முதலியவைகளுக்குத் தனித் தனியே பிரிவுகளோடு கீழ் வருமாறு.

கம்பெனி.

புத்தகம். பக்கம் 2.

வரவு

தேதி.		வ. ந.	விபரம்.	லெ. ந.	நமக்குக்கொடுக்கப்பட்ட தள்ளுபடி.			ரொக்கம்.			பாங்கு.		
1920 ஜூலை	12		பாங்குக்கு	–				350	0	0			
,,	20	பில் 33	மருந்து கொள்முதல் கணக்குக்கு	5				200	0	0			
,	,,		வண்டிச்செலவுக்கு	7				2	8	0			
,,	23		பாங்குக்கு	–				178	0	0			
,,	,,	25	ராமதாஸுக்கு	6							450	0	0
,,	25	319	கிருஷ்ணு அண்டு கம்பெனிக்கு	7				225	0	0			
,,	,,	64	கிருஷ்ண பிள்ளைக்கு	7				120	0	0			
,,	28	72	கிருஷ்ண பிள்ளைக்கு	7	10	0	0				490	0	0
	29		வியாபாரச் செலவு கணக்குக்கு	8				45	0	0			
,,	,,		சம்பளக் கணக்குக்கு	8							120	0	0
,,	30		ரிப்பேர்கணக்குக்கு	8				30	0	0			
,,	,,	48	டெலிபூன் செலவு கணக்குக்கு	8							29	0	0
,,	31		அதிகப்பற்றுக்கு					162	8	0	2104	0	0
			மொத்தம் ரூ....		10	0	0	1313	0	0	3193	0	0

மேலே காட்டியபடி ஜர்னலையும் ரொக்கப் புத்தகத்தையும் எழுதின பிற்பாடு, அவைகளிலுள்ள பதிவுகளை லெட்ஜர் புத்தகத்திலுள்ள கணக்குகளில் குறிக்கவேண்டும். எல்லா பதிவுகளும் தேதி வரிசையாக எழுதப்படவேண்டுமாதலால் ஜர்னலையும் ரொக்கப்புத்தகத்தையும் வைத்துக்கொண்டு தேதி வரிசையாக ஜர்னலில் காட்டியபடி இரண்டு பதிவுகளையும் ரொக்கப் புத்தகத்திலுள்ள பதிவுகளுக்கு இரண்டாவது பதிவுகளையும் செய்ய வேண்டும். லெட்ஜர் கணக்குகள் கீழே காட்டப் படுகின்றன:—

பக்கம் 5.

தனம் அண்டு கம்பேனி.

முதல் கணக்கு

பற்று. வரவு.

தேதி.	விபரம்.	ஜர். ந.	ரூ.	அ.	பை.	தேதி.	விபரம்.	ஜர். ந.	ரூ.	அ.	பை.
1920						1920					
ஜூலை 31	அதிக வரவால்.		6311	15	0	ஜூலை 1	வரவு பாக்கிக்கு	1	5910	0	0
						,, 31	வட்டிக் கணக்குக்கு	1	29	9	0
						,, ,,	லாபநஷ்டக் கணக்குக்கு		372	6	0
			6311	15	0				6311	15	0
						ஆகஸ்டு 1	வரவு பாக்கிக்கு.		6311	15	0

மருந்துகள் கையிருப்புக் கணக்கு

பற்று. வரவு.

தேதி.	விபரம்.	ஜர். ந.	ரூ.	அ.	பை.	தேதி.	விபரம்.	ஜர். ந.	ரூ.	அ.	பை.
1920						1920					
ஜூலை 1	பற்று பாக்கியால்	1	830	0	0	ஜூலை 31	ட்ரேடிங் அக்கவுண்டுக்கு		830	0	0
			830	0	0				830	0	0
ஆகஸ்டு 1	பற்று பாக்கியால்		150	0	0						

மருந்துகள் கோள்முதல் கணக்கு

பற்று. வரவு.

1920						1920					
ஜூலை 20	ரொக்கக் கணக்கால்	2	200	0	0	ஜூலை 31	ட்ரேடிங் அக்கவுண்டுக்கு		200	0	0
			200	0	0				200	0	0

மருந்துகள் விற்றுமுதல் கணக்கு

பற்று. வரவு.

1920						1920					
ஜுலை 31	ட்ரேடிங் அக்கவுண்டால்		1592	0	0	ஜுலை 1	ரொக்கக் கணக்குக்கு	2	435	0	0
						,, 5	டி. ராமய்யருக்கு	1	134	0	0
						,, 14	ந. ராமசாமி அய்யருக்கு	1	475	0	0
						,, 22	ரொக்கக் கணக்குக்கு	2	178	0	0
						,, 28	பாங்கு கணக்குக்கு	2	370	0	0
			1592	0	0				1592	0	0

விற்ற மருந்துகள் வாபீஸ் கணக்கு.

பற்று. வரவு.

1920						1920					
ஜுலை 27	ந. ராமசாமி அய்யரால்	1	65	0	0	ஜுலை 31	ட்ரேடிங் அக்கவுண்டுக்கு		65	0	0
			65	0	0				65	0	0

வீட்டின் கணக்கு.

பற்று. வரவு.

1920						1920					
ஜுலை 1	பற்று பாக்கியால்	1	3500	0	0	ஜுலை 31	பெறுமானக் குறைவு கணக்குக்கு	1	14	9	0
						,,	அதிகப் பற்றுக்கு		3485	7	0
			3500	0	0				3500	0	0
ஆகஸ்டு 1	பற்று பாக்கியால்		3485	7	0						

பி. கிருஷ்ணய்யர்.

பற்று. வரவு.

1920						1920					
ஜுலை 1	பற்று பாக்கியால்	1	400	0	0	ஜுலை 10	பாங்குக் கணக்குக்கு	2	400	0	0
			400	0	0				400	0	0

எஸ். வேங்கடேசய்யர்.

பற்று. வரவு.

1920						1920					
ஜூலை 1	பற்று பாக்கியால்	1	450	0	0	ஜூலை 21	பாங்குக்கும் தள்ளுபடிக்கும்	2	450	0	0
			450	0	0				450	0	0

ராஜூ பிள்ளை.

பற்று. வரவு.

1920						1920					
ஜூலை 1	பற்று பாக்கியால்	1	125	0	0	ஜூலை 25	ரொக்கத்திற்கும் தள்ளுபடிக்கும்	2	125	0	0
,, 29	கிருஷ்ண பிள்ளையால் (செக்கு திருப்பப்பட்டது)	1	120	0	0	,, 31	அதிகப் பற்றுக்கு		120	0	0
			245	0	0				245	0	0
ஆகஸ்டு 1	பற்று பாக்கிக்கு		120	0	0						

டாக்டர் ராமதாஸ்.

பற்று. | வரவு.

1920						1920					
ஜூலை 23	பாங்குக் கணக்கால்	2	450	0	0	ஜூலை 1	வரவு பாக்கிக்கு	1	450	0	0
			450	0	0				450	0	0

பக்கம் 7.

கிருஷ்ண பிள்ளை.

பற்று. | வரவு.

1920						1920					
ஜூலை 25	ரொக்கக் கணக்கால் (செக்கு என்டார்ஸ்செய்யப்பட்டது)	2	120	0	0	ஜூலை 1	வரவு பாக்கிக்கு	1	620	0	0
,, 28	பாங்கினாலும் தள்ளுபடியாலும்	2	500	0	0	,, 29	ராஜா பிள்ளைக்கு (செக்கு திருப்பப்பட்டது)	1	120	0	0
,, 31	அதிகவரவால்		120	0	0						
			740	0	0				740	0	0
						ஆகஸ்டு 1	வரவு பாக்கிக்கு		120	0	0

கிருஷ்ணா அண்டு கம்பேனி.

பற்று. வரவு.

1920						1920					
ஜூலை 25	ரொக்கக்கணக்கால்	2	225	0	0	ஜூலை 1	வரவு பாக்கிக்கு	1	225	0	0
			225	0	0				225	0	0

டி. ராமய்யர்.

பற்று. வரவு.

1920						1920					
ஜூலை 5	மருந்து விற்று முதல் கணக்கால்	1	134	0	0	ஜூலை 16	ரொக்கத்திற்கும் தள்ளுபடிக்கும்	2	134	0	0
			134	0	0				134	0	0

ந. ராமஸாமி அய்யர்.

பற்று. வரவு.

1920						1920					
ஜூலை 14	மருந்து விற்று முதல் கணக்கால்	1	475	0	0	ஜூலை 27	விற்ற மருந்து வாபீஸ் கணக்குக்கு	1	65	0	0
						,, 31	அதிகப் பற்றுக்கு		410	0	0
			475	0	0				475	0	0
ஆகஸ்டு 1	பற்றுபாக்கியால்		410	0	0						

வண்டிச் செலவு கணக்கு

பற்று. வரவு.

1920						1920					
ஜூலை 20	ரொக்கக்கணக்கால்	2	2	8	0	ஜூலை 31	டிரேடிங் அக்கவுண்டுக்கு		2	8	0
			2	8	0				2	8	0

பக்கம் 8.

தள்ளுபடிக் கணக்கு

பற்று. வரவு.

1920						1920					
ஜூலை 16	டி. ராமய்யரால்	2	4	0	0	ஜூலை 28	கிருஷ்ண பிள்ளைக்கு	2	10	0	0
,, 21	எஸ். வெங்கடேசய்யரால்	2	5	0	0	,, 31	லாப நஷ்டக் கணக்குக்கு		4	0	0
,, 25	ராஜு பிள்ளையால்	2	5	0	0						
			14	0	0				14	0	0

வியாபாரச் செலவு கணக்கு

பற்று. வரவு.

1920						1920					
ஜூலை 29	ரொக்கக் கணக்கால்	2	45	0	0	ஜூலை 31	லாப நஷ்டக் கணக்குக்கு		45	0	0
			45	0	0				45	0	0

சம்பளக் கணக்கு

பற்று. வரவு.

1920						1920					
ஜூலை 29	பாங்குக் கணக்கால்	2	120	0	0	ஜூலை 31	லாப நஷ்டக் கணக்குக்கு		120	0	0
			120	0	0				120	0	0

ரிப்பேர் கணக்கு

பற்று. வரவு.

1920						1920					
ஜூலை 30	ரொக்கக் கணக்கால்	2	30	0	0	ஜூலை 31	லாப நஷ்டக் கணக்குக்கு		30	0	0
			30	0	0				30	0	0

டேலிபூன் செலவுக்கணக்கு

பற்று. வரவு.

1920						1920					
ஜூலை 30	பாங்குக் கணக்கால்	2	29	0	0	ஜூலை 31	லாப நஷ்டக் கணக்குக்கு		29	0	0
			29	0	0				29	0	0

வட்டிக் கணக்கு

பற்று. வரவு.

1920						1920					
ஜூலை 31	முதல் கணக்கால்	1	29	9	0	ஜூலை 31	லாப நஷ்டக் கணக்குக்கு		29	9	0
			29	9	0				29	9	0

பேறுமானக் குறைவு கணக்கு

பற்று. வரவு.

1920						1920					
ஜூலை 31	வீட்டுக்கணக்கால்	1	14	9	0	ஜூலை 31	லாப நஷ்டக் கணக்குக்கு		14	9	0
			14	9	0				14	9	0

தனம் அண்டு கம்பெனியாரின் வியாபார விபரங்களெல்லாம் சரியாக லெட்ஜர் புத்தகத்தில் குறிக்கப்பட்டனவா வென்று பார்க்கும் பொருட்டு ட்ரயல் பாலன்ஸ் (Trial Balance) எடுப்போம்.

ட்ரயல் பாலன்ஸ் எடுப்பதில் இரண்டு விதம் உண்டு. ஒவ்வொரு கணக்கின் பற்றுத் தொகை கூடுதலையும் வரவு தொகை கூடுதலையும் இரண்டு பிரிவுகளில் எழுதி கடைசியாக எல்லாகணக்குகளின் பற்று வரவு மொத்தத்தொகை சமமாயிருக்கின்றனவா வென்று பார்ப்பது ஒருவிதம். இது முன்னமே சொல்லப்பட்டு விட்டது. மற்றோர் விதம் என்னவெனில், ஒவ்வொரு வியாபார விஷயமும் பற்றில் ஒருதரமும் வரவில் ஒருதரமும் குறிக்கப்படுகிற தாகையால், ஒவ்வொரு கணக்கின் இருபக்கங்களிலுமுள்ள சமமான தொகைகளை நீக்கி அதிகப்பற்றையோ அல்லது வரவையோ மாத்திரம் ட்ரயல் பாலன்ஸில் எழுத வேண்டும். அப்பொழுது எல்லா கணக்குகளிலும் உள்ள மொத்த அதிகப்பற்று மொத்த அதிக வரவுக்குச் சமமாக இருக்கவேண்டும். இதுவே விபரங்களெல்லாம் லெட்ஜரில் சரியாகப் பதிவுசெய்யப்பட்டன வென்பதற்கு அடையாளம். இந்த இரண்டாவது விதம் மிகவும் சுலபமானதால் அநேகமாக வர்த்தகர்கள் இந்த வழியையே உபயோகப் படுத்துகிறார்கள்.

பாக்கிகளை (பாலன்ஸ்) மட்டும் காட்டும் ட்ரயல் பாலன்ஸ் கீழ் வரும் விதம் எடுக்கப்படுகிறது:—

தனம் அண்டு கம்பெனியாரின் ட்ரயல் பாலன்ஸ்.

லெட்ஜர் பச்சம் நம்.	கணக்குகளின் பெயர்.	பற்று. ரூ.	அ.	பை.	வரவு. ரூ.	அ.	பை.
5	முதல் கணக்கு				5939	9	0
,,	மருந்துகள் கையிருப்புக் கணக்கு	830	0	0			
,,	மருந்துகள் கொள் முதல் கணக்கு	200	0	0			
,,	மருந்துகள் விற்று முதல் கணக்கு				1592	0	0
,,	விற்ற மருந்துகள் வாபீஸ்கணக்கு	65	0	0			
6	வீட்டின் கணக்கு	3485	7	0			
,,	ராஜு பிள்ளை	120	0	0			
7	கிருஷ்ண பிள்ளை				120	0	0
,,	ந. ராமஸாமி அய்யர்	410	0	0			
,,	வண்டிச்செலவு கணக்கு	2	8	0			
8	தள்ளுபடிக் கணக்கு	4	0	0			
,,	வியாபாரச் செலவு கணக்கு	45	0	0			
,,	சம்பளக் கணக்கு	120	0	0			
,,	ரிப்பேர் கணக்கு	30	0	0			
,,	டெலிபூன் செலவுக்கணக்கு	29	0	0			
,,	வட்டிக்கணக்கு	28	9	0			
,,	பெறுமானக் குறைவு கணக்கு	14	9	0			
2	ரொக்கக் கணக்கு	162	8	0			
,,	பாங்குக் கணக்கு	2104	0	0			
	ஆகமொத்தம்...	7651	9	0	7651	9	0

மேலேயுள்ள ட்ரயல் பாலன்ஸில் சில கணக்குகள் விடப்பட்டன. ஏனெனில், அக் கணக்குகளின் பற்று வரவுகள் ஒன்றுக்கொன்று அதிகப்பற்று அல்லது வரவைக் காண்பிக்கவில்லை. கடைசியில் ரொக்கக் கணக்கும் பாங்குக் கணக்கும் சேர்க்கப்பட்டன. இவ்விரண்டு கணக்குகள் தனியாக ரொக்கக் குறிப்புப் புத்தகமென்றோர் புத்தகத்தில் சௌகரியத்தின் பொருட்டு எழுதப்பட்டதே தவிர, அவைகளும் லெட்ஜர் கணக்குகளைச் சேர்ந்தது தான். ஆகையால் அக்

கணக்குகளின் பற்று வரவுகளும் ட்ரயல் பாலன்ஸில் காண்பிக்கப்படவேண்டும். இனி மேற்கூறிய கணக்குகளை முடிவு செய்து லாப நஷ்டக்கணக்கையும் பாலன்ஸ் ஷீட்டையும் எழுதுவோம்:—

தனம் அண்டு கம்பெனி.

பற்று. 1920ம் வருஷம் ஜூலை மாதத்திய வியாபாரச் சரக்குக் கணக்கு வரவு.

	ரூ.அ.பை.	ரூ.அ.பை.		ரூ.அ.பை.	ரூ.அ.பை.
ஜூலை 1௳ மருந்துகள் கையிருப்பால்		830 0 0	மருந்துகள் விற்று முதல் கணக்குக்கு	1592 0 0	
மருந்துகள் கொள் முதல் கணக்கால்		200 0 0	விற்ற சரக்குகள் வாபீஸ் குறைவு	65 0 0	
வண்டிச் செலவு கணக்கால்		2 8 0	ஜூலை 31௳	———	1527 0 0
லாப நஷ்டக் கணக்கால்		644 8 0	மருந்துகள் கையிருப்பு,		150 0 0
		1677 0 0			1677 0 0

தனம் அண்டு கம்பேனி.

பற்று. 1920ம் வருஷம் ஜூலை மாதத்திய லாப நஷ்டக் கணக்கு வரவு.

நஷ்டக் குறிப்புகள்.	ரூ.	அ.	பை.	லாபக் குறிப்புகள்.	ரூ.	அ.	பை.
தள்ளுபடிக் கணக்கால்	4	0	0	வியாபாரச்சரக்குக்கணக்குக்கு (மொத்த லாபம்)	644	8	0
வியாபாரச் செலவு கணக்கால்	45	0	0				
சம்பளக் கணக்கால்	120	0	0				
ரிப்பேர் கணக்கால்	30	0	0				
டெலிபூன் செலவுக் கணக்கால்	29	0	0				
வட்டிக் கணக்கால்	29	9	0				
பெறுமானக் குறைவு கணக்கால்	14	9	0				
முதல் கணக்கால் (மிச்சலாபம்)	372	6	0				
	644	8	0		644	8	0

தனம் அண்டு கம்பேனி,

1920ம் வருஷம் 31உயிலுள்ள பாக்கி ஜாப்தா (Balance sheet)

கடன் பாபத்துகள்	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.	சொத்துபாபத்துகள்.	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.
கீழ்க் கண்டவர்களுக்குக் கொடுக்கவேண்டிய கடன் :—							ரொக்கம்:—						
							ஆபீஸில்	162	8	0			
							பாங்கில்	2104	0	0			
கிருஷ்ண பிள்ளை	120	0	0								2266	8	0
				120	0	0	கடன் கொடுக்க வேண்டியவர்கள்:—						
முதல் தொகை ஜூலை 1	5910	0	0										
வட்டி கூடுதல்	29	9	0				ராஜு பிள்ளை	210	0	0			
மிச்சலாபம்	372	6	0				ந. ராமஸாமி அய்யர்	410	0	0			
				6311	15	0					530	0	0
							வீட்டின் பெறுமானம்	3500	0	0			
							பெறுமானக் குறைவு	14	9	0			
											3485	7	0
							மருந்துகள் கையிருப்பு, ஜூலை 31				150	0	0
ஆகமொத்தம்...				6431	15	0	ஆகமொத்தம்...				6431	15	0

பாலன்ஸ்ஷீட் எழுதுவதில் இரண்டு விதமுண்டு. நம்முடைய செலவுகளைச் செய்வதற்கு உடனே உபயோகப்படக்கூடிய தான ரொக்கத்தை முதலிலும், பிறகு வெவ்வேறிடங்களில் பணத்தை வட்டிக்குக் கொடுத்திருந்தால் அதன் தொகையையும், பிறகு நமக்கு வியாபாரத்தில் பிறரிடமிருந்து வரவேண்டிய தொகையையும் பிறகு சரக்குகளின் கையிருப்புத் தொகையையும் அதன் பிறகு அசையாப் பொருள்களான மரசாமான்கள், வீடுகள், கட்டடங்கள், யந்திரங்கள் முதலானவைகளின் மதிப்பையும் சொத்துப் பக்கத்தில் எழுதி, கடன் பக்கத்தில் வியாபாரத்தில் பிறருக்கு நாம் கொடுக்கவேண்டிய கடன்களை முதலிலும், நாம் பிறரிடமிருந்துவட்டிக்கு வாங்கப்பட்டிருக்கும் தொகையையும் அதன் பிறகு முதல் தொகையையும் எழுதவேண்டியது ஓர் விதம். இந்த மாதிரியில், சொத்துப் பக்கத்தில், நமக்கு சீக்கிரம் கைக்குக்கிடைக்கக் கூடியதாயும் அசையும் பொருள்களாயுமுள்ள சொத்துகளை முதலிலெழுதி பிறகு வீடு கட்டடங்கள் முதலான அசையாப் பொருள்களை எழுதுகிறோம். கடன் பக்கத்திலும் முன்னால் கொடுக்கப்பட வேண்டிய வியாபார விஷயத்திலேற்பட்டுள்ள கடன்களை முன்னாலெழுதி பிறகு கடனைப் போல் பாவிக்கமட்டும்படுகிற முதல் தொகையைப் பின்னால் எழுதுகிறோம்.

மற்றோர் மாதிரியான பாலன்ஸ் ஷீட்டில், சொத்துப் பக்கத்தில் அசையாப் பொருள்களை முதலில் எழுதி அசையும் பொருள்களான கையிருப்புச் சரக்குகள், வரவேண்டிய கடன்கள், வட்டிக்கு விடப்பட்ட தொகை முதலானதுகளைப் பின்னாலெழுதி பாங்கிலும் ஆபீஸிலும் உள்ள ரொக்கத்தைக் கடைசியிலெழுதி முடிக்கிறோம். இந்த வரிசை முதல்

மாதிரியின் வரிசைக்கு முற்றிலும் மாறுனது. கடன் பக்கத்திலுங்கூட முதலில் முதல் தொகையை எழுதி பிறகு மற்ற கடன்களே எழுதிக் கொண்டுவரவேண்டும்.

மிச்சலாபம் எவ்வளவு என்று பாக்கி ஜாப்தாவான பாலன்ஸ் ஷீட்டில் தெரியும் பொருட்டு, கடன் பாபத்துக்களில் முதல் தொகையோடு மிச்சலாபத்தையும் தனியாகப் போட்டு மொத்தத் தொகையைக் கண்டு பிடிக்கிறோம்.

ரொக்கம், பாங்குத் தொகைகளேச் சரிபார்க்கும் குறிப்புகள் :—

ரொக்கத்தின் வரவு செலவுகள் தினந்தோறும் ரொக்கக் கணக்குப் புத்தகத்தில் எழுதப்படுவதால், எவ்வளவு ரொக்கம் கையிலிருக்கிறதோ அத்தொகை ரொக்கக் கணக்குப்படி வரும் பாக்கிக்குச் சரியாக விருக்கவேண்டும். இக்கணக்கில் எவ்வளவு பற்றிருக்கிறதோ அவ்வளவுக்கே செலவு செய்பலாமே தவிர, அதற்குமேல் செலவழிக்க முடியாது. ஆகவே ரொக்கக் கணக்கில் எப்பொழுதும் அதிகப்பற்றே இருக்கவேண்டும் அல்லது பற்று வரவிரண்டும் சமமாகப் போகவேண்டுமேயல்லாது அதிக வரவு இருக்கக் காரணமில்லை. ஆதலால் ஒரு காகிதத்தில், ரொக்கக் கணக்கின் பற்றுத் தொகையிலிருந்து வரவு தொகையைக் கழித்து,மிச்ச தொகை, கையிலுள்ள நோட்டுகள், ரூபாய்கள், சில்லரைகள் செக்குகள், மற்றும் பணம் வசூல் செய்வதற்கு பாங்குக்கு அனுப்பப்படாமல் கையிலிருக்கும் பில்லுகள் அல்லது பத்திரங்கள் முதலியவைகளின் தொகைக்குச் சரியாகவிருக்க வேண்டும். செக்குகளேயும் பில்லுகளேயும் ரொக்கமாகச் சேர்த்திருப்பது ஏனெனில், அவைகளே பாங்குக்கு அனுப்

பாத வரையில் ரொக்கமாக பாவித்து ரொக்கக் கணக்கில் பற்றில் எழுதியிருக்கிறோம். இந்தக் குறிப்புதான் ரொக்கத்தைச் சரிபார்க்கும் குறிப்பு (Cash Reconciliation Statement).

ரோக்கக் கணக்குப்படி.

பற்றுத்தொகை	ரூ. 5232—4—5
வரவு தொகை	ரூ. 3989—6—5
பாக்கி	ரூ. 1242-14—0

பணப் பெட்டியிலுள்ள தொகை.

நோட்டுகள்	ரூ. 1000—0—0
ரூபாய்கள்	,, 200—0—0
அரை ரூபாய்கள்	,, 41—0—0
கால் ரூபாய்கள்	,, 1-12—0
அணுக்கள்	,, 0—2—0
மொத்தம்	ரூ. 1242-14—0

தினந்தோறும் ரொக்கக் குமாஸ்தா மேலேயுள்ளதான குறிப்பை எழுதி கையிருப்பு ரொக்கத்தைச் சரி பார்த்து விடவேண்டும்.

நாம் பாங்கில் கணக்கேற்படுத்திக் கொண்டவுடன், பாங்கைப்பற்றிய கணக்கொன்று நம்முடைய புத்தகத்திலும், நம்மைப்பற்றின கணக்கொன்று பாங்கு லெட்ஜர் புத்தகத்திலும் வைக்கப்படுகிறதென்றும் பாங்கர் நம்மைப்பற்றின கணக்கின் நகலையுள்ள பாஸ் புக்கை நமக்குக் கொடுத்,

திருக்கிறுனென்றும் சொல்லியிருக்கிறேம். கணக்குகளை நாம் முடிக்கும்பொழுது நம்முடைய பாங்குக் கணக்குப்படி எவ்வளவு தொகை பாங்கிலிருக்கிறதோ அதே தொகை பாங்கர் புத்தகத்திலுள்ள நம்முடைய கணக்கிலும் காணப் படவேண்டும். ஆனால் இந்த இரண்டு தொகைகளும் எப்பொழுதுமே சரியாகயிருக்காது. ஏனெனில் நாம் ஒரு வரிடமிருந்து ஓர் செக்கைப்பெற்று பாங்குக்கு அனுப்பின வுடன் நம்முடைய பாங்குக் கணக்கைப்பற்று செய்துவிடு கிறேம். ஆனல் பாங்கரோ அந்த செக்குக்கு பணத்தை வசூலித்த பிறகு தான் நம்முடைய கணக்கில் வரவு வைப் பான். நாம் கணக்குகளை முடிக்கும் தேதி பணம் வசூலா வதற்கு முன்னிருந்தால், நம்முடைய கணக்குப்படி பாங்கி லுள்ள தொகையை செக்கின் தொகையையும் சேர்த்து அதிகம் காட்டியிருப்போம். ஆதலால் பாங்கு பாஸ்புக்குபடி யுள்ள பாக்கித் தொகையோடு நாம் அனுப்பித்த செக்கின் தொகையையும், நம்முடைய பாங்குக் கணக்குபடி பாக்கித் தொகைக்குச் சமமாகச்செய்ய, சேர்த்துக்கொள்ளவேண்டும். மேலும் நாம் ஒருவருக்கு நம்முடைய பாங்கின் மேல் செக் கெழுதி அனுப்பினுல், நம்முடைய பாங்குக் கணக்கை உடனே வரவு செய்கிறேம். பாங்கரோ பணம் கொடுத்த பின்தான் நம்முடைய கணக்கைப்பற்று செய்வான். பாங்கர் பணத்தைக் கொடுக்குமுன் நாம் கணக்குகளை முடிவு செய் தால், பாங்குத் தொகையிலிருந்து செக்கின் தொகையையும் கழித்து குறைவாகக் காட்டுகிறேம். ஆகவே இந்த செக் கின் தொகையை பாங்கர் கணக்குப்படியுள்ள பாக்கியிலிருந்து குறைத்தால் தான் நம்முடைய கணக்குப்படியுள்ள தொகைக் குச் சமானமாகும். இன்னும், பாங்கருக்கு நம்மால் ஏதா

வது சில்லரைச் செலவுகள் ஏற்பட்டால் நம்முடையபாங்குக் கணக்கைப்பற்று செய்திருப்பான். இந்தப்பற்று பின்னால்தான் தெரியவரும். ஆகையால், பாங்கிலுள்ள பணம் பாங்கர் கணக்குப்படிக்கும் நம்முடைய கணக்குப்படிக்கும் மேற்கூறிய விஷயங்களை யெல்லாம் கூட்டிக்கழித்த பிற்பாடு சரியாக விருக்கின்றதா வென்று பார்க்கும் பொருட்டு கீழ்வரும் விதம் ஒரு காகிதத்தில் எழுதப்படும் குறிப்புக்கே பாங்குத் தொகையைச் சரி பார்க்கும் குறிப்பு (Bank Reconciliation Statement) என்று பெயர் :—

பாஸ்புக்குபடி பாக்கித்தொகை ரூ.	4300—0—0
பாங்கில் வசூல் செய்யும்படி அனுப்பப்பட்ட செக்குகளின் வசூலிக்கப்படாத தொகையின் கூடுதல்....	200—0—0
	4500—0—0
பாங்கர் மேல் நம்முடைய கணக்குக்காக பிறருக்கு எழுதின செக்குகளின் தொகை குறைவு	450—0—0
ரொக்கக் கணக்குப் புத்தகத்தில் பாங்குக் கணக்குப்படி பாக்கியிருப்பு	4050—0—0

அடிக்கடி இம்மாதிரியான குறிப்புகளை எழுதிப்பார்ப்பது பாங்குக் கணக்குகளின் பதிவுகளுக்கோர் திருத்தமாகும்.

சில்லரை ரோக்கக்கணக்கும், புத்தகமும்.
(Petty Cash Account)

ஒரு வியாபாரி தனக்கு வருகின்ற ரொக்கத்தை எல்லாவற்றையும் பாங்கிலேயே செலுத்தி விடுவானுனல், உடனுக்குடனே எற்படும் சில செலவுகளுக்கு அவன் கையில் கொஞ்சம் ரொக்கம் வைத்துக் கொண்டிருப்பது அவசியம். இந்த ரொக்கத்திலிருந்தே வியாபாரத்திலுண்டாகும் சில்லரைச் செலவுகளெல்லாம் செய்யப்படவேண்டும். சில்லரை ரொக்கம் எவ்வளவு இருக்கிறதென்றும் அதிலிருந்து சில்லரைச் செலவுகள் எவ்வளவு செய்யப்பட்டன வென்றும் கண்டுகொள்ளும் பொருட்டு, இந்த சில்லரை ரொக்கத்துக்கு மட்டும் ஓர் கணக்கு எற்படுத்தப்படுகிறது. ஒரு பெரிய வியாபாரத்தில் இந்த சில்லரை ரொக்கத்தை ஒருவரிடம் ஒப்புவித்து விட்டால் ஒவ்வொரு மாதமும் செலவுகள் ஆனவுடன் மேலும் ரொக்கம் கொடுக்கப்பட வேண்டுமாதலால் எவ்வளவு ரொக்கம் செலவுகளுக்குப் போதுமானது என்று தீர்மானிக்க முடியாதாகையால், அந்த விஷயத்தைச் சரியாகப் பார்த்துக் கொள்ளும்பொருட்டு ஓர்மார்க்கம் (Imprest system) இருக்கிறது. அந்த மார்க்கத்தின்படி சில்லரை ரொக்கமாக ஒரு தொகையைக் கொடுத்து ஒவ்வொரு மாதமும் எவ்வளவு செலவுகள் சில்லரை ரொக்கத்திலிருந்து செய்யப்பட்டனவோ அவைகளின் தொகையை மட்டும் திருப்பி சில்லரை ரொக்கக் குமாஸ்தாவுக்குக் கொடுக்கப்படும். செலவுகளால் குறைந்த பணம் மறுபடியும் வந்துவிடுகிறபடியால் சில்லரை ரொக்கம் எப்பொழுதும் ஒரே தொகையாக விருக்கிறது. மாதாமாதம் சில்லரைச் செலவுகளின்தொகை கொடுக்கப் படுகிறபடியால், சில்லரை ரொக்கம்கொஞ்சமும்குறையாமல் சாதாரண ரொக்

கக் கணக்கைப்போல் பாலன்ஸ்ஷீட்டில் சொத்துப் பக்கத்தில் கையிருப்பாகக் காணப்படும்.

சில்லரை ரொக்கத்தைப் பற்றின சில காரியங்களைக் குறிப்போம்:—

ஜூலை 1. சில்லரை ரொக்கத்துக்காக
பாங்கிலிருந்து வாங்கிக்கொடுக்கப்பட்டது ரூ 50-0-0

இக்காரியத்தில் சில்லரை ரொக்கக் குமாஸ்தா பணத்தைப் பெற்றுக்கொள்வதாலும் நம்முடைய பாங்குக் கணக்கு பணத்தைக் கொடுப்பதாலும்,

ஜூலை 1. சில்லரை ரொக்கக்கணக்கு பற்று ரூ. 50—0—0
பாங்குக் கணக்கால் ரூ. 50—0—0

என்று குறிக்கப்படவேண்டும்.

அதன் பிறகு ஷை மாதத்தில் வியாபாரச் செலவுக்காக ரூ. 35 கொடுக்கப்பட்டதென்று வைத்துக்கொள்வோம். இந்தச் செலவு சில்லரை ரொக்கத்திலிருந்து செய்யப்படுவதால்,

ஜூலை 31. வியாபாரச்செலவு கணக்கு பற்று ரூ 35—0—0
சில்லரை ரொக்கக் கணக்கால் ரூ. 35—0—0

என்று ஜர்னல் குறிப்பெழுதுகிறோம்.

பிறகு மாதமுடிவில் செலவான தொகையை செக்கு மூலமாய்க் கொடுத்து விடுகிறோமென்றால்,

ஜூலை 31. சில்லரை ரொக்கக்கணக்கு பற்று ரூ. 35—0—0
பாங்குக் கணக்கால் ரூ. 35—0—0

என்று குறிப்பேற்படும்.

இந்த குறிப்புகளெல்லாம் கீழ்கண்ட விதம் லெட்ஜர் கணக்கில் குறிக்கப்படுகின்றன:—

பற்று சில்லரை ரோக்கக் கணக்கு வரவு

ஜூலை 1	பாங்குக்கணக்கால்		50	0	0	ஜூலை 31	வியாபாரச்செலவு கணக்குக்கு		35	0	0
,, 31	பாங்குக்கணக்கால்		35	0	0	,, 31	அதிகப் பற்றுக்கு		50	0	0
			85	0	0				85	0	0
ஆகஸ்டு 1.	பற்றுபாக்கியால்		50	0	0						

மேலேயுள்ள பற்றுபாக்கி பாலன்ஸ் ஷீட்டுக்குக் கொண்டுபோகப்படும்.

சாதாரணமாக ரொக்கக் கணக்கையும் பாங்குக் கணக்கையும் லெட்ஜரில் எழுதாமல் தனியாக ஓர் ரொக்கப் புத்தகத்திலெழுதுவதால், ஜர்னலெழுத வேண்டிய அவசிய மில்லாமலிருக்கிறது. அதுபோலவே மேலேயுள்ள சில்லரைக் கணக்கையும் லெட்ஜரில் எழுதாமல் தனியாக சில்லரை ரொக்கப் புத்தகம் (Petty Cash Book) என்று ஓர் புத்தகத்தில் அதைப்பற்றின சில்லரை விஷயங்களைக் குறிக்கிறோம். மேலே காட்டியபடி இதில் இப்பொழுது ஜர்னல் குறிப்புகளெழுதாமல் நேரிலேயே சில்லரை ரொக்கப் புத்தகத்தில் ஓர் பதிவையும் அது சம்பந்தமான லெட்ஜர் கணக்கில் இரண்டாவது பதிவையும் செய்கிறோம். கீழ்வரும் செலவுகளை சில்லரை ரொக்கப் புத்தகத்திலெழுதி விளக்கிக் காட்டுவோம்;—

1920. மே. 1.	செக்குமூலமாய் சில்லரை ரொக்கம் கொடுக்கப் பட்டது.	ரூ.	75—0—0
,, 5.	தந்திச் செலவு	ரூ.	4—8—0
,, 7.	சரக்குகள் தூக்குக் கூலி	ரூ.	1—7—0
,, 9.	ஸ்டாம்புச் செலவு	ரூ.	6—8—0
,, 12.	தந்திச் செலவு	ரூ.	3—9—0
,, 15.	ரிப்பேர் செலவு	ரூ.	10—2—0
,, 18.	வண்டி வாடகைச்செலவு	ரூ.	3—0—0
,, 20.	பாகிங் சாமான் செலவு	ரூ.	2—4—0
,, 22.	விளக்கு, எண்ணை முதலிய செலவுகள்	ரூ.	8—9—0
,, 24.	காகிதம், பேனா முதலிய ஆபீஸ் செலவு	ரூ.	10—8—0
,, 28.	ஸ்டாம்புச் செலவு	ரூ.	5—0—0
,, 29.	காகிதச் செலவு	ரூ.	7—0—0
,, 31.	செக்கு மூலமாக சில்லரை ரொக்கம் கொடுக்கப் பட்டது	ரூ.	62—7—0

பற்று. சில்லரை ரொக்கப்

தேதி.	விபரம்.	பக்கம் நம்.	தொகை. ரூ.	அ.	பை.	தேதி.	விபரம்.	வவுசர் ந
1920						1920		
மே. 1	பாங்குக் கணக்கால்		75	0	0	மே. 5	தந்திச் செலவுக்கு	7
						,, 7	தூக்குக் கூலிக்கு	
,, 31	பாங்குக் கணக்கால்		62	7	0	,, 9	தபால் செலவுக்கு	
						,, 12	தந்திச் செலவுக்கு	8 பி.
						,, 15	ரிப்பேர் செலவுக்கு	13
						,, 18	வண்டி வாடகைச் செலவுக்கு	72
						,, 20	பாகிங் செலவுக்கு	
						,, 22	ஆபீஸ்விளக்குச்செல வுக்ரு	
						,, 24	காகிதம் முதலிய ஆபீஸ் செலவுக்கு	
						,, 28	தபால் செலவுக்கு	
						,, 29	காகிதம் முதலிய ஆபீஸ் செலவுக்கு	
						,, 31	அதிகப் பற்றுக்கு	
			137	7	0			
ஜூன் 1	பற்று பாக்கியால்		75	0	0			

மேலே காட்டியபடிபற்று வரவுகளை எழுதின பிற்பாடு, வில் அச்செலவின் தொகையையும் போட்டு அவைகளின் மேற்கூறிய செலவு கணக்குகளை லெட்ஜர் புத்தகத்தில் ரிவு ; ந ம் அடியில் குறிப்பிட்டிருக்கும் எண்ணிக்கை நம்பர்.

புத்தகம். வரவு.

தொகை. ரூ.அ.பை.	தந்தித் தபால் செலவு.	தூக்குக் கூலி வண்டிக் கூலி.	ரிப்பேர் செலவு.	பாகிங் செலவு.	ஆபீஸ் செலவு(எண்ணெ)	காகிதம் முதலிய ஆபீஸ் செலவு.
4 8 0	4 8 0					
1 7 0		1 7 0				
6 8 0	6 8 0					
3 9 0	3 9 0					
10 2 0			10 2 0			
3 0 0		3 0 0				
2 4 0				2 4 0		
8 9 0					8 9 0	
10 8 0						10 8 0
5 0 0	5 0 0					
7 0 0						7 0 0
62 7 0	19 9 0	4 7 0	10 2 0	2 4 0	8 9 0	17 8 0
75 0 0	7	7	6	6	8	8
137 7 0						

தனித் தனியாக ஒவ்வொரு செலவுக்கும் விடப்பட்ட பிரி மொத்தம் வரவுத் தொகைக்குச் சரியாக வேண்டும். பிறகு பற்று செய்யவேண்டும். ஒவ்வொரு செலவைக் காட்டும் லெட்ஜர் புத்தகத்தில் அந்தக் கணக்கு இருக்கும் பக்கத்து

லெட்ஜர் புத்தகத்தில் சில்லரை ரொக்கக்கணக்கு வைக்காமலிருந்தால் மேலே காணப்பட்ட ரொக்கப்புத்தகம் சில்லரை ரொக்கக்கணக்கைக் காட்டுவதால் லெட்ஜரில் ஓர் பாகமாகிறது. ஆனல் லெட்ஜரில் சில்லரை ரொக்கத்துக்காக ஓர் கணக்கு ஏற்படுத்தினேமானல், அதற்குள்ள பதிவுகளெல்லாம் முதலில் ஜர்னலில் குறிக்கப்பட்டு அதன் பிறகு லெட்ஜர் கணக்குக்குப் போகவேண்டும். அப்பொழுது மேலேகாட்டிய புத்தகம் ஓர் முக்கியமான லெட்ஜரைச் சேர்ந்த புத்தகமாக ஆகாமல் ஓர் சாதாரண விபரங்களடங்கிய குறிப்புப்புத்தக மாகக் கொள்ளப்படுகிறது.

ட்ரயல் பாலன்ஸும் முடிவுக்கணக்குகளும்.

லெட்ஜர் கணக்குகளெல்லாம் முடிவான பிறகே, வியாபாரச்சரக்குக்கணக்கு, லாபநஷ்டக்கணக்கு, பாக்கி ஜாப்தா முதலியவைகளெடுக்கப் படுகிறபடியாலும், லெட்ஜர் கணக்குகளின் முடிவுத்தொகைகளெல்லாம் ட்ரயல் பாலன்ஸில் காண்பிக்கப்படுகின்றன வாகையாலும், மேற்படி முடிவு கணக்குகளை லெட்ஜர் கணக்குகளின் உதவியில்லாமலே ட்ரயல் பாலன்ஸை மட்டும்வைத்துக் கொண்டு எழுதிவிடலாம். ஆதலால் லெட்ஜர் கணக்குகளைப்பார்க்காத வொருவர் ட்ரயல் பாலன்ஸை மட்டும் வைத்துக்கொண்டே முடிவுகணக்குகளை எழுதக்கூடும். எப்படியெனில், ட்ரயல் பாலன்ஸில் குறிக்கப்பட்ட ஒவ்வொரு கணக்கின்பாக்கியும் ட்ரேடிங் அக்கவுண்டிலாவது, லாபநஷ்டக்கணக்கிலாவது அல்லது பாலன்ஸ் ஷீட்டிலாவது எழுதப்படவேண்டும். இவ்விதம் ஒவ்வொரு பாக்கியையும் அதனுடைய ஸ்தானத்தில் எழுதினபின், ட்ரேடிங் அக்கவுண்டில் மொத்தலாபமும் லாபநஷ்டக்கணக்

கில் மிச்சலாபமும், பாக்கிஜாப்தாவில் சொத்துகள், கடன்கள், முதல், முதலியவிபரங்களும் தெரிந்து போகும்.

உதாரணமாக, இந்த அத்தியாயத்தில் கொடுக்கப்பட்ட மாதிரிக்கணக்கின் ட்ரயல் பாலன்ஸை எடுத்துக்கொள்வோம். ட்ரயல்பாலன்ஸைக் கொடுக்கும்போது வியாபார முடிவில் கையிருப்புச்சரக்கு எவ்வளவு என்றும் தெரிவிக்கப்படவேண்டும். மருந்துகள் கையிருப்பு மாதிரிக்கணக்கில் கொடுத்தபடி ரூ. 150 என்று வைத்துக்கொள்வோம்.

முதன் முதலில் ட்ரேடிங் அக்கவுண்டை எழுதும்பொழுது, பற்றுப்பக்கத்தில் ஆரம்பத்தில் சரக்குக்கையிருப்பு, நாம் வாங்கின சரக்குகளின் வாபீஸைக்கழித்துக் கொள் முதல் தொகை, சரக்குகளைப் பற்றின செலவுகள் முதலியவைகளையும், வரவு பக்கத்தில், விற்றசரக்குகளின் வாபீஸைக் கழித்து விற்றுமுதல் தொகையையும் முடிவில் கையிருப்புத் தொகையையும் எழுதவேண்டும். இதற்குவேண்டிய தொகைகளை ட்ரயல் பாலன்ஸிலிருந்து எடுத்துக் கொள்கிறோம்.

மேலேயுள்ள மாதிரிக்கணக்கில், மருந்துகள் கையிருப்பு ரூ. 830-ம், கொள்முதல்கணக்கு ரூ. 200-ம் வண்டிச் செலவான ரூ.2—8—0ம் ட்ரேடிங் அக்கவுண்டின் பற்றில் எழுதப்பட்டு, வரவில் விற்ற மருந்துகள் வாபீஸான ரூ. 65 ஐ, விற்றுமுதலான ரூ. 1592லிருந்து குறைத்து மிச்சம் ரூபாய் 1527 மட்டும் எழுதப்படுகிறது. இன்னும் ட்ரயல் பாலன்ஸோடு கொடுக்கப்பட்டதான முடிவிலுள்ள கையிருப்பு ரூ. 150யும் ட்ரேடிங் அக்கவுண்டினுடைய வரவிலெழுதுகிறோம். பிறகு, இக்கணக்கை முடிக்கும்பொழுது அதிகவரவு ரூ. 644-8-0 ஏற்படுகிறபடியால், பிறகு லாப நஷ்டக்கணக்கு எழுதும்பொழுது, அத்தொகையை லாபத்தில் போட்டுவிடுகிறோம்.

பிறகு, தள்ளுபடி ரூ. 4—0—0, வியாபாரச்செலவு ரூ. 45, சம்பளம் ரூ. 120, ரிப்பேர்செலவு ரூ. 30, டெலிபூன் செலவு ரூ. 29, வட்டி ரு. 29—9—0,பெறுமானக் குறைவு ரூ. 14—9—0 முதலியவைகள் நஷ்டங்களாகையால் லாப நஷ்டக்கணக்கின் இடதுபக்கத்திலெழுதி, இவைகளின் தொகையை மொத்தலாபத்திலிருந்து கழித்து மிச்சலாபத்தை எடுக்கிறோம். இவ்விதம் ரூ. 372—6—0 மிச்சலாபமாகக்காண்பிக்கப்படுகிறது.

பிறகு பாலன்ஸ் ஷீட்டில் ரொக்கம் ரூ. 162—8—0, பாங்குத்தொகை ரூ. 2104, ராஜு பிள்ளையின் தொகை ரூ. 120, ந. ராமசுவாமி அய்யரின் தொகை ரூ. 410, வீட்டின் பெறுமானக்குறைவு ரூ. 14—9—0 போக வீட்டின் பெறுமானம் ரூ. 3485—7—0, கையிருப்பு மருந்துகள் தொகை ரூ. 150 முதலியவைகளை சொத்துப் பக்கத்திலெழுதி கிருஷ்ண பிள்ளைக்குக் கொடுக்கவேண்டிய ரூ. 120—0—0 லாப நஷ்டக்கணக்கிலிருந்து எடுக்கப்பட்ட மிச்ச லாபம் ரூ, 372—6—0-ஐ முதல்தொகை ரூ. 5939—9—0டு சேர்த்து முடிவான முதல் தொகை ரூ.6311—15—0-யும் கடன்பக்கதிலெழுதி இருபக்கத்துத் தொகைகளும் சமமானுல், கணக்குகள் சரியாக எழுதப்பட்டனவென்று அறிகிறோம்.

லெட்ஜர் கணக்குகளை முடிவு செய்தபின் அவைகள் எப்படிக் காணப்படுமோ அதுபோலவே ட்ரயல் பாலன்ஸிலிருந்து அக்கணக்குகளை எழுதக்கூடும். மேலேயுள்ள ட்ரயல் பாலன்ஸிருந்து எழுதப்பட்ட சில கணக்குகள் கீழே மாதிரியாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன: —

பற்று. **முதல் கணக்கு.** வரவு.

ஜூலை 31	அதிக வரவால்		6311	15	0	ஜூலை 31	வரவு பாக்கிக்கு		5939	9	0
						,,	லாபநஷ்டக் கணக்குக்கு (மிச்ச லாபம்)		372	6	0
			6311	15	0				6311	15	0
						ஆகஸ்டு 1	வரவு பாக்கிக்கு		6311	15	0

பற்று. **மருந்துகள் கையிருப்புக் கணக்கு.** வரவு.

ஜூலை 1	பற்று பாக்கியால்		830	0	0	ஜூலை 31	ட்ரேடிங் அக்கவுண்டுக்கு		830	0	0
			830	0	0				830	0	0
ஆகஸ்டு 1	பற்று பாக்கியால்		150	0	0						

பற்று. **மருந்துகள் விற்றுமுதல் கணக்கு.** வரவு.

ஜூலை 31	ட்ரேடிங் அக்கவுண்டால்		1592	0	0	ஜூலை 31	நானாவித விவரங்களுக்கு		1592	0	0
			159	0	0				1592	0	0

பற்று. **வீட்டின் கணக்கு.** வரவ

						ஜூலை 31	அதிகப் பற்றுக்கு		3485	7	0
ஆகஸ்டு 1	பற்று பாக்கியால்		3485	7	0						

பற்று. **கிருஷ்ண பிள்ளை.** வரவு.

ஜூலை 31	அதிக வரவால்		120	0	0						
						ஆகஸ்டு 1	வரவு பாக்கிக்கு		120	0	0

பற்று. **வியாபாரச் செலவு கணக்கு.** வரவு.

ஜூலை 31	நானாவித விவரங்களால்		45	0	0	ஜூலை 31	லாபநஷ்டக் கணக்குக்கு		45	0	0
			45	0	0				45	0	0

ஆகவே ஒரு வியாபாரத்தின் நிலைமையைக் கண்டு பிடிப்ப தற்கு வழியாதெனில் அந்த வியாபாரத்து வரவு செலவு காரியங்களில் ரொக்கம் பாங்கு சம்பந்தப்பட்டவைகளை ரொக்கக்கணக்குப் புத்தகத்திலெழுதி, மற்ற விபரங்களை முதற் குறிப்பாகிய ஜர்னலிலெழுதி அவ்விரண்டு புத்தகங் களிலிருந்தும் குறிப்புகளை லெட்ஜர் கணக்குகளில் பதிவு செய்து ட்ரயல் பாலன்ஸ் எடுத்து ட்ரயல் பாலன்ஸில் காணப்பட்ட பாக்கிகளிலிருந்து மேற் கூறியவாறு மொத்த லாபத்தைக் கண்டு பிடிக்க ட்ரேடிங் அக்கவுண்டையும், மிச்ச லாபத்தைக் கண்டுபிடிக்க லாபநஷ்டக் கணக்கையும் அதன் பிறகு கடன்கள் சொத்துகள் முதலியவைகளைக் கண்டு கொள்ளும்படி பாக்கி ஜாப்தாவான பாலன்ஸ் ஷீட்டையும் எழுதுவதேயாகும்.

9-ம் அதிகாரம்

பில்-ஆப்-எக்ஸ்சேஞ்சுகளும் (Bills of Exchange) உண்டியல்களும் (Hundis).—பிரமிஸரி நோட்டுகள்.

நாம் யாருக்காவது பணம் கொடுக்கவேண்டுமென்றால் நம்முடைய பாங்குத் தொகையிலிருந்து கொடுக்குமாறு பணம் பெற்றுக்கொள்ள வேண்டியவர் மூலமாய் பாங் கருக்கு உத்திரவு பிறப்பிக்கின்றோம். இவ்விதம் பாங்குப் பணத்திலிருந்து கொடுக்கும்படி பாங்கருக்கு அனுப்பப்படும் உத்திரவுதான் செக்கு எனப்படும் என்று போன அதிகாரத் தில் சொல்லியிருக்கிறோம். நம்முடைய பணம் பாங்கரிடம் கொடுத்து வைத்திருப்பதால் அதை நம்முடைய இஷ்டப்படி

உபயோகப்படுத்த பாங்கர் கடமைப்பட்டிருக்கிறான். இது போலவே நமக்குப் பணம் கொடுக்கவேண்டிய ஒருவரை அப்பணத்தை நம்மிஷ்டப்படி செலவிடுமாறு உத்திரவு அனுப்பலாம். நமக்கு வரவேண்டிய தொகையைப் பெற்று நாம் பிறருக்குக் கொடுக்கவேண்டிய கடனைத் தனியாகக் கொடுப்பதற்கு பதிலாக, நமக்குப் பணம் கொடுக்கவேண்டியவரையே நேரில் நாம் கொடுக்க வேண்டியவர்களுக்குக் கொடுத்து விடுமாறு உத்திரவு அனுப்பிக்கலாம். இவ்விதமாக பாங்கரல்லாத ஒருவர் மேல் அவர் கொடுக்கவேண்டிய தொகையை தரிசனையிலாவது ஒரு குறிப்பிட்ட தேதியிலாவது அல்லது குறிப்பிட்ட காலத்திற்குள்ளாவது மற்றொருவருக்காவது அல்லது அவருத்திரவு பெற்றவருக்காவது அல்லது நேரில் கொண்டுவருபவருக்காவது யாதொரு நிபந்தனையுமின்றிக் கொடுக்கும்படியாக மேற்படி கடன் கொடுக்கவேண்டியவருக்கு எழுத்து மூலமாய் சொல்லப்படும் உத்திரவுக்கு பில்-ஆப்-எக்ஸ்சேஞ்சு என்று பெயர். இதற்கு பில் என்றும் சொல்லப்படும்.

செக்கைப் போலவே பில்-ஆப்-எக்ஸ்சேஞ்சுக்கும் மூன்று அம்சங்களிருக்கின்றன.

(1) ட்ராயர் அதாவது பில்லை எழுதுகிறவர்—பில்லினுடைய தொகையைப் பெறுவதற்குப் பதிலாக மற்றொருவருக்குக் கொடுக்கும்படி எழுதுபவர்.

(2) ட்ராயி அதாவது யார்மேல் பில் எழுதப்படுகிறதோ அவர்—யார் பில்லினுடைய தொகையைக் கொடுக்கக்கடமைப்பட்டவரோ அவர்.

(3) பேயி அதாவது பணத்தைப் பெற்றுக்கொள்ளும் படி உத்திர விடப்பட்டவர்—யாருக்குப் பணம் கொடுக்கும்படி சாட்டுதல் செய்யப்பட்டதோ அவர்.

ஒரு பில்-ஆப்-எக்ஸ்சேஞ்சு கீழ்வருமாறு காணப்படுகிறது:—

ரூ. 350-க்கு எக்ஸ்சேஞ்சு.

பம்பாய், ஜனவரி 13,1919.

செலுத்தப்படவேண்டிய தேதி—
ஏப்ரல் 16,1919.

ஸ்டாம்பு

மேற்படி தேதியிலிருந்து மூன்று மாதத் தவணைக்குள் ந. நாராயண செட்டியாருக்காவது அவர் உத்திரவுடையவருக்காவது நாங்கள் சரக்குகள் பெற்றுக் கொண்டதற்காக ரூபாய் முந்நூற்றைம்பது மட்டும் செலுத்தவும்.

கோ. ராமநாதய்யர்.

மகா-ள-ள-ஸ்ரீ,
வாசுதேவ செட்டியார் அவர்கள்,
மைசூர்.

இவ்விதம் எழுதப்பட்ட பில்லை ட்ராயர் பேயியிடம் கொடுத்து தனக்குப் பணம் கொடுக்கவேண்டியவரான ட்ராயி நேரில் அப்பணத்தை பேயிக்கே கொடுக்கச் சம்மதிக்கிறானென்று தெரிந்து வரும்படி அனுப்புகிறான். பில்லை பெற்றுக்கொண்டவுடனே பேயி அதை ட்ராயியிடம்

காண்பித்து ட்ராயி சம்மதித்தால் அவர் சம்மதத்தை அதாவது குறிப்பிட்ட தேதியில் பணத்தைக்கொடுக்க அவர்ஒப்புக்கொண்ட விஷயத்தை பில்லின்மேல் குறுக்கே நன்ருகத் தெரியும்படி சிகப்பு மசியால் எழுதிப் பெற்றுக்கொள்வார். இப்படி ட்ராயி ஒப்புக்கொண்டபின்பு அவனை அக்செப்டார் (Acceptor) என்றும், ஒப்புக்கொள்வதை, அவன் அக்செப்டு (Accept) செய்கிருனென்றும், அதன் பிறகு, பில்-ஆப்-எக்ஸ்சேஞ்சையே 'அக்செப்டன்ஸ்' (Acceptance) என்றும் சொல்லுகிருர்கள்.

ஒவ்வொரு பில்லுக்கும் அதிலுள்ள தொகைக்குத் தகுந்தவாறு ஸ்டாம்பு ஒட்டப்படவேண்டும்.

பில்-ஆப்-எக்ஸ்சேஞ்சுகளை எழுதுவதால் நமக்கு வரவேண்டிய தொகையை வசூலிப்பதோடு கூட பிறருக்குக் கொடுக்கப்படவேண்டிய கடனும் தீர்ந்துபோகிறது. ட்ராயி பில்லை ஒப்புக்கொள்வதால் அவனுல் கொடுக்கப்படவேண்டிய கடனுக்கு பாத்தியதை நன்ருய் விளக்கமாகிறது. செக்குகளைப் போலவே இவைகளையும் ரொக்கத்துக்கு பதிலாக நாம் பணம் கொடுக்கவேண்டியவர்களுக்கு மாற்றி (endorse) விடலாம். பேயியானவன் பில்லிலுள்ள பணம் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப்பின்தான் வரக்கூடியதாயிருந்தாலும் தனக்குப் பணம் முடையாக இருக்கும்பக்ஷத்தில் ஷெ பில்லை குறிப்பிட்டகாலத்துக்கு முந்தியே ஒரு பில் தரகுகாரரிடம் (Bill Broker) கொஞ்சம் தள்ளி விற்றுவிடலாம். இதற்கு பில்லை டிஸ்கவுண்டு செய்வது (Discounting the bill) என்று பெயர். பில்லுகளைப் பற்றினவரையில் இவ்வழக்கம் வியாபாரிகளுக்கோர் பெரிய நன்மையாகவிருக்கிறது.

ட்ராயி பில்லினுடைய தொகையைக் கொடுப்பதற்கு ஒப்புக்கொண்டுவிட்டால் தான் ஒப்புக்கொண்டதை இவ் விதம் பில்லின்மேல் குறுக்கே எழுதுகிறுன் :—

"ஒப்புக்கோள்ளப்பட்டது"

வாசுதேவ செட்டியார்,

23—1—1919.

"ஒப்புக்கொள்ளப்பட்டது" என்ற வார்த்தைகள் இல் லாமலே வெறும் கையெழுத்தும் தேதியும் போட்டால்கூட பில்லை ஒப்புக்கொண்டதற்கு அடையாளந்தான்.

சிலவேளைகளில் பில்லினுடைய தொகையைக் கொடுக்க ட்ராயி மறுப்பான். இதற்கு டிஸ்ஆனர் (Dishonour) அல்லது பில்லை மறுத்தல் என்று சொல்லப்படுவது வழக் கம். பேயியானவன் ட்ராயி பணத்தைக் கொடுத்துவிடுவான் என்ற நம்பிக்கையுடன் ட்ராயரிடமிருந்து பில்லை வாங்கிக் கொண்டு ட்ராயியிடம் போகிறுன். எப்பொழுது ட்ராயி பில்லை ஒப்புக்கொள்ளவில்லையோ உடனே ட்ராயரிடம் வந்து தனக்கு வரவேண்டிய பணத்தைக்கேட்பான். இப்பொழுது மறுபடியும் ட்ராயர் பேயிக்கு உத்திரவாதியாகிவிடுகிறுன். ஆதலால் பில்லானது ட்ராயியால் ஒப்புக்கொள்ளப்படுகிற வரையில் ட்ராயர் பேயிக்கு உத்திரவாதியாகவேயிருக்கிறுன். ஒப்புக்கொள்ளப்பட்ட பின்பு ஷை கடன் தீர்ந்ததுபோ லாகும்.

எப்பொழுது ட்ராயி பில்லை டிஸ்ஆனர் செய்துவிட் டானே உடனே ட்ராயரை உத்திரவாதம் செய்யவேண்டி பேயி எழுத்து மூலமாக ட்ராயருக்கு அறிக்கை அனுப்ப வேண்டும். மேலும் ட்ராயி பில்லை மறுத்த விஷயத்தை

அத்தாக்ஷியுடன் ருசுப்படுத்துவதற்காக பேயி அல்லது பில்லையுடையவர் ராஜாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட அதிகாரிகளிடம் (Notary Public) விஷயத்தைத் தெரிவித்து அவர்கள் மூலமாக மறுபடியும் பில்லை ட்ராயிக்கு அனுப்ப வேண்டும். இப்பொழுதும் மறுக்கப்பட்டால், அவ்வதிகாரி தன்னுடைய ஆபிஸில் ட்ராயி பில்லை மறுத்தவிஷயத்தைப் பதிவு செய்து, ஷெ விஷயத்தை பில்லினும் மேல்பாகத்திலாவது அல்லது பில்லின்மேல் ஒட்டப்பட்ட தனித்துண்டு காகிதத்திலாவது குறித்து கையொப்பமிட்டு ட்ராயருக்காவது அல்லது பில்லைக்கொடுத்தவருக்காவது அதாவது மாற்றினவருக்காவது அனுப்புவார். இவ்விதம் ராஜாங்கஅதிகாரி செய்யும் உதவியின் பொருட்டு அவருக்குக் கட்டணம் கட்ட வேண்டும். இந்தச் செலவு பில்லையுடையவரைச் சேர்ந்ததாயிருந்தாலும் பின்னால் பில்லுக்காகப் பணம் கொடுக்கவேண்டியவரிடமிருந்து சேர்த்துப் பெற்றுக்கொள்ளலாம்.

பில்லில் குறிப்பிட்ட காலத்தில் பணத்தைச் செலுத்த ட்ராயியால் முடியாது என்று ட்ராயருக்குத் தெரியுமானால் ட்ராயியினுடைய வேண்டுகோளுக் கிணங்கி அவனுக்குச் சகாயமாக பில்லை வாபீஸ் செய்துகொள்ளலாம். இப்பொழுது ட்ராயர் பேயிக்கு மறுபடியும் முன்போலவே உத்திரவாதமாகிறான்.

ஆனால் மேற்கூறியவாறு பில் வாபீஸ் செய்யப்பட்டாலுங்கூட, ட்ராயி ட்ராயருக்குக் கொடுக்கவேண்டிய தொகைக்கு மறுபடியும் பில் புதிதாக எழுதப்படும். முன் குறிப்பிட்ட காலத்துக்குப் பின்பு எப்பொழுது ட்ராயிக்கு சௌகரியமோ அந்த கெடுவைக் குறிப்பிட்டு புதிதாக ஏற்படுத்தப்பட்ட இந்தக் கெடுவினால் பணம் செலுத்த காலதாமதம் ஏற்

படுகிறபடியால் புது கெடுவுக்குள்ள வட்டியும் பழைய பில்லி னுடைய தொகையோடு சேர்க்கப்பட்டு மொத்தத்தொகைக்கு புது பில் எழுதப்படுகிறது.

குறிப்பிட்ட கெடுவில் கொடுப்பதாக பில்லை ஒப்புக் கொண்ட அக்செப்டார் அக்காலத்துக்கு முந்தியே பணத் தைப்பேயிக்கு சிலசமயங்களில் கொடுத்து விடலாம். இப்படி சீக்கிரம் பணம் பெறப்படுவதால் அந்த சௌகரியத்தை உத் தேசித்து, அக்செப்டார் கொடுக்கும் பணத்தில் பணம்பெற் றுக் கொள்ளும் பேயி கொஞ்சம் தள்ளுபடி செய்கிறான். இப்படி அக்செப்டாருக்குக் கொடுக்கப்படும் தள்ளுபடிக்கு 'ரிபேட்' (Rebate) என்று பெயர். இது அக்செப்டாருக்கு ஓர் லாபமாகும். இனி இந்த பில்லுகளைப்பற்றிய கணக்கு களை எழுதுவோம்.

பணம் வரவேண்டிய பில்கணக்கு

நமக்குப் பணம் வரவேண்டியதாயிருந்தால் பணம் கொடுக்க வேண்டியவர்களிடமிருந்து பில் அனுப்பப்படு கிறது. பில்லை ஒப்புக்கொள்ளவேண்டியவன் நமக்குப் பணத் தைக் கொடுக்கக் கடமைப் பட்டவனாகிறான். எப்படியும் பில்லை நாம் வைத்திருக்கும் பக்ஷத்தில் பணம் நமக்கு வந்து சேரவேண்டுமாகையால் அது அநேகமாக பணத்தைப் போலவே பாவிக்கப்படுகிறது. ஆனால் கொஞ்சகாலம் கழித் துப் பணம் வருமாகையால் ரொக்கக் கணக்கிலெழுதப்படா மல் பணம் வரவேண்டிப பில் கணக்கு (Bills Receivable a/c) ஒன்று ஏற்படுத்தி அதில் குறிக்கவேண்டும். நமக்கு வரவேண்டியபணத்திற்கு பதிலாக பில் வருகிறதாகையால், பில் வந்தவுடன் ஷ கணக்கைப்பற்றுசெய்து பில் கொடுத்த

வரின் கணக்கை வரவெழுதி அவரால் கொடுக்கவேண்டிய கடனைத்தீர்த்துவிடுகிறோம். நாம், அக்செப்டாரிட மிருந்து பில்லுக்குப்பணம் வந்தவுடன், பணத்துக்காக ரொக்கக் கணக்கைப்பற்று செய்து அக்செப்டாரிடம் பணம் பெற்றுக் கொண்டவுடன் பில்லைக்கொடுத்து விடவேண்டு மாகையால் ஷை பில் கணக்கை வரவு செய்ய வேண்டும். அக்செப்டா ருக்கும் நமக்கும் யாதொரு சம்பந்தமில்லை யாகையால் அவ ரைப் பற்றின கணக்கு நம்முடைய புத்தகங்களில் வராது. நாம் ஒரு பில்லுக்கு ட்ராயராக விருந்து நம்முடைய பெய ருக்கே பில்லை எழுதிக்கொண்டாலாவது, நமக்காக பில்லு ஒருவரால் எழுதப்பட்டு வந்தாலாவது அதாவது நாம் பேயியாக விருந்தாலாவது அல்லது நம்முடைய பெயரில் ஒரு பில் மாற்றப்பட்டாலாவது அல்லது ஒரு பில்லுக்குத் தள்ளிப் பணம்கொடுத்து வாங்கிக் கொண்டாலாவது நாம் பில்களைப் பெற்றுக்கொண்டு பணம் பெறவேண்டியவர்களா கிறோம். இச்சமயங்களில் பணம் வரவேண்டிய பில் கணக்கு ஏற்படுத்திப்பதிவு செய்கிறோம்.

பி. ராமன் என்பவன் நமக்கு ரூ. 1000 கொடுக்க வேண்டுமென்றும் அவன் கொடுக்க வேண்டிய தொகைக்கு நாம் நம்முடைய பேரிலேயே ஒரு பில் எழுதினேமென்றும் வைத்துக்கொள்வோம். நாம் பில் எழுதிவிட்டாலுங் கூட பி. ராமனல் அது ஒப்புக்கொள்ளப்பட்டால்தான் அந்த பில் லுக்குக் கௌரவம் ஏற்படும். பி. ராமன் என்பவன் பில்லை ஒப்புக்கொண்டு நம்மிடம்அனுப்புவதாலும் அந்தபில்லுக்காக அவனிடமிருந்து பணம்வர வேண்டியதா யிருக்கிறதாலும்,

பணம் வரவேண்டிய பில்
கணக்கு பற்று ரூ. 1000—0—0

பி. ராமனால் ரூ. 1000—0—0

என்ற பதிவைச்செய்யவேண்டும்.

மேற்கூறிய விஷயத்தில் பி. ராமனிடமிருந்து அவனால் ஒப்புக்கொள்ளப்பட்ட பில்லைப் பெற்றுக்கொண்டோமென்றாலும் அல்லது பி. ராமனுடைய அக்செப்டன்ஸைப் பெற்றுக் கொண்டோமென்றாலும் மேலே காட்டியபடி தான் ஜர்னல் குறிப்பு செய்யவேண்டும்.

மேலுள்ள இரண்டு விஷயங்களிலும் நாம் ட்ராயராகவிருந்து பில்லைப்பெற்றுக்கொண்டோம். நாம் பேயியாக விருக்கும்பக்ஷத்தில் நமக்குத்தொகை கொடுக்கிறவர் ட்ராயராதலாலும் அதற்கு பதிலாகத்தான் பில் அனுப்பப்படுகிறதாலும் அந்த பில்லை, ட்ராயியால் ஒப்புக்கொள்ளப்பட்டு அவனிடமிருந்தே நேரில் வாங்கிக் கொண்டாலுங்கூட, ட்ராயரிடமிருந்தே வந்ததாக நினைத்து பணம் வரவேண்டிய பில் கணக்கைப் பற்றுசெய்து ட்ராயர் கணக்கை வரவு செய்யவேண்டும்.

உதாரணமாக, பி. கோவிந்தன் என்பவரின் பில்லை, எஸ். வாசன் என்பவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு, அவரிடமிருந்து பெற்றுக்கொண்டோம், ரூ. 1000. இவ்விஷயத்தில் பில்லுக்குட்ராயர் பி. கோவிந்தனே. எஸ். வாஸன் என்பவர் பில்லை ஒப்புக்கொண்டு பி. கோவிந்தனுக்கு அனுப்புவது போலவும், மறுபடியும் பி. கோவிந்தன் நாம் பேயியாகையால் நமக்கு அனுப்புவது போலவும் எண்ணி,

பணம் வரவேண்டிய பில்
கணக்கு பற்று ரூ. 1000—0—0
பி. கோவிந்தனால் ரூ. 1000—0—0

என்ற குறிப்பை செய்ய வேண்டும்.

ஒருவரால் ஒப்புக்கொள்ளப்பட்ட பில் வேறொருவரிடமிருந்து நமக்கு மாற்றப்பட்டாலும், அவர் நமக்குக்கொடுக்கவேண்டிய தொகைக்குப்பதிலாக பில்லை அனுப்புகிறபடியால்பணம் பெறவேண்டிய பில் கணக்கைப்பற்று செய்து கடன்தீரும்படி பில்லைக் கொடுத்தவர் கணக்கை வரவு செய்யவேண்டும்.

உதாரணமாக, வாஸன் என்பவரால் ஒப்புக்கொள்ளப்பட்ட பில்லை ராமன் என்பவரிடமிருந்து பெற்றுக்கொள்கிறோம், ரூ. 500. இதற்கு ஜர்னல் குறிப்பு கீழ்வருமாறு:—

பணம் வரவேண்டிய பில்
கணக்கு பற்று ரூ. 500—0—0,
ராமனுல் ரூ. 500—0—0

ராமன் என்பவர் வாஸனுல் ஒப்புக் கொள்ளப்பட்ட பில்லை நம்மிடம் கொடுத்துக் குறைந்த விலைக்குச் செக்குப் பெற்றுக்கொண்டார்கள். ரூ. 480.

இதில் ராமனிடமிருந்து பில்லை வாங்கி உடனே செக்குக் கொடுத்துவிடுகிறோமாகையால், ராமனுக்கும் நமக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை.

பில் நம்மிடம் வந்து சேருவதாலும் அதற்குப்பின்னுல் வாஸனிடமிருந்து நாம் பணம் வாங்கவேண்டிய தாகையாலும் பணம் வாங்கவேண்டிய பில் கணக்கைப்பற்றுசெய்து, நாம் செக்கு கொடுப்பதால் நம்முடைய பாங்குக்கணக்கை வரவு செய்கிறோம். நாம் செக்குக் குறைந்த விலைக்குக் கொடுத்திருக்கிறோமாகையால், பில்லில் குறிப்பிட்டதேதிக்குமுன்பு நாம் பணம் கொடுத்திருக்கிற ஓர் உதவிக்காகக்

கொடுக்கப்படுகின்ற இந்த வித்தியாசத் தொகை நமக்கோர் லாபமாகும். ஆகவே தள்ளுபடிக்கணக்கை வரவு செய்ய வேண்டும்.

பணம் வரவேண்டிய பில்
கணக்கு பற்று ரூ. 500—0—0.

கீழ்க்கண்டவைகளால்: —

பாங்குக்கணக்கு,	ரூ.	480—0—0,
தள்ளுபடிக்கணக்கு	,,	20—0—0

இவ்வாறு நமக்குப்பணம் வரவேண்டியதற்கு பதிலாக பில்லுகளைப் பெற்றுக்கொள்கிறோம். அதேபில்களை நாம் யாருக்குப் பணம் கொடுக்க வேண்டுமோ அவர்களுக்கு மாற்றி விடுவோம். அப்பொழுது நம்மிடமிருந்து பில்லுகள் வெளிப்போகின்றபடியால், மேற்கூறிய பணம்வரவேண்டிய பில் கணக்கை வரவு செய்யவேண்டும்.

நாம் பணம் பெற்றுக்கொள்வதற்காக நம்மிடம் வந்திருக்கிற ஒரு பில்லை, பிறருக்கு என்டார்ஸ் செய்தாலாவது, பில்லின் தொகையை அக்செப்டாரிடமிருந்து வாங்கிக் கொண்டு விட்டாலாவது, குறிப்பிட்டதேதியில் பில்லின் தொகையை அக் செப்டார் கொடுக்கா விட்டாலாவது, ஷை பில் ட்ராயரால் வாபீஸ் செய்யப்பட்டாலாவது, ஒரு பில்லை நாம் பிறரிடம் கொடுத்து பதிலாக அவரிடமிருந்து தள்ளிப் பணம் வாங்கிக் கொண்டாலாவது, நம்மிடமிருந்து பில் வெளியே போகிறது.

நாம் பில்லை ஒருவருக்கு என்டார்ஸ் செய்யும் பொழுது, முன்னமே அவர் கணக்கில் நாம் பணம் கொடுக்கும்படி வர விருக்கிறபடியால் அக்கடனை இப்பொழுது, பில்லைக்

கொடுத்துத் தீர்ப்பதாலும் அவர் பில்லைப்பெற்றுக் கொள்ளு கிறபடியாலும், அவர்கணக்கைப்பற்று செய்யவேண்டும். நம் மிடம் வந்த பில் வெளியில்போய்விடுகிறபடியால் முன்னம் பில் கணக்கில் செய்யப்பட்ட பதிவைத்தீர்க்கும் பொருட்டு அதே பில் கணக்கை இப்பொழுது வரவு செய்யவேண்டும்.

குறிப்பிட்டதேதியில் நம்மிடம் இருக்கும் பில் அக் செப்டாரால் ஆனர் செய்யப்பட்டால் அதாவது பணம் கொடுக்கப்பட்டால், நம்முடைய ரொக்கக்கணக்கைப் பற் ருக்கி பணம் வாங்கிக்கொண்டதற்கு பதிலாக அக்செப்டாரி டம் பில்லைக்கொடுத்து விடவேண்டுமாகையாலும் பணம் பெற்றுக்கொண்ட பின்பு இவ்விஷயம் தீர்ந்துவிடுவதால் பில் கணக்கில் பற்றுசெய்யப்பட்ட பதிவைத் தீர்க்கவேண்டு மாகையாலும், ஷ பணம் வரவேண்டிய பில் கணக்கை வரவு செய்கிறோம். நாம் ரொக்கம் பெறுவதற்கு பதிலாக நம்முடைய பாங்கரை பணம் வசூல் செய்யச் சொன்னால் அப்பணம் நம்முடைய பாங்குக்கணக்கில் போகு மாதலால், பாங்குக் கணக்கு பற்றுசெய்யப்படும்.

இப்பொழுது கீழ்வரும் விவரத்தை எடுத்துக் கொள் வோம்: —

வாஸனால் ஒப்புக் கொள்ளப்பட்டு ராமனிடமிருந்து வந்த பில் ரூ. 500 இப்பொழுது பணம் கொடுக்கப்படாமல் மறுக்கப்பட்டது.

முதலில்வாஸன் என்பவரை நம்பியே ராமனிடமிருந்து பில்லை நாம் வாங்கிக்கொண்டிருப்பதால் எப்பொழுது வாஸன் பில் பணத்தைக் கொடுக்க மறுத்தாரோ, அந்த பில்லினால் நமக்குக் காரியமில்லை. அதை வைத்துக் கொண்டிருப்ப

தால் ராமனுல் நமக்குக் கொடுக்கப்படவேண்டிய கடன் தீர்ந்ததாகாது. ஆதலால் பில்லை நாம் வைத்துக் கொள்ளாமல், வாஸன் பணத்தை மறுத்ததற்கு அத்தாக்ஷியாக ராஜாங்க அதிகாரியால் கையொப்பமிட்டு, ராமனுக்கு அனுப்பி பழைய படி அவர்கொடுக்கவேண்டிய கடனுக்கு அவரைப்பற்று செய்கிறோம். ஷை பில் நம்மைவிட்டுப் போவதால் பில் கணக்கில் வரவெழுதுகிறோம். இங்கு மறுக்கப்பட்ட பில்லின் மேல் ராஜாங்க உத்தியோகஸ்தர் கையொப்ப மிடுவதற்காக கட்டணம் கட்டவேண்டு மென்று சொல்லியிருக்கிறோம். நாம் மேற்கூறிய செலவைச்செய்தாலுங்கூட நமக்குப்பணம் கொடுக்கவேண்டிய ராமன் பொருட்டு செய்யப்படுகிறபடியால் இச்செலவையும் அவர் கணக்கில் பற்றெழுதவேண்டும். இப்பொழுது ராமன் பில்லின் தொகைக்கும் பில் மறுக்கப்பட்டதால் நோடிங் (Noting charges) செலவுக்கும் சேர்த்துப் பற்ருகிருன். ஆகவே ஜர்னல் குறிப்பு கீழ்வருமாறு: —

ராமன் பற்று ரூ. 502—0—0

கீழ்க்கண்டவைகளால்:—

பணம் வரவேண்டிய பில் கணக்கு (மறுக்கப்பட்டது)	ரூ.	500—0—0
ரொக்கக்கணக்கு (நோடிங் செலவு)	,,	2—0—0

பதிவுகள் தெளிவாகத் தெரியும் பொருட்டு மேற்காட்டியபடி நாரேஷன் எழுதவேண்டும்.

மேற்கூறிய படி பில்லைநாம் வைத்திருந்து அக்செப்டாரைப் பணம் கேட்டு மறுக்கப்பட்டால் மாத்திரம் பில்லை அனுப்பிவிடுவதால் பில் கணக்கில் வரவு ஏற்படும்.

இப்பொழுது மேலே யுள்ள ராமனிடமிருந்து வந்த பில்லை கிருஷ்ணனுக்கு என்டார்ஸ் செய்திருந்தோ மென்றும் அது இப்பொழுது மறுக்கப்பட்டுத் திரும்பிவந்ததென்றும் வைத்துக்கொள்வோம்.

கிருஷ்ணனுல் செய்யப்பட்ட நோடிங் செலவு ரூ. 2.

பில் மறுக்கப்பட்டதால் கிருஷ்ணன் அதை நமக்கு அனுப்பி நம்முடைய கணக்கை நோடிங் செலவுள்பட பற்று செய்வான். அப்பொழுது நமது பில் கணக்கு பூராத் தொகைக்கும் பற்ருகும்.

பணம் வரவேண்டிய பில்
கணக்கு பற்று ரூ. 502—0—0
கிருஷ்ணனுல் ரூ. 502—0—0
(நோடிங்செலவுள்பட மறுக்கப்பட்ட பில்லின் தொகை)

நாமும் ஷ பில்லை ராமனிடமிருந்து வாங்கிக் கொண்டிருப்பதால் மறுக்கப்பட்ட பில் நமக்கு உபயோக மில்லாமல் ராமனுக்குத் திருப்பி அனுப்பித்து, அவன் பொருட்டு நம்முடைய கணக்கும் நோடிங் செலவுக்குப் பற்ருயிருக்கிறதால், ராமன் கணக்கை இவ்விதம் முழுத்தொகைக்குப்பற்று செய்து, பில் கணக்கை வரவு செய்கிறேம்:—

ராமன் பற்று ரூ. 502—0—0
பணம்வரவேண்டிய பில் கணக்கால் ரூ 502—0—0.

இவ்விதம் நாம் ஒரு மறுக்கப்பட்ட பில்லைப்பெற்று உடனே இன்னொருவருக்கு அனுப்புவதற்காக பில்கணக்கில் அநாவசியமாக இரண்டு பதிவுகள் செய்யவேண்டாம். அவைகளை ஒன்ருகச்சேர்த்து இவ்விதம் குறிக்கிறேம்:—

ராமன் பற்று ரூ. 502—0—0

கிருஷ்ணனுல் ரூ. 502—0—0

(நோடிங் செலவுஉள்பட மறுக்கப்பட்ட பில்லின் தொகை)

மேலே சொல்லப்பட்ட ராமனிடமிருந்து வந்த பில்லை நமது பாங்கரிடம் கொடுத்து பணத்தேவையினுல் குறிப்பிட்டதேதிக்கு முன்னதாகவே தள்ளுபடி போக ரூ. 490 ரொக்கம் பெற்றுக்கொண்டோம். அதாவது பில்லை நமது பாங்கரிடம் டிஸ்கவுண்டு செய்து ரூ. 490 ரொக்கம் பெற்றுக்கொண்டோம்.

இவ்விபரத்தில் நாம் பாங்கரிடமிருந்து ரொக்கம் பெற்றுக்கொள்வதால் ரொக்கக்கணக்கையும், பாங்கருக்கு தள்ளிக் கொடுக்கப்பட்ட தள்ளுபடி நமக்கு நஷ்டமாவதால் தள்ளுபடி கணக்கையும் கீழேயுள்ளபடி பற்று செய்து பில்பாங்கரிடம் கொடுக்கப்படுவதால் பில்கணக்கை வரவு செய்ய வேண்டும்.

கீழ்க்கண்டகணக்குகள்:—

ரொக்கக்கணக்கு	பற்று	ரூ.	490—0—0
தள்ளுபடிக்கணக்கு	,,	ரூ.	10—0—0
பணம் வரவேண்டிய பில்கணக்கால்		ரூ.	500—0—0

அல்லது பில்லின் பணத்தை ரொக்கமாக வாங்காமலே பாங்குக் கணக்கில் சேர்த்துவிட்டால், ரொக்கக்கணக்குக்கு பதிலாக பாங்குக்கணக்கை டிஸ்கவுண்டு போகபாக்கி பணத்துக்குப்பற்று செய்யவேண்டும்.

இப்பொழுது, மேலே சொல்லியபடி டிஸ்கவுண்டு செய்த பில் குறித்தகாலத்தில் மறுக்கப்பட்டுத் திரும்பி வந்த

தென்று வைத்துக்கொள்வோம். பாங்கரால் கொடுக்கப் பட்ட நோடிங் செலவு ரூ 2.

மறுக்கப்பட்ட பில் பாங்கரிடத்தில் பிரயோஜன மில்லை யாதலால் அதை நமக்குத் திருப்பியனுப்பி நமது கணக்கை நோடிங் செலவையும் சேர்த்து மொத்தத்தொகைக்கு டெபிட் செய்ய, நாம் அந்த பில்லை உடனே நமக்குப்பணம் கொடுக்க வேண்டியவரான ராமனுக்கு அனுப்பி அவர் கணக்கைநோ டிங் செலவுள்படப்பற்று செய்யவேண்டியிருக்கிறது. ஆனால் தனித்தனியாகப் பதிவுகளைச் செய்யாமல்,

ராமன்பற்று ரூ. 502—0—0

பாங்கரால் ரூ. 502—0—0

(நோடிங் செலவு சேர்ந்து மறுக்கப்பட்ட பில் லின் தொகை)

என்று ஜர்னல் குறிப்பைச் செய்கிறோம்.

வாஸனால் ஒப்புக்கொள்ளப்பட்ட ரூ. 1200-க்கு ஒரு பில்லானது வாபீஸ் செய்யப்பட்டு அதற்காக மற்றொரு பில் எழுதப்பட்ட தென்றும், புது பில்லில் ரூ. 25 வட்டியும் சேர்க்கப்பட்ட தென்றும் விபரத்தை எடுத்துக் கொள் வோம்.

இங்கு பில்லை நாம் எழுதினவர்களாக வைத்துக்கொள் வோம்.

பில் வாபீஸ் செய்யப்பட்டதற்கு அடையாளம் நாம் அதை வாஸனிடம் கொடுத்து விடவேண்டியதே. அப்படிக் கொடுத்துவிட்டால், ட்ராயியான வாஸன் கொடுக்கவேண் டிய கடன் தீராமல் அப்படியே நிற்கிறது. அக்கடனுக்கும், காலதாமதத்தால் மேலே சொல்லப்பட்டபடி சேர்க்கப்பட்ட

ரூ. 25 வட்டிக்கும் வாஸன் புதிதாக ஒரு பில்லை ஒப்புக் கொள்ளுகிறான். ஆகவே இப்பொழுது, வாஸன் முன்னிருந்த கடன் தொகையும் பிறகு வட்டித்தொகையும் சேர்ந்த மொத்தத் தொகைக்கு பாத்தியப்படுகிறார். இதில் நமக்கு வரக் கூடிய வட்டி ரூ. 25 லாபமாதலால் வட்டிக் கணக்கும், பழைய பில் வாபீஸானதற்கு அடையாளமாக பில் வெளிப் போவதால் பில் கணக்கும் வரவு செய்யப்படவேண்டும். பிற்பாடு புது பில்லை மொத்தத்தொகைக்கு வாஸன் ஒப்புக் கொண்டு நமக்கு அனுப்புவதால் பில் கணக்கு பற்றாகி, ஷை பில்லை ஒப்புக்கொண்ட மாத்திரத்தில் வாஸன் கொடுக்க வேண்டிய கடன் தீர்ந்ததாகப் பதிவு செய்யவேண்டுமாதலால் அவர் கணக்கை வரவு செய்யவேண்டும். ஆதலால் ஜர்னல் குறிப்பு கீழ்க்கண்டவிதம் செய்யப்படும்:—

வாஸன் பற்று ரூ.		1225—0—0
கீழ்க்கண்ட கணக்குகளால்:—		
பணம் வரவேண்டிய பில் கணக்கு	ரூ.	1200—0—0
வட்டிக்கணக்கு	,,	25—0—0
பணம் வரவேண்டிய பில் கணக்கு பற்று	ரூ.	1225—0—0
வாஸனால்	ரூ.	1225—0—0

ஒரு குறிப்பிட்ட காலத்திலில்லாமல் பார்த்த மாத்திரத்தில் பணம் கொடுக்கப்படும் படியாக பில்லுகள் எழுதப்படுவதுமுண்டு. இந்தப் பில்லுகளைப் பெற்றுக்கொண்ட வுடனேயே நாம் பணத்தைப் பெற்றுக்கொள்ள வழி யிருக்கிறபடியால், ரொக்கத்தைப் போலவே இது மாதிரியான பில்லுகள் பாவிக்கப்பட்டு ரொக்கக் கணக்கு பற்று செய்யப்படுகிறது. ஒரு வேளை இந்த பில்லுகள் மறுக்கப்படும் பக்ஷத்

தில், முன்னம் ரொக்கக் கணக்கைப் பற்று செய்ததற்காக இப்பொழுது வரவு செய்யவேண்டும்.

நமக்கு ஒருவன் பணம் கொடுக்கவேண்டி யிருந்தால் நமக்கு ரொக்கம் கொடுப்பதற்கு பதிலாக அவனுக்குக் கடன் கொடுக்கவேண்டியவனை நமக்கு நேரிலேயே பணத்தைக் கொடுத்துவிடும்படி தூண்டும் உத்திரவுதான் பில்லென்பது. நாமும் அந்த பில்லை நாம் பணம் கொடுக்க வேண்டியவர்களிடம் கொடுத்து பில்லை நமக்குக் கொடுத்தவனுக்குக் கடன் கொடுக்க வேண்டியவனிடமிருந்து பணம் பெறுமாறு சொல்லி விடுகிறோம். நமக்குப் பணம் வரவேண்டிய பில்லுகளை யெல்லாம் நமது கடன்களைத் தீர்க்க அனுப்பிவிடுவதால், நமக்கு முதலில் பில்லுகள் வந்தபிறகே அவைகளை யனுப்பக்கூடும். ஆகவே எவ்வளவு பில்லுகள் நமக்குக் கிடைத்திருக்கின்றனவோ அவ்வளவு பில்லுகள் தான் வெளியில் போகுமாதலால், வரவேண்டிய பில் கணக்கில், ஒன்று, பாக்கி யில்லாமலிருக்க வேண்டும், அல்லது குறைந்த பில்லுகள் வெளியில் அனுப்பப்பட்டு பணம் வரவேண்டிய பில்லுகள் பாக்கிக் கையிருப்பு இருக்கவேண்டும். ஆகவே பில்கணக்கில் ரொக்கக் கணக்கைப்போல் எப்பொழுதும் அதிகப் பற்றே காண்பிக்கப் படும். இந்த அதிகப் பற்று நமக்கு வரவேண்டிய தொகையைக் குறிக்கிற தாகையால் கணக்குகளின் முடிவு காலத்தில் பாக்கி ஜாப்தாவில் சொத்துப் பக்கத்தில் காண்பிக்கப் படும்.

இங்கு சொன்னபடியே நாம் பிறர் மேல் ஒரு பில் எழுதினாலுங்கூட அது நம்முடைய பில்கணக்கில் பற்றாகியே பிறகு வெளிப் போகிறது.

உதாரணமாக, கிருஷ்ணன் பேரில் ராமனுக்காக ரூ.100க்கு நாம் பில் எழுதினேமானல், நாம் பில்லை எழுதி முடித்தவுடன் ராமனுக்கு அனுப்புகிறோம். ராமன் கிருஷ்ணனிடம் காண்பித்து பில்லை ஒப்புக்கொள்ளச் செய்கிறான். பிறகு அந்த பில் ராமனிடம் நேரில் கொடுக்கப்பட்டாலுங் கூட, ஒப்புக்கொண்டவுடன் பில்லை நமக்கு அனுப்புவதாகவும் பிறகு நாம் ராமனுக்கு அதை அனுப்புவதாகவும் நினைத்து, தனித் தனியாக இரண்டு பதிவுகளை இம்மாதிரி செய்யவேண்டும்:—

பணம் வரவேண்டிய பில்கணக்கு
பற்று ரூ. 100—0—0

கிருஷ்ணனல் ரூ. 100—0—0

ராமன் பற்று ரூ. 100—0—0

பணம் வரவேண்டிய பில்கணக்கால் ரூ. 100—0—0

ஒருவருடைய கணக்கைத் தீர்ப்பதற்கு ரொக்கத்திற்கு பதிலாக பில் கொடுக்கப் படும்பொழுது, இந்த பில்லின் தொகையை நாம் பின்னல் பெற்றுக் கொள்ள வேண்டியிருப்பதால், பில்களின் மீது எவ்வளவு வரவேண்டிய தொகை என்று கண்டு கொள்வதற்குத் தனியாக பணம் வரவேண்டிய பில்கணக்கு என்று ஏற்படுத்திஇருக்கிறோம். இந்த பில்லுகள்வியாபாரிகளிடமிருந்து வரவேண்டியதொகையைக் குறிப்பதால், பில்கணக்கு பெர்ஸனல் அக்கவுண்டைச் சேர்ந்ததாகும்,

ஒருவருக்கு நாம் சரக்குகள் விற்று, பதிலாக ஒருகுறிப்பிட்ட காலத்தில் பணம் கொடுக்கவேண்டிய பில்லைப்பெற்றால், அந்த பில் செக்கைப்போலவாவது அல்லது தரிசனையில்

பணம் கொடுக்கப்படவேண்டிய பில்லைப்போலவாவது உடனே பணம் பெறக்கூடியதல்லவாதலால் ரொக்கம் போல் பாவிக்காமல் சரக்குகள் விற்றதற்கு ஒரு குறிப்பும் பின்னல் பில் வந்ததற்கு ஒரு குறிப்பும் தனியாகச் செய்யவேண்டும்.

உதாரணமாக, ராமனுக்கு ரூ. 800 க்கு சரக்குகள் விற்றதற்கு நாம் அவன்மீது ஒரு பில் எழுதி அவனல் ஒப்புக்கொள்ளப்பட்டது.

இதற்கு ஜர்னல் குறிப்பு இவ்விதம் ஏற்படும் :—

ராமன் பற்று ரூ. 800-0-0		
	சரக்குக்கணக்கால்	ரூ. 800-0-0
பணம்வரவேண்டிய பில் கணக்கு பற்று ரூ. 800-0-0		
	ராமனல்	ரூ. 800-0-0

பணம் கொடுக்கவேண்டிய பில் கணக்கு.

எப்படி நமக்குப்பணம் வரவேண்டியதற்காக ஒருவர் மீது பில்லெழுதுகிறேமோ அதுபோலவே நாம் பணம் கொடுக்கவேண்டியிருக்குங் காலத்து நம்மீது பில்லெழுதப் பட்டு நாம் அதை ஒப்புக்கொள்ளவேண்டிவரும். இவ்விதம் நம்மீது எழுதப்பட்ட பில்லை ஒப்புக்கொண்டவுடன் நாம் கொடுக்கவேண்டிய கடன் தீர்க்கப்பட்டதாக் கணக்குப்புத்தகத்தில் எழுதிவிடுகிறேம். இவ்வாறு நாம் ஒப்புக்கொண்ட பில்களைக் குறிக்கும் கணக்குக்கு “பணம் கொடுக்கவேண்டிய பில்கணக்கு” என்று பெயரிடுகிறேம். ஏனெனில் எந்த பில்களை நாம் ஒப்புக்கொண்டோமோ அவைகளுக்காகப்பின்னல் குறிப்பிட்ட தேதியில் நாம் பணம் கொடுக்க வேண்டியவர்களாகிறேம்.

பில்லை நாம் ஒப்புக்கொண்டபிறகே அந்த பணம் கொடுக்கவேண்டிய பில்லாகிறதாகையால் ஒப்புக்கொண்ட பின் அந்த பில்லை எழுதினவனிடம் அனுப்புகிறோம். அப்பொழுது முதல் முதலில் நம்மிடமிருந்து பில் வெளியே போகிறது. ஆனதால், பில் கணக்கை முதலில் வரவு செய்யவேண்டும். குறிப்பிட்ட காலத்தில் அந்த பில்லுக்குப் பணம் கொடுத்தவுடன் கணக்குத் தீர்ந்த தற்கு அடையாளமாக அதை வாங்கிக் கொண்டு விடுகிறோம். அப்பொழுது பில் நம்மிடம் வந்து சேருகிறது. இங்கு பில் கணக்கைப் பற்று செய்கிறோம். ஆதலின், பணம் கொடுக்க வேண்டிய ஒரு பில் முதலில் நம்மை விட்டு வெளியே போய் பிறகு வந்து சேருகிறது.

உதாரணமாக, ராமனிடமிருந்து நாம் ரூ. 500-க்குச் சரக்குகள் வாங்கித் தொகை கொடுப்பதற்கு பதிலாக அவனால் எழுதப்பட்ட பில்லை ஒப்புக்கொள்ளுகிறோம்.

இங்கு முன்னேயே சொல்லியிருக்கிறபடி சரக்குகளுக் காகவும் பில்லுக்காகவும் இருதனிப் பதிவுகள் செய்ய வேண்டுமே யொழிய, இவைகளைச் சேர்க்கக்கூடாது. ஆதலால் முதலில் சரக்குகள் வாங்கினதற்காக,

சரக்குக் கணக்கு பற்று ரூ. 500—0—0
ராமனால் ரூ. 500—0—0

என்ற பதிவையும், ஒப்புக்கொண்ட பில்லை ராமனுக்கு அனுப் புவதால்,

ராமன் பற்று ரூ. 500—0—0
பணம் கொடுக்கவேண்டிய
பில் கணக்கால் ரூ. 500—0—0

என்ற பதிவையும் செய்யவேண்டும்.

மேற் கூறிய விதம் நம்மால் ஒப்புக் கொள்ளப்பட்டு வெளியே போகும் பில், பில்லுக்குப்பணம் நாம் கொடுக்குங் காலத்திலாவது, குறிப்பிட்ட தேதிக்கு முந்தியே குறைந்த தொகையைக் கொடுத்துக் கணக்குத்தீர்த்தாலாவது அல்லது பில்லை வாபீஸ் செய்தாலாவது, நம்மிடம் திரும்பி வந்து சேருகிறது. இப்பொழுது பில் கணக்கைப் பற்று செய்யவேண்டும். கடைசியாகச் சொல்லப்பட்ட பில்லை வாபீஸ் செய்யும் விஷயத்தில், புதுபில்லை மறுபடியும் நாம் ஒப்புக்கொள்ளுகிறபடியால் அப்பொழுது பில்கணக்கை வரவு செய்யவேண்டும்.

நாம் ஒப்புக்கொண்டு ராமனுக்கனுப்பிய ஷை பில்லுக்காகக் குறிப்பிட்ட காலத்தில் செக்கு மூலமாய் பணம் கொடுத்துவிட்டோம்.

இதில் பில் வந்து சேருகிற படியாலும் அந்த பில்லுக்காக நாம் பணம் கொடுக்கக் கடமைப் பட்டவர்களாக விருந்தோமாகையாலும்,

பணம் கொடுக்கவேண்டிய பில் கணக்கு

பற்று ரூ. 500—0—0

பாங்குக் கணக்கால் ரூ. 500—0—0

நம்முடைய பாங்கில் பணம் கொடுக்கப்படுவதால் பாங்குக் கணக்கு வரவாகிறது.

ஷை பில்லுக்காகக் குறிப்பிட்ட தேதிக்கு முன்பே ரூ. 490 மட்டும் கொடுத்துக் கணக்கைத் தீர்த்து விட்டோம்.

இவ்விஷயத்தில் பணம் கொடுத்ததற்கு அடையாளமாக பில்லை வாங்கி விடுகிறோமாகையால் பில்கணக்கு பற்றுகிறது. நாம் ரொக்கம் கொடுப்பதால் ரொக்கக் கணக்கு வ

வாகிறது. தள்ளுபடித் தொகையான ரூ. 10 நாம் பணத்தை சீக்கிரம் கொடுத்த உதவியினுல் சம்பாதிக்கப்பட்டதான ஓர் லாபம். ஆதலால் தள்ளுபடிக்கணக்கும் வரவு செய்யப் படவேண்டும். இவைகளின் குறிப்புகீழே காணப்பட்ட படி :—

பணம் கொடுக்க வேண்டிய பில்கணக்கு

பற்று ரூ. 500—0—0

கீழ்க்கண்ட கணக்குகளால் :—

ரொக்கக் கணக்கு	ரூ. 490—0—0
தள்ளுபடிக் கணக்கு	ரூ. 10—0—0

ஷெ பில்லின் பணத்தை குறிப்பிட்ட தேதியில் நாம் கொடுக்க இயலாமல் போனுல், முன்னர் தீர்ந்ததாக எழுதப் பட்ட கணக்கு இப்பொழுது தீராமல் நின்று விடுறதாகை யால் பில்கணக்கில் ஏற்கனவே செய்யப்பட்ட வரவை இப் பொழுது நீக்கும் பொருட்டு ஓர் பற்றுப்பதிவும் செய்ய வேண்டும். நம்மால் பணம் கொடுக்கப்படாமல் போன பில் லுக்காக ட்ராயர் நோடிங் செய்திருப்பானுகையால் அந்தத் தொகையையும் சேர்த்து நம்மைப்பற்று செய்வான். இந்த நோடிங் செலவு நமக்கு அநாவசியமாக ஏற்படுவதால் அதை சில்லரைச் செலவாக எழுதிவிடுகிறோம்.

மேலே யுள்ள ராமனுடைய பில்லுக்கு நம்மால் பணம் கொடுக்க முடியவில்லை. ராமனுல் செய்யப்பட்ட நோடிங் செலவு ரூ. 2.

இதில் பில்கணக்கையும் வியாபாரச் செலவு கணக்கையும் பற்று செய்து மொத்தத்தொகைக்கு ராமன் கணக்கை வரவு செய்யவேண்டும்.

ஷெடிபில்லை நாம் வாபீஸ் செய்து இதனுல் ஏற்பட்ட கால தாமதத்திற்காக ரூ.15 வட்டியும்சேர்த்து புதுபில் ரூ.515க்கு ஒப்புக்கொண்டோம்.

பழையபில்லை வாபீஸ் செய்யும் பொழுது அது நம்மிடம் வந்து சேருவதால், பில்கணக்கு பற்ருகி ராமன் கணக்கு வரவாகிறது. வாபீஸ்செய்த உடனே ரூ.15 வட்டியும் கொடுக்கவேண்டியவர்களாக ஆகிவிடுகிருேமாதலின், வட்டிக்கணக்கு பற்ருகி, ராமன் கணக்கு வரவாகிறது.

இவைகளிரண்டையும் சேர்த்து ஒரு பதிவாகச் செய்து விடலாம்.

கீழ்க்கண்ட கணக்குகள் :—

பணம் கொடுக்கவேண்டிய பில் கணக்கு

பற்று ரூ. 500—0—0

வட்டிக் கணக்கு ரூ. 15—0—0

ராமனுல் ரூ. 515—0—0

பின்னுல்புது பில்லை முழுத்தொகைக்கும் அக்செப்ட் செய்தனுப்பும் பொழுது,

ராமன் பற்று ரூ. 515—0—0

பணம் கொடுக்கவேண்டிய

பில் கணக்கால் ரூ. 515—0—0

என்ற பதிவைச் செய்து விடுகிருேம்.

பில்லின் தொகையைக் குறிப்பிட்ட சமயத்தில் கொடுக்காமல் போய்விட்டால், பில்கணக்கின் வரவை நீக்குவதற்கு ஓர் பற்றுப்பதிவையும், ராமனுல் செய்யப்படுகிற நோடிங் சார்ஜுக்கும் நாம் கொடுக்கவேண்டிய பணத்தின்மேல் வட்டிக்கும் நாம் பாத்தியப்படுகிருேமாகையால் கீழ்வருமாறு

வியாபாரச் செலவு கணக்கையும் வட்டிக்கணக்கையும் சேர்த்துப் பற்று செய்து, பின் புது பில்லை ஒப்புக்கொண்டபொழுது, பில் கணக்கை முழுத்தொகைக்கும் வரவு செய்தல் வேண்டும்:—

பணம் கொடுக்கவேண்டிய
பில் கணக்கு பற்று ரூ. 500—0—0
ராமனால் ரூ. 500—0—0

கீழ்கண்ட கணக்குகள்:—

வியாபாரச் செலவு கணக்கு பற்று ரூ. 2—0—0
(நோடிங்)
வட்டிக்கணக்கு ,, ரூ. 15—0—0
ராமனால் ரூ. 17—0—0
ராமன் பற்று ரூ. 517—0—0
பணம் கொடுக்கவேண்டிய
பில் கணக்கால் ரூ. 517—0—0

மேலேயுள்ள வியாபாரச் செலவு எதற்காகச் செய்யப்பட்டதென்று நாரேஷன் எழுதவேண்டும்.

தரிசனையில் பணம் கொடுக்கவேண்டிய பில்லானது நம் மீது எழுதப்பட்டால் அதை நாம் முதல் முதலில் பெற்றுக்கொண்ட வுடனேயே ரொக்கம் கொடுக்கவேண்டுமாதலால், அந்த பில்லை ரொக்கம்போல் பாவித்து யாருக்குப்பணம் கொடுக்கிறோமோ அவர் கணக்கில் பற்றெழுதி ரொக்கக் கணக்கில் வரவெழுதவேண்டும்.

எவ்வளவு பில்களை நாம் ஒப்புக்கொண்டிருக்கிறோமோ அவ்வளவு பில்களே பின்னால் திரும்பிவரக் கூடுமாதலால்,

பணம் கொடுக்கவேண்டிய பில் கணக்கில், ஒன்று, பாக்கி யில்லாமலிருக்க வேண்டும், அல்லது அதிக வரவு மட்டும் தானிருக்கவேண்டும். இந்த அதிக வரவானது நாம் ஒப்புக் கொண்ட பில்களில் சிலதுக்குப் பணம் கொடுத்ததுபோக பாக்கி பில்களுக்காகப் பணம் கொடுக்கவேண்டியதைக்குறிக்கிறது. இந்த பில் கணக்கின் அதிக வரவு நாம் பணம் கொடுக்கவேண்டிய பாக்கியைக் காண்பிக்கிறதால், பாக்கி ஜாப்தாவில் கடன் பக்கத்திலெழுதவேண்டும். இந்தக் கணக்கும் பணம் வரவேண்டிய பில் கணக்கைப் போலவே ஒரு பெர்ஸனல் அக்கவுண்டாகும்.

உண்டிகள் (Hundis)

ஆங்கிலேயர் வியாபார முறையை அனுசரித்து அவர்கள் ஒருவரிடமிருந்து பணம் பெற்றுக்கொள்ளவும் ஒருவருக்குப் பணம் கொடுக்கவும் வேண்டியிருந்தால் இவ்விரண்டு காரியங்களையும் சுலபமாகத் தீர்க்கும் பொருட்டு எழுதப்படும் உத்திரவுகளுக்கு பில்ஸ்-ஆப்-எக்ஸ்சேஞ்சு என்று பெயரிட்டார்கள். இதே வழக்கம் முன் காலத்திலிருந்தே நமது இந்தியர்களிடமும் பரவியிருந்தது. நமது சொந்த பாஷையில் எழுதப்படும் பில்லுக்கு உண்டி என்று பெயர்.

ஒரு பில்லானது உபயோகப்படுகிற காரியத்துக்கே தான் நமது சொந்த இந்திய பாஷையில் உண்டி என்பது எழுதப்படுகிறது.

பில்லுகளைப்பற்றின சட்டங்கள் ஆங்கில துரைத்தனத்தாரால் எற்படுவதற்கு முன், உண்டிகளைப்பற்றி யாதொரு சட்டமுமில்லாததால், அப்பொழுதுள்ள பெரிய இந்திய வியாபாரிகளின் வழக்கமே சட்டமாக அனுசரிக்கப்பட்டு

வந்தது. ஆனால் 1881-ம் ஆண்டில் வெளிப்படுத்தப்பட்ட ஆங்கில துரைத்தனத்தாரின் சட்டம் இப்பொழுது உண்டிகளுக்கும் ஏற்பட்டதாகிறது.

உண்டிகளில் (1) ஷாஜோகிஉண்டி என்றும் (2) ஜோக்மி உண்டி என்றும் இரண்டு விதமுண்டு.

முதலில் சொல்லப்பட்ட உண்டியானது ஒரு பிரபலமாகப் பேர்பெற்ற வியாபாரிக்குப் பணம் கொடுக்கும்படியாக எழுதப்பட வேண்டியதோடு கூட, யார்பேரில் உண்டி எழுதப்பட்டிருக்கிறதோ அவர் ஒப்புக்கொண்டதை அதன் குறுக்கே எழுதவேண்டுமென்ற நிபந்தனை இல்லாததாயிருக்கிறது. ஷை உண்டி ஒருவருக்கு மாற்றப்படும் பொழுது அவருக்காவது அவருத்திரவு பெற்றவருக்காவது எழுதப்பட வேண்டுமே தவிர உண்டி கொண்டு வருபவருக்குப் பணம் கொடுக்கும் படியாக எழுதியிருக்கக்கூடாது. உண்டியை மாற்றும் பொழுது பின்பக்கத்தில் என்டார்ஸ் செய்யப்படவேண்டும்.

ஷாஜோகி உண்டியானது கீழ்வருமாறு வழக்கத்திலிருந்து வருகிறது:—ஒருவன் தனக்குப்பணம் யார் கொடுக்க வேண்டுமோ அவன்மீது பில்-ஆப்-எக்ஸ் சேஞ்சைப் போலவே ஒரு உண்டி எழுதி தான் யாருக்குப் பணம் கொடுக்கவேண்டியதோ அவனுக்கு அனுப்பி விடுகிறான். உண்டியை அனுப்பினவுடனேயே ட்ராயிக்குத் தெரிவித்து விடுகிறான். ஆனால் பில்-ஆப்-எக்ஸ் சேஞ்சைப்போல் உண்டியை ட்ராயி ஒப்புக்கொள்ளும் பொருட்டு அனுப்பாமல் பணம் கொடுக்கவேண்டிய தேதியானவுடனே உண்டியை வைத்துக் கொண்டிருப்பவன் ட்ராயியிடம் பணத்தைக் கேட்கப் போகிறான். இப்பொழுது உண்டியை வைத்துக்கொண்

டிருப்பவன் தனது பெயரை பின்னுல் என்டார்ஸ் செய்து னுப்பவேண்டும். ட்ராயி உண்டியைப் பெற்றுக் கொண்ட வுடன், முன்னுல் ட்ராயரால் அறிவிக்கப்பட்ட தனது புத்த கத்தில் எழுதி யிருக்கும் குறிப்பைப் பார்த்து இப்பொழுது வந்திருக்கிற உண்டியின் குறிப்புதான் என்று தீர்மானம் செய்தபின் அப்பொழுதே பணத்தைக் கொடுத்து உண்டி யின் பின்பக்கத்தில் பணத்தைப் பெற்றுக்கொண்டதாக பில்லை வைத்துக் கொண்டிருந்தவனிடமிருந்து ரசீது எழுதி வாங்கிக்கொள்கிருன். இவ்விதம் உண்டிக்குப் பணத்தைக் கொடுத்து அதைத் தீர்த்து ட்ராயி வாங்கிக் கொண்டபின், தீர்க்கப்பட்ட உண்டிக்கு "கோகா" என்று பெயர்.

பின்னுல் சொல்லப்பட்ட ஜோக்மி உண்டியானது வேறொருவனைப் பணம் கொடுக்கும்படி பேருக்கு உத்திரவே தவிர இதனுல் உண்டி வைத்துக் கொண்டிருப்பவன் ட்ராயி யைப் பணம் கொடுக்குமாறு நிர்ப்பந்திக்க முடியாது. ட்ராயி யானவன் ட்ராயருக்குப் பணம் கொடுக்கக் கடமைப்பட்ட வனுகிருனே தவிர, உண்டி வைத்துக் கொண்டிருப்பவனுக் காவது அல்லது பேயிக்காவது உத்திரவாதமாக மாட்டான்.

இந்த உண்டிகளும் முன்னே சொல்லப்பட்ட பில்லுக ளும் ஒரே விதமாக உபயோகப்படுகின்றன வாகையால், இவைகளைப் பற்றின கணக்குப் பதிவுகளும் பில்லுகளின் பதிவுகளைப்போலவே செய்யப்படுகின்றன.

ஒரு உண்டி கீழ்வரும் விதம் எழுதப்படுகிறது.

நம். 312. நாகூர், 20—5—1925.

சி. முனுசாமி செட்டியார் அண்டு கம்பேனி.

நாகை வெளிப்பாளையம் ம-া-ா-ஸ்ரீ எஸ். ராமண்ணு ரெட்டியார் அவர்களுக்கு. தாங்கள் அவ்விடம் டி. குருஸ்வாமி முதலியாருக்காவது அல்லது அவர் உத்திரவுக்காவது இன்று முதல் ஒருமாத கெடுவில் ரூபாய் எழுநூற்றைம்பது மட்டும் செலுத்தி இதை செல்லுவைத்து வாங்கி எங்கள் கணக்கில் பற்றெழுதிக் கொள்ளவும்.

1 அணு
ஸ்டாம்பு

Rs. 750|— முனுசாமி செட்டியார் & கோ.

மேலே எழுதப்பட்டிருக்கிற உண்டியலில், எஸ். ராமண்ணு ரெட்டியார் என்பவர் உண்டியை எழுதினவர்களான முனிசாமி செட்டியார் அண்டு கம்பெனிக்கு ரூ. 750 கொடுக்கவேண்டியவராகிறார். ஆதலால்தான் அவர் பேரில் உண்டி எழுதப்பட்டிருக்கிறது. முனுசாமி செட்டியார் கம்பெனியார் டி. குருஸ்வாமி முதலியாருக்குக் கடன் கொடுக்க வேண்டியிருப்பதால் அவருக்காக உண்டி எழுதப் பட்டிருக்கிறது. ஷை உண்டிக்குப் பணத்தை ராமண்ணு ரெட்டியார் கொடுத்தவுடன் உண்டி எழுதினவருக்குள்ள கடன் தீர்ந்து விட்டதால், எழுதினவரான முனுசாமி செட்டியார் கம்பெனியைப் பற்று செய்யவேண்டும். ஆகவே தான் ஷை முனுசாமி செட்டியார் அண்டு கம்பெனியார் பணம் கொடுத்த உடன் தங்கள் கணக்கில் பற்றெழுதும்படி ராமண்ணு ரெட்டியாரை உண்டியலில் கேட்டுக்கொள்கிறார்கள்.

பிறுமிஸரி நோட்டுகள்.

ஒரு வியாபாரமானது, நம்பிக்கையுள்ள பெரிய வியாபாரிகளின் சௌகரியத்தின் பொருட்டுக்கடனுக்கு விற்று ரொக்கத்தைப் பிறகு வாங்கிக் கொள்வதினுலேயே மேலும் மேலும் பிரபல மடைகிறது. ஒரு வியாபாரியானவன் எவ்வளவு நம்பிக்கை யுள்ளவனுகயிருந்த போதிலும் ஒரு காலத்தைக் குறிப்பிட்டு அப்பொழுது பணம் தருவதாக வாய்ப் பேச்சாக மட்டும் சொல்லி சரக்குகள் வாங்கிக்கொண்டால், குறிப்பிட்ட காலம் வந்தவுடன் பணம் கையில் வைத்திருந்தால்கூட அதையும் வியாபாரத்திலேயே செலவிட எண்ணுவது சகஜமே. அப்படி ஷை வியாபாரி சொல்லியசொல் தவருவண்ணம் அவனுடைய பின்னுல் பணம் கொடுப்பதாகச் சொன்ன ஒப்பந்தத்தை எழுத்து மூலமாக அவன் கையெழுத்தைப் பெற்று வாங்கிக்கொள்ள வேண்டும். இவ்விதம் எழுத்து மூலம் பெறும்கடன் ஒப்பந்தத்திற்கே "பிறுமிஸரி நோட்" அல்லது 'புரோநோட்' என்று பெயர். வியாபார சம்பந்த மில்லாமல் ஒருவருக்கு வட்டிக்காக ரொக்கம் கடன் கொடுத்தால் கூடஷை ஒப்பந்தம் பெற்றுக்கொள்கிறேம்.

ஆகவே ஒரு புரோநோட்டானது, எழுதிக்கொடுப்பவர் (Maker) யாருக்கு எழுதப்பட்டிருக்கிறதோ அவருக்காவது அல்லது அவர் உத்திரவுக்காவது தரிசனையிலாவது ஒரு குறிப்பிட்டகாலத்திற்குப் பின்னுவது அல்லது தேதியிலாவது அதில் குறிப்பிட்டதொகையை யாதொரு நிபந்தனையுமின்றி கொடுக்கும்படி எழுத்து மூலமாக ஒப்பந்தம் செய்து கையெழுத்துப் போட்டுக் கொடுக்கும் ஓர் உத்திரவு.

வேறொரு விஷயத்தைப் பார்த்து அதன் முடிவைத் தெரிந்து கொண்டுதான் பணம் கொடுக்கப்படும் என்று ஷை

ஒப்பந்தத்தில் எழுதி யிருக்கக்கூடாது. இதற்குத் தான் யாதொரு நிபந்தனையுமின்றி பணம் கொடுக்கவேண்டும் என்று நோட்டில் காணவேண்டும்.

பிருமிஸரி நோட்டின் மாதிரிகள் கீழே எழுதப்பட்டிருக்கின்றன :—

ரூ. 500/—

புரசபாக்கம், மதருஸ்.
1-5-1915

நான் இன்று முதல் இரண்டு மாதத்திற்குப் பின் ஸாவுகார் பேட்டை ந. மாணிக்க செட்டியாருக்காவது அல்லது அவருத்திரவுச்காவது இன்றுரொக்கம் கடனுகக்பெற்றதற்காக ரூபாய் ஐநூறு மட்டும் கொடுக்க ஒப்புக்கொள்கிறேன்.

ஸ்டாம்பு

எல். கணேசய்யர்.

புரசபாக்கம், மதராஸ்.

ரூ. 500/—
1-5-1915

நாங்கள் இரண்டுபேரும் சேர்ந்து ஸாவுகார் பேட்டை ந. மாணிக்கசெட்டியாருக்காவது அல்லது அவருத்திரவுக்காவது இன்று ரொக்கம் கடனுகப் பெற்றதற்காக ரூபாய் ஐநூறு மட்டும் வேண்டும் போது தரிசனையில் கொடுக்க ஒப்புக்கொள்ளுகிறோம்.

ஸ்டாம்பு

எல். கணேசய்யர்.
வி. ராமய்யர்.

நான் இன்றுமுதல் ஒரு மாதத்திற்குப்பின் புரசபாக்கம் தனம் அண்டு கம்பெனியாருக்காவது அல்லது அவர்களுத்தி ரவுக்காவது இன்று கடனுக்குச் சரக்குகள் வாங்கினதற்காக ரூபாய் ஐநூறு மட்டும் கொடுக்க ஒப்புக்கொள்கிறேன்.

ரூ. 500/—

புரசவாக்கம், சென்னை, 1—5—1915.	ஸ்டாம்பு	எல். கணேசய்யர். வி. ராமய்யர்.

இவ்விதமாக நோட்டுகள் தமிழில் எழுதப்படுவது அநேகமாக வழக்கத்தில் வரா விட்டாலும், இந்த நோட்டு கள் முக்கியமான வியவகார விஷயங்களெல்லாவற்றையும் அடக்கிக் கொண்டிருப்பதாலும் பார்வைக்கு மிகச் சிறியதா யிருப்பதாலும் இம்மாதிரி நோட்டுகளை எழுதுவது வழக் கத்திலும் ஏற்படலாம்.

இந்த நோட்டுகளுக்குள்ளஸ்டாம்பின் தொகை நோட் டிற்காகக் கொடுக்க வேண்டிய தொகையைப் பொருத்திருக் கிறது.

ஒவ்வொரு பிருமிஸரி நோட்டுக்கும் இரண்டு அம்சங் கள் தான் இருக்கின்றன:—

(1) மேகர் (Maker), நோட்டை எழுதிக்கொடுப்பவர். அதாவது கடன் கொடுக்க வேண்டியவர்.

(2) பேயி (Payee) யாருக்குப் பணம் கொடுக்கப்பட வேண்டுமோ அவர்.

மேலே காட்டப்பட்ட மூன்று புரோ நோட்டுகளில் முதல் நோட்டு சாதாரண பிராமிஸரி நோட்டு. மற்ற இரு

நோட்டுகளுக்கும் இருவர் சேர்ந்து கைபெழுத்துப் போட்டி ருப்பதால் அவைகளுக்குக் கூட்டு பிருமிஸரி நோட்டுகள் (Joint and Several Pronote) என்று பெயர். முதல்மாதிரி நோட்டின் படி, நோட்டெழுதிக் கொடுத்தவன் குறித்த காலத்தில் பணம் கொடுக்கத் தவறினுல் அவன் மீது வழக் குத் தொடங்கி கோர்ட்டு மூலமாய் பணம் வாங்கிவிடலாம். 2, 3 மாதிரி பிருமிஸரி நோட்டுகளின் படி, நோட்டெழுதிக் கொடுத்த இரண்டு பேர்களும் பணம் கொடுக்கத் தவறி னுல், தனித்தனியாக ஒவ்வொருவரின் மீதாவது அல்லது சேர்த்து இருவர்களின் மீதாவது வியாஜ்ஜியம் தொடங்க லாம். ஆதலால் பின்னுல் சொல்லப்பட்ட இரண்டு நோட்டு களும் மிக ஜாக்கிரதையுள்ளவை. இவ்விரண்டு விதங்களா கவும் ஒரு கூட்டு பிருமிஸரி நோட்டு எழுதப்படலாம். ஒரு பிருமிஸரி நோட்டும் பில்லென்றே சொல்லப்படும்.

நமக்குப் பணம் வரவேண்டியதற்கு பிருமிஸரி நோட்டு எழுதி வாங்கிக் கொண்டாலாவது, நோட்டெழுதிக் கொடுத்தவரிடமிருந்து பணம் பெற்றுக் கொள்ளும்படி பேயி யால் என்டார்ஸ் செய்யப்பட்டாலாவது நமக்குப் பணம் வர வேண்டிய பில் நம்மிடம் வருகிறபடியால் பணம் வரவேண் டிய பில் கணக்கைப் பற்று செய்யவேண்டும். இந்த பிரு மிஸரி நோட்டுகளுக்குப் பணம் வாங்கினவுடன், நோட்டு களைத் திருப்பிக் கொடுத்துவிடுவோமாகையால், பணம் வர வேண்டிய பில் கணக்கு இப்பொழுது வரவு செய்யப்பட வேண்டும்.

நாம் ஒருவருக்குக் கடன் கொடுக்கவேண்டியதற் காக புரோநோட் எழுதிக் கொடுத்தால் அந்த நோட் டை யாருக்கு நாம் பணம் கொடுக்கவேண்டுமோ அவ

ரிடம் கொடுத்துவிடுகிறோம். ஆகவே, ஷை நோட்டுக்குப் பணம் கொடுக்கவேண்டியவர் நாமேயாதலால் பணம்கொடுக்க வேண்டிய பில் கணக்கை வரவு செய்யவேண்டும். பிறகு பணத்தைக் கொடுத்து நோட்டைவாங்கும் பொழுது ஷை பணம் கொடுக்கவேண்டிய பில்கணக்கைப் பற்று செய்து விடுகின்றோம்.

ஆதலால் இவ்வதிகாரத்தில் சொல்லப்பட்டதான பில்-ஆப்-எக்ஸ்சேஞ்சு, உண்டி, பிருமிஸரிநோட்டு முதலிய பில்லுகளினால் நமக்கு வரவேண்டிய கடன்களையும் நாம் கொடுக்கவேண்டிய கடன்களையும் சுலபமாகவும் சீக்கிரமாகவும் தீர்ப்பதோடுகூட, பணம் வரவேண்டியபில் கணக்கையும் பணம் கொடுக்கவேண்டிய பில் கணக்கையும் ஏற்படுத்தி வியாபார விஷயமாக நமக்கு எவ்வளவு தொகை வெளியிலிருந்து வரவேண்டுமென்றும் நாம் எவ்வளவு தொகை வெளியில் கொடுக்கவேண்டு மென்றும் உடனுக்குடனே தீர்மானமாக அறிந்துகொள்ளலாம்.

10-ம் அதிகாரம்.

உதவிக் குறிப்புப்புத்தகங்களும் லேட்ஜரின் பிரிவுகளும்

ஒரு வியாபாரத்தின் காரியங்களெல்லாம் இன்னது பற்று இன்னது வரவு என்று காண்பிக்கும்படியாக முதற் குறிப்புப் புத்தகமாகிய ஜர்னலில் குறிக்கப்படுகின்றனவென்று முதன்முதலில் சொன்னோம். அதற்குப் பின் வியாபாரம் பெருகப்பெருக, ஜர்னலில் குறிக்கப்படுகின்றரொக்கம்,பாங்கு சம்பந்தமான விஷயங்கள் மட்டும் தனியாக எடுக்கப்பட்டு

ரொக்கக்கணக்குக் குறிப்பில் பதியப் படுகின்றன வென்று சொன்னோம். வியாபாரம் இன்னும் பிரபலமடைந்து அநேக விதமான கணக்குகளையுடைய தாயிருந்தால், அந்தக் கணக்குகளெல்லாம் யாதொரு பிழையுமின்றிச்சரிவர இருக்கவேண்டியது அவசியம். அப்பொழுது வியாபாரத்தின் ஒவ்வொரு விதமான கொடுக்கல் வாங்கலும்தனித்தனியாக குறிக்கப்படவேண்டியது அவசியம். எல்லா வரவு செலவு காரியங்களையும் ஒரே புத்தகத்திலேயே குறிப்பெழுதினுல் எல்லா வேலையையும் ஒருவரே செய்ய வேண்டியிருப்பதுடன் தவறுகள் ஏற்படக்காரண முண்டு. வேலையும் தாமதமாகவே முடியும். ஓர் பெரிய வியாபாரத்தில் எல்லா விபரங்களும் உடனுக்குடனே பதியப்படவேண்டு மாகையால் வேலை வேகமாய் நடப்பதின் பொருட்டு அநேக குமாஸ்தாக்கள் இருக்கின்றனர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு வியாபாரப் பிரிவைச் சேர்ந்தவர். ஆதலால் ஒவ்வொருவரும் மற்றொருவர் தயவில்லாமலே தத்தம் கணக்குகளை பாக்கியில்லாமல் தனித் தனிப் புத்தகங்களில் முடித்து வைக்க வேண்டும். இப்புத்தகங்களிலிருந்து எடுக்கப்படும் மொத்தத் தொகை கடைசியாக லெட்ஜர் புத்தகத்தில் கொண்டுவரப் படும். இம்மாதிரியாக வியாபாரத்தில் ஒவ்வொரு வகுப்புக்கும் தனித்தனியாக குறிக்கப்படுகின்ற புத்தகத்திற்கு உதவிக் கணக்குக் குறிப்புப்புத்தகம் (Subsidiary book) என்று பெயர்.

எப்படி ஜர்னலானது பற்று வரவு விபரங்களைக் காட்டுவதற்கு மட்டும் உதவியாயிருந்து லெட்ஜர்புத்தகத்தில் குறிப்புகள் பதியப் பட்டவுடன் முக்கிய மில்லாத தாகப்போய் விடுகிறதோ அது போலவே இப்பொழுது சொல்லப்பட்ட

உதவிக்கணக்குப் புத்தகங்களும் அன்றாடம் அந்தந்த வகுப்பைச் சார்ந்த விபரங்களை எழுது வதற்குமட்டும் உதவியாயிருக்கின்றனவே தவிர லெட்ஜர் புத்தகத்தில் கடைசியாக மொத்தத்தொகைகள் பதிவு செய்யப்பட்ட பின்னர் பிரயோஜன மில்லாமலிருப்பதால், இப் புத்தகங்களுக்கு உதவிப் புத்தகங்கள் என்றபெயர் வரலாயிற்று. ஆனால் ரொக்கப்புத்தகம் உதவிக் குறிப்பாகாது. .ஏனெனில், அந்தப்புத்தகத்திலேயே ரொக்கம், பாங்குக் கணக்கு ஆகிய இவைகளின் பாக்கியை எழுதி விடுகிறோம். அதனால் லெட்ஜர் புத்தகத்தில் ஓர் பாகமாகிறதே தவிர பின்னால் உபயோகப் படாத புத்தகமாக இருக்கவில்லை. இது இன்னும் பின்னால் விளக்கப் படும்.

இப்பொழுது வியாபாரத்தின் பல வகுப்புகள் என்னவென்று கவனிப்போம். ரொக்கம், பாங்கு சம்பந்தமான வரவு செலவுகாரியங்கள் ரொக்கக் கணக்குப் புத்தகத்தில் எழுதப்படுகின்றன வென்று முன்னமேயே சொல்லிவிட்டோம். நாம் ரொக்கத்திற்கு சரக்குகள் வாங்கினாலும் ரொக்கம் கொடுப்பதால் ரொக்கப் புத்தகத்திலேயே பதிவு செய்யப்படும். ஆனால் கடனாகச் சரக்குகள் வாங்கினால் மட்டும் யாரிடமிருந்து வாங்கினோம், சரக்குகளின் விலைமுதலிய விபரங்கள் தெரியும் பொருட்டு கோள் முதல் குறிப்புப் புத்தகம் (Purchases Book) என்ற ஓர் குறிப்பு ஏற்படுத்திக் கொள்ளுகிறோம். இந்தப் புத்தகத்திலிருந்துதான் லெட்ஜர் புத்தகத்தில் கொள்முதல் கணக்கு எழுதப்படுகிறது. கடனுக்கு சரக்குகள் வாங்கும் விபரமானது ரொக்கம் சம்பந்தமில்லாததால் ரொக்கப் புத்தகத்திலெழுதாமல் இதற்கு முன் ஜர்னல் குறிப்பிலேயே. எழு

திக் கொண்டிருக்கிறோம். இப்பொழுது மேற்படி விபரமானது கொள்முதல் குறிப்புப் புத்தகத்தில் எழுதப்படுகிற படியால், இந்த விபரம் ஜர்னலில் வராது.

இவ்விதமாகவே ரொக்கத்துக்குச் சரக்குகள் விற்றால் ரொக்கப் புத்தகத்திலெழுதி, கடனுக்குச் சரக்குகள் விற்றிருந்தால் விற்றுமுதல் குறிப்புப் புத்தகம் (Sales Book) என்ற புத்தகத்தை எழுதுகிறோம். இதிலிருந்து தான் விற்று முதல் கணக்கு என்ற லெட்ஜர் கணக்கு எழுதப் படுகிறது. இந்தவிபரமும் தனிப் புத்தகத்தி லெழுதப் படுகிற படியால் ஜர்னலில் எழுதப் பட மாட்டாது.

இது போலவே நாம் வாங்கின சரக்குகளை வாபீஸ் செய்தால் வாங்கின சரக்கு வாபீஸ் குறிப்பு என்ற புத்தகத்தையும், நாம் விற்ற சரக்குகள் நம்மிடம் திரும்பி வந்தால் விற்ற சரக்குகள் வாபீஸ் குறிப்பு என்ற புத்தகமும் ஏற்படுத்திக் கொண்டு முறையே அந்தந்த லெட்ஜர் கணக்குகளில் மொத்தத் தொகையை மாற்றி எழுதுகிறோம்.

இன்னும், ஓர் வியாபாரி அநேக இதர வியாபாரிகளுடன் கொடுக்கல் வாங்கல்செய்யுங் காலத்து, அவனுக்கு வர வேண்டிய கடன்கள் தீர்க்கப்படும் பொருட்டும் அவன் தான் கொடுக்கவேண்டிய கடன்களைத் தீர்க்கும் பொருட்டும் அநேக பில்களைப் பெறவும், ஒப்புக்கொள்ளவும் நேரிடும். இவைகளின் விபரங்களும் செவ்வையாகத் தெரிந்து கொள்வதன் பொருட்டு பணம் வரவேண்டிய பில் குறிப்பு என்ற புத்தகமொன்றும் பணம் கொடுக்கவேண்டிய பில் குறிப்பு என்ற புத்தக மொன்றும் வைத்துக் கொள்ள வேண்டும்.

இப்படிப் பல விதமாக வியாபார வர்த்தமானங்களைப் பிரித்தாலுங் கூட, இவைகள் ஒன்றிலும் சேராமல் சில

விஷயங்கள் இருக்கக் கூடும். அம்மாதிரி விஷயங்களுக்கே வியாபாரம் மேன்மை யடைந்திருக்கும் தற்காலத்தில் ஜர்னல் உபயோகிக்கப் படுகிறது.

ஆகவே முக்கிய கணக்குப் புத்தகமாகிய லெட்ஜரில் உள்ள அக்கவுண்டுகளெல்லாம் ரொக்கப்புத்தகம், கொள்முதல் குறிப்பு, விற்று முதல் குறிப்பு, வாபீஸ் குறிப்புகள், பில் குறிப்புகள், ஜர்னல் ஆகிய புத்தகங் களிலிருந்து பதிவு செய்யப் படுகின்றன. இந்த உதவிப் புத்தகங்களெல்லாம் முதன்முதலிலே குறிக்கப் படுகின்றன வாகையால் இவை களுக்கு முதற் குறிப்புப் புத்தகங்களென்றும் சொல்லலாம்.

ஷை புத்தகங்களைத் தவிர வியாபாரத்தின் நிலைமைக் குத் தகுந்தபடி நமக்குச் சௌகரியமாக வேண்டிய குறிப்புப் புத்தகங்கள் வைத்துக்கொள்ளலாம். ஆனால் இப்புத்தகங் கள் நாம் அடிக்கடி விபரங்களைப் பார்த்துக் கொள்ளமட்டும் உபயோகப்படுமே தவிர, லெட்ஜர் கணக்குகளுக்குப் பிர யோஜனப்படாது.

ஒவ்வொரு உதவிப்புத்தகத்தின் மாதிரியும் கீழே காணப்படுகிறது:—

கோள் முதல் குறிப்புப் புத்தகம் (மாதிரி 1)

தேதி.	விபரம்.	வ. ந.	சாக்குகளின் விலை ரூ.	அ.	பை.	மொத்தம். ரூ.	அ.	பை.
1915 ஜன. 5	தனம் & கம்பெனி							
	20 டின்கள் லேகியம் 1 டின் ரூ. 6 வீதம்		120	0	0			
	15 புட்டிகள் கூந்தல் எண்ணெ புட்டி 1 ரூ. 3 வீதம்		45	0	0			
						165	0	0
ஜன. 10	கிருஷ்ணு & கம்பெனி							
	30 டஜன் சோப்புகள் 1 டஜன் ரூ. 4-8 வீதம்		135	0	0			
	4 டஜன் வாசனைப் புட்டிகள் 1 டஜன் ரூ. 9 வீதம்		36	0	0			
			171	0	0			
	நூற்றுக்கு பத்துவீதம் வியாபாரத் தள்ளுபடி		17	1	7			
						153	14	5
	மொத்தம் ரூ...					318	14	5

கோள் முதல் குறிப்பு.—(மாதிரி 2.)

தேதி	சரக்குகள் கடனுக்கு விற்றவரின் பெயர்.	விபரம்.	வ. ந.	லேஹியம். ரூ.	அ.	பை.	கூந்தல் எண்ணெ ரூ.	அ.	பை.	சோப்புகள் ரூ.	அ.	பை.	வாசனைப் புட்டிகள் ரூ.	அ.	பை.	மொத்தம். ரூ.	அ.	பை.
1915 ஜன. 5	தனம் & கம்பேனி	டின் ரூ. 6 வீதம் 20 டின்களின் லேகியம்		120	0	0												
		புட்டி ரூ. 3 வீதம் 15 புட்டிகள் கூந்தல் எண்ணெ					45	0	0							165	0	0
„ 10	கிருஷ்ணு & கம்பேனி	டஜன் ரூ. 4½ வீதம் 30 டஜன் சோப்புகள், 100க்கு 10 வியாபாரத்தள்ளுபடி போக								121	8	0						
		டஜன் ரூ. 9 வீதம் 4 டஜன் வாசனைப் புட்டிகள், 100க்கு 10 ஷ தள்ளுபடிபோக											32	6	5	153	14	5
		மொத்தம் ரூ...		120	0	0	45	0	0	121	8	0	32	6	5	318	14	5

விற்று முதல் குறிப்பு—(மாதிரி 1.)

தேதி.	விபரம்.	வ. நம்.	விலை. ரூ.	அ.	பை.	அளவு.	சரக்குகளின் மொத்த விலை. ரூ.	அ.	பை.	மொத்தம். ரூ.	அ.	பை.
1915 ஜுன் 8	சி. கிருஷ்ணய்யர்.											
	25 மூட்டைகள் கோதுமை		9	12	0	மூட்டை 1-க்கு	243	12	0			
	100-க்கு 5 தள்ளுபடி						12	3	0	231	9	0
„ 15	குமரன் & ஸன்ஸ்											
	7 மூட்டை உப்பு.		4	0	0	மூட்டை 1-க்கு	28	0	0			
	10 மூட்டை அரிசி.		9	8	0	„	95	0	0	123	0	0
							மொத்தம் ரூ...			354	9	0

விற்று முதல் குறிப்பு—(மாதிரி 2.)

தேதி	கடன் வாங்கினவரின் பெயர்.	விபரம்.	வ. ந.	விலை. ரூ.	அ.	பை.	அளவு	கோதுமை ரூ.	அ.	பை.	உப்பு ரூ.	அ.	பை.	அரிசி ரூ.	அ.	பை.	மொத்தம் ரூ.	அ.	பை.
1915 ஜூன் 8	சி. கிருஷ்ணய்யர்	25 மூட்டைகள் கோதுமை 100-க்கு 5 தள்ளுபடி போக		9	12	0	1-க்கு	231	9	0							231	9	0
,, 15	குமரன் & ஸன்ஸ்	7 மூட்டை உப்பு.		4	0	0	1-க்கு				28	0	0						
		10-மூட்டை அரிசி.		9	8	0	,,							95	0	0	123	0	0
							மொத்தம் ரூ.	231	9	0	28	0	0	95	0	0	354	9	0

வாங்கின சரக்குகள் வாபீஸ் குறிப்புப் புத்தகங்கூட சரக்குகள் வெளிப்போவதால் விற்றுமுதல் குறிப்பைப் போலவே இரண்டு மாதிரிகளாகவும் எழுதப்படும். ஆனால் ஜர்னல் குறிப்புமட்டும் "வாபீஸ் கணக்கு வரவு" என்று எழுதப்படவேண்டும். விற்று முதல் குறிப்பு இரண்டு மாதிரிகளும் மேலே காட்டப்பட்டிருக்கிற படியால், அதைப் போலவேயுள்ள வாபீஸ் குறிப்புகள் எழுதப்படவில்லை.

நாம் விற்ற சரக்குகள் நம்மிடம் திரும்பி வாபீஸ் வரு மானால், சரக்குகள் நம்மிடம் வந்து சேருவதால் ஜர்னல் குறிப்பு மட்டும் "வாபீஸ் கணக்கு பற்று" என்று எழுதப் படவேண்டுமே தவிர, விற்ற சரக்குகள் வாபீஸ் குறிப்புப் புத்தகம் மேலே காட்டப்பட்டிருக்கிற கொள் முதல் குறிப் புப் புத்தகத்தைப்போலவே தான் எழுதவேண்டும். ஆத லால் இக்குறிப்பும் இங்கு காண்பிக்கப்படவில்லை. வியா பாரச் சரக்குகளின் தினுசுகளுக்குத் தக்கபடி இரு பிரிவுக ளாகவும் ஷை வாபீஸ் குறிப்பை வைத்துக்கொள்ளலாம்.

சரக்குகள் கொள்முதல் விற்பனை மூலமாக நாம் கொடுக்கவேண்டிய தொகை நமக்கு வரவேண்டிய தொகை முதலிய விபரங்களை அறியும்பொருட்டு ஷை குறிப்புப்புத்த கங்களை நாம் எழுதுவது போலவே, நாம் பணம் பெறவேண் டிய பில்கள் எவை, நாம் பணம் கொடுக்கவேண்டிய பில்கள் எவை என்ற விபரங்களை எழுதும் பொருட்டு பில் புத்தகங் கள் என்ற இரண்டு உதவிப்புத்தகங்கள் எழுதப்படுகின்றன. பில்களின் மீது வரவேண்டிய தொகையைக் குறிக்க ஒரு புத்தகமும் கொடுக்கவேண்டிய தொகையைக் குறிக்க ஒரு புத்தகமும் ஏற்படுகின்றன.

இப்புத்தகக் குறிப்புகள் கீழே எழுதப்பட்டிருக்கின்

பணம் வரவேண்டிய

தேதி	பில் நம்.	பில் கொடுத்தவரின் பெயர்.	பில் எழுதினவர் அல்லது ட்ராயரின் பெயர்.	ஒப்புக்கொண்டவரின் பெயர்.	தொகை பெறவேண்டிய இடம்.
1915 ஜன. 10	43	டி. ராமய்யர்	வாஸன் & கம்பெனி	ஆர். கோபால் பிள்ளை	—
,, 15	28	பி. கிருஷ்ண செட்டியார்	நம்மால் எழுதப்பட்டது	பி. கிருஷ்ண செட்டியார்	நேஷனல் பாங்கு, மதராஸ்.
,, 20	113	ஆர். நாதன்	ஆர். நாதன்	எம். கோபாலன்	—
,, 28	17	எஸ். வாஸன்	எஸ். வாஸன்	—	—

பணம் கொடுக்க வே

தேதி	பில் நம்.	பில் பெற்றுக்கொண்டவரின் பெயர்.	பில் எழுதினவரின் பெயர்.	பேயியின் பெயர்.	தொகை கொடுக்கப்பட வேண்டிய இடம்.
1915 ஜன. 10	115	எஸ். ராமன்	எஸ். ராமன்	பி. மணி	மதருஸ் பாங்கு, மதருஸ்.
,, 20	178	என். ராமசாமி	நம்மால் எழுதப் பட்டது.	என். ராமசாமி	,,

றன.

பில் குறிப்பு.

பில்லின் தேதி அல்லது தரிசனத்தேதி	பில்லில்குறிப்பிட்ட கெடு.	பணம் பெற வேண்டிய தேதி.	வ. ந.	தொகை. ரூ.	அ.	பை.	ஷரா.
ஜன. 5	2 மாதங்கள்	மார்ச். 8		300	0	0	மார்ச். 8-ந்தேதியில் பணம் வாங்கப்பட்டது.
,, 12	1 மாதம்	பிப்ர. 15		400	0	0	
,, 18	தரிசனைக்குப்பின் 1 மாதம்	,, 21		350	0	0	பிப்ரவரி21-ந்தேதியில் மறுக்கப்பட்டது.
,, 28	2 மாதம்	மார்ச். 31		500	0	0	
		ஆகமொத்தம்		1550	0	0	

ண்டிய பில் குறிப்பு.

பில்லின் தேதி அல்லது தரிசனத்தேதி	கெடு.	தொகை கொக்க வேண்டிய தேதி.	வ. ந.	தொகை ரூ.	அ.	பை.	ஷரா.
ஜன. 10	1 மாதம்	பிப்ர. 13		180	0	0	பிப்ர. 13 பணம் கொடுக்கப்பட்டது.
,, 20	இரண்டு மாதத்துக்குப்பின்னால்	மார். 23		400	0	0	
		ஆகமொத்தம்	ரூ	580	0	0	

கொள்முதல் விற்று முதல் வாபீஸ் குறிப்புப் புத்தகங்களில் ஒவ்வொன்றிலும் இரண்டு மாதிரிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு வியாபாரி தான் வியாபாரம் செய்யும் சரக்குகளுக்கெல்லாம் மொத்தமாக லாபநஷ்டம் தெரிந்தால் போதுமென்றெண்ணினுல் முதல் மாதிரியும், சரக்குகளில் ஒவ்வொரு தினுசுக்கும் லாபநஷ்டம் தெரியவேண்டுமானுல் இரண்டாவது மாதிரியும், உபயோகிக்கப்படுகிறது.

ஷை புத்தகங்களெல்லாம் விபரங்களுக்கு மட்டும் எழுதப்படுகின்றனவே தவிர, இவைகளே பற்று வரவைக்குறிக்கும் கணக்குகளாகாது. ஆதலால் இவைகளிலிருந்து பற்று வரவு விபரங்கள் லெட்ஜர் புத்தகத்தி லெழுதப்படவேண்டும். கொள்முதல் குறிப்பில் காணப்படும் பெயர்களெல்லாம் நமக்குக் கடனுக சாமான்கள் கொடுத்தவர்களாதலால் லெட்ஜர் புத்தகத்தில் அவர்கள் கணக்கு அந்தந்த தேதியில் வரவு செய்யப்படவேண்டும். மாதக்கடைசியில் கொள்முதல் சரக்குகளின் மொத்தத்தொகையை லெட்ஜரில் கொள்முதல் கணக்கில் பற்று செய்யவேண்டும்.

கொள்முதல் குறிப்புப்புத்தகத்தைப் பற்றினவரையில் மற்ருேர் விஷயம் கவனிக்கவேண்டும். கடனுக்கு நாம் சரக்குகள் வாங்கியிருந்தால் மட்டும் ஷை புத்தகம் எழுதப்படுகிறதென்று சொல்லி யிருக்கிறேரும். இச்சரக்குகளெல்லாம் வியாபாரம் செய்வதின் பொருட்டு வாங்கப்பட்ட சரக்குகளாயிருந்தால்தான், மாதக்கடைசியில் ஷை புத்தகத்தில் காணப்படும் சரக்குகளின் மொத்தத்தொகை லெட்ஜர் புத்தகத்தில் கொள்முதல் கணக்கின் பற்றுக்குப் பதிவு செய்யப்படும். எப்பொழுது கொள்முதல் கணக்கு வியாபாரசம்பந்தமாக நமக்குக்கடன் கொடுத்தவர்களைப்பற்றி குறிக்கின்றேமோ,

அதுபோலவே வேறு எந்த விஷயத்திலும் வியாபாரச்செலவு சம்பந்தமாக சாமான்களைக் கடனாகப் பெற்றிருந்தோமானால் அக்கடன் கொடுத்தவர்களின் பெயரையும் ஒரே புத்தகத்தில் எழுதவேண்டும். இப்படி எழுதும்பக்ஷத்தில், நாம் யார் யாருக்குப்பணம் கொடுக்கவேண்டும், நமக்குள்ள கடன்கள் யாவை என்பதை ஒரே புத்தகத்திலிருந்தே தெரிந்து கொள்ளலாம். இங்கு இரண்டாவதாகக் கூறப்பட்ட கடன்விஷயங்கள் கூடகொள்முதல் புத்தகத்திலேயே எழுதப்படுகின்றன. அப்பொழுது அப்புத்தகம் நாம் கடனுக்கு வாங்கின எல்லா விபரங்களையும் குறிக்கிறது. ஆனால் எல்லாக்கடன் விபரங்களையும் இந்தக் கொள்முதல் புத்தகத்திலேயே எழுதுவோமானால், அப்புத்தகத்தின் இரண்டாவது மாதிரியே உபயோகிக்கப்படவேண்டும். அப்பொழுது ஒவ்வொரு சரக்கு தினுசிலும் கொள்முதல் தொகையை நாம் அறிவதோடு கூடவியாபாரத்தைப்பற்றின மற்ற செலவுகளுக்காக நாம் வாங்கியிருக்கும் சாமான்கள் ஒவ்வொன்றிலும் மொத்தத்தொகை எவ்வளவு என்றும் இன்னும் இதர அம்சங்களில் ஒவ்வொன்றிலும் கொடுக்கப்படவேண்டிய தொகை எவ்வளவு என்றும் கண்டுகொள்ளும் பொருட்டு மாதிரி இரண்டைப்போல் கொள்முதல் கணக்கு வைக்கப்படும் விதம் கீழே விரிவாக எழுதப்பட்டிருக்கிறது :—

தேதி 1915	விபரம்.	வ. ந.	லேஹியம்	கூந்தல் எண்ணெ	எல்லா விபரங்களின் மொத்தம்	பேனு, காகிதம் முதலிய சிலவுகள்	பாகிங்சாமான்கள் செலவு	மரசாமான்கள் செலவு	சில்லரை வியாபாரச் சிலவு
ஜன 10	தனம் & கம்பேனி.								
	டின் ரூ. 6 வீதம் 20 டின்கள் லேஹியம்.		120 0 0						
	புட்டி ரூ. 3 வீதம் 20 புட்டிகள் கூந்தல் எண்ணே.			60 0 0					
	பாகிங் பெட்டிகள் 20.				184 0 0		4 0 0		
,, 15	கிருஷ்ணு & கம்பேனி.								
	டஜன் ரூ. 20 வீதம் 10 டஜன் டின்கள் லேஹியம்.		200 0 0		200 0 0				
,, 18	தனம் & கம்பேனி.								
	பாகிங் பெட்டிகள் 30.						6 0 0		
	கூந்தல் எண்ணே 40 புட்டிகள்.			120 0 0	126 0 0				
,, 23	ராமா & கம்பேனி.								
	ஆபீஸ் கணக்குகளுக்காக, 2 டஜன் பேனுக்கள், 4 டஜன் காகிதப் பென்சில்கள், 2 ரீம் காகிதம் முதலியவை.				9 8 0	9 8 0			
,, 28	தமோதரர் & கம்பேனி.								
	2 ஆபீஸ் மேஜைகள் 2 நாற்காலிகள்							90 0 0	
	நமக்காக ஷெ கம்பெனியால் தூக்குக் கூலி கொடுக்கப் பட்டது.				94 0 0				4 0 0
			320 0 0	180 0 0	613 8 0	9 8 0	10 0 0	90 0 0	4 0 0

கொள்முதல் குறிப்பு.

முதலில் சொல்லப்பட்ட கொள்முதல் குறிப்பைப் போலவே, மேலேயுள்ள குறிப்பிலும் கடன் கொடுத்தவர்களின் பெயரை லெட்ஜரில் வரவுசெய்து, வியாபாரச் சரக்குகளின் ஒவ்வொரு தினுசையும் மற்றும் இதர வியாபாரச் செலவுகளின் ஒவ்வொரு அம்சத்தையும் மாதக் கடைசியில் மொத்தத் தொகைக்கு பற்று செய்யவேண்டும்.

விற்று முதல் குறிப்பிலுள்ள பெயர்களெல்லாம் நம்மிடமிருந்து கடனாக சரக்குகள் வாங்கிக்கொண்டவர்களைக் குறிக்கின்றன வாகையால், லெட்ஜரில் அந்தந்தத்தேதியில் அவர்களின் கணக்குகளைப்பற்றுசெய்து, சரக்குகளில் ஒவ்வொரு தினுசின் கணக்கையும் மாதக்கடைசியில் மொத்தத்தொகைக்கு வரவு வைக்கவேண்டும்.

இக்குறிப்பின் முதல் மாதிரியிலிருந்து கடனுக்கு விற்கப்பட்ட எல்லா தினுசு சரக்குகளின் மொத்த விற்பனைதெரியுமே தவிர, ஒவ்வொரு தினுசுக்கும் லெட்ஜரில் கணக்கு வைக்கப்பட்டிருக்குமே யானால் இரண்டாவது மாதிரிக் குறிப்பே உபயோகப்படவேண்டும்.

விற்பனையிலுங்கூட, வியாபாரச் சரக்குகளைத் தவிர வேறு ஏதாவது வியாபாரத்திலிருந்து சாமான்க்ள் கடனாக விற்கப்பட்டால், அவைகளும் விற்று முதல் குறிப்பில், கொள் முதல் குறிப்பைப்பற்றிச் சொல்லியிருக்கிறது போல்; ஓர் அம்சமாக எழுதப்படலாம். ஆனால் இவ்வித விற்பனைகள் அதிகம் இராதாகையாலும், ரொக்கத்துக்கும் விற்கப்படவில்லை யாகையாலும், ஜர்னலில் குறிக்கப்படுவதே நலம்.

நம்முடைய வியாபாரத்தில் வியாபாரச் செலவுக்காக வேண்டிய சாமான்களை அச்சாமான்கள் வியாபார்ச் சரக்குக்

ளாகவைத்து விற்கும் வியாபாரிகளிடமிருந்தே வாங்கிக் கொள்ளுகிறோமாகையால், அந்த வியாபாரிகள் அவர்கள் வியாபார நிமித்தம் நமக்குக் கடனாக விற்பனை செய்வார்கள். ஆதலால் தான் நாம் கொள்முதல் கணக்கில் வியாபாரச்செலவுக்காக பிரிவுகள் ஏற்படுத்தி அவைகளையும் சேர்த்தெழுதுகிறோம். ஆனால் அவைகள் நமக்கு வியாபாரச்சரக்குகளல்ல. ஆதலால் அவைகளில் ஏதாவது நம்மால் விற்கப்பட்டால், அவைகளை விற்று முதல் குறிப்பில் வியாபாரச்சரக்குகளாக எழுதக்கூடாது. அவைகளை நமக்கு விற்பனைசெய்த வியாபாரிகளோ அவைகளே அவர்களுக்கு வியாபாரச்சரக்குகளாதலால் விற்று முதல் குறிப்பில் ஷை விற்பனைகளை வியாபாரச் சரக்காகக் குறிப்பு செய்வார்கள்.

இனி வாபீஸ் குறிப்புகளை எடுத்துக்கொள்வோம். வாங்கின சரக்குகள் வாபீஸ்களாவது அல்லது விற்றசரக்குகள் வாபீஸ்களாவது அதிகமாயிராவிட்டால் அவைகளெல்லாம் ஜர்னலிலேயே எழுதப்பட்டு விடுகின்றன. ஆனால், இவ்விதமான வாபீஸ்கள் அதிக மேறபட்டுவிட்டால், இவைகளும் தனித்தனியே குறிப்புகளில் எழுதப்படவேண்டும். சரக்குகள் வாங்கும்பொழுது பதிவு செய்யப்படுவதுபோல் விற்ற சரக்கு வாபீஸைப்பற்றிய குறிப்பும் பதிவு செய்யப்பட்டாலுங்கூட, இந்தச் சரக்குகள் புதிதாக வாங்கினதில்லையாகையால், நாம் விற்ற சரக்குகளில் எவ்வளவு திருப்பப்பட்டிருக்கின்றன என்று தெரிந்து கொள்ளும் பொருட்டு விற்றசரக்குகள் வாபீஸ் குறிப்பு என்ற புத்தகத்தை ஏற்படுத்தி சகல விபரங்களையும் கொள்முதல் குறிப்பைப்போலவே எழுதி, லெட்ஜரில் ஷை சரக்குகள் திருப்பி அனுப்பிவிட்டவரின் கணக்கை வரவு செய்தும், விற்ற சரக்கு வாபீஸ் கணக்கை

மாதக்கடைசியில் மொத்தத் தொகைக்கு பற்றும் செய்ய வேண்டும்.

மேலே சொல்லியது போலவே நாம் வாங்கின சாக்குகளை வாபீஸ்செய்தால், அந்த வாபீஸ் நமது வியாபாரச் சரக்குகளின் புதிதான விற்பனையல்லவாதலால் வாங்கினசரக்குகள் வாபீஸ் குறிப்பென்று தனிப்புத்தகமேற்படுத்தி விபரங்களைமேலே சொல்லியிருக்கிறது போலெழுதி, லெட்ஜர் புத்தகத்தில் நாம்யாருக்குச் சரக்குகளை வாபீஸ் செய்துவிட்டோமோ அவர்கள் கணக்குகளைப்பற்று செய்து, மாதக் கடைசியில் மொத்தத் தொகைக்கு வாங்கின சரக்குகள் வாபீஸ்கணக்கை வரவுசெய்யவேண்டும்.

இந்த வாபீஸ் குறிப்புகளில் கூட தினுசு தினுசாக ஒவ்வொரு சரக்குக்கும் வாபீஸ் எவ்வளவு ஏற்பட்டது என்று அறிய வேண்டுமானல் இரண்டாவது மாதிரியைப்போல் குறிப்பு வைத்துக்கொள்ளலாம்.

தோகை வரவேண்டிய பில் குறிப்பு:—ஒரு வியாபாரி தான் பணம் பெற்றுக்கொள்ளும் பொருட்டு யாரிடமிருந்தாவது ஒரு பில்லைப் பெற்ருனென்ருல் அவைகளை ஜர்னலிலாவது லெட்ஜர் புத்தகத்திலாவது குறிப்பு செய்யவேண்டும். அப்பொழுது பில்லினுடைய விபரம் முழுவதும் அதில் குறிக்கப்படமுடியாது. மேலும் அநேக விதமான பில்கள் ஒரே நாளில் வருமேயானல் இவைகளை உடனே பதிவு செய்வது மிகவும் கஷ்டமாவதோடு கூட பதிவுகளும் அதிகமாகிவிடும். ஆகவே பணம் வரவேண்டிய பில்களெல்லாம் தனியாக ஓர் புத்தகத்தில் எழுதப்படுகின்றன.

இக்குறிப்பில் காணப்பட்ட பெயர்களெல்லாம் அவர்கள் கொடுக்கவேண்டிய கடன்களைத் தீர்க்கும்பொருட்டு பில்களை

அனுப்பியவர்களைக் குறிக்கின்றன வாகையால், அவர்கள் கணக்குகள் தீர்ந்தனவென்பதைக் காண்பிக்கும் பொருட்டு லெட்ஜர் புத்தகத்தில் அவர்கள் கணக்குகள் வரவு செய்யப் பட்டு, வந்த பில்களின் மொத்தத்தொகை மாதக்கடைசியில் பணம் வரவேண்டிய பில்கணக்கில் பற்று செய்யப்படும்.

மேற்படி நம்மிடம் வந்த பில்கள் எப்படித் தீர்ந்தன வென்றெழுதும் பொருட்டு ஷை குறிப்புப்புத்தகத்தில் 'ஷரா' என்று ஒரு பிரிவும் ஏற்படுத்திக் கொள்ளப்படுகிறது.

தொகை கொடுக்கவேண்டிய பில் குறிப்பு:—நாம் அதிக மாக பணம் கொடுக்கவேண்டி பில்களை ஒப்புக்கொண்டோ மானால், லெட்ஜர் புத்தகத்தில் அதிகமான விபரத்தை எழுத முடியாததால், இவ்விதமான ஒரு புத்தகம் எழுதப்படு கிறது. இதிலும் நாம் ஒப்புக்கொண்ட பில்கள் எப்படித் தீர்ந் தன என்ற விபரம் 'ஷரா' என்று ஓர் பிரிவில் எழுதப்பட லாம்.

மேற்படி குறிப்பில் உள்ள பெயர்களெல்லாம் நம்மிட மிருந்து பணம் பெறவேண்டியவர்களாதலால் அக்கணக்கு கள் தீரும்பொருட்டு இப்பொழுது பில்கள் கொடுக்கப்பட் டன வாகையால், அப்பெயர்களின் கணக்குகள் லெட்ஜரில் பற்று செய்யப்பட்டு, பணம் கொடுக்கவேண்டிய பில் கணக்கு மொத்தத்தொகைக்கு வரவாகவேண்டும்.

ஜர்னலின் உபயோகம்:—ஒவ்வொரு விதமான கொடுக் கல் வாங்கல் விபரமும் ஒவ்வொரு உதவிக்குறிப்புப் புத்த கத்தில் எழுதப்படுகிற தென்று சொன்னோம். ஆயினும் ஷை குறிப்புகளில் போகக்கூடாத சில விஷயங்கள் அதா வது, பெறுமானக் குறைவைக் காட்டும் செலவு, மறுக்கப் பட்ட பில்கள், வியாபாரச் சரக்குகளல்லாத சாமான்களின்

விற்பனை, பணம் எதிர் பார்க்கமுடியாத கடன்கள், முதலிய வைகள் ஜர்னல் குறிப்பில் வந்தே பிறகு லெட்ஜர் புத்தகத் தில் பதிவு செய்யப்படவேண்டும். இன்னும், பதிவுகளை ஒரு கணக்கிலிருந்து மற்றொரு கணக்குக்கு மாற்றவேண்டு மானாலும், தப்பிதமுள்ள பதிவுகளை வேறு பதிவுகள் செய்து திருத்தவேண்டுமானாலும், கையிருப்பு பாக்கிகளையும் முடி வான பதிவுகளையும் ஒரு கணக்கிலிருந்து மற்றொரு கணக் குக்கு மாற்றவேண்டுமானாலும் ஜர்னல் குறிப்பு எழுதப்படு கிறது. இவ்விஷயம் பின்னால் தெரியவரும்.

ஆகவே, வியாபார விஷயங்களில் ஒவ்வொரு வகையும் ஒவ்வொரு தனிக்குறிப்பில் எழுதப்பட்டு விடுகிறபடியால் அந்த வகையைச்சார்ந்த லெட்ஜர் கணக்குகள் உடனுக்குட னேயும் நன்கு விளக்கமாகவும் எழுதப்படுகின்றன. இது உதவிக்கணக்குப் புத்தகங்களாலேற்படும் பெரிய உத வியாகும்.

நமக்குச் சாதகமாக உதவிக்கணக்குக் குறிப்புகள் நாம் ஏற்படுத்திக் கொள்வது போலவே, மேலும் நமது சௌகரி யத்தை உத்தேசித்து லெட்ஜர் கூட மூன்று பிரிவுகளாகச் செய்யப்படுகிறது.

கணக்குகளில் பொதுவாக இரண்டுவிதங்கள் இருக் கின்றனவென்று முதல் முதலிலேயே சொல்லியிருக்கிறோம். பெர்ஸனல் அக்கவுண்டுகள், பெர்ஸனல் அல்லாத அக்கவுண்டு கள் ஆகிய இவ்விரண்டு பிரிவுகளில், கொள்முதல் கணக்கு விற்றுமுதல் கணக்கு, மற்ற சாமான்கள் கணக்கு, செலவுகள் கணக்கு ஆகியஎல்லாகணக்குகளும் பெர்ஸனல் அல்லாதவை. ஆகையால் இந்த பெர்ஸனல் அல்லாதகணக்குகளை மட்டும் அதாவது ரியல், நாமினல் ஆகிய இரண்டு வித அக்கவுண்டு

களையும் சேர்த்து லெட்ஜர் புத்தகத்து ஓர் பாகத்தில் எழுதப்படுகிறது. இந்த லெட்ஜர்பிரிவுக்கு "பொது லெட்ஜர்" (General Ledger) என்று சொல்லப்படுகிறது. பெர்ஸனல் அக்கவுண்டுகளெல்லாம் வியாபாரிகளின் கணக்குகளாதலால், சில வியாபாரிகள் நமக்குப்பணம் கொடுக்கவேண்டியும், சிலருக்கு நாம் பணம்கொடுக்க வேண்டியுமிருக்கும். ஆதலால் இவ்விருவகுப்பினருக்கும், கடன்கொடுத்தவர்களைக் காட்டும் லெட்ஜர் (Purchases Ledger) பிரிவென்றும், கடன் வாங்கினவர்களைக்காட்டும் லெட்ஜர் (Sales Ledger) பிரிவென்றும் இரண்டு லெட்ஜர் பிரிவுகள் எழுதப்படுகின்றன.

மேற்படி மூன்று லெட்ஜர் பிரிவுகளிலும் பதிவுகளைச் செய்யும் பொழுது தேதிவாரியாக ஜர்னலிலிருந்தும், ரொக்கப்புத்தகத்திலிருந்தும் மற்ற உதவிக்குறிப்புப் புத்தகங்களிலிருந்தும் பதிவுகளைச் செய்யவேண்டும். வியாபார ஆரம்பத்தில் உள்ள கையிருப்புகள் ஜர்னலில் முதன் முதலில் முதல் தேதியில் எழுதப்படுமாதலால், இந்த பாக்கிகளையே லெட்ஜரிலும் முதலில் பதிவுசெய்து விடவேண்டும்.

கடன் கொடுத்தவர்கள் லெட்ஜரிலுள்ள கணக்குகள் எப்பொழுதும் வரவு பாக்கியையே காண்பிக்கவேண்டும். ஆனால் அவர்கள் கணக்கில் அதிகமானதொகை கொடுக்கப்பட்டால், பற்றுபாக்கிகளும் இருக்கக் கூடும்.

இதுபோலவே கடனுக்கு வாங்கினவர்கள் லெட்ஜரிலுள்ள கணக்குகள் எப்பொழுதும் பற்றுபாக்கியையே காண்பிக்கவேண்டும். ஆனால் அவர்களிடமிருந்து அதிகமான தொகைகொடுக்கப்பட்டால், வரவுபாக்கிகளும் இருக்கக்கூடும்.

இனி பலகுறிப்புகளிலுள்ள வியாபார விபரங்களெல்லாம் லெட்ஜரில் எந்தெந்த பிரிவுக்குப் போகின்றன வென்பதை விளக்கிக் காட்டுவோம்.

(1) ஜர்னல் :—முதலில் வியாபார ஆரம்பத்திலுள்ள கையிருப்புப்பாக்கிகள் இதில் எழுதப்படுகின்றன. இந்தபாக்கிகளில், நமக்குப்பணம் கொடுக்கவேண்டிய வியாபாரிகளிருந்தால், அவர்களின் கணக்குகள் கடன் வாங்கினவர்களைக் காட்டும் லெட்ஜர் பிரிவிலும், நம்மிடமிருந்து பணம் பெறவேண்டிய வியாபாரிகளிருந்தால் அவர்களின் கணக்கு கடன் கொடுத்தவர்களைக் காட்டும் லெட்ஜர் பிரிவிலும், மற்றசரக்கு பாக்கிகள், கையிருப்பு சாமான்கள், பணம் வரவேண்டிய பணம் கொடுக்கவேண்டிய பில்கள், மூலதனம் ஆகிய இவைகளைப் பற்றியபதிவுகள் பொது லெட்ஜரிலும் எழுதப்படுகின்றன.

பின்னும் வியாபாரச் சரக்குகளல்லாத சாமான்களின் விற்பனையைப்பற்றியும் ஜர்னலில் குறிக்கப்படுகிறது. இந்த சாமான்களைப் பற்றிய பதிவை பொது லெட்ஜரில் செய்து, கடனுக்கு ஷை சாமான்களை வாங்கிக்கொண்டவர்களைப் பற்றிய பதிவை கடனுக்கு வாங்கினவர்களின் லெட்ஜரில் எழுதவேண்டும்.

மறுக்கப்பட்ட பில்களை ஜர்னலில் எழுதி அவைகளின் கணக்கு பொது லெட்ஜரில் எழுதப்படுகிறதாகையால், பதிவும் அந்த லெட்ஜரிலேயே செய்யப்படும். இது போலவே மற்ற விபரங்களுக்கும், லெட்ஜரின் எந்தப் பிரிவில் எழுதப்படவேண்டுமோ அதைக்கண்டு பிடித்து அந்தந்த பிரிவில் பதிவைச் செய்யவேண்டும்.

உதாரணமாக, வியாபாரஸ்தலத்திலுள்ள ரூ. 1500 மதிப்புள்ள மரசாமான்களுக்காக நூற்றுக்கு ஐந்து வீதம் பெறுமானக்குறைவு தள்ளுகிறோம் என்று வைத்துக்கொள்வோம். இந்த விபரத்தை ஜர்னலில் "பெறுமானக் குறைவு கணக்கு பற்று ரூ. 75 மரசாமான் கணக்கால்" என்று எழுதுவோம். இந்தக் குறிப்பை லெட்ஜரில் பதிவு செய்யும்பொழுது பெறுமானக்குறைவும் மரசாமான்களும் பொது லெட்ஜரைச் சேருகின்ற கணக்குகளாகையால் அந்த லெட்ஜரில் ஷை கணக்குகள் பற்று வரவு செய்யப்படவேண்டும்.

ஒருவர் நமக்குக் கொடுக்கவேண்டிய பணத்திற்காக வட்டிவிதிக்கிறோமென்ற ஓர் விபரத்தில், ஜர்னலில் ஷை வியாபாரி வட்டிக் கணக்குக்குப் பற்று என்று குறிப்பெழுதி அந்தக் குறிப்பை லெட்ஜரில் பதிவு செய்யும் பொழுது வட்டிக் கணக்கை பொது லெட்ஜரிலும், வியாபாரியின் கணக்கை நமக்குக் கடன் கொடுக்க வேண்டியவர்களின் லெட்ஜரிலும் காண்கிறோம். இது போலவே மூலதனத்துக்காக வட்டியும் சேர்க்கப்பட்டால், வட்டிக்கணக்கு முதல்கணக்குக்குப் பற்றுகும். இவ்விரண்டு கணக்குகளும் பொது லெட்ஜரிலேயே இருக்கின்றன வாகையால் அந்த லெட்ஜரில் பதிவைச் செய்யவேண்டும்.

(2) ரோக்கப் புத்தகம்:—இந்தப் புத்தகம் மற்ற குறிப்புகளைப்போலில்லாமல் லெட்ஜர் கணக்குகளின் ஓர் பகுதி யென்று முன்னமேயே சொல்லியிருக்கிறோம். ஆதலால் ரொக்கப் புத்தகத்தில் விபரத்தில் குறிக்கப்பட்ட கணக்குகளைப் பற்றி மட்டும் பதிவுகள் லெட்ஜரில் செய்யப்படுமே தவிர, ரொக்கம் பாங்கு ஆகிய இவ்விரண்டு கணக்குகள் கூட லெட்ஜரில் காணப்படாது. ஷை விபரங்களை லெட்ஜரில்

பதிவு செய்யும்பொழுது எந்தெந்த லெட்ஜர் பிரிவுகளில் கணக்குகள் எழுதப்படலாமோ அதைக் கண்டுகொள்ள வேண்டும்.

(3) கொள்முதல், விற்றுமுதல், வாபீஸ், பில்கள் முதலிய குறிப்புகள்:— இவைகளெல்லாம் வியாபாரியின் சௌகரியத்திற்காக வைக்கப்படும் உதவிப் புத்தகங்களே தவிர லெட்ஜரைச் சேர்ந்தவை யல்லவென்று நமக்குத் தெரிந்த விஷயம். ஆதலால், விவரத்தில் உள்ள பெயர்களின் கணக்குகளை லெட்ஜரில் பற்று வரவு செய்வதோடு கூட ஷை கணக்குகளையும் மொத்தத்திற்கு பொது லெட்ஜரில் பற்று வரவு செய்யவேண்டும்.

இவ்விதம் வியாபார கொடுக்கல் வாங்கல் விஷயங்களெல்லாம் லெட்ஜரில் மூன்று பிரிவுகளிலும் பரவியிருக்கின்றன. அவைகள் எப்படி பல குறிப்புகளிலும் சேருகின்றனவென்பதை நன்றாகத் தெரிந்துகொள்ளும் பொருட்டு பின்னால் அனுபந்தத்தில் சேர்க்கப்பட்டிருக்கிற நம். 2 படத்தைப் பார்க்கவும்.

இதுவரையில் நாம் சொன்னது போல் லெட்ஜரை மூன்றுபிரிவுகளாகப் பிரிப்பதால் ஒவ்வொரு லெட்ஜரையும் ஒரு குமாஸ்தாவசம் ஒப்புவித்து சீக்கிரமாக கணக்குகளை முடிக்கும் வேலையைச் செய்து கொள்வதுடன், கணக்குகளும் யாதொரு தப்பிதமில்லாமல் விளங்கும். மேலும் லாபநஷ்டக்கணக்கு, பாலன்ஸ்ஷீட் முதலியவைகளை லெட்ஜரின் ஒவ்வொரு பிரிவை வைத்துக்கொண்டே மற்றபிரிவின் தேவையில்லாமல் எழுதிவிடலாம். எப்படியெனில் லாபநஷ்டம் சம்பந்தப்படுகிற கணக்குகளெல்லாம் பொது லெட்ஜரிலேயே இருக்கின்றன வாகையால், லாபநஷ்டக்கணக்கு எழுதும்

பொழுது பொது லெட்ஜர்மட்டும் இருந்தால் போதும். மற்ற லெட்ஜர்கள் அப்பொழுது வேறொருவரால் உபயோகிக்கப் படலாம். பாலன்ஸ்ஷீட் எழுதும்பொழுது மட்டும் கையிருப்பு பாக்கிகள், வரவேண்டிய கணக்குகள் முதலியவை லெட்ஜர் பிரிவுகள் எல்லாவற்றிலும் பரவி யிருக்கின்றனவாகையால் எல்லாலெட்ஜர்களும் உபயோகிக்கப்படும். நமக்கு இவ்வளவுதொகை சொத்தாக வரவேண்டியிருக்கிறது, இவ்வளவு தொகை நாம் கடனாக கொடுக்கவேண்டி யிருக்கிறது என்ற விபரங்களை, கடன் கொடுத்தவர்களுக்கும் கடன்வாங்கிக் கொண்டவர்களுக்கும் இரண்டு லெட்ஜர்கள் ஏற்படுத்துவதால் அடிக்கடி அறிந்துகொள்ளலாம். ஆனால் விபரங்களையெல்லாம் கணக்குகளில் பதிவுசெய்தபின் முடிப்பதற்கு முன்னால் சரிபார்க்கும் குறிப்பு எழுதப்படுகிறதென்று சொல்லிவிட்டோம். லெட்ஜர் பிரிவுகள் ஒன்றில் ஒரு பதிவு இருக்குமேயானால் அப்பதிவின் மற்றொரு பகுதி வேறு லெட்ஜர் பகுதியில் இருக்கநேரிடுமாதலால், பற்றுவரவு பாக்கிகளெல்லாம் சமானம் செய்யும் பொருட்டு மூன்று லெட்ஜர்களின் கணக்கு பாக்கித்தொகைகளையும் சேர்த்துக் கூட்ட வேண்டும்.

லெட்ஜரின் பிரிவுகளை மாதிரிக்காக மூன்றாகமட்டும்எடுத்துக்கொண்டோமே தவிர அவ்வளவு பிரிவுகள்தான் உண்டு என்று கட்டாயப்படுத்த முடியாது. லெட்ஜரைமேலும் அநேக பிரிவுகள் செய்யலாம். இது வியாபாரத்தின் நிலைமையைப் பொருத்திருக்கிறது.

கடன் கொடுத்தவர்கள் கணக்குகளும் கடன்வாங்கினவர்கள் கணக்குகளும் அதிக மிருக்குமானால், அவைகளும் சில பிரிவுகளாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவும்ஒரு குமா

ஸ்தாவிடம் கொடுக்கப்பட்டால், கணக்குகளை எழுதும் வேலை சீக்கிரம் முடிந்துவிடும். இன்றேல், அப்பப்பொழுது கணக்குகள் குறிக்கப்படாமல் பாக்கித் தங்கிவிடுமாகையால் பிறகு பதிவு செய்வது மிகவும் சிரமமாகமுடியும்.

பொது லெட்ஜர்கூட சௌகரியத்தின் பொருட்டு ஒவ்வொரு வியாபாரச் சரக்குக்கும் அது சம்பந்தமான மற்ற கணக்குகளுக்கும் ஒவ்வொரு பிரிவாக வகுக்கப்படுகிறது. இன்னும், முதல் கணக்கு அதைச் சேர்ந்த வட்டிக் கணக்கு, முதலாளியின் பற்றுக்கணக்கு, லாப நஷ்டக் கணக்கு முதலிய முக்கியமான கணக்குகள் தனியாக ஒரு லெட்ஜரின் பிரிவில் வைக்கப்பட்டு பதிவுகளெல்லாம் முக்கிய காரியஸ்தராலேயே எழுதப்படுகின்றன. ஆகவே ஒரு வியாபாரத்தின் கணக்குகளெல்லாவற்றையும் லெட்ஜரைப் பல பிரிவுகளாகச் செய்து அவைகளில் எழுதினோமானால், பதிவுகள் உடனுக்குடனே செய்வதற்கேற்ற சௌகரிய மிருப்பதுடன் வியாபாரத்தின் நிலைமையும் அடிக்கடி உடனேயே தெரியவரும்.

11-ம் அதிகாரம்.

ட்ரயல் பாலன்ஸினால் கண்டு பிடிக்கக்கூடாத சில தப்பிதங்கள்—முடிவுக் குறிப்புகளும் முடிவுக் கணக்குகளும்

முதற்குறிப்புப் புத்தகத்திலிருந்தும் உதவிக்குறிப்புகளிலிருந்தும் லெட்ஜர் கணக்குகளில் பதிவுகள் செய்யப்பட்டபின்பு, அவைகளின் பற்றுவரவுகள் சரியாக இருக்கின்றனவா என்று கண்டு கொள்ளும் பொருட்டு சரிபார்க்கும் குறிப்பாகிய ட்ரயல் பாலன்ஸை எழுதுகிறோம். இதை

இரண்டு விதங்களாக, அதாவது ஒன்று பற்று வரவு தொகைகளின் மொத்தங்களை உபயோகித்தும், மற்றொன்று, ஒரு பக்கத்துக் குறைந்த மொத்தத்தொகையை மற்றொரு பக்கத்து மொத்தத்தொகையிலிருந்து கழித்து, பற்று வரவு பாக்கிகளை மட்டும் உபயோகித்தும் எழுதுவதுண்டு. தற்காலத்தில், சீக்கிரத்தில் வேலை முடியக்கூடியதாயும் பார்ப்பதற்குக் கலக்கமுண்டாகும்படி அதிகமான எண்ணிக்கைகளில்லாததாயுமுள்ள, இரண்டாவது விதமே ட்ரயல்பாலன்ஸில் உபயோகப்படுகிறது.

கணக்குகளெல்லாவற்றையும் பதிவு செய்தபின் ஒவ்வொரு பற்றுப்பதிவுக்கும் ஒவ்வொரு வரவுப்பதிவு இருக்கிறதா என்று கண்டுகொள்ளும் பொருட்டே ட்ரயல் பாலன்ஸ் எடுக்கப்படுகிற தாகையால், தப்பிதமாகவே ஒரு தொகையைப்பற்றிலும் அதே தொகையை வரவிலும் எழுதிஞேமானல் ஷெ தப்பிதத்தை ட்ரயல் பாலன்ஸ் எடுத்துக்காட்டாது. ஒருவிபரத்தையே விட்டு விட்டோமானல், பற்றுப்பதிவும் அதைச் சேர்ந்த வரவுப்பதிவும் முற்றிலும் விட்டுவிடப் படுகின்றன வாகையால் அத்தொகையை நீக்கி பாக்கி கணக்குகளின் மொத்தத்தொகை பற்றிலும்வரவிலும் சமமாயிருக்குமாகையால், ட்ரயல் பாலன்ஸ் ஷெ விவரம் விடப்பட்டதப்பிதத்தையும் எடுத்துக்காட்டாது.

ஆகவே, ட்ரயல் பாலன்ஸ் மாத்திரம் கணக்குப்பதிவுகள் முற்றிலும் ஒழுங்காகயிருக்கின்றனவா என்று பார்ப்பதற்குச் சரியான சாதனமாகாது. ஆனல் ஒருவன் நிதானமாகப்பதிவுகளைச் செய்தபின் ட்ரயல் பாலன்ஸ்எடுத்துப் பார்த்து மொத்தத் தொகைகள் சமமாக வந்துவிட்டால்

அநேகமாக கணக்குகள் ஒழுங்காகப்பதிவு செய்யப்பட்டன வென்று நம்பிக்கை கொள்ளலாம்.

கீழ்க்கண்ட தப்பிதங்கள்தான் ட்ரயல் பாலன்ஸின் மொத்தத்தொகைகள் சமமாக வராமல்தெரியக்கூடியவை:—

ஒரு விபரத்தைப்பதிவு செய்யும் பொழுது ஒருகணக்கின் பற்றில் ஒரு தொகையை எழுதி மற்றொரு கணக்கின் வரவில் அதே தொகையை எழுதாமல் வேறொரு தொகையை எழுதினுலாவது, ஒரு பக்கத்தில் மட்டும் பதிவைச்செய்து மற்றொரு பக்கத்தில் பதிவு செய்யவேண்டியதை மறதியால் விட்டு விட்டாலாவது, பற்றுவரவுகளில் ஒரு பக்கத்தில் பதிவு செய்யவேண்டியதை மற்றொரு பக்கத்தில் மாற்றி எழுதி விட்டாலாவது, ஒருதரம் பதிவு செய்தபின் அதே தொகையை மறுபடியும் அதே கணக்கில் பதிவு செய்தாலாவது, ட்ரயல் பாலன்ஸின் மொத்தத்தொகைகள் சமமாக வராது. இதிலிருந்து ஏதோதவறு கணக்கெழுதுவதில் ஏற்பட்டிருக்கிறது என்று கண்டு கொள்ளலாம்.

கீழ்க்கண்ட தப்பிதங்களே, பற்றுக்குச் சமமாயுள்ள வரவு மிருக்கிறதானையால் ட்ரயல் பாலன்ஸ் எடுத்துக் காட்டாது:—

நாம் ஒருகுறிப்பை உதவிக்கணக்குக் குறிப்பில் எழுதும் பொழுதே தொகையைத் தப்பாக எழுதியிருந்தால், அதே தொகை லெட்ஜர் புத்தகத்தில் இரண்டு கணக்குகளில் இரண்டு பக்கங்களிலும் சேர்ந்திருக்கும். ஷ பதிவு வியாபாரத்தின் உண்மை நிலையை அறிவிக்க முடியாத தப்பாக விருந்தாலுங்கூட, பற்று வரவு பக்கங்கள் ஒரே தொகையை உடையன வாயிருப்பதால், இப்பிசகை ட்ரயல் பாலன்ஸால் நாம் கண்டு கொள்ளமுடியாது.

ஒரு குறிப்பையே முற்றிலும் விட்டுவிட்டாலும், பற்று வரவு பக்கங்களிரண்டிலும் ஒரே தொகை குறைகிறபடியால், ட்ரயல் பாலன்ஸின் மொத்தத் தொகைகள் சமமாகவே இருக்கும். ஆதலால் ஷை பதிவு சரியாக லாப நஷ்டத்தைக்கண்டுபிடிக்க முடியாத ஓர் பிசகாயிருந்தாலும், ட்ரயல் பாலன்ஸ் ஷை தப்பைத் தெரிவிக்காது.

தவறுதலால் ஓர் கணக்கைப்பற்ருே அல்லது வரவோ செய்வதைவிட்டு மற்ருேர் கணக்கில் பதிவைச்செய்தால், வியாபாரத்தில் உண்மையான ஸ்திதியைக் காட்டாத தப்பிதமாயினும், எந்தக் கணக்கில் எழுதப்பட்டாலும் அதே தொகை பற்று மொத்தத் தொகையிலும் வரவு மொத்தத் தொகையிலும் அடங்கி விடுகிறதாகையால், ஷை பிசகு ட்ரயல் பாலன்ஸினுல் தெரியவராது.

ஒரு தொகையை ஒரு கணக்கில் அதிகமாக எழுதியும் மற்ெருரு கணக்கில் அதே பக்கத்தில் முதலில் அதிகமாக எழுதப்பட்ட தொகை யவ்வளவு இப்பொழுது குறைத்தும் எழுதியிருந்தோமானுல், இத்தொகைகளைக் கூட்டும்பொழுது ஷை அதிகப்பட்ட தொகையும் குறைந்ததொகையும் சேர்ந்து சமமாகிவிடும். ஆகவே இப்பிசகும் ட்ரயல் பாலன்ஸால் வெளிப்படாது.

ட்ரயல் பாலன்ஸைக்கொண்டு அறிய முடியாத ஷை தப்பிதங்களை கணக்குகளின் பதிவுகளை நன்ருக ஒப்பிட்டுப் பார்த்தபின் தான் அறியலாம்.

ட்ரயல் பாலன்ஸிலிருந்து ஏதாவது தப்பிதமாக யிருக்குமென்று தோன்றுமானுல், அத்தப்புகளை முதலில் திருத்தினபிறகே, முடிவு கணக்குகளை எழுத ஆரம்பிக்கவேண்டும்.

ட்ரயல் பாலன்ஸ் எடுக்கும்பொழுது, கீழ்க்கண்டவை களை மறக்கக்கூடாது :—

எல்லா பாக்கிகளையும் எடுத்தெழுதினபின், ரொக்கப் புத்தகத்திலிருந்து ரொக்கம், பாங்குத்தொகைகளின் பாக்கி களையும் எழுதவேண்டும். சில்லரை ரொக்கப்புத்தகம் வைத் திருந்தோமானால், அதிலுள்ள பாக்கியையும் எடுத்தெழுத வேண்டும். ரொக்கப் புத்தகத்திலிருந்து நாம் கொடுத்த தள்ளுபடியின் மொத்தத்தையும் நமக்குக் கொடுக்கப்பட்ட தள்ளுபடியின் மொத்தத்தையும் லெட்ஜரில் தள்ளுபடிக் கணக்கில் பதிவு செய்திருக்கிறோமாவென்று பார்க்கவேண் டும்.

ரொக்கப் புத்தகத்திலிருந்து பற்று விபரத்தை லெட்ஜ ரில் பதிவு செய்யும்பொழுது, அந்த விபரத்தில் காணப்படு கிற லெட்ஜர் கணக்கை வரவு செய்கிறோம். பற்று விபரங் களை லெட்ஜரில் வரவுசெய்யும் ஞாபகத்தைக் கொண்டு ரொக் கப் புத்தகத்தின் பற்று பக்கத்தில் காணப்படுகிற தள்ளுபடி யையும் தள்ளுபடிக் கணக்கில் வரவு செய்யக்கூடாது. பற் றில் உள்ள தள்ளுபடி நமக்கு நஷ்டமாகையால் தள்ளுபடிக் கணக்கு பற்று செய்யப்பட வேண்டுமே தவிர, வரவாகக் கூடாது. இதுபோலவே வரவு பக்கத்தில் உள்ள தள்ளு படித்தொகையும் தள்ளுபடிக் கணக்கில் வரவாகவேண்டும் என்பதை கவனிக்கவும்.

பல உதவிக்குறிப்புப் புத்தகங்களிலிருந்தும் மொத் தத்தொகைகள் அவைகளுக்குத் தனித்தனியே யுள்ள லெட்ஜர் கணக்குகளில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றனவா என்று கவனிக்கவேண்டும்.

ஆகவே மேலேயுள்ள பதிவுகளெல்லாம் சரிவர எழுதப் பட்டிருந்தால், ட்ரயல் பாலன்ஸின் மொத்தத் தொகைகள் சமமாகயிருப்பதோடு கூட, கணக்குகளும் ஒழுங்காக எழுதப் பட்டன வென்பதற்கும் ஐயமில்லை.

சரிபார்க்கும் சாதனமாகிய ட்ரயல் பாலன்ஸூம் பாக்கி ஜாப்தாவாகிய பாலன்ஸ் ஷீட்டும்.

ட்ரயல் பாலன்ஸானது கணக்குகள் சரிவரபற்று வரவு செய்யப்பட்டிருக்கின்றனவா என்று நாம் கண்டுகொள்ள ஓர் சாதனமாக வைத்துக்கொள்ளும் குறிப்பே தவிர,பற்று வரவு கணக்கைச் சேர்ந்ததல்ல என்று நாம் அறிந்திருக்கிறோம்.இது போலவே லாபநஷ்டக்கணக்கிலிருந்து எடுக்கப்படுகிற மிச்சலாபத்தை முதல் தொகையோடு சேர்த்து வியாபாரத்தில் நமக்குச் சொந்தமான மூலதனத்தைக்கண்டு பிடித்து இத் தொகை வியாபாரத்திலுள்ள கடன்களை சொத்துகளிலிருந்து கழித்து மிச்சமிருக்கும் தொகைக்குச் சமமாக விருக்க வேண்டுமாதலால் அப்படி சமமாயிருக்கிறதா என்று கண்டு கொள்ளும் பொருட்டு கடன்கள் சொத்துகளைக் காட்டும் பாக்கி ஜாப்தாவானது குறிக்கப்படுகிறது. இந்தபாக்கிஜாப்தா வும் ஒரு குறிப்பே தவிர கணக்குகளைச் சேர்ந்ததாகாது என்பதும் தெரிந்தவிஷயம். இவ்விருகுறிப்புகளிலும், ட்ர யல் பாலன்ஸ் கணக்குகளைப்பதிவு செய்த வுடனேயும் பாலன்ஸ் ஷீட் கணக்குகளை முடித்து லாப நஷ்டத்தைக் கண்டுபிடித்தபின்னும் எழுதப்படுகிறது. ட்ரயல் பாலன்ஸ் அநேகமாக பதிவுகள் சரிவர செய்யப் பட்டிருக்கின்றனவா என்று காட்டுமேதவிர, பாலன்ஸ்ஷீட் வியாபாரத்தின் உண் மையான நிலையை கணக்குகளைக் கொண்டு அறிவிக்கும்.

ட்ரயல் பாலன்ஸில் எல்லாகணக்குகளின் பாக்கித் தொகைகளேயும் எழுதி பதிவுகளேச் சரிபார்க்கிருேம். பாலன்ஸ் ஷீட்டில் வியாபாரிகளின் பாக்கிகளேயும் சொத்து வகையரு கணக்குகளின் பாக்கிகளேயும் எழுதி கடைசியாக புள்ள மூலதனத் தொகையைச் சரிபார்க்கிருேம்.

முடிவுப்பதிவுகளும் கணக்குகளும்.

நாம் கணக்குகளே முடிவு செய்யும்பொழுது, பாக்கிப் பற்ருல், பாக்கிவரவுக்கு என்ருவது, லாப நஷ்டகணக்கு, வியாபாரச் சரக்குக்கணக்கு முதல் கணக்கு, முதலிய கணக்குகளுக்கு இதர கணக்குகளே மாற்றும் பொழுதாவது குறிக்கப்படும் பதிவுகளுக்கு முடிவுபதிவுகள் என்று பெயர். இவ்விதம் முடிவுப்பதிவுகளேச்செய்தபின் உண்டாகும் கணக்குகளான வியாபாரச்சரக்குக் கணக்கு, லாபநஷ்டக்கணக்கு, பாக்கி ஜாப்தா முதலியவைகளுக்கு முடிவுகணக்குகளென்று பெயர். பாக்கிஜாப்தாவானது பற்று வரவுகளேக்குறிக்கும் ஓர் கணக்கில்லாவிட்டாலும், முடிவாகவேண்டிய விவரங்களேத் தெரிவிக்கிறதாகையால் அதையும் முடிவுகணக்குகளிலொன்ருக சேர்க்கப் பட்டிருக்கிறது.

ஓர் அக்கவுண்டு அல்லது வியாபாரக்கணக்கு என்று சொல்லும் பொழுது அது ஒருபக்கத்தில் பற்று விபரங்களேயும் மற்ரெருு பக்கத்தில் வரவுவிபரங்களேயும் காண்பிக்கிறதென்றறிகிருேம். ஒவ்வொரு விஷயமும் ஷை கணக்குகளில் போகும் பொழுது பற்றில் ஒருதரமும் வரவில் ஒருதாமும் எழுதப்படுகிறதென்றும் அறிகிருேம். ஒருகொடுக்கல் வாங்கல் விஷயத்தில் எந்தக்கணக்கு பற்று, எந்தக் கணக்கு வரவு என்றவிபரங்களே சுலபமாகக் கண்டறியும்

பொருட்டு உதவிக்குறிப்புகளும் முதற் குறிப்புப்புத்தகமும் வைத்துக் கொள்ளுகிறோமென்றும் அறிந்தோம். உதவிக் குறிப்புகளில் எழுதப்படமுடியாத விபரங்களெல்லாம் ஜர்னலிலேயே எழுதப்படுகின்றன. ஆகவே வருக்குப்புத்தகத்தில் காணப்படும் ஒவ்வொரு பதிவுக்கும் அத்தாட்சியாக ரொக்கப்புத்தகத்திலிருந்தும் உதவிக்குறிப்புப் புத்தகங்களிலிருந்தும் முதற் குறிப்பிலிருந்தும் பற்று வரவு எடுக்கப்பட வேண்டுமென்பது அவசியமாகிறது.

உதவிப் புத்தகங்களிலிருந்து நாம் பதிவுகளை எழுதும் பொழுதுஒவ்வொரு விவரமாக எழுதாமல் மொத்தத்தையே எடுத்துப்பதிவுசெய்கிறோம். எந்த விபரத்துக்கும் பற்றுவரவைக்காண்பிக்க வேண்டியது முதற்குறிப்பே யாதலால், நம்முடைய சௌகரியத்தின் பொருட்டு விவரங்களைக் காண்பிக்குமாறு வைக்கப்பட்ட உதவிப்புத்தகங்களிலிருந்து நேராக லெட்ஜரில் பதிவைச்செய்யாமல் மொத்தங்களை பற்றுவரவு ரூபமாக ஜர்னலில் குறிப்பெழுதுகிறோம்.

சொத்துகளின் கணக்குகளேயோ அல்லது வியாபாரிகளின் கணக்குகளேயோ நாம் முடிவு செய்யும் பொழுது, அந்தக்கணக்கில் அதிகப்பற்றோ அல்லது வரவோ இருக்குமானுல் அந்தபாக்கியை ‘கணக்கு’ என்றவகுப்பைச் சேராத பாக்கி ஜாப்தாவில் எழுதுகிறோமே தவிர, வேறொரு கணக்குக்கும் மாற்றுவதில்லை. ஆகவே இதற்கு ஜர்னல் குறிப்பு தேவையில்லை. மேலும், ஒரு பற்றுக்கு ஒரு வரவு இருக்க வேண்டுமென்ற கொள்கையும் ஷை கணக்கை முடிவு செய்யும் பொழுது காணப்படுகிறது. எப்படியெனில், ஒரு சொத்துக்கணக்கிலாவது வியாபாரியின் கணக்கிலாவது அதிகப்பற்றிருக்குமானுல் அந்த பாக்கியானது மறுவருஷத்து அதே

கணக்கில் கையிருப்பாகத்தென்படுவதால், அது மறுவருஷ கணக்குக்குக் கொடுத்து விடுகிறதென வைத்துக் கொண்டு ஷெ கணக்கில் வரவு செய்து விடுகிறோம். இதற்கு இரண்டாவது பதிவு மறுவருஷ கணக்கில் முதல் தேதியில் செய்யப்படுவது போல், ஷெ முடிவடைந்த கணக்கின்கீழ் பாக்கி கொண்டு வரப்பட்டு பற்றில் பதிவு செய்யப்படுகிறது. இப்படியே வரவு பாக்கிபிருந்தாலும், முடிவடையும் கணக்கில் பற்றுசெய்து அதற்கிரண்டாவது பதிவாக மறுவருஷ அதே கணக்கில் வரவு செய்கிறோம்.

கொள் முதல் விற்றுமுதல் முதலான சரக்குவிபரங்களைக்குறிக்கும் கணக்குகளை முடிவுசெய்து நாம் வியாபாரச் சரக்குக் கணக்கு என்று சொல்லப்படுகிற ட்ரேடிங் அக்கவுண்டுக்கு மாற்றுகிறோம். கணக்குகளுக்குள் ஒரு கணக்கிலிருந்தே மற்றொரு கணக்குக்கு பாக்கி மாற்றப்பட்டால், ஜர்னல் குறிப்பு எழுதப்படவேண்டும். முடிவடையும் கணக்கில் கணக்கைத்தீர்க்க ஒருபதிவும் இரண்டாவது பதிவை ட்ரேடிங் அக்கவுண்டிலும் செய்கிறோம்.

இதைப்போலவே லாபநஷ்டத்தைக் காட்டும் கணக்குகளை லாப நஷ்டக்கணக்குக்கு மாற்றும் பொழுதும் ஜர்னலில் குறிப்பெழுதப்படவேண்டும். ஏனெனில் லாப நஷ்டக்கணக்கும் பற்று வரவுள்ள கணக்கென்றவகுப்பைச் சேர்ந்ததாகையால், ஒரு கணக்கிலிருந்து மற்றொருகணக்குக்கு மாற்றும் பொழுது ஜர்னல் குறிப்பு இருக்கவேண்டிய தவசியம்.

மிச்சலாபத்தையும் முதலாளியின் பற்றுத் தொகையையும் மூல தனக்கணக்கில் மாற்றும்பொழுதும் ஜர்னல் குறிப்பு இருக்கவேண்டும்.

இவ்விதம் ஒரு கணக்கிலிருந்து மற்றொரு கணக்குக்கு முடிவுத்தொகையை மாற்றும் பொழுதும், குறிப்புப் புத்தகங்களிலிருந்து மொத்தத்தொகைகளை அவைகளின் கணக்குகளில் எழுதும்பொழுதும், ஜர்னல் குறிப்புகளைச் செய்தால், முடிவுக்கணக்குகளை, அதாவது ட்ரேடிங் அக்கவுண்டு, லாப நஷ்டக்கணக்குகளை ஜர்னலைவைத்துக் கொண்டே சுலபமாக எழுதிவிடலாம்.

ஷ ஜர்னல் குறிப்புகளின் மாதிரி கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன :—

வருஷ ஆரம்பத்தில் இருந்த ரூ. 1250 கையிருப்புச் சாக்குகளின் தொகையையும், பிறகு வியாபாரத்தில் ரூ. 11350 வாங்கின சாக்குகளின் தொகையையும், சாக்குகளை வாங்கும்பொழுது அவைகளுக்காகச் செலவு செய்யப்பட்ட வண்டிச்சத்தம், ரயில் சார்ஜ் முதலிய செலவு ரூ. 1120 யும், நாம் வாங்கின சாக்குகளை வாபீஸ் செய்த கணக்கின் மொத்தத்தொகை ரூ. 170 யும், விற்று முதல் தொகை மொத்த ரூ. 22360 யும், விற்று முதல் வாபீஸ் தொகை ரூ. 150 யும், வியாபார முடிவில் சாக்குகள் கையிருப்புத் தொகை ரூ. 1340 யும் ட்ரேடிங் அக்கவுண்டுக்கு மாற்றுகிறோமென்று வைத்துக்கொள்வோம்.

இவ்விபரங்களில் ஆரம்பத்திலுள்ள கையிருப்புச்சாக்குகள், வாபீஸைக்கழித்து பாக்கி கொள் முதல்சாக்குகள், சாக்குகளுக்காக வண்டிச் செலவு முதலியவைகளெல்லாம் ட்ரேடிங் அக்கவுண்டின் பற்றுப்பக்கத்திலும் ஷ விவரங்களின் கணக்குகளில் அவைகளை முடிக்கும் பொருட்டு வரவு பக்கத்திலும் எழுதப்படுவதால், கீழ்வரும் ஜர்னல் குறிப்பு செய்யப்படுகிறது:—

ட்ரேடிங் அக்கவுண்டு பற்று ரூ. 13550—0—0

கீழ்க்கண்ட கணக்குகளால்:—

ஆரம்பத்தில் கையிருப்புச் சரக்கு
கள் ரூ. 1250—0—0

கொள்முதல் கணக்கு ரூ. 11350
கொள்முதல் வாபீஸ் ,, 170
——— 11180—0—0

வண்டிச்செலவுகள் ரூ. 1120—0—0

விற்றுமுதல் வாபீஸ் போக விற்றுமுதல் தொகையை அந்தக்கணக்கை முடிவு செய்யும் பொருட்டு பற்றுப்பக்கத்திலெழுதுகிறோ மாகையால் அந்தக்கணக்கைப்பற்று செய்து ட்ரேடிங்அக்கவுண்டின் வரவு பக்கத்தில் மாற்றுவதால் ட்ரேடிங் அக்கவுண்டை வரவு செய்து ஜர்னல் குறிப்பெழுத வேண்டும். இன்னும் வியாபார முடிவிலுள்ள சரக்குகளின் தொகையையும் ட்ரேடிங் அக்கவுண்டின் வரவு பக்கத்திலெழுதுகிறோம். இப்பதிவுக்கு இரண்டாவதுபதிவாக, லெட்ஜரில் கையிருப்புக்கணக்கின் கீழ் பற்றுப்பக்கத்தில் ஷை முடிவிலுள்ள கையிருப்புத்தொகையை எழுதுகிறோம். ஆகவே,வாபீஸ் போக விற்று முதல் கணக்கும் கையிருப்புச் சரக்குகளின் தொகையும் பற்றுசெய்யப்பட்டு ட்ரேடிங் அக்கவுண்டு வரவு செய்யப்படுகிறது. கீழுள்ள ஜர்னல் குறிப்பை கவனிக்கவும் :—

கீழ்க்கண்டகணக்குகள்:—

விற்றுமுதல் கணக்கு ரூ. 22360—0—0
விற்றுமுதல் வாபீஸ் ,, 150—0—0
———————

பற்று ரூ. 22210—0—0
முடிவில் கையிருப்புச்சரக்குகள் ,, 1340—0—0

ட்ரேடிங் அக்கவுண்டால் ரூ. 23550—0—0

மேற்கூறிய விதமாக ட்ரேடிங் அக்கவுண்டை எழுதின பிற்பாடு, அதிலுள்ள மொத்தலாபத்தைக் கண்டு பிடிக்கிறோம். மேலுள்ள கணக்கில் மொத்த லாபம் ரூ. 10000. ட்ரேடிங் அக்கவுண்டில் குறைந்த மொத்தத்தையுடைய பற்றுப்பக்கத்தில் ரூ. 10000 ஐ மொத்த லாபமாக எழுதி லாப நஷ்டக்கணக்குக்கு மாற்றி கணக்கை முடிவு செய்கிறோமாதலால், ட்ரேடிங் அக்கவுண்டை ரூ. 10000 க்குப் பற்றுசெய்து லாப நஷ்டக்கணக்கை ஷை தொகைக்கு வரவு செய்கிறோம்.

இன்னும் லாபத்தைக் காட்டக்கூடிய சில விபரங்களும் லாப நஷ்டக்கணக்கின் வரவு பக்கத்திலெழுதப் படுகின்றன. உதாரணமாக, நாம் சரக்குகள் வாங்கினதில் நமக்கு ரூ. 1150 தள்ளுபடி கொடுக்கப்பட்டதென்றும், வியாபாரத்துக்குச் சொந்தமான சில கட்டடங்களை வாடகைக்கு விட்டதில் ரூ. 2000 வாடகை வந்திருக்கிறதென்றும் வைத்துக்கொள்வோம். இந்த விபரங்களை லாப நஷ்டக்கணக்கில் எழுதுமுன் அந்த விபரங்களின் லெட்ஜர் கணக்குகளை முடிவுசெய்யும் பொருட்டு அவைகளின் பற்றுப்பக்கத்தில், லாப நஷ்டக் கணக்குக்கு மாற்றும் பதிவைச் செய்கிறோம். ஆகவே அக்கணக்குகள் பற்றாகின்றன.

இவ்விதம், ட்ரேடிங் அக்கவுண்டி லிருந்து எடுக்கப்படுகிற மொத்த லாபத்தையும் ஷை லாப விபரங்களையும் லாப நஷ்டக்கணக்கின் வரவு பக்கத்தில் எழுத வேண்டுமாகை

யால், அக்கணக்குகளைப்பற்று செய்து லாப நஷ்டக்கணக்கை வரவு செய்து ஜர்னல் குறிப்பு கீழ்க்கண்டவிதம் எழுதப் படுகிறது:—

கீழ்க் கண்ட கணக்குகள் :—

ட்ரேடிங் அக்கவுண்டு பற்று	ரூ.	10000—0—0	
தள்ளுபடிக்கணக்கு	,,	,,	1150—0—0
வாடகைக் கணக்கு	,,	,,	2000—0—0
லாப நஷ்டக்கணக்கால்		ரூ.	13150—0—0

ஷை லாபநஷ்டக்கணக்கில் வரவு பக்கத்திலுள்ள மொத்தத் தொகை மொத்த லாபத்தைக் குறிக்கிறதால், இதிலிருந்தும் மற்ற செலவுகளைக்கழிக்க வேண்டியிருக்கிறது. அத்தொகைகள் லாப நஷ்டக்கணக்கின் பற்றுப்பக்கத்தி லெழுதப்பட வேண்டுமாகையால், ஷை கணக்கைப் பற்று செய்து, நஷ்டத்தைக்குறிக்கும் கணக்குக் குறிப்புகளை வரவு செய்து முடித்தல் வேண்டும். இவ்வாறு நஷ்டத் தொகைகளை லாப நஷ்டக்கணக்கில் மாற்றுவதற்கும் கீழ்க் கண்டவிதம் ஜர்னல் குறிப்பு வேண்டும்:—

உதாரணமாக இச்செலவுகளை எடுத்துக் கொள்வோம். வாடகை ரூ. 250, நாம் தள்ளுபடி கொடுத்தது ரூ. 120, விளம்பரச்செலவு ரூ. 420, வியாபாரச்செலவு ரூ. 1315, சம்பளச்செலவு ரூ. 680, பாங்குச்செலவு ரூ. 55, பெறுமானக் குறைவு ரூ. 340, வட்டி ரூ. 175, இத்தொகைகளெல்லாம் அந்தந்த கணக்கில் பற்றுப்பக்கத்தில் எழுதப் பட்டிருக்கும். இக்கணக்குகளை வரவு செய்து முடிக்கும் பொருட்டு லாப நஷ்டக் கணக்கைப்பற்று செய்ய வேண்டியதாகிறது.

லாப நஷ்டக்கணக்கு பற்று ரூ. 3355—0—0

கீழ்க்கண்ட கணக்குகளால்:—

வாடகைக் கணக்கு	ரூ.	250—0—0
தள்ளுபடிக் கணக்கு	,,	120—0—0
விளம்பரக் கணக்கு	,,	420—0—0
வியாபாரச்செலவு கணக்கு	,,	1315—0—0
சம்பளக் கணக்கு	,,	680—0—0
பாங்குச் செலவு கணக்கு	,,	55—0—0
பெறுமானக் குறைவு கணக்கு	,,	340—0—0
வட்டிக் கணக்கு	,,	175—0—0

இதன் பிறகு லாப நஷ்டக்கணக்கை முடிவு செய்தல் வேண்டும். இதன் பற்று வரவு மொத்தத் தொகைகளின் வித்தியாசமே லாப நஷ்டத்தைக் குறிக்கிறது. மேலுள்ள உதாரணத்தில் வரவு பக்கத்தின் மொத்தத் தொகையே அதிகமா யிருக்கிற படியால் மிச்சலாபத்தைக் காட்டுகிற தென்றறிகிறோம். இந்த மிச்சலாபத்தை முதல் கணக்கின் வரவு பக்கத்தில் சேர்த்து மூலதனத்தைக் கூடுதலாகக் காட்டவேண்டும். இவ்வாறு மிச்சலாபத்தை மாற்றும் பொருட்டு லாபநஷ்டக் கணக்கைப் பற்று செய்து முதல் கணக்கை வரவு செய்கிறோம். இந்த முடிவுப்பதிவின் ஜர்னல் குறிப்பு இவ்விதம் காணப்படும் :—

லாபநஷ்டக் கணக்கு பற்று ரூ. 9795—0—0

முதல் கணக்கால் ரூ. 9795—0—0

பின்னர் முதலாளியின் பற்றுக் கணக்கை முடிவு செய்ய வேண்டும். தனக்குச் சேரவேண்டியதான லாபத்தோடு

கூடிய முதலின் நிமித்தம் முன்பே முதலாளி பணம் பெற்றுக் கொள்கிருனுகையால், ஷெ தொகை முதல் கணக்கின் பற்றுப் பக்கத்தில் சேரவேண்டும். ஆகவே முதலாளியின் பற்றுக் கணக்கை முடிவுசெய்யும் பொழுது அதை வரவு செய்து முதல் கணக்கைப் பற்று செய்யவேண்டும். அதன் ஜர்னல் குறிப்பு கீழ்வருமாறு:—

முதல்கணக்கு பற்று ரூ. 400—0—0

முதலாளியின் பற்றுக் கணக்கால் ரூ. 400—0—0

இவ்விதம் கணக்குகளை யெல்லாம் முடிவு செய்து மிச்ச லாபத்தைக் கண்டுபிடித்து அதையும் பாலன்ஸ் ஷீட்டைக் கொண்டு சரிபார்த்துவிட்டால் அவ் வருஷத்திய கணக்குகள் தீர்ந்துவிட்டன.

இனி அடுத்ததிகாரத்தில் லாப நஷ்டக்கணக்குகள் சம்பந்தமான இன்னும் சில முக்கிய விஷயங்களை கவனிப்போம்.

12-ம் அதிகாரம்.

சஸ்பென்ஸ் அக்கவுண்டுகளும் செலவு ஈடுக்கணக்குகளும்.
(Suspense and Reserve accounts)

ஒரு வியாபாரத்தின் கணக்குகளை முடிக்கும்பொழுது, அந்தத் தேதிவரையில் அவ்வியாபாரத்திற்காக எவ்வளவு செலவிடப் பட்டிருக்கிறதோ அதைத்தான் நாம் லாப நஷ்டக் கணக்கில் சேர்த்துக் கொள்ள வேண்டும். வியாபாரத்துக்காக மறுவருஷச்செலவையும் சேர்த்து முதலிலேயே

கொடுக்கப்பட்டிருந்தாலுங்கூட கணக்குகள் முடிவடையும் காலத்தில் அத்தேதிவரையில் செலவில் எவ்வளவு பாகம் வியாபாரத்திற் குரியதோ அதையே லாப நஷ்டக் கணக்கில் கொண்டுவரச்செய்ய வேண்டும். இன்றேல், இவ்வருஷத்து லாபம் குறைவாகவும் மறுவருஷ லாபம் அதிகமாகவும் காணப்படுமென்பதில் என்ன ஆக்ஷேபம் ?

உதாரணமாக நாம் முதன் முதலில் ஒரு வியாபாரஸ் தலத்தை எடுத்துக்கொள்ள நிச்சயித்து வாடகை பேசும் பொழுது, அவ்வீட்டின் சொந்தக்காரன் இரண்டு வருஷத்துக்கு முழுவதும் ஒப்பந்தம் செய்து கொண்டால்தான் குறைந்த வாடகைக்குக் கொடுக்கப்படு மென்றும் இரண்டு வருஷவாடகையையும், சுமார் ரூ. 480 முதலிலே கொடுத்து விடவேண்டு மென்றும் கூறுவதால் நாம் அதை ஒப்புக் கொண்டு முன்பணம் ரூ 480 கொடுத்து விட்டோ மென்றும் வைத்துக் கொள்வோம். நமது வியாபாரத்தின் கணக்குகளை முதல் வருஷம் முடிவுசெய்தால் அவ் வருஷத்துக்குரிய வாடகை ரூ. 240 தான் (ரூ. 480 ல் இரண்டிலொரு பாகம்) கணக்கில் சேரவேண்டும். ஆனல் நாம் முதன் முதலில் பணம் கொடுத்த காலத்தில் வாடகைக் கணக்கைப் பற்று செய்து ரொக்கக்கணக்கை வரவு செய்திருப்போம். வருஷ முடிவில் வாடகைக்கணக்கை முடிவு செய்யும் பொழுது அவ் வருஷத்துக்குள்ளதான ரூ. 240 ஐ மட்டும் நாம் லாப நஷ்டக்கணக்கில் சேர்க்கிறோம். பாக்கி ரூ. 240 ஐ எங்கு சேர்ப்பது ?

ஒப்பந்தம் எப்படியிருப்பினும் கணக்குப் பிரகாரம் இப்பொழுது வாடகையின் பொருட்டு யாரிடம் அதிகமாகத் தங்கியிருக்கிறது ? வியாபாரக்கடையின் சொந்தக்காரனிடந்

தான். அவனுக்கு அவ்வருஷத்துக்குச் சேரவேண்டிய வாடகையை நீக்கி, மேலும் ரூ. 240 ஐ அவனே வைத்துக் கொண்டிருப்பதால் அத்தொகைக்கு அவன் கடனாளியாகிறான். தற்சமயம் கணக்குகளை முடிவு செய்தலின் பொருட்டு பரிகாரமாக அவனைக்கடனாளி என்று ஏற்படுத்துகிறோமே தவிர, உண்மையில் அவன் பணத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டியவன் அல்ல. அவனைக்கடனாளியாக அவன் கணக்கிலெழுதுவதும் தவறு. ஆகவே, சஸ்பென்ஸ் அக்கவுண்டு (Suspense A/c) அதாவது தற்கால பரிகாரமாக எழுதப் படும் கணக்கு என்று ஓர்கணக்கை ஏற்படுத்தி அக்கணக்கை வியாபாரஸ்தலத்தின் சொந்தக்காரன் கணக்குபோல் பாவித்து அவனிடம் தங்கி இருக்கும் அதிக ரூ. 240க்குப் பற்று செய்கிறோம். இதற்கு இரண்டாம் பதிவாக, வாடகைக் கணக்கை சஸ்பென்ஸ் கணக்குக்கு என்றெழுதி வரவுசெய்கிறோம். வாடகைக் கணக்கின் இருபக்கங்களின் தொகைகளுக்கு முள்ள வித்தியாசம் அவ்வருஷத்துக்குரிய வாடகையைக் காண்பிக்கிறதாதலால், இந்த வித்தியாச மான ரூ. 240 ம் லாப நஷ்டக்கணக்கில் சேரவேண்டியது அவசியமே. ஆதலின், வாடகைக்கணக்கை லாப நஷ்டக்கணக்குக்கு ரூ. 240 என்றெழுதி அதைமுடிவு செய்கிறோம். இந்த சஸ்பென்ஸ் அக்கவுண்டுக்கு எஞ்சியிருக்கும் செலவுகள் கணக்கு (Outstanding charges A/c) என்றும் பெயர் சொல்லலாம்.

மேற்கூறிய விதமாக, வாடகைக்கணக்கில் ரூ. 240 க்கு சஸ்பென்ஸ் அக்கவுண்டுக்கு வரவு செய்தும்பாக்கிரூ. 240க்கு லாப நஷ்டக் கணக்குக்கும் வரவு செய்வதால், முதலில் சொல்லப்பட்ட ரூ. 240 அதிகமாகக் கொடுக்கப்பட்ட

— அதாவது கணக்குப்பிரகாரம் நமக்கு வரவேண்டிய — தொகையாக பாலன்ஸ் ஷீட்டில் சொத்துப் பக்கத்திலும், மற்றும் ரூ. 240 அவ்வருஷத்துக்குள்ள வாடகைச்செலவாக லாப நஷ்டக்கணக்கிலும் மாற்றி வாடகைக்கணக்கை முடிவு செய்கிறோம். சஸ்பென்ஸ் கணக்கிலுள்ள தொகையைபாக்கியாக மறுவருஷ ஆரம்பத்தில் கொண்டுவருகிறோம்.

மேலேயுள்ள பதிவுகளுக்குக்கீழே மாதிரியை கவனிக்கவும்.

நிற்க, இப்பொழுது வாடகை முன்பணமாக நம்மால் வாங்கப்பட்ட விஷயத்தை எடுத்துக் கொள்ளுவோம். நம்முடைய வியாபாரத்துக்கு சொந்தமான வீட்டை குடிக்கூலிக்கு விட்டு முன்பணம் வாங்கியிருக்கிறோமென்று வைத்துக் கொண்டால் அத்தொகை வாடகைக் கணக்கில் வரவாகியிருக்கும். அவ்வருஷத்துக்குள்ள வாடகைபோக பாக்கித்தொகையை நாம் திருப்பிக்கொடுக்க வேண்டுவதாக பாவிக்கப்படுகிற தாகையால் அவ்வளவிற்கு "சஸ்பென்ஸ்" அக்கவுண்டை வரவு செய்து இதற்கு இரண்டாம் பதிவாக வாடகைக்கணக்கை அதே தொகையால் பற்றுசெய்கிறோம். இப்பொழுது வாடகைக் கணக்கை முடித்தால் அதிக வரவேற்படுகிறது. இது லாபத்தைக்குறிக்கிறது. ஆகவே லாப நஷ்டக்கணக்கில் வலதுபக்கத்துக்கு மாற்றுகிறோம். சஸ்பென்ஸ் அக்கவுண்டு வரவு பாக்கியைக் காண்பிக்கிறது. அதாவது, நாம் அவ்வளவு தொகை முன்னதாக வாங்கியிருக்கிறோம். அதைத்திருப்பிக் கொடுக்கவேண்டும். ஆதலின் நமக்கு அது ஓர் கடனாகும். எனவே பாலன்ஸ் ஷீட்டில் கடன்கள் அதாவது இடது பக்கத்துக்கு கொண்டு போகப்படும்.

மேற்சொன்ன விதமாக சஸ்பென்ஸ் கணக்கு பாலன்ஸ் ஷீட்டுக்குக் கொண்டு போகக்கூடிய பாக்கிகளை மட்டும் கொடுக்கிறதாகையால், அது பெர்ஸனல் அக்கவுண்டு கள் என்ற வகுப்பைச் சேர்ந்ததாகிறது.

மாதிரி 1.

பற்று — கொடுக்கவேண்டிய வாடகைக் கணக்கு. — வரவு

தேதி.		விபரம்.	மு ந.	தொகை. ரூ.	அ.	பை.	தேதி.		விபரம்.	மு ந	தொகை. ரூ.	அ.	பை.
1927 ஜன.	1	ரொக்கக் கணக்கால்		480	0	0	1927 டிசம்.	31	சஸ்பென்ஸ் கணக்குக்கு		240	0	0
							,,	,,	லாபநஷ்டக் கணக்குக்கு		240	0	0
		ஆக மொத்தம்...		480	0	0			ஆக மொத்தம்...		480	0	0

பற்று **சஸ்பேன்ஸ் அக்கவுண்டு.** வரவு

தேதி.		விபரம்.	மு.ந.	தொகை. ரூ.	அ.	பை.	தேதி.		விபரம்.	மு.ந.	தொகை. ரூ.	அ.	பை.
1927 டிசம்.	31	வாடகைக் கணக்கால்		240	0	0	1927 டிசம்.	31	பற்று பாக்கிக்கு		240	0	0
				240	0	0					240	0	0
1928 ஜன.	1	பற்று பாக்கியால்		240	0	0							

மாதிரி 2.

பற்று **வரவேண்டிய வாடகைக் கணக்கு.** வரவு

தேதி.		விபரம்.	மு.ந.	தொகை. ரூ.	அ.	பை.	தேதி.		விபரம்.	மு.ந.	தொகை. ரூ.	அ.	பை.
1927 டிசம்.	31	சஸ்பென்ஸ் கணக்கால்		240	0	0	1927 ஜன.	1	ரொக்கக் கணக்குக்கு		480	0	0
,,	,,	லாபநஷ்டக் கணக்கால்		240	0	0							
				480	0	0					480	0	0

பற்று சஸ்பேன்ஸ் அக்கவுண்டு. வரவு

தேதி.		விபரம்.	மு ந.	தொகை. ரூ.	அ.	பை.	தேதி.		விபரம்.	மு ந.	தொகை. ரூ.	அ.	பை.
1927 டிசம்.	31	வரவு பாக்கியால்		240	0	0	1927 டிசம்.	31	வாடகைக் கணக்குக்கு		240	0	0
				240	0	0					240	0	0
							1928 ஜன.	1	வரவு பாக்கிக்கு		240	0	0

செலவுகளுக்காக முன்பணம்வாங்கப் பட்டோ அல்லது கொடுக்கப்பட்டோயிருந்தால் மேற் சொன்னவிதம் சஸ்பென்ஸ் அக்கவுண்டு என்று ஓர் கணக்கு ஏற்படுத்தாமல் செலவு களின் பாக்கிகளைக் காண்பிக்க மற்றோர் வழியுமுண்டு. அநேகமாக இந்தமாதிரியே தற்காலத்தில் உபயோகப்பட்டு வருகிறதற்குக் காரணம் இதுவே சுலபமாக செய்யக் கூடியதாயிருக்கிறது.

மேலுள்ள மாதிரிகளில் நாம் முன்பணம் பாக்கியை சஸ்பென்ஸ் அக்கவுண்டுக்கல்லவா மாற்றினோம். அப்படித்தனியாக சஸ்பென்ஸ் அக்கவுண்டு ஏற்படுத்தாமல் பாக்கியையும் கூட அதே செலவு கணக்கில் காண்பித்து விடவேண்டும். அக் கணக்கு கீழ்வருமாறு தென்படும் ;—

பற்று. வாடகைக் கணக்கு வரவு.

தேதி.		விபரம்.	மு. ந.	தொகை. ரூ.	அ.	பை.	தேதி.		விபரம்.	மு. ந.	தொகை. ரூ.	அ.	பை.
1927							1927						
ஜன.	1	ரொக்கக் கணக்கால்		480	0	0	டிசம்	31	லாப நஷ்ட கணக்கிற்கு		240	0	0
							,,	,,	அதிக பற்றுக்கு (வாடகை முன் பணம்)		240	0	0
				480	0	0					480	0	0
1928													
ஜன.	1	அதிக பற்றால்		240	0	0							

பற்று. வாடகைக் கணக்கு வரவு.

தேதி.		விபரம்.	மு. ந.	தொகை. ரூ.	அ.	பை.	தேதி.		விபரம்.	மு. ந.	தொகை. ரூ.	அ.	பை.
1927							1927						
டிசம்	31	லாப நஷ்டக்கணக்கால்		240	0	0	ஜன	1	ரொக்கக் கணக்கிற்கு		480	0	0
,,	,,	அதிக வரவால் (வாடகை முன் பணம்)		240	0	0							
				480	0	0					480	0	0
							1928						
							ஜன	1	அதிக வரவுக்கு		240	0	0

இம்மாதிரி ஒரே கணக்கில் லாப நஷ்டக் கணக்குக்குப் போகவேண்டிய தொகையையும் முன்பணமாக வுள்ள தொகையையும் காட்டுவதில் சௌகரிய மென்னவென்றால், தனியாக சஸ்பென்ஸ் அக்கவுண்டு ஏற்பட அவசியமில்லாத தோடுகூட, இரண்டாவது வருஷமுடிவில் வாடகை முன்பண மும் தீர்ந்துவிட்டபின் தனியாக ஓர் பதிவும் வேறு வாடகைக் கணக்கும் ஏற்படுத்தாமல், முன்னேயே எழுதப்பட்டிருக்கிற வாடகைக் கணக்கில் கடைசியில் கொண்டு வரப்பட்ட பாக்கிகளை அப்படியே லாப நஷ்டக்கணக்குக்கு மாற்றிவிடலாம்.

ஆனால் சஸ்பென்ஸ் அக்கவுண்டு வைத்துக் கொள்ளும் வழியை மேற் கொண்டால், சஸ்பென்ஸ் கணக்கிலுள்ள பாக்கியைத்தீர்க்க ஓர் பதிவு செய்து அதற்கிரண்டாவது பதிவாக வாடகைக்கணக்கில் எழுதி பிறகு வாடகைக்கணக்கின் பாக்கியை லாப நஷ்டக்கணக்கிற்கு மாற்றவேண்டும். முன் வருஷத்து வாடகைக்கணக்கு அதோடு தீர்ந்து விட்டதால் வேறு கணக்கும் எழுதப்பட வேண்டும். ஆகவே சஸ்பென்ஸ் கணக்கினால் அதிகமானவேலை ஏற்படும். எனவே இவ்வழியை விடுத்து மேற்சொல்லப்பட்ட புது மாதிரியை உபயோகிப்பதே சுலபமானது.

ஆதலால், பின்னால் சொல்லப்பட்டதான அக்கவுண்டில், கணக்குகள் முடியும் வருஷத்துக்குள்ள செலவை லாப நஷ்டக் கணக்குக்கு மாற்றியும், முன்பணமாக வுள்ளதையோ அல்லது பாக்கி வரவேண்டியதையோ பாக்கியாக அதே கணக்கில் காட்டியும் எழுதுவதால், ஒரு தொகை லாப நஷ்டக்கணக்குக்கும், மற்றோர்தொகை பாலன்ஸ் ஷீட்டுக்கும் கொண்டுவரப்படுகின்றன. ஆதலின் இக்கணக்கிற்கு காம்பஸிட் அக்கவுண்டு (Composite account) என்று பெயர்.

வருமான, செலவு ஈடுக் கணக்குகள்.
(Reserve accounts)

கணக்குக்குறிப்புகளை யெல்லாம் வருக்குப் புத்தகத்தில் பதிவுசெய்த பின்பு அவைகளின் லாப நஷ்டம் முதலிய பலாபலன்களை அறியும் பொருட்டு நாம் அவைகளை முடிவு செய்கிறோம். வியாபாரத்தின் ஒவ்வொரு கால அளவு முடிவில் உண்மையாக அக்கால அளவுக்குரியதான லாப நஷ்டமென்ன வென்று தெரிந்தால் மட்டுமே ஒழுங்காக முடிவுக் கணக்குகள் எழுதப்படக் கூடுமாதலால், அக்கால அளவில் மட்டும் எவ்வளவு மொத்த லாபம் கிடைத்ததென்றும், அதற்குறிய நஷ்ட மென்னவென்றும் குறிக்கவேண்டும். இவ்வாறு அந்தக்கால அளவுக்கு மட்டும் சிக்கிரம் லாப நஷ்டங்களைக் கண்டு பிடிக்க முடியாது. ஏனெனில், முன் கூறப்பட்டபடி ஓர் செலவின் நிமித்தமோ அல்லது வருமானத்தின் நிமித்தமோ முன்பணம் கொடுக்கப்பட்டிருந்தால் அக்கால அளவுக்குமட்டும் எவ்வளவென்று பார்த்துக்கொண்டு அத்தொகையை மட்டும் லாப நஷ்டத்தோடு சேர்க்கவேண்டியது ஒரு காரியமாகும். இன்னும் சில தொகைகள் உண்மையில் ரொக்கமாக செலவிடப் படாமலாவது அல்லது வருமான மின்றியாவது இருப்பினும் லாபநஷ்டங்களைக் குறிக்கலாம். ஆனால் இந்த லாப நஷ்டங்கூட அக்கால அளவுக்குமட்டும் எவ்வளவென்று நிர்ணயிப்பதற்குப் பின்னால் கணக்குத்திருகிற வரையில் முடியாததாயிருக்கலாம். ஆகவே அக்காலத்துக்குள்ள லாப நஷ்டத்தைமட்டும் சேர்க்கும் பொருட்டு, உத்தேசமாக முன் வருஷங்களின் கணக்குகள் பிரகாரம் அனுபவத்தோடு இவ்வளவு தொகை லாப நஷ்டத்தில் சேர வேண்டு மென்பதாக

எழுதப்படுகிறது. இவ்விதம் நிர்ணயிக்கப்படாத வருமானம் அல்லது செலவின் நிமித்தம் அதற்கீடாக உத்தேசமானதொகை லாப நஷ்டத்தில் எழுதப்பட்டால், அக்கணக்கிற்குத்தான் வருமான செலவு ஈடுக்கணக்கு என்று பெயர்.

உதாரணமாக வியாபாரத்துக்கு வரவேண்டிய கடன்களை எடுத்துக் கொள்வோம்.

இக்கடன்களில் சிலவற்றை நாம் நிச்சயமாக வசூலித்துவிடலாம். சில கடன்கள் வசூலிக்க முடியாதென்ற தீர்மானத்தோடு நஷ்டத்தில் சேர்த்துவிடலாம். இன்னும் சில கடன்கள் பல வேறு காரணங்களால் ஒருசமயம் வசூல் செய்யக் கூடியதாயும் ஒரு சமயம் முடியாததாயும் தோன்றும். கடைசியாகச் சொல்லப்பட்ட கடன்களுக்கே, வருமான செலவு ஈடுதொகைபோட வேண்டியது அவசியமாகிறது. ஏனெனில், இக்கடன்களில் ஒருபாகம் ஒரு பொழுதும் வசூல் செய்யமுடியாததாகப் போய்விடுமானால், அத்தொகையை ஒரு சொத்தாக நாம் பாக்கி ஜாப்தாவில் வைத்திருப்பது கூடாது. அப்படி வசூலாகாமலிருப்பது வியாபாரத்துக்கு நஷ்டமே யாதலால், அத்தொகையை நஷ்டத்திலேயே எழுதிவிடவேண்டும்.

இங்கு ஒரு சிறு விஷயத்தை நாம் கூறுவோம். கணக்குகளை யெல்லாம் முடித்தபின் பாக்கிஜாப்தா (Balance sheet) எடுக்கும் பொழுது, அந்த ஜாப்தாவின் இரண்டு பக்கங்களின் கூடுதல்களும் சமமாக இருக்கவேண்டுமென்பது நாம் அறிந்ததல்லவா? இப்பொழுது மேற்கூறியபடி பாக்கி ஜாப்தாவிலிருந்து சொத்தின் ஓர் பாகத்தை எடுத்துவிட்டால் அதே தொகையால் கடன் பக்கத்துக் கூடுதல் தொகையும் குறையவேண்டும். இது எப்படி குறையுமென்

பதைப்பார்ப்போம். ஷை வசூலாகாத தொகையை சொத்துத்தொகையில் குறைத்துவிட்டு வசூலாகாத காரணத்தால் மேலே சொன்னபடி நஷ்டத்திலும் எழுதுகிறோம். அப்பொழுது இத் தொகையால் கடைசிலாபம் குறைகிறது. இந்த மிச்சலாபமானது முதல் கணக்கோடு போய்ச்சேருகின்றது. லாபத்தோடு கூடிய முதல் கணக்கு பாக்கிஜாப்தாவின் கடன் பக்கத்தில் வந்திருக்கிறது. ஆகவே மிச்சலாபம் குறையுமானால், மிச்சலாபத்தோடு கூடிய முதல் தொகை குறைகிறது. ஷை சொத்து வசூல் செய்யப்படாததினால், முன்னைக் காட்டிலும் குறைந்த முதல் தொகை கடன் பக்கம் போய்ச்சேரவே, பாக்கி ஜாப்தாவின் இரண்டு பக்கங்களும் சமமாகிவிடுகின்றன. ஆதலின், நாம் அறிய வேண்டியது யாதெனில், கணக்குகளை யெல்லாம் பதிவு செய்து முடித்தபின் எதாவது அம்சங்கள் சேர்த்தோ அல்லது மாற்றியோ ஆகவேண்டுமானால், அந்த அம்சங்களால் பாதிக்கப்படும் இரண்டு இடங்களில் மாறுதல்களைச் செய்ய வேண்டும். ஒன்று பாக்கி ஜாப்தாவிலும், மற்றொன்று லாப நஷ்டக்கணக்கிலும்.

வசூலிக்க முடியாத கடன்களின்தொகை கணக்குகள் முடியும் தேதிக்கு முன்பே தெரியப்படுமானால் ஷை தொகை அத்தேதியிலேயே கைவிட்டகடன் கணக்கில் பற்று செய்யப்பட்டு கடன்காரனின் கணக்கு வரவு செய்யப்படும். அப்பொழுதே மேற்கூறிய நஷ்டத்தொகை அந்த வருஷக் கணக்குகளைச்சேரும்.

இவ்விதம் நஷ்டமாகக்கூடிய கடன் அப்பொழுதே நிர்ணயிக்க முடியாததாயிருக்கும் பட்சத்தில், முன் வருஷங்களின் அனுபவத்தைக் கொண்டு உத்தேசமாக ஓர்

தொகை வருமான செலவு ஈடாக ஏற்படுத்தப்பட்டு அத் தொகையை அவ்வருஷத்தில் நஷ்டத்தில் சேர்த்து விட வேண்டும். எனவே, ஷெ தொகை லாபநஷ்டக் கணக்கில் பற்று செய்யப் பட்டதும், வருமான செலவு ஈடுக்கணக்கு என்ற பெயருள்ள ஓர் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும். மறுவருஷம் முதல் கொண்டு ஷெ சந்தேகமான கடன்களில் ஏதாவது வராமற் போய்விட்டால் அத்தொகைக்கு முன்வருஷம் ஏற்படுத்தப்பட்டுள்ள வருமான செலவு ஈடுக்கணக்கைப் பற்று செய்து கடனாளியின் கணக்கைவரவு செய்து விட்டால், கடனாளியின் கணக்குத்தீர்ந்து விடும். நமது நஷ்டம் முன்வருஷமே ஈடுக்கணக்கிலெழுதுவதற்காக லாப நஷ்டக்கணக்கின் மூலமாகக் காண்பிக்கப் பட்டு விட்டது.

இங்குசொல்லியபடி பிற்பாடு உண்டாகும் நஷ்டக்கடனின் தொகை வருமான செலவு ஈடுக்கணக்கில் காணப்பட்டுள்ள தொகைக்கு அதிகம் போகுமானால், மேற்கொண்ட தொகைக்கு மறுபடியும் கைவிட்ட கடன்கள் கணக்கை பற்று செய்து மொத்தத்திற்கு கடனாளியின் கணக்கை வரவு செய்யலாம். ஏன் கைவிட்ட கடன்கள் கணக்கைப் பற்றுசெய்யவேண்டுமெனில், அந்த நஷ்டத்தின் ஓர் பகுதி அவ்வருஷமே ஏற்பட்டிருக்கிறது.

ஆனால், நஷ்டக்கடனின் தொகை ஈடுக்கணக்கிலுள்ள தொகையை விட குறைந்தால் குறைந்த அளவுக்கு நமக்கு லாபந்தான். ஆகவே குறைந்த தொகைக்கு வருமானசெலவு ஈடுக்கணக்கைப் பற்று செய்து லாப நஷ்டக்கணக்கை வரவு செய்ய வேண்டும்.

மேலே சொல்லப்பட்ட ஓர்விதம் இருக்க மற்றும் கீழே சொல்லப்பட்டதை கவனிப்போம். ஒரே கணக்குக்குறிப்பு நாமினல் அக்கவுண்டாகவும் 'பெர்ஸனல் அக்கவுண்டாகவும் இருக்குமேயானுல் அதற்கு காம்பொஸிட் அக்கவுண்டென்று முன்பே கூறப்பட்டிருக்கிறது. இப்பொழுது ஈடுக்கணக்கு என்று தனியே ஓர் கணக்கு ஏற்படுத்தாமல் கைவிட்ட கடன்கள் கணக்கையே காம்பொஸிட் கணக்காக வைத்துக் கொண்டு ஷெ விபரங்களைக் குறிப்பது ஓர் மார்க்கம். கைவிட்டகடன்கள் கணக்கை நஷ்டக்கடன் தொகைக்குப்பற்று செய்வதோடுகூட சந்தேகக் கடன்களுக்கு உத்தேசமாக நிர்ணயிக்கப் படுகின்ற வருமான செலவு ஈடுத் தொகைக்கும்பற்று செய்ய வேண்டியது. கணக்கை முடிக்கும் பொழுது முழுத் தொகையையும் லாப நஷ்டக்கணக்கின்பற்றுப்பக்கத்திற்கு மாற்ற வேண்டியது. கைவிட்ட கடன்கள் கணக்கை ஈடுத்தொகைக்கும் பற்று செய்கிறோமே தவிர, அதன் பொருட்டு நாம் வருமான செலவு ஈடுக்கணக்கு ஏற்படுத்துவதில்லை. ஏனெனில் அதன் தொகையை, பெர்ஸனல் அக்கவுண்டைப் போல், மறுவருஷமுதல் தேதியில் அதேதேதியில் பாக்கியாகக் காண்பிக்கப்படுவதாக கீழே கொண்டுவந்து விடுகிறோம்.

நிற்க, மறுவருஷமும் சில கடன்கள் நஷ்டமாகப் போயின 'வென்றும் சில சந்தேகக்கடன்களுக்கு ஈடுத் தொகையும் உத்தேசிக்கப் பட்டதென்றும் வைத்துக் கொண்டு இவைகளையும் ஷெ கைவிட்டகடன்கள் கணக்கில் பற்றுசெய்கிறோம். இவ்விதம் ஏற்பட்ட மொத்த நஷ்டத்தில் ஓர்பாகம் முன்னமே கழிக்கப்பட்டிருக்கிறது என்பதைக் குறிக்கவே வரவு பக்கத்தில் ஈடுத்தொகை முன்

கணக்கிலிருந்து கொண்டுவரப் பட்டிருக்கிறது. ஆதலால் இந்தக் கணக்கின் பாக்கித் தொகையே இந்த வருஷத்தில் நஷ்டக்கணக்கில் சேரவேண்டி வருகிறது.

உதாரணமாக 1910-டிசம்பர். 31 ல் ராமன் செட்டியார் கடன் ரூ. 200 நஷ்டமென்றும், வசூலிக்காத சந்தேகக்கடன்களுக்காக ஈடுத்தொகை ரூ 350—0—0 என்றும், மறுவருஷம் முருகப்ப செட்டியார் கடன் ரூ. 270—0—0 நஷ்டமென்றும் அவ்வருஷத்தில் ஈடுத்தொகை ரூ. 520 என்றும் வைத்துக்கொண்டு, ஷை இரண்டாவது வழியை உபயோகிப்போம்.

பற்று — கைவிட்ட கடன்கள் கணக்கு — வரவு.

1910 டிசம்	31	ராமன் செட்டியாரால்	200	0	0	1910 டிசம்	31	லாப நஷ்டக் கணக்கிற்கு	550	0	0
,,	,,	அதிக வரவால் (வருமான செலவு ஈடு)	350	0	0						
			550	0	0				550	0	0

பற்று — கைவிட்ட கடன்கள் கணக்கு (மறு வருஷம்) — வரவு.

1911 டிசம்.	31	முருகப்ப செட்டியாரால்	270	0	0	1911 ஜன.	1	வரவு பாக்கிக்கு	350	0	0
,,	,,	அதிக வரவால் (வருமான செலவு ஈடு)	520	0	0	டிசம்.	31	லாப நஷ்டக்கணக்கிற்கு	440	0	0
			790	0	0				790	0	0

மேற்சொன்ன இரண்டு வழிகளிலும் நாம் யாது செய்தோமென்றால் ஒவ்வொரு வருஷமும் மொத்த நஷ்டத் தொகையிலிருந்து ரிஸெர்வ் அதாவது வருமான செலவு ஈடுத் தொகையைக் கழித்துபாக்கியையே லாப நஷ்டக்கணக்கில் சேர்த்தோம். கீழுள்ள மாதிரியில் ரிஸெர்வை அப்படியே வைத்துக்கொண்டு நஷ்டக்கடனை மட்டும் வருஷா வருஷம் அப்படியே லாப நஷ்டக்கணக்கில் சேர்த்துக் காட்டியதிலிருந்து இந்த விதமும் மேற்படி விவரங்களுக்கு உபயோகப் படும் என அறியவும்.

முதல் வருஷத்தில் நஷ்டக்கடனுக்காக கைவிட்ட கடன்கள் கணக்கைப்பற்று செய்தும், ஈடுத்தொகைக்காக லாப நஷ்டக்கணக்கையும் பற்று செய்துவிடுகிறோம். மறு வருஷத்திலும் நஷ்டக்கடன்களுக்காக அவ்வருஷத்து கை விட்ட கடன்கள் கணக்கைப் பற்று செய்து விடுகிறோம். ஆனால் அவ்வருஷத்திய ஈடுத்தொகையின் பொருட்டு லாப நஷடக்கணக்கைப் பற்றுசெய்யாமல் முன் வருஷ ஈடுத் தொகையையே உபயோகப்படுத்துகிறோம். முன்னால் ஏற் படுத்தப்பட்ட ஈடுத்தொகை இவ்வருஷத்துஈடுத்தொகையை விட குறைந்திருக்கு மானால், குறைந்துள்ள தொகைக்கு லாப நஷ்டக்கணக்கைப்பற்று செய்து ஷை ஈடுக் கணக்கை வரவு செய்யவும், அதிகமாயிருக்குமானால் அதிக முள்ள தொகையை லாபநஷ்டக்கணக்குக்கு லாபமாக மாற்றி ஈடுக் கணக்கைப்பற்று செய்யவும் வேண்டும்.

முதலில் சொல்லப்பட்ட மார்க்கத்துக்கும் இந்த மூன் றாவது வழிக்கும் கீழே மாதிரிகள் கொடுக்கப் பட்டுள் ளன. இரண்டாவதுமாதிரியிலுள்ள விபரங்களையே உபயோ கிக்கவும்.

முதல் மாதிரி.

பற்று — கைவிட்ட கடன்கள் கணக்கு. — வரவு

1910 டிசம்.	31	ராமஞ் செட்டியாரால்	200	0	0	1910 டிசம்.	31	லாபநஷ்டக் கணக்கிற்கு	200	0	0
			200	0	0				200	0	0

பற்று — வருமான செலவு ஈடேக்கணக்கு. — வரவு

1910 டிசம்.	31	அதிக வரவால்	350	0	0	1910 டிசம்.	31	லாபநஷ்டக் கணக்கிற்கு	350	0	0
			350	0	0				350	0	0

ஷை ஈடுத்தொகை ரூ. 350 மறுவருஷத்தில் நஷ்டமாகத் தோன்றக் கூடிய கடன்களுக்கே யாதலால் அத்தொகையில் ஷை இவ்வருஷத்திய நஷ்டக்கடன் ரூ. 200 சேர்க்கப்படமாட்டாது. கீழே மறு வருஷக்கணக்குகளைப் பார்க்கவும்.

பற்று. (மறு வருஷம்) வருமான சேலவு ஈடேக்கணக்கு வரவு

1911						1911					
டிசம்.	31	முருகப்ப செட்டியாரால்	270	0	0	ஜன.	1	அதிக வரவுக்கு	350	0	0
,,	,,	அதிக வரவால்	520	0	0	டிசம்.	31	லாப நஷ்டக்கணக்கிற்கு	440	0	0
			790	0	0				790	0	0
						1912					
						ஜன	1	அதிக வரவுக்கு	520		0

இரண்டாவது வருஷத்திலேற்பட்ட நஷ்டக் கடன்கள் ரூ. 270-ம் வருமானச் செலவு ஈடுக்கணக்கின் அதிக வரவு ரூ. 350-லேயே கழிக்கப் படுகிறதாகையால், அந்த நஷ்டத்தை தனியாக கைவிட்ட கடன்கள் கணக்கில் சேர்க்கவேண்டியதில்லையாதலின், அதற்காக மறுவருஷத்தில் கணக்கு ஏற்படுத்தவில்லை. இரண்டாவது வருஷத்தில்வேண்டிய ஈடுத்தொகை ரூ. 520-க்கும், அவ்வருஷத்தில் நஷ்டக் கடன்கள் போக பாக்கி ரூ. 80 ஈடுக்கணக்கின் வரவிலிருப்பதால், மேலும் வேண்டியதான தொகை ரூ. 440. இத்தொகையை லாபநஷ்டக் கணக்கின் பற்றில் எழுதி ஷை ஈடுக்கணக்கை வரவு செய்திருக்கிறோம். ஆதலால் ஒவ்வொரு வருஷமும் எவ்வளவு ஈடுத்தொகை வேண்டுமோ அதிலிருந்து பாக்கியுள்ள தொகையைக் கழித்து மிச்சத்தையே லாப நஷ்டக்கணக்கில் பற்றெழுத வேண்டும்.

மூன்ருவது மாதிரி.

பற்று. **கைவிட்ட கடன்கள் கணக்கு** வரவு.

1910 டிசம்.	31	ராமஞ் செட்டியாரால்	200	0	0	1910 டிசம்.	31	லாப நஷ்டக்கணக்கிற்கு	200	0	0
			200	0	0				200	0	0

பற்று. **வருமான சேலவு ஈடேக்கணக்கு** வரவு.

1910 டிசம்.	31	அதிக வரவால்	350	0	0	1910 டிசம்.	31	லாப நஷ்டக்கணக்கிற்கு	350	0	0
			350	0	0				350	0	0
						1911 ஜன.	1	அதிக வரவுக்கு	350	0	0

பற்று **(மறு வருஷம்) கைவிட்ட கடன்கள் கணக்கு.** வரவு

1911 டிசம்.	31	முருகப்ப செட்டியாரால்	270	0	0	1911 டிசம்.	31	லாபநஷ்டக் கணக்கிற்கு	270	0	0
			270	0	0				270	0	0

பற்று (மறு வருஷம்) வருமான சேலவு ஈடுக்கணக்கு. வரவு

1911 டிசம்.	31	அதிக வரவால்	520	0	0	1911 ஜன.	1	அதிக வரவுக்கு	350	0	0
						டிசம்.	31	லாபநஷ்டக் கணக்கிற்கு	170	0	0
			520	0	0				520	0	0

மறு வருஷத்திலேற்பட்ட நஷ்டக் கடன்களை மட்டும் அதே கணக்கில் பற்று செய்து விட்டோம். இவ்வருஷம் ஈடு செய்யவேண்டிய தொகை ரூ. 520-ல் முதல் வருஷத்திலிருந்தே தொகை ரூ. 350 வரவில் நிற்பதால் பாக்கி ரூ. 170-க்கு லாப நஷ்டக் கணக்கைப் பற்றுசெய்து அத்தொகையை ஈடுக்கணக்கின் வரவில் சேர்த்திருக்கிறோம்.

லாபத் தள்ளுபடியும் நஷ்டத் தள்ளுபடியும் அவைகளின் ஈடுக்கணக்குகளும்.

நம்மால் கடனுக்கு வாங்கப்பட்ட சரக்குகளின் முழுத்தொகையையும் நாம் சிக்கிரத்தில் கொடுத்து விட்டால், நமக்குத் தள்ளுபடி கொடுக்கப்படுகிறதென்று முன்னமே கூறியிருக்கிறோம். இந்தத் தள்ளுபடி நமக்கு லாபமாகிறது. நாம் கொடுக்கவேண்டிய கடன்கள் கணக்குகளை முடிக்கும் தேதி வரையில் கொடுபடாதவையாயிருந்தால் அவைகளின் முழுத்தொகையையும் பாலன்ஸ் ஷீட்டின் கடன் பக்கத்திலெழுதுகிறோம். ஆனல் அக்கடன்களின் மீது தள்ளுபடி வரையில் நாம் கொடுக்கவேண்டிய தொகை குறைந்து கொஞ்சம் லாபமும் காட்டும் என்று நாம் கவனிக்கிறதில்லே. ஆதலின் கணக்குகளை முடிக்கும் பொழுது இந்த லாபத்தைக் காட்டும் தள்ளுபடி எவ்வளவென்று நிச்சயமாய்த் தெரியாத

வரையில் இதற்காக ஓர் ஈடாவதுசெய்து கணக்கில் காண்பிக்கவேண்டுவது அவசியமாகிறது. இவ்விதம் ஈடுத்தொகையைக் குறிக்க வைக்கப்பட்டுள்ள கணக்கிற்கு "லாபத் தள்ளுபடி ஈடுக்கணக்கு" (Reserve for Discount on Creditors) என்று பெயர்.

எந்த வருஷத்தில்கணக்குகள்முடிக்கப்படுகின்றனவோ அவ்வருஷத்திலேற்படும் லாபத்தள்ளுபடியின் தொகையை நேராக லாபத் தள்ளுபடி கணக்கில் வரவு செய்து விடலாம். பாக்கி கொடுபடாமலிருக்கும் கடன்கள்மீதே எவ்வளவு லாபம் தள்ளுபடி மூலமாக உண்டாகலாம் என்று யோசித்தே ஈடு செய்யவேண்டியது. இது வியாபாரத்தை நடத்துகிறவர்களையும் கடன் கொடுத்தவர்களையும் பொருத்திருக்கிறது. பொதுவாக நூற்றுக்கு மூன்று வீதம் தள்ளுபடி கொடுக்கப்படும் என்று கணக்கு வைத்துக் கொள்ளலாம். பாக்கியுள்ள கடன்கள் தொகையில் நூற்றுக்கு மூன்று வீதம் எவ்வளவு தள்ளுபடியாயிற்றென்று பார்த்து வந்த தொகைக்கு லாப நஷ்டக் கணக்கை லாபத்திற்காக வரவு செய்தும் ஷை ஈடுக்கணக்கை இனிமேல்தான் லாபத் தள்ளுபடி வரவேண்டியதிருப்பதால் பற்றும் செய்கிறோம். பிற்பாடு தள்ளுபடி கொடுக்கப்படுங் காலத்தில், வருமான செலவு ஈடுக்கணக்கின் பொருட்டு சொல்லியிருக்கிறபடி தள்ளுபடித் தொகையை லாபத் தள்ளுபடி ஈடுக்கணக்கில் வரவு செய்யவேண்டியது. தள்ளுபடியைக் கொடுக்க வேண்டியிருக்கிறதென்று லாபத் தள்ளுபடி ஈடுக் கணக்கைப் பற்று செய்த நாம் இப்பொழுது லாபம் வந்து விட்டபடியால் அதை க்ரெடிட் செய்ய வேண்டும். ஒரு சமயம் இப்பொழுது கிடைத்திருக்கும் தள்ளுபடி ஈடுத்தொகைக்கு மேற்பட்டால், அது

வும் லாபமாகையால் லாப நஷ்டக் கணக்கை வரவு செய்து ஷ ஈடுக்கணக்கைப் பற்று செய்கிறோம். மறு வருஷத்தின் பொருட்டு எவ்வளவு ஈடு செய்யவேண்டுமென்பதையும் பார்த்து அதையும் லாப நஷ்டக்கணக்கில் வரவு வைத்து ஷ ஈடுக் கணக்கிலேயே பற்று செய்கிறோம். ஆதலின் மேற்பட்ட தள்ளுபடித் தொகையையும் ஈடுசெய்யவேண்டிய தொகையையும் சேர்த்து ஈடுக்கணக்கில் பற்று செய்து அக் கணக்கை முடித்து பாக்கியை பாலன்ஸ் ஷீட்டுக்கு போகக் கூடிய சொத்தாக கீழே மறுவருஷ முதல் தேதியில் காண்பிக்கிறோம்.

ஆனல் ஈடுசெய்திருந்த தொகையைவிட நமக்குக் கிடைத்த தள்ளுபடி குறையும் பட்சத்தில், குறைந்த அளவுக்கு ஈடுத்தொகை உபயோகிக்கப்படாமல் இருக்கிறதால் மறுவருஷம் வேண்டிய ஈடுத்தொகையில் ஷ பாக்கி நிற்கும் ஈடுத்தொகையைக் கழித்து மிச்சத்தையே லாபநஷ்டக் கணக்கில் வரவு வைத்து ஷ ஈடுக்கணக்கைப் பற்று செய்கிறோம். இக்கணக்கையும் முடிவு செய்தபின் பாக்கியுள்ள தொகை பாலன்ஸ் ஷீட்டுக்குப் போகக்கூடிய சொத்தைப் போலாகும்.

இன்னெருவிதம், ஈடுக்கணக்குத் தனியாக இருந்தாலுங் கூட, அவ்வருஷத்தில் கிடைத்த தள்ளுபடிக்கு தள்ளுபடி கணக்கையே வரவு வைத்து லாப நஷ்டக்கணக்குக்கு லாபமாக மாற்றி, மறு வருஷம் வேண்டிய ஈடுத்தொகை இவ்வருஷத்தில் செய்யப்பட்டிருக்கும் ஈடுத்தொகையைவிட அதிகமோ குறைவோ என்று பார்த்து லாபநஷ்டக் கணக்கை வரவோ அல்லது பற்றோ செய்தால், மறுவருஷம் வேண்டிய ஈடுத்தொகை ஷ ஈட்டுக்கணக்கில் பற்று பாக்கியாக காண்

பிக்கப்படும். இந்த ஈடுக்கணக்கில் தள்ளுபடி மாற்றப்படாமலேயே யிருக்கும். ஆதலால் இம்மாதிரியில் தள்ளுபடி தனியாகவும் தள்ளுபடி ஈடு வேறுகவும் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல் வெவ்வேறு கணக்குகளில் பதிவு செய்யப் படுகின்றன.

மூன்ருவது விதம், காம்பொஸிட் அக்கவுண்டாக லாபத் தள்ளுபடி கணக்கை வைத்துக்கொள்ளலாம். பாக்கியிருக்கும் ஈடுத்தொகைக்குப் பற்றுசெய்து மொத்தம் அவ்வருஷம் கொடுக்கப்பட்டிருக்கும் லாபத்தள்ளுபடிக்கு வரவு வைத்து, அவ்விரு பக்கங்களின் வித்தியாசத்தையும் கண்டு கொண்டு மறுவருஷம் எவ்வளவு ஈடுசெய்ய வேண்டுமோ அத்தொகையோடு ஷை வித்தியாசத்தையும் சேர்த்து மொத்தமாக லாபநஷ்டக் கணக்கில் வரவு செய்து தள்ளுபடிக் கணக்கைப் பற்று செய்தால் லாபநஷ்டக் கணக்குக்கு மாற்றப்படும் பதிவு போக மற்ருேர் பதிவு பாலன்ஸ் ஷீட்டிற்குக் கொண்டு போகவேண்டியதான சொத்தைக் காண்பிக்கிறதாகையால் கணக்குக் குறிப்பு காம்பொஸிட் அக்கவுண்டாக மாறி, கணக்கின் பாக்கித்தொகை மறுவருஷம் வேண்டிய ஈடுத்தொகையைக் குறித்து நிற்கிறது.

மேலே சொல்லப்பட்ட மூன்று விதங்களுக்கும் கீழே மாதிரிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ஜன. 1. 1915.	லாபத்தள்ளுபடி ஈடுத் தொகை பாக்கி	ரூ.	350—0—0
டிசம். 31. ,,	வருஷத்திலுண்டான லாபத் தள்ளுபடி	ரூ.	410—0—0

மறு வருஷத்துக்கு செய்யவேண்டிய ஈடுத்தொகை ரூ. 12000 கடன்களில் 3% வீதம் ரூ. 360—0—0

பற்று மாதிரி 1. லாபத்தள்ளுபடி ஈடுக்கணக்கு வரவு

1915						1915					
ஜன.	1	பற்று பாக்கியால்	350	0	0	டிசம்.	31	லாபத் தள்ளுபடிக்கு	410	0	0
டிசம்.	31	லாப நஷ்டக்கணக்கால்	420	0	0	,,	,,	அதிகப் பற்றுக்கு	360	0	0
			770	0	0				770	0	0
1916											
ஜன.	1	பற்று பாக்கியால்	360	0	0						

பற்று மாதிரி 2. லாபத்தள்ளுபடி ஈடுக்கணக்கு வரவு

1915						1915					
ஜன.	1	பற்று பாக்கியால்	350	0	0	டிசம்.	31	அதிகப் பற்றுக்கு	360	0	0
டிசம்.	31	லாப நஷ்டக்கணக்கால்	10	0	0						
			360	0	0				360	0	0
1916											
ஜன.	1	பற்று பாக்கியால்	360	0	0						

பற்று மாதிரி 3. லாபத்தள்ளுபடிக் கணக்கு. வரவு

1915						1915					
ஜன.	1	பற்று பாக்கியால்	350	0	0	டிசம்.	31	கடன்கள் தீர்ந்த வகைக்கு	410	0	0
டிசம்.	31	லாபநஷ்டக் கணக்கால்	420	0	0	,,	,,	அதிகப் பற்றுக்கு (தள்ளுபடி ஈடு)	360	0	0
			770	0	0				770	0	0
1916											
ஜன.	1	பற்று பாக்கியால்	360	0	0						

இனி நஷ்டத்தள்ளுபடியைப்பற்றி எழுதுவோம். நமக்கு வரவேண்டிய கடன்கள் காலாகாலங்களில் கொடுபட்டு விட்டால் அதற்காக நாம் தள்ளுபடி கொடுக்கிறோம். இத்தொகை நமக்குக் கிடைக்க வேண்டிய பூராப்பணத்தைக் குறைக்கிற தாகையால் இதுவும் ஓர் நஷ்டம். நமக்கு வரவேண்டிய கடன்கள் சம்பந்தமாக கைவிட்ட கடன்கள் ஓர் நஷ்டம், ஷை தள்ளுபடி ஓர் நஷ்டம். ஆகவே இவ்விரண்டு நஷ்டங்களுக்கும் ஈடு செய்யாதபடி முழுத்தொகையையும் வைத்துக்கொண்டு கணக்குகளை முடிவுசெய்வது வியாபாரத்தின் உண்மையான நிலைமையைத் தெரிவிக்காது. கைவிட்ட கடன்களைப் பற்றின ஈடுக்கணக்கு சம்பந்தமாக முன் பக்கங்களில் சொல்லப்பட்டுள்ளன. இப்பொழுது நஷ்டத் தள்ளுபடி ஈடுக்கணக்கை (Reserve for Discount on Debtors) கவனிக்க வேண்டும்.

இங்கு முக்கியமான விஷயமென்னவெனில், நூற்றுக்கு ஏறக்குறைய 3% வீதம் நஷ்டத்தள்ளுபடியின் பொருட்டு ஈடு செய்வதில், நமக்கு வரவேண்டிய கடன்களின் மொத்தத் தொகையிலிருந்து முதன் முதலில் நஷ்டக்கடன்களின் பொருட்டு ஈடு செய்யப்பட்டிருக்கும் வருமான செலவு ஈடுத் தொகையைக் கழித்து மிச்சமிருக்கும் தொகையின் மேல் தான் மேற்சொன்னபடி நஷ்டத்தள்ளுபடிக்காக ஈடுசெய்ய வேண்டும், ஏனெனில், கைவிட்ட கடன்களில், அக்கடன்களே முழுவதும் நஷ்டமாய்ப்போகும் பொழுது அவைகளின் மீது தள்ளுபடி என்பது ஏது? ஆதலால் முதன் முதலில் நஷ்டக்கடன்களின் ஈடுத்தொகையைக் கழித்து விட வேண்டும். பாக்கிக் கடன்கள் நிச்சயமாய் வந்துவிடுமென்று நம்புகிறோமாதலால் அவைகளில் தள்ளுபடியின் பொருட்டு

கிடைக்காத தொகை நமக்கு நஷ்டமாகுமாதலால் அந்த நஷ்டத்திற்கு ஈடு வேண்டியது அவசியம்.

வருஷ முடிவிற்குள் தீர்ந்த கடன்களின் மேல் ஏற்படும் நஷ்டத்தள்ளுபடிக்காக, அக்கணக்கைப் பற்று செய்து லாப நஷ்டக்கணக்குக்கு மாற்றவேண்டும். மறுவருடத்தில் ஏற்படக்கூடிய நஷ்டத்தள்ளுபடியின் பொருட்டு வருஷ முடிவில் ஈடு செய்ய வேண்டுமாதலால், நஷ்டத்தள்ளுபடி ஈடுக்கணக்கை அதன்பொருட்டு வரவு செய்து லாபநஷ்டக் கணக்கைப் பற்று செய்யவேண்டும். ஷ ஈடு செய்தபின், அதற்குப் பிறகு உண்டாகும் நஷ்டத் தள்ளுபடியை ஈடுக் கணக்கில் பற்றுசெய்யவேண்டும். லாபத்தள்ளுபடி ஈடுக் கணக்கில் சொல்லப்பட்ட மூன்றுவிதங்களையே நஷடத்தள்ளுபடிஈடுக் கணக்கைப் பற்றின குறிப்புகளைச் செய்யவும் உபயோகிக்க வேண்டும். ஆனல் லாபத்தள்ளுபடி ஈடுக்கணக்கில் அதை ஈடுத் தொகைக்கு பற்று செய்கிறோம். நஷ்டத் தள்ளுபடி ஈடுக்கணக்கிலோ ஈடுத்தொகைக்கு வரவு செய்கிறோம். இதுவே இவ்விரண்டு கணக்குகளுக்குமுள்ள வித்திபாசம்.

இப்பொழுது வருமான செலவு ஈடுத்தொகை, லாபத் தள்ளுபடி ஈடுத்தொகை, நஷ்டத்தள்ளுபடி ஈடுத்தொகை இவைகளை பாலன்ஸ் ஷீட்டில் எப்படி குறிப்பிடுகிறதென்பதைக் கவனிப்போம்.

மேலே சொல்லப்பட்ட மூன்று கணக்குகளும் பெர்ஸனல் அக்கவுண்டுகளைப் போலவே பாவிக்கப்படுகின்றன. ஏனெனில், அக்கணக்குகள் லாப நஷ்டங்களுக்கு ஈடாக தொகையை வைத்துக்கொண்டு வேண்டிய பொழுது செலவைச் செய்கிறவர்களைக் குறிப்பது போல் இருக்கின்றன.

பெர்ஸனல் அக்கவுண்டுகளில் அதிக வரவிருந்தால் கடனையும், அதிகப் பற்றிருந்தால் சொத்தையும் குறிக்குமென்பதும் நாம் அறிந்த விஷயம். முதலில் சொல்லப்பட்டவருமான, செலவு ஈடுக்கணக்கு அதிக வரவையேபாக்கியாகக் காண்பிக்கிறது. ஆதலால் அது ஓர் கடன்போலவே பாலன்ஸ் ஷீட்டின் இடது பக்கத்தில் எழுதப்படவேண்டும். ஆனால் ஷ்டி அதிக வரவானது கைவிட்டகடன்களை நீக்கும் பொருட்டு ஏற்பட்ட ஈடுத்தொகை யாதலால், மொத்த கடன்களிலிருந்து ஈடுத்தொகையைக் கழித்து மிச்சத்தை மட்டும் சொத்தாகக் காண்பிக்கவேண்டும். இப்படி சொத்தைக்குறைத்துக் காட்டினாலும் அல்லது சொத்தின் பூராத்தொகையும் எழுதி கடன் பக்கத்தில் நஷ்ட ஈடுத்தொகையைப் போட்டாலும், கடைசியில் முதல் தொகையானது ஒன்றே வருமல்லவா? பாலன்ஸ் ஷீட்டில் இவ்வாறு சொத்துப்பக்கத்தில் எழுதப்படுகிறது:—

வியாபாரிகளிட மிருந்து சரக்குகளுக்காக வரவேண்டிய கடன்கள் ரூ.	10,000—0—0
வருமான செலவு நஷ்ட ஈடு (3%)	300—0—0
பாக்கித்தொகை	9,700—0—0

லாபத்தள்ளுபடியின் ஈடுக்கணக்கானது எப்பொழுதும் அதிகப்பற்றையே காண்பிக்கிறது. இது ஓர் சொத்தைப்போலவே ஆகும். ஆதலின் பாக்கி ஜாப்தாவின் வலது பக்கத்துக்குப் போகவேண்டியிருக்க, நாம் கொடுக்கவேண்டிய கடன்களின் தொகையை இக்கணக்கின் பாக்கி குறைக்கிறதாகையால், நம்முடைய கடன்களைக் குறைத்தே பாக்கி

ஜாப்தாவிலும் காட்டவேண்டும். அது இம்மாதிரி எழுதப்படு கிறது:—

சரக்குகள் வாங்கின வகையில்	ரூ. அ. பை.
கொடுக்கவேண்டிய கடன்கள்	5000—0—0
லாபத்தள்ளுபடி ஈடுத்தொகை (3%)	150—0—0
பாக்கித்தொகை ரூ.	4850—0—0

நஷ்டத்தள்ளுபடியின் ஈடுக்கணக்கில் காணப்படும் அதி கவரவு கடனைக்குறித்தாலும் நமக்கு வரவேண்டிய கடன்க ளின் தொகையைக் குறைத்தலால் சொத்துப்பக்கத்திலேயே எழுதவேண்டும். ஆனால் இத்தொகை வரவேண்டிய கடன் களின் முழுத் தொகையிலிருந்தும் கழிக்கப்படமாட்டாது. ஏனெனில், இத்தள்ளுபடி நிச்சயமாய் கிடைக்கக்கூடியகடன் களுக்கேயாகும். எனவே, நிச்சயமாய் வசூலாகக்கூடிய தொ கையைக் கண்டுபிடிப்பதன் பொருட்டு முதன் முதலில் வரு மான செலவு ஈடுத்தொகையை வரவேண்டிய கடன்களின் மொத்தத்தொகையிலிருந்து கழிக்கிறோம். பாக்கியே நிச்சய மாய் பணம்வரக்கூடிய கடன்களாகும். இந்த பாக்கியிலிருந்தே நஷ்டத்தள்ளுபடி ஈடுத்தொகை கீழ்க்கண்ட விதம் குறைக் கப்படவேண்டும்:—

சரக்குகள் விற்றவகையில்	ரூ. அ. பை.
வரவேண்டிய கடன்கள்	15,000—0—0
வருமான, செலவு ஈடுத்தொகை (4%)	600—0—0
	14400—0—0

நஷ்டத்தள்ளுபடி ஈடுத்தொகை (3%)		432—0—0
	பாக்கித்தொகை ரூ.	13968—0—0

இவ்வதிகாரத்தில் சொல்லப்பட்ட விஷயங்களெல்லாம் வியாபாரப் பரிவர்த்தனைகளைச் சேராது. இவைகள், வியாபாரத்தின் உண்மை நிலைமையைச் சரியாகத் தெரிந்து கொள்வதன் பொருட்டு ஏற்பட்ட முறைப்பாடுகள். ஆகவே இந்த அம்சங்களெல்லாம் வருஷக்கடைசியில்தான் அதாவது கணக்குகளை முடிக்கும் தேதியில் தான் செய்யப்படவேண்டும். கணக்குக் குறிப்புகளை முடித்து பாக்கிகளைக் காண்பித்து "சரி பார்க்கும் குறிப்பு" அல்லது "ட்ரயல் பாலன்ஸ்" கூடுதல்கள் ஒழுங்காக வந்தவுடன், முடிவுக் கணக்குகளாகிய லாப நஷ்டக்கணக்கு, பாலன்ஸ் ஷீட் இவைகளை முடிப்பதற்கு முன், ஷை ஈடுத் தொகைகள் முதலான அம்சங்களை எடுத்துக் கொள்ளவேண்டும்.

வியாபாரத்தின் ஒவ்வொரு அம்சமும் இரட்டைப் பதிவோடு கூடியிருக்கிறதென்று நாம் அறிகிறோம். கணக்குகளை யெல்லாம் முடித்து ட்ரயல் பாலன்ஸின் கூடுதல்கள் சரியாகப் போய்விட்டன வென்றால் அதுவரையில் எல்லா அம்சங்களும் இரட்டைப் பதிவோடு கூடியிருக்கின்றன வென்று தெரிந்து கொள்ளுகிறோம். அதற்குப் பின் ஈடுத் தொகை முதலான அம்சங்களைச் சேர்க்கும்பொழுது இவைகளுக்கும் இரண்டு பதிவுகளைச்செய்ய மறந்து விடக்கூடாது. இவைகளின் இரண்டு பதிவுகளில், ஒன்று லாப நஷ்டக் கணக்கைப்பற்றியும், மற்றொன்று சொத்து கடன்களைப் பற்றியுமாக விருக்கும். அல்லது லாப நஷ்டக்கணக்கிலா

வது பாலன்ஸ் ஷீட்டிலாவது இரண்டுபக்கங்களிலும் இரண்டு பதிவுகள் சேர்ந்து சரியாகிவிடும். மேற்சொன்ன பதிவு களும் சஸ்பென்ஸ் அக்கவுண்டு சம்பந்தமான பதிவுகளும், முடிவு கணக்குகளை எழுது முன் குறிக்கப்படவேண்டிய அம்சங்கள். ஓர் செலவை உத்தேசித்து முன் பணம் கொடுத் திருந்தோமானால், வியாபாரத்தை முடிக்குங் காலத்தில் எவ்வளவு தொகை கணக்குகள் முடிக்குந் தேதிவரையில் மட் டும் செலவிடப்பட்டதோ அத்தொகையையும், முன் பணம் வாங்கி யிருந்தாலும் எவ்வளவு தொகை கணக்குகள் முடி வடையும் தேதிவரையில் வேண்டுமோ அத்தொகையையும் கணக்குகளை முடிக்குமுன் அவ்வருஷத்தில் சேர்ந்ததாயும் ஆனல் தொகை கொடுக்கப்படாத தாயுமுள்ள கடன்களின் குறிப்புகளும் இதுபோலவே நமக்கு வரவேண்டியதாயிருந் தாலும் தொகை கொடுபடாமலிருக்கப்பட்ட அம்சங்களும், மாசாமான்கள், கட்டடங்கள், யந்திரங்கள் முதலான சொத் துக்களின் மீது பெறுமானக் குறைவு தொகையும், முதலின் மீது வட்டித்தொகையும் செலவி லெழுதப்பட்ட சில சரக்கு கள் கையிருப்பு இருந்தால் அவைகளைப்பற்றின குறிப்பு களும் மேலே சொல்லப்பட்ட ஈடுக்கணக்குகளும், லாப நஷ் டக்கணக்கையும் பாலன்ஸ் ஷீட்டையும் முடிவு செய்வதற்கு முன்னல் கவனிக்கவேண்டிய சில முக்கியமான விஷயங்கள்.

மேற்கூறிய விஷயங்களை விளக்கிக்காட்ட பின்னல் மாதிரிக் கணக்கு போடப்பட்டிருப்பதை கவனிக்கவும்.

13-ம் அதிகாரம்.

ஒற்றைப்பதிவு கணக்கு முறையிலுள்ள அசௌகரியங்கள்—ஒற்றைப் பதிவுக்கும் இரட்டைப் பதிவுக்குமுள்ள வித்தியாசங்கள்.

இரட்டைப் பதிவு என்பது ஒவ்வொரு வியாபாரப் பரிவர்த்தனைக்கும் ஓர் கணக்கில் பற்ருக ஒரு பதிவும் அப்பரிவர்த்தனையில் சம்பந்தமான மற்ரேர் கணக்கில் வரவாக இரண்டாவது பதிவையும் செய்தல். ஆதலால் இம்முறையில் வியாபாரிகள் கணக்கு சம்பந்தப்படுவதோடு கூட, சொத்துகளைக் காட்டும் கணக்குகளும் லாப நஷ்டங்களைக் காட்டும் கணக்குகளும் குறிக்கப்படுகின்றன. ஆனல் ஒற்றைப் பதிவிலோ, வியாபாரப் பரிவர்த்தனையில் வியாபாரி சம்பந்தமான பதிவு மட்டும் செய்யப்படுகிறதே யொழிய, அக்காரியத்தினுல் மாறுதலடையும் சரக்குக் கணக்கைப்பற்றி கவனம் எடுக்கப்படுவதில்லை. இதற்குக் காரணம் வியாபாரிகளிடத்தில் பணம் தங்க வைக்காமல் வசூலிக்க வேண்டியதே வியாபாரத்திற் கழகு என்று கருதப்படுகிறது போலும்! இவ்விதம் வியாபாரிகளின் கணக்குகள் மட்டும் வைக்கப் படுவதால் வியாபாரத்திலிருக்கும் சரக்குகள் எவ்வளவு செலவாயின, எவ்வளவு வாங்கப்பட்டிருக்கிறது, எவ்வளவு திரும்பி வந்திருக்கிறது, எவ்வளவு சரக்குகளை நாம் திருப்பி யிருக்கிரேம், சரக்குகளின் பொருட்டு என்னென்ன செலவுகள் நாம் செய்திருக்கிரேம், வியாபாரம் விருத்தியடையும் பொருட்டு என்னென்னசெலவுகள்செய்யப்பட்டிருக்கின்றன, ஷை செலவுகளைச்செய்தால் அதற்குத் தகுந்தலாபம் கிடைக்

குமா, எங்கெந்த சரக்குகளைப்பற்றிய வர்த்தகம் செழிப்பையடைகிறது, எது நஷ்டத்திற்கு நடந்து கொண்டிருக்கிறது, வியாபாரத்தில் என்னென்ன சாமான்கள் வாங்கி சேர்க்கப்பட்டிருக்கின்றன, நாணயமாக எங்கெந்த வியாபாரிகள் கடன்களைத் திருப்பிக் கொடுத்திருக்கின்றனர், அவர்களுக்குத் தள்ளுபடி கொடுக்கப்பட்ட தெவ்வளவு, இது முதலான விஷயங்களையெல்லாம் தெரிந்து கொள்ள முடியாது. ஷெ விஷயங்களில் ஒன்றிரண்டு கிடைத்தாலுங் கூட அவ்விஷயங்களை உடனுக்குடனே தெரிந்து கொள்வதென்பது முடியவே முடியாது. இவ்விதமான கணக்குகளை வைத்து வியாபாரம் நடத்தினால், அவ்வியாபாரத்தின் உண்மையான நிலைமை எப்படித் தெரியவரும்? அந்தத்தொழிலை மேலும் விருத்தி செய்ய மார்க்கம் எது? ஆதலின் ஒற்றைப்பதிவை ஒரு கணக்கு முறை என்று சொல்லவும் அஞ்சவேண்டும்.

இரட்டைப் பதிவினால் ட்ரயல் பாலன்ஸ் என்ற ஓர் குறிப்பை எழுதுவதற்கு மிகுந்த சௌகரியம் ஏற்படுகிறது. அக்குறிப்பின் இரு கூடுதல் தொகைகளும் சமமாகப்போகவே, கணக்குகள் சரிவர பதிவு செய்யப் பட்டுள்ளன என்ற திருப்தியை கணக்கன் அடைகிறான். ஒற்றைப் பதிவில் முக்கியமான பதிவுகளை மட்டும் அதுவும் அவைகள் வியாபாரிகளைப் பொருத்திருந்தால் கணக்குகளில் எழுதி, மற்றவைகளை விட்டு விடும்பொழுது, விடப்பட்ட பதிவுகளை எவ்வாறு ஞாபகத்தில் வைத்துக்கொள்ளக்கூடும்? அப்பொழுது ஒரு பதிவு பெர்ஸனல் அக்கவுண்டிலிருக்கும் பொழுது மற்றோர் பதிவு விட்டுவிடப்பட்டது. ஆதலால் ட்ரயல் பாலன்ஸை எங்கிருந்து எடுக்கமுடியும்? ஆகவே கணக்குகளை மறுபடியும் பரிசிலனை செய்தோம் என்பதற்கு வழியில்லை. ஞாபகமுமின்மை

யால் போனது போனதாகவும், வந்தது வந்ததாகவும் ஒன்றுக்கும் எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய சரியான சிட்டு அல்லது ரிகார்டு (Record) இல்லாமலிருக்க வேண்டியதுதான். இதனால் உண்டாகும் பிரயோஜனம் ஒன்று மில்லை.

எப்பொழுது ஒற்றைப்பதிவில் நாமினல் அக்கவுண்டுகள் எழுதப்பட வில்லையோ, லாப நஷ்டம் வியாபாரத்திற் கெவ்வளவு ஏற்பட்டிருக்கிற தென்பதை சுலபத்தில் கண்டு கொள்ளமுடியாது. பின்னால் மாதிரியில் காணும்விதம் கண்டு பிடிக்கப்பட்டாலுங்கூட அது சரியான தன்று. அந்தலாப நஷ்டமும் வியாபாரத்தின் ஸ்திதியைத் தெரிவிக்கமுடியாது. ஆதலால், ஒரு வருஷத்தில் முன் வருஷத்தைவிட அதிக லாப மேற்பட்டிருக்கிறதா வென்றும் அல்லது லாபம் குறைந்திருக்கிறதா வென்று அறிவதற்கும் ஹேதுவில்லை.

இரட்டைப்பதிவில் ஒரு பெரிய அநுகூலமிருக்கிறது. நாம் இதற்கு முன் என்ன சொல்லியிருக்கிறோ மென்றால், கணக்குகள் ஒழுங்காக முடிவுபட்டன என்பதற்கு அடையாளம் பாக்கி ஜாப்தாவில் காணப்பட்டுள்ள வருஷ முடிவின் முதல் தொகையானது முதல் கணக்கை முடித்து வந்த பாக்கித்தொகைக்குச் சமமாயிருப்பதே. ஒற்றைப்பதிவிலும் வருஷ முடிவின் முதலைக்கண்டு பிடிக்கக்கூடும். இந்த முதல் தொகையை நாம் எதோடு பரிசீலனை பார்க்கமுடியும்? தவறுகளைக்கண்டு பிடிக்க யாதொரு மார்க்கமுமில்லை யாதலால் முதல்தொகை உண்மையான தாயிருக்கமுடியாது. முதல் எப்படிக்கண்டு பிடிக்கப்படுகிற தென்றால், பெர்ஸனல் அக்கவுண்டுகளினின்றும் கடன்கள், சொத்துகள் எடுக்கப்படுகின்றன. ரொக்கப் புத்தகத்திலிருந்து ரொக்கபாக்கியும் எழுதப்படுகிறது. மற்ற கையிருப்பு சாமான்களாகிய சொத்து

களைப்பற்றி அக்கவுண்டுகள் இல்லை யாதலால் அவை களைத் தனிக்குறிப்புகளிலிருந்தே அறியவேண்டும். மற தியால் குறிப்புகளில் ஒன்றும் எழுதப்படா விட்டால் அந்த சாமான்களின் தொகைகளை அறிவது மிகவும் துர்லபமாகி விடும். இவ்விதம் ஒவ்வொன்றாகக் கடனை யும் சொத்தையும் பொறுக்கி யெடுத்து அவ்விரண்டுக்கு முள்ள வித்தியாசம் கண்டு பிடிக்கப்படுகிறது. இதுவே வருஷ முடிவிலுள்ள முதல் தொகையாகும். ஏதாவது சொத்துகள் விடப்பட்டும் அல்லது சொத்துகளின் தொகை அதிகமாகவோ குறைத்தோ எழுதப் பட்டுமிருக்கலாம். ஆத லால் ஷை முதல் தொகையை சரியானதென்று நம்ப முடி யாது. இவ்விதம் ஒற்றைப்பதிவில் முதல் தொகையைக்கண்டு பிடிக்கும் பொருட்டு போடப்படும் குறிப்புக்கு "வியாபார சொத்து கடன்களின்குறிப்பு" (Statement of Affairs) என்று பெயர்.

ஒற்றைப்பதிவில் லாப நஷ்டம் எப்படி எடுக்கப்படு கிற தென்பதைக் காட்டுவோம். வருஷ முடிவில் முதல் தொகை யென்பது, வருஷ ஆரம்பத்தில் எந்தத்தொகை முதலாக இருந்ததோ அத்தொகையோடு வியாபாரத்தில் ஏற்பட்டலாபம் அல்லது நஷ்டம், முதலின் மீது வட்டி, மே லும் முதலோடு சேர்க்கப்பட்டதொகை இவைகள் சேர்ந்து கூடுதலடைந்து, முதலாளியின் பற்றுத்தொகை, அத்தொகை யின்மீது வட்டி இவைகள் சேருவதால்குறைவாகிநிற்கும்தொ கையேயாகும். இப்பொழுது நமக்கு வருஷ ஆரம்பத்திலுள்ள முதல் தொகை முன் வருஷ குறிப்புப்படி தெரியவருகிறது. அத்தொகையோடு மேலும்சேர்க்கப்பட்ட முதல்தொகையை யும் முதலின் மீது வட்டியும் சேர்த்துவிட்டால், வியாபார

முடிவிலுள்ள முதல் தொகைக்கு சமமாக வில்லாததின் காரணம் லாபநஷ்டமே. முதலாளியின் பற்றையும் அதற்குள்ள வட்டியையும் கழித்தபிறகே முடிவு முதல் தெரிகிறதாகையால், இப்பற்றுத் தொகையை முதலாளி முடிவுத்தொகையாக விருக்கவேண்டிய முதல் தொகையிலிருந்தே பெற்றுக்கொண்டிருக்கிருனகையால் பற்றுக்கு முன் எவ்வளவு முடிவு முதல் இருந்ததென்று கண்டுகொள்ள அவ்விரண்டு அம்சங்களேயும் அதாவது பற்றுத் தொகையையும் அதன் மேல்வட்டியையும் சேர்க்கவேண்டும். கூடுதலான முதல் தொகைக்கும் வருஷஆரம்பத்து முதல் தொகையோடு சேர்க்கப்பட்ட அம்சங்களின் மொத்தத் தொகைக்கு மேற்படும் வித்தியாசமே "மிச்சலாபம் அல்லது நஷ்டம்" எனப்படும். முதலின் முடிவுத்தொகை அதிகமாயிருந்தால் லாபமும்,குறைவாயிருந்தால் நஷ்டமும் ஏற்பட்டிருக்கும். கீழுள்ள குறிப்பைப் பார்க்கவும்.

பற்று. 1915 ஜனவரி மாதத்திய லாப நஷ்டக்கணக்கு வரவு.

ஆரம்ப முதலால் ஜனவரி 1வ	3000	0	0	முடிவு முதலுக்கு, ஜனவரி 31.	3574	0	0
முதலின்மீது வட்டித் தொகையால்(8%)	240	0	0	முதலாளியின் பற்றுக்கு	200	0	0
அதிக வரவால் (மிச்சலாபம்)	550	0	0	ஷை தொகையின் மேல் வட்டிக்கு	16	0	0
	3790	0	0		3790	0	0

எப்பொழுது முடிவுமுதல் தொகை அதிகமாயிருக்கிறதோ லாபமெனத் தெரிகிறது. ஆதலால்தான் அத்தொகையும் அதைச் சேர்ந்த அம்சங்களும் லாப நஷ்டக் கணக்கின் வரவு பக்கத்தில் அதாவது லாபத்தைக் குறிக்கும் பக்கத்தில் குறிக்கப்பட்டுள்ளன. முடிவு முதல் குறைவாயிருந்து நஷ்டத்தைக் குறிக்குமானுல், அப்பொழுது இடது பக்கத்தி லெழுதப்படும்.

இது வரையில் சொல்லப்பட்ட காரணங்களாலும் ரொக்கப் புத்தகம், கொள் முதல் புத்தகம், விற்று முதல் புத்தகம், வாபீஸ் புத்தகம், லெட்ஜர் புத்தகம் ஆகிய இவைகள் ஒற்றைப் பதிவில் வியாபாரி சம்பந்தப்பட்ட வரையில் எழுதுவதற்காகவே உபயோகிக்கப்பட்டு மற்ருேர் பாகம் பதிவு செய்யப்படாமல் விட்டு விடப்படுகிறபடியாலும், இரட்டைப் பதிவு நூல் ஒற்றைப்பதிவை பன்மடங்கு உயர்ந்தது என்பது நன்கு புலனுகிறது. ஒற்றைப்பதிவு என்றதிலிருந்தே இதற்கு ஜர்னலும் உபயோகப்படமாட்டாது என்பதை அறிகிருேம்.

ஒற்றைப் பதிவானது இரட்டைப் பதிவின் ஓர் பாகம் விடப்பட்டதாகிறது. ஆதலால் விடப்பட்ட பாகத்தையும் சேர்த்து பதிவுகளெழுதி கணக்குக் குறிப்புகள் ஏற்படுத்துவோமானுல் ஒற்றைப் பதிவு முறையை இரட்டைப் பதிவுடையதாகச் செய்து விடலாம். அப்படி ஒற்றைப் பதிவு முறையிலிருந்து இரட்டைப்பதிவு வழக்கத்தை அனுசரிக்க வேண்டு மென்ருல், வருஷத்தின் ஆரம்பத்தில் எவ்வளவு முதல் தொகை இருக்கிற தென்பதைப்பார்க்க வேண்டும். கடன்காரர்களேயும், கடன் கொடுக்கவேண்டியவர்

களையும் மற்ற சொத்துகளின் பெறுமானத்தொகையையும் ரொக்கக் கையிருப்பையும் பாங்கில் வரவிருப்பையும், செலவுகளின் நிமித்தம் முன் பணம் கையிருப்பு அல்லது முன் பணம் கொடுத்திருப்பதாலுண்டான சொத்தையும் ஆக இவ்வளவு அம்சங்களிலிருந்தும் ஆரம்பத்தில் முதல் தொகை எவ்வளவு என்று கண்டு பிடித்துக்கொள்ளலாம். இந்த சொத்து கடன்கள் பாக்கிகளை யெல்லாம் ஜர்னலில் முதன் முதலில் ஜர்னல் குறிப்பாக மாற்றி எழுதவேண்டும். சொத்துக்கணக்குகளைஏற்படுத்தி ஒவ்வோர் கணக்கிலும் பாக்கியை எழுதிவிட வேண்டும். வியாபாரகாலத்தில் ரொக்கப் புத்தகத்தில் வியாபாரிகள் விஷயங்கள் தவிர மற்றவைகளெல்லாம் விடப்பட்டிருக்குமாகையால், அவைகளை இப்பொழுது தனித் தனி கணக்குகள் லெட்ஜரிலேற் படுத்திப் பதிவுகளைச் செய்யவேண்டும். கடன்காரர்களுக்குக் கொடுக்கப்பட்ட நஷ்டத் தள்ளுபடிக்கும் நாம் கடன் கொடுக்க வேண்டியவர்களால் நமக்குக் கொடுக்கப்பட்ட லாபத்தள்ளுபடிக்கும் தனித் தனி கணக்குகள் ஏற்படுத்தி தள்ளுபடிகளைப் பதிவு செய்யவேண்டும். லாபநஷ்டக் கணக்குகளாகிய நாமினல் அக்கவுண்டுகள் எழுதப்படுவதோடு கூட, சரக்குகள் வாங்கினதற்கும், விற்றதற்கும், வாபீஸ் வந்ததற்கும் முறையே கொள்முதல் கணக்கு, விற்று முதல் கணக்கு, வாபீஸ் கணக்குகள் முதலியவைகளை ஏற்படுத்தவேண்டியது அவசியம். இன்னும் வருமான செலவு ஈடு, தள்ளுபடி ஈடு முதலான ஈடுகளுக்கும் கணக்குகள் ஏற்படுத்திப் பதிவு செய்யவேண்டும். இவ்விதம் ஒவ்வொரு வியாபாரப் பரிவர்த்தனைக்கும் கணக்குகளேற்படுத்தி பதிவுகளைச்செய்து ட்ரயல் பாலன்ஸ் என்ற குறிப்பில் எழுதினேமானால் இரண்டு கூடு

தல்களின் தொகைகளும் சமானமாகப் போய்விடு மென்பதில் ஆக்ஷேபனை இல்லை.

14-ம் அதிகாரம்

விற்பனைப் பட்டியல்களும் அவைகளின் மாதிரிகளும் —பற்று வரவு விபரக் குறிப்புகள்.

இனி விற்பனை விஷயங்களைப்பற்றி விபரமாக எழுதவேண்டுமாதலால், விற்பனையோடு கூடகொடுக்கப் படுகிற பட்டியல்களை எடுத்துக்கொள்வோம்.

பட்டியல்களில் இரு விதம் உண்டு. உள்ளூரிலேயே அல்லது உள் நாட்டிலே இருக்கும் ஒருவருக்கு நாம் சரக்குகள் அனுப்பவேண்டுமானால், அவர் பேரில் எழுதப்படும் பட்டியலுக்கு "உள்நாட்டுப்பட்டியல்" (Inland Invoice or Bill of Parcels) என்றும், வெளிநாடுகளில் அதாவது, அன்னிய தேசத்திலிருக்கும் ஒருவருக்குக் கப்பல் மூலமாய் சரக்குகள் நாம் அனுப்பவேண்டுமானால் அவர் பேரில் தயாரிக்கப்படும் பட்டியலுக்கு "வெளிநாட்டுப்பட்டியல்" (Export or Foreign Invoice) என்றும் பெயர்.

உதாரணமாக, பம்பாய், மார்கன் அண்டு கம்பெனியாரிடமிருந்து, மதராஸ் சிவாஜி அண்டு கம்பெனியார் சைகில்கள் வாங்கினார்களென்று வைத்துக்கொண்டால், இதற்காகக் கீழ்க்கண்ட விதம் குறிக்கப்படும் பட்டியல், வியாபாரம் உள் நாட்டிலேயே நடந்திருக்கிற தாகையால், உள் நாட்டுப் பட்டியலாகும்:—

தந்தி விலாசம்: மார்கன் கட்டடம்,
''மார்கன்'' தபால் பெட்டி 232,
பம்பாய், ஜனவரி 25, 1915.

மதராஸ்,

சிவாஜி அண்டு கம்பெனியாருக்கு

பம்பாய்,

மார்கன் அண்டு கம்பெனியாரால்

விற்பனை விபரம்.

எண்ணிக்கை	விபரம்.	விலை விகிதம்	விகிதம் எண்ணிக்கை	தொகை ரூ.	அ.	பை.	மொத்தத் தொகை ரூ.	அ.	பை.
24	பி. எஸ். ஏ. சைகில்கள் 28" அளவு	135/-	ஒன்று	3240	0	0			
24	செட் மேல்சாமான்கள்	12/-	செட்	288	0	0			
				3528	0	0			
	தள்ளுபடி 10%			353	0	0			
							3175	0	0
	செலவுகள்:—								
	பாகிங் சாமான்கள்			65	0	0			
	வண்டிச் செலவு			12	0	0			
							77	0	0
			ஆகமொத்தம்...				3252	0	0

(ஷி சாமான்கள் நெ. 2120/45 ரயில் ரசீதுபடி கூட்ஸ் மூலம் இன்று அனுப்பப்பட்டது. ரயில் சார்ஜ் அவ்விடம் கட்டப்பட வேண்டியது.)

பி. ஜான்சன்.
விற்பனை மானேஜர்.

கன்ஸைனர் (Consignor) அதாவது சரக்குகளை விற்கிறவராகிய மார்கன் அண்டு கம்பெனியார் கூட்ஸ்மூலம் சைகில்களை அனுப்பினவுடன் ரயில் ரசீதையும் ஷி பட்டியலையும் கன்ஸைனி (Consignee) அதாவது சரக்குகளை வாங்குகிறவராகிய சிவாஜி கம்பெனியாருக்கு அனுப்புவார்கள். அப்படி அனுப்பித்தவுடன், மார்கன் கம்பெனியாரின் ஜர்னல் குறிப்பில் அவர்களிடமுள்ள ஷி பட்டியலின் நகலைப்பார்த்து கீழ் வருமாறு குறிக்கப்படும்:—

1915

ஜன. 25. சிவாஜி கம்பெனி பற்று ரூ. 3252—0—0

சைகில் கணக்கால்	ரூ.	3175—0—0
ரொக்கக் கணக்கால்	,,	77—0—0
(செலவுகள்)		

ஷி பட்டியலில் காணப்படும் தள்ளுபடி வியாபாரத் தள்ளுபடியாதலின் அதன் தொகையைக்குறைத்தே சிவாஜி கம்பெனியைப் பற்று செய்யவேண்டும். ரயில் சார்ஜ் மார்கன் கம்பெனியால் கொடுக்கப்படவில்லை யாதலாலும், அச் செலவு சரக்குகள் வாங்குகிறவர்களையே சேர்ந்ததாகையாலும், மார்கன் கம்பெனிக் கணக்கில் ஓர் பதிவு மேற்படாது.

சிவாஜி கம்பெனியார் இந்தப் பட்டியலைப்பெற்றுக் கொண்டவுடன் சரக்குகள் வந்து இறங்கி விட்டால் ரயில் ரசீதைக்கொடுத்து டெலிவரி (Delivery) எடுத்துக் கொள்வார்கள். உடனே பட்டியலில் காணப்பட்டபடி சரக்குகள் சரியாக வந்து சேர்ந்தனவா என்று பரிசோதனை செய்வதோடு கூட, தாங்கள் ஆர்டர், அதாவது உத்திரவு அனுப்பிய பிரகாரம் சாமான்கள் அனுப்பப்பட்டிருக்கின்றனவா வென்றும் பார்க்கவேண்டியது முக்கியமான க்ரியம். ஏதாவது

வித்தியாச மேற்பட்டால் உடனே சரக்குகளை விற்றவர்களுக்குத் தெரிவிக்கவேண்டும்.

பட்டியலையும் சாமான்களையும் பெற்றுக்கொண்டவுடன் சாமான்கள் கைக்குக் கிடைத்த தேதியில் கீழ்வரும் விதம் ஜர்னல் குறிப்பைச் செய்வார்கள் :—

1915

பிப். 10. சைகில் கணக்கு பற்று ரூ. 3252—0—0

மார்கன் கம்பெனியால் ரூ. 3252—0—0

பட்டியலில் கண்ட செலவுகள் மார்கன் கம்பெனியாலேயே செய்யப்பட்டு பட்டியலில் சேர்க்கப்பட்டன வாகையாலும், சிவாஜி கம்பெனிக்கு சைகில் தொகையின் அடக்க விலையை அதிகரிக்கின்றன வாகையாலும், சைகில் கணக்கிலேயே சேர்த்து ஒரே தொகையாக இவர்களும் பதிவு செய்து விடுகிறார்கள்.

ஷை சாமான்களை ரயிலிலிருந்து டெலிவரி செய்யுமுன் பணம் கட்டவேண்டுமல்லவா ? இச் செலவும் சைகில்களின் மேல் ரயில் சார்ஜைக்குறிக் கிறதாகையால் இதையும்சரக்குக் கணக்கிலேயே சேர்க்கவேண்டும். ஆதலால் கீழ் வருமாறு பதிவையும் செய்வார்கள் :—

சைகில்கள் கணக்கு பற்று ரூ. 85—0—0

ரொக்கக் கணக்கால் ரூ. 85—0—0

(ரயில் சார்ஜ்)

வெளி நாட்டுப்பட்டியலின் மாதிரி கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது:—

தந்திவிலாசம்:
“பார்ஸன்”
லண்டன்.

30, பீச் ரோட்,
லண்டன், டிசம்பர் 20, 1915.

நெ. 212/15.

லண்டனிலிருந்து வி. பார்ஸன் அண்டு கம்பேனியாரால், கள்ளிக்கோட்டை, மார்டன் அண்டு கம்பெனியின் விலாசத்துக்கு அவர்கள் ஆர்டர் நெ. 375 பிரகாரம், “கல்ஞு” என்ற கப்பல் மூலமாய் அனுப்பப்பட்ட

சாமான்களின் விபரம்

பெட்டிகளின் குறிகள்	சரக்குகளின் விபரம்.	விலை.			மொத்த விலை.		
		பவு.	ஷி.	பெ.	பவு.	ஷி.	பெ.
வீ. பி. வி.	25 மூட்டைகள் இரும்புத் திருகு ஆணிகள், ஒவ்வொரு மூட்டையும் அரை அந்தர் வெயிட் எடையுள்ளது, ஒரு அந்தர் வெயிட் பவு. 4 ஷி. $13\frac{1}{3}$ வீதம்	58	6	8			
					58	6	8
	பாகிங், கப்பலிலேற்றும் செலவுகள் முதலியன.	1	6	8			
	லண்டனிலிருந்து கள்ளிக்கோட்டைக்கு கப்பல் செலவு	3	10	0			
					4	16	8
	இதரச் செலவுகள்:—						
	தந்திச் செலவு	1	3	0			
	இன்வாய்ஸ் தொகைக்கு வட்டி	0	14	6			
	வாடகை	0	8	0			
	இன்ஷ்யூரன்ஸ் செலவு	1	2	0			
	பாங்கு கமிஷன் செலவு	0	3	6			
					3	11	0
	ஆகமொத்தம் பவு.				66	14	4
	ரூபாய்க்கு பவு.—/1/4 வீதம்...				1000	12	0

இந்த ரூபாய் 1000-12-க்கு மார்டன் அண்டு கம்பெனியாரின் மீது எழுதப்பட்ட பில் நெ. 355-ஐ அவர்கள் ஒப்புக்கொண்டதின் பேரில் இதனுடன் அனுப்பப்பட்ட பில்-ஆப்-லேடிங் கொடுக்கப்பட வேண்டியது. ஷை பில்லானது லண்டன் இம்பீரியல் பாங்கு மூலமாக அனுப்பப்பட்டிருக்கிறது.

அடக்கம்:—வவுச்சர்கள் 4, பில்-ஆப்-லேடிங், இன்ஷ்யூரன்ஸ் பாலிசி, பில் நெ. 355.	ஸர். ஜான் தாமஸ், எக்ஸ்போர்ட் மானேஜர், வி. பார்ஸன் அண்டு கம்பேனி.

மேலே காணப்பட்டுள்ள வெளிநாட்டுப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கும் செலவுகளெல்லாம் மார்டன் அண்டு கம்பெனியாருக்காக பார்ஸன் கம்பெனியாரால் செய்யப்பட்டிருக்கின்றன வாகையால் அவைகளையும் சேர்த்துப் பெறுமாறு பட்டியலில் பார்ஸன் அண்டு கம்பெனியார் சேர்த்துவிட்டார்கள். இவ்விதம் சரக்குகளை அனுப்பித்து, பட்டியலையும் தயார் செய்தபின், பார்ஸன் கம்பெனியார் பட்டியலின் முழுத்தொகைக்கும் மார்டன் கம்பெனியாரைப் பற்று செய்து, இரும்பு சாமான்கள் கணக்கை அதன்தொகைக்கு மட்டும் வரவு வைத்து மற்ற செலவுகளின் கணக்குகளையும் அந்தந்தத் தொகைக்கு வரவு செய்து விடுவார்கள். பார்ஸன் கம்பெனியார் செலவுகளைச்செய்யும் பொழுது முதன்முதலில் செலவுகணக்குகளைப் பற்றுசெய்தும் ரொக்கக் கணக்கை வரவு செய்துமிருக்கவேண்டும். எப்போது இச்செலவுகளெல்லாம் மார்டன் கம்பெனியாரிடமிருந்து வாங்கப்படுகின்றனவோ, ஷை மார்டன் கம்பெனியாரைப்பற்று செய்து செலவுகணக்குகளில் முன்காணப்படும் பற்றுப்பதிவுகளை

ரத்துசெய்யவேண்டி இப்பொழுது அக்கணக்குகள் வரவாக வேண்டும்.

இவ்விதம் இன்வாய்ஸ் எழுதப்பட்டு பில்-ஆப்-எக்ஸ் சேஞ்சும் மார்டன்கம்பெனி மீது அனுப்பப்பட்டால், அந்த பில் ஒப்புக்கொள்ளப்படும் என்ற நம்பிக்கையின்மீது, பணம் வரவேண்டிய பில்கணக்கு பற்று செய்யப்பட்டு, மார்டன் கம்பெனியார்கணக்கு வரவு செய்யப்படும். ஷை பில்லானது லண்டன் இம்பீரியல் பாங்கில் டிஸ்கவுண்டுசெய்ய அனுப்பப்பட்டால், இம்பீரியல்பாங்குக் கணக்குப் பற்ருகி பணம் வரவேண்டிய பில்கணக்கு வரவாகும்.

இனி மார்டன் கம்பெனியார் இன்வாயிசையும் பில்-ஆப்-எக்ஸ்சேஞ்சையும் பெற்றுக்கொண்டால், யாது குறிப்புகள் செய்வார்களென்று கவனிப்போம்.

இன்வாயிசில் காணப்பட்ட சில்லரைச்செலவுகள் மார்டன் கம்பெனியாருக்கு இரும்புசாமான்களைத் தருவிப்பதால் ஏற்பட்டசெலவுகளாதலால் அச்செலவுகள் சரக்குக் கணக்கிலேயேசேர்ந்து விடும். ஆகவே, மார்டன் கம்பெனியார் தங்களுடைய இரும்புசாமான் கணக்கை இன்வாயிசின் மொத்தத்தொகைக்குப் பற்றுசெய்து, பார்ஸன் அண்டு கம்பெனி கணக்கை வரவு செய்வார்கள். பின்னர், பில்லை ஒப்புக்கொண்டவுடன், பார்ஸன் கம்பெனியின்மீதுள்ள வரவு தீர்ந்து விடுகிறதாகையால், அவர்கள் கணக்கைப் பற்றுசெய்து, தாங்கள் ஒப்புக்கொண்ட பில்லின் மீதுபணம் கொடுபடவேண்டு மாதலின், பணம்கொடுக்கவேண்டிய பில் கணக்கை வரவு செய்வார்கள்.

மேலே சொல்லப்பட்ட வியாபாரத்தில் கன்ஸைனாகிய பார்ஸன் கம்பெனியாருக்குப் பட்டியலின் தொகை உடனே

வேண்டும் பக்ஷத்தில் அவர்களால் மார்டன் கம்பெனிமீது எழுதப்பட்ட பில்லை இம்பீரியல் பாங்கில் டிஸ்கவுண்டு செய்து பெற்றுக்கொண்டுவிடலாம். பில்-ஆப்-லேடிங்கும் பில்-ஆப்-எக்ஸ்சேஞ்சும் பாங்கர்களிடம் கொடுக்கப்படும். பாங்கர்கள் உடனே அந்தப்பத்திரங்களை கள்ளிக்கோட்டையில் தங்கள் எஜெண்டுகளிடமனுப்பி கன்சைனியாகிய மார்டன் கம்பெனியாரிடம் பில்லைக்கொடுத்து அவர்கள் ஒப்புக்கொள்ளும்படி செய்யச்சொல்லுவார்கள். பில் ஒப்புக்கொள்ளப் பட்டதின் பேரில் பில்-ஆப்-லேடிங் மார்டன்கம்பெனி வசம்கொடுக்கப் படும். இந்த பில்-ஆப்-லேடிங்கைக் கொண்டே மார்டன் கம்பெனியார் பெட்டிகளை டெலிவரி எடுத்துக்கொள்ள முடியும்.

இவ்விதம் வெளியூர்களுக்கு சரக்குகளையனுப்பி உடனுக்குடனே பில்லைகளைக் கொண்டு பாங்குகள் மூலமாய் பணம் வசூல் செய்வது வெகு சுலபமாகிறது.

15-ம் அதிகாரம்.

கூட்டு வியாபாரக் கணக்குகள். (Partnership Accounts)

சிறுகால கூட்டுவியாபாரக் கணக்குகள். (Joint Adventure Accounts)

ஒரு வியாபாரத்தில் அதை விருத்திசெய்ய அதிக முதல் தொகை வேண்டியிருந்து, ஒருவராலேயே அத்தொகை செலவழிக்க முடியாமற் போனால், இரண்டு பேர்களோ அல்லது அதற்கு மேற்பட்டு இருபதுக் குள்ளாக எவ்வளவு பேர்களோ ஒவ்வொருவரும் முதல் தொகையில் ஒரு பாகம் கொண்டு சேர்த்து ஆரம்பிக்கப்படும் வியாபாரத்துக்கு கூட்டு

வியாபாரம் என்று பெயர். ஓர் தனி வியாபாரத்தில் ஒருவரே முதலாளியாவர். கூட்டுவியாபாரத்தில் எவ்வளவு பேர்கள் சேர்ந்து முதல் சேர்த்திருக்கிறார்களோ அவர்களெல்லோரும் முதலாளி களாவார்கள்.

அநேக பேர்கள் சேர்ந்து ஒரு வியாபாரத்திற்கு முதலாளிகளாகும் பொழுது, அவர்களுக்குள்ள வியாபார சம்பந்தமான உரிமைகளேயும் கடமைகளேயும் காண்பிக்குமாறு, ஒப்பந்தம் அவர்களுக்குள் செய்யப்படுகிறது. அந்த உடன் படிக்கை பத்திரத்தில் எல்லாரும் கையெழுத்திட்டபின், அதுமுதல்கொண்டு கூட்டு வியாபாரம் ஆரம்பிக்கப் படுகிறது.

ஓர் கூட்டு வியாபாரம் தனி வியாபாரத்திலிருந்து கணக்குவைக்குமுறையில் சிறிதளவே மாறியிருக்கிறது. கீழ்க்கண்டிருக்கும் மாறுதல்கள்தாம் கூட்டு வியாபாரத்திலேற்படுமே தவிர, மற்ற விபரங்கள் தனி வியாபாரத்தில் குறிக்கப் படுவது போலவேதான் இதிலும் எழுதப்படுகின்றன:—

(1) ஒவ்வொரு முதலாளியாலும் கொடுக்கப் பட்ட முதல் தொகை.

(2) அத்தொகையின் மீதுகொடுக்கப்பட வேண்டிய வட்டி.

(3) ஒவ்வொரு முதலாளிக்கும் சேரவேண்டிய லாப நஷ்டத்தைக் கண்டுபிடிப்பது.

(4) முதலாளிகளுக்கு வேண்டுமானல் கொடுக்கப்பட வேண்டிய சம்பளம்.

(5) ஒவ்வொரு முதலாளிக்கும் முதல் தொகையிலிருந்து பற்றுசெய்து கொள்ள உரிமை.

கூட்டு வியாபாரத்தில் ஏற்படக்கூடிய வித்தியாசம் மேற் சொல்லப்பட்டவைகளே யாதலால், இவைகளைக் குறித்தே ஒப்பந்தத்திலும் எழுதப்படுகிறது.

தனி வியாபாரத்தில் முதலாளியால் செலுத்தப்பட்ட தொகை வியாபாரத்திற்கு அவனுல் கொடுக்கப்பட்டகடன் போல் பாவிக்கப்பட்டு முதலாளியின் கணக்கு அதாவது முதல் கணக்கு வரவு செய்யப்படும் என்று சொல்லியி ருக்கிறோ மல்லவா? அதுபோலவே கூட்டு வியாபாரத் திலும், ஒவ்வொரு பங்குக் காரரால் கொடுக்கப்பட்ட முதல் தொகையை அவனுல் செலுத்தப்பட்ட கடனுக வெண்ணி ஒவ்வொருவர் கணக்கையும் வரவு செய்யவேண் டும். தனி வியாபாரத்தில் "முதல்கணக்கு" என்பதால், அந்த வியாபாரத்துக்குச் சொந்தமான முதலாளி ஒருவனே யாதலால் அக்கணக்கும் அவனையே குறிக்கும். அக்கார ணம் பற்றி, முதலாளி கணக்கின் தலைப்பில் "முதல் கணக்கு" என்று மட்டும் குறிப்பிட்டால் போதும். ஆனுல் கூட்டு வியாபாரத்திலோ, பல முதலாளிகள் அதா வது பங்குக்காரர்களிருப்பதால், ஒவ்வொருவரின் பெயரை யும் தலைப்பில் போட்டு "ஷியார் முதல் கணக்கு" என்று குறித்தல் வேண்டும். இவ்விதமே முதல்கணக்கு சம்பந்த மான "பற்றுக் கணக்குகள்" கூட தலைப்பில் பெயர்களையு டையன வாயிருக்கவேண்டும்.

வியாபார ஆரம்பத்தில் முதலாளிகளால் கொண்டு வரப்பட்ட மொத்த ரொக்கத்திற்கு ரொக்கக்கணக்கைப் பற்று செய்து, வெவ்வேருக முதலாளிகளின் கணக்குகளை வரவு செய்யவேண்டும்.

எப்படி தனி வியாபாரத்தில் முதல் தொகையின் மீது வட்டி வியாபாரத்தால் கொடுக்கப்படுகிறதோ, அது போலவே கூட்டு வியாபாரத்திலும் எல்லா முதலாளிகளுக்கும் அவர்களின் முதல் தொகைகளின் மீது வட்டி கொடுக்கப்பட வேண்டியது அவசியம். அப்படி வட்டி கொடுக்கப் படுமேயானல், அது வியாபாரத்து நஷ்டமாதலின், வட்டிக் கணக்கைப் பற்று செய்து, ஷை பங்குக்காரர்களின் பற்றுக் கணக்கை வரவு செய்யவேண்டியது. முதலாளிகளுக்கு வியாபாரத்திலிருந்து சில்லரையாகச் சேரவேண்டியதொகைகளெல்லாம், அவர்களால் செலவழிக்கப் படுவதற்கே உபயோகப்படுமாதலால், ஷை வட்டி முதலான சில்லரைத் தொகைகளை அவர்களின் பற்றுக்கணக்கில் போடுவதே நலம். இப்பற்றுக் கணக்கில், முதலின் மீது வட்டி, சில்லரைப் பற்றுத் தொகைகள், அவைகளின் மீது வட்டி, முதலாளிகளுக்குண்டான தனிச்சம்பளம் முதலானவைகள் சேர்க்கப்பட்டு, ஷை கணக்கின் கடைசி பாக்கியானது முதல்கணக்கில் மாற்றப் பட்டுவிடும்.

கூட்டு வியாபாரத்தின் பங்குக்காரர்களெல்லாரும் முதல் தொகையிலிருந்து செலவுகளுக்காகப்பணம் பெற்றுக்கொண்டால் அவரவர்களின் பற்றுக்கணக்கை அந்தந்தத் தொகைக்குப் பற்று செய்து, ரொக்கக்கணக்கையோ பாங்குக் கணக்கையோ வரவு செய்யவேண்டும். ஷை பற்றுகளின் மீது வட்டி விதிக்கப் பட்டால், ஷை பற்றுக்கணக்கையே இதற்கும் டெபிட்செய்து, வட்டிக் கணக்கை வரவு செய்யவேண்டியது. ஏனெனில் இது விஷயத்தில் முதலாளிகளால் கொடுக்கப்படவேண்டிய வட்டியானது வியாபாரத்திற்கு லாபத்தைக் குறிக்கிறது.

முதலாளிகளுக்கு ஏன் தனிச்சம்பளம் கொடுக்கப்படுகின்ற தென்பதைக் கவனிப்போம். இந்த சம்பளமானது பங்குக்காரர்கள் எல்லாருக்கும் கொடுக்கப்படமாட்டாது. முதலாளிகளில் சிலர் பணத்தை மட்டும் போட்டு விட்டு அதற்குள்ள வட்டியைப் பெற்றுக்கொண்டு வியாபாரத்துக்கும் தனக்கும் யாதொரு சம்பந்தமுமின்றி முதலாளி யென்றபெயரை மட்டும் வகித்து வியாபாரம் குன்றினுல் எங்கு தங்கள் பணம் போய்விடுமோ என்று அந்த ஒருக்கவலையுடன்தான் இருப்பார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு சம்பளம் கொடுக்கப்படமாட்டாது. ஆனல், வியாபாரத்திலேயே பழகி அதை செழிப்புறச் செய்யும் சாமர்த்தியம் வாய்ந்தவர்களாய் வியாபாரத்தின் முன்னேற்றத்தையே கருதி அதிலேயே மானேஜரென்றும், உதவி மானேஜ ரென்றும் டைரெக்டரென்றும், தத்தம் திறமைக்குத் தகுந் தாப்போல் வேலை செய்பவர்களும் முதலாளிகளாகப்பணம் போடுவார்களாயின், அத்தகைய பங்குக்காரர்களுக்கே சம்பளமும் அவர்கள் செய்யும் உதவிக்காகக் கொடுக்கப்படும். அவ்விதம் சம்பளங்கள் கொடுக்கப்படும் பொழுது, அவைகள் வியாபாரத்துக்கு நஷ்டமாதலின் சம்பளக்கணக்கு பற்று செய்யப்பட்டு முதலாளிகளின் பற்றுக் கணக்குகள் தனித்தனியாக வரவு செய்யப்படும். பணம் கொடுக்கப்படும் பொழுது, அவர்களின் ஷை பற்றுக்கணக்குகள் பற்றுசெய்யப்பட்டு, ரொக்கக் கணக்காவது பாங்குக் கணக்காவது வரவாகும்.

இப்பொழுது முதலாளிகளுக்குள் லாப நஷ்டத்தைப் பிரித்துக்கொள்ளும் விதத்தை கவனிப்போம். ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக இவ்வளவு என்று கொடுக்கப்படாதவரையில், லாப நஷ்டங்கள் அவ்வளவு பேர்களுக்கும் சம

மாக பிரிக்கப்பட வேண்டுமென்ற கருத்து. இந்த லாப நஷ்டத்தின் பாகம் முதலாளியின் பற்றுக்கணக்கில் பதிவு செய்யப்படுகிறது.

இனி கீழுள்ள விஷயங்களைப்பதிவு செய்து காண்பிப் போம்:— 1925. ஜன. 1. ராமன் என்பவன் ரூ. 4000-ம் கிருஷ்ணன் ரூ. 3500-ம் சேர்த்து "ராமகிருஷ்ணு அண்டு கம்பெனி" என்ற பெயரோடு கூட்டு வியாபாரம் செய்தார் கள். ஜன. 31-ல் ராமனால் வாங்கிக் கொள்ளப்பட்ட தொகை ரூ. 350. பிப்ரவரி 10-ல் ரூ. 250. ஷெ இரண்டு தேதி களிலும் கிருஷ்ணனால் பெற்றுக்கொள்ளப்பட்டது முறையே ரூ. 400-ம் ரூ. 350-ம். கணக்குகளை முடிக்கும் தேதியான மார். 31-ல் கிருஷ்ணனுக்குச் சேரவேண்டிய சம்பளம் ரூ. 300. மூன்று மாதங்களுக்கும் வியாபாரத்திலேற்பட்ட மிச்ச லாபம் ரூ. 1600.

இந்த மிச்சலாபம் இருவர்களுக்கும் பிரிக்கப்படவேண் டியகிரமம், ராமன் $\frac{3}{5}$ பாகமும் கிருஷ்ணன் $\frac{2}{5}$ பாகமும். அவர்களால் செலுத்தப்பட்ட முதல்தொகையின்மீதும் அவர் களால் வாங்கப்பட்ட பற்றுத் தொகையின்மீதும் வட்டி 4% விதிக்கப்படவேண்டும்.

ராமனும் கிருஷ்ணனும் கொண்டுவரப்பட்டதான மொத்தத்தொகை ரூ. 7500-ஐ நாம் பாங்குக்கு அனுப் பித்துவிட்டால், இவ்விதம் ஜர்னல் குறிப்பு எழுதப்படு கிறது:—

பாங்குக்கணக்கு—பற்று ரூ. 7500

ராமன் முதல் கணக்கால்		ரூ. 4000
கிருஷ்ணன்	,,	,, 3500

ராமனும் கிருஷ்ணனும் பெற்றுக்கொள்ளப்பட்ட தொகைகளுக்கு அந்தந்தத் தேதியில் அவர்களின் பற்றுக் கணக்கு பற்றாகும்.

ஜன. 31.	ராமன் பற்றுக் கணக்கு பற்று	ரூ.	350—0—0
	கிருஷ்ணன் பற்றுக்கணக்கு பற்று	ரூ.	400—0—0
	ரொக்கக் கணக்கால்	ரூ.	750—0—0
பிப். 10.	ராமன் பற்றுக்கணக்கு பற்று	ரூ.	250—0—0
	கிருஷ்ணன்பற்றுக் கணக்கு பற்று	ரூ.	350—0—0
	ரொக்கக்கணக்கால்	ரூ.	600—0—0

கிருஷ்ணனுக்கு சம்பளம் ரூ. 300 சேரவேண்டியதைக் காண்பிக்கும் பொழுது இவ்விதமாக ஜர்னல் குறிப்பு எழுதுகிறோம்:—

மார். 31.	சம்பளக்கணக்கு பற்று	ரூ.	300—0—0
	கிருஷ்ணன் பற்றுக்கணக்கால்	ரூ.	300—0—0

வியாபாரம் முடிவடையுங் காலத்து, முதல்தொகையின் மீதும் பற்றுத்தொகைகளின் மீதும் விதிக்கப்படுகின்ற வட்டிக்குக் கீழ்வருமாறு குறிப்புகள் செய்யப்படுகின்றன :—

மார். 31.	வட்டிக்கணக்கு பற்று	ரூ.	75—0—0
	ராமன் பற்றுக்கணக்கால்	ரூ.	40—0—0
	கிருஷ்ணன் பற்றுக்கணக்கால்	ரூ	35—0—0
	ராமன் பற்றுக் கணக்கு பற்று	ரூ.	3—11—7
	கிருஷ்ணன் பற்றுக்கணக்கு பற்று	ரூ.	4—9—9
	வட்டிக்கணக்கால்	ரூ	8—5—4

ஷை வட்டிகளும் கிருஷ்ணனுக்குச் சம்பளத் தொகையும் வியாபாரத்துக்கு லாப நஷ்டங்களைக் குறிக்கின்றனவாகையால் அவைகளையெல்லாம் சேர்த்துக்கொண்ட பிறகே மிச்சலாபம் கண்டு பிடிக்கப்படும். அம்மாதிரி கண்டு பிடிக்கப்பட்ட மிச்ச லாபமே முதலாளிகளால் பிரித்தற்குரியது. அதுவே மேலுள்ள உதாரணத்தில் ரூ. 1600.

மிச்சலாபத்தை ராமனுக்கும் கிருஷ்ணனுக்கும், $\frac{3}{5}$, $\frac{2}{5}$-பாகங்களாகப் பிரித்தால், கீழ்வரும் குறிப்பு செய்யப்படும்:-

மார். 31. லாப நஷ்டக்கணக்கு பற்று ரூ. 160—0—0
ராமன் பற்றுக்கணக்கால் ரூ. 960—0—0
கிருஷ்ணன் பற்றுக்கணக்கால் ,, 640—0—0

ஆகவே உதாரணத்தில் சம்பந்தப்படும் லெட்ஜர் கணக்குகளெல்லாம் இவ்விதம் எழுதப்படும் :—

பற்று ராமன் முதல் கணக்கு. வரவு

தேதி.		விபரம்.	ரூ.	அ.	பை.	தேதி.		விபரம்.	ரூ.	அ.	பை.
மார்ச்.	31	அதிக வரவால்	4396	4	5	ஜன.	1	பாங்குக் கணக்குக்கு	4000	0	0
						மார்ச்.	31	பற்றுக் கணக்குக்கு (மிச்சலாபம்)	396	4	5
									4396	4	5
			4396	4	5	எப்.	1	அதிக வரவுக்கு	4396	4	5

பற்று — கிருஷ்ணன் முதல் கணக்கு — வரவு

மார்ச்.	31	அதிக வரவால்	3720	6	3	ஜன.	1	பாங்குக் கணக்குக்கு	3500	0	0
						மார்ச்.	31	பற்றுக் கணக்குக்கு (மிச்சலாபம்)	220	6	3
			3720	6	3				3720	6	3
						ஏப்.	1	அதிக வரவுக்கு	3720	6	3

பற்று — ராமன் பற்றுக் கணக்கு — வரவு

ஜன.	31	ரொக்கக் கணக்கால்	350	0	0	மார்ச்.	31	வட்டிக் கணக்குக்கு	40	0	0
பிப்.	10	,, ,,	250	0	0	,,	,,	லாப நஷ்டக்கணக்குக்கு	960	0	0
மார்.	31	வட்டிக்கணக்கால்	3	11	7						
,,	,,	முதல் கணக்கால்	396	4	5						
			1000	0	0				1000	0	0

பற்று கிருஷ்ணன் பற்றுக் கணக்கு வரவு

ஜன.	31	ரொக்கக் கணக்கால்	400	0	0	மார்ச்.	31	சம்பளக் கணக்குக்கு	300	0	0
பிப்.	10	,, ,,	350	0	0	,,	,,	வட்டிக் கணக்குக்கு	35	0	0
மார்ச்.	31	வட்டிக் கணக்கால்	4	9	9	,,	,,	லாப நஷ்டக் கணக்குக்கு	640	0	0
,,	,,	முதல்கணக்கால்	220	6	3						
			975	0	0				975	0	0

பற்று வட்டிக் கணக்கு வரவு

மார்ச்.	31	ராமன் பற்றுக் கணக்கால்	40	0	0	மார்ச்.	31	ராமன் பற்றுக் கணக்குக்கு	3	11	7
,,	,,	கிருஷ்ணன் பற்றுக் கணக்கால்	35	0	0	,,	,,	கிருஷ்ணன் பற்றுக் கணக்குக்கு	4	9	9
						,,	,,	லாப நஷ்டக் கணக்துக்து	66	10	8
			75	0	0				75	0	0

தனித் தனி வியாபாரங்களுடைய இரண்டு முதலாளிகள் கூட்டு வியாபாரம் செய்ய ஆரம்பித்தால், ஒவ்வொருவரின் முதல் தொகை ரொக்கமாயிருக்காது. அவரவரின் வியாபாரத்தில் கடன்களைக் காட்டிலும் அதிகமுள்ள சொத்துகளே அவரவரின் முதலாகும். ஆகவே இவ்விரண்டு வியாபாரங்களும் சேருமானல் அவைகளின் சொத்துகளெல்லாம் பற்ருகி கடன்களெல்லாம் வரவாகி, ஒவ்வொரு வியாபாரத்திலும் நிற்கும் முதல் தொகை கூட்டு வியாபாரத்தில் ஒவ்வொரு முதலாளியின் முதல் கணக்கிற்கும் வரவு செய்யப்படும்

ஒருதரம் கணக்குகள் முடிந்து மறுபடியும் கூட்டு வியாபாரம் ஆரம்பமானால், அப்பொழுது சொத்துக்களும் கடன்களும் காண்பிக்கப்படும். ஒவ்வொரு பங்குக்காரரின் முதல் தொகையும் இன்னதென்று கொடுக்கப்படாமலிருந்தால், கடன்களுக்கும் சொத்துகளுக்கு முள்ள வித்தியாசத் தொகை சமமாக பங்குக்காரர்களுக்குள் பிரிக்கப்பட்டு அவரவரின் முதல் கணக்குக்கு வரவு செய்யப்படுமென்பதை அறியவேண்டும்.

இனி முதல் தொகைகளை பாலன்ஸ் ஷீட்டில் எப்படி குறிப்பிடுவதென்று எழுதுவோம். முதல்தொகையைமிச்சலாபம், வட்டி முதலானதோடு சேர்த்து ஒரேதொகையாக பாலன்ஸ் ஷீட்டின் கடன்பக்கத்தில் எழுதுவதற்கு பதிலாக, ஒவ்வொருவரின் ஆரம்பமுதல் தொகையைக் குறித்து அவருக்குள்ள மிச்சலாபத்தையும் வட்டியையும் தனித்தனியாக ஷை தொகையோடு சேர்த்து இவைகளின் கூடுதலிலிருந்து பற்றுத்தொகையையும் அதன் மீது வட்டியையும் கழித்து கடைசியாக முடிவுமுதல் தொகை இன்னதென்று காண்பிக்க வேண்டும். கூட்டுவியாபாரம் சம்பந்தமாக பாலன்ஸ்ஷீட்டின் ஓர் மாதிரி கீழே காண்பிக்கப்பட்டிருக்கிறது:—

ராமகிருஷ்ண அண்டு கம்பெனியாரின் மார்ச்சுமீ 31உயிலுள்ள பாக்கி ஜாப்தா.

கடன்கள்							சொத்துகள்						
கடன் பேற வேண்டியவர்கள்:—							பாங்கில் ரொக்கக் கையிருப்பு				3300	0	0
முத்துஸாமி அய்யர்	715	5	4				கடன் கொடுக்க வேண்டியவர்கள்:—						
ராமன் அண்டு கம்பெனி	700	0	0				மணி அண்டு கம்பெனி	450	0	0			
				1415	5	4	சுந்தரம் பிள்ளை	1710	0	0			
ராமன் முதல் கணக்கு											2160	0	0
ஜனவரி 1உயில்	4000	0	0				கையிருப்பு சரக்குகள்						
வட்டி கூடுதல்	40	0	0				மருந்துகள்	648	0	0			
மிச்ச லாபம்	960	0	0				எண்ணைகள்	325	0	0			
											9[illegible]3	0	0
	5000	0	0				ஆபீஸ் மரசாமான்கள், யந்திரம் முதலானவை.				3099	0	0
பற்றுத் தொகையும் வட்டியும் குறைவு	603	11	7										
				4396	4	5							
கிருஷ்ணன் முதல் கணக்கு													
ஜனவரி 1உயில்	3500	0	0										
வட்டி கூடுதல்	35	0	0										
மிச்ச லாபம்	640	0	0										
சம்பளம்	300	0	0										
	4475	0	0										
பற்றுத் தொகையும் வட்டியும் குறைவு	754	9	9										
				3720	6	3							
ஆகமொத்தம்...				9532	0	0	ஆகமொத்தம்...				9532	0	0

சிறுகால கூட்டுத் தொழில்:—சற்றுமுன் நாம் இரண்டோ அல்லது அதற்கு மேற்பட்டோ முதலாளிகள் ஒவ்வொருவரும் முதல் சேர்த்து நடத்தும் கூட்டுவியாபாரத்தைப்பற்றி எழுதினேம். ஆனால்இப்பொழுது சொல்லப்படும் வியாபாரத்தில் பங்குக்காரர்களெல்லாரும் முதல் போட்டிருக்க வேண்டிய அவசியமில்லை. வியாபாரத்திற்கு ஒவ்வொருவரின் திறமையை ஒட்டின உதவியே தேவை. மனிதர்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமான திறமை வாய்ந்தவராயிருப்பாரென்பது நிச்சயம். ஓர் தொழிலுக்கு நான்கு விதமான உதவி வேண்டுமாயிருந்தால் அவ்விஷயங்களில் சாமர்த்தியமுடைய நால்வர் சேர்ந்தால் அத்தொழில் சிறப்போடுவிருத்தியாகும் என்பது சொல்லாமலே அரியத்தக்கது. ஓர் குறிப்பிட்ட தொழிலை அதற்கேற்ற சாதனங்கள் கிடைக்கும் சமயத்தில் அத்தொழிலுக்கு வேண்டிய காரியங்களில் திறமைவாய்ந்தவர்கள் சிலர் சேர்ந்து தொழிலை நடத்தி அதனாலேற்படும் லாபநஷ்டத்தை தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டு பிறகு தொழிலை நிறுத்திவிடும் வியாபாரத்திற்கு சிறுகால கூட்டு வியாபாரம் (Joint Adventure a/c) என்று பெயர். இதில் பலபேர் சேர்ந்திருப்பதால் கூட்டுவியாபாரமாயும், தொழிலின் பிரயோஜனம் அடையப் பட்டபின் அது நிறுத்தப்படுதலால் வியாபாரம் கொஞ்சகாலத்துக்கே நடத்தப்படுவதின் பொருட்டு சிறுகால கூட்டு வியாபாரமாயும் சொல்லப்படுகிறது. முன்னம் சொல்லப்பட்ட கூட்டு வியாபாரம் முதலாளிகளுக்குள் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டு எப்பொழுதும் நிதானமாய் ஓர் மாறுதலுமில்லாமல் நடந்து வரும். இப்பொழுதுசொல்லப்படும் கூட்டுத்தொழிலோ, தகுந்த சமயம் வாய்க்கும்பொழுது அச்சமயத்திற் கேற்ற

தொழிலை அத்தொழிலில் சாமர்த்தியம் வாய்ந்தோர் ஆரம்பித்து கொஞ்சகாலத்திற்குள் லாபத்தைப் பங்கிட்டுக் கொண்டபின் நிறுத்திவிடுவார்கள்.

இவ்விதம் கூட்டுத்தொழில் நடத்தும்பொழுது ஒவ்வொரு கூட்டாளியும் மற்றவர்களுக்குத்தான் எவ்வளவு தொழின்முறையில் கொடுக்க வேண்டு மென்றும் அவர்களிடமிருந்து தனக்குக் கிடைக்கவேண்டிய தெவ்வளவென்றும் கூட்டுத்தொழிலிலேற்பட்ட லாபமெவ்வளவென்றும் அறியும்பொருட்டு தனித்தனிக்கணக்குகள் தத்தம் புத்தகங்களில்வைத்துக் கொள்வார்கள். சரக்குக்கொள்முதலையும் விற்பனையையும் குறிக்க ஒவ்வொரு பங்குக்காரரும் மற்றவரின் பெயரைக்குறித்து "இன்னாருடன் கூட்டுத்தொழில் கணக்கு" என்ற ஓர் அக்கவுண்டை ஏற்படுத்திக்கொள்வார். ஒவ்வொரு கூட்டாளியும் சரக்குகள் தன்னிடமே விற்பனைக்குவந்தது போல் பாவித்து கொள்முதல் தொகையை ஷை கணக்கில் பற்று செய்வார். இந்தச்சரக்குகளுக்காகச் செய்யப்படும் செலவுகளும் அதேகணக்கில் பற்று செய்யப்படும். சரக்குகள் விற்கப்பட்டவுடன் ஷை கூட்டுத்தொழில் கணக்கு விற்பனைத்தொகைக்கு வரவாகும். இக்கணக்கில் இரண்டுபக்கங்களின் கூடுதல்களுக்குமுள்ள வித்தியாசமே பங்குக்காரர்களுக்குச் சேரவேண்டிய லாபமாகும்.

கூட்டு வியாபாரமானது அதற்குக் காரணமாயிருக்கும் பங்குக்காரர்களுக்கு ஜவாப்தாரியாக ஆகிறதாகையால், பங்குக்காரர்களுக்கு தனித்தனிக் கணக்குகள் ஏற்படுத்தப் பட்டு பொதுவாக லாப நஷ்டம் தெரியும்படி கூட்டுத்தொழில் கணக்கும் ஏற்படுத்தப்படுகிறது. வியாபாரம் முடிவடையும்பொழுது லாபநஷ்டம் பங்கிடப்பட்டு, வரவேண்டிய தொகையிலி

ருந்து கொடுக்கவேண்டிய கடனும், கொடுக்கப்பட்டு வியாபாரம்தீர்ந்து போகிறது.

உதாரணமாக, கோபால பிள்ளை யென்பவரும் குமாரப்ப செட்டியார் என்பவரும் கூட்டாளிகளாக ஓர் வியாபாரம் ஆரம்பித்தார்களென்று வைத்துக் கொள்வோம். கோபால பிள்ளை அநேக பிரபலமான தேயிலை வியாபாரிகளை அறிந்தவராகையால் அவர்களிடமிருந்து மொத்தமாகக் குறைந்த விலைக்கு வாங்க திறமை வாய்ந்திருந்தாரென்றும், குமாரப்ப செட்டியார் தேயிலையின் குணுகுணங்களையும் அதைப்பற்றின விபரங்களையும் சாம்பிலோடு நன்ருக இதா வியாபாரிகளுக்கு விளக்கிக்காட்டி அவர்களிடமிருந்து தன் தேயிலைக்கு ஆர்டர்கள் பெறுவதில் சாமர்த்தியமுள்ளவரென்றும் எண்ணுவோம். கோபால பிள்ளை ரூ. 1125 பெறுமான தேயிலையை கூட்டுத் தொழிலுக்காக வாங்கி தான் ரூ. 800-ம் குமாரப்ப செட்டியாரிடமிருந்து ரூ. 325-ம் போட்டுத் தேயிலைக்காரர்களுக்குக் கொடுத்துவிட்டாரென்றும் வைத்துக்கொள்வோம்.

கூட்டுத் தொழிலானது இரண்டு பேர்களாலும் செய்யப்படுகிற ஓர் பொது வியாபாரம். ஆதலின் அதற்கு அன்னியஸ்தர்கள் போலவே அவ்விரண்டு பேர்களும் ஆகிறபடியால், அவர்கள் தொழிலுக்காகப் பணம் செலுத்தும்பொழுது அவர்கள் கணக்கு வரவாகியும் பணம் பெற்றுக் கொள்ளும்பொழுது பற்ருகியும் நிற்கும். ஷை உதாரணத்தில் கோபால பிள்ளையினிடமிருந்தும் குமாரப்ப செட்டியாரிடமிருந்தும் வியாபாரமே ரொக்கம் பெற்றுக்கொள்வதாக நினைத்து பிறகு வியாபாரம் தேயிலை வாங்கி ரொக்கம் கொடுத்துவிடுவதாகவும் எண்ணவேண்டும். வியாபாரம்

வைகள் அடுத்த திகாரத்தில் விஸ்தாரமாய் சொல்லப்பட்டிருக்கின்றன.

விற்பனை ரொக்கம் ரூ. 1750 குமரப்ப செட்டியாரிடத்தில் தங்கியிருக்கிறதாகையால், அந்த ரொக்கத்தை கூட்டுத் தொழிலுக்குக் காரியஸ்தர்களாகிய கோபால பிள்ளையும் குமரப்ப செட்டியாருமே உபயோகிக்க வேண்டுமாதலின், கோபாலபிள்ளை தனக்கு பணத்தேவையினால் முதன் முதலில் தன்னால் தொழிலுக்கு போடப்பட்ட தொகையிலிருந்து தன் தொகையை எக்காலத்தும் எடுத்துக்கொள்ள உரிமையிருக்கிறபடியால், தற்சமயம் ரூ. 1000 பெற்றுக்கொள்ள உத்தேசித்து குமரப்ப செட்டியார் மீது ஓர் பில்-ஆப்-எக்ஸ்சேஞ்சு எழுதப்படவே, அதுவும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஷை பில் வியாபாரத்தின் மூலமாகவே குமரப்ப செட்டியாருக்குக்கொடுக்கப் படுகிற தென்றும், அதை ஒப்புக்கொண்டவுடன் வியாபாரமே ஒப்புக்கொண்ட பில்லை வாங்கி வைத்துக்கொள்ளுகிற தென்றும் பாவித்து, பின்னால் பணம் பெறவேண்டியதாதலால் பில்கணக்கைப்பற்று செய்து, எப்பொழுது குமரப்ப செட்டியார் பில்லை ஒப்புக்கொண்டு விட்டாரோ அவர் பணம் கொடுத்து விட்டதாக எண்ணப்பட்டு அவர் கணக்கும் வரவு செய்யப்பட்டுவிடுகிறது.

ஜன. 10. பணம் வரவேண்டிய பில்கணக்கு பற்று ரூ. 1000
குமரப்ப செட்டியாரால் ரூ 1000.

இந்த பில்லுக்குப் பணம் வாங்கினவுடன் அப்படியே அத்தொகையைகோபாலபிள்ளைக்குக்கொடுத்துவிட்டு பில்லை பணம் பெற்றுக்கொண்டதற் கத்தாக்ஷியாக குமரப்பசெட்டியாரிடம் கொடுத்துவிடப்படுகிறது. ஆகவே கோபாலபிள்ளை

யைப்பற்றுசெய்து பணம்வரவேண்டிய பில் கணக்கைவரவு செய்து விடவேண்டும்.

ஜன. 31. கோபால பிள்ளை பற்று ரூ. 1000
பணம்வரவேண்டிய பில் கணக்கால் ரூ. 1000

பிறகு பாக்கி தேயிலையும் ரூ. 1450-க்கு கோவிந்த முதலியார் என்பவருக்குக்கடனுக்கு குமரப்ப செட்டியாரால் விற்கப்பட்டதென்று வைத்துக்கொள்வோம். இதற்கு ஜர்னல் குறிப்பு கீழ்க்கண்டவிதம்:—

பிப். 5. கோவிந்த முதலியார் பற்று ரூ. 1450
கூட்டுத்தொழில் கணக்கால் ரூ. 1450

ஷை தொழிலின் பொருட்டு ரூ. 115 சில்லரைச் செலவாயிற்றென்று எடுத்துக்கொள்வோம். இச் செலவு தொழிலால் கிடைக்கக்கூடிய லாபத்தைக்குறைக்கிற அம்சமாதலால், இதை கூட்டுத்தொழில் கணக்கில் பற்றில் எழுதி விடலாம். தொழிலின் ரொக்கம் கூட்டாளிகளின் வசமே இருக்கிறதாதலால், யார் ஷை செலவிற்காகப்பணம் கொடுக்கிறாரோ அவர்கணக்கு வரவாக வேண்டும்.

பிப். 15. கூட்டுத்தொழில் கணக்கு பற்று ரூ. 115
குமரப்ப செட்டியாரால் ரூ. 115

தேயிலை யெல்லாம் விற்கப்பட்டபடியாலும் எல்லா செலவுகளும் தீர்ந்து விட்டதாகையாலும், இனிலாப நஷ்டத்தைக் கண்டு பிடித்து இருவரும் தத்தம் பாகத்தைப் பெற்றுக்கொள்வதே மறுவேலை. ஆதலின் ஷை தொழில் சம்பந்தமான அக்கவுண்டுகளை இங்கு குறிப்போம். லாபநஷ்டத்தை இருவரும் சமமாகப் பிரித்துக் கொள்ளுகிறார்களென்று வைத்துக் கொள்வோம்.

பற்று. கூட்டுத் தொழில் கணக்கு வரவு.

ஜன.	1	ரொக்கக் கணக்கால் (தேயிலை கொள் முதல்)	1125	0	0	ஜன.	8	குமரப்ப செட்டியாருக்கு (விற்று முதல்)	1750	0	0
„	5	கோபால் பிள்ளையால் (சுத்தம் செய்ய செலவு)	155	8	0	பிப்.	5	கோவிந்த முதலியாருக்கு (விற்று முதல்)	1450	0	0
„	7	குமரப்ப செட்டியாரால் (சில்லரைச் செலவு)	135	0	0						
பிப்.	15	குமரப்ப செட்டியாரால் (சில்லரைச் செலவு)	115	0	0						
„	„	கோபால பிள்ளையால் (மிச்ச லாபம்)	834	12	0						
„	„	குமரப்ப செட்டியாரால் (மிச்சலாபம்)	834	12	0						
		ஆகமொத்தம்...	3200	0	0			ஆகமொத்தம்...	3200	0	0

பற்று — கோபால பிள்ளை — வரவு

ஜன.	31	பணம் வரவேண்டிய பில் சணக்கால்	1000	0	0	ஜன.	1	ரொக்கக் கணக்குக்கு	800	0	0
பிப்.	15	அதிகவரவால்	790	4	0	,,	5	கூட்டுத்தொழில் கணக்குக்கு	155	8	0
						பிப்.	15	கூட்டுத்தொழில் கணக்குக்கு (மிச்சலாபம்)	834	12	0
			1790	4	0				1790	4	0
						பிப்.	16	வரவு பாக்கிக்கு	90	4	0

பற்று — குமரப்ப செட்டியார் — வரவு

ஜன.	8	கூட்டுத்தொழில் கணக்கால்	1750	0	0	ஜன.	1	ரொக்கக் கணக்குக்கு	325	0	0
பிப்.	15	அதிக வரவால்	659	12	0	,,	7	கூட்டுத்தொழில் கணக்குக்கு	135	0	0
						,,	10	பணம் வரவேண்டிய பில் கணக்குக்கு	1000	0	0
						பிப்.	15	கூட்டுத்தொழில் கணக்குக்கு	115	0	0
						,,	,,	கூட்டுத்தொழில் கணக்குக்கு (மிச்சலாபம்)	834	12	0
			2409	12	0				2409	12	0
						பிப்.	16	வரவு பாக்கிக்கு	659	12	0

மேலே காட்டியிருக்கிறபடி லாபத்தைப் பிரித்துக் கொடுத்த பின்னும் கோபால் பிள்ளைக்கும் குமரப்ப செட்டியாருக்கும் கொடுக்கவேண்டிய பாக்கிகள் இருக்கின்றன. அவர்களிருவருக்கும் கொடுக்க வேண்டிய தொகைகள் ரூ. 790—4—0-ம் ரூ. 659—12—0-ம் சேர்ந்து மொத்தத் தொகை ரூ 1450 ஆகிறது. இதை கூட்டு வியாபாரம் கொடுக்க வேண்டும். ஆகையால், இதற்கு வேண்டிய சொத்தும் அதனிடத்தில் இருக்கத்தான் வேண்டும். அதுதான் தேயிலை விற்று முதலுக்காக கோவிந்த முதலியாரால் கொடுக்கப் பட வேண்டிய ரூ. 1450. இந்தத்தொகை கூட்டுத்தொழில் வியாபாரத்தின் பொருட்டு குமரப்ப செட்டியாரே வசூல் செய்ய வேண்டுமாதலால், அவரே அதற்கு ஜவாப்தாரியுமாகிறார். ஆதலின் அவர் கணக்கைப்பும் ஷ டி தொகைக்குப் பற்று செய்து விடலாம். அப்பொழுது அவர்கணக்கில் அதிகப் பற்றாகி நிற்கும் ரூ 790—4—0 சொத்தாகிறது. இதைக் கொண்டு கோபால பிள்ளை கணக்கில் அதிக வரவு ரூ. 790—4—0 ஆகிய கடன் கொடுக்கப்படவேண்டும். இவ்விதம் அவரவர் தொகையைப்பெற்றுக் கொண்டவுடன், கூட்டுத்தொழில் வியாபாரம் முடிவடைகிறது.

16-ம் அதிகாரம்.

தரகுவிற்பனைக் கணக்குகள். (Consignment Accounts)

ஒருவியாபாரத்தின் விற்பனை அதிகப்பட வேண்டுமானால், ஒரே ஒரு முறையை அனுசரிப்பது ஒழுங்கல்ல. வியா

பாரியினுடைய சரக்குகளை விற்பனைசெய்வதற்குப் பலவழி களுண்டு. தன் வியாபாரச் சாலையின் கீர்த்தி வெளியூர்களில் பரவவேண்டுமானால் அதற்குப் பத்திரிகைகளே தக்கதுறை. இப்பத்திரிகைகளில் கூரிய புத்தியோடு விளம்பரம் செய் தலே ஓர் தொழிலை முதன்மையாக்க முக்கியசாதனம். உள்ளூர் வியாபாரங்களைக் காட்டிலும் முதன்மையடைய விரும்பினால், உள்ளூரிலேயே துண்டுப்பிரசுரங்கள், பெரிய எழுத்தில் தடித்தகாகிதத்தில் அச்சிட்டு சுவற்றில் ஒட்டும் படியான காகிதப்பிரசுரங்கள், விசித்திர வேலைப்பாடுக ளுடன் வண்டிகள் மூலமாய் பிரசுரம், ஆகிய இவைகளே வேண்டிய சாதனங்கள். வெளியூர்களிலும் ஷெடி சாதனங் களை செய்விக்கலாம். இவ்வளவு ஏற்பாடுகளினால் விற்பனை விருத்தியானாலுங்கூட சிலர் சரக்கின் மாதிரிகளைப்பார்த்து அவைகளுக்குத் தகுந்தாப்போல் ஆர்டர் கொடுக்க விருப்ப முற்றிருப்பார்கள். சிலர் விளம்பரங்களால் வசியப்படமாட் டார். ஏனெனில் ஒருமுறை இருமுறை போலிவிளம்பரங் களைப்பார்த்து சரக்குகளை வரவழைத்து ஏமார்ந்த காரணத் தால் விளம்பரமே மோசம் என்ற கருத்தைக் கொண்டிருக்க லாம். அப்படி விளம்பரங்களின் மீது நம்பிக்கைகொள்ளா திருக்கும் சிலரையும் வசியப்படுத்துவது வியாபாரத்தின் குணமல்லவா? வியாபாரத்தால் கவர்ச்சியடையாத அவர்கள் பேச்சினாலேயே திருப்பப்படவேண்டும். அதனால் பல ஆர் டர்கள் கிடைக்கும். இத்தகைய காரியத்திற்காக ஆங்காங்கு வெளியூர்களில் வியாபாரத்தைப் பற்றிப்புகழ்ந்து பேசி ஆர் டர்களை வாங்கித்தருவதற்கு திறமைவாய்ந்த ஏஜெண்டுகள் அதாவது பிரதிநிதிகள் அல்லது காரியஸ்தர்கள் இருக்க வேண்டுவதவசியம்.

ஒரேஒரு நிதானமான விலையோடுதான் வியாபாரச் சாக்குகளை விற்கவேண்டுமென்ற கொள்கை வைத்துக் கொண்டால், அதனுல் ஒருகாலத்தில் லாபமேற்பட்டால் மற்ருெரு சமயத்தில் நஷ்டமேற்படக்காரணமுண்டு. இக் கொள்கையுடையோருக்கு வெளியில் எங்கும் சரக்குகளின் விலை ஏறியிருந்தால் ஆர்டர்கள் அதிகம் வரும். மார்க்கெட் விலை, அதாவது வெளியில் கிடைக்கும் விலை குறைவாயிருந்தால் ஆர்டர்கள் குறைந்துவிடும். ஆதலால் எப்பொழுதும் ஒரேகொள்கையைப் பின்பற்ற வியாபாரத்திலிடமில்லை. வியாபாரத்திற்கழகு சரக்குகளைத் தங்கவைக்காமலே நஷ்டம்வாராதபடி விற்று விடுவதேயாம். ஒரே இடத்தில் வியாபாரம் செய்வதால் மார்க்கெட்டின் நிலைமை சரிவரத்தெரியாது. ஆகவே வெளியில் நிலவும்விலையைத் தெரிந்து கொள்ளும்படிக்கும், அவ்விதம் மார்க்கெட்டின் நிலைமையை அறிந்து தத்தம் புத்திக்கு உசிதமானபடி லாபத்தோடு விற்கும்படிக்கும் உண்மையுள்ள ஏஜெண்டுகள் நியமிக்கப் படுவது அவசியம். அத்தகைய ஏஜெண்டுகளுக்குக் கொடுக்கப்படும் கமிஷனே அதாவது தரகுத்தொகையே அவர்களால் செய்யப்படும் உதவிக்குக் கூலி.

ஏஜெண்டுகளால் செய்யப்படும் விற்பனையில் இரு விதமுண்டு. ஆங்காங்கே ஆசாமிகளிடமிருந்து ஆர்டர்களைப் பெற்று அவைகளை தங்கள் தலைமை வியாபாரச் சாலைக்கனுப்பி நேராக அவ்விடமிருந்தே சரக்குகளை அனுப்பிவிப்பது ஒருமுறை. இதில் ஏஜெண்டுகள் கமிஷனுக்கு மட்டும் பாத்தியத்தை உடையவர்களாகிருர்கள். இவ்விதம் செய்வதால் சரக்குகளை அனுப்புவதில் காலதாமதம் ஏற்படுவதோடு அனுவசியச் செலவுகளும் உண்டாகின்றன. ஆத

லின் மற்றொரு முறை என்னவெனில், ஏஜெண்டுக்கு முதன் முதலில் வேண்டிய சரக்குகளை அனுப்பித்து அவைகளை அவனிடம் ஒப்பித்து விடுவது. ஏஜெண்டும் ஆர்டர்கள் பெறும்பொழுது உடனுக்குடனே சரக்குகளைக் கொடுத்துவிட்டுப் பணம்பெற்றுக் கொண்டு விடலாம். இம் முறையிலும் ஏஜெண்டுக்கு அனுப்பப்பட்ட சரக்குகள் அவனே வாங்கிக் கொள்பவையல்லவாதலாலும், தனக்குக் கமிஷன் கொடுக்கும் காரணத்தால் அவைகளை விற்பனை செய்யமட்டும் உடன்பட்டு, விற்கப்படாத சரக்குகளை எக் காலத்திலும் திருப்பிவிட பாத்தியதை உள்ளவனுகையாலும், சரக்குகள் மொத்தமாக அனுப்பித்தால் உடனே அவன் கணக்கைப்பற்று செய்தல் கூடாது. ஆனல் எப்பொழுது விற்பனை செய்யப் பட்டதோ உடனே விற்பனை ரொக்கத்திற்காக அவன் கணக்கு பற்று செய்யப் பட வேண்டும்.

ஏஜெண்டு மார்க்கெட்டின் நிலைமைக்குத் தகுந்தவாறு லாபத்தை வைத்து சரக்குகளை விற்கக் கடமைப் பட்டவனே தவிர, அதன் பொருட்டு வியாபாரிக்கு இஷ்டமில்லாத விலையில் விற்கக்கூடாது. ஆகவே சரக்குகளை ஏஜெண்டுக்குஅனுப்பும்பொழுது, வியாபாரியானவன் சரக்குகளை குறைந்தவிலை இவ்வளவிற்குத்தான் விற்கலாம் என்று காட்டும் படியாக ஓர் குறிப்புப் பட்டியலும் (Pro-forma or Consignment Invoice) அனுப்புவான்.

இப்பட்டியலில் ஏஜெண்டுக்கு அனுப்பப்படும் சரக்குகளின் மீது செய்யப்படுகின்ற செலவுகளும் சேர்க்கப்படும். இவைகளையும் சேர்த்து மொத்த விலையின்மீது லாபம் வைத்தே ஏஜெண்டு விற்கவேண்டும்.

வெளி நாட்டிலுள்ள ஓர் எஜெண்டுக்கு சாக்குகள் அனுப்பினல், ஷெ பட்டியலையும் அதனுடன் அடக்கம் செய்தனுப்பப்படுகின்ற பில்- ஆப்- லேடிங்கையும் காண்பித்த பிறகே, எஜெண்டு சரக்குகளை பெற்றுக்கொள்ள முடியும்.

மேலே சொல்லப்பட்ட குறிப்புப்பட்டியல் சாதாரண பட்டியலைப் போலவே எழுதப்படுகின்றது.

எஜெண்டினல் விற்கப்படுகின்ற சரக்குகளின் மீது எஜெண்டினுடைய கமிஷனையும் நீக்கி எவ்வளவு லாபமேற்பட்டிருக்கிற தென்பதைக் கண்டு கொள்ளவே வியாபாரியால் அதற்காகத் தனியாக கணக்குகள் வைக்கப்படுகின்றனவாதலின், அவைகளின் விதம் கீழே குறிக்கப் பட்டிருக்கிறது.

இந்தக் கமிஷன்விற்பனைக் கணக்குகளில் இரு பகுதிகளுண்டு. வியாபாரியானவன் தன் எஜென்டினிடம் எவ்வளவு சரக்குகள் தங்கியிருக்கின்றன வென்றும் எவ்வளவு தொகைக்கு அவன் ஜவாப்தாரி யென்றும் தெரிந்து கொள்ள எஜெண்டின் மீது ஒரு கணக்கும், கமிஷன் விற்பனையில் தனக்கெவ்வளவு லாபமென்பது தெரிந்துகொள்ள கமிஷன் விற்பனைக் கணக்கொன்றும் (Consignment Outwards) ஏற்படுத்தப்படும். இது ஓர் பகுதியாக, மற்றோர் பகுதி (Cousignmet Inwards) எஜெண்டினல் கணக்குகள் எழுதப்படுவது. எஜெண்டு தன் புத்தகத்தில் கணக்குகளை எழுதும் பொழுது விற்பனையால் கிடைக்கும் லாபத்தில் அவனுக்கு யாதொரு சம்பந்தமு மில்லாததால் விற்பனைக் கணக்கென்று ஓர் கணக்கும் ஏற்படாது. ஆனல் தனக்கு வியாபாரியால் எவ்வளவு கமிஷன் கொடுக்கப்படவேண்டுமென்றும் தான் அவனுக்கு எவ்வளவு தொகைக்கு பாத்தி

யப்பட்டவன் என்று தெரிந்து கொள்வதற்கும் வியாபாரியின் மீது ஓர் கணக்கு மட்டும் தன் புத்தகத்தில் ஏஜெண்டு வைத்துக்கொள்கிறான்.

இப்பொழுது முதல்பகுதியை கவனிப்போம்.

உதாரணமாக 1910 ஜன. 12. மதறாஸ், குருநாதன் அண்டு கம்பெனியார், புஸ்தகவியாபாரிகள், ரூ. 2500—0—0 பெறுமான புஸ்தகங்களை மதுரை, சிங்காரம் அண்டு சன்ஸ் அவர்களுக்கு தங்கள் பொருட்டு விற்பனை செய்யும்படி அனுப்பி, குறிப்புப்பட்டியலும் அனுப்பி வைத்தார்கள்.

ஜன. 1. ஷை புஸ்தகங்களை மதுரைக்கனுப்ப ரயில் செலவு முதலியவை ரூ. 45—0—0

,, 10. புஸ்தகங்களெல்லாம் விற்கப்பட்டு விடும் என்ற நம்பிக்கையால் சிங்காரம் அண்டு சன்ஸ் அவர்களின் மீது ரூ. 2000-க்கு பில் எழுதி ஒப்புக்கொள்ளப்பட்டது.

,, 31. மதுரை, சிங்காரம் அண்டு சன்ஸ் அவர்கள் தாங்கள் விற்பனை செய்த வரையில் விற்பனை விபரக் குறிப்பு (Account sales) மதராஸுக்கு அனுப்பித்தார்கள். ஷை குறிப்பில் காணப்பட்ட தொகை ரூ 2655—0—0. விற்கப்படாமல் தங்கின புஸ்தகங்களின் பெறுமானம் ரூ. 300—0—0.

விற்பனைக்கு சரக்குகள் அனுப்பப்பட்டால், வியாபாரியினுடைய மொத்த சரக்கில் குறைவு ஏற்படுகிறது. ஆதலின் சரக்குக் கணக்கை வரவு செய்யவேண்டும். அல்லது கமிஷன் விற்பனைக்கு மாத்திரம் மற்றவரிட மிருந்து சரக்குகள் வாங்கப்பட்டு அனுப்பப்பட்டால் ரொக்கத்திற்கு வாங்

யிருந்தால் ரொக்கக் கணக்கையும் கடனுக்கு வாங்கியிருந்தால் கடன் கொடுத்தவர் கணக்கையும் வரவு செய்ய வேண்டும். எப்பொழுது மொத்தச் சரக்குகள் குறைகின்றனவோ, குறைந்த சரக்குகள் கமிஷன் விற்பனைக்காக வந்து சேருகின்றன. ஆகவே சரக்குக் கணக்கிற்குச் சமானமான "கமிஷன் விற்பனைக் கணக்கு" என்ற ஓர் கணக்கு ஏற்படுத்தப் பட்டு பற்று செய்யப்பட வேண்டும்.

அநேக ஏஜெண்டுகளுக்கு கமிஷன் விற்பனையின் பொருட்டு சரக்குகள் அனுப்பப் பட்டிருக்கலாம். அப்பொழுது ஒவ்வொருவருக்கும் தனித்தனி கமிஷன் விற்பனைக்கணக்குகள் ஏற்படுத்த வேண்டும். ஆகவே ஓர் கணக்கு இன்னாரைக்குறிக்கிறது என்று காண்பிக்கும் பொருட்டு, கணக்கின் தலைப்பில் ஏஜெண்டின் பெயரையும் சேர்த்து "மதுரை, சிங்காரம் அண்டு சன்ஸ், கமிஷன் விற்பனைக்கணக்கு" (Consignment to Singaram & Sons) என்று குறிக்கவேண்டும்.

ஆதலால் கமிஷன் விற்பனைக்கணக்கு இம்மாதிரி பற்று செய்யப்படவேண்டும் :—

1910. ஜன. 1. மதுரை சிங்காரம் அண்டு சன்ஸ்
கமிஷன் விற்பனைக் கணக்கு பற்று ரூ. 2500
புத்தகக் கணக்கால் : ரூ. 2500

பின்னர் ஷெ விற்பனையின் பொருட்டு செய்யப்படுகின்ற செலவுகளும், இந்த விற்பனையால் ஏற்படும் லாபத்தைக் குறைக்கின்றன வாகையால், ஷெ விற்பனைக் கணக்கிலேயே பற்று செய்யப்படவேண்டும் :—

ஆதலால் கீழ்வரும் ஜர்னல் குறிப்பு செலவின் பொருட்டு ஏற்படும் :—

ஜன. 1. சிங்காரம் அண்டுசன்ஸ்
கமிஷன் விற்பனைக்கணக்கு பற்று ரூ. 45—0—0
ரொக்கக்கணக்கால் ரூ. 45—0—0
(ரயில் செலவு முதலியவை)

மேலே காட்டிய இரண்டு பதிவுகளும் ஒரே தேதியில் இருக்கின்றன வாகையால், அவைகளைச் சேர்த்தெழுதுவதே நலம்.

பிறகு சிங்காரம் அண்டு சன்ஸ் மீது பில் எழுதப் பட்டு அது ஒப்புக்கொள்ளப் படுகிறதாகையாலும் சிங்காரம் அண்டு சன்ஸ் அவர்களிட மிருந்து விற்பனை விபரக்குறிப்பு வரும் வரையில் விற்பனையைப் பற்றின விபரமே குருநாதன் அண்டு கம்பெனிக்குத் தெரியாததால் பில்லின் தொகையை விற்பனைக் கணக்கின் வரவு பக்கத்தில் போடுவது தகுதியாகாது. ஆதலால் சிங்காரம் அண்டு சன்ஸ் அவர்களையே வரவு செய்தல் வேண்டும். பிறகு அதேபில்லை நமது பாங்கில் டிஸ்கவுண்டு செய்து கொண்டோ மென்று வைத்துக் கொள்வோம். டிஸ்கவுண்டு கொடுத்தது ரூ 32. இவைகளுக்கு கீழுள்ள ஜர்னல் குறிப்புகள் ஏற்படும் :—

ஜன. 10. பணம் வரவேண்டிய பில்கணக்கு பற்று ரூ. 2000
சிங்காரம் அண்டு சன்ஸ் அவர்களால் ரூ 2000

,, பாங்குக் கணக்கு பற்று ரூ. 1965—0—0
டிஸ்கவுண்டு கணக்கு பற்று ரூ. 35—0—0
பணம் வரவேண்டிய பில் கணக்கால் ரூ. 2000

இதன் பின்னர் சிங்காரம் அண்டு சன்ஸ் என்பவர்கள் தங்களால் விற்கப்பட்டவைகளுக்கு ஸ்டேட் மெண்டு அல்லது கமிஷன் விற்பனை விபரக்குறிப்பு அனுப்புகிறார்கள். இக்குறிப்புக்கே ஆங்கிலத்தில் அக்கவுண்டு சேல்ஸ் (Account Sales) என்று பெயர். இக்குறிப்பில் யாது காண்பிக்கப்படுமென்றால், எஜெண்டால் விற்கப்பட்டவகையில், எவ்வளவு தொகை அவனால் வியாபாரிக்குச் சேரவேண்டுமென்பதே. ஆதலால் இக்குறிப்பில், எஜெண்டால் ஷெ வியாபாரத்தின் பொருட்டு ஏற்பட்ட செலவுகளையும் முன் பணமாக ஏதாவது கொடுக்கப் பட்டிருந்தால் அத்தொகையையும் விற்பனைத் தொகையின் மீது தனக்குச் சேரவேண்டிய கமிஷனையும், விற்பனை மொத்தத் தொகையிலிருந்து கழித்து எஜெண்டானவன் ஷெ குறிப்பை வியாபாரிக்கு அனுப்புவான். இக்குறிப்பில், விற்கப்படாமல் கையில் தங்கியிருக்கும் சரக்குகளின் பெறுமானத்தொகையும் காண்பிக்கப்படும்.

ஓர் அக்கவுண்டு சேல்ஸ் கீழ்வருமாறு காணப்படும்:—

கமிஷன் விற்பனைக்காக மதறாஸ், குருநாதன் அண்டு கம்பெனியாரிடமிருந்து 6—1—1910-ல் ரயில்வே கூட்ஸ் மூலமாய் பெற்றுக்கொள்ளப்பட்ட புஸ்தகங்களுக்கு கமிஷன் விற்பனைவிபரக் குறிப்பு. (Account Sales).

1910								
ஜன.	8	புஸ்தகங்களின் விற்பனை	1200	0	0			
,,	12	,, ,,	965	0	0			
,,	25	,, ,,	835	0	0			
						3000	0	0
		செலவுகள்.						
ஜன.	6	வண்டி வாடகைச் செலவு	25	0	0			
,,	9	பெட்டிச்செலவு, கூலி முதலியன	20	0	0			
,,	28	மொத்த விற்பனையின் மீது 100-க்கு 10-வீதம் கமிஷன்	300	0	0			
						345	0	0
		போக பாக்கி ரூ.				2655	0	0

கைவசம் பாக்கியுள்ள
சரக்குகளின் தொகை ரூ. 300—0—0

ஜன. 15-ல் ரூ. 2000-க்கு பில் ஒப்புக்கொள்ளப்பட்டது.

இப்படிக்கு,
(கையொப்பம்)
மானேஜர்,
சிங்காரம் அண்டு சன்ஸ்.

மதுரை,
1910 ஜனவரி 28உ

மேலே குறிப்பிட்ட விபரக்குறிப்பில் ரூ. 3000—0—0 மொத்த விற்பனையாகிறது. இத்தொகைக்கு ஏஜெண்டு வியாபாரிக்கு உத்திரவாதமாகிறான். ஆனால் ஏஜெண்டால் செய்யப்பட்ட செலவுகள் வியாபாரியின் பொருட்டே யாகையால், அச்செலவுத்தொகையையும் தனக்கு வியாபாரியினால் சேரவேண்டிய கமிஷனையும் மொத்தத் தொகையிலிருந்து கழித்துக் கொண்டு விடுகிறான். ஆகவே பாக்கித் தொகைக்கு அவன் உத்திர வாதமாகிறான்.

இக்குறிப்பை குருநாதன் அண்டு கம்பெனியார் பெற்றுக் கொண்டவுடன், ஏஜெண்டால் செய்யப்பட்ட செலவுகளுக்கு விற்பனைக் கணக்கைப்பற்று செய்து ஏஜெண்டு கணக்கை வரவு செய்வார்கள். அவனுடைய கமிஷனுக்கும், ஷடி விற்பனைக்கணக்கின்லாபம் பாதிக்கப்படுகிறதாகையால், அக்கணக்கையே பற்று செய்து ஏஜெண்டு கணக்கை வரவு செய்யவேண்டும். மொத்த விற்பனைத்தொகைக்கு, விற்பனைக்கணக்கை வரவு செய்து ஏஜெண்டைப் பற்று செய்தல் வேண்டும். பாக்கிக் கையிருப்பையும் கமிஷன் விற்பனைக் கணக்கில் வரவு வைத்து, இந்த கையிருப்பு சரக்குகள் விற்

கப்படாததால் முன் போலவே மொத்தச் சரக்குகளில் போய்ச் சேர்ந்து விடுமாதலின், சரக்குக் கணக்கைப் பற்று செய்தல் வேண்டும்.

ஆனால் மேலே சொல்லிய பிரகாரம் செய்வது உசிதமல்ல. அதாவது மொத்த விற்பனைக்கு கமிஷன் விற்பனைக் கணக்கை வரவு செய்து பிறகு அதை ஏஜெண்டினால் செய்யப்படும் செலவுகளுக்கும் அவனுக்குள்ள கமிஷனுக்கும் பற்று செய்வதற்கு பதிலாக, ஷை செலவுகளையும் கமிஷனையும் நீக்கி மிச்சத்தொகையை மட்டும் விற்பனைக்கணக்கின் வரவில் எழுதினால் போதும்.

ஆகவே அக்கவுண்டு சேல்ஸ் சம்பந்தமாக, கீழ்வரும் ஜர்னல் குறிப்பு ஏற்படும்:—

ஜன. 31. சிங்காரம் அண்டு சன்ஸ் பற்று ரூ. 2655
கமிஷன் விற்பனைக்கணக்கால் ரூ. 2655
(விற்று முதல் தொகை)

,, சரக்குக்கணக்கு பற்று ரூ. 300—0—0
கமிஷன் விற்பனைக்கணக்கால் ரூ. 300—0—0
(பாக்கிக்கையிருப்புத் தொகை)

இப்பொழுது கமிஷன் விற்பனை சம்பந்தமான லெட்ஜர் கணக்குகளை எழுதுவோம்:—

தரகு விற்பனைக் கணக்கு.

பற்று | வரவு

			ரூ.	அ.	பை.				ரூ.	அ.	பை.
1910 ஜன.	1	புஸ்தகக் கணக்கால்	2500	0	0	1910 ஜன.	31	சிங்காரம் அண்டு சன்ஸ் அவர்களுக்கு (விற்றுமுதல்)	2655	0	0
	,,	ரொக்கக் கணக்கால் (ரயில் செலவு)	45	0	0	,,	,,	புஸ்தகக் கணக்குக்கு (கையிருப்பு)	300	0	0
,,	,,	லாபநஷ்டக் கணக்கால் (லாபம்)	410	0	0						
			2955	0	0				2955	0	0

இக்கணக்கில் காணப்பட்ட லாபம் ரூ. 410 இதிலிருந்து நஷ்டத்தைக் காட்டக் கூடிய மற்ற அம்சங்களைக் கழித்து லாப நஷ்டக்கணக்கின் மூலமாய் மிச்சலாபம் அறியப் படுகிறது.

இப்பொழுது கன்ஸைனியாகிய சிங்காரம் அண்டு சன்ஸ் அவர்களின் லெட்ஜர் கணக்கை எழுதுவோம்:—

மதுரை, சிங்காரம் அண்டு சன்ஸ்.

பற்று | வரவு

			ரூ.	அ.	பை.				ரூ.	அ.	பை.
1910 ஜன.	31	கமிஷன் விற்பனைக் கணக்கால் (விற்று முதல்)	2655	0	0	1910 ஜன.	10	பணம் வரவேண்டிய பில் கணக்குக்கு	2000	0	0
						,,	31	அதிகப் பற்றுக்கு	655	0	0
			2655	0	0				2655	0	0
பிப்.	1	பற்றுபாக்கியால்	655	0	0						

ஆகவே கமிஷன்விற்பனை சம்பந்தமாக சிங்காரம் அண்டு சன்ஸ் அவர்களால் வரவேண்டிய தொகை ரூ. 655. இது ஓர் சொத்தாகையால் பாலன்ஸ் ஷீட்டின் வலதுபக்கத்துக்குக் கொண்டு போகப்படும். இவ்வளவே கமிஷன் விற்பனை சம்பந்தமாக வியாபாரிக்குத் தேவையான கணக்குகள்.

ஷை கணக்குகள் சரிவரமுடிந்து விட்டதற்கு அடையாளமாக பாலன்ஸ் ஷீட்டின் மொத்தத்தொகைகள் சமமாக வருகின்றனவாவென்று பார்ப்போம்.

ஷை கணக்குகளில் சொத்தைக் காண்பிப்பவை எவையென்றால், விற்பனையாகாதபடி பாக்கி நிற்கும் புஸ்தகங்களின் தொகை ரூ.300, சிங்காரம் அண்டு சன்ஸ் அவர்களிடமிருந்து வரவேண்டிய ரூ. 655, ஷை யாரிடமிருந்து முதலில் பில் மூலமாக வசூலிக்கப்பட்டு டிஸ்கவுண்டுபோக பாங்குக்கணக்கில் சேர்க்கப்பட்ட ரூ. 1965-ல் விற்பனைச் சரக்குகளை மதுரைக்கு அனுப்ப செலவுகளான ரொக்கம் ரூ.45-ஐக் கழித்து பாக்கி ரூ. 1920, ஆகிய இம்மூன்று தொகைகளும். கடன்களைக் குறிப்பவை யாதென்றால், முதன் முதலில் அனுப்பப்பட்ட புஸ்தகங்களின் தொகை ரூ. 2500 கமிஷன் வியாபாரத்திற்கு மட்டும் மூலதனம் போல் பாவிக்கப்படுகிறதாதலின் அத்தொகையும், அதோடு சேர வேண்டிய மொத்தலாபம் ரூ. 410-லிருந்து டிஸ்கவுண்டு நஷ்டம் ரூ. 35 போக, மிச்சலாபம் ரூ. 375-ம் ஆகிய இவ்விரண்டு அம்சங்களும். எனவே சொத்துகளின் மொத்தத்தொகை ரூ. 2875 ஆக, கடன்களின் மொத்தத் தொகையும் அதுவே ஆகிறது. இவ்விரண்டு தொகைகளும் சமமாயிருப்பதால், வியாபாரக் கணக்குகள் சரிவர முடிந்திருக்கின்றன.

இப்பொழுது இரண்டாவது பகுதி கூறப்படுகிறது. இப்பகுதியில் கன்ஸைனிகளாகிய சிங்காரம் அண்டு சன்ஸ் அவர்களால் ஷி கமிஷன் விற்பனை சம்பந்தமாக வைக்கப்படுகின்ற கணக்குகளைப் பற்றி சொல்லப்படுகின்றன.

சிங்காரம் அண்டு சன்ஸ் தங்களால் வியாபாரியின் நிமித்தம் விற்கப்பட்ட சரக்குகளின்மேல் கமிஷனுக்கு மட்டும் உரிமையுள்ளவர்களாதலால், விற்பனை சம்பந்தமாக செய்ய வேண்டி வருகிற செலவுகளுக்குத் தாங்கள் பாத்தியப்படுகிறவர்களல்ல. ஆதலின் வியாபாரிக்குக் கமிஷன் விற்பனையால் எவ்வளவு லாபமேற்படுகிற தென்று தெரிந்து கொள்ள பிரமேயமில்லை. ஆனால் தங்களுக்கு முக்கியமாகத் தெரிய வேண்டுவது யாதெனில், தங்களால் விற்கப்பட்ட சரக்குகளின் தொகையில் செலவு, கமிஷன் முதலானதுகளைக் கழித்து பாக்கி வியாபாரிக்குச் சேரவேண்டிய தெவ்வள வென்பதே. இதன் பொருட்டு வியாபாரியின் பேரில், அதாவது கன்ஸைனர் பேரில் மட்டும் கணக்கு வைக்கப்படுகிறது.

ஆனால் சரக்குகள் கமிஷன் விற்பனைக்காக வந்து சேர்ந்தவுடன், ஞாபகத்தின் பொருட்டு ஓர் சாதாரணக் குறிப்புப்புத்தகத்தில் மட்டும் எழுதப்படுகிறது.

இப்பொழுது முதல் பகுதியில் கொடுக்கப்பட்ட மாதிரிக்கு கன்ஸைனிகளாகிய சிங்காரம் அண்டு சன்ஸ் அவர்களால் எழுதப்படும் ஜர்னல் குறிப்புகள் கீழ்வருமாறு:—

ஜன. 6. குருநாதன் அண்டு கம்பெனி பற்று ரூ. 25—0—0
ரொக்கக்கணக்கால் ரூ. 25—0—0
(வண்டி வாடகை)

,, 8. ரொக்கக்கணக்கு பற்று ரூ 1200—0—0

குருநாதன் அண்டு கம்பெனியால் ரூ.1200—0—0
(விற்று முதல்)

,, 9. குருநாதன் அண்டு கம்பெனி பற்று ரூ. 20—0—0
ரொக்கக்கணக்கால் ரூ. 20—0—0
(பெட்டிச்செலவு, கூலி)

,, 12. குருநாதன் அண்டு கம்பெனி பற்று ரூ. 2000—0—0
பணம் கொடுக்கவேண்டியபில் கணக்கால் ரூ. 2000—0—0

,, ,, ரொக்கக் கணக்கு பற்று ரூ. 965—0—0
குருநாதன் அண்டு கம்பெனியால் ரூ 965—0—0
(விற்று முதல்)

,, 25. ரொக்கக்கணக்கு பற்று ரூ. 835—0—0
குருநாதன் அண்டு கம்பெனியால் ரூ. 835—0—0
(விற்று முதல்)

ஜன. 28. குருநாதன் அண்டு கம்பெனி பற்று ரூ. 300—0—0
கமிஷன் கணக்கால் ரூ. 300—0—0

சாக்குகளின் விற்று முதலின் ரொக்கம் நம்மிடமே வந்து சேருகிறதாகையாலும், ஷெ ரொக்கத்திற்கு சொந்தக்காரர் வியாபாரியானதால் அவர் நம்மிடம் சிறிது காலம் விட்டு வைத்திருக்கிருராதாலும், ரொக்கக் கணக்கைப்பற்று செய்து கன்ஸைனுராகிய வியாபாரியின் கணக்கை வரவு வைத்தல் வேண்டும். இதை மேலேயுள்ள ஜர்னல் குறிப்புகளில் பார்த்துக் கொள்ளவும்.

மேலுள்ள ஜர்னல் குறிப்புகளுக்கு லெட்ஜர்கணக்கு கீழே காட்டப்பட்டிருக்கிறது:—

பற்று.		மதராஸ், குருநாதன் அண்டு கம்பெனி.									வரவு
ஜன.	6	ரொக்கக் கணக்கால் (வண்டி வாடகை)	25	0	0	ஜன.	8	ரொக்கக் கணக்குக்கு (விற்று முதல்)	1200	0	0
	9	ரொக்கக் கணக்கால் (பெட்டிச் செலவு)	20	0	0		12	ரொக்கக் கணக்குக்கு (விற்று முதல்)	965	0	0
	12	பணம் கொடுக்க வேண்டிய பில்கணக்கால்	2000	0	0		25	ரொக்கக் கணக்குக்கு (விற்று முதல்)	835	0	0
	28	கமிஷன் கணக்கால்	300	0	0						
	31	அதிக வரவால்	655	0	0						
			3000	0	0				3000	0	0
						பிப்.	1	வரவு பாக்கிக்கு	655	0	0

இவ்விதமாக சிங்காரம் அண்டு சன்ஸ் அவர்கள் தங்கள் கணக்குப் புத்தகங்களில் குருநாதன் அண்டு கம்பெனியைப் பற்றிய கணக்குக் குறிப்பைச் செய்து ரூ. 655. அதிக வரவாகக் காண்பித்திருக்கிறார்கள். அதாவது இத்தொகை தங்களால் கொடுக்கப்பட வேண்டியதாதலால் இத்தொகைக்கு குருநாதன் அண்டு கம்பெனிக்கு சிங்காரம் அண்டு சன்ஸ் கடனாளியாகிறார்கள். இதே தொகை குருநாதன் அண்டு கம்பெனியார் கணக்குப் புத்தகங்களில் வைக்கப்பட்ட சிங்காரம் அண்டு சன்ஸ் கணக்குக் குறிப்பிலும் அதிகப் பற்றாகக் காண்பித்திருக்கிறபடியால், ஷை கணக்குக் குறிப்பு சரியாகவே எழுதப்பட்டிருக்கிறதென்பது தெரிய வருகிறது.

மேலே காட்டிய மாதிரியில் பாக்கிக் கையிருப்புச் சரக்குகள் ரூ. 300 கணக்கிலேயே சேரவில்லை. ஏனெனில் ஏஜெண்டாகிய சிங்காரம் அண்டு சன்ஸ் எவ்வளவு சரக்

குகள் விற்றிருக்கிறார்களோ அவ்வளவுக்கே பாத்தியப்படுகிறதாலும், பாக்கிச் சரக்குகளை எக்காலத்திலும் திருப்பிக் கொடுக்கக் கடமைப்பட்டவர்களாதலாலும், முதன் முதலில சரக்குகள்விற்பனைக்கு பெற்றுக்கொண்ட பொழுது அவற்றை ஒரு கணக்கிலும் பதிய வில்லையாதலாலும், சரக்குகளைப்பற்றி ஞாபகக்குறிப்பு மட்டும் செய்யப்படுகிறது.

ஆயினும், விற்பனையைப் பற்றிய குறிப்புகளையும் ஓர் தனிக் கணக்கில் எழுதுவ தால் நன்மையே யாதலால், கமிஷன் விற்பனைக் கணக்கு என்றதும் சிங்காரம் அண்டு சன்ஸ் அவர்களால் எழுதப்பட்டு குருநாதன் அண்டு கம்பெனியார்மீது பெர்ஸனல் அக்கவுண்டும் ஏற்படுத்தும் ஓர் விதமும் உண்டு. அதை இப்பொழுது கவனிப்போம்.

குருநாதன் அண்டு கம்பெனிக்காக

பற்று கமிஷன் விற்பனைக் கணக்கு வரவு

ஜன.	6	குருநாதன் அண்டு கம்பெனியால்	2500	0	0	ஜன.	8	ரொக்கக் கணக்குக்கு (விற்று முதல்)	1200	0	0
,,	31	குருநாதன் அண்டு கம்பெனியால் (லாபத்தொகை)	800	0	0		12	ரொக்கக் கணக்குக்கு (விற்று முதல்)	965	0	0
							25	ரொக்கக் கணக்குக்கு (விற்று முதல்)	835	0	0
							31	குருநாதன் அண்டு கம்பெனிக்கு (பாக்கி யிருப்பு)	300	0	0
			3300	0	0				3300	0	0

பற்று **குருநாதன் அண்டு கம்பெனி** வரவு

ஜன.	6	ரொக்கக் கணக்கால் (வண்டி வாடகை)	25	0	0	ஜன.	6	கமிஷன் விற்பனைக் கணக்குக்கு	2500	0	0
	9	ரொக்கக் கணக்கால் (பெட்டிச் செலவு, கூலி)	20	0	0	,,	31	கமிஷன் விற்பனைக் கணக்குக்கு (லாபத் தொகை)	800	0	0
	12	பணம் கொடுக்க வேண்டிய பில் கணக்கால்	2000	0	0						
	28	கமிஷன் கணக்கால்	300	0	0						
	31	கமிஷன் விற்பனைக் கணக்கால் (பாக்கி யிருப்பு)	300	0	0						
	,,	அதிக வரவால்	655	0	0						
			3300	0	0				3300	0	0
						பிப்.	1	வரவு பாக்கிக்கு	655	0	0

இம்மாதிரியில், குருநாதன் அண்டு கம்பெனியிடமிருந்து சரக்குகளை வாங்கி சிங்காரம் அண்டு சன்ஸ் அவர்களே தனித்தொழில் நடத்துவது போலவும், முடிவில் தங்களால் செய்யப்படும் வேலைக்குக் கமிஷன் வந்து விடுகிறபடியால் வியாபாரத்திலேற்படும் லாபத்தை அப்படியே குருநாதன் அண்டு கம்பெனிக்குக்கொடுத்து விடுவது போலவும் பாவிக்கப்படுகிறது.

ஆதலால் புஸ்தகங்களின் கிரயமான ரூ. 2500-க்கு குருநாதன் அண்டு கம்பெனியார் கணக்கு முதன் முதலில் வரவு செய்யப்படுகிறது. கமிஷன் விற்பனையில் மொத்த லாபமெவ்வளவு என்று சிங்காரம் அண்டு சன்ஸ் தெரிந்து கொள்ளும் பொருட்டு கமிஷன் விற்பனைக் கணக்கு மேற்படுத்தி புஸ்தகங்களின் கிரயத்துக்கு அதைப்பற்று செய்கிறார்கள். விற்பனைத்தொகைக்கும் பாக்கியிருப்புக்கும் ஷை கணக்கு வரவு செய்யப்படவே, செலவுகள் சேர்க்கப்படாமல் மொத்தலாபம் மட்டும் தெரிந்து போகிறது. இந்தமொத்த லாபம் குருநாதன் அண்டு கம்பெனியைச் சேர்ந்ததால், அவர்கள் கணக்கு வரவு செய்யப்படுகிறது. எப்பொழுது மொத்த லாபத்துக்கு குருநாதன் அண்டு கம்பெனி உடையவர்களாகிறார்களோ வியாபாரத்தின் செலவுகளெல்லாம் அவர்களைச் சேர்ந்தவை யாதலின், செலவுத் தொகைகளுக்கு அவர்கள் கணக்கு பற்று செய்யப்படுகிறது. சிங்காரம் அண்டு சன்ஸ் பாக்கிக் கையிருப்புச் சரக்குகளையும் குருநாதன் அண்டு கம்பெனியாரிடமே கொடுத்து விட்டு அவர்கள்கணக்கைப் பற்று செய்திடல்வேண்டும். இவ்விதம் அவர்கள் கணக்கு எழுதப்பட்டபின், அக்கணக்கின் பாக்கியே சிங்காரம் அண்டு சன்ஸ்கொடுக்கவேண்டிய தொகையாகும்.

இவ்வாறு கணக்குகள் சிங்காரம் அண்டு சன்ஸ் அவர்களால் எழுதப்படினும், அவர்களுக்கு உரிமையுள்ளது கமிஷன் ஒன்றேயாதலால், கமிஷன் விற்பனைக்கணக்கால் யாதொரு பிரயோஜனமு மில்லாதது பற்றி முதல் வழியை உபயோகப் படுத்துவதும் நலமாயிருக்கும்.

கமிஷனுக்கு உரிமையாளர்களா யிருக்கும் ஏஜெண்டுகளுக்கு நேரிடும் எச்செலவுகளும் வியாபாரியையே சேர்ந்ததாலும், வியாபாரியின் பொருப்பிலேயே சாக்குகளும் விற்கப்படுகின்றன வாதலாலும், ஷை வியாபாரத்தால் ஏற்படும் லாபநஷ்டங்களுக்கு ஏஜெண்டு உத்திரவாதமல்ல. ஏஜெண்டானவன் எப்படியாவது விற்பனை செய்தோம் என்று பேர் படுத்தி கமிஷனைப்பெற்றுக் கொள்வதிலேயே ஊக்கமுள்ளவனுயிருப்பான். அத்தகைய நிலைமையில் சில பேர்களுக்குக் கடனுகவும் சாக்குகளை விற்றிருக்கக் கூடும். கடனுக்கு சாக்குகளை வாங்கப்பட்டவர்கள் யோக்கியர்களா, பெறுமானவர்களா என்று யோசனை செய்து பார்க்கக்கவலை கொள்ளான். கடைசியாக சில கடன்கள் வசூலாகாமலே நஷ்டமாகிப் போகிவிடும். ஏஜெண்டு ஷை நஷ்டத்துக்கு உத்திரவாதமில்லை யாதலின் இந்த நஷ்டம் வியாபாரியையே பாதிக்கும். இதிலிருந்து வியாபாரி தப்பித்துக்கொள்ள வேண்டுமானுல் தனது ஏஜெண்டை ஊக்கமுடன் இருக்கச் செய்யவேண்டும். இதன் பொருட்டு அதிகக்கமிஷன் ஏஜெண்டிற்குக் கொடுக்கவேண்டி வரும். இவ்விதம் அதிகக் கமிஷன் கொடுக்கப்பட்டால், ஏஜெண்டின் நிபந்தனை யென்ன வெனில் அவனுல் செய்யப்படும் கடன் விற்பனைகளுக்கு அவனே உத்திரவாதமாக வேண்டும். ஏதாவது தொகை நஷ்டமாகிப்போனுல் அவனே அதைச்சேர்த்துக் கொடுக்கவேண்டும், என்பதே. இந்த

நிபந்தனையின் பொருட்டு ஏஜெண்டுக்குக் கொடுக்கப்படும் அதிகப்படி கமிஷனுக்கு ஆங்கிலத்தில் "டெல் க்ரெடீர்" (Del credere) கமிஷன் என்று பெயர்.

ஓர் வியாபாரத்தின் முன்னேற்றத்திற்கனுகுணமான கமிஷன் விற்பனையைப் பற்றின கணக்குக் குறிப்புகளும் மேலே கூறப்பட்டு விட்டன.

இனி ஓர் வியாபாரம் மற்றோர் வியாபாரத்தை தன்னிடத்தே வாங்கிக்கொண்டு நடத்தும் வகையைக் கவனிப்போம்.

17-ம் அதிகாரம்.

நன் மதிப்பின் பெறுமானம்—அதைச் சார்ந்த கணக்குகள். (Goodwill)

ஓர் வியாபாரம் நாட்டில் பிரக்யாதி பெறுவது அதன் சொந்தக்காரருடையதும் அதை நடத்துகிறவர்களுடையதுமான சாமர்த்தியத்தால்தான். மேலான சரக்குகளை விற்பனை செய்வதாலேயோ, ஒழுங்கான முறையுடன் வியாபாரத்தை நடத்துவதாலேயோ அல்லது நாடு முழுமைக்கும் தாங்களே மொத்த வியாபாரியாக யிருந்து வியாபாரத்தை நடத்துவதாலேயோ, வியாபாரமானது முன்னுக்கு வந்து கீர்த்தி பெற்றிருக்குமென்று சொல்லத் தேவையில்லை. வியாபாரத்திற்கு உதவியாயிருப்பவர்கள் வாடிக்கைக் காரர்களே. பெருமை தங்கிய சில வாடிக்கைக் காரர்கள் சேருவார்களானால், அவர்கள் எப்பொழுதும் எச்சாமானுக்கும் அந்த

வியாபாரத்திலேயே லாவாதேவி செய்வார்களே யொழிய வேறிடம் போகமாட்டார்கள். மேலும் தாங்களாகவே வாடிக்கைக்காரர்கள் சேர்ந்துகொள்வார்கள். இவ்விதம் வியாபாரத்திற் கேற்பட்ட நல்ல பெயருக்கே நன் மதிப்பு (Goodwill) என்று பெயர். இந்த நன் மதிப்புக்குப் பெறுமானதொகை எப்படி கண்டு பிடிப்பது என்று பார்ப்போம்.

இத்தகைய கீர்த்தி பெற்றுள்ள வியாபாரத்தை அதன் சொந்தக்காரன் வேறொரு வியாபாரியினிடம் விற்றுவிட இசைந்தால், வியாபாரத்தை வாங்கிக்கொள்ளும் புது வியாபாரி அதனுடைய பெயரை உபயோகிப்பதால் மேலும் நல்ல வாடிக்கைக்காரர்களை சேர்த்துக் கொள்ளக் கூடும். இது வியாபாரிக்கு ஓர் நன்மையேயாதலால், இந்த நன்மைக்கு மூலகாரணமான பழைய சொந்தக்காரனுக்கு அதாவது வியாபாரத்தை விற்பவனுக்கு அவனிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட நன்மையை உத்தேசித்து, அந்த நன்மைக்குப் பெறுமான ஓர் தொகை கொடுத்தல் வேண்டும்.

இவ்விதம் நன்மதிப்புக்காகப் பணம் கொடுக்கப்படுமேயானால், நன்மதிப்பென்ற ஓர் கணக்கு பற்று செய்யப்பட்டு ரொக்கக் கணக்கு வரவாகும்.

ஒரு வியாபாரி தன் வியாபாரத்தை விற்குங்காலத்தில் சொத்துகளையும் கடன்களையு முடையவனானால், அப்பொழுது அந்த வியாபாரத்தை வாங்கும் பொருட்டு கொடுக்கப்பட்ட தொகை வியாபாரத்தின் சொத்துகளிலிருந்து கடன்களைக் கழித்துவந்த முதலுக்கு மிஞ்சினால், அதிகமுள்ள தொகையே நன்மதிப்பின் பெறுமானமாகும்.

உதாரணமாக, ரூ. 2200 கடன்களையும் ரூ. 3000 சொத்துகளையும் உடைய ஒருவன் தன் வியாபாரத்தை விற்கும்பொழுது ரூ. 1200 பெற்றுக் கொண்டானென்று வைத்துக்கொள்வோம். வாங்கப்பட்ட வியாபாரத்தில் முதல் தொகையாக நிற்பது ரூ. 3000-ல் ரூ. 2200 போக பாக்கி ரூ. 800 தான். இந்த ரூ. 800-யும் வியாபாரத்தை விற்பவனுக்குக் கொடுக்கவேண்டியது அவசியந்தான். ஏனெனில் அவனுடைய முதலையே கொடுத்து விடுகிறோம். ஆனால் நாம் கொடுத்திருப்பதோ ரூ. 1200. இதில் அதிகமாகக் கொடுக்கப்பட்ட ரூ. 400 நன்மதிப்புக்கே ஆகும்.

மேலேயுள்ள உதாரணத்தில் ரூ. 3000 சொத்துகளில், ரூ. 1500 சரக்குகள் பாக்கி யென்றும் ரூ. 700 கோவிந்தனென்பவரிட மிருந்து வரவேண்டிய தென்றும் ரூ. 800 பெறுமான மரசாமான்களென்றும், ரூ. 2200 கடன்களில் ரூ. 1390 ராமன் அண்டு கம்பெனியாருக்கும் ரூ. 810 முருகப்ப முதலியாருக்கும் கொடுக்கப்படவேண்டு மென்றும் வைத்துக்கொள்வோம்.

இந்த விபரங்களையுடைய வியாபாரத்தைத் தனியாக வேறொரு வியாபாரத்தையும் நடத்தாத ஒருவன் வாங்கிக் கொண்டானானல், அல்லது இந்த வியாபாரத்துக்கு மட்டும் தனிக் கணக்குகளை வைப்பானானல், இந்த வியாபாரத்தின் பொருட்டு கொடுக்கப்பட்ட ரூ. 1200 முதல் தொகை போலாகிறது. இந்த ரூ. 1200-யும் இவன் வியாபாரத்துக்குக் கடன் கொடுத்தவனாகக் கணக்கில் வரவு செய்யவேண்டும். மேலுள்ள சொத்துகளும் கடன்களும் இவனிடம் வந்து சேருவதால் கீழ்க்கண்ட விதம் சொத்துகளைப் பற்றுசெய்து கடன்களை வரவுசெய்யவேண்டும்:—

கீழ்கண்ட கணக்குகள்:—

சரக்குக்கணக்கு	பற்று	ரூ.	1500—0—0
கோவிந்தன்	,,	,,	700—0—0
மரசாமான்கள் கணக்கு		,,	800—0—0
நன்மதிப்புக் கணக்கு		,,	400—0—0

கீழ்கண்ட கணக்குகளால்:—

ராமன் அண்டு கம்பெனி	ரூ.	1390—0—0
முருகப்ப முதலியார்	,,	810—0—0
முதல் கணக்கால்	,,	1200—0—0
	ரூ. 3400—0—0.	ரூ. 3400—0—0

ஷ வியாபாரத்தை வாங்கும் பொழுது உடனே விற்பவனுக்கு ரொக்கம் கொடுக்காமல், அவனையும் வியாபாரத்தில் சேர்த்துக்கொண்டால் நன்மதிப்புத் தொகைக்கும் விற்கப்பட்ட வியாபாரத்திலுண்டாகும் முதலுக்கும் சேர்த்து வந்த மொத்தத்திற்கு விற்பவன் கணக்கு வரவாகும். அப்பொழுது ஜர்னல் குறிப்பு கீழ்வருமாறு :—

மரசாமான் கணக்கு	பற்று	ரூ.	800—0—0
சரக்குக் கணக்கு	,,	,,	1500—0—0
கோவிந்தன்	,,	,,	700—0—0
நன்மதிப்புக் கணக்கு	,,	,,	400—0—0

ராமன் அண்டு கம்பெனியால்	ரூ.	1390—0—0
முருகப்பமுதலியாரால்	,,	810—0—0
நாராயணனால் (விற்பவன்)	,,	1200—0—0
	ரூ. 3400—0—0.	ரூ. 3400—0—0

ஆனால் ஷ வியாபாரமானது மற்றோர் வியாபாரத்தோடு சேர்க்கும்படி விற்கப்பட்டால் அதற்குள்ள தொகை விற்பவனுக்கு வாங்குபவன் நடத்தும் வியாபாரத்திலிருந்தே கொடுக்கப்படுமேயானால், புது வியாபாரத்தில் விற்பவன் சேராமலிருக்கும் பட்சத்தில் வாங்கப்படுகின்ற சொத்துகளெல்லாம் பற்றாகி, நன்மதிப்புக்காகத் தனியாக ரொக்கமும் கொடுக்கப்படுவதால், நன் மதிப்புக் கணக்கும் பற்றாகி, கடன்களெல்லாம் வரவாகி வாங்கப்பட்ட வியாபாரத்தின் முதல் தொகைக்கும், நன் மதிப்புக்கும் ரொக்கம் கொடுபடுவதால் ரொக்கக்கணக்கும் வரவாகும்.

ஆகவே மேலே காட்டிய பிரகாரம் நன்மதிப்பென்ற அம்சமானது சொத்துத்தொகைகளோடு சேர்க்கப்படுகிறது. இதிலிருந்து நன்மதிப்பு ஓர் சொத்தைப்போல் பாவிக்கப்படுகிற தென்றறிகிறோம்.

நன்மதிப்பின் பொருட்டு ரொக்கம் கொடுப்பதாலேயே வியாபாரத்தின் உரிமையை அடையமுடியும். உரிமை யில்லாமல் வியாபாரத்தை நடத்தமுடியாததலால், உரிமையைப் பெற்றுக்கொள்வதே அவசியமான காரியமாகும். இதற்காக ரொக்கம் கொடுக்கப்படுகிறதாகையால், இத்தொகையே வியாபாரத்தைப் பெறுகிறதெனக்கூறலாம். ஆனதுபற்றி, நன்மதிப்பு சொத்தைப் போல் எண்ணப்படுகிறது.

ஆனால் ஷ சொத்தானது வியாபாரம் நடந்து கொண்டிருக்கும் சமயத்தில் பிரயோஜனத்தைக் கொடுக்கக்கூடியதல்ல. வியாபாரத்தை மற்றொருவருக்கு விற்கும் பொழுது தான் நன்மதிப்பிற்குப்பெறுமான த்தொகைகிடைக்கும். ஆதலின் வியாபாரத்தை வாங்கும்பொழுது நன்மதிப்பை ஓர் சொத்தாகக்காண்பித்து, பிறகு கொஞ்சகாலத்திற்குள்

கொஞ்சங் கொஞ்சமாக லாபநஷ்டக்கணக்கில் எழுதப்பட்டு விடுகிறது.

உதாரணமாக ரூ. 500 நன்மதிப்பின் தொகை என்று வைத்துக்கொள்வோம். இதை ஐந்து வருஷங்களில் நஷ்டத்திலெழுதி விடவேண்டுமென்றால், ஒவ்வொரு வருஷத்திலும் ரூ. 100 லாபநஷ்டக்கணக்கில் சேரும். ஒவ்வொரு வருஷத்திலும் எழுதப்படுகின்ற நஷ்டத்திற்குக்கீழ்வரும் ஜர்னல் குறிப்பு செய்யப்படுகிறது:—

லாபநஷ்டக்கணக்கு பற்று ரூ. 100—0—0
நன்மதிப்புக் கணக்கால் ரூ. 100—0—0

நன்மதிப்பின் பெறுமானம் எப்படி நிர்ணயிக்கப்படுகிறதென்றால், வாங்கப்பட்டவியாபாரத்தில் பலவருஷங்களுடைய மிச்சலாபங்களின் மொத்தத்தை அவ்வளவு வருஷங்களால் வகுத்து, ஒரு வருஷத்தின் சராசரி மிச்சலாபத்தைக்கண்டு பிடித்து, அச்சராசரியின் மூன்றுபங்கோ அல்லது ஐந்து பங்கோ தான் நன்மதிப்பின் பெறுமானமாகும்.

கூட்டுவியாபாரத்தில் இந்த நன்மதிப்பின் பெறுமானத்தைப்பற்றிக்கவனிப்போம்.

கூட்டுவியாபாரத்தில் நன்மதிப்பு:—எப்படி வியாபாரம் ஒருவரிடம் விற்கப்பட்டால் அதன்பொருட்டு நன்மதிப்புக்காகப்பணம் வாங்கப்படுகிறதோ, அது போலவே பல முதலாளிகளால் செய்யப்பட்டுவரும் கூட்டுவியாபாரத்தில் மற்றொருவர் முதலாளியாகச் சேருவாரானால், அவரும் கூட்டுவியாபாரத்திலிருக்கும் நன்மதிப்பின் பிரயோஜனத்துக்கு பாத்தியப்பட்டவராகையால், அவரிடமிருந்தும் நன்மதிப்புக்காகப் பணம் வாங்கப்படுகிறது.

இந்த நன்மதிப்பைப் பற்றிப் புத்தகங்களில் குறிக்க அநேக விதங்களுண்டு.

முன்னிருந்த முதலாளிகளாலேயே வியாபாரம் பெருமையடைந்திருப்பதால், அவர்களின் திறமைக்காக புதிதாக வந்துசேரும் முதலாளி அவர்களுக்குத் தனித்தனியேபணம் கொடுக்கலாம். இது வியாபாரத்தில் சம்பந்தப் படாததால் இதைப்பற்றின குறிப்பும் வியாபாரக் கணக்குகளில் செய்யப்படாது. ஆனால் புதுமுதலாளியால் கொண்டு வரப்படும் முதலுக்குமட்டும் ரொக்கம் பற்றாகி அவன்முதல் கணக்கு வரவாகும்.

ஒருவன் முதல் தொகையையும் நன்மதிப்புப் பெறுமானத்தொகையையும் வியாபாரத்தில் போடுவானானால், நன்மதிப்புத்தொகைமட்டும் பழைய முதலாளிகளைச்சேரும். ஆதலின், புது முதலாளியால் கொண்டு வரப்பட்டதான மொத்தத்தொகைக்கு ரொக்கக்கணக்கு பற்றாகி, நன்மதிப்புத்தொகையில் பழைய முதலாளிகள் ஒவ்வொருவருக்கும் எவ்வளவு பாகம் சேரவேண்டுமோ அப்பாகத்திற்கு அவரவர் முதல் கணக்கு வரவாகியும் பாக்கியுள்ளதொகையே புது முதலாளியின் மூலதனமாதலால் அத்தொகைக்கு அவன் முதல் கணக்கு வரவாகியும் நிற்கும். பழைய முதலாளிகள் நன்மதிப்பின் தொகைக்கு உரிமையுடையவர்களாதலால், அவர்கள் எக்காலத்திலும் அதைப் பெற்றுக்கொள்ளலாம். ஆகவே அவ்விதம் தொகை ரொக்கமாகப்பெற்றுவிட்டால், பழைய முதலாளிகளின் முதல் கணக்குகள் பற்றாகி ரொக்கக்கணக்கு வரவாகும்.

உதாரணமாக, ராமன் என்பவனும் தாஸன் என்பவனும் கூட்டுவியாபாரம் செய்யும் பொழுது, நாராயணன் என்

பவனை ஓர் கூட்டாளியாகச் சேர்க்கிறார்கள். நாராயணன் ரூ. 2500 கொடுக்க வேண்டுமென்றும், அதில் ரூ. 500 நன்மதிப்புத் தொகையாக பழைய முதலாளிகளுக்குக் கொடுபடவேண்டுமென்றும், இந்த நன்மதிப்புத் தொகையை அவர்கள் லாபநஷ்டத்துக் கேற்பட்டுள்ள தங்கள் பங்குகளைப் போலவே சமமாக பிரித்துக்கொள்ள வேண்டுமென்றும் ஏற்பாடாகிறது. இக்குறிப்புகள் ரொக்கப்புத்தகத்தில் பதியப்படும் விதம் கீழேகாட்டப்பட்டிருக்கிறது :—

பற்று ரொக்கக்கணக்கு வரவு

நாராயணன் முதல் கணக்கால்	2000	0	0	ராமன முதல் கணக்குக்கு (நன்மதிப்பின் தொகை வாங்கப்பட்டது)	250	0	0
ராமன் முதல் கணக்கால் (நன்மதிப்பின் தொகை)	250	0	0	தாஸன் முதல் கணக்குக்கு (நன்மதிப்பின் தொகை வாங்கப்பட்டது)	250	0	0
தாஸன் முதல்கணக்கால் (நன்மதிப்பின் தொகை)	250	0	0				

மேலேயுள்ள விவகாரத்திலுங் கூட நன்மதிப்பின் தொகை பழைய முதலாளிகளையே சேர்ந்ததாகையால், நன்மதிப்புக்காகத் தனியே ஓர் கணக்கும் ஏற்படுத்தப்படமாட்டாது.

புதிதாக வந்து சேரும் முதலாளிக்குச் சௌகரியமாகவும் ஆனல் பழைய முதலாளிகளுக்கு நன்மதிப்பின் தொகை கிடைக்கும் படிக்கும் செய்யவேண்டு மென்றால்,

புது முதலாளியிடமிருந்து நன்மதிப்புக்காகத் தனியாகப்பணம் பெறாமல் முதலிலிருந்தே பழைய முதலாளிகள் எடுத்துக் கொள்கிறார்கள். ஆனால் புது முதலாளியின் கணக்கு நன்மதிப்புத்தொகை போகபாக்கிக்கு வரவாகாமல் பூராத்தொகைக்கும் வரவு செய்யப் படுகிறது. இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் நன்மதிப்புக் கணக்கு ஏற்படுத்தப் படுகிறது. இந்த மாதிரியில் புது முதலாளி நன்மதிப்பின் பொருட்டு தனியாகப்பணம் கொடுக்காததால் கொஞ்சம் சௌகரியமடைகிறான். பழைய முதலாளிகளும் நன்மதிப்புத் தொகையையடைய உரிமையுள்ளார்களென்பதைக் குறிக்க அவர்கள்முதல் கணக்குகளும் வரவாகின்றன.

முன்னேயுள்ள உதாரணத்தையே எடுத்துக் கொள்வோம். பழைய முதலாளிகள் நன்மதிப்பின் தொகையைப் பெற்றுக்கொண்டு விட்டார்களென்றும் வைத்துக்கொள்வோம். அதற்குக் கீழ்வரும் விதம் ரொக்கப்புத்தகம் எழுதப்படும்:—

பற்று ரொக்கக்கணக்கு வரவு

நாராயணன் முதல் கணக்கால்	2500	0	0	ராமன் முதல் கணக்கால் (நன்மதிப்புத் தொகை)	250	0	0
				தாஸன் முதல் கணக்கால் (நன்மதிப்புத் தொகை)	250	0	0

நன்மதிப்புத்தொகை பழைய முதலாளிகளைச் சேர்ந்த தென்பதைக்காண வேண்டிய குறிப்பு ரொக்கம் சம்பந்தப் படாததால் இவ்விதம் ஜர்னல் குறிப்பு செய்யப்படும்:—

நன்மதிப்புக் கணக்கு பற்று ரூ. 500—0—0		
ராமன் முதல் கணக்கால்		ரூ. 250—0—0
தாஸன்	,,	ரூ. 250—0—0

இவ்விதம் குறிப்புகளைச் செய்த பின், நன்மதிப்புக் கணக்கு ஓர் சொத்தாக நிற்கிறது. முன் சொல்லப்பட்டது போலவே இந்த சொத்து கொஞ்சகாலத்தில் நஷ்டமாக எழுதப்பட்டு விடுகிறது.

ஒருவன் புதிதாகக் கூட்டு வியாபாரத்தில் வந்து சேரும் பொழுது நன் மதிப்புக்காகத் தொகை வாங்கப்படுவதுபோல வே, கூட்டு வியாபாரத்திலிருந்து ஒரு கூட்டாளி பிரிந்து போனாலும் அக்கூட்டாளியால் இதுவரையில் வியாபாரத்திற் கேற்பட்ட நன்மையை உத்தேசித்து நன்மதிப்புத் தொகை கொடுக்கப்படுகிறது. நன்மதிப்புப் பெறுமானம் இவ்வள வென்பதை முன் சொன்னது போல் கண்டு பிடித்து அதில் பிரிந்து போகும் முதலாளிக்குச் சேரவேண்டிய பங்கை அவன் முதல் கணக்கில் வரவு வைத்து அந்தப் பிரகாரம் தொகையும் கொடுக்கப்படவேண்டும்.

ஆனால் கூட்டு வியாபாரமே மற்றொருவரிடம் விற்கப் பட்டால், வியாபாரத்தை வாங்குகிறவரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படும் நன்மதிப்புத் தொகை பழைய வியாபாரத் தின் முதலாளிகளுக்கு லாபமாகையால் அத்தொகையை அவர்களுக்கேற்பட்ட வீதப்படிக்கு பங்கிட்டுக் கொள்வார் கள்.

ஆகவே ஓர் வியாபாரத்தை விற்கும் பொழுதாவது, வாங்கும்பொழுதாவது, கூட்டு வியாபாரத்தில் ஒருவரைப் புதிதாகச் சேர்த்தாலாவது, பிரித்தாலாவது, நன்மதிப்பு என்ற ஓரம்சமிருக்கிறதென்றும் அதன் பெறுமானத்தையும் கண்டு பிடித்தால்தான் வியாபாரத்தின் நிலைமை உண்மையாகத் தெரியவருமென்றும் அறியவும்.

18-ம் அதிகாரம்.

சொத்துக் கணக்குகள்—முதலைச் சேர்ந்த அம்சங்கள்—லாப நஷ்டத்தைக் குறிக்கும் அம்சங்கள்—அரசாங்க ரொக்கப் பத்திரங்கள்—கம்பெனிகளில் பங்குகள்.

வியாபாரத்துக்குச் சம்பந்தமாக யந்திரங்களோ, மரசாமான்களோ, கட்டடங்களோ, வண்டிகள் முதலானவைகளோ வாங்கப்பட்டால், ஒவ்வொரு அம்சத்திற்கும் ஒவ்வோர் கணக்கு தனியாக ஏற்படுத்தப்பட்டு பற்று செய்யப்படுகிறது. ரொக்கக் கணக்கு வரவு செய்யப்படுகிறது. வருஷ முடிவில் அச்சொத்தின் மேல் பெறுமானக் குறைவெவ்வளவு என்று பார்க்கப்பட்டு ஷை பெறுமானக் குறைவு நஷ்டமாகையால் பற்று செய்யப்பட்டு சொத்துக் கணக்கு வரவாகிறது. அப்பொழுது சொத்துக் கணக்கில் பாக்கியுள்ள தொகையே மறுவருஷ ஆரம்பத்தில் சொத்தாகும். ஒவ்வோர் அம்சத்தையும் கவனித்துப்பார்த்து அதை சொத்தில் சேர்ப்பதா அல்லது நஷ்டத்தில் சேர்ப்பதா என்பதைத் தெரிந்துகொண்டு அவ்விதம்' பற்று செய்ய வேண்டும். வாங்கப்பட்ட சாமான் முன்னிருந்த சொத்தை நல்ல நிலைமைக்குச் சீர்திருத்த

யிருந்தால், அத்தொகை நஷ்டத்திலேயே சேர்க்கப்படும். வியாபாரத்திலேயே கொஞ்சங் கொஞ்சமாக செல்வழிந்து போகும் சாமான்களெல்லாம் வியாபாரச் செலவு கணக்கிலேயே பற்று செய்யப்படவேண்டும். வியாபாரத்திலேயே உபயோகப்படுவதாயும் அழியாமல் வியாபாரத்திலேயே நிற்கக்கூடியதாயுமான சாமான்களை வாங்கும் பட்சத்தில், அதற்காக ரொக்கம் கொடுக்கப்படும் பொழுது, அச்செலவு முதலைச்சேர்ந்த செலவாகும். ஷை சாமான் விற்கப்பட்டு ரொக்கம் வருமேயானால், அது முதலைச்சேர்ந்த வருமானமாகும். அது போலவே சொத்துக்களின் தொகையை அதிகப்படுத்தாமல் வியாபாரத்திலே அழிந்துபோகிற குணமுடைய சாமான்களை வாங்கினால் அந்தச்செலவு நஷ்டத்தைச்சேர்ந்த செலவாகும். நம்முடைய சொத்துக்களின் தொகை குறையாமலே அவைகளின் பிரயோஜனத்தால் ரொக்கம் வருமேயானால், அது லாபத்தைச்சேர்ந்த வருமானமாகும். ஓர் சொத்து பழைமையாகப்போய் அதற்குப்பதிலாக வேறொரு சாமான் புதிதாக வாங்கப் பட்டாலும், பழைய சொத்தின் பிரயோஜனம் அடைந்தபின் இப்புது சொத்தினாலும் பிரயோஜனத்தை யடைவது பற்றி, அச்சொத்தின் தொகையை சொத்துக் கணக்கிலேயே சேர்க்கவேண்டுமே தவிர பழைய சொத்தைப் புதிதாகச் செய்வதால் உண்டான தொகையை நஷ்டத்தில் சேர்ப்பதுபோல் இதையும் பாவிக்கக் கூடாது.

சொத்துகளென்ற வகுப்பைச் சேர்ந்த கீழுள்ள அம்சங்களையும் கவனிப்போம்.

யந்திரங்கள், மரசாமான்கள், கட்டடங்கள் முதலிய சொத்துகளில் ரொக்கத்தை செலவழிப்பதால், வியாபாரக்

காலத்தில் அவைகளிலிருந்து பிரயோஜனம் அடையப்படுகிறது. அது போலவே அரசாங்கத்தாரால் வெளியிடப்படுகின்ற ஸ்டாக்கப் பத்திரங்களை வாங்குவதில் ரொக்கத்தைச் செலவழித்தால், அதிலிருந்து பிரயோஜனமாக வட்டித் தொகை யென்பது பெறப்படுகிறது. ஷெ ரொக்கப் பத்திரங்களென்ன வென்றால், அரசாங்கத்தாருக்கு பணம் தேவையான பொழுது கடன்களாக ஷெ பத்திரங்களின் மூலமாய் ஜனங்களிட மிருந்து ரொக்கத்தைப் பெற்று, பத்திரத்தில் குறிப்பிட்ட வருஷத்தில் முன் கொடுத்த பணத்தைத்திருப்பிப் பெற்றுக் கொள்ளும்படி அனுமதிக்கின்றசீட்டுகள். ஆகவே, இப்பத்திரங்கள் அரசாங்கத்தால் நமக்குக் கொடுபட வேண்டிய கடன்களைக் குறிக்கின்றன வாகையால், இவைகளின் மொத்தத்தொகைக்கு "அரசாங்க ரொக்கப் பத்திரங்கள்" (Government Securities) என்ற சொந்தக் கணக்கொன்று ஏற்படுத்தப்பட்டு பற்று செய்யப்படும். ரொக்கக் கணக்கு வரவு செய்யப்படும். இதன் பொருட்டு ஆறு மாதத்திற் கொருமுறையாவது வருஷத்துக்கொரு முறையாவது பெற்றுக் கொள்ளப்படும் வட்டிக்கு "டிவிடென்ட்" (Dividend) என்று பெயர். இது லாபத்தைக்குறிப்பதால் இக்கணக்கு வரவு செய்யப்படும்.

கம்பெனிகளில் பங்குகள் வாங்கப்பட்டாலுங்கூட, அப்பங்குகளின் தொகை பின்னால் கிடைக்கவேண்டிய தாதலால், அதுவும் ஓர் சொத்தே ஆகும். ஆதலின், "ரொக்கப் பத்திரங்கள்" கணக்கு பற்றாகி, ரொக்கக்கணக்கு வரவாகிறது. இவைகளின் மீதும் ஆறு மாதத்திற்கொரு முறையாவது ஒருவருஷத்திற் கோர்முறையாவது வசூலிக்கப்படும் வட்டி அல்லது டிவிடென்டுக்கு அக்கணக்கு வரவாகும்.

ஷெடி பத்திரங்களுக்கு அல்லது கம்பெனிகளின் பங்கு களுக்குக் குறிப்பிட்ட தேதியானவுடன் பணம் வாங்கப் பட்டால், இப்பத்திரங்கள் கொடுத்து விடப்படுகின்றன. அப்பொழுது "ரொக்கப் பத்திரங்கள்" கணக்கு விற்கப் பட்ட தொகைக்கு வரவாகும்.

இந்த ரொக்கப்பத்திரங்களில் செலவழிக்கப் படும் தொகைக்கு வட்டி என்கிற பிரயோஜனம் அடையப்படுகிற தாகையால், இதை உத்தேசித்து எல்லாரும் ரொக்கப் பத் திரங்களை வாங்க யத்தனிப்பார்கள். எப்பொழுது அதிக மான விற்பனை ஏற்படுகிறதோ, ரொக்கப் பத்திரங்களின் விற்கும் விலை அதிகமாகும். ரூ. 1500-க்குள்ள பத்திரத்தை ரூ. 1515 கொடுத்தே வாங்கவேண்டி வரும். அப்பொழுது நூற்றுக்கு 1 வீதம் அதிகமாகப்பத்திரங்கள் விற்கப்படுகின் றன வென்று கூறலாம். அதிகமான விற்பனையில்லாத பொழுது, பத்திரங்களின் விலை குறைந்துவிடும். ரூ. 1500-க் குள்ள பத்திரத்தை ரூ. 1485 கொடுத்து வாங்கிவிடலாம். அப்பொழுது பத்திரங்கள் நூற்றுக்கு 1 வீதம் குறைவாகப் பத்திரங்கள் விற்கப்படுகின்றன வென்று கூறுவோம். பத் திரங்களின் தொகைக்கே அவைகள் விற்கப்பட்டால், பத் திரங்கள் உள்ள விலைக்கு விற்கப்படுகின்றன வென்று சொல்லுகிறோம்.

ஆகவே, ஷெடி பத்திரங்களின் வாங்கும் விலைக்கும் விற்கும் விலைக்கும் வித்தியாச மிருக்கக் காரண முண் டென்றறிகிறோம். இந்த வித்தியாசத் தொகை ஒரு சரக் குக் கணக்கில் காணப்படுகிறது போலவே, லாபநஷ்டத் தைக் குறிக்குமாகையால், வித்தியாசத்தொகை லாப நஷ்டக் கணக்குக்கு மாற்றப்படும்.

உதாரணமாக, 1910. மார்ச்சு. 5-ல் ரூ. 2000 பெறுமான "ரொக்கப் பத்திரங்கள்" 1% விலை குறைவாக வாங்கப்பட்டு, செக்கு மூலமாகக் கொடுக்கப்பட்டது. மார்ச்சு. 15-ல் ரூ. 1500 பெறுமான "ரொக்கப் பத்திரங்கள்" 1½%' விலை அதிகமாக விற்கப் பட்டன. மார்.31-ல் கையிருப்புப் பத்திரங்கள் வாங்கின விலைக்கு மதிப்பிடப்பெற்றன. இக்குறிப்புகளுக்கு லெட்ஜர் கணக்கு கீழ்வருமாறு எழுதப்படுகிறது:—

பற்று அரசாங்க ரொக்கப் பத்திரங்கள் கணக்கு. வரவு

1910						1910					
மார்.	5	பாங்குக் கணக்கால் (1% தள்ளி வாங்கப் பட்ட தொகை)	1980	0	0	மார்ச்.	15	ரொக்கக் கணக்குக்கு (1½% அதிகமாக விற்கப்பட்ட தொகை)	1522	8	0
,,	31	லாப நஷ்டக் கணக்கால் (லாபம்)	37	8	0	,,	31	கையிருப்பு பாக்கிக்கு (வாங்கின விலைப்படி யுள்ள தொகை)	495	0	0
			2017	8	0				2017	8	0
எப்.	1	கையிருப்பு பாக்கிக்கு	495	0	0						

கையிருப்புப் பத்திரங்களை வாங்கின விலைக்கு மதிப்பிட வேண்டுமானால் பாக்கிப்பத்திரங்களாகிய ரூ. 500-க்கு நூற்றுக்கு 1 வீதம் தள்ளியே ரூ. 495 ஆக மதிப்பிடவேண்டியது. இதுவும் மேலே லெட்ஜர் கணக்கில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சொத்தைச் சேர்ந்த வருமான செலவுகளெல்லாம் பாலன்ஸ் ஷீட்டில் வரக்கூடியவை. லாபநஷ்டத்தைச் சேர்ந்த வருமான செலவுகளெல்லாம் லாப நஷ்டக்கணக்கில் வரக்கூடியவை. இவ்விதமாகவே வியாபாரக்கணக்குகளில் மிச்சலாபத்தைக்கண்டு பிடிக்கிறோம். ஆனால் பொது ஜனங்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் கலாசாலைகள், வாசகசாலைகள், விளையாட்டுச் சங்கங்கள், முதலிய வற்றிலும் கணக்குகள் வைக்கப்படுவது எப்படியென்று இனி கவனிப்போம்.

மேற்கூறப்பட்ட காரியாலயங்களெல்லாம் பொது நன்மைக்கேயாகையால், அவைகளின் பொருட்டு ஜனங்களின் உதவியும் தேவையாயிருக்கும். வருஷமொன்றுக்கு இவ்வளவு சந்தாஎன்று ஏற்படுத்தப்பட்டு அச்சந்தா செலுத்துபவர் ஒவ்வொருவரும் சங்கத்தில் ஓர் அங்கத்தினராகி சங்கத்தால் செய்யப்படும் உதவிக்குப் பாத்திரமாகிறார். ஆகவே ஷை சங்கங்களுக்கு வருமானம் சந்தாத்தொகையே யாகும். இத்தொகையைக்கொண்டே மற்ற செலவுகளெல்லாம் செய்யப்படுகின்றன. வருமானத்துக்கும் செலவுக்கும் வித்தியாசமான லாபம் சங்கத்தை நடத்துகிறவர்களையே சேரும். லாபம் சம்பாதிப்பதற்கு சங்கம் ஏற்படுத்துவ தில்லையானாலும், சாதாரண வியாபாரத்தில் உபயோகப்படும் கணக்கு முறைகளே இதிலும் அநுசரிக்கப்பட்டு, ரொக்கக்கணக்கு, லாபநஷ்டக் கணக்கு, பாலன்ஸ் ஷீட் முதலியவை எழுதப்படுகின்றன.

சங்கங்கள் முதலானவைகளில், உதவிப் புத்தகங்களும் வேண்டியதாயிருக்கும். மேலும் சந்தாத்தொகைகள் எவ்வளவு வந்திருக்கின்றன வென்றும் இன்னும் பாக்கிக் கொடுக்க வேண்டியவர்கள் யார் யாரென்றும் தெரிந்து கொள்வதன் பொருட்டு சந்தாப்புத்தகம் (Subscription Register) என்றதும் இவ்விதம் எழுதப்படுகிறது:—

நம்.	சந்தாதாரர்களின் பெயர்.	1915௵த்திய குறிப்புகள்					ஷரா.
		சந்தாத் தொகை	வருலான தொகை	பெற்றுக் கொண்ட	முன் பணமாயுள்ள தொகை	வர வேண்டிய பாக்கி	
		ரூ. அ. பை.	ரூ. அ. பை.	தேதி.	ரூ. அ. பை.	ரூ. அ. பை.	
1.	ராமய்யர்	1 0 0	1 0 0	5—1—15			
2.	ஹரிஹரய்யர்	1 0 0	2 0 0	7—1—15	1 0 0		
3.	கணபதி அய்யர்	1 0 0	0 8 0	8—1—15		0 8 0	
4.	கிருஷ்ண அய்யர்	1 0 0	1 8 0	9—1—15	0 8 0		

மேலேயுள்ள சந்தாப்புத்தகத்தில், அநேக பிரிவுகள் ஏற்படுத்தப் படுவதற்குக் காரணம், வருஷமுடிவில் அவ்வருஷத்துக்குரிய வருமானத் தொகை எவ்வளவென்று பார்த்து தொகையை லாபநஷ்டக் கணக்கில் மாற்றுவதற்கும், முன்பணமாகக் கொடுக்கப் பட்ட தொகை நமக்குக் கடனுதலால் பாலன்ஸ் ஷீட்டின் இடது பக்கத்துக்குப் போக வேண்டியதொகை இவ்வளவென்றும், அதுபோலவே பாக்கிவரவேண்டிய சந்தாத் தொகை நமக்கோர் சொத்தாகையால் பாலன்ஸ் ஷீட்டின் வலது பக்கத்துக்குப் போக வேண்டிய திவ்வளவென்றும் பார்த்து மாற்றுவதற்குந்தான்.

பொதுநன்மைக் குரிய சங்கத்தின் லெட்ஜர்கணக்குகள் அநுபந்தத்தில் காட்டப்பட்டிருக்கின்றன.

19-ம் அதிகாரம்.

வட்டிக்கணக்கு.

ஒருவரிடம் நாம் சரக்குகள், ரொக்கம் முதலானவை வாங்கவும் கொடுக்கவு மிருக்குமேயானால், அவர் பேரில் நமது புத்தகத்தில் ஓர் கணக்கு ஏற்படுத்துகிறோம். இந்த லெட்ஜர் கணக்குகளெல்லாம் வியாபாரமுறையில் ஆறு மாதத்திற் கொருமுறையாவது அல்லது மூன்று மாதத்திற் கொரு முறையாவதுதான் முடிவு செய்யப்படுகின்றன. ஆனால் அது வரையில் சரக்குகள் ரொக்கம் முதலானவை கொடுக்கல் வாங்கல் செய்யும்பொழுது அவருடைய பாக்கி எவ்வளவு என்று தெரிந்துகொள்ளாமலிருக்கமுடியாது. அதன் நிமித்தம் "விபரக்குறிப்பு" (Statement of Account) மாதாமாதம் கீழ்வருமாறு லெட்ஜரிலிருந்து எழுதப்பட்டு, பாக்கித் தொகை காண்பிக்கப்படுகிறது. இந்த விபரக்குறிப்பு ஒவ்வொரு மாதக்கடைசியிலும் எழுதப்பட்டு கணக்குள்ளவருக்கு அனுப்பப்படும். வாடிக்கைக்காரர் இதைப்பெற்றுக் கொண்டவுடன், குறிப்பிலுள்ள பதிவுகள் தங்கள் புத்தகங்களிலுள்ள பதிவுகளுக்குச் சரியாயிருக்கின்றனவா வென்று பார்த்து, தொகையை அனுப்புவார். இத்தொகையைப் பெற்றுக் கொண்டதாக வியாபாரியினிடமிருந்து ரசீது அனுப்பப்படும்.

கணக்கு விபரக்குறிப்பு.

பீச் ரோட்,
மதராஸ், மார்ச்சு 1, 1920.

கோபால கிருஷ்ண அண்டு கம்பெனி,
தங்கசாலைத்தெரு, மதராஸ்.

பற்று.

தனம் அண்டு கம்பெனியால்

1920			பற்று			வரவு.		
பிப்.	1	நம். 310 ஜனவரி விபரக் குறிப்புப் படி பற்று பாக்கியால்	418	8	0			
	8	சரக்குக் கணக்கால்	219	3	0			
	10	ரொக்கக் கணக்கால் (செலவுக்காக)	15	4	0			
	19	சரக்குக் கணக்கால்	418	3	0			
	25	நம். 15 பில்லில் குறைந்த தொகை	32	12	0			
			1098	14	0			
பிப்.	5	ரொக்கக் கணக்குக்கு				400	0	0
	12	ரொக்கக் கணக்குக்கு				189	0	0
	,,	தள்ளுபடிக் கணக்குக்கு				58	15	0
	18	நம். 13 பில்லில் அதிகப் பட்ட தொகை				26	8	0
						674	7	0
பிப்.	29	பற்று பாக்கிக்கு				424	7	0
			1098	14	0	1098	14	0
மார்.	1	பற்று பாக்கியால்	424	7	0			

இந்த விபரக்குறிப்பை லெட்ஜர் கணக்கைப் போலவும் எழுதலாம். பற்று விபரங்களை இடது பக்கத்திலும், வரவு

விபரங்களை வரவு பக்கத்திலும் எழுதி பாக்கியைக் காண்பிக்கலாம்.

பிருமிஸரி நோட்டின்மீது பணம் கொடுத்தால் அவ்வுதவியின் பொருட்டு எப்படி வட்டி விதிக்கிறோமோ, அதுபோலவே மேலே குறிப்பிட்டுள்ள ஸ்டேட்மெண்டில் கண்ட விபரங்களுக்கும் பணம்பெறவேண்டி குறிப்பிடப்பட்ட தேதியானவுடன் அந்தந்தவிபரத்தின் தொகைமீது வட்டி விதிக்கப்படவேண்டும். அதுபோலவே வரவு விபரங்களுக்கும் நாம் வட்டிகொடுத்தல் அவசியம். அப்பொழுதுதான் பணம் முழுப் பிரயோஜனத்தை யுடையதாகும். ஆதலின் ஓர் கணக்கில் பற்றுவிபரங்கள்மீது லாப வட்டியும், வரவு விபரங்கள்மீது நஷ்டவட்டியு மிருப்பதால், இவ்விரண்டு வட்டிகளுக்கும் வித்தியாசத்தையும் அக்கணக்கின் பாக்கித் தொகையிலேயே சேர்த்துத் தான் கடைசியாகக் கணக்கை முடிவு செய்யவேண்டும்.

எத் தேதியில் ஓர் வியாபாரம் நடைபெறுகிறதோ அதிலிருந்து மாதக்கடைசியில் விபரக்குறிப்பு அனுப்பும் தேதியினிடையிலுள்ள நாட்களுக்கே வட்டி விதிக்கப்படும். ஒரு வேளை வியாபாரம் ஓர் தேதியில் நடந்து, அதற்குப்பணம் கொடுபடவேண்டிய தேதி வேறொன்றானால், பணம் கொடுபடவேண்டிய தேதியிலிருந்தே வட்டி கணக்குச்செய்யப்பட வேண்டும்.

இவ்விதம் வட்டி கணக்கிடுவதற்கு நாட்களை எண்ணும் பொழுது, வட்டி ஆரம்பிக்கும் முதல் தேதியாவது, கணக்குக் குறிப்பு எழுதப்படும் கடைசி தேதியாவது இரண்டிலொன்று தான் சேர்க்கப்பட வேண்டுமே யல்லாது, முதல்

தேதி கடைசி தேதி ஆகிய இவ்விரண்டையும் சேர்த்துக் கொள்வது முறையாகாது.

உதாரணமாக, மேமீ 15வ யில் ஒரு வியாபாரம் நடந்த தென்றும், மேமீ 2வ யில் ஒரு காரியமென்றும், மேமீ 1வ யில் பழையபாக்கி காண்பிக்கப்பட்ட தென்றும் வைத்துக் கொள்வோம். இவைகளுக்கு நாட்கள் கீழ்கண்டவிதம் கண்டு பிடிக்கவேண்டும். ஜூன்மீ 30வ யில் கணக்கு முடிவடைகிறது.

முதல் விஷயத்தில், வியாபாரம் நடந்த தேதியைவிட்டு விட்டு, கடைசி தேதியைச் சேர்த்துக்கொள்வோம். அப்பொழுது மேமாதத்தில் பாக்கி 16 நாட்களும் ஜூன் மாதத்தில் 30 நாட்களும் சேர்ந்து மொத்தம் வட்டி போடவேண்டிய நாட்கள் 46 ஆகின்றன. இதைப்போலவே இரண்டாவது விஷயத்திலும், வியாபாரம் நடந்த 2-ந் தேதியை விலக்கி, மே மாதத்தில் பாக்கி நாட்கள் 29-ம் ஜூன் மாதத்தில் 30-ம் சேர்ந்து வட்டிக்குரிய நாட்கள் 59 ஆகின்றன. ஆனல் மூன்ருவது விஷயத்தில் கொஞ்சம் கவனம் செலுத்தவேண்டும்; மேமீ முதல் தேதியில் பழைய பாக்கியென்று சொல்லப்பட்டிருக்கிறதாகையால், அத்தொகை முந்தினநாளே கொடுக்கவேண்டியதாகி விடுகிறது. ஆதலின் முந்தின நாளே விட்டு, முதல் தேதியிலிருந்தே வட்டியைக்கணக்குச் செய்ய வேண்டும். ஆனதுபற்றி, மே மாதத்தில் 31 நாட்களும் ஜூன் மாதத்தில் 30 நாட்களும் சேர்ந்து 61 நாட்கள் வட்டிக்குரியனவாகின்றன.

ஒரு மாதத்தின் ஓர் தேதியிலிருந்து வேருெரு மாதத்தின் ஓர் தேதிவரைக்கும் எவ்வளவு நாட்கள் இருக்கின்றன வென்று சுலபமாகக் கண்டுபிடிக்கும்படி கீழேயுள்ள சக்க

பத்தில் எண்கள் கொடுக்கப்பட்டிருப்பதைப் பார்த்துக் கொள்ளவும்.

ஒரு வருஷத்தில் இரண்டு தேதிகளுக்கிடையில் உள்ள நாட்களைக்கண்டு பிடிக்க உபயோகப்படும் சக்கரம்.

ஜன.	பிப்.	மார்.	ஏப்.	மே.	ஜூன்.	ஜூலை.	ஆக்.	செப்.	அக்.	நவம்.	டிச.
1	32	60	91	121	152	182	213	244	274	305	335
2	33	61	92	122	153	183	214	245	275	306	336
3	34	62	93	123	154	184	215	246	276	307	337
4	35	63	94	124	155	185	216	247	277	308	338
5	36	64	95	125	156	186	217	248	278	309	339
6	37	65	96	126	157	187	218	249	279	310	340
7	38	66	97	127	158	188	219	250	280	311	341
8	39	67	98	128	159	189	220	251	281	312	342
9	40	68	99	129	160	190	221	252	282	313	343
10	41	69	100	130	161	191	222	253	283	314	344
11	42	70	101	131	162	192	223	254	284	315	345
12	43	71	102	132	163	193	224	255	285	316	346
13	44	72	103	133	164	194	225	256	286	317	347
14	45	73	104	134	165	195	226	257	287	318	348
15	46	74	105	135	166	196	227	258	288	319	349
16	47	75	106	136	167	197	228	259	289	320	350
17	48	76	107	137	168	198	229	260	290	321	351
18	49	77	108	138	169	199	230	261	291	322	352
19	50	78	109	139	170	200	231	262	292	323	353
20	51	79	110	140	171	201	232	263	293	324	354
21	52	80	111	141	172	202	233	264	294	325	355
22	53	81	112	142	173	203	234	265	295	326	356
23	54	82	113	143	174	204	235	266	296	327	357
24	55	83	114	144	175	205	236	267	297	328	358
25	56	84	115	145	176	206	237	268	298	329	359
26	57	85	116	146	177	207	238	269	299	330	360
27	58	86	117	147	178	208	239	270	300	331	361
28	59	87	118	148	179	209	240	271	301	332	362
29		88	119	149	180	210	241	272	302	333	363
30		89	120	150	181	211	242	273	303	334	364
31		90		151		212	243		304		365

உதாரணமாக, மே மீ 5-ந் தேதிக்கும் அக்டோபர் 29-ந் தேதிக்கும் இடையில் எவ்வளவு நாட்கள் என்று பார்க்கவேண்டுமானால், முதல்காலத்தில். 29-ந்தேதிக்குச் சரியாக அக்டோபர் மாதப் பிரிவில் 302 நாட்கள் வருகின்றன. முதல் பிரிவில் 5-ந் தேதிக்குச் சரியாக மே மாதப்பிரிவில் 125 நாட்கள் வருகின்றன. 302-லிருந்து 125-ஐக் கழித்தால், ஷை 2 தேதிகளுக்கும் நடுவிலுள்ள நாட்களின் மொத்தம் 177 என்று தெரியவரும்.

வட்டியை கண்டுபிடிக்கும் வழி.

ரூ. 100-க்கு ஒரு வருஷத்திற்கு இவ்வளவு வட்டியென்றால், ஒரு ரூபாய்க்கு ஒரு வருஷத்திற்கு, வட்டிவீதமெவ்வளவோ அதை நூறால் வகுக்கவேண்டிவருகிறது. ஒரு நாளைக்கு ஒரு ரூபாய்க்கு வட்டி தெரியவேண்டுமானால், வட்டிவீதத்தை நூறாலும் 365-ஆலும் வகுக்கவேண்டும். விபரத்திலுள்ள தொகைக்கு வட்டிக்குரிய நாட்களுக்கு வட்டி பார்க்கும் பொழுது ஷை 100-ஆலும் 365-ஆலும் வகுக்கப்பட்ட ஈவை விபரத்தொகையாலும் மொத்த நாட்களின் எண்ணிக்கையாலும் பெருக்கவேண்டிய தாகும். ஆகவே இதுதான் சுலபமாக வட்டியைக்கண்டு பிடிக்கக்கூடிய மார்க்கம்:—

$$\text{வட்டித்தொகை} = \frac{\text{விபரத்தொகை} \times \text{மொத்தநாட்கள்} \times \text{வட்டிவீதம்}}{100 \times 365}$$

வகுக்கும் என் 36,500 ஆகிறது பற்றி, மேலும் சுலபமாகும் பொருட்டு வகுக்கும் என் முழு எண்ணிக்கையாயிருந்தால் நலம். ஆகவே, வகுக்கும் என்ணை முழு எண்ணாகச் செய்யும் பொருட்டு 2 ஆல் பெருக்கி வகுக்கப்படும் எண்ணிக்கையையும் இரட்டிப்பு செய்திடுவோம்.

$$\text{வட்டி} = \frac{\text{விபாத்தொகை} \times \text{மொத்தநாட்கள்} \times \text{வட்டிவீதம்} \times 2}{73,000}$$

அல்லது

$$\text{வட்டி} = \frac{\text{விபாத்தொகை} \times \text{மொத்தநாட்கள்} \times \text{இரட்டிப்புவட்டிவீதம்}}{73,000.}$$

வட்டித்தொகையை கணக்குக் குறிப்பிலெழுத மூன்று விதங்களுண்டு.

(1) ஒவ்வொரு வியாபாரத்துக்கும் தனித் தனியாக அத்தொகையின் மீது வட்டி இவ்வளவென்று மேலுள்ள வழியால் கண்டு பிடித்து, பற்று விபரங்களின் வட்டித்தொகைகளுடைய மொத்தத்திற்கும், வரவு விபாங்களின் வட்டித் தொகைகளுடைய மொத்தத்திற்கும் வித்தியாசத்தைக் காண்பித்து அதையும் கணக்கோடு சேர்த்துக்கொள்வது.

(2) மேலே காட்டப்பட்டஉபாயப் பிரகாரம் ஒவ்வொரு வியாபாரத்தின் தொகையை மொத்த நாட்களால் பெருக்கி, பற்றுப் பக்கம் பெருக்குத் தொகைகளின் மொத்தத்திற்கும் வரவு பக்கம் பெருக்குத் தொகைகளின் மொத்தத்திற்கும் வித்தியாசத்தைக் கண்டு பிடித்து, அவ் வித்தியாசத்தை இரட்டிப்பு வட்டி வீதத்தால் பெருக்கி, 73000-ஆல் வகுத்தால் வட்டித்தொகை தெரியவரும். ஆனல் பற்று விபரங்களுக்கு ஒரு வட்டி வீதமும் வரவு விபரங்களுக்கு ஒருவட்டி வீதமும் கொடுக்கப்பட்டால், பற்று வரவு பக்கங்களின் மொத்தப்பெருக்குத் தொகைகளின் வித்தியாசத்தைக் கண்டு பிடிப்பதற்கு முன்பாக, பற்றுப்பக்கம் மொத்த பெருக்குத் தொகையை அப்பக்கத்துக்குள்ள இரட்டிப்பு வட்டி வீதத்தாலும், வரவு பக்கம்

மொத்த பெருக்குத்தொகையை அப்பக்கத்து இரட்டிப்பு வட்டி விதத்தாலும் பெருக்கி, அதன்பிறகு பற்று வரவு பெருக்குத் தொகைகளின் வித்தியாசத்தை 73000-ஆல் வகுத்தால், வட்டித் தொகை தெரியவரும்.

(3) இதுவும் இரண்டாவது மாதிரியைப்போலதான். ஆனால் மேலும் சுலபமாக வட்டிதெரிய வேண்டி, எண்கள் சிறியதாக இருக்க வேண்டு மாதலால், ஒவ்வொரு விபரத்தின் பெருக்குத்தொகையும் 100-ஆல் வகுக்கப்பட்டு விடுகிறது. அதற்கொட்டினதாக, கடைசியில் பற்று வரவு வித்தியாச பெருக்குத்தொகை, 73000-ஆல் வகுக்கப்படுவதற்கு பதிலாக 730-ஆலேயே வகுக்கப் படுகிறது.

இம்மூன்று மாதிரிகளும் கீழுள்ள கணக்குகளைப் பார்ப்பதால் நன்றாக விளங்கும்.

உதாரணமாக, ராமசாமி பிள்ளை என்பவர் 1915 மேயீ 1-ந் தேதியில் ரூ. 250—12—0 பற்று பாக்கியுள்ளாரென்றும், பிறகு கீழுள்ள கொடுக்கல் வாங்கல்கள் அவருடன் நடந்தன வென்றும் வைத்துக்கொள்வோம். வட்டி 5% விதம் விதிக்கப்படுகிறது.

மே.	5. ரொக்கம் பெற்றுக் கொள்ளப் பட்டது	ரூ. 150—0—0
	12. சரக்குகள் ராமசாமி பிள்ளையினிடமிருந்து வாங்கினது	,, 300—0—0
	15. ரொக்கம் கொடுத்தது	,, 500—0—0
	25. சரக்குகள் விற்றது	,, 450—8—0

ஜூன். 4. ராமசாமி பிள்ளையின் மீது பில்
எழுதப்பட்டு அவரால் ஒப்புக்
கொள்ளப்பட்டது. (ஜூன் 28
பணம் வரவேண்டியதேதி) ,, 300—0—0

18. சரக்குகள் வாங்கினது ,, 220—0—0

25. ரொக்கம் பெற்றுக் கொள்ளப்
பட்டது. ,, 145—0—0

28. சரக்குகள் விற்றது ,, 395—0—0

30. ஒப்புக்கொள்ளப்பட்ட பில்லுக்காக
ராமசாமி பிள்ளையினிட மிருந்து
பணம் பெற்றுக் கொள்ளப்
பட்டது. ,, 300—0—0

மேலுள்ள விபரங்களைக்கொண்டு ராமசாமி பிள்ளையின் மீது கணக்கை வட்டியோடு மூன்று விதத்தாலும் எழுதுவோம்.

முதல் விதத்தில், ஒவ்வொரு விபரத்தி னெதிரிலும் அதற்குரிய வட்டித்தொகை இவ்வளவென்றே போடவேண்டுமாகையால், தொகைப் பிரிவுக்கு முன் வட்டித்தொகைக்காக ஓர் பிரிவும் ஏற்படுகிறது.

முன் பக்கத்தில் கண்டிருக்கிற நாட்களைக்கண்டு பிடிக்கும் சக்கரத்தின் பிரகாரம், ஒவ்வொரு விபரத்தின் வட்டிக் குரிய நாட்கள் இவ்வள வென்று தெரிந்து கொள்ளவும்.

மாதிரி I.

பற்று இராமசாமி

தேதி.		விபரம்	நாட்கள்	வட்டித் தொகை			விபாத் தொகை		
1915				ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை
மே.	1	பற்று பாக்கியால்	61	2	1	7	250	12	0
,,	15	ரொக்கத்தால்	46	3	2	5	500	0	0
,,	25	சரக்குக்கணக்கால்	36	2	2	9	450	8	0
ஜூன்.	28	சரக்குக்கணக்கால்	2	0	1	9	395	0	0
,,	30	வட்டிக்கணக்கால்					3	14	6
							1600	2	6
ஜூலை.	1	பற்று பாக்கியால்					485	2	6

வட்டியை கணக்கிடும் பொழுது விபரத்தொகையில் சேர்த்தும், குறைந்தால் விட்டும் விடலாம். வட்டித்தொகை பார்த்து, அவைகளின் வித்தியாசம் லாபவட்டியா நஷ்ட எப்பக்கத்தில் சேரவேண்டுமோ அப்பக்கத்தில் விபாத்

ஜூன் 4-ந்தேதி விபாத்தில் வட்டி சேர்க்கப்படாத பணம் கொடுபடவேண்டிய தேதியேயாம். அத்தேதி ஷை லுக்கு 3-நாட்கள்வழக்கமாகக்கொடுக்கப்படுகின்றன வாகை 30-ந்தேதி விபாத்தில்,ரொக்கக்கணக்குபற்றுகி பில்கணக்கு சோாதது பற்றி கணக்குக் குறிப்பிலும் விடப்பட்டது.

பிள்ளைக் கணக்கு வரவு

தேதி		விபரம்.	நாட்கள்	வட்டித் தொகை			விபரத் தொகை		
1915				ரூ	அ	பை	ரூ	அ	பை
மே.	5	ரொக்கத்துக்கு	53	1	2	5	150	0	0
,,	12	சரக்குக் கணக்குக்கு	49	2	0	3	300	0	0
ஜூன்:	4	பணம் வரவேண்டிய பில் கணக்குக்கு					300	0	0
,,	18	சரக்குக்கணக்குக்கு	12	0	5	9	220	0	0
,,	25	ரொக்கத்துக்கு	5	0	1	7	145	0	0
,,	,	பற்று பாக்கிக்கு					485	2	6
							1600	2	6

அணுக்காலத்தில் 8-க்கு மேலிருந்தால் ஒரு ரூபாயாகச் யின் மொத்தம் ஒவ்வொரு பக்கத்திலும் எவ்வளவென்று வட்டியா என்று கண்டு கொண்டு வித்தியாசத்தொகை தொகையோடு சேர்த்தல் வேண்டும்.

காரணமென்னவெனில், வட்டிக்கு ஆரம்பம் எப்பொழுதும் விபரத்தில் ஜூன் 28. ஜூன் 28-க்குப்பின்னும் பண வரு யால், ஜூன் 30-க்குள் வட்டிக்குள்ள நாட்களில்லை. ஜூன் வரவாகுமாகையால், அந்த விபரம் ராமசாமி பிள்ளையைச்

பற்று மாதிரி 2. இராமசாமி

தேதி		விபரம்	தொகை			நாட்கள்	பெருக்கெண்
1915			ரூ	அ	பை		
மே	1	பற்று பாக்கியால்	250	12	0	61	15311
,,	15	ரொக்கத்தால்	500	0	0	46	23000
,,	25	சரக்குக் கணக்கால்	450	8	0	36	16236
ஜூன்	28	சரக்குக் கணக்கால்	395	0	0	2	790
,,	30	வட்டிக் கணக்கால் $\frac{28872 \times 10}{73000}$	3	15	3		
			1600	3	3		55337
ஜூலை	1	பற்று பாக்கியால்	485	3	3		

வட்டியைக்கண்டு பிடிக்க, விபரத்தொகையை நாட் பெருக்கெண்களின் வித்தியாசத்தை இரட்டிப்பு வட்டிவீதத் விட்டது. முதல் மாதிரியில் காண்பிக்கப்பட்டுள்ள வட்டிக் வித்தியாசமிருப்பதால், அதனாலொன்றும் தவறில்லை.

பற்று இராமசாமி

தேதி		விபரம்	தொகை			நாட்கள்	100ன் மடங்கு
1915			ரூ	அ	பை		
மே	1	பற்று பாக்கியால்	250	12	0	61	153
,,	15	ரொக்கத்தால்	500	0	0	46	230
,,	25	சரக்குக் கணக்கால்	450	8	0	36	162
ஜூன்	28	சரக்குக் கணக்கால்	395	0	0	2	8
,,	30	வட்டிக் கணக்கால் $\frac{289 \times 10}{730}$	3	15	4		
			1600	3	4		553
ஜூலை	1	பற்று பாக்கியால்	485	3	4		

பிள்ளை கணக்கு வரவு

தேதி		விபரம்	தொகை			நாட்கள்	பெருக்கெண்
			ரூ	அ	பை		
1915 மே	5	ரொக்கத்துக்கு	150	0	0	56	8400
,,	12	சரக்குக் கணக்குக்கு	300	0	0	49	14700
ஜூன்	4	பணம் வரவேண்டிய பில் கணக்குக்கு	300	0	0		
,,	18	சரக்குக் கணக்குக்கு	220	0	0	12	2640
,,	25	ரொக்கத்துக்கு	145	0	0	5	725
,,	30	பெருக்கெண் வித்தியாசம்					28872
,,	,,	பற்று பாக்கிக்கு	485	3	3		
			1600	3	3		55337

களின் எண்ணிக்கையால் முதலிலேயே பெருக்கிவிட்டோம். தாலும் பெருக்கி, 73000-ல் வகுக்கவே, வட்டி தெரிந்து கும் இரண்டாவது மாதிரியிலுள்ள வட்டிக்கும் சிறிதளவே

பிள்ளை கணக்கு மாதிரி 3. வரவு

தேதி		விபரம்	தொகை			நாட்கள்	100 ன் மடங்கு
			ரூ	அ	பை		
1915 மே	5	ரொக்கத்துக்கு	150	0	0	56	84
,,	12	சரக்குக் கணக்குக்கு	300	0	0	49	147
ஜூன்	4	பணம் வரவேண்டிய பில் கணக்குக்கு	300	0	0		
,,	18	சரக்குக் கணக்குக்கு	220	0	0	12	26
	25	ரொக்கத்துக்கு	145	0	0	5	7
	30	பெருக்கெண் வித்தியாசம்					289
,,	..	பற்று பாக்கிக்கு	485	3	4		
			1600	3	4		553

இந்த மூன்றாவது மாதிரியில் பெருக்குத்தொகையை நூறால் வகுத்து ஈவை முழு எண்ணிக்கைகளாக (100-ல் பாதிக்கு மேல் போனால் ஒரு நூறாகவும் குறைந்தால் விட்டு விட்டும்) எழுதுகிறோம். எப்பொழுது மேலுள்ள தொகையை 100-ல் வகுத்துவிட்டோமோ, அதுபோலவே வகுக்கும் தொகையான 73000 - ஐயும், 100-ல் வகுக்க வேண்டும். அப்பொழுதே கணக்குச் சரிவர ஆகும். ஆதலால் பெருக்குத் தொகைகளின் வித்தியாசத்தை இரட்டிப்பு வட்டி வீதத்தால் பெருக்கி, 730-ல் மட்டும் வகுத்தால் போதும்.

20-ம் அதிகாரம்.

முடிவு.

இதுவரையிலும் சொல்லப்பட்ட விஷயங்களே ஓர் தொழிலின் கணக்குகளை ஒழுங்காக வைத்துக் கொள்வதற்கு போது மானவையாகையால் இதோடு நிறுத்தினோம்.

இரட்டைப் பதிவு என்ற ஓர் முக்கிய சாதனத்தால் நாம் எவ்விதமான கணக்குகளையும் யாதொரு தப்பிதமில்லாமல் எழுதக்கூடும். வியாபாரத்தின் பொருட்டு கணக்குகளேயன்றி கணக்குகளின் பொருட்டு வியாபாரமல்ல. கணக்குகள் ஒழுங்காக யிருக்கவேண்டுமே யென்று வியாபாரத்தைச் சிறுமை செய்வது மதியீனம். வியாபாரம் பெருகி விட்டால், ஒற்றைப் பதிவின் மூலம் கணக்குகளை வைப்பது கடினம் என்றஞ்சுவோர்க்கு, இரட்டை பதிவு என்ற முறைதான் அவர்கள் குறையைத் தீர்க்க வல்லது.

வியாபாரத்தில் எவ்வளவோ விதங்கள் உண்டு. ஒவ்வொன்றுக்கும் கணக்கு வைக்குமுறையை நாம் எழுதிக்

காட்டுவது முடியாத காரியம். ஒவ்வொன்றுக்கும் ஓர்மாதிரி யைக் காண்பித்து அதைப் போலவே மற்ற எவ்வித வியா பாரங்களுக்கும் இரட்டைப் பதிவு மூலம் கணக்குகளை வைத் துக் கொள்வது சுலபமாகி விடுகிறது.

நமது தேசம் முன்னேற்ற மடைய வேண்டுமானால், நமது தொழிலே முதன்மைபெற வேண்டும். தொழிலை முதன்மையாக்க இந்நூல் அவசியமானதாகு மென்று மறு முறைசொல்வது மிகையாது.

வர்த்தகக்கணித நூல்,

முற்றிற்று.

அனுபந்தம். 1.

முடிவுக்கணக்குகளை எழுதுமுன் கவனிக்க வேண்டிய தாயும் 12-ம் அதிகாரத்தின் இறுதியில் சொல்லப்பட்ட விஷயங்களை ஒட்டிகீழ்வரும் கணக்குபோடப்பட்டிருக்கிறது.

ராமன் என்பவரும் கிருஷ்ணன் என்பவரும் சமமாக முதல் போட்டு ராமகிருஷ்ணு அண்டு கம்பெனி என்ற பெயருடன் வியாபாரம் செய்தார்கள். டிசம். 31வ கம்பெனி கணக்குகள் முடிவுபெறும்பொழுது, கீழ்வருமாறு பாக்கி ஜாப்தா எடுக்கப்பட்டது:—

பாங்கில் ரொக்கயிருப்பு ரூ. 3000. வியாபாரத்திலுப யோகப்படும் யந்திரங்களின் பெறுமானம் ரூ. 8000, வியா பார ஆரம்பத்தில் அச்சுயந்திரங்களின் பெறுமானம் ரூ. 7200. வியாபாரஆரம்பத்தில் யந்திர சாமான்களின் பெறுமானம் ரூ. 1500: வருஷத்தில் சாமான்களின் விற்று முதல் மொத்தம் ரூ. 199,600. கடன்காரர்களிடமிருந்து வரவேண்டிய சொத்துகள் ரூ. 7100. விற்பனை ஏஜெண்டு ராகவாசாரியாருக்குக் கொடுபட்ட கமிஷன் ரூ. 4600. ராமன் என்பவரின் முதல் கணக்கின் பாக்கி ரூ. 5500. கிருஷ்ணன் என்பவரின் முதல் கணக்கு பாக்கி ரூ. 5100. வேலைக்காரர் களுக்கு வருஷத்தில் கொடுக்கப்பட்ட மொத்த கூலி ரூ.25,140. வியாபாரக்கட்டடத்தின் பெறுமானம் ரூ.3000. பணம்கொடுபடவேண்டிய பில்லுகளின் தொகை ரூ. 3850. ராமய்யசெட்டியாரிடமிருந்துகடன்வாங்கப்பட்டதொகை ரூ. 4000. வருஷத்தில் யந்திர சாமான்களின் கொள் முதல் மொத்தம் ரூ. 145,600. கொடுக்கவேண்டிய கடன்களின்

மொத்தம் ரூ.4400. வியாபாரச்செலவு ரூ.800. ரயில்முதலிய போக்குவரவு செலவு ரூ.3400. ராமன் என்பவரின் பற்றுக் கணக்குபாக்கி ரூ. 1200. கிருஷ்ணன் என்பவரின் பற்றுக் கணக்குபாக்கி ரூ. 900. நஷ்டக்கடன்களின் தொகை ரூ. 1020. வாடகை, வரி முதலிய செலவுகள் ரூ. 2100.

கணக்குகளை முடிக்குமுன் கீழுள்ளவைகள் கவனிக்கப் படவேண்டும்:—

வியாபாரச்சாலை யந்திரங்களின் மீது பெறுமானக் குறைவு செய்யவேண்டியது 5%. ராமய்யசெட்டியாருக்கு 5% வீதம் ஒருவருஷவட்டி செலுத்தப்படவேண்டியது. எதிர் பார்க்கப்பட்ட நஷ்டக்கடன்கள் ரூ. 320. ஏஜெண்டுகளுக்கு இன்னும் கொடுபடவேண்டியகமிஷன் ரூ.700. முதலின்மீது வட்டி 5%. வியாபார முடிவில் அச்சுயந்திரங்களின் பெறுமானம் ரூ.7400. யந்திரசாமான்களின் பெறுமானம் ரூ.2000.

மேலுள்ள விபரங்களைக் கொண்டு நாம் பாக்கி ஜாப்தா, வியாபாரச்சரக்குக்கணக்கு, லாப நஷ்டக்கணக்கு, பாலன்ஸ் ஷீட் முதலியவைகளை தயார் செய்வோம்.

ராமகிருஷ்ணு அண்டு கம்பெனியின்

“ட்ரயல் பாலன்ஸ்” பற்று, வரவு.

	ரூ	அ	பை	ரூ	அ	பை.
ராமன் முதல் கணக்கு				5500	0	0
கிருஷ்ணன் முதல் கணக்கு				5100	0	0
ராமன் பற்றுக் கணக்கு	1200	0	0			
கிருஷ்ணன் பற்றுக் கணக்கு	900	0	0			
யந்திரங்கள் கணக்கு	8000	0	0			
வியாபாரக் கட்டடம்	3000	0	0			
கூலிக் கணக்கு	25140	0	0			
கமிஷன் கணக்கு	4600	0	0			
வியாபாரச் செலவு கணக்கு	800	0	0			
யந்திர சாமான்கள் விற்று முதல்				199600	0	0
யந்திர சாமான்கள் கொள்முதல்	145600	0	0			
நஷ்டக் கணக்குகள்	1020	0	0			
வாடகை வரி முதலியன	2100	0	0			
ரயில் செலவு முதலியன	3400	0	0			
வரவேண்டிய கடன்கள்	7100	0	0			
கொடுக்க வேண்டிய கடன்கள்				4400	0	0
பணம் கொடுபட வேண்டிய பில்லுகள்				3850	0	0
அச்சு யந்திரங்கள் பெறுமானம், ஜன 1.	7200	0	0			
யந்திர சாமான்கள், ஜன 1.	1500	0	0			
ராமய்ய செட்டியாரின் கடன்				4000	0	
பாங்கில் கையிருப்பு ரொக்கம்	10890	0	0			
ஆக மொத்தம்	222450	0	0	222450	0	0

பற்று வியாபாரச் சரக்குக் கணக்கு வரவு

	ரு	அ	பை		ரு	அ	பை
அச்சு யந்திரங்கள் பெறுமானம், ஜன 1	7200	0	0	யந்திர சாமான்கள் விற்று முதல்	199600	0	0
யந்திர சாமான்கள், ஜன 1	1500	0	0	வியாபார முடிவில் அச்சு யந்திரங்கள் பெறுமானம்	7400	0	0
யந்திர சாமான்கள் கொள் முதல்	145600	0	0	,, ,, யந்திர சாமான்களின் பெறுமானம்	2000	0	0
கூலிக் கணக்கு	25140	0	0				
லாப நஷ்டக் கணக்கால் (மொத்த லாபம்)	29560	0	0				
	209000	0	0		209000	0	0

பற்று — லாப நஷ்டக் கணக்கு. — வரவு

		ரூ	அ	பை		ரூ	அ	பை
கமிஷன் கணக்கால்	ரூ. 4600				வியாபாரச்சரக்குக் கணக்கால்	29560	0	0
பாக்கி	,, 700	5300	0	0				
வியாபாரச் செலவு கணக்கால்		800	0	0				
நஷ்டக் கடன்கள்	ரூ. 1020							
நஷ்ட ஈடு	,, 320	1340	0	0				
வாடகை வரி முதலியன		2100	0	0				
ரயில் செலவு முதலியன		3400	0	0				
யந்திரங்களின் பெறுமானக் குறைவு (5%—8000)		400	0	0				
வட்டிக் கணக்கால் (ராமய்ய செட்டியார் கடன் ரூ 4000·5%)		200	0	0				
ராமன் என்பவரின் முதல் மீது வட்டி (5500—5%)		275	0	0				
கிருஷ்ணன் என்பவரின் முதல் மீதுவட்டி (5100—5%)		255	0	0				
ராமன் முதல்கணக்கால் (மிச்ச லாபம்)		7745	0	0				
கிருஷ்ணன் முதல் கணக்கால் (மிச்ச லாபம்)		7745	0	0				
		29560	0	0		29560	0	0

கடன்கள்	ரூ	அ	பை	பாலன்ஸ் ஷீட் சொத்துகள்	ரூ	அ	பை
ராமய்ய செட்டியார்							
கடன் ,, ரூ. 4000				பாங்கில் கையிருப்பு ரொக்கம்	10890	0	0
வட்டி ,, ,, 200	4200	0	0	யந்திரங்கள். ரூ. 8000.			
கொடுக்க வேண்டிய கடன்கள்	4400	0	0	பெறுமானக்குறைவு 400	7600	0	0
பணம் கொடுக்க வேண்டிய				வியாபாரக் கட்டடம்	3000	0	0
பில்லுகள்.	3850	0	0	வரவேண்டிய கடன்கள்:—			
ஏஜெண்டுக்குக் கொடுக்கவேண்				ரூ. 7100.			
டிய கமிஷன் பாக்கி	700	0	0	வருமான செலவு ஈடு 320	6780	0	0
ராமன் முதல் கணக்கு				அச்சுயந்திரங்களின் பெறு			
ரூ. 5500				மானம், டிசம் 31.	7400	0	0
வட்டி ,, 275				யந்திர சாமான்களின் பெறு			
மிச்ச லாபம் ,, 7745				மானம், டிசம் 31.	2000	0	0
13520							
பற்றுக் கணக்கு 1200	12320	0	0				
கிருஷ்ணன் முதல் கணக்கு							
ரூ. 5100							
வட்டி ,, 255							
மிச்ச லாபம் ,, 7745							
13100							
பற்றுக் கணக்கு 900	12200	0	0				
	37670	0	0		37670	0	0

VI

மாதிரி 2. சென்னை, வாசகசாலை யொன்றில் கீழ்வரும் வரவு செலவுகள் நடந்தனவென்று வைத்துக்கொண்டு முடிவுக் கணக்குகளை தயார் செய்வோம்.

ஜன. 1-ந்தேதி. ரொக்கக் கையிருப்பு ரூ. 250. பாங்கில் ரொக்க யிருப்பு ரூ. 2000. கட்டடங்களின் பெறுமானம் ரூ. 3500. மாசாமான்களின் பெறுமானம் ரூ. 600. வாசக புஸ்தகங்களின் பெறுமானம் ரூ. 900. வரவேண்டிய முன் வருஷத்து சந்தாக்கள் ரூ. 45. பத்திரிகைக் காரர்களுக்குக் கொடுக்கவேண்டிய ரூ. 60.

முன் வருஷ பாக்கி உள்பட வருஷத்தில் வசூலான சந்தாவின் தொகை	ரூ.	1600—0—0
வாசகசாலைக்கு வழங்கப்பட்ட தர்மம்	,,	500—0—0
சந்தா தாரர்களின் சேருதல் கட்டணம்	,,	75—0—0
பத்திரிகைகளுக்குக் கணக்குத் தீர்த்துக் கொடுத்தது	,,	60—0—0
வாசக சாலைக்காகப் புஸ்தகங்கள் வாங்கினது	,,	300—0—0
வாசகசாலையில் வாங்கி சேர்க்கப்பட்ட மர சாமான்கள்	,,	300—0—0
பழைய பத்திரிகைகளை விற்றது	,,	60—0—0
பத்திரிகைகளை வரவழைக்க சந்தா கட்டினது	,,	250—0—0

பழைய புஸ்தகங்களை விற்றது	,,	100—0—0
தபால், ஸ்டாம்பு, காகிதம் முதலான செலவுகள்	,,	40—0—0
விளக்கு செலவு முதலானவை	,,	60—0—0
சம்பளம், கூலி முதலியன	,,	70—0—0
பாங்கிலிருந்து ரொக்கம் பெற்றுக் கொண்டது	,,	250—0—0

வருஷ முடிவில் கட்டடங்களின் மீது 5%ம் ஆரம்பத்திலிருந்த மாசாமான்களின் மீது 5%ம் புஸ்தகங்களின் மீது ரூ. 30ம் பெறுமானக் குறைவு தள்ளவேண்டும். சந்தாதாரர்களிடமிருந்து வரவேண்டிய பாக்கி ரூ. 115. இந்த பாக்கியில் ரூ. 15 நஷ்டக் கணக்கிலெழுதப்படவேண்டும். முன் பணமாக சந்தாதாரர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது ரூ. 85. பத்திரிகைகளுக்குக் கொடுக்கவேண்டிய சந்தா பாக்கி ரூ 30. கொடுக்க வேண்டிய பாக்கிச் சம்பளம் ரூ. 30. கையிருப்பு ஸ்டாம்புகள் ரூ. 12-8.

பற்று							வாசக சாலையின் வருமான செலவு கணக்கு						வரவு
செலவு	ரூ	அ	பை	ரூ	அ	பை	வருமானம்	ரூ	அ	பை	ரூ	அ	பை
பத்திரிகைகளுக்குச்சந்தா							வசூலான சந்தாத் தொ						
செலவு	250	0	0				கை	1600	0	0			
பாக்கித் தொகை	30	0	0				பழைய பாக்கி ரூ. 45						
				280	0	0	முன் பணம் ,, 85	130	0	0			
தபால் ஸ்டாம்பு முதலிய													
செலவு	40	0	0					1470	0	0			
கையிருப்பு ஸ்டாம்புகள்	12	8	0				வசூலாகாத பாக்கி	115	0	0			
				27	8	0					1585	0	0
விளக்குச் செலவு				60	0	0	வாசகசாலை தர்மம்				500	0	0
சம்பளம், கூலி முதலிய							சேருதல் கட்டணம்				75	0	0
செலவு	70	0	0				பத்திரிகைகளின் விற்று						
பாக்கிச் சம்பளம்	30	0	0				முதல்				60	0	0
				100	0	0							
நஷ்டமான சந்தாத் தொ													
கை				15	0	0							
பெறுமானக் குறைவு:—													
கட்டடங்கள் (5%-3500)	175	0	0										
மரசாமான்கள் (5%—													
600)	30	0	0										
புஸ்தகங்கள்	30	0	0										
				235	0	0							
அதிக வருமானம்				1502	8	0							
				2220	0	0					2220	0	0

XI

பற்று — டி. வாசகசாலையின் ரொக்கக் கணக்கு — வரவ

பற்று	ரூ	அ	பை	வரவ	ரூ	அ	பை
ஜன. 1. ரொக்கக் கையிருப்பு ...	250	0	0	பத்திரிகைகளுக்குக் கொடுத்த தொகை ...	60	0	0
சந்தாத் தொகை ...	1600	0	0	புஸ்தகங்கள் வாங்கின வகையில் ...	300	0	0
வாசகசாலை தர்மம் ...	500	0	0	மரசாமான்கள் வாங்கின வகையில் ...	300	0	0
சேருதல் கட்டணம் ...	75	0	0	பத்திரிகைகளுக்கு சந்தா ...	250	0	0
பழைய பத்திரிகைகளை விற்ற வகையில் ...	60	0	0	தபால் செலவு ...	40	0	0
பழைய புஸ்தகங்களை விற்ற வகையில் ...	100	0	0	விளக்கு முதலிய செலவு ...	60	0	0
பாங்குக் கணக்கால் ...	250	0	0	சம்பளம் முதலியன ...	70	0	0
				அதிகப் பற்றுக்கு ...	1755	0	0
	2835	0	0		2835	0	0
அதிகப் பற்றால் ...	1755	0	0				

பற்று — பாங்குக் கணக்கு — வரவு

	ரூ	அ	பை		ரூ	அ	பை
ஜன. 1. பாக்கி யிருப்பு ...	2000	0	0	ரொக்கக் கணக்குக்கு ...	250	0	0
				அதிகப் பற்றுக்கு ...	1750	0	0
	2000	0	0		2000	0	0
அதிகப் பற்ருல் ...	1750	0	0				

XI.

வருஷ ஆரம்பத்திலிருந்த பழைய பாக்கி சந்தா பாலன்ஸ் ஷீட்டில் தோன்ருது. ஏனெனில், வருஷத்து சந்தாத்தொகையோடு அதுவும் சேர்ந்தே வசூலாகிவிட்டது. பத்திரிகைகளுக்குக் கொடுக்க வேண்டிய ரூ. 60-ம் தீர்ந்து விட்ட படியால், அதுவும் பாலன்ஸ் ஷீட்டில் காணப்படாது.

கடன்கள் **பாலன்ஸ் ஷீட்.** சொத்துகள்

கடன்கள்				ரூ	அ	பை
சந்தாதாரர்களின் முன் பணம்.				85	0	0
பத்திரிகைகளுக்கு சந்தா பாக்கி.				30	0	0
பாக்கிச் சம்பளம் ...				30	0	0
முதல் கணக்கு.						
வருஷ ஆரம்பத்தில் ...	7235	0	0			
வருஷ வருமானம் ...	1502	8	0			
				8737	8	0
				8882	8	0

சொத்துகள்				ரூ	அ	பை
ரொக்கக் கையிருப்பு:—						
ஆபீஸில் ...	1755	0	0			
பாங்கில் ...	1750	0	0	3505	0	0
வரவேண்டிய சந்தாத் தொகை.	115	0	0			
நஷ்ட ஈடு ...	15	0	0	100	0	0
புஸ்தகங்கள் கையிருப்பு:—						
வருஷ ஆரம்பத்தில் ...	900	0	0			
பின் வாங்கப்பட்டது ...	300	0	0			
	1200	0	0			
பெறுமானக் குறைவு ரூபா 30. விற்கப்பட்டது ரூ. 100.	130	0	0	1070	0	0
மரசாமான்கள் கையிருப்பு :—						
வருஷ ஆரம்பத்தில் ...	600	0	0			
பெறுமானக் குறைவு ...	30	0	0			
	570	0	0			
பின் சேர்க்கப்பட்டது...	300	0	0	870	0	0
கட்டடங்கள்:—						
ஆரம்பத்தில் ...	3500	0	0			
பெறுமானக் குறைவு ...	175	0	0	3325	0	0
கையிருப்பு ஸ்டாம்புகள்.				12	8	0
				8882	8	0

அனுபந்தம் 2.

[இப்புத்தகத்தில் காணப்பட்டுள்ள விஷயங்களை நன்றாக அறிந்து கொள்வதன்பொருட்டு கணக்குகள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன. அக்கணக்குகளை செவ்வனே முடித்து பதில்களை பின்னால் கொடுக்கப்பட்டவைகளோடு ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்ளவும்.]

கணக்கு 1.

ஜன. 1. கோபாலகிருஷ்ண அண்டு கம்பெனியாரின் சொத்துக் கடன்கள் கீழ் வருமாறு:—கையிருப்பு ரொக்கம் ரூ.450. பாங்கு ரொக்கம் ரூ. 2,000. கையிருப்புச் சரக்கு ரூ. 1,500. கட்டடங்களின் பெறுமானம் ரூ. 4,000. வரவேண்டிய கடன்கள்:—முருகேச முதலியார் ரூ. 400. ஆறுமுக செட்டியார் ரூ. 350. கொடுக்கவேண்டிய கடன்கள்:—சிங்காரம் பிள்ளை ரூ. 560. ராமய்ய செட்டியார் ரூ. 480.

ஜனவரி மாதத்தில் கீழ்வரும் நடவடிக்கைகள் நடந்தன:—

ஜன. 1.	சிங்காரம் பிள்ளைக்குச் சரக்குகள் விற்றது.	ரூ.	600
	முருகேச முதலியாருக்குச் சரக்குகள் விற்றது.	,,	200
	ஜனவரி மாதத்திற்கு முன்பணம் வாடகை கொடுத்தது.	,,	50

ஜன.	3.	முருகேச முதலியாரிடமிருந்து செக்கு பெற்றுக்கொண்டு பாங்குக்கு அனுப்பியது.	ரூ.	500
		ரொக்கம் பாங்கில் கட்டினது.	,,	250
,,	7.	ஆறுமுக செட்டியாருக்கு ரொக்கத்துக்குச் சரக்குகள் விற்றது.	,,	300
,,	9.	பகவான் அண்டு கம்பெனியிலிருந்து சரக்குகள் வாங்கி செக்கு மூலமாய் கொடுத்தது.	,,	750
,,	10.	ரொக்க விற்று முதல்:	,,	540
,,	11.	நேற்று ரொக்க விற்றுமுதல் பாங்குக் கனுப்பப்பட்டது.	,,	540
,,	13.	ராமய்ய செட்டியாருக்குச் செக்கு மூலமாய்க்கொடுத்துக் கணக்குத் தீர்த்ததில் ரூ. 30 தள்ளுபடி கொடுக்கப்பட்டது.		
,,	15.	முதலாளியின் சொந்தச் செலவுக்காகச் செக்கு மூலமாய் வாங்கப்பட்டது.	,,	200
,,	21.	பிச்சை ராவுத்தர் அவர்களிடமிருந்து சரக்குகள் வாங்கினது.	,,	350
,,	24.	ராமச்சந்திரய்யருக்கு சரக்குகள் விற்றது.	,,	400
,,	25.	பிச்சை ராவுத்தர் அவர்களிடமிருந்து வாங்கின சரக்குகளில் கொஞ்சம் திருப்பப்பட்டது.	,;	70

ஜன.	27.	பிச்சை ராவுத்தருக்குச் செக்கு மூலமாய்க் கொடுத்துக் கணக்கு தீர்த்தது.	ரூ. 260
,,	29.	ராமச்சந்திரய்யரிடமிருந்து செக்கு பெற்றுக்கொள்ளப்பட்டு பாங்குக்கு அனுப்பப்பட்டது.	,, 300
,,	31.	ஷை ராமச்சந்திரய்யரின் செக்கு பாங்கினுல் திருப்பப்பட்டது.	
,,	,,	டெலிபூன் கம்பெனிக்குக் கொடுத்தது.	,, 30
		வியாபாரச் செலவுகள்.	,, 75
		சம்பளம், கூலி முதலியன.	,, 125
		ஓட்டு செலவு முதலியவை.	,, 20

முதலின்மீது 6% வட்டி செலுத்தப்படவேண்டும். கட்டடங்களின் மீது 4o/o பெறுமானக் குறைவு தள்ளவேண்டும். மாதமுடிவில் கையிருப்புச் சரக்குகள் ரூ. 840.

இக் கணக்கிலிருந்து மாதமுடிவில் ரொக்க மெவ்வளவு கையிருப்பென்றும், பாங்கில் எவ்வளவு ரொக்கமென்றும், மொத்த லாபம், மிச்சலாபம், முடிவு முதல் தொகை எவ்வளவென்றும் கண்டு பிடித்தல் வேண்டும்.

பதில் :—கையிருப்பு ரொக்கம் ரூ. 200. பாங்கில் இருப்பு ரொக்கம் ரூ. 1,630. மொத்த லாபம் ரூ. 350: மிச்சலாபம் ரூ. 48-5-10. முடிவு முதல் தொகை ரூ. 7,546-10-8.

கணக்கு 2.

ஜன. 1. ராமன் அண்டு கம்பெனியாரின் சொத்துக் கடன்கள் கீழ் வருமாறு :—ரொக்கக் கையிருப்பு ரூ. 1,500.

பாங்கில் ரொக்கம் ரூ. 5,000. மணி அண்டு கம்பெனிக்குக் கொடுக்கவேண்டியது ரூ 2,300. பணம் கொடுக்க வேண்டிய பில்கள் ரூ. 760. வரவேண்டிய பில்கள் ரூ. 695. கோபால் ராவ் என்பவரிடமிருந்து வரவேண்டிய தொகை ரூ. 550. சரக்குக் கையிருப்பு ரூ. 1,225.

ஜனவரி மாதத்தில் கீழ் வரும் கொடுக்கல் வாங்கல்கள் நடந்தன:—

ஜன.	1.	பணம் வரவேண்டிய பில்களை பணம் வசூலிக்கும் பொருட்டு பாங்குக்கு அனுப்பியது.	ரூ.	550
,,	4.	கோவிந்தப்பருக்குச் சரக்குகள் விற்றது.	,,	600
,,	7.	கோவிந்தய்யரின்மீது ரூ. 600-க்கு எழுதப்பட்ட பில் அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது.		
,,	8.	கோபால் ராவ் என்பவரிடமிருந்து ரூ. 550-க்கு ஓர் பில் என்டார்ஸ் செய்யப்பட்டு வந்தது.	,,	550
,,	14.	கோபால் ராவ் என்பவரிடமிருந்து சரக்குகள் வாங்கி அவரால் எழுதப்பட்ட பில் ஒப்புக் கொள்ளப்பட்டது.	,,	800
,,	19.	ராமன் செட்டியாருக்குச் சரக்குகள் விற்றது.	,,	1,200
,,	23.	ராமன் செட்டியாரால் ரூ. 1,200-க்கு ஒப்புக்கொள்ளப்ப்ட்ட பில் மணி		

	அண்டு கம்பெனிக்கு எண்டார்ஸ் செய்யப்பட்டது.		
ஜன. 25.	மணி அண்டு கம்பெனிக்குச் செக்கு மூலமாய் ரூ. 600-ம் சரக்குகள் மூலமாய் ரூ. 450-ம் கொடுத்துக் கணக்குத் தீர்த்தது.		
,, 26.	கோபால் ராவ் என்பவரின் ரூ. 550-க்குள்ள பில்லை பாங்கில் டிஸ்கவுண்டு செய்தது.		
	தள்ளுபடி செய்யப்பட்டது.	ரூ.	10
,, 27.	கோபால் ராவ் என்பவரின் ஷை பில் பணம் கொடுக்கப்படாமல் திருப்பப்பட்டது. நோடிங்செலவு.	,,	3
,, 29.	பணம் கொடுக்கவேண்டிய பில்களுக்குச் செக்கு மூலமாய்க் கொடுத்தது.	,,	750
	தள்ளுபடி கொடுக்கப்பட்டது.	,,	10
,, ,,	கோபால் ராவ் திருப்பப்பட்ட பில்லின் மீது நோடிங் செலவுக்கும் வட்டிக்குப் சேர்த்து ரூ. 580 க்கு பிராமிஸரி கோட்டு எழுதிக் கொடுத்தார்.		
,, 30.	சரக்குகள் ரொக்கத்திற்கு விற்றது.	,,	400
,, 31.	ஷை ரொக்கம் பாங்குக்கு அனுப்பப்பட்டது.		
,, ,,	வாடகை கொடுத்தது ரூ. 75. சம்பளம் கொடுத்தது ரூ. 155. வியாபாரச் செலவுகள் ரூ. 40. கையிருப்புச்சரக்குகளின் பெறுமானம்.	,,	650

இவைகளிலிருந்து, ரொக்கபாக்கி, பாங்குபாக்கி, மொத்தலாபம், மிச்சலாபம், முடிவுமுதல் முதலியவைகளைக் கண்டுபிடிக்கவும்.

பதில்:—ரொக்கயிருப்பு ரூ. 1227. பாங்கில் இருப்பு ரொக்கம் ரூ 4590. மொத்தலாபம் ரூ 1275. மிச்சலாபம். ரூ 1082. முடிவுமுதல் ரூ 6992.

கணக்கு. 3.

ஷண்முகம் பிள்ளை என்பவரும் தண்டபாணி பிள்ளை என்பரும் கூட்டு வியாபாரம் செய்ததில் வருஷமுடிவில் கீழ்க்கண்ட பாக்கிகள் இருந்தன:—

ஷண்முகம்பிள்ளையின் ஆரம்பமுதல	ரூ.	4000
தண்டபாணி பிள்ளையின் ஆரம்பமுதல்	,,	3830
வருஷத்தில் கொள்முதல் மொத்தம்	,,	24000
விற்று முதல் மொத்தம்	,,	45000
ஆரம்பத்தில் சரக்குக்கையிருப்பு	,,	7200
வியாபாரச்செலவு	,,	1400
வண்டி, கூலி முதலியசெலவுகள்	,,	800
வரி முதலானவை	,,	340
சம்பளச் செலவு	,,	1600
கமிஷன் செலவு	,,	300
பணம்வரவேண்டிய பில்கள்	,,	1800
கடன் கொடுக்கவேண்டியவர்கள்	,,	6700
கையிருப்பு ரொக்கம்	,,	650
பாங்கில் ரொக்க யிருப்பு	,,	3200
கட்டடங்களின் பெறுமானம்	,,	5600
மரசாமான்களின் பெறுமானம்	,,	740

ஷண்முகம்பிள்ளை பற்றுத்தொகை	ரூ.	400
தண்டபாணிபிள்ளை பற்றுத்தொகை	,,	500
கடன்பெற வேண்டியவர்கள்	,,	2400

முதல்களின்மீது வட்டி 6o/o வீதம் போடப்படவேண்டும். கட்டடங்களின் மீது 3o/o பெறுமானக்குறைவு தள்ள வேண்டும். நஷ்டக்கடனகள் ஈடு 5o/o ம் நஷ்டத்தள்ளுபடிக்காக ஈடு ரூ. 100 ம் செய்யவேண்டும். வருஷமுடிவில் கையிருப்புச்சரக்கு ரூ 8750. லாபநஷ்டங்களை இருமுதலாளிகளும் 4:3 வீதம் பிரித்துக்கொள்ளுகிறார்கள்.

இக்குறிப்புகளிலிருந்து முடிவுக்கணக்குகளைப் போட்டு மிச்சலாபம், முடிவுமுதல் தொகை முதலியவைகளைக் கண்டு பிடிக்கவேண்டும்.

பதில்:—மொத்தலாபம்	ரூ.	22,550
மிச்சலாபம்:—ஷண்முகம் பிள்ளை	ரூ.	9,735-8-8
தண்டபாணிபிள்ளை	ரூ.	7,301-10-6
முடிவுமுதல்:—ஷண்முகம் பிள்ளை	ரூ.	13,575-8-8
தண்டபாணி பிள்ளை	ரூ.	10,861-7-4

கணக்கு 4.

கண்ணன் செட்டியார் என்பவர் தன் வியாபாரக் கணக்குகளை ஒற்றைப்பதிவு மூலம் வைத்திருக்கிறார். வருஷக் கடைசியில் கீழ்வரும் பாக்கிகள் வியாபாரத்தில் காணப்பட்டுள்ளன;—

ரொக்கக் கையிருப்பு	ரூ.	2,300
பாங்கிலிருந்து ஓவர் ட்ராப்ட்	,,	560
(அதிகமாகப் பெற்றுக்கொண்டது)		

பணம் வரவேண்டிய பில்கள்	ரூ.	3,400
வரவேண்டிய கடன்கள்	,,	5,450
பணம் கொடுக்கவேண்டிய பில்கள்	,,	3,720
கொடுக்கவேண்டிய கடன்கள்	,,	1,340
சாக்குக் கையிருப்பு	,,	5,680
வாடகை வரவேண்டிய பாக்கி	,,	320

வருஷ ஆரம்பத்தில் முன்வருஷ பாக்கி ஜாப்தாப்படியுள்ள முதல் தொகை ரூ. 9,800.

கீழுள்ள அம்சங்கள் வியாபாரத்தில் நடந்துள்ளன:—

கண்ணன் செட்டியாரால் பெற்றுக் கொள்ளப்பட்ட தொகை ரூ. 550. அதன்மீது வட்டி ரூ. 15. ஜுலை 1வ யில் சேர்க்கப்பட்டமுதல் தொகை ரூ. 500 உள்பட வட்டி 5% வீதம் கணக்கிடப்பட்டது.

மேலுள்ள குறிப்புகளிலிருந்து லாபநஷ்டக் கணக்கும், சொத்து கடன்கள் குறிப்பும் எழுதவேண்டும்.

பதில்:— மிச்சலாபம் ரூ. 1,292-8-0

முடிவு முதல்தொகை ரூ. 11,530-0-0

கணக்கு 5.

ஜன 1. ராஜம் அய்யர் என்பவரும் கோபால அய்யர் என்பவரும் ராஜகோபால் அண்டு கம்பெனி யென்ற பெயரோடு கூட்டுவியாபாரம் செய்ததில் கீழ்வரும் சொத்துக்கடன்கள் இருந்தன:—

ரொக்கக் கையிருப்பு ரூ. 650. பாங்கில் கையிருப்பு ரொக்கம் ரூ. 4,320. பணம்வரவேண்டிய பில்கள் ரூ. 5,220 பணம் கொடுக்கவேண்டிய பில்கள் ரூ. 1,450. கையிருப்புச்

சரக்கு ரூ. 1,4150. வரவேண்டிய கடன்கள் ரூ. 14,100. கொடுக்கவேண்டிய கடன்கள் ரூ. 7400. மரசாமான்களின் பெறுமானம் ரூ. 600. ரொக்கப்பத்திரங்களின் பெறுமானம் ரூ. 2,500.

ராஜம் என்பவர் மார்ச்சு 1உ யில் ரூ. 600ம் கோபால அய்யர் அக்டோபர் 1உ யில் ரூ. 900-ம் பற்று செய்து கொண்டார்கள். அவர்கள் முதல் தொகைகளின்மீதும் பற்றுத் தொகைகளின் மீதும் 6% வீதம் வட்டி விதிக்கப்பட வேண்டும். ராஜம் என்பவருக்கு மாதமாதம் ரூ. 80 சம்பளமும் கொடுக்கப்படவேண்டும். வியாபாரமுடிவில் மிச்ச லாபம் ரூ. 3,422.

இக் குறிப்புகளிலிருந்து ஒவ்வொரு முதலாளியின் முடிவு முதல் எவ்வளவென்று கண்டுபிடிக்கவும்.

பதில்:— ராஜம் என்பவரின் முடிவுமுதல் ரூ. 19366 11-0. கோபால அய்யரின் முடிவுமுதல் ரூ. 18123-3-0.

கணக்கு 6

முத்தையசெட்டியார் என்பவரும் கிருஷ்ணபிள்ளை என்பவரும் சிறு கால கூட்டுத்தொழில்செய்ய உத்தேசித்து மரவியாபாரம் ஆரம்பித்தார்கள். ஜன. 1உயில் முத்தைய செட்டியார் ரூ 6750ம் கிருஷ்ணபிள்ளை ரூ 8250ம் முதல் வைத்து மொத்த ரொக்கத்தை பாங்கில் கட்டினார்கள்.

வியாபாரத்தில் நடந்த வரவு செலவுகள் கீழ்வருமாறு:—

ஜன. 15. ராமஞ் செட்டியாரிடமிருந்து ரூ. 10317-க்கு மரக்கட்டைகள் வாங்கப்பட்டு, அவரால் எழுதப்பட்ட

பில் ஒரு மாதத்தில் பணம் கொடுக்கப் படும்படி ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஜன. 20. கட்டைகளை கப்பலிலேற்றச் செலவு. ரூ. 551-10-0

,, 22. கட்டைகளை லண்டனுக்கனுப்ப கப்பல் செலவு ரூ. 1855-13-0

பிப். 23. டர்னர் அண்டு கம்பெனிக்குக் கட்டைகள் விற்று ரொக்கம் வாங்கினது ரூ. 2626-13-0

,, 26. முருகப்ப முதலியாரிடமிருந்து ரொக்கத்திற்கு மரம் வாங்கினது ரூ. 15405.

மார். 15. பழனியப்பபிள்ளைக்கு ரூ. 6300க்கு மரம் விற்று அத்தொகைக்கு ஒரு மாதத்தில் பணம் கொடுக்கும்படி பில் ஒப்புக்கொள்ளப்பட்டு வந்தது.

,, 20. கப்பல் செலவு ரூ. 3383-3-0

ஏப். 10. மரக்கட்டைகளை நாகப்ப செட்டியாருக்கு விற்று, அவரிடமிருந்து பில் ஒரு மாதத்தில் பணம் கொடுக்கும்படி ஒப்புக்கொள்ளப்பட்டு வந்தது. ரூ. 22087-14-0

மேமீ 15உயில் கூட்டுத்தொழில் முடிவுபெற்றது. பாக்கிக்கையிருப்புக் கட்டைகள் கிருஷ்ணபிள்ளையாலேயே ரூ. 4806க்கு எடுத்துக்கொள்ளப் பட்டன. முதலின்மீது வட்டி 5% கணக்கிடப்படவேண்டும். லாபநஷ்டம் இரு முதலாளிக்கும் முதல் தொகைகளின் பிரகாரம் பிரிக்கப்படவேண்டும்.

இக்குறிப்புகளிலிருந்து மிச்சலாப மெவ்வளவென்றும் ஒவ்வொரு முதலாளிக்கும் சேரவேண்டிய தெவ்வளவென்றும் குறிக்கவும்.

பதில்:—ரொக்கக் கையிருப்பு ரூ 14502-1-0. கூட்டு வியாபாரத்தில் மிச்சலாபம் ரூ 4026-13-0. முத்தைய செட்டியாருக்குச் சேரவேண்டியது ரூ 8688-10-0. கிருஷ்ண பிள்ளைக்குச் சேரவேண்டியது ரூ5813-7-0.

கணக்கு 7.

சுந்தரம் அண்டு கம்பெனியின் கீழ்க்கண்ட குறிப்புகளிலிருந்து லாபநஷ்டத்தையும் முடிவுமுதலையும் கண்டுபிடிக்கவும்:—

ஜன. 1. ரொக்கயிருப்பு ரூ 3000. பாங்கில் ரொக்கயிருப்பு ரூ 7000. சரக்குயிருப்பு ரூ 8050. கட்டடங்களின் பெறுமானம் ரூ 11000. அச்சுயந்திரத்தின் பெறுமானம் ரூ 3500. மரசாமான்களின் பெறுமானம் ரூ 800. வரவேண்டிய கடன்கள் கோபாலய்யரிடமிருந்து ரூ 4300. கிருஷ்ணபிள்ளையிடமிருந்து ரூ 2800. நாராயண அய்யரிடமிருந்து ரூ. 580. முருகப்ப செட்டியாருக்குக் கொடுக்கவேண்டிய கடன் ரூ. 7300.

அவர்களின் வருஷத்திய கொடுக்கல் வாங்கல்கள் :—

ஜன.	3.	ரொக்கம் பாங்கில் கட்டினது	ரூ. 500.
,,	4.	சரக்குகள் விற்று செக்கு பெற்றுக்கொள்ளப் பட்டது.	ரூ. 2200.
,,		ஷை செக்கு பாங்குக் கனுப்பப்பட்டது.	
,,	9.	ஆபீஸுக்காக ஒரு டைப் யந்திரம் வாங்கினது	ரூ. 375.

ஜன. 10. இந்தியன் பாங்கு பங்குகளை 3% குறைவாக வாங்கி செக்கு கொடுத்தது. ரூ. 3900.

,, 13. மரசாமான்களை வார்னிஷ் பூசுவதற்குக் கொடுக்கப் பட்டது. ரூ. 55.

,, 15. நாராயண அப்பரிட மிருந்து 10% வியாபாரத் தள்ளுபடியுடன் சரக்குகள் வாங்கினது. ரூ. 1200.

,, 15. விற்று முதல் ரொக்கம் பாங்கில் கட்டப் பட்டது. ரூ. 2300.

,, 18. டைப் யந்திரத்திற்கு வேண்டிய ரிப்பன் முதலான உதவி சாமான்கள் வாங்கினது. ரூ. 12-8-0.

,, 22. கோபாலய்பரிட மிருந்து வந்த செக்கு பாங்குக் கனுப்பப்பட்டது. ரூ. 4200-0-0.
தள்ளுபடி. ரூ. 100-0-0.

,, 23. ரொக்க விற்று முதல் ரூ. 4050-0-0.

,, 25. நாராயணய்யருக்கு ரூ. 600 ரொக்கமாகக் கொடுத்தது.

,, 28. முருகப்ப செட்டியாருக்குச் செக்குமூலமாய் ரூ. 4650ம் 5o/o அதிமாக ரூ. 2500 பெறுமான இந்தியன் பாங்கு பங்குகளும் கொடுத்துக் கணக்குத் தீர்த்தது.

,, 31. சம்பளம் கொடுக்கப்பட வேண்டியது. ரூ. 560.
வாடகை கொடுக்கப்படவேண்டியது. ரூ. 45.

டெலிபூன் செலவு கொடுக்கப்பட வேண்டியது. ரூ. 30.

மாத முடிவில் கையிருப்புச் சரக்குகள் ரூ. 5400. 10/0 குறைவாக கையிருப்பு இந்தியன் பாங்கு பங்குகளின் பெறுமானம்.

பதில்:—ரொக்கக் கையிருப்பு ரூ. 5507-8-0. பாங்கில் ரொக்க யிருப்பு ரூ. 8640. சரக்குகளின் மீது மொத்தலாபம் ரூ. 4820. பங்குகளின் மீது லாபம் ரூ. 210. மிச்சலாபம் ரூ. 4252-8-0: முடிவு முதல் ரூ. 37982-8-0.

கணக்கு 8.

கீழ்க்கண்ட விபரங்கள் மணி அண்டு கம்பெனியாருக்கும் செல்வம் அண்டு கம்பெனிக்கும் ஏற்பட்டன. செல்வம் அண்டு கம்பெனியார் மணி அண்டு கம்பெனி மீது எப்படி விபரக்குறிப்பு எழுதுவார்களென்பதைக் காண்பிக்கவும்.

மார்ச்சு.	1.	முன்விபரக் குறிப்புப்படி செல்வம் அண்டு கம்பெனியால் பாக்கியுள்ள தொகை.	ரூ. 420-8-0
,,	15.	செல்வம் அண்டு கம்பெனிக்குச் சரக்குகள் விற்றது.	ரூ. 980-0-0
மே.	1.	ஷியாரிடமிருந்து செக்கு பெற்றுக் கொள்ளப்பட்டது.	ரூ. 1000-0-0
,,	15.	செல்வம் அண்டு கம்பெனிக்குச் சரக்குகள் விற்றது.	ரூ. 430-0-0
,,	25.	அவர்கள் மீது எழுதப்பட்டபில் ஒப்புக் கொள்ளப்பட்டது.	ரூ. 300-0-0

,, 30. ஷை யாரிடமிருந்து சரக்குகள் வாங்கினது. ரூ. 150-0-0

ஜூன். 1. குறைந்த சரக்குகளுக்காக வரவு குறிப்பு அனுப்பியது. ரூ. 45-0-0

,, 17. சரக்குகள் செல்வம் அண்டு கம்பெனிக்கு விற்றது. ரூ. 350-0-0

,, 19. ஷை விற்பனைக்காகச் செக்குப் பெற்றுக்கொண்டது. ரூ. 330-0-0

தள்ளுபடி செய்யப்பட்டது. ,, 20-0-0

,, 25. செக்கு ஷை யாரிடமிருந்து பெற்றுக்கொண்டது. ரூ. 100-0-0

ஜூன் 30 உயில் விபாக் குறிப்பு தயார்செய்யப்படுகிறது.

பதில்:—செல்வம் அண்டு கம்பெனி மீது பற்று பாக்கி ரூ. 235-8-0.

கணக்கு 9.

முன் கணக்கிலுள்ள விபாக் குறிப்பை 6% வட்டியுடன் வட்டி கண்டு பிடிக்கும் இரண்டாவது விதத்தால் எழுதவும்.

பதில் :—பற்று வட்டித் தொகை ரூ. 16-5-7. செல்வம் அண்டு கம்பெனி மீது பற்று பாக்கி ரூ. 251-13-7.

கணக்கு 10.

கீழ்க்கண்ட தென்னிந்திய விளையாட்டுச் சங்கத்தின் வரவு செலவு களிலிருந்து முடிவுக் கணக்குகளைத் தயார் செய்யவும்.

வருஷ முடிவிலுள்ள் பாக்கிகள்.

முதல் தொகை	ரூ. 2,380
சில்லரைச் செலவுகள்	,, 350
சந்தாக்கள் வசூலானது	,, 1,750
வருமான செலவு ஈடுத் தொகை	,, 300
பாங்கில் இருப்பு ரொக்கம்	,, 1,200
வாடகை, வரி முதலியன	,, 170
வாடகை வசூலானது	,, 120
மரசாமான்களின் பெறுமானம்	,, 1,100
ரொக்கப் பத்திரங்களின் பெறுமானம்	,, 1,300
ஷை பத்திரங்களின் மீது வட்டி வசூலிக்கப்பட்டது	,, 50
தபால், காகிதம் முதலிய செலவுகள்	,, 250
விளம்பரச் செலவுகள்	,, 55
சம்பளச் செலவுகள்	,, 175

ஷை பாக்கிகளில் முன்பணமாக வசூலிக்கப்பட்ட சந்தா ரூ. 30-ம் பாக்கி சந்தா ரூ. 55-ம் உள்ளன.

பதில் :—அதிக வருமானம் ரூ. 945. முடிவு முதல் தொகை ரூ. 3,325.

அனுபந்தம் 3.


1. வட்டியைக் குறிக்கும் சக்கரம்.
2. வியாபாரக் கணக்குக் குறிப்புகள், படம் நம். 1.
3. உதவிப்புத்தகங்கள், படம் நம். 2.

கீழுள்ள சக்கரம் முதல் பிரிவிலுள்ள தொகைகளுக்கு அந்தந்த பிரிவின் தலைப்பில் கொடுக்கப் பட்டிருக்கும் வட்டி வீதப்படி ஒரு நாளைக்கு எவ்வளவு வட்டி என்பதைக் குறிக்கிறது. இதை வைத்துக் கொண்டு எவ்வளவு நாட்களுக்கு வட்டி தேவையோ அந்த எண்ணிக்கையால் பெருக்கிக் கொள்ளலாம். ஒரு நாள் வட்டி மிகவும் குறைந்த தொகையாயிருக்குமாதலால், பைக்குக் கீழ் பட்ட தசாங்க பின்னமும் கொடுக்கப்பட்டிருக்கிறது :—

ஒரு நாள் வட்டியைக் குறிக்கும் சக்கரம்.

தொகை.	வட்டி விகிதம்.								
	100க்கு ரூ. 4 (4%)			100க்கு ரூ. 5 (5%)			100க்கு ரூ. 6 (6%)		
ரூபாய்	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.
10	0	0	0·210	0	0	0·263	0	0	0·316
20	0	0	0·421	0	0	0·526	0	0	0·631
30	0	0	0·631	0	0	0·789	0	0	0·947
40	0	0	0·842	0	0	1·052	0	0	1·262
50	0	0	1·051	0	0	1·315	0	0	1·578
100	0	0	2·104	0	0	2·630	0	0	3·156
200	0	0	4·208	0	0	5·260	0	0	6·312
300	0	0	6·312	0	0	7·890	0	0	9·468
400	0	0	8·416	0	0	10·520	0	1	0·625
500	0	0	10·520	0	1	1·150	0	1	3·780
1,000	0	1	9·041	0	2	2·301	0	2	7·561
2,000	0	3	6·082	0	4	4·602	0	5	3·123
3,000	0	5	3·123	0	6	6·904	0	7	10·685
4,000	0	7	0·164	0	8	9·205	0	10	6·246
5,000	0	8	9·205	0	10	11·506	0	13	1·808
10,000	1	1	6·411	1	5	11·014	1	10	3·616
20,000	2	3	0·822	2	11	10·027	3	4	7·232
30,000	3	4	7·233	4	1	9·041	4	14	10·850
40,000	4	6	1·644	5	7	8·054	6	9	2·465
50,000	5	7	8·055	6	13	7·068	8	3	6·082
1,00,000	10	15	4·110	13	11	2·136	16	7	0·164
2,00,000	21	14	8·219	27	6	4·273	32	14	0·328
3,00,000	32	14	0·330	41	1	6·409	49	5	0·492
4,00,000	43	13	4·438	54	12	8·547	65	12	0·656
5,00,000	54	12	8·550	68	7	10·683	82	3	0·820
10,00,000	109	9	5·096	136	15	9·370	164	6	0·644

படம். 1.


வியாபார கணக்குக்குறிப்புகள்
(மூன்று பிரிவுகள்)
பெர்ஸனல் கணக்குகள்
சொத்துக் கணக்குகள்
நாமினல் கணக்குகள்
பற்று பாக்கி
வரவு பாக்கி
லாப நஷ்டக் கணக்கு
நஷ்டம்
லாபம்
முதல் கணக்கு
நஷ்டம்

உதவிப் புத்தகங்கள்

படம் 2.

